OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
11 AUG 1914
MADRAS.

# பிரஜாநுகூலன்.

திரிச்சிராப்பள்ளி.

புத்தகம் 9. | 1914-ம் வருஷம் ஜூலைமீ 15உ | சஞ்சிகை 1.

## மனோகரமான குறிப்புகள்.

"இம்மாதத்துடன்" நமது பிரஜாநுகூலன் பத்திரிகைக்கு ஒன்பதாவது பருவம் ஆரம்பமாகின்றது. நமது நண்பர்களெல்லோருக்கும் மங்களம் கூறுகின்றோம். நாம் பத்திராதிபர் ஸ்தானத்தை வகித்து இன்றைக்குப் பன்னிரண்டு வருஷங்கள் ஆகின்றன. வாரப்பத்திரிகையாக "திராவிடாபிமானி" என்ற பெயருடன் சேலத்தில் நாம் பத்திராசிரியராயிருந்து நடத்தி வருவதும் நமது நேயர்கள் அறிவர். தமிழபிமானிகள் நம்மை ஆதரித்ததுகாரணமாக நமது பெயரால் 18—நூல்கள் இதுகாறும் வெளிவந்துள்ளன. அந்தப் பிரதிகள் எல்லாம் செலவழிந்து போனதால் மறுபதிப்பு அச்சிடவும் நிச்சயித்துள்ளோம். ஒரு தினத்திற்குள்ள 24 மணி நேரத்தில் நான்கு மணி நேரம் நித்திரைக்குப்போக பாக்கி 20 மணி நேரத்தையும் தமிழணங்கினுக்கு அர்ப்பணம் செய்து நமது கடமையை நடத்தி வருகின்றோம். சர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக.

"கற்கண்டு" வெகு ருசியுள்ள வஸ்து. ஆயினும் அது தனியே யிருப்பதால் யாது பயன்? பிறர் அதை வாயிற்போட்டுக்கொண்டு இரஸத்தை யறிந்தாலன்றோ பிரயோஜனமுண்டாம். கற்கண்டின் பெருமை அதை உண்பவரால் வெளிப்படவேண்டும். அதுபோல், பகவானுடைய கிருபை அதை யடைந் தனுபவித்தவர்களால் வெளிப்படவேண்டும். அதற்காகத்தான் ஈசுவரன் உலகத்தில் அவதரித்துப் பற்பல லீலைகளைச்செய்தார். பகவானுடைய மகிமையை ஜனங்கள் அறியவேண்டியே கருணை வள்ளலாகிய அவர் பற்பல அற்புதங்களைச் செய்து பல ஆலயங்களி லெழுந்தருளியிருப்பதால், நாம் அவ்வாலயங்களுக்குச் சென்று அவரைத் தரிசிப்பது அவசியமேயாம்.

"எலும்பைக்கடித்தநாய்போல்" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. இதன் கருத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். நாயானது எலும்பில் யாதொரு சத்துமில்லையென்று உணரும் சக்தியின்றி அதைக் கடித்துக்கொண்டே யிருக்கும். எலும்பு உறுதியுள்ளதாதலின், நாயின் பற்களால் பிளவு படாமல் அப்பற்களிலிருந்து இரத்த மொழுகச்செய்யும். அதை நாய் எலும்பின் இரத்தமென்றெண்ணி குடித்து ஸந்தோஷப்படும். அதுபோல், மந்த மதியுள்ளோர் அப்பிரயோஜனமான காரியத்திற் றலையிட்டுக்கொண்டு தங்கள் காலம் வியர்த்த மாவதையும் மனம் கெடுவதையும் யோசியாமல் பிறர்மீது குற்றம் கண்டுபிடித்ததாயெண்ணி ஸந்தோஷமடைவர்.

162409


## மனோகரமான குறிப்புகள்.

"பிரபஞ்சம்" என்பது இல்பொருள்." இல்லாப்பொருளை உண்டென்று கூறுவது மாயை. கட்குடியனுக்கு ஆகாயமும் பூமியும் ஒன்றுவதுபோற் காணப்படுகிறது. வெயிலிற்சென்று அலைந்து வந்தவனுக்கு எங்கு கண்டாலும் பூச்சிகள்போல் தோன்றும். அதுபோல் இன்னது நித்யம், இன்னது அநித்யமென்று விவேகத்தாலுணர்ந்து நிச்சயிக்கும் சக்தியில்லாதவர்க்கு இல்லாதனவெல்லாம் உள்ளனபோல் தோன்றும். தோற்றத்தைக்கண்டு மயக்கமடைவது ஞானிகளின் இயல்பல்ல. ஒருவன் கண்கூர்மையாயிருப்பதால் தூரத்திலுள்ள பொருளை யறிகிறான். மற்றொருவன் கண் மழுங்கியிருப்பதால் அப்பொருளை அறிய முடிகிறதில்லை. முந்தினவன் உண்டென்றதைப் பிந்தினவன் இல்லையென்றே ஸாதிப்பான். அவனுடைய கொள்கையை மாற்றவேண்டுமாயின் அவனைக்கிட்ட அழைத்துச் செல்லவேண்டும். அதுபோல ஆத்மாவின் தன்மையையறிய முடியாத நமக்கு பகவான் பல ஆசாரியர்களையனுப்புகிறார். அவர்கள் சொல்லும் வார்த்தைகளில் நமக்கு நம்பிக்கை யுண்டாகாவிட்டால் நம்முடைய துரதிருஷ்டம் அத்தகைய அவநம்பிக்கையை உண்டாக்கியதென்று நாம் வியஸனப்படவேண்டும்.

"ஆசை, பயம், கோபம்" ஆகிய மூன்றும் மனதைக் கெடுப்பதில் சிறந்தவை. ஒரு பொருளினிடம் ஆசையுண்டானால் மனம் அதிற் செல்லுமேயன்றி வேறுகாரியத்தில் பிரவேசிக்காது. பைத்தியமுண்டாவதற்கு ஒரு காரணம் அதிக ஆசையே. பயம் உண்டானால் உண்மை தெரியாது. "வெருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்னும் பழமொழிப்படி கட்டையைக் கள்வனென்றும் பழுதையைப் பாம்பென்றும் நினைத்து பிரமைகொண்டு அல்லலடைவான். கோபித்து ஒருபோதும் உண்மை விளங்காது. திடீரென்று ஆவேசம் வந்து விடும். பாம்பைக்கடித்துக் குழந்தையைக்காப்பாற்றிய கீரிப்பிள்ளையின் வாயிலொழுகிய இரத்தத்தைக்கண்டு அதன் தலையிற் குடத்தை போட்டுக் கொன்ற ஸ்திரீயைப்போல், கோபிகள் யோசியாமல் தகாத காரியங்களைச்செய்து பிறகு மனவருத்தமடைவர். இவர்களுடைய மனம் அமைதியான நிலைமையிலிருப்பதருமை. ஆகவே மேலே கூறிய முக்குணங்களையும் விட்டு நிர்மலமான சித்தத்தோடு எவன் ஈசுவரனை தியானிக்கிறானோ அவனே ஞானசம்பத்தை யடைவான். அவனுக்கே தபஸ்வித்தியாகும். ஞானத்தாலும் தபஸ்ஸாலும் பரிசுத்தனான மனிதன் பகவானுடைய ஸமீபத்தில் வஸிக்கும் பாக்யத்தைப் பெறுவானென்பது பெரியோர்களின் கொள்கை. இதையே ஸாயுஜ்ய பதவி யென்பர்.

மணம் வீசும் புஷ்பத்தைப் பறிக்கச்செல்வதுபோல், பணம் படைத்த மனிதனை நேசம் செய்வது ஜனங்களின் இயல்பு. பூவில் நறுமணமில்லையேல் அருகே செல்லோம். அதுபோல் செல்வம் இல்லையேல் யாரும் அணுகார். குணம் சிலாக்கியமே; ஆயினும் அதைக் கிரகிப்பவர் சொற்பம். அநேகருக்குக் குணத்தின் அருமை தெரியாது. பணமிருந்தால் பல பண்டங்களையும் வாங்கலாம்;—குணமிருந்து என்ன செய்யலாம் என்று குணத்தை அவமதிக்கின்றனர். புத்திசாலிகள்மட்டுமே குணத்தின் பெருமையை யறிவர். மேலும் பணம் கண்ணால் பார்க்கத்தக்கது. கரத்தால் ஸ்பரிசிக்கக்கூடியது. குணமோ அறிவால் அறியத்தக்கது. அறிவில்லாதோர் குணத்தை எப்படி அறிவார்? இம்மாதிரியே பேரறிவாகிய பகவானுடைய மகிமையை அற்ப ஞானத்தால் அறியமுடியாதாகையால் எல்லோரும் பக்தர்களாயிருப்பதில்லை. சிலர் நிரீசுவரவாதம் செய்கின்றனர். இவர்களுக்கு ஈசுவரன் உண்டென்று தெரிவிப்பது ஸுலப ஸாத்யமல்ல.

3 m2ii92, N96 N66.9

## ஹிதம் செய்வோம் அஹிதம் செய்யோம்.

சில்லாண்டுகளுக்குமுன், ஸ்ரீமான் பண்டித ஈஸ்வர சந்திர வித்யாஸாகரர் என்ற வங்கதேசத்துப் பெரியரொருநாள், தம்மை யீன்றவளை நமஸ்கரித்து நின்றபோது, அம்மையவரைக் கடாக்ஷித்துப் பின்வருமாறு பிரஸ்நித்தனளாம்!

"அப்ப! இதோ நிற்கும் இவ் விளங்குழந்தை விதவையாய் வருந்துகின்றனளே! நம்மவர் சாஸ்திரத்தில் இவளொப்பவருக்குக் கதியொன்றும் கூறவில்லையா? "அஹிம்ஸா: பரமோ தர்ம:" என்ற சுருதி பொய்ப்பட்டதோ? ஹா: கஷ்டம்! கஷ்டம்! என் செய்வேன்?" என்று மன முருகிக் கூறி சோகத்தால் மூர்ச்சித்தனளாம். உடனே பண்டிதர் பெருமான் வேண்டிய சயித்தியோபசாரம் அம்மைக்குச் செய்வித்து அவளை உயிர்ப்பித்துக் கைகூப்பிக்கூறுவார். அம்மே! சாஸ்திரங்களை யெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். சந்து கிடைக்கவில்லை. மீண்டும் ஒருமுறை அவைதம்மைப் புரட்டிப் பார்ப்பேன். தாங்கள் சற்று மனம் பொறுங்கள்"—என்றனராம்.

அம்மை:—சாஸ்திரம் வழிகொடாவிடிலோ?

பண்டிதர்:—என் செய்வோம். ஒன்றும் தோன்றிலதே.

அம்மை:—கிழித்தெறியும் உமது சாஸ்திரங்களை.

பண்டிதர்:—பிறகு?

அம்மை:—பிறகென்ன? ஹிதம் செய்வோம். அஹிதம் செய்யோம்.

மேலே கூறிய சிறு கதை கர்ண பரம்பரையாய் வழங்கி வருகிறது: அம்மையின் துணிவன்றோ துணிவு. அவளது புத்தியன்றோ புத்தி. அவளன்பன்றோ அன்பு. அநேகம் பிரபுக்கள் இரண்டாந்தாரம், மூன்றாந்தாரம் வதுவையைக்கோருகின்றனர். முதற் பெண்சாதி கிழவியாய்விட்டனளென்றும், பிள்ளை பெறவில்லையென்றும், வியாதியஸ்தை யென்றும், மொண்டி யென்றும், படிப்பில்லாதவளென்றும் சமாதானம் சொல்லி சிலர் மறு மணம் புரிந்தும், காமக்கிழத்திகளை நாடியும் திரிகின்றனர். தாரத்தையிழந்த கிழவரும் பக்குவமடையாத இளம்பெண்ணைக்கோரினால் கைம்பெண்கள் பெருகக் கேட்பானேன்? அந்தோ! கன்னிகா விதந்துகள் உயிரோடு கொஞ்சங்கொஞ்சமாய் விசனமாகிய விஷம் உண்டு சாகின்றனரே! பரிதாபம்!

## பல தேசத்தார் வழக்கங்கள்.

ஜப்பானியர்களுக்குள் குழந்தை பிறந்தால் அக்குழந்தைக்கு 1-மாதமட்டும் நாமகரணமிடாமல் அதின்பிறகு அக்குழந்தையைக் கோவிலுக் கழைப்

பித்துப்போய் அங்கு 3 காகிதத் துண்டுகளில் 3 விதமான நாமகரணத்தையெழுதி அவற்றை ஆகாயத்தில் எறிந்தால், அவற்றுள் எது முதலில் கோவில் தரையில் வந்து விழுகிறதோ அதில் வரைந்துள்ள நாமத்தைப்பிள்ளைக்கிடுவாராம். இந்த நாமம் பிள்ளைக்கு 3 வருஷமிருந்த பிறகு வேறு நாமமிடப்பட்டு 15 வருஷமட்டு மிருக்குமாம். 15 வருஷத்திற்குப் பிறகு வேறு நாமமிடப்பட்டு அவன் மரணமடையுமட்டும் அந்த நாமத்தால் அழைக்கப் படுவானாம்.

திருக்கியருடைய கல்லறை ஒவ்வொன்றிலும் குருவிகள் வந்து தண்ணீர் குடிக்கும்படி ஒரு சிறு பாத்திரத்தில் ஜலம் வைக்கப்பட்டிருக்குமாம். உயிரோடிருக்கிறவர்களைப்பற்றி மரித்தோருக்குச் செய்தி கொண்டு போவது குருவிகள் தானென்பதும், அவைகளுக்குத் தண்ணீர் வைத்து நல்லது பண்ணிக்கொண்டால் நற்செய்தி கொண்டுபோமென்பதும், அல்லாவிட்டால் பொருமைகொண்டு துர்ச்செய்தி கொண்டுபோமென்பதும் அவர்கள் எண்ணமாம்.

அமெரிக்காவில் கலியாணப் பெண்ணுக்குத் தோழிகள் வேண்டுமானால் பணங்கொடுத்து அமர்த்த வேண்டும். ஒரு கலியாணப்பெண்ணுக்குக் குறைந்தது 15 தோழிகள் அமர்த்தப்படுவார்கள். அவர்களுடைய அழகுக்குத் தக்கவிதமாய்ப் பணம் செலுத்தப்படும். 5 பவுன் முதல் 20 பவுன் வரையில் தோழிப்பெண்கள் கூலி பெறுவார்கள். மிகவும் அழகியென்று பெர் பெற்ற ஒருத்தி 200 கலியாணத்தில் தோழிப் பெண்ணாகயிருந்து தடவைக்கு 20 பவுன் பெற்றாளாம்.

வடசீறியாவிலுள்ள கிராமப் பள்ளிக்கூடங்களின் பிள்ளையொருவன் ஒரு புஸ்தகத்தைவாசித்து முடித்ததும் உபாத்தியாயர் அப்பிள்ளையின் இரண்டு கைகளையும் பின்னால் கட்டி அவனுடைய தாய்தந்தையரிடத்தனுப்புவாராம். அத்தாய் தந்தையர் அவன் கைகளை அவிழ்த்து உபாத்தியாயருக்கு இனாமனுப்புவார்கள்.

## ஓர் திருடனும் மகானும்.

முற்காலத்தில் துங்கையும் பத்திரையும் கலக்கு மிடத்தில் ஸதானந்தர் என்னும் மகான் ஒரு பர்ணசாலையைக்கட்டிக்கொண்டு தவ மியற்றி வந்தார். இவர் திவ்ய ஞானி. பகவானைத்தியானித்த வேளைபோக மீதி காலங்களில் தம்மைத்தேடிவந்த தினர்கட்குத் தேறுதல் சொல்வார். வேதாந்த கிரந்தங்களைப்படிக்க விரும்பிவரும் வித்யார்த்திகட்கு தத்வார்த்தங்களைக் கூறி மனதை நிர்மலப் படுத்துவார். இத்தகைய குண நிதியாகிய சாது ஒரு நாள் கண்ணை மூடிக்கொண்டு பரப்பிரம்மத்தைத் தியானித்துக்



கொண்டிருக்கையில் ஸதாசோரன் என்னும் திருடன் அநேக வருஷங்களாகக் களவு தொழிலையன்றி வேறு தொழில் தெரியாதவனாய்ப் பற்பல விடங்களிலும் திரிந்து கடைசியாக ஸந்யாசி யிருக்கும் பர்ணசாலைக்குள் நுழைந்து அவருக்கு சொந்தமான காவித்துணியையும் குடத்தையும் தூக்கிக்கொண்டிருக்கையில் திடீரென்று ஸதானந்தர் ஏதோ ஒரு காரியமாய் அப்பர்ணசாலையில் நுழைந்தார். அவரைக் கண்டு பயந்து திருடன் எடுத்த சாமான்களைப் போட்டுவிட்டு வெளியே ஓடினான். ஸதானந்தர் அவ்விரண்டையும் தான் எடுத்துக்கொண்டு திருடன் பின்னாலோடவே அவனுக்கு திகில் அதிகமாயிற்று. ஓகோ? எவ்விதத்திலும் நம்மை இவன் பிடித்துப் போலீஸாரிடம் ஒப்புவிப்பானென்றெண்ணித் திரும்பிப்பார்த்து அவருடைய பாதத்தில்விழுந்து இம்முறை என்னை மன்னிக்கவேண்டும்; இனி நான் திருட வரவில்லை. யென்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டான், ஸதானந்தரின் மனது நிர்மல மானது. அவர் அந்த ஸதாசோரனை நோக்கி “நீ விரும்பிய பொருளை நான் வைத்துக்கொள்வேனோ, எப்படியாவது அவற்றை நீக்கைகொள்ளவேண்டும்.” என்று மன்றாடினார். திருடனுக்கு துக்கமும், வெட்கமும், ஆச்சரியமும் உண்டாயின. அவன் அவருடைய பர்ணசாலைக்குவந்து பிரபோ! தங்கள் உத்தரவுப்படியே இவ்வஸ்துக்களை நான் கைக்கொள்ளுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனையுண்டு என, ஸதானந்தர் நீ என்ன கேட்டாலும் தருகிறேன் என்றார். திருடன் ஸ்வாமி தங்களுடைய பாதசேவை பண்ணிக்கொண்டு இங்கேயே யிருக்கிறேன். தாங்கள் என்னை வைத்துக்கொள்ள உடன்பட்டால் கடத்தையும் காவி வஸ்திரத்தையும் நான் ஸ்வீகரிக்கிறேன் என்று கூறி அந்த நிமிஷமுதல் தீத்தொழிலை விட்டு ஞானத்தையடைந்து எல்லோராலும் கொண்டாடப்படக்கூடிய சிரேஷ்டமான நிலைமையை யடைந்தான். ஸாதுக்களுடைய ஸகவாசமானது திருடர்களையும் நல்வழிக்குத் திருப்பிவிடுகிறதென்பதற்கு மேலே கூறிய கதை உதாரணமாகும்.

## மாமனாரும் மாப்பிள்ளைகளும்.

ஒரு ஊரில் நான்கு மாப்பிள்ளைகள் இருந்தனர். அவர்கட்கு விருந்துண்பதில் பிரீதி யதிகம். நால்வரும் மாமனார் வீட்டிற்கு ஒரு முறை வந்து அதிக நாட்கள் இருந்தனர். மாமனார் லுத்த சிகாமணி. மாப்பிள்ளைகளை சீக்கிரம் வீட்டைவிட்டனுப்பவேண்டுமென்றெண்ணி ஒருநாள் நெய்விடாமல் வெறுஞ்சோற்றைப் போட்டான்; முதல் மாப்பிள்ளை அதை யறிந்து மறுதினமே ஊருக்குப் பிரயாணமானான். மற்ற மூவரும் நெய்யில்லாமலே உண்டனர். அவர்கள் நெய்யில்லாச்சோறு கிடைத்தாலும் போது

மென்றிருந்தார்கள். இதை அறிந்த மாமனார் மற்றொரு நாள் பருப்பு, நெய் ஆகிய இரண்டுமின்றி அன்னம் பரிமாறச்சொன்னான். மற்றொரு மாப்பிள்ளை ஓட்டம் பிடித்தான். மீதி இருவர் குழம்பு சோறு அகப்பட்டாலே போதுமென்றிருந்தனர். இந்த எண்ணத்தைத் தெரிந்துகொண்ட மாமனார் மறுதின முதல் நீரும் சோறும் மாத்திரம் படைத்தான். மூன்றாவன் கம்பி நீட்டினான். நாலாவன் பரம ஏழை அவன் கூழுகிடைத்தாலும் போதுமென்று மாமன் வீட்டிலே போயிருந்தான். பார்த்தான் மாமனார்! அவனை விரட்ட வேறு உபாய மில்லையென்று தடியை யெடுத்து மோதித் துரத்தினான். நான்காவது மருமகன் ஊரின் எல்லையைத் தாண்டுமளவும் திரும்பிப் பாராமலே ஓடினான். இம்மாதிரியே பிராமண வித்தியார்த்திகளின் நிலைமையுமிருக்கின்றது. முன் பரீக்ஷைதேறிய பிராமண வித்தியார்த்திகளுக்கு பெரிய உத்தியோகங்கள் கிடைத்தன. அதன் பிறகு உத்தியோகம் பெரிதானாலும் சம்பளம் குறைந்துபோயிற்று. பின்னர் சம்பளம், உத்தியோகம் இரண்டுங்குறைவாயின. இப்போது எந்த வேலைக்கும் பிராமணர்களை வேண்டாமென்று பிரசுரப்படுத்துகிறார்கள்.

---

## மாதர்களும் ரகசியமும்.

ஸ்திரீகள் எப்போதும் அந்தரங்கத்தைக் காப்பாற்ற மாட்டார்கள். என்பதற்கு ஒரு உதாரணம் கொடுக்கிறோம். இங்கிலாந்தில் சில வருஷங்களுக்கு முன் ஸ்திரீ ஸ்வாதந்திரியத்துக்காகக் கங்கணங்கட்டி யுழைத்த பெரிய மனுஷிகள் தங்களுக்குப் புருஷர்களைப்போல, பார்லிமெண்டில் மெம்பர் ஸ்தானம்வேண்டுமென்று போராடினார்கள். ஒரு பிரபுவை அவருடைய மனைவி இவ்விஷயமாய் வெகு தொந்தரவு செய்தாள். அவர் "நல்லது உன் இஷ்டப்படியே முடிக்கிறேன் இதோ இருக்கும் ஒரு தஸ்தாவேஜை பெட்டியில் வைத்துப்பூட்டி உன்னிடமே திறவுகோல் கொடுக்கிறேன். நீ அடுத்த மாதம் 20௳ வரை எந்தக்காரணத்தினாலும் இதைத் திறக்காதே. பார்லிமெண்டில் ஸ்திரீகட்கு ஸ்தானம் கிடைக்க வேண்டிய முயற்சியை இப்போது முதல் செய்கிறேன்" என்றார். அவருடைய மனைவி அப்படியே ஆகட்டுமென்று சொல்ல, பிரபு "நல்லது, என் பேச்சைத்தள்ளி நானில்லாத வேளையில் இதைத் திறந்து பார்த்தையோ அது முதல் உங்களுக்குப் பார்லிமெண்டில் மெம்பர் ஸ்தானம் கிடைக்காதபடி நானே தடை செய்வேன்" என்று சொல்லிப் போனார். அவர் திரும்பி வர இரண்டு மூன்று தினங்கள் செல்லுமென்று அறிந்து மெள்ள பெட்டியைத்திறந்து தஸ்தாவேஜை வாசித்துப் பார்த்தாள். அதில் "இந்த தஸ்தாவேஜைப் பார்க்காவிட்டால் ஸ்திரீகளுக்கும் பார்லிமெண்டு ஸ்தானம் கிடைக்க ஏற்பாடு



செய்வது நிச்சயமென்று எழுதப்பட்டிருந்தது. இதைக்கண்டு ஆச்சரியமடைந்து அப்படியே மூடி வைத்துவிட்டாள். இந்த ஸங்கதியை ஷெ யாள் தன் ஸ்நேகிதியிடம் சொல்லி அவள் தன் புருஷனிடம் சொல்லி அப்படிப் பரவிப்போயிற்று. கடைசியில் ஷெ யாள் அந்தரங்கத்தைக் காப்பாற்ற முடியவில்லையென்று பிரபு பரிகாசம் செய்தார்.

---

## பலவித மனிதர்கள்.

அநாமதேயப் பெட்டிஷன்களையெழுதி பெரிய உத்தியோகஸ்தர்களுக்குப் போடுவதில் சிலருக்கு ஸந்தோஷம் அதிகம். அவைகளைக் கவனிப்பார்களா? கவனித்தாலும் என்ன பயனுண்டாகும்? வீண் வேலையுடன் இங்கியையும், அரையணாவையும், காலத்தையும் செலவழிப்பது மௌட்யமன்றோ; ஒரு ஸமயம் தெரிந்துவிட்டால் நமக்கே ஹானி உண்டாகுமேயென்ற முன் யோசனை கிடையாது.

சிலர் பொழுது புலருமுன் வக்கீல்களின் வீட்டுக்குப்போய் இரவு முற்பகுதி கழியும் வரை அங்கேயேயிருந்து நிரபராதிகள் மீது என்ன கேஸ் கொண்டுவரலாமென்று ஆலோசனை கேட்கிறார்கள். சட்டமானது வக்கீலினிடமே வஸிப்பதாய் பிரதிக்ஞைசெய்து கொள்ளவில்லை. அதுஎல்லோருக்கும் பொது.

சிலர் விடிந்த க்ஷணமே வீடு வீடாய்ச் சென்று பிறரைப் பற்றி தூஷித்து வருவர். அதைக்கேட்டுத் தலையை யாட்டுவது சில அசடர்களின் வழக்கம். பூமியை அழித்துவிட யோசித்து ஒரு பன்றி தலையால் முட்டியதுபோல் கீர்த்தி பெற்றவர்களின் நற்பெயரைக் கெடுக்க எண்ணி துவங்டார்கள் தங்களுக்குத் தெரிந்த அண்டை அயலார் வீட்டில் கண்டபடி பொய் சொல்லித்திரிவர்.

வேறு சிலர் ஸிவில் கோர்ட்டில் தாக்கல் செய்த ஒரு பிராது காப்பியை வாங்கி வைத்துக்கொண்டு தலைமுறை தலைமுறையாய்ப் பூஜையில் வைத்த இராமாயணமாக நினைத்து வெளியே யெடுத்து மற்றவர்களிடம் படித்துக்காட்டி அகமகிழ்வர்.

இப்படி விபரீதச் செய்கைகளையுடைய மனிதர்களின் நடவடிக்கைகளைக் கண்டுதான் மழை வானத்தைவிட்டு இறங்குகிறதில்லை. இவர்களுக்குப் போடுகிற அன்னத்தை நாய்களுக்கு இட்டாலும் அதற்கு விசுவாசமிருக்கும்.

இன்னும் சிலர் பிராதுர்த்துரோகிகளாய் பிரம்மஹத்தி செய்தவர்கள் போல் மிரள மிரள விழித்து இருதிறத்தார்க்கும் சண்டையை யுண்டாக்கித் தாங்கள் வேடிக்கை பார்ப்பர். இவர்களைத் தேட அதிக தூரம்போக வேண்டாம். உறவினருக்குள்ளேயே வெகு பேரைக் காணலாம்.

---

## ஒரு நாவிதனின் காதல்.

சில வருஷங்களுக்கு முன் பிரான்சுதேசத்தில் ஒரு ஸ்திரீ யிருந்தாள். இவள் அதிக செலவாளி. தன்னிடமிருந்த பணத்தை யெல்லாம் செலவழித்துத் திர்ப்தி யடையாமல் பலரிடம் கடன் வாங்கலானாள். பின்னர் கடன்காரர்களுக்குப் பொருளைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் அத்தேசத்துச் சட்டப்படி ஜெயில் வாஸமடைந்தாள். இங்ஙனமாக, ஒரு நாள் ஜெயிலைப் பார்ப்பதற்காக ஒரு அம்பட்டன் வந்தான். இவன் மிகுந்த அழகுள்ள இந்த ஸ்திரீயைக்கண்டு மோஹிதனாய் அருகில் வரவே, அதையறிந்த அம்மாது ஐயா வாரும் உட்காரும் உம்மைக்கண்டவுடன் என் மனம் அத்யந்த சந்தோஷத்தை யடைந்தது. ஏதோ சுபசூசகங்களும் தோன்றுகின்றன. நல்ல திருக்கட்டும்' உமக்குக் கல்யாணமாயிற்றா' வென்றாள். அவன் விவாகமாகவில்லை யென,

மாது:—ஏன் ஆக வில்லை? அம்பட்டன்:—என்னையாரும் கல்யாணம் செய்து கொள்வதாய்ச்சொல்லவில்லை. மாது:—நல்லது இப்போது யாரேனும் சொன்னால் உமக்கு விவாகம் செய்துகொள்ள இஷ்டந்தானா? அம்பட்டன்:—ஆம் இஷ்டமே. ஸ்திரீ:—அப்படியானால் என்னை மனைவியாக்கிக்கொள்ளுகிறீரா?

அம்பட்டன்:—தடையேயில்லை. மாது:—இப்போதே கல்யாணத்தை முடித்துக்கொள்ளலாமா? அம்பட்டன் ஆகட்டு மென்று ஒரு குருவை யழைத்துவந்து சில சாக்ஷிகள் முன்பாக விவாகப்பத்திரம் எழுதினான். இரண்டு பேர்களும் கையெழுத்திட்டனர். ஒரு நொடியில் கல்யாணம் முடிந்தது. பின்னர் அந்த பிரான்சிய ஸ்திரீ ஜெயிலரை நோக்கி "ஐயா, எனக்கு விவாகமாயிற்று. இவர்தான் என் புருஷர்; நான் பட்டகடனை இவர் தீர்க்கவேண்டும். இது பிரெஞ்சு லாவின் அபிப்பிராயம். ஆனதால் இனி அவரே ஜவாபுதாரி; என்னைச் சிறையினின்றும் விட்டுவிடலாம்" என்றாள். ஜெயிலர் அவ்வாறே அந்த ஸ்திரீயை வெளியே போகச்சொல்லி அம்பட்டனை யழைத்து சிறைச்சாலைக்குள் விட்டு கதவைப் பூட்டினார். இடீரென்று கல்யாணப்பிள்ளை கைதியானான், பிரெஞ்சு ஸ்திரீ யுக்தியால் தப்பித்துக் கொண்டு ஓடிப்போனாள். இதைப்போல் யுக்தியால் சிலர் பிறர்மீது பழியைப்போட்டு தப்பித்துக் கொள்வது முண்டு.

---

## தமிழ் அபிமானம்.

ஐயர்:—ஆகா! வரவேணும். பிள்ளையவர்களே உட்காருங்கள்; ஏது இவ்வளவு தூரம்?

ராமச்சந்திரப் பிள்ளை.—(உட்கார்ந்து) தாங்கள் வந்ததாகக் கேள்விப்பட்டேன். பார்த்துப் போகலாமென்று வந்தேன்.



ஐயர்.—அப்படியா? சந்தோஷம் அதென்ன மூட்டை?

பிள்ளை.—கொஞ்சம் தமிழ்ப் பைத்தியம்.

ஐயர்.—அதென்ன? பைத்தியத்திலே தமிழ்ப்பைத்தியம் வேறே, இங்கிலீஸ் பைத்தியம் வேறேயா?

பிள்ளை.—(சிறிது நகைத்து) இதுதான் எனக்கு மிகுதியும் இன்பமளிக்கின்றது. வாரப்பத்திரிகை ஒன்றும் நடைபெறுகிறது. தமிழ் நாவல்களும் எழுதி வெளியிடுகிறேன்.

ஐயர்.—ஐயோ உமக்கென்ன இந்த புத்தி? என்னோடு படித்துக்கொண்டிருந்தீர். பி. ஏ. பரிக்ஷையும் தேறினீர். இன்னுமேன் இந்தக் கதி? என்னத்திற்கு இந்தப்பாழுந் தமிழ்?

பிள்ளை.—என்ன இருந்தபோதிலும் தாய்மொழிக்கென்று வாணாட்களை அர்ப்பணம் செய்வதின் கௌரவம் மற்றொரு வேலைக்கு அமையுமா?

ஐயர்.—எவ்வளவோ வேலைகள் இருக்க இது அகப்பட்டதும் ஒரு வேடிக்கைதான். ஐயோ பாவம்!

பிள்ளை.—மற்ற வேலைகட்குப் போனால் ஒருவருக்குக் கீழ்ப்படிந்து தானே பேசவேண்டும். இதுவோ அத்தனையுமன்று நானே ராஜா.

ஐயர்.—தமிழை யாரய்யா ஒரு பாஷையோடு சேர்க்கிறார்கள்? என்னமோ வேண்டுமே; வீட்டில் கிழக்கட்டைகளுக்காகக் கொஞ்சம் இன்னும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியிருக்கிறது. வீட்டிலே குழந்தைகள் சம்சாரம்கூட இங்கிலீஷில்தான். இதில் கஷ்டப்பட்ட நீர் லத்தீன் பிரான்ஸைப் பார்த்திருந்தீரானால் எவ்வளவு மேன்மையாக இருந்திருக்கும்? எப்படிப்பட்ட அருமையான நாடகங்கள் அவைகளில் இருக்கின்றன.

பிள்ளை.—என்ன இவ்விதம் பேசுகிறீர்கள்? ஆயிரம் இருந்தபோதிலும், அந்தந்த பாஷைக்குள்ள யோக்கியதை போய்விடுமோ? தமிழில் நாடகங்கள் இல்லையா? காவ்யங்களில்லையா? அத்யத்புதமான வர்ணனைகள் ததும்பிக்கிடக்கிறதைத் தங்களுக்கு நான் எடுத்துரைக்காமல் தெரிய வருமே. ஏது இப்படி மாறிவிட்டீர்?

ஐயர்.—ஆமாம். எல்லாம் காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்! என்னவோ பிரமாதமாகப்பேசுகிறீரே. ஷேக்ஸ்பியர்போல் எழுதியிருக்கிறானா யாராவது?

பிள்ளை.—ஏன்? கம்ப ராமாயணத்திற்கு என்ன குறை?

ஐயர்.—எல்லாம் தெரிந்துதான் இருக்கிறது. வால்மீகி புழுகினதை இவன் உளறித்தள்ளி யிருக்கிறான். கோல்ட்ஸ்மித் போலே கவி யார்யிருக்கிறார்கள்?

பிள்ளை.—தாங்களே நம்முடைய தாய்ப் பாஷையைப்பற்றி இவ்வித

பேசினால் மற்றவர்கள் பேசக் கேட்பானேன்? இதுதான் அபிமானமோ?

ஐயர்.—போம் போம்! தமிழுக்கு அபிமானிகள் வேறேயா? யார் அபிமானிக்கிறார்களையா தமிழை? மாதம் ஒன்றுக்கு லக்ஷக்கணக்காக வருகிற ஆங்கிலப்புஸ்தகங்கள் அரைநொடியில் செலவாகின்றனவே! தங்தமிழ் நூலாசிரியர்கள் அழுகிறார்களே! ஏன்? அதிலும் சில நூலாசிரியர்கள் தாங்கள் எழுதிய புஸ்தகத்தைத் தாங்களே அச்சிட்டால் எங்கு நஷ்டம் வருமோவென்றெண்ணி பல பப்ளிஷர்களுக்கு விற்றுப்போடுகிறார்களே. சில இடங்களில் இந்த நூலாசிரியர்கள் பெரிய மனிதர்கள் என்று சிலரை நினைத்து அவர்களிடம் தங்கள் நூல்களை ஏமாந்துபோய்க்கொடுத்து விட்டுப் பிறகு வருத்தப்படுகிறார்களே! ஏன் இப்படி? நம்மவர்களின் தமிழபிமானம் இதிலேயே விளங்குகிறதே! உங்களிலேயே ஒரு வித்வான் "சநியான் தமிழைவிட்டு" என்று வெறுத்துப் பாடியிருக்கின்றாரே! எல்லாம் எனக்குத் தெரியும் ஐயா. மூடிப்பேசவேண்டாம். இன்னும் கேளுங்கள். சென்னையிலே சில புது புத்தகக் கம்பேனிகள் தோன்றி இருக்கின்றன. அதை ஏற்படுத்தியவர்கள் பண ஆசை பிடித்த கொழுத்த நரிகள். 100க்கு 25 கமிஷன் வீதம் விற்றுத்தருவதாய் நூலாசிரியர்களிடமிருந்து புத்தகங்களைப் பெற்றுக்கொண்டு, பிறகு விற்ற பணத்தைத் தருவதற்குப் பதிலாகப் பெரிய பட்டை நாமம் சாத்துவார்கள். தமிழ் இவ்விதம் மோசத்திலேயே அகப்பட்டுத் தவிக்கின்றது.

பிள்ளை.—போனால் போகிறது. தங்களுக்கு எங்கே உத்தியோகம்? சம்பளமென்ன?

ஐயர்.—ரெயில்வேயில் நாகப்பட்டணத்தில் தான். சம்பளம் இருபத்தைந்து.

என்று சொல்லு முன்னம், சமயல் ஆகிவிட்டதென்று ஒரு குழந்தை ஐயரவர்களைக்கூப்பிட, ஐயரும் பிள்ளையவர்களைப் பார்த்து, "நான் போஜனம் செய்து ஆபீஸுக்குப் போகவேண்டும். இன்னொரு நாளைக்கு சாவகாசமாகப் பேசிக்கொள்வோம் என்றார்.

பிள்ளை.—இன்றுஞாயிறன்றோ ஒய்வு இல்லையோ?

ஐயர்.—கொஞ்சவேலை பாக்கியிருக்கிறது. அதனால் அவசரம் என்று சொல்லி உள்ளே போக, பிள்ளையவர்கள் தன் சுதந்தரத்தையும் பி. ஏ. பாஸ் செய்துவிட்டு 25 ரூபாய்க்கு ரயிலில் வேலைசெய்பவனின் அடிமைத்தனத்தையும் நினைத்துக்கொண்டே தம்மிருப்பிடம் திரும்புவதானார்.

# ஸ்வர்ண குமாரி.

பெங்காளம் என்று கூறப்படும் வங்க தேசத்திலே சாந்த்பூர் (சந்திரபுரம்) என்ற கிராமத்தில் மனோரஞ்ஜன பானர்ஜி என்ற ஒரு பிராமண வாலிபன் உண்டு. இவன் கல்கத்தாவிலே போய் பி. ஏ. பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருக்கையில் 1904ஆ டிஸம்பர் மாதம் ரஜாவின் பொருட்டாகத் தனது சொந்த ஊராகிய சாந்த்பூருக்கு வந்திருந்தான். மனோரஞ்ஜனன் வெகு சுந்தரமான ரூபமுடையவன். பார்ப்பதற்கு மன்மதனைப் போலிருப்பான். மேலும் குழந்தைப் பிராய முதலாகவே பள்ளிக்கூடத்துப் பந்தாட்டம் முதலிய விளையாட்டுகளிலேயும், மற்றும் சிலம்பம், கர்லா, முதலிய சுதேசிய பாலாப்பியாசங்களிலேயும் இவன் மிகுந்த தேர்ச்சியுடையவனாகி தன்னோடு ஒத்த வயதுள்ள வாலிபர்களெல்லாராலும் 'அர்ஜுனன்' என்றழைக்கப்பட்டு வந்தான். வயது இருபத்து மூன்று ஆயிருந்தபோதிலும் இவனுக்கு என்ன காரணத்தினாலோ இன்னும் விவாகம் நடக்காமல் இருந்தது. பெங்காளத்தார் மிகுந்த சொற்ப வயதிலேயே விவாகாதிகள் நடத்திவிடுவது வழக்கம். இவன் விஷயத்தில் மட்டும் இவ்வாறு நடக்கவில்லை. இதற்கு வேறொரு உள் முகாந்திரமுண்டு. மனோரஞ்சனனுடைய தந்தை உயிரோடிருக்கும் பக்ஷத்தில் இவனை இதற்கு முன் விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தியிருப்பார். ஆனால் இவனுக்கு ஏழு வயதாயிருக்கும்போதே தந்தை இறந்துபோய்விட்டார். தாய்க்கு இவன் ஒரே பிள்ளையாதலால் அவள் இவன் மீது மிகுந்த அருமைகொண்டவளாகி, வீட்டில் இவன் சொன்னதற்கு மறுசொல் இல்லாமல் காரியங்கள் நடந்துவந்தன. இந்தக் குடும்பத்திற்கு அதிக ஆஸ்தி இல்லாவிட்டாலும், உள்ள நிலத்தை விற்றுப் பணம் எடுத்துக்கொண்டு, தான் கல்கத்தாவுக்குப்போய் பரீக்ஷைகள் தேறி வரவேண்டுமென்று இவன் சொன்னவுடனே தாய் யாதொரு ஆக்ஷேபமும் சொல்லாமல் சரியென்றுவிட்டாள். இதுபோலவேதான் எல்லா விஷயங்களிலும். இவனுடைய தாய் அடிக்கடி இவனைக் கூப்பிட்டு "குழந்தாய் ரஞ்சன்! உனக்கு வயதாய் விட்டதே விவாகம் எப்போதடா செய்துகொள்வாய்?" என்று கேட்டால் இவன் முரட்டுத்தனமாக "அம்மா! அந்தப் பேச்சை மட்டிலும் என்னிடம் பேசாதே" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விடுவான். அந்தரங்கத்திலே இவன் வடக்கு வீதி

ஸூர்யகாந்தபாபு என்ற பெருஞ் செல்வரின் குமாரத்தியான ஸ்வர்ண குமாரியின் மீது மோஹம் வைத்திருக்கிறானென்ற விஷயத்தை தாயார் நன்றாக அறிவாள். ஆனால் இவனுக்கும் ஸ்வர்ண குமாரிக்கும் ஒருபோதும் விவாஹம் நடப்பது சாத்தியமில்லையென்பது அவளுக்கு நிச்சயந்தான். அப்படி ஒருவேளை அந்த விவாகம் நடப்பது ஸாத்தியமாகக் கூடுமானால் அதை இவள் கேட்டமாத்திரத்திலே இவளுக்குப் பிராணன் போய்விடும். தனது மகன் ஸூர்யகாந்த பாபுவின் பெண்ணை விவாகம் செய்து கொள்வதைக் காட்டிலும் அப்பிள்ளை இறந்துபோவது விசேஷமென்று அவளுக்குத் தோன்றும். தனது குலதெய்வமான ஸ்ரீ கிருஷ்ண பகவானைத் தியானித்து இவள் "ஸர்வஜீவ தயாபரா! எனது பிள்ளைக்கு அந்த மிலேச்சனுடைய பெண் மீது இருக்கும் மோஹத்தை நீக்கி அவனுக்கு நல்ல புத்தி கொடுக்கலாகாதா?" என்று அடிக்கடி கண்ணீர் சொரிந்து பிரார்த்தனை புரிவாள்.

***

ஸ்வர்ண குமாரியை மனோரஞ்ஜனன் மணம்புரிந்துகொள்வதிலே மனோரஞ்ஜனனுடைய தாயாருக்கு இத்தனை விரோதமேனிருக்க வேண்டுமென்பதை நமது கதாப்பிரியர்கள் அறிய ஆவலுறலாம். அதன் காரணம் பின் வருமாறு. ஸ்வர்ண குமாரியின் தந்தையாகிய ஸூர்யகாந்த பாபு பிராமண குலத்திலே பிறந்தபோதிலும், பிராமண ஆசாரங்களையும், அனுஷ்டானங்களையும், மார்க்க முறைகளையும், நம்பிக்கைகளையும் திலதர்ப்பணம் செய்துவிட்டு, "பிரமஸமாஜம்" என்ற புதிய மார்க்கத்தைச் சேர்ந்துகொண்டு விட்டார். இந்த ஸமாஜத்தார் "ஜாதிபேதம் இல்லை, விக்கிரஹாராதனை கூடாது, பெண்களும் ஆண்களும் சமானமாக ஒத்துப்பழகலாம்" என்பது போன்ற நவீனக் கோட்பாடுகள் கொண்டிருப்போர். ஸ்வர்ணகுமாரியின் தகப்பனார் எந்த ஜாதிக்காரனுடனும் கலந்து சாப்பிடுவார். அவர்கள் வீட்டு ஸ்திரீகள் பகிரங்கமாக வெளியே உலாவுவதும், கண்ட புருஷர்களுடன் சம்பாஷிப்பதும் பிழையில்லையென்று நடப்பவர்கள். ஸ்வர்ணகுமாரிக்கு வயது பதினெட்டாகியும் இன்னும் விவாகமில்லை. இதுவெல்லாம் மிகுந்த புராதன இயற்கை கொண்ட மனோரஞ்ஜனன் தாயாருக்குக் காதால் கேட்கக்கூட வெறுப்பாக இருந்தது. இங்ஙனமிருக்க ஸ்வர்ண குமாரியின் மீது தனது மகன் அடங்காத மையல் கொண்டிருக்கிறானென்பதையும், அதன் பொருட்டாகவே வேறு விவாகத்தில் விருப்பமில்லாதிருக்கிறானென்பதையும் இந்த அம்மை பல முகாந்தரங்கள் மூலமாக ஊஹித்தறிந்து



கொண்ட நாள் முதலாக இவள் மனதிலே தோன்றிய வருத்தங்களுக்கு அளவுகிடையாது. நிற்க,

***

இங்கே ஸ்வர்ண குமாரியின் நிலை, எப்படியிருக்கிறதென்பதைக் கவனிப்போம். இவள் மனதிலே மனோரஞ்ஜனனுடைய வடிவம் என்றும் அகலாத விக்கிரஹமாகப் பதிந்துபோய்விட்டது. வரம்பில்லாத செல்வமுடைய குடும்பத்திலே பிறந்து, ஸங்கீதம், ஸாஹித்யம், முதலிய கலைகளிலேயெல்லாம் சிறந்த பழக்கம் கொண்டவளாகித் தனக்கு இசைவான கணவனைத் தவிர மற்றப்படி சாதாரண மனிதன் எவனையும் மணம் செய்துகொள்ளக்கூடாதென்று இவள் ஒரே பிடிவாதமாக இருந்தாள். இவளது ரூபலாவண்யமோ சொல்லுந்தரமன்று. கருமை நிறங்கொண்ட அமிருதத்தின் கடல்களென்று சொல்லத்தக்க இவளுடைய நேத்திரங்களும், முல்லைபோன்ற புன் சிரிப்பும், மூக்கும், கன்னமும், நெற்றியும், ஸ்வர்ணமயமான சரீரமும்;—இன்னும் இவளை என்னென்று சொல்வோம்! சுகப்பிரமரிஷி பார்த்தபோதிலும் மயங்கிப்போய்விடுவார். இவளுக்கு மனோரஞ்ஜனன் பாலிய சிநேகன். பள்ளித்தோழன்; தேவரூபனாகிய இவனையே கடைசிவரை பள்ளித் தோழனாகவும், வாழ்க்கைத் துணைவனாகவும் கொள்ளவேண்டுமென்று இவள் ஆசைகொண்டுவிட்டாள். இதற்கு முன் எத்தனையோ முறை இவர்கள் அடிக்கடி சந்திப்பதும்,

காதற் சுவையிற் கனிந்து நிற்பதுவும்
உயிரென நோக்கி உள்ளம் வாடுவதும்
பொருளிலாத் தெய்விக மொழிபல புகல்வதும்

ஆக இவ்வாறு தமது மோஹ நெருப்புக்கு நெய் ஊற்றிக் கொண்டே வந்திருக்கிறார்கள். இப்போது மனோரஞ்ஜனன் மறுபடியும் சாந்தபூருக்கு வந்தவுடனே வழக்கம்போலவே இவர்களது சந்திப்புகள் தொடங்கிவிட்டன. இதை நமது ஸ்வர்ணத்தின் தந்தையாகிய சூரிய காந்த பாபு அறிந்து ஒருநாள் இவளை அழைத்து;

"மகனே, நான் சொன்னபடி ஹேமசந்திரபாபுவை விவாகம் செய்துகொள்ள சம்மதிக்காமலிருப்பாயானால் இனி என் வீட்டைவிட்டு வெளியேறிவிடவேண்டும். "கையிலே காசற்றவனும், விக்கிரகாராதனை செய்யும் மூடபக்திக் கூட்டத்தாரைச் சேர்ந்தவனுமாகிய அந்த மனோரஞ்ஜனப் பயலை நீ அடிக்கடி பார்த்துப் பேசுகிறாயென்ற வார்த்தை என் காதிலே படக்கூடாது. அடுத்த தை மாதம் உனக்கும் ஹேமசந்திர

பாபுவுக்கும் விவாகம். நீ இப்போதே எனக்கு ஆகட்டுமென்ற வார்த்தை கொடுத்துத் தீரவேண்டும். நான் எத்தனையோ வருஷம் உன்னுடைய மூடத்தன்மையான பிடிவாதத்தைஸகித்தாய்விட்டது. இனி ஒருக்ஷணமும் பொறுக்கமாட்டேன். இன்று மாலை இங்கே ஹேமசந்திரர் வருவார். நீ தோட்டத்திலே யுள்ள பூஞ்சோலையில் 6-மணிக்குப் போயிரு. அங்கே அவரை வரச்சொல்லுகிறேன். நீ அப்போது அவரிடம் உன்னுடைய சம்மதம் தெரிவித்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் உன்னைக் கையும் கப்பரையுமாக நாளைக் காலையில் வெளியே ஓட்டிவிடுவேன்.”

என்று மஹா கோபத்துடன் படபடவென்று சொல்லி விட்டு ஸூர்யகாந்த பாபு எழுந்துபோய்விட்டார். தனது மகள் கண்ணீர் மாரியினிடையே தரைமீது சோர்ந்துவிழுந்து விட்டதைக்கூட அவர் கவனிக்கவில்லை.

***

பகல்முழுதும் ஸ்வர்ணகுமாரி தனது தந்தையின் கொரேத்தை நினைத்து நினைத்து மனம் தயங்கிக் கொண்டிருந்தாள். இவளுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. இதுபோன்ற சமயங்களிலே தாய் இருக்கும் பக்ஷத்திலே எவ்வளவோ தைரியம் சொல்வாள். ஆனால் நமது ஸ்வர்ணத்திற்கோ தாயார் அதிபாலியத்திலே இறந்து போய்விட்டாள். வீட்டிலுள்ள ஸ்திரீகளெல்லாம் தூர பந்துக்களேயலலாமல் இவள் தன் மனதையெல்லாம் சொல்லி முறையிடக் கூடியவாறு அத்தனை நெருங்கிய நட்புடையோர் யாரும் கிடையாது. தனியே நெடுநேரம் யோசித்து இவள் பின் வருமாறு நிச்சயம் செய்துகொண்டாள் :— “தந்தையோ இரும்பு நெஞ்சுடையவர். மனோரஞ்சனனோ தனது தாயிருக்கும் வரை பிரமசமாஜத்திலே சேரப் போவது கிடையாது. நமக்கு இந்த ஹேமசந்திரனை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்றே விதியிருக்கின்றதுபோலும். மனோரஞ்சனனுடனே தான் வாழ்வேனென்று நான் தெய்வ சாக்ஷியாக விரதம கொண்டாய் விட்டது. மனோரஞ்சனன் எனனை விவாகம் செய்துகொள்வதும் சாத்தியமில்லை. இனி தந்தை வீட்டிலிருந்து பிச்சைக்காரிபோல வெளியே துரத்துண்டு என் அவமானமடையவேண்டும்? ஹேமசந்திரனையே விவாகம் செய்து கொள்வதாக இன்று மாலை சம்மதமளித்துவிட்டு விவாகத்திற் கென்று குறிப்பிடப் பட்டிருக்கும் நாளில் விஷத்தைத் தின்று உயிரை மடித்துக் கொள்கிறேன். இதற்கிடையே ஏதேனும் அகஸ்மாத்தாக அனுகூலம் ஏற்பட்டால் பார்த்துக்கொள்வோம்; இல்லாவிட்டால் மரணமே கதி” எனஇவ்வாறு மன



வுறுதி செய்துகொண்டு விட்டாள். இந்த ஹேமசந்திரன் யார்? இவன் ஒரு பணக்கார ஜமீன்தார்; பிரமஸமாஜத்தைச் சேர்ந்தவன், ஆனால் புராதன ஆசாரங்களைக் கைவிட்ட இவன் மற்ற பிரமஸமாஜிகளைப்போல அத்துடன் நிறுத்திவிடாமல், மதுபானம் கோ—மாமிச போஜனம், முதலிய புது ஆசாரங்களும் படித்துக்கொண்டுவிட்டான். பார்ப்பதற்கு எருமை போலே கொழுத்து வெகு குரூபியாக இருப்பவன். மஹாமூடன், குரூர சிந்தையுடையவன். இவனிடம் ஸ்வர்ண குமாரியின் தந்தை செல்வம்பற்றி விருப்புக்கொண்டபோதிலும் நமது ஸ்வர்ணத்தின் கோமள நெஞ்சு காதலுறுதல் எங்ஙனம் இயலும்?

***

மாலை 6-மணி ஆயிற்று. பெரிய வனம்போல விஸ்தாரமுடைய சோலையினிடையிலே ஓர் அழகிய கொடி வீட்டின்கண் ஸ்வர்ணகுமாரி தனியே உட்கார்ந்திருக்கின்றாள். ஹேமசந்திரன் வந்து சேர்ந்தான்.

“பெண்ணே! இப்பொழுது உன் மனம் எப்படியிருக்கிறது?”

“சரிதான்! சிறிது நாற்காலியைச் சற்றே விலகிப் போட்டுக் கொண்டு பேசவேண்டும்.”

“அடடா! இந்தக் குணம் இன்னும் மாறவில்லைபோலிருக்கிறதே! சூரியபாபு நீ சரிப்பட்டு வந்து விட்டாயென்று சொன்னாரே.”

“ஆமாம்! அவருடைய கட்டாயத்தின்பேரில் சரிப்பட்டு விட்டேன்.”

“ஆனால் என்னை விவாகம் செய்துகொள்வதில் உன் மனதிற்குத் திருப்தி கிடையாதோ?”

“கிடையாது.”

“அது எப்படியேனும் போகட்டும். உன் தகப்பனார் பலவந்தத்தின்பேரிலாவது நீ என்னை விவாகம் செய்து கொள்ளப் போவது நிச்சயந்தானே.”

“ஆம்.”

“சபாஷ்! ஸ்வர்ணா, மெத்த சந்தோஷம். நீ இனி என் மனைவிதானே! அடடா! என்ன சௌந்தரியம்! உன்னைப்பெறுவதற்குப் பட்ட பாடெல்லாம் தகும்! தகும்! கண்ணே ஒரு முத்தம் தரமாட்டாயா?

“நாற்காலியை விலகிப் போட்டுக்கொள்ளும்.”

“நீ எனக்கு மனைவி யென்பதோ நிச்சயமாய் விட்டது. மூடபக்தியுள்ள ஹிந்துக்களைப்போல் நாம் விவாகச் சடங்குகளுக்கு காத்திருப்

பது அவசியமில்லையல்லவா? விவாஹ பலனை இப்போதே என் அனுபவித்துக்கொள்ளக் கூடாது? இனி உனது திவ்விய சரீரம் என்னுடையது தானே?”

“விவாகத்தினாலேயே நான் இறந்துபோய் விட்டால் எனது சரீரம் உமதாகமாட்டாதல்லவா”

“அப்படியா யோசிக்கிறாய்? ஆனால் விவாகப்பயனை இப்பொழுதே நுகர்ந்தறிகின்றேன்.”

என்று சொல்லி ஹேமசந்திரன் பலவந்தமாகத் தழுவக் கையெடுக்கலானான்.

ஸ்வர்ணகுமாரி “கோ-கோ” என்றலறத் தொடங்கிவிட்டாள். திடீரென்று கொடிமாடத்திற்குப் பின்னே புதரில் பதுங்கி நின்ற மனோரஞ்ஜனன் கையும் தடியுமாக வந்து ஹேமசந்திர பாபுவைப் பிடித்து வெளியே தள்ளி நையப்புடைத்தான். இந்தக் கலவரையிலே தந்தையாகிய சூரியகாந்த பாபுவும் வந்துவிட்டார். மகள் கீழே மூர்ச்சையுண்டுகிடக்கிறாள். வரும்போது குடித்துவந்த கள்ளின்வெறியாலும், அடிபட்ட கோபத்தாலும் ஹேமசந்திரன் ஏதோ வாய்க்கு வந்தபடி உளறினான். உடனே சூரியகாந்தர் மனோரஞ்ஜனனைப்பார்த்து “ஏதடா! பையலே, நீ இங்கே ஏன் வந்தாய்? இதெல்லாம் என்ன குழப்பம்?” என்று கேட்டார். மனோரஞ்ஜனன் “ஐயா, உமது குமாரத்தி மூர்ச்சையுண்டு விழுந்து கிடக்கிறாள். இன்னும் சிறிது நேரம் கவனியாமலிருந்தால் மிகவும் அபாயம் நேர்ந்துவிடும். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும். மற்ற விஷயங்கள் பிறகு பேசிக்கொள்ளலாம்”; என்றான். அதன்படியே சூரியகாந்தர் மகளை வீட்டிற்கெடுத்துச்சென்று வேண்டிய சிகிச்சைகள் செய்ததின் பேரில் ஸ்வர்ணகுமாரிக்கு மூர்ச்சை தெளிந்தது. இரண்டுமணி நேரத்திற்கப்பால் சூரியபாபுவந்து மகளிடம் விசாரணை செய்ததில், அவள் உண்மையாக நடந்த விஷயங்களையெல்லாம் தெரிவித்தாள். அவள் சொல்வதெல்லாம் மெய்யென்று அவருக்குப் புலப்பட்டுவிட்டது. “அடடா! நமது குடும்பத்திற்குப் பெரிய அவமானமிழைக்கத் துணிந்த பாதகனுக்கா பெண் கொடுக்க எண்ணியிருந்தேன்! என்று தம்மைத்தாமே நொந்துகொண்டு சூரியகாந்தர் சென்றுவிட்டார். மறுநாட் காலை மகளிடம் வந்து, “பெண்ணே! உனது மனோரஞ்சனனை நான் நேற்றுத்தான் நன்றாக உற்றுப்பார்த்தேன். அவன் செல்வமில்லாது வறியனாயிருந்தபோதிலும் ரூபத்தினாலும் அறிவினாலும் நமக்கு மருமகனாயிருப்பதற்கு யோக்கியதை யுடையவனாகவே காணப்படுகிறான்.



அவன் ஹிந்து மார்க்கத்தினின்றும் நீங்கி பிரமசமாஜத்தில் சேர்ந்து கொள்ளும் பக்ஷத்தில் உங்களிருவருக்கும் விவாஹம் முடித்துவைப்பதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமும் கிடையாதென்று அவனிடம் தெரிவித்துவிடு” என்று சொல்லிச் சென்றுவிட்டார். இது முறையே மனோரஞ்சனுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆயினுமென்னபயன்? மனோரஞ்சனன் தான் பிரம்ம ஸமாஜத்தில் சேர்ந்து கொள்வானாயின் தனது தாய் மனமுடைந்து இறந்துபோவாளென்பதை நன்றாக அறிவான். எனவே தாயினிடத்து அன்பு ஒருபுறமும், ஸ்வர்ண குமாரியின் மீது மையல் மற்றொரு புறமும், அவனது மனதை இழுக்க என்னசெய்வதெனத் தெரியாமல் திகைப்பானாயினான். இவ்வாறே ஒன்றரை வருஷகாலம் கழிந்து விட்டது. இவன் கடைசிவரை பிரமசமாஜத்தில் சேராமலே யிருந்துவிடும்பக்ஷத்தில் தானும் விவாஹம் செய்து கொள்ளாமலே யிருந்துவிடவேண்டுமென ஸ்மர்ணகுமாரி நிச்சயித்துக்கொண்டிருந்தாள்.

* * *

1906-ம் வருஷம் கல்கத்தாவிலே காளிபூஜை நிகழ்ந்து திருவிழா நடந்துகொண்டிருந்த (நவராத்திரி) காலத்திலே ஸ்வர்ண குமாரி தனது வீட்டு மாடியிலே ஒரு பஞ்சணைமீது சாய்ந்துகொண்டு “அமிர்த பஜார்” என்னும் தினசரிப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தாள். அதில் திடீரென அவளது கண்களுக்குப் பின்வரும் குறிப்புத் தென்பட்டது.

“சாந்தபூர் வாசியாகிய ஸ்ரீயுத மனோரஞ்சன் பானர்ஜி நேற்று மாலை பிரமஸமாஜத்திலே சேர்ந்துவிட்டார். இவர் மிகுந்த திறமையும், புகழுமுள்ள அதிவாலிபராதலால் இவர் ஹிந்துமார்க்கத்தினின்றும் பிரிந்துவிட்ட விஷயம் எங்கேபார்த்தாலும் பேச்சாய்க் கிடக்கிறது.”

மேற்கண்ட வரிகளைப் படித்தவுடனே ஸ்வர்ணகுமாரிக்குப் புளகமுண்டாய் விட்டது. ஆனந்த பரவசத்திலே அமிழ்ந்துவிட்டாள். உடனே மற்றோரிடத்தில் மனோரஞ்சனனுடைய பெயர் காணப்பட்டது. அதென்னவென்று பார்த்தாள். அதிலே,

“சென்ற சில தினங்களாக லோகமான்ய கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் பம்பாயிலிருந்து நமது நகரத்திற்கு வந்து ஜனநிர்மாணம், தேசஐக்கியம் என்ற பெருவிஷயங்களைப்பற்றிப் பதினாயிரக்கணக்கான ஜனங்களின் முன்பு உபன்யாசங்கள் புரிந்துவருகின்றார். இவருக்கு

நடக்கும் உபசாரங்களும் சிறப்புகளும் முடியரசர்களுக்குக்கூட நடக்க மாட்டா. அப்படியிருக்க, இவருடைய கோட்பாடுகளுக்கு விரோதமாக சில வாலிபர்கள் சாந்த்பூர் ஸ்ரீமனோரஞ்சன பானர்ஜியின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு எதிர்க்கூட்டங்கூடி இந்நகரத்தின் ஏதோ ஒரு மூலையில் சில நிந்தனைத் தீர்மானங்கள் செய்துகொண்டார்களென அறிந்து விசனமடைகிறோம்.” என்று எழுதப்பட்டிருந்தது.

இதைக் கண்டவுடனே ஸ்வர்ணகுமாரிக்கு மனம் பதைத்துவிட்டது. இவள் குழந்தை முதலாகவே ஸ்ரீகோபாலகிருஷ்ணகோகலேயைத் தெய்வம்போலக் கருதிவந்தவள். இவளுக்கு மனோரஞ்ஜனனிடமிருந்த அன்பைக்காட்டிலும் சுதேசத்தின்மீதுள்ள அன்பு பதினாயிரமடங்கு வன்மையுடையது. “சுதேசபக்தர்களின் திலகமாகிய கோக்கலே அவர்கட்குவிரோதமாக உழைக்கின்ற ஸ்வஜனவிரோதியிடமா நாம் இத்தனைநாள் காதல் கொண்டிருந்தோம்? இவனையா மாசற்றகுமரனென்றெண்ணி மதிமயங்கினோம் ?” என்றுபலவாறு யோசித்து மிகவும் வருந்தவாளாயினாள். இவள் நிலைமை இங்ஙனமாக, தன் கண்போல் வளர்த்த ஒரே ஆசைக்குமாரன் அவன்கொண்ட காதல் காரணமாக ஹிந்துமார்க்கத்தை விட்டு நீங்கிவிட்டானென்று கேள்வியுற்றவுடனே மனோரஞ்ஜனனுடைய தாயார் மூர்ச்சித்துவிழுந்து அதேமனோவியாதியில் மெலிந்து பாயும் படுக்கையுமானாள். இந்தச் செய்திகேட்டவுடனே அலறிக்கொண்டு சாந்தபூருக்கு வந்த மனோரஞ்ஜனன் தனது தாயைப்படுக்கையில் பார்த்துத் தேம்பித்தேம்பி யழுதான். தான் பிரம்மசமாஜத்தை அது முதல் நினைப்பதேயில்லையென்றும், அந்த சமாஜபோதனைப்படி விக்கிரகரூபமாயில்லாமல், மனத்தால் பகவானை வணங்குதல்யென்பது தனக்கு சாத்தியமாகவில்லையென்றும், எதிரில் விக்கிரகரூபியாயிருக்கிற பகவானிடத்து மனதைச்செலுத்தி ஒரேநிலையில் நிற்பதே வெகு கஷ்டமாயிருக்க, இனி மனத்திற்கெட்டாத கடவுளை மனத்தால் வணங்கவேண்டுமென்ற ஏற்பாட்டுக்குத் தனது மனோபக்குவம் அத்தனைப் போதியதல்லவென்றும் தெரிந்து கொண்டதாயும் கூறி மறுபடியும் ஹிந்துமார்க்கம் திரும்பித் தாயாரைத் திருப்தி செய்வித்தான். அதுமுதற்கொண்டு அந்த அம்மையும் வியாதியிலிருந்தும் சௌக்கியப்படலானாள்.

•

இந்த சமயம் மனோரஞ்ஜனனுக்கு ஒருகடிதம் கிடைத்தது. பிரித்துப்பார்க்கையில் பின்வருவதை வருத்தத்துடன் வாசிக்கும்படி நேர்ந்தது.



“எனது காதலனாயிருந்த மனோரஞ்ஜனனுக்கு—நெடுங்கால மாசஉறங்கிநின்ற நமது தாய்த்திருநாட்டினைப் புது வழிகளிற் புகவிடுத்து, நமது தேசம் மற்ற தேசங்களைப்போல உன்னத நிலைக்கு வருமாறு நம்மவர்களுக்குத் தேசாபிமானம், ஐக்கியம், முதலியவைகளைப்பற்றி உபன்யாசித்து, ஜனங்களைப் பக்குவநிசைக்குக் கொண்டுவர முயலுகின்ற மகானாகிய ஸ்ரீயுத கோபால கிருஷ்ண கோக்கலே அவர்கள், நான் மனப்பூர்வமாக அநுதினமும் வணங்கிவரும் பிரத்தியக்ஷக் கடவுளாவார். அத்தகைய குணநிதியின் கொள்கைகட்கு எதிரிடையாகக் கூடிய கூட்டமொன்றில், தாங்கள் அக்கிராசனம் வகித்திருந்தீர்களென்று அறிந்த என் உள்ளம், என் இத்தகைய கொடியோனிடத்திற் காதல் கொண்டோமென்று பெரிதும் என்னை வாதிக்கின்றது. நானோ உண்மையாகவே காதலைவிட தேசபக்தியையே மிகுதியும் போற்றுபவளாவேன். ஆதலின் நமது காதல் இன்றுடன் சாதல் வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளவே இக்கடிதத்தைக் கடைசியாக எழுத முற்படலானேன்.

ஸ்வர்ண குமாரி.

* * *

ஸூர்யகாந்தபாபுவின் மனோநிலை இப்பொழுது முற்றிலும் மாறியது. தமது குமாரத்தியான ஸ்வர்ணகுமாரியைப் பலாத்காரத்திற்கு இழுத்த ஹேமசந்திரபாபுவின் துணிகரத்தை நினைக்கும்போதெல்லாம், அவர் அதிகமாக ஆத்திரங்கொண்டவரானார். அத்தருணம் மனோரஞ்ஜனன் தடுத்திராவிடின், தமது குமாரத்தி அத்துராத்மாவால் கற்பழிந்து போயிருக்க நேருமே என்பதைச் சிந்திக்கும்போதெல்லாம், அவ்வளவு துணிகரத்திற்கு இடம் தந்த “பிரம்ம சமாஜ”க் கொள்கைகளிடத்து வெறுப்பு பாராட்டலானார். இதிலிருந்து சிறிதுசிறிதாக ஹிந்துமதத்தில் அவருக்குப் பற்றுதல் உண்டாயிற்று. இறுதியில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சிஷ்யர்களில் ஒருவராக மாறி ஹிந்துமார்க்கத்தில் ஆழ்ந்த அபிமானங்கொண்டார். தமது குமாரத்தியைத் துஷ்டனிடமிருந்து மீட்பித்த மனோரஞ்சனனுக்கே அவளைப் பரிசாகத் தருவதென்று தீர்மானித்துக்கொண்டார். மனோரஞ்சனனின் தாயாருக்கு சூரியகாந்தபாபு தற்போது பிரமசமாஜத்தினின்றும் விலகி ஸ்ரீராம பரமஹம்ஸகோஷ்டியில் வேதாந்த படனம் செய்து வருவது நன்கு தெரியுமாதலின், அந்த அம்மையும் இந்த விவாகத்துக்கு ஹிருதய பூர்வமாய் மங்களாஸாசனம் செய்தாள்.

ஸ்வர்ண குமாரியின் கடிதத்தைப்பார்த்த மனோரஞ்ஜனன் மனதிற்குள் சிரித்துக்கொண்டான். மறுதினமும் ஒரு சமாதானக் கடிதத்தை ஸ்வர்ண குமாரியே தனக்கு அனுப்பக்கூடுமென்று நம்பி எதிர்

பார்த்திருந்தான். அவ்விதமே மறுதினம் ஒரு நிருபம் ஸ்வர்ணகுமாரியிடமிருந்து வந்தது. அது வருமாறு:—

“காட்சிக்கினித்திடுங் கண்ணாளா! என்னைக் காதற்கடலில் ஆட்டிக் களைத்திடும் ஓய்யார கம்பீரா! நான் தொழும் ஆண்டவனே! நேற்றைய எனது கடிதத்தை முற்றிலும் மறந்துவிடப்பாருங்கள். அவசரப்பட்டு எழுதிவிட்டேன். க்ஷமிக்கவேண்டும். தாங்கள் அன்றைய கூட்டத்தின் நோக்கம் இன்னதென்று தெரியாமல், திடீரென்று அக்கிராஸனத்தில் மற்றவர்களால் அமர்த்தப்பட்டீர்களென்றும், சபையின் நடவடிக்கைகளைப் பார்த்தபிறகே தங்கட்கு விவரமாயிற்றென்றும், என்றாலும் அக்கிராஸனாதிபத்யப் பிரசங்கத்தில் அக்கூட்டத்தின் கொள்கைகளை நன்கு கண்டனம் புரிந்தீர்களென்றும் இன்றைய பத்திரிகையில் படித்தேன். உண்மை இவ்விதமிருக்க நேற்றைய பத்திரிகையில் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுப்போயிற்றென்றும், அதற்காகப் பெரிதும் வியசனம் உணர்த்தி இன்று அமிர்தபஜார் பத்திரிகை எழுதியிருந்த குறிப்பைப் பார்த்து நிரம்பவும் திருப்தியுற்றேன். என்னை எப்போதும்போல் தங்கள் காதலியாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதே எனது பிரார்த்திப்பாகும்.

ஸ்வர்ண குமாரி.

* * *

இந்தக் கடிதங்கட்குப் பிறகு ஸ்வர்ண குமாரியும் மனோரஞ்சனனும் ஒருமுறை சந்தித்துக்கொண்டு உல்லாசமடைந்தனர். மற்றொரு தினத்துச் சந்திப்பின்போது ஸ்வர்ணகுமாரி மனோரஞ்சனனது மனைவியாக எல்லோராலும் ஆசிர்வதிக்கப் பெற்றாள். மாங்கல்யதாரணமும் மிக்க வைபவமாக நடந்தேறியது. மனோரஞ்சனர் இப்போது சிறந்த பத்திராதிபர்களுள் ஒருவராக விளங்கி, ஸ்ரீமான் கோகலே அவர்களுடன் இருந்து தாய்த் தேசத்திற்காகத் தொண்டுபுரிந்து வருகிறார். ஸ்வர்ண குமாரியின் இரு புதல்வர்களும் கல்கத்தா ரிப்பன் காலேஜில் கல்வி பயின்று வருகின்றனர். சூர்யகாந்த பாபுவும் தற்போது பக்தியுள்ள ஹிந்துவாய் இவர்களினிடையே கலந்து ஜனசமூகத்திற்கு உழைத்துவருகின்றார். இப்பொழுது பிரசித்தப் பத்திரிகையாக எல்லோராலும் கொண்டாடப்படும் “ஆநந்த பாரதா” பத்திரிகையின் பத்திராதிபர் யாரென்றால் நமது அன்புள்ள ஸ்வர்ண குமாரிதான். ஸ்வர்ண—மனோரஞ்சனர்களின் திருநாமம் என்றும் விளங்குவதாக. அவர்களின் இன்னுயிர்க்காதலும் இனிது வாழ்க. சுபம்.

# மூன்று நண்பர்கள்.

கனியாகுப்ஜ தேசத்தில் சந்திராபீடன் என்று ஓரரசன் அரசுபுரிந்துவந்தான். அவனிடத்தில் தவளமுகன் என்றொருவன் அந்தரங்க ஸேவகனாயிருந்தான். அவனுக்குக் கலியாணவர்மன் என்று ஒரு தனிகனாகிய வைசியப்பிள்ளையும், வீரபாகுவென்னும் ராஜவம்சத்திற் சேர்ந்த ஒருவனும் சிநேகிதர்களாயிருந்தார்கள்.

தவளமுகன் நாள்தோறும் கலியாணவர்மனது கிரகத்திலேயே புசித்துக்கொண்டு அங்கேயே குடியிருந்தான்; தன்வீட்டில் ஒருநாளும் புசிப்பதேயில்லை. இப்படியிருக்கையில் ஒருநாள் அவன் மனைவி, தாம் நாள்தோறும் புசிப்பது எவ்விடத்தில்? எதுவானாலும் அதிகமாகக்கூடாதென்று பெரியோர் சொல்லுகிறார்களல்லவா? அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம். அதிகமாக நெருங்கினால் அவமதிப்பு உண்டாகுமே; அதற்குத் திருஷ்டாந்தம், மலயபர்வதத்தில் சந்தனமரம் அதிகமானதால் அவ்விடத்திலிருக்கும் வேடப்பெண்கள் சந்தனக்கட்டைகளை அலக்ஷியமாயெண்ணி அவற்றை விறகாக எரிக்கிறார்கள் என்று நாம் கேட்டிருக்கிறோமல்லவா என்றுசொன்னாள். அதற்குத் தவளமுகன் என் அருமைக் கண்ணாட்டி, நீ சொல்வது சரிதான், ஆயினும் உத்தமர்களுடைய கூட்டுறவு அத்தன்மையதல்ல; எனக்கு இரண்டு நண்பர்கள் உண்டு; அவர்களிடத்திலே தான் நான் அடிக்கடி போய் உறவாடுவது; அவர்களில் ஒருவன் என்னை உண்டி உடைகள் அளித்து ஆதரிக்கின்றவன்; மற்றவனோ எனக்காகத் தன் உயிரையும் கொடுத்து உபகரிப்பவன் என்று சொன்னான்.

அதுகேட்டு மனைவி நான் அவர்களிருவரையும் பார்க்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தாள். மறுநாள் காலையில் அவன் மனைவியை அழைத்துக்கொண்டு முதலில் கலியாணவர்மன் வீட்டிற்குச் சென்றான். அவன் இவர்களுக்கு அநேக உபசாரம்புரிந்து ராஜபோஜனம் செய்வித்து ஆதரித்தான். பிறகு இருவரும் வீரபாகுவின் வீட்டிற்குப்போனார்கள். அப்போது வீரபாகு சொக்கட்டானாடிக்கொண்டிருந்தான். இவர்களைக்கண்டு அவன் க்ஷேமமா என்று நல்வரவு விசாரித்ததுமாத்திரமே தவிர வேறே யாதொன்றும் சொல்லாமல் தன் காரியத்திலே நோக்கமாயிருந்தான்.

பிறகு தவளமுகனும் அவன் பாரியையும் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். வீட்டிற்குப் போனபின்னர் கலியாணவர்மனே உத்தமமான மித்திரனென்று மனைவியும், வீரபாகுவே உத்தமமித்திரனென்று தவளமுகனும்

சொல்லிக்கொண்டு சிறிதுநேரம் வாதாடினார்கள். கடைசியில், சிநேகமாகிய பொன்னின் மாற்றைப் பரீக்ஷைசெய்ய நினைத்து, அவர்கள் அதற்கு ஆபத்துவேளையே ஏற்ற உறைகல் எனத்தேர்ந்து அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்துகொண்டார்கள். அந்தப்படி மறுநாள் காலையில் தவளமுகன் மனைவி எழுந்திருந்து கலியாணவர்மன் வீட்டிற்குச்சென்று, என் பிராணநாதனாகிய தவளமுகன்மீது அரசன் சீற்றங்கொண்டு சிரச்சேதம் செய்யும்படி உத்தரவு செய்துவிட்டார்; பேதைப்பெண்ணாகிய யான் என்னசெய்வேன், நீங்கள் தான் காப்பாற்றவேண்டுமென்று கதறினாள். அதுகேட்டுக் கலியாணவர்மன், ஐயோ! இதற்கு என்னசெய்வது! ராஜா கோபம் செய்தால் அதை நாம் எப்படித் தணிக்கக்கூடும்? தனம் வேண்டுமானால் எவ்வளவாயினும் யான் கொடுப்பேன்; மற்றபடி வர்த்தகனாகிய எனக்கு ராஜசமுகத்தில் செல்வாக்கில்லையே என்று சொல்லி அவளுடன் தானும் அழத்தொடங்கினான். பின்பு அவள் வீரபாகுவினிடம் சென்று கலியாணவர்மனிடம் சொன்னதுபோலவே தன் புருஷனுக்கு விபத்து வந்துவிட்டதென்று சொல்லி அழுதாள். அதைக் கேட்டவுடனே சொக்கட்டானாடிக்கொண்டிருந்த வீரபாகு அதைவிட்டுத் திடீரென்று எழுந்திருந்து கண்களில் நெருப்புப்பொறி பறக்கக் கத்தியை உருவிக் கையில் எடுத்துக்கொண்டு, ராஜாவை மிகவும் வேண்டி அவனை விடுவித்துவிடுவதாக உத்தேசித்து அரண்மனையை நோக்கி விரைவாய்ச் சென்றான்.

அவன் அப்படி விரைவாய் ஓடிவருவானெனத் தெரிந்து தவளமுகன் எதிர்கொண்டுபோய், மித்திரர், மந்திரிமார் அரசனுக்குச் சொல்லி அவனுக்கு என்மீது உண்டான கோபத்தை ஆற்றி என்னை விடுவித்தார்கள்; நீ வீட்டிற்குப் போகலாமென்று ஸமாதானங்கூறி அனுப்பினான். பின்பு தவளமுகன் வீட்டிற்குப் போய்த் தன் மனைவியை நோக்கி, இப்போது நீ என் மித்திரர்களின் தாரதம்மியத்தை அறிந்தாயா? கலியாணவர்மன் உபசாரங்கள் செய்யும் மித்திரன்; வீரபாகுவோ தன் பிராணனைக்கொடுத்தாகிலும் என்னைக்காப்பாற்றவேண்டுமென்று கருத்துக்கொண்டவன். இவர்களில் வீரபாகுவே உத்தம மித்திரன், கலியாணவர்மன் அவனைவிட ஒருபடி குறைந்தவனே என்று சொல்லித் தெளிவித்தான்.

இவ்விதமாகத் தன் மித்திரனுக்கு ஒருவிபத்து வந்ததென்றுசொல்லக் கேட்டமாத்திரத்தில் அதைத் தீர்க்க முயல்பவனே உத்தமமான நேசனும். இக்கருத்து நோக்கியே,

"உடுக்கை யிழந்தவன் கைபோல் வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு."

என நாயனாரும் கூறியிருக்கின்றார். ஆதலால் அத்தன்மையானவர்களைத் தமக்கு நற்றுணையாகத் தேடிக்கொள்பவருக்கு எக்காலத்திலும் ஒரு குறையுமுண்டாகாது.

# பேரின்பம் தெவிட்டுமோ?

———(*)— —

வெகு காலத்துக்கு முன்னால் ஹிமயமலைச் சாரலில் "நிருபானந்த மடம்" என்ற ஒரு மடம் இருந்தது. அங்கே உலகந்துறந்த சன்யாசிகளும் தபஸிகளுமே வசித்து வந்தார்கள். இக்காலத்தைப்போல அப்பொழுதும் காஷாயம் மாத்திரம் தரித்த வெறுந்தடியர்கள் பலர் இருந்தார்கள். என்றாலும் கடவுளிடத்தில் நிஜபக்தியுடைய ஸாதுக்களும் சிலர் இருந்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

நிருபானந்த மடம் பார்ப்பதற்கு வெகு அழகு. அது கருங்கற்களால் நாலுபுறமும் இருபதடி உயரம் கற்சுவர். நடுவே நாராயணஸ்வாமி கோவில். அதன் கோபுரம் மடத்துக்கு இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் வரும்பொழுதே 'பளிச்' என்று மரங்களின் இடையே தெரியும். எங்கே பார்த்தாலும் பசுமையான மரங்களும் புஷ்பச் செடிகளும் ரமணீயமாயிருக்கும். பள்ளத்தாக்குகளில் மான் கூட்டங்கள் நிர்ப்பயமாய் மேய்ந்துகொண்டிருக்கும். ஆயிரக்கணக்கான பக்ஷிகளின் கானமும், சலசலவென்றோடும் நீரோடைகளின் த்வனியும் மனதிற்கு ஓர் அமைதியையும் ஆநந்தத்தையும் உண்டாக்கின. ஆகவே அது சம்சாரத்தையும் அதன் துக்கங்களையும் துறந்து ஆத்மவிசாரம் செய்வதற்குச் சிறந்த இடமாக இருந்தது.

இம்மடத்திலுள்ள ஸாதுக்கள் அதிகாலையில் ஸ்நாநம் செய்து, தங்கள் கர்மானுஷ்டானங்களை முடித்து, சுகந்தமுள்ள புஷ்பங்களை யதேஷ்டமாய்ப் பறித்து நாராயணனுக்கு பூஜை செய்வார்கள். பின்பு மரத்து நிழலிலும் உட்கார்ந்து வெகு நேரம் த்யானம் புரிவார்கள். பலவீனமுள்ளவர்கள் நாராயணனுக்கு நிவேதனம் செய்த பழங்களையும கிழங்குகளையும் கொஞ்சம் சாப்பிடுவார்கள்.

இவர்களுள் ராமதாஸர் என்பவர் ஒருவர். அவருக்கு சுமார் 40 வயதிருக்கலாம். ஸ்ரீராமனிடத்து அத்யந்த பக்தி. ராம்-ராம்-என்று ராமத்யானத்தில் உட்கார்ந்து விட்டால் நாள் இரண்டானாலும் எழுந்திருக்க மாட்டார். சில சமயங்களில் 'என்னையனே உன்பாத ஸேவை எனக்கு எப்பொழுது கிட்டுமோ?, என்று தேம்பித்தேம்பி அழுவார். இவர் திலகபுரம் என்னும் கிராமத்தில் நிரம்ப ஏழையான ஒரு பிராமணருடைய ஒரே பிள்ளை. சிறு வயதிலேயே தாய்தந்தையரையும் மனைவியையும் இழந்து விட்டார். அதிக கஷ்டமான நோயிலகப்பட்டு உடல்வாடி கையிலுள்ள பணத்தை யெல்லாம் செலவிட்டு சுத்த பாபராய் நடுத்தெருவில்

கின்றார். நல்ல மானியானதனால் பிச்சை யெடுத்து ஜீவிக்க அவர் மனம் சம்மதிக்கவில்லை. கடைசியாய் ஒன்றுந் தோன்றாமல் தற்கொலை செய்து கொள்வதென்று தீர்மானித்து ஒரு நாள் ராத்திரி அவ்வூருகேயுள்ள குளத்தை நோக்கிச் சென்றார். மூன்று நாள் ஆகாரமில்லாமல் இருந்ததினால் நடுவழியில் மயங்கிவிழுந்தார். அப்படி மயங்கிக் கிடக்கும்போது அவருக்கு முன்னால் ஒரு ஜோதி தோன்றி, "குழந்தாய்! பயப்படாதே; சம்சாரசுகதுக்கங்களில் விருப்பும் வேண்டாம் வெறுப்பும் வேண்டாம். நித்யானந்த மூர்த்தியான ஸ்ரீராமனிடத்து உன் மனத்தை வை என்று உரைத்ததாக உணர்ந்தார். அவர் கண் விழித்ததும் தம் மனத்தில் ஓர் சாந்தத்தையும் சந்தோஷத்தையும் கண்டார். தான் தற்கொலை செய்து கொள்வதாகப் புறப்பட்டது எவ்வளவு தப்பென்று நன்றாய் அறிந்தார். அன்றைக்கே சன்யாசம் வாங்கிக்கொண்டு அவ்வூரைவிட்டு வெளிக் கிளம்பிவிட்டார். கடைசியாய் கிருபானந்த மடம் வந்து சேர்ந்து அங்கே வசித்துவந்த சங்கதி நமக்கு முன்னமேயே தெரியுமல்லவா?

ஒரு நாள் ராமதாஸருக்கு ஓர் பெரிய சந்தேகமும் அதனால் துக்கமும் உண்டாயிற்று. அவர் பின் வருமாறு யோசிக்கலானார்: "மாம்பழம் சாப்பிடுவதற்கு ருசிதான்; ஆனால் ஆயிரம் பழம் சாப்பிடென்றால் ஒருவனால் முடியுமோ? சங்கீதம் நிரம்ப ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறது. சங்கராபாணமோ தோடியோ கேட்பதற்கு வெகு இனிமை. ஆனால் ஒரு வருஷம் நீ இடைவிடாது தோடியே கேட்கவேண்டுமென்றால் யாரால் ஆகும்? லோகநியாயம் இப்படி இருக்க, பகவானை மாத்திரம் 'தெவிட்டாப் பேரின்பவாரிதி' என்கிறார்களே; அப்பேரின்பம் மட்டும் ஏன் தெவிட்டாது? ராமபத்ரா! நீ கருணை கூர்ந்து எனக்கு தர்சனம் தந்தருளுங் காலத்து எனக்கு அது தெவிட்டிவிட்டால் நான் என்ன செய்வேன்!"

இவர் மனத்து இம்மாதிரி யோசனையும் பயமும் குடி கொண்டிருக்கும் சமயம், ஆகாயம் சில விடங்களில் ரோஜாவர்ணமாயும் சில விடங்களில் தங்கவர்ணமாயும் பிரகாசித்தது. புற்றரையின் மேலும் செடிகளின் மேலும் பனித்துளிகள் விலையுயர்ந்த முத்துக்களைப் போல் மின்னின. கிளிகள், மரங்கொத்திகள், காகங்கள், குருவிகள் முதலிய பக்ஷிகள் தூக்கத்தை ஒழித்து மனம் போனபடி கூச்சலிட்டுப் பறந்து கொண்டிருந்தன. பட்டுப் பூச்சிகள் அப்பொழுது தான் மலர்ந்து கொண்டிருக்கும் புஷ்பங்களின் மேல் உட்கார்ந்து தங்கள் இறகுகளை உலர்த்திக் கொண்டிருந்தன. இவைகளை யெல்லாம் பார்த்து ராமதாஸர் நாம் முதல் முதல் இங்கே வந்தபோது இவைகளெல்லாம் பார்ப்பதற்கு ஒரு ஆநந்தத்தை உண்டாக்கின. இப்பொழுதோ யெல்லாம் ஸர்வஸாதாரணமாய்ப் போய்விட்டது. பட்டுப்பூச்சிகளை இப்பொழுது பார்க்கிறேனா?



இப்பறவைகளின் கூச்சல் தலைவலியைத் தான் உண்டாக்குகின்றது. பரமேச்வரஸாந்நித்யமும் இப்படித் தானிருக்கும். அனந்த கோடிகாலம் ஈச்வரஸேவை செய்கிறதென்றால் அதுவும் சலித்துத் தான் போகும் என்று இவ்வாறு ஆலோசித்துக் கொண்டே வெகு தூரம் நடந்தார். நாராயணஸ்வாமி கோவில் கோபுரமும் மறைந்து போய்விட்டது. முன்னால் வெகு தூரத்தில் ஸ்ரீ நகரத்தின் கோபுரங்களும் மேடைகளும் இளம் வெயிலில் மங்கலாய்த் தெரிந்தன. யோசனையிலாழ்ந் திருந்ததினால் வெகு தூரம் வந்து விட்டோம் என்று நினைத்தார். அவருக்குப் பக்கத்தில் ஒரு காடு தோன்றிற்று. எண்ணிறந்த பூச்சிகளின் கானமும் மரக்கிளைகளின் மேல் மோதும் காற்றினோசையும் ராமதாஸர் காதில் விழுந்தன. காட்டுப் புஷ்பங்களின் வாஸனை ஒரு உத்ஸாகத்தை உண்டு பண்ணிற்று. அக்காட்டுக்குள் பிரவேசித்தார். போகப்போக அவர் மனம் குதூகலித்தது. காட்டுப் புஷ்பங்கள் சுகந்த வாஸனைகளை வீசின. பூச்சிகளின் கானம் தேவகானத்தினும் இனியதாய் அவர் மனதிற்கு தோன்றிற்று. பார்க்குமிடமெங்கும் ஒரே ஜோதியாய் கோடி சூரியோதயமானாற் போல் பிரகாசித்தது. கண்களை மூடிக்கொண்டு ஆனந்த பரவசராய் அப்படியே உட்கார்ந்து விட்டார். "கருணாஸாகரமே! ராமப்ரபோ! உன் மகிமை என்ன மகிமை! என்று அவர் மனமுருகிக்கதறும் போது பகவான் ஸ்ரீராமமூர்த்தியாக அவருக்கு ப்ரத்யக்ஷமானார். கோதண்டபாணியாய் ஸீதாலக்ஷ்மண ஸமேதராய் ஒரு நிமிஷ நேரம் ஸேவை தந்தருளினார். ராமதாஸரோ ஆனந்தக் கடலிலாழ்ந்து தேகத்தில் ஸ்மரணையற்று கற்சிலை போலிருந்தார்.

அடுத்த நிமிஷம் அப்பூச்சிகளின் கானம் நின்று போய்விட்டது அவர் கண் விழித்துப் பார்த்தார். நாற்புறமும் தோன்றின ஜோதி மறைந்துபோய் காட்டின் இருட்டு காடாந்தகாரமாய் இருந்தது. மெள்ள எழுந்திருந்தார். கைகால்கள் மிகவும் மெலிந்து பலங்குறைந்துபோயிருந்தன. "இதென்ன வேடிக்கை! நமக்கு வரும்போது இருந்த பலம் எங்கே போய்விட்டது? என்று ஆச்சரியப்பட்டார். காட்டிற்கு வெளியே வந்து பார்க்கும்போது சூரியன் அஸ்தமிக்கும் சமயம்! "நாம் பகல் முழுவதும் இங்கேயே இருந்து விட்டோமே. நம்மை மடத்தில் தேடுவார்களே! என்று நினைத்தார். அவ்வளவு தானா விந்தை? அவர் முகத்திலிருந்து இரண்டு முழத்தாடி வெள்ளை வெளேரென்று தொங்கிக் கொண்டிருந்தது. ராமதாஸருக்கு தாம் பார்ப்பதெல்லாம் நிஜமோ கனவோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. மடத்தை நோக்கி மெதுவாய் நடந்தார். வழியில் ஒரு

நீரோடையில் புடவை தோய்த்துக்கொண்டிருந்த ஸ்திரீகளில் ஒருத்தி இவரைப்பார்த்து "கிருபானந்த மடத்திலுள்ள சந்நியாசிகளை யெல்லாம் பார்த்திருக்கிறோமே, இவர் யாரோ தெரியவில்லை" என்றாள். அதைக் கேட்ட ராமதாஸர் "பெண்டுகளுக்கு என்னதான் தெரியும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு மடத்துக்குச் சென்றார். அங்கே மாறுபாடுகள் பல உண்டாயிருந்தன: புதிய கட்டடங்கள் பல கட்டப் பட்டிருந்தன. அவர் பயிர் செய்து வந்த 'அசுவத்தச்' செடிகளெல்லாம் இப்போது பெரிய மரங்களாய் இருந்தன. மடத்துக்குட் புகுந்தார். அங்குள்ள சன்யாசிகள் ஸாதுக்கள் யாரும் ராமதாஸருக்கு அடையாளம் தெரியவில்லை. அவர்களும் இவரை ஏற இறங்கப் பார்த்தார்கள். ஒரு சன்யாசி இவரை "நீர் யார்" என்று கேட்டார்.

ராமதாஸருக்கு அடக்க முடியாத பயமும் துக்கமும் உண்டாகி விட்டது. தனக்கு ஒரு வேளை பைத்தியம் பிடித்து விட்டதோ என்னவோ வென்று கூட நினைத்தார். கடைசியாய் "கிருபானந்த மடத்துச் சன்யாசியான ராமதாஸனைத் தெரிந்தவர்கள் இங்கே யாருமில்லையா?" என்று ஒருதரங் கூச்சலிட்டார்.

எல்லாரும் பேசாமலிருந்தார்கள். விருத்த சந்யாசி ஒருவர் மாத்திரம் "இராமதாஸர் ஒருவர் இருந்ததாக நான் கேட்டிருக்கிறேன். அவர் ஒருநாள் காலையில் மடத்தைவிட்டுப் போனவர் மறுபடியும் திரும்பி வரவேயில்லையாம். அவருடைய கதி எப்படியாயிற்றென்று யார்க்கும் தெரியாது; ஆனால் இதெல்லாம் நூறுவருஷத்துக்கு முந்தின சமாசாரம் என்றார்.

ராமதாஸர் ஐயோவென்று ஒருதரம் கதறினார். அவருக்கு எல்லாம் தெளிவாய் விளங்கிவிட்டது. "ராமபத்ரா! பேரின்பத்தையும், சிற்றின்பத்தையும் ஒரே திராசில் நிறுத்திய என்னை க்ஷமிக்க வேண்டும். பிர்ம்மானந்தத்தின் தன்மையை அறியாமல் பிரம்மாநந்தம் மாத்திரம் தெவிட்டாதா? என்று பிதற்றின எனக்கு ஈஸ்வர ஸேவையில் நூறு வருஷங்கள் ஒரு நிமிஷமாய்ப் போகும் என்று கற்பிப்பதற்காக இப்படிச் செய்தீர்போலும். பேதையான என்னை மன்னித்தருளும் சரணம்" என்று கண்களில் நீர்பெருகக் கதறித் தரைமீது சாஷ்டாங்க தெண்டனிட்டார் அப்போதே அவருடைய ஆத்மாவும் ஸ்ரீ ராமச்சந்திரனுடைய சரணாரவிந்தங்களில் லயமாய் விட்டது. "பேரின்பம் தெவிட்டுமோ" என்ற அவரது சம்சயமும் நிவர்த்தியானது.

OFFICE 21 SEP 1914 MADRAS

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 9. | திரிச்சிராப்பள்ளி. 1914-ம் வரு ஆகஸ்டு செப்டம்பர் மாதங்கள். | சஞ்சிகை 2, 3.

## மனோகரமான குறிப்புகள்.

சொல்லுக்கு முதலில் வராத எழுத்துக்கள் ஒவ்வோரிடங்களில் வரின், தமிழுக்கிணங்க அவ்வெழுத்துகளுக்கு முன் உயிரெழுத்துக்களாகிய அ, இ, உ, ஆகிய மூன்றெழுத்துக்களும் வரும். இவ்விதி ரகர, லகரங்களுக்கு வழங்கி வருகின்றது. உதாரணமாக, இராமன், அரதனம், உரோமபாதன், இலக்குமணன் உலோபம், என்று வரும். நிற்க, யகரம் மொழிக்கு முதலில் வருமென நன்னூலில் பன்னீருயிரும் என்ற 102-வது சூத்திரத்திலும், 104-வது சூத்திரத்திலும் விதித்திருக்க, அதற்கு மாறாக யுத்தம் என்ற சொல்லுக்கு உயுத்தம் என்றும், யாழ்ப்பாணம் என்பதற்கு இயாழ்ப்பாணம் என்றும் இதைப்போல இன்னுஞ் சிலவற்றிற்கும்-ராமன் என்பதற்கு இராமன் என்றதைப்பார்த்துத் தாமும் அதைப்போல எழுதவும் பேசவும் முற்படுகின்றனர். இது பிழையாகும்.

"ஸத்தியமே ஜயம்" என்று தர்மராஜன் நினைத்துப் பொய் சொல்லாதிருந்தார். அப்படிப்பட்டவர் பாரத யுத்தத்தில் அசுவத்தாமன் அதமானதாய் துரோணாசாரியிடம் பொய் சொல்லி, அதற்குப் பலனாக நரக தரிசனம் செய்தார். இதை நினைக்கும் போது பிரதிதினமும் கோடானு கோடி பொய்களைச் சொல்லிக்கொண்டு திரியும் பொல்லாதவர்கள் எத்தனை யுகங்கள் நரகத்திலிருப்பார்களோ வென்று பயப்படுகிறோம். இராமனும் ஸீதையும் ஸர்வோத்தமர்களாயிருந்தும் வனவாஸம் செய்து கஷ்டப்பட்டனர். ஸீதை மகா பதிவிரதையாயினும் லக்ஷ்மணனை நிந்தித்ததால் மறுபடியும் காடே கதியானாள். இராமச்சந்திரன் நிரபராதியான வாலியைக் கொன்ற நிமித்தம், ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் ஒரு வேடனுடைய அம்பால் காயமடைந்து மாண்டார். பெருங்குடும்பியாகிய ராவணனை நிர்மூலம் செய்தது நியாயமாயினும் கிருஷ்ணாவதாரத்தில் எல்லா மக்களையும் பறிகொடுத்தார். இவைகளை ஆலோசிக்குங்கால் தெய்வத்தன்மை பொருந்திய பெரியோர்களையே கர்மம் விடாதபோது மற்றவர்களை விடுமோவென்று தெரியவரும். ஆதலின், நாம் எப்போதும் பாபபீதர்களாய் பரமோத்கிருஷ்டமான நன்னடக்கையுள்ளவர்களாய் ஈசுவரத்யாநம் செய்துகொண்டு காலத்தைக் கழிப்பது கடமை. அகங்காரத்தை யொருபோதும் உள்ளத்திற் கொள்ளலாகாது.

ஸ்ரீ விச்சூர் முத்துக்குமாரஸாமி முதலியார் B. A., எழுதுகிறார்:— நாகரீகம் நாளுக்குநாள் நவீனமாகவே மாறிவரவேண்டியது பகவத்ஸங்கல்பம்.

பரிமணமக்கிரமம்அது. எங்களுடைய நவீன நாகரீகம் என்று ஒரு நாகரீகமில்லை. அது எல்லார்க்குஞ் சொந்தந்தான். பண்டையனுசாரங்களையே சத்தியமெனக்கொண்டார்க்கு எங்கள் நவீன நாகரீகம் பழுது பட்டதாகத் தோன்றலாம். என் செய்வல்!

தற்காலம் கைத்தொழிற்சாலைகள் அதிகமில்லை யென்றும், எல்லோரும் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து இங்கிலீஷ் படித்து உத்தியோகம் செய்வதால் கைத்தொழில்கள் குறைந்து ஏழைகள் வருந்துகின்றனரென்றும் அநேக ஆங்கிலேய பாஷா விற்பனர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கைத்தொழில் வேண்டும்—கைத்தொழில் வேண்டும்—என்று பிரஸங்க மேடையினின்றும் கூக்குரல் போடுகின்றனர். அத்தகையோர் தாங்களே கைத்தொழில் செய்து காட்டுவதன்றோ பெருமை? ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் பெரிய மனிதரும் தங்கள் பிள்ளைகளைக் கொல்லனாகவும் தச்சனாகவும் ஆக்கவேண்டாமென்று யார் தடுத்தார்கள்? தங்கள் பிள்ளைகள் மட்டும் உத்தியோகம் செய்யவேண்டும்: மற்ற ஏழை வீட்டுப் பிள்ளைகள் ரம்பத்தை எடுத்துத் தச்சு வேலை செய்யவேண்டுமோ?

சிலர் தம் வீட்டில் மலைபோல் குப்பைகளைக் கொட்டி வைத்துக் கொண்டு அடுத்த வீட்டுக்காரனுக்கு சுகாதாரத்தைப்பற்றிப் போதிப்பதுண்டு. இது எத்தனை மதியீனம்? இதுபோல் தங்களிடமிருக்கும் அருவருக்கக் கூடிய துர்க்குணங்களை யகற்றிக்கொள்ள முடியாத பேதைகள் பிறரைக் குற்றம் செய்ததற்காகத் தண்டிக்கின்றனர். வயது முதிர்ந்ததென்ற ஒரு காரணத்தினால் குழந்தைகளை யடித்துத் திருத்துகிறேன் என்று கூறுவோர் உன்மத்தர்களே. சில தாய் தந்தையர் குழந்தைகளைத் தண்டிப்பதற்காக ஆவேசங்கொண்டு அரிவாள்மணை, கோடரி, வெரியகட்டை, உலக்கை முதலிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டோடி வருவார்கள். இது வெறியின் காரியம். செய்த குற்றமென்ன—அதை மறுபடி செய்யாமல் தடுப்பதற்கென்ன வழி என்று ஆலோசியாமல் உலக்கையைத் தூக்கிக்கொண்டோடி வரும் பிசாசுகளால் குழந்தைகள் அந்தோ! அறிவு மழுங்கி பலம் குன்றி, வியஸனத்தாலும் பயத்தாலும் பீடிக்கப்பட்டு ஜீவபிரேதமாகின்றனர்.

இதனடியிற் கூறுங் கதை வடக்கு ஜனங்களின் சரித்திரத்தில் இருக்கின்றது:—1837ம் ஆண்டில் ஒரு பகீர் லாஹோருக்கு வந்து ரஞ்சத்சிங்கு மகாராஜாவிடம் அன்னபானங்களில்லாமல் தன்னை ஒரு பெட்டியிற் போட்டு எத்தனை நாள் பூமியில் வைத்திருந்தாலும் ஜீவிக்க முடியுமென்று தெரிவித்தான். அரசர் அதை நம்பாமல், ஆகிலும் பரீக்ஷை செய்யலாமென்ற கருத்துடன் அவனை ஒரு மரப்பெட்டியில் போட்டுப் பூட்டி தன் தோட்டத்தின் நில மாளிகையில் புதைத்து வைத்தார். அந்த நிலமாளிகையிருக்கு மிடத்தில் ஒரு பெரிய பங்களாவிருந்தது. அதன் சுற்றுப் புறமுழுவதும் சுவர் உண்டு. யாரும் பிரவேசிக்கா படி பீக முத்திரைகளை வைத்து. க தி சிப்பாய்களைக் காவல் வைத்தார் இவ்விதம் 40 தினங்கள் சென்றது புதைத்து வைத்த பகீரை எடுப்பத காக மகாராஜா தமது குழந்தை ளோடும் பிரபுக்களோடும் சென் பெட்டியை யெடுப்பித்துப் பார்க்கை யில் பகீர் வெகு உத்ஸாகத்தோடு சரீர ஸுகத்தோடும் ஸகலருடனு ஸந்தோஷமாய் சம்பாஷித்தான். அ பொழுது மகாராஜா ஆச்சரியமடை ந்து குண்டுகள் போடச் செய்து அ னுக்கு வெகுமானங்கள் ஈந்தார்.

பிரபஞ்சவிலாஸம் புஸ்தகம் 12.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 SEP 1914
MADRAS.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ விஷ்ணுஸ்தல யாத்ரா மார்க்க விவரணம்.

ஸ்ரீமத் வேதமார்க்கப்ரவர்த்தக பரம ஹம்ஸ பரிவ் ராஜகாசார்ய
உபயவேதாந்த ப்ரதிஷ்டாபகராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமான்

ஸ்ரீபெரும்புதூர்
ஸ்ரீ எதிராஜ வீரராகவாசார்ய ஸ்வாமிகள்
திருவடிசம்பந்தியும், ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதரேணுவுமாகிய

## சங்கு கோவிந்தசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

மேற்படியாரின் ஸகோதரரும், அநுமந்தம்பட்டி மாஜி கிராம முனிசீபுமாகிய

## த. ச. ரா. கோபாலகிருஷ்ண நாயுடு

அவர்களின் உதவியைக்கொண்டு

இக்கிரந்த கர்த்தாவின் குமாரரும், "பிரஜாநுகூலன்"
"திராவிடாபிமானி" பத்திரிகைகளின் ஆசிரியருமான

திரிசிரபுரம்

## எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு

அவர்களால்

பல திருத்தங்களுடன் புதுப்பித்துப்
பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.] 1914 [விலை அணா 5.

இப்புஸ்தகம் வேண்டுவோர் திரிச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் மேலடைய வளஞ்சான்வீதி 612 நெ. உள்ள "ஸ்ரீரங்க நிலயம்" கட்டடத்தில் "பிரஜாநுகூலன்" ஆபீஸில் பெற்றுக்கொள்ளலாம். மற்றுமுள்ள புஸ்தக விவரங்களுக்கு இன்னோரிடத்தில் பார்க்கவும்.

**எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடவர்கள் இயற்றிய நூல்கள்**

| | |
|---|---|
| 1. ஆசையின்முடிவு | 11. ஆநந்தகதாகல்பகம்முதல்வால்யம் |
| 2. தகாதயுக்தி | *12. ஸ்ரீவிஷ்ணுஸ்தலயாத்ராமார்க்க [விவரணம் |
| 3. இரஞ்சிதரத்தினம் | 13. ஆநந்தகதாகல்பகம் இரண்டாம்வால்யம் (அச்சில்) |
| * 4. புராதனதிரிசிரபுரம் | 14. ஜெயவிஜயன் |
| 5. வித்யாநவநீதம் | * 15. பரிமளா |
| 6. ஜனகாமோகனசாதுரியம் | 16. ஸுலலிதாமநோகரம் |
| 7. நாகரீகபாரிஜாதம் | 17. இந்திரா |
| 8. சுகுமாரதிலகம் | 18. கலாப்பிரகாசனி |
| 9. புராதனசரித்திர விவரங்கள் | |
| *10 யாமனீபூர்ணதிலகம் | |

☞ ஒரு க்ஷேத்திரத்தை சேவித்தபிறகு, அதற்கு அடுத்ததாகச் சேவிக்கக்கூடிய க்ஷேத்திரம் இன்னதென்பதை யறியும்வண்ணமாக, க்ஷேத்திரங்களின் ஸமீபத்தை யநுஸரித்து இந்நூலில் 108-திவ்ய க்ஷேத்திரங்களையும் கோர்வைப்படுத்தப்பட்டிருப்பதை யாத்ராபரர்கள் கவனிப்பாராக.

# முகவுரை.

ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாராயணன் சேதனோஜ்ஜீவனார்த்தமாக எழு தருளியிருக்கும் நூற்றெட்டுத் திருப்பதிகள், புராணஸ்தலங்கள், புண்ணியதீர் தங்கள், ஆழ்வார் ஆசார்யர் அவதாரஸ்தலங்கள்,—இதுகளின் பிரபாவமும்; ஒவ் வொரு ஸ்தலத்திலுள்ள ஸ்வாமி, தாயார், விமானம், தீர்த்தம், புண்ணியவிரு க்ஷம்—இவைகளின் திருநாமங்களும்; இன்னமுகமாகவும் இன்னகோலமாகவு ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறாரென்று முதலில் தெரிவித்து, இறுதியில் இ தனை ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்றதென்றும் விவரித்து, நூலின் முடிவில் கிரமப்பிரகாரம் அந்தந்த ஆழ்வார்களின் திருநாமங்களும் குறிப்பிட பட்டுமுள்ளன.

இத்துடன் பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து, ஒவ்வொரு திவ்யதேச துக்கும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளிய பாசுரங்களின் தலைப்பும்; இதுவரையில் எவருமே எடுத்துக்காட்டியிராத விதமாக, அப்பாசுரங்கள்—நாலாயிரப் பிரபந்தத்தினுள் இன்ன இடத்தில் இத்தனையாவது பாசுரமென்ற தெளிவான கணிதக்குறிப்பும்; அந்தந்த திவ்யதேசங்கட்கு வழிகாட்டியும்; அந்தந்த ஸ்தலங்களின் ஸம்பந்தமான விவரணங்களும்; சரித்திரார்ஹமான சங் கிரகங்களும்; திவ்யஸ்தலங்கள் முதலியவைகளுக்கு மைல் விவரங்களோடு ரயில்பாதை, வண்டிப்பாதை விவரங்களும் சேர்க்கப்பட்டிருப்பதால், திவ்ய தேசயாத்திரை செய்யும் பக்த ஜனங்களுக்கு இந்நூல் வெகு உபயோககரமாக இருக்குமென்பது திண்ணம்.

இவ்வரிய கிரந்தத்தினை காலஞ்சென்ற எமது பிதா ஸ்ரீமான் சங்கு. கோவிந்தசாமிநாயுடு அவர்கள் 1893-ஆம் வருஷம் மார்ச்சுமீ 25-ஆம் தேதியில் எழுத ஆரம்பித்து, 1895-ஆம் வருஷம் செப்டம்பர்மீ 3-ஆம் தேதியன்று பூர்த்தி செய்தனர். அந்தந்த ஸ்தலங்களின் விவரங்களை யறிவதற்காக அவ்வவ்விடங்களிலுள்ள தபாலதிகாரிகட்கும், ஸ்டேஷன்மாஸ்டர்களுக்கும், வெளியூர்களிலுள்ள தமது நண்பர்களுக்கும், இன்னும் காங்கிரஸ் ரிபோர்ட்டின் மூலமாய் அந்தந்த திவ்ய தேசங்கட்கு ஸமீபமாக வஸிக்கும் கண்ணியர்களுடைய விலா ஸங்களை யறிந்து, அவர்களுக்கு 'ரிஜிஸ்தர்' கடிதங்கள் அனுப்பி அவர்களுடைய பதில் நிரூபங்கள் மூலமாக அநேக விவரங்களைத் தெரிந்துகொண்டும், அத்துடன் தாம் அநேக ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்றிருந்ததாலும், காங்கிரஸ் மகாசபையின் ஆரம்பகாலத்திலிருந்து பல காங்கிரஸ்களுக்குப்போய் வந்திருந்ததாலும் அத்தருணங்களில் தாம் அறிந்த அநேக விவரங்களைக் கொண்டும் இந்நூலை எழுதுவதற்கு முற்படுவாராயினர்.

இத்துணைச் சிரமமேற்கொண்டு இந்நூலை எமது பிதா அவர்கள் எழுதினாரும், அவர் காலத்திலேயே இது அச்சியற்றப்படாமற் போனது பெரிதும்

வருந்தற்பாலது. கடைசியாக "பிரஜாநுகூலன்" பத்திரிகையில் இந்நூலைத் தொடர்ந்து பிரசுரித்துவரக் கருதியிருந்த தருணத்தில் எதிர்பாராத விதமாக 1905 ஆம் வருஷம் மே மீ 25 ஆம் தேதியில் பரந்தாமன் திருவடி நிழலெய்தினார்கள். அதன் பின்னர் இந்நூல் நமக்குத் தெரியாமலே சக்கரைக் கடைக்கு மற்றக் காகிதக்கட்டுகளுடன் போய்ச் சேர்ந்து பொட்டணங்கள் கட்டுவதற்கு உபயோகமாகி ஒழிந்து போயிற்று. அந்நூலைப் பார்த்து இன்னொரு பிரதி எமது பிதா அவர்களின் காலத்திலேயே அவருடைய ஸஹோதரரும் எமது சிறிய தந்தையுமாகிய அநுமந்தம்பட்டி ஸ்ரீமான் த. ச. ரா. கோபாலகிருஷ்ண நாயுடவர்கள் எழுதிவைத்திருந்தாராதலின், அதனை அன்போடும் நமக்கு உபகரிக்க, அத்தியந்த பரவஸத்துடனும் அதைப் பெற்றுக் கொண்டு, அதில் பின்னும் பல விஷயங்களையும் சேர்த்து காலோசிதமான திருத்தங்களுடனும் இப்போது இதனைப் பிரசுரிக்கலானோம்.

நூற்றெட்டுத் திருப்பதிகளின் வரிசைக்கிரமம் இந்நூலில் யாத்திரை செய்வதற்குத் தக்கபடி கோர்வைப்படுத்தி எழுதப்பட் டிருக்கின்றது. ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் ஸ்வாமி இன்னாருக்குப் பிரத்தியக்ஷம் என்பதான குறிப்பு காட்டப்பட் டிருப்பதை உண்மையெனவே கொள்ளல் வேண்டும். துவாரகை க்ஷேத்திரத்தைப் பற்றிய குறிப்பில் த்ரௌபதைக்குப் பிரத்யக்ஷம் என்றிருக்கின்றது. திரௌபதை வஸ்திராபஹாரணத்தின்போது துவாரகாபுரிவாசா என்று ஓலமிட்டதும் ரக்ஷிக்கப்பட்டதும் இங்கு நினைவுகூறமிடத்து துவாரகையில் த்ரௌபதைக்குப் பிரத்தியக்ஷம் என்ற குறிப்பின் உண்மை நன்குதெரியவரும். இப்படியே ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் ஒவ்வொரு காரணம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, மதஸம்பந்தமானவற்றுள் தங்கட்கு விளங்காத பாகங்களைப் பற்றி அதைத் தவறு என்றாகிலும், பொய் என்றாகிலும் மறுக்கப்புகுவது விவேகபக்ஷமன்று. மேலும் அது அதிகப்பிரசங்கித்தனமுமாகும். எனவே நம்மனோர் மேற்றிசைத்தேச நாகரீகங்களால் புத்தி சலனப்படாமல் ஸ்வமதாநுசாரிகளாயிருந்து, பாரதவருஷத்தின் பூர்வ கௌரவத்தைக் காப்பதுடன், இதுபோன்ற உத்தமமான முயற்சிகட்கும் சகாயஸ்தர்களாயிருந்து விளங்குமாறு கோருகிறோம். யாத்ரீகர்கள் இந்நூலைக் கையில் வைத்துக்கொண்டு மார்க்கங்களை யறிந்து செல்வதுடன், ஆங்காங்குள்ள க்ஷேத்திரங்களில், இதில் கண்ட திருநாமங்களின் வரிசைப்பிரகாரம், அவ்விடத்தியவர்களைக்கேட்டு ஒவ்வொன்றாக சேவித்து இகபரஸாதனமும் பெறுவாராக. சுபம்.

ஸ்ரீரங்கம் திரிச்சி }
6-5-1914. }

"பிரஜாநுகூலன்" பத்திராதிபர்.

# அட்டவணை.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | முகவுரை | |
| 2. | ஸப்தபுரிகள் என்னும் முக்திநகர்கள் ... ... | 1 |
| 3. | ஸ்வயமாக உண்டான ஸ்தலங்கள் ... ... ... | ,, |
| 4. | தேவர்கள், ரிஷிகள், முதலியவர்களால் நிர்மிக்கப்பட்ட ஸ்தலங்கள் ... ... ... ... | ,, |
| 5. | புண்ணிய தீர்த்தங்கள். (நதிகள் இருக்கப்பட்ட சில இட விவரங்களுடன்) ... ... ... ... | 2 |
| 6. | மலைமேல் ஸந்நிதிகள். மலைகளின் பெயரும், அதின்மேலுள்ள ஸந்நிதிகளின் திருநாமம், ஸ்வாமியின் திருநாமம் முதலிய விவரங்களுடன் ... ... | 4 |
| 7. | புராண ஸ்தலங்கள். ரயில்பாதை, வண்டிப்பாதை, புராண சம்பந்தமான குறிப்புகள், மைல் விவரங்கள் முதலியவற்றுடன் ... ... ... ... | 4 |
| 8. | ஆழ்வார்கள் மங்களாசாசனக் குறிப்பு ... ... | 14 |
| 9. | நூற்றெட்டுத் திவ்யதேசங்களின் பிரபாவம். ஒவ்வொரு திவ்யதேசத்துக்கும் ரயில்மார்க்கம், வண்டிப்பாதை, மைல்கள், ஆழ்வார்கள் மங்களாசாசன விவரங்கள், சரித்திரார்ஹமான குறிப்புகள், முதலிய அநேக விவரங்களுடனும் ... ... ... ... | 15 |
| 10. | விசேஷக் குறிப்புகள் ... ... ... ... | 46 |
| 11. | சில குறிப்புகள் ... ... ... ... | 50 |
| 12. | ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளின பாசுரங்களின் தலைப்பு முதலியன ... ... ... | 51 |
| 13. | ஞாபகக்குறிப்பு ... ... ... ... | 52 |
| 14. | பாசுரங்களின் தலைப்பு ... ... ... | 53 |
| 15. | புஸ்தக விளம்பரங்கள் ... ... ... | 2 |

# ஆனந்தகதாகல்பகம்

அல்லது

## பிரபஞ்சத்தின் ஆச்சரியகரமான அநுபவ விநோதங்கள்.

600-பக்கங்கள் கொண்டது தமிழுலகத்திற்கே இது ஒரு அற்புதமான நூலாகும். 6-பாகங்கள், 10-நாவல்கள், 3-துப்பறியும் நாவல்கள், 26-கதைகள், 76-போதனைகள், 11-சரித்திர பாகங்கள், 8-தமிழாராய்ச்சிகள், 29-உலகக்குறிப்புகள், 2-படங்கள் இன்னும் அநேகம் இந்நூலில் அடங்கியுள்ளன. இது சம்பந்தமாக விவரமான நோட்டீஸ் தேவையானவர்கள் எழுதிக்கொண்டால் தபாற் செலவின்றி அனுப்பப்படும். ஆநந்தகதாகல்பகமானது பிரஜாநுகூலன் பத்திராதிபர் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடவர்களால் இயற்றப்பட்டதாகும் விலை ரூ 2-10-0. வி. பி. யில் ரூ 3. வெளிநாடுகட்கு ரூ 3-6-0.

# பிரஜாநுகூலன்.

"பிரஜாநுகூலன்" பத்திரிகை பிரபஞ்சத்தின் அநுபவ விநோதங்களை வெகு நன்றாய் எடுத்துக் காட்டுகிறதென்று எல்லோரும் புகழ்கின்றார்கள். சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் தத்தம் உள்ளத்தில் மறைந்து நிற்கும் ரகசியங்களெல்லாம் இதிற் காணப்படுகின்றனவேயென்று வெகுவாக வியந்து நேசிக்கின்றனர். உலகத்தில் பிரதியொரு மனிதனிடத்திலும் நிகழப்படாநின்ற அநுபவ விஷயங்களைத் திரட்டிக் கதாரூபமாகக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம். ஏனென்றால் அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும், அதனினும் மேம்பாடான படிப்பினையும் வேறேதுமில்லை. அநுபவமே குரு, அநுபவமே அரசன், அநுபவமே சாஸ்த்ரம், அநுபவமே சாக்ஷி, அநுபவமே உத்தம சிநேகிதனுமிருக்கிறது. கதைகளிலும் நாவல்களிலும் பிரீதிவாய்ந்தவர்கள் அவசியம் பிரஜாநுகூலனை வாங்கி ஆனந்திப்பார்கள். வெகு சிலாக்கியமான மாஸ ஸஞ்சிகை 40-பக்கங்களுள்ளது. 10-வருஷ காலமாக 1904-ம் வருஷமுதல் நடந்துவருகின்றது. வருஷ சந்தா வி. பி. யில் ரூ 1-6-0. மாதிரி பேபர் 2-அணா இன்றி அனுப்பமுடியாது.

## வித்தியா நவநீதம்.

இது விஸ்தாரமான வசனகாவியம், கதைகள், சரித்திரங்கள், நீதிவிஷயங்கள், ஞானவிஷயங்கள், மெஸ்மரிஸ முதலிய குறிப்புகள் விநோதங்கள், பெரியோர்களின் வாழ்நாட்செய்திகள், ஜாலங்கள் முதலிய அநேகவிதமான விஷயங்களுடன் கூடியது. பல படங்களும் பார்க்கலாம். 200 பக்கங்களுக்குக் குறைவில்லை. 20 பிரதிகள் தாம் கைவசம் உள்ளன. விலை அணா 14. உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பிரஜாநுகூலன் ஆபீஸ்,


# ஸ்ரீ விஷ்ணுஸ்தல யாத்ரா மார்க்க விவரணம்.

## ஸப்தபுரிகள் என்னும் முக்தி நகர்கள்.

அயோத்தியாபுரி, மதுராபுரி என்ற வடமதுரை, மாயா என்ற ஹரித்வாரம், காசி, காஞ்சீபுரம், அவந்திகாபுரி, துவாரகாபுரி.

## ஸ்வயமாக உண்டான ஸ்தலங்கள்.

ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடம், சாளக்கிராம பர்வதம், நைமிஸாரண்யம், வானமாமலை, (அல்லது ஸ்ரீவரமங்கை), புஷ்கர க்ஷேத்திரம், பத்ரிகாஸ்ரமம் ஆக 8.

## தேவர்கள், ரிஷிகள் முதலியவர்களால் நிர்மிக்கப்பட்ட ஸ்தலங்கள்.

| ஸ்தலங்களின் பெயர்கள். | யாரால் நிருமிக்கப்பட்டது? |
|---|---|
| திருக்கச்சி அத்திகிரி | பிரமன் |
| திருநாராயணபுரம் | வேதபுருஷன் |
| திருவநந்தபுரம் | ஆதிசேஷன் |
| திருநாங்கூர் | ஏகாதச ருத்திரர்கள் |
| திருப்புல்லாணி | இந்திரன் |
| துவாரகாபுரி [பள்ளி. | அக்கினி |
| திருக்கண்ணமங்கை, திருப்பார்த்தன் | வருணன் |
| கீழ்திருப்பதி | வாய்வு |
| திருக்கோளூர் | குபேரன் |
| செம்பொன்செய் கோயில் | ஈஸான்யன் |
| பவளவண்ணம் | அசுவனி தேவதைகள் |
| திருக்குடந்தை | தேவர்கள் இராக்ஷஸர்கள் |
| திருச்சேறை | காவேரி |
| நந்திபுர விண்ணகரம் | விஸ்வகர்மா |
| திருப்போரை | சுக்கிரன் |
| தேவப்பெருமான் | மாரீசரிஷி |
| திருக்குருகூர், தொலைவில்லிமங்கலம் | அகஸ்தியரிஷி |
| திருவல்லிக்கேணி | வியாஸரிஷி |
| கூடல் (தென்மதுரை) | சவுனகாதிமகாரிஷிகள் |
| திருமெய்யம் (சத்யகிரி) | இந்திரத்துய்மன் என்ற இராஜரிஷி |
| சித்ரகூடம் | பதஞ்சலிமுனிவர் |
| திருவண்வண்டூர் | மார்க்கண்டேயர் |
| ஸ்ரீவைகுந்தம் | பிருதுசக்கரவர்த்தி |

# புண்ணிய தீர்த்தங்கள்.

(நதிகள் இருக்கப்பட்ட சில இடங்களைமட்டும் காண்பித்திருக்கிறது.)

1. **காவேரி.**—இது 500-மைல் உள்ளது. திருச்சினப்பள்ளி, கும்பகோணம், மாயவரம் முதலிய இடங்களில் காணலாம். இறங்கவேண்டிய ரயில்வே ஸ்டேஷன் ஸ்ரீரங்கம்ரோட் அல்லது திரிச்சிகோட்டை. அகண்ட காவேரி எலமனூர் ஸ்டேஷனில்.

2. **தாம்பிரவர்ணி நதி.**—திருநெல்வேலி, திருக்குருகூர், தொதுவில்லிமங்கலம், ஸ்ரீவைகுந்தம், திருக்கோளூர் முதலிய இடங்களில். ரயில்வேஸ்டேஷன் திருநெல்வேலிப் பாலம்.

3. **கெருட நதி.**—திருவயிந்திரபுரம், திருக்கடன்மல்லை. ரெயில்வே ஸ்டேஷன் செங்கல்பட்டு.

4. **துங்கபத்திரா நதி.**—ஆதோணியிலிருந்து 126-மைல். ரயில்வே ஸ்டேஷன் துங்கபத்திரா. துங்கபத்திரையில் இறங்க விரும்புவோர் அரிசி முதல் யாவும் கைபிற்கொண்டு போகவேண்டும். வழியெல்லாம் கருங்கற்சல்லிகள் பாவியிருத்தலால் காலில் பலமில்லாதவர்களுக்கு வெகு கஷ்டம். "கங்காஸ்நாநம் துங்காபானம்" என்ப. இந்நதியின் வடகரைமுதல் ஐதராபாத் நிஜாம் ராஜ்ஜியத்தைச் சேர்ந்தது.

5 **கிருஷ்ண நதி.**—இது 700 மைல் உள்ளது. மசூலிப்பட்டணத்திலும், ராயச்சூரிலிருந்து 16-வது மைலிலும் பார்க்கலாம். நதியின் பெயரே ரயில்வே ஸ்டேஷன் பெயராயிருக்கிறது. ஸ்டேஷனுக்குக் கால்மைல் தூரத்தில் நதியும், அதன் கரைமேலே பெரிய தருமசாலையும் கடையுமிருக்கின்றன. கிருஷ்ணநதி சங்கமம் பார்ப்பதற்கு பெஜவாடா ஸ்டேஷனில் இறங்கவேண்டும்.

6. **கோதாவரி நதி.**—

"* புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் ருகி
அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்."

சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை யென்றார் கம்பர். இந்த நதிக்கு அவர் பாடலே ஒப்பாகும். தென்கரையில் நாசிக் நகரமும் வடகரையில் பஞ்சவடியுமிருக்கின்றன. இராஜமகேந்திரவரம், நாசிக் இவ்விடங்களில் இந்த நதியைக் காணலாம். ரெயில்வேஸ்டேஷன் பண்டாம்பா. இராஜமகேந்திரவரம் ஸ்டேஷனில் இறங்கினுல் கோதாவரி சங்கமம் காணலாம்.

* கம்பராமாயணம் ஆரண்யகாண்டம் சூர்ப்பநகைபடலம்.



7. **நர்மதா நதி.**—இது 750-மைல் உள்ளது. புரோச்சு (Broach) பம்பாயிலிருந்து 204-வது மைல். சாந்தோட் (Chandode) பரோடாவிலிருந்து 29-மைல். ஹஷங்கபாத்து, ஜப்பல்பூர் முதலிய பல இடங்களில் காணலாம். ரெயில்வே ஸ்டேஷன் மீராகஞ்சு, நர்படா. புரோச்சு ஸ்டேஷனில் இறங்கினுல் சகல நதி ஸ்நாநம் செய்யலாம்.

8. **சரஸ்வதி நதி.**—பரோடாவிலிருந்து அமதாபாத்து வழியாய் 126-வது மைலில் சிந்துபூரில் (Sindhpur) இருக்கிறது.

9. **யமுநா நதி.**—ஆயர்பாடி, ஆக்ரா, பிருந்தாவனம், ஹரித்வாரம் முதலிய இடங்களில் காணலாம். யமுனையாற்றின் கரைமேலுள்ள ஆக்ராபட்டணத்தில் டாஜ்மகால் என்ற பெரிய மண்டபமிருக்கின்றது. அவ்விடத்தியவரின் துணையால் யாவும் நன்ருய்ப் பார்க்கலாம்.

10. **கங்காநதி.**—இது 1500-மைல் நீளம் உள்ளது. காசி, பாடலிபுரம் ரிஷிகேசம், பதரி, கடிநகர் முதலிய இடங்களில்.

11. **பிரயாகைநதி.**—கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமம். தீர்த்தராஜா என்றும் இதற்குப் பெயர். பிரயாகையை இப்போது அலஹாபாத் என்று அழைக்கப்படுகிறது. பிரயாகையில் சங்கமத்தில் ஸ்நானம் செய்வது எப்போதுமே புண்ணியமாகக் கருதப்பட்டாலும், தை, மாசி மாதங்களில் மகாமேலா என்றும், கும்பமேலா என்றும் சொல்லப்படுகிற இரண்டு புண்ணிய காலங்களில் ஸ்நானம் செய்வது விசேஷமென்று லக்ஷக்கணக்கான பிரஜைகள் பாரத வருஷத்தின் நாநா பாகங்களிலிருந்தும் இங்கு ஒன்றுகூடுகின்றார்கள். பம்பாயிலிருந்து மன்மாட், புசாவல் மார்க்கமாய் பிரயாகை 844-மைல்.

12. **பல்குனி நதி.**—கயாவில் காணலாம்.

13. **புனப்புனகா நதி (Poonpoon).**—கயா பட்டணத்துக்கு வருகிற வழியில் மன்கிபூரிலிருந்து 8-வது மைலில் இந்த ஜீவநதி ஓடுகின்றது. இந்த நதியில் ஸ்ரீராமபிரானின் ஸ்வபத்தினியாகிய சீதாபிராட்டியார் ஒருகாலத்தில் வந்து ஸ்நாநம் செய்து, பரிசுத்தமான நதியாகியதால், கயாவுக்குப் போகப்பட்ட யாத்திரைக்காரர்கள் முதலில் இந்த நதியின் கரைமீது இறங்கி க்ஷவரம் செய்துகொண்டுதான் கயாக்ஷேத்திரத்தில் பிரவேசிக்கவேண்டும்.

14. **புஷ்கரம்** (ஆஜ்மீரம்.) ரெயில்வே ஸ்டேஷன் ஆஜ்மீயர். புஷ்கரத்துக்கு ஸமீபத்தில் சாகர் மூக்திநதியும், அன்னஸரோவரமும் இருக்கிறது. புஷ்கரஸரோவரம் மஹாபுண்ணிய தீர்த்தம். ஷை ஸரோவரத்திலிருந்து சரஸ்வதியோடுகின்றது. ஆஜ்மீரிலிருந்து புஷ்கரம் 7-மைல். டெல்லியிலிருந்து ஆஜ்மீர் 275-மைல்.

15. **ஸரயூ நதி.**—அயோத்தியா.

16. **கண்டகி நதி.**—சாளக்கிராமம். ரெயில்வே ஸ்டேஷன் பாட்னு, சோன்பூர்.

17. **சிந்து நதி.**—இது 1800-மைல் நீளம் உள்ளது. லாகூரில் (Lahore) காணலாம்.

18. **பிதூர் (பிரம்மவர்த்தம்).**—பிரம்மகட்டடம், கங்காநதி ஸ்தானம் முக்கியமானது. கான்பூருக்கு வடக்கே 17-மைல் ரெயில்பாதை.

19. **விரஜா நதி.**—இது பரமபதத்தில் இருக்கிறது.

---

## மலைமேல் ஸந்நிதிகள்.

---

**சுவேதகிரி.**—திருவெள்ளரை, புண்டரீகாக்ஷன்.

**வர்ஷபகிரி.**—திருமாலிருஞ்சோலைமலை, அழகர்.

**ஸத்யகிரி.**—திருமெய்யம், ஸத்தியமூர்த்தி.

**அத்திகிரி.**—திருக்கச்சி, வரதராஜப்பெருமாள்.

**வாரணகிரி.**—திருக்கச்சி, அழகிய சிங்கப்பெருமாள்.

**கடிகாசலம்.**—சோழிங்கபுரம், யோகாந்தவிம்ஹர்.

**வேங்கடாசலம்.**—திருப்பதி, திருவேங்கடத்தான்.

**சாளக்கிராம பர்வதம்.**—ஸ்ரீ மூர்த்தி பெருமாள்.

**இமயமலை.**—பதரிகாஸ்ரமம், பதரீநாராயணன்.

**ஷை கடிநகர்.**—நீலமேகப் பெருமாள்.

**ஷை திருப்பிரதி.**—பரமபுருஷன்.

**கோவர்த்தன பர்வதம்.**—கோவர்த்த நேசன்.

**எதுகிரி.**—யாதவகிரி. திருநாராயணபுரம், திருநாராயணப்பெருமாள், செல்வப்பிள்ளைராயர்.

---

## புராண ஸ்தலங்கள்.

---

### 1. ராஜமன்னார் கோயில். (தக்ஷிண துவாரகை)

### மணவாளமாமுனிகள் ஸமர்ப்பித்தது.

**திருநாமங்கள்.**—ராஜகோபாலன், !பரவாசுதேவர், செங்கமலநாச்சியார், ஸ்வயம்பூ விமானம், அரித்திராந்தி புஷ்கரணி, சங்க தீர்த்தம், சக்கிர தீர்த்தம், கிருஷ்ண தீர்த்தம், ருக்மணி தீர்த்தம், கஜேந்திர தீர்த்தம், க்ஷீரஸாகர தீர்த்தம்,



கோப்ரயை தீர்த்தம், கோபிநாத தீர்த்தம், சம்பகாரண்ய க்ஷேத்திரம், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், கோபில கோப்ரயை மகாமுனிக்கு ப்ரத்யக்ஷம்.

**பாசுரம்.**—நம்மாழ்வார் மங்களாசாசனம்: திருவாய்மொழி 4-ம் பத்து ஆறும் திருவாய்மொழி 10-வது.—உன்னித்து மற்றொரு தெய்வம்.

**மார்க்கம்.**—தஞ்சாவூரிலிருந்து நீடாமங்கலம் ரெயில்பாதை 20-மைல். அதிலிருந்து 9-மைல் வண்டிப்பாதை. ரெயில்வே ஸ்டேஷன் நீடாமங்கலம்.

---

### 2. பாபவிநாசம்.

**திருநாமங்கள்.**—பாபவிநாசப் பெருமாள், பங்கயவல்லி நாச்சியார், பாபவிநாசவிமானம், புண்டரீகபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். ஜெயங்கொண்ட சோழனுக்கு ப்ரத்யக்ஷம்.

**மார்க்கம்.**—தஞ்சாவூரிலிருந்து 15-மைல் ரெயில் பாதை. ரெயில்வே ஸ்டேஷன் பாபநாசம்.

---

### 3. ஸ்ரீமுஷ்ணம்.

**திருநாமங்கள்.**—ஆதிவாரகப்பெருமாள், அம்புஜவல்லிநாச்சியார், வாமன விமானம், நித்யபுஷ்கரணி தீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். அச்வத்த நாராயணனுக்கு ப்ரத்யக்ஷம்.

**மார்க்கம்.**—ஸ்ரீ முஷ்ணம் என்பதை ஸ்ரீ முஷ்டம் என்றும் சொல்வர். ரெயில்வே ஸ்டேஷன் சிதம்பரம். சிதம்பரத்திலிருந்து 15-மைல்.

---

### 4. குருகை காவலப்பன் ஸந்நிதி.

**ஸ்தல விசேஷம்.**—இது ஆளவந்தார் அவதார ஸ்தலம்.

**மார்க்கம்.**—ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து 7-மைல்.

---

### 5. வீரநாராயணபுரம். (காட்டுமன்னார் கோயில்)

**ஸ்தல விசேஷம்.**—ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார் அவதார ஸ்தலம்.

**மார்க்கம்.**—குருகை காவலப்பன் ஸந்நிதியிலிருந்து 8 மைல். அல்லது சிதம்பரத்திலிருந்து 15-மைல்.

---

### 6. மதுராந்தகம்.

**திருநாமங்கள்.**—ஏரிகாத்த பெருமாள்.

**ஸ்தல விசேஷம்.**—பெரியநம்பிகள் ஸ்ரீ இராமாநுஜருக்கு பஞ்ச சமஸ்காரம் செய்வித்த இடம்.

**மார்க்கம்.**—செங்கற்பட்டுக்குத் தெற்கே 15-மைல் ரெயில் பாதை. ரெயில்வே ஸ்டேஷன் மதுராந்தகம்.

---

## 7. மஹாபலிபுரம். (கோயில்பட்டணம்)

**திருநாமங்கள்.**—புண்டரீகாக்ஷப் பெருமாள்.

**மார்க்கம்**—செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் ரஸ்தா மார்க்கம் 18-மைல். சமுத்திர தீரம். சதுரங்கப்பட்டணத்துக்கு ஸமீபம்.

---

## 8. திருமயிலை.

**திருநாமங்கள்.** — கேசவப்பெருமாள், மாதவப்பெருமாள், கைரவணி ஸரஸ்ஸு.

**ஸ்தலவிசேஷம்.**—பேயாழ்வார் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—சென்னப்பட்டணத்திலிருந்து தெற்கே 5-மைல்.

---

## 9. திருமழிசை.

**திருநாமங்கள்.**—ஜெகநாதஸ்வாமி.

**ஸ்தல விசேஷம்.**—திருமழிசையாழ்வார் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—சென்னையிலிருந்து ஆவடி 13-மயில். அதிலிருந்து வண்டிப் பாதை 8-மைல். திருவள்ளூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும் போகலாம்.

---

## 10. பழைய பூந்தமல்லி.

**திருநாமங்கள்.**—பூவிருந்தவல்லி, வரதராஜப்பெருமாள், ஸ்ரீநிவாஸப்பெருமாள், புஷ்பகவல்லித்தாயார்.

**ஸ்தலவிசேஷம்.**—திருக்கச்சிநம்பிகள் அவதார ஸ்தலம்.

**மார்க்கம்.**—ஆவடியிலிருந்து 3-மைல். திருவள்ளூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும் போகலாம்.

---

## 11. முதலியாண்டான் ஸந்நிதி.

**திருநாமங்கள்.**—பச்சைவண்ணப் பெருமாள், ஹரிதவாரணப் பெருமாள், அமுதவல்லித்தாயார்.

**மார்க்கம்.**—பூவிருந்தவல்லி (பூந்தமல்லி)யிலிருந்து ஒரு மைல்.



## 12. பூதபுரி. (ஸ்ரீ பெரும்பூதூர்)

**திருநாமங்கள்.**—ஆதிகேசவப்பெருமாள், எதிராஜவல்லித்தாயார், ராமாநுஜ புஷ்கரணி (புத்தேரி), அனந்தஸரஸு, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், ஆசூரி கேசவாசாரியருக்கும் எதிராஜருக்கும் பிரத்யக்ஷம்.

**ஸ்தல விசேஷம்.**—ஸ்ரீ உடையவர் அவதார ஸ்தலம்.

**மார்க்கம்.**—திருவள்ளூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கு 10-மைல்.

---

## 13. மதுரமங்கலம்.

**ஸ்தல விசேஷம்.**—கோவிந்தபட்டர் என்ற எம்பார் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—ரயில்வே ஸ்டேஷன் காஞ்சீபுரம்.

---

## 14. கூரம்.

**ஸ்தல விசேஷம்.**—கூரத்தாழ்வான் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—காஞ்சீபுரத்திலிருந்து 5-மைல்.

---

## 15. விரிஞ்சிபுரம்.

**திருநாமங்கள்.**—பக்தவத்ஸல ஸ்வாமி.

**மார்க்கம்.**—சோழியிகபுரத்திலிருந்து 33-மைல் ரெயில்பாதை. வண்டிப பாதை ஸ்டேஷனுக்குத் தெற்கே 3-மைல்.

---

## 16. ஸ்ரீரங்கபட்டணம்.

**திருநாமங்கள்.**—ஸ்ரீரங்கநாதஸ்வாமி, நரசிம்மஸ்வாமி.

**ஸ்தல விசேஷம்.**—ஸ்ரீரங்கத்தைப்போலவே, ஸ்ரீரங்கப்பட்டணத்தையும் காவிரியாறு இரண்டு கிளையாகப் பிரிந்து சூழ்ந்துகொண்டிருக்கிறது. அத்தீவு ஏறக்குறைய 3½-மைல் நீளமும், மிகவும் அகன்ற இடமான மத்திய பாகத்தில் ஒன்றரை மைல் அகலமும் உடையது. கோட்டை இரண்டாயிரம் சதுரகஜம் பரப்புள்ளது. காவிரியாறு அக்கோட்டையை மேற்கிலும் வடக்கிலும் மிக நெருங்கிச் சூழ்ந்துகொண்டு அதற்கு ஒரு உத்தமமான அகழ்போல விளங்குகின்றது.

**மார்க்கம்.**—பெங்களூரிலிருந்து தென்மேற்கு 77-மைல்.

---

## 17. சிஞ்சென்கெட்டா. (எடத்துறை)

**ஸ்தல விசேஷம்.**—ஸ்ரீராமர் ஸந்நிதி. சீதாதேவி ஸ்நானம் செய்த இடம்.

**மார்க்கம்.**—மைசூர் ஜில்லா எடத்துறை தாலுக்கா, ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்து, இலிவாலா மார்க்கம் எடத்துறை 23-மைல்.

---

## 18. மிதுனசாலைக் கிராமம்.

**ஸ்தல விசேஷம்.**—நரசிம்மன் சன்னிதி. இராமாநுஜ திருப்பாத சன்னிதி. ஸ்ரீபாத தீர்த்தகுளம்.

**மார்க்கம்.**—எடத்துறை தாலுக்கா, எடத்துறையிலிருந்து 8-மைல்.

---

## 19. திருநாராயணபுரம். (மேலக்கோட்டை)

**யாதவகிரி, தக்ஷிணபத்ரிகாஸ்ரமம், ஸ்ரீ உடையவர் ஸமர்ப்பித்தது.**

**திருநாமங்கள்.**—திருநாராயணப் பெருமாள், செல்வப்பிள்ளைராயர், யாதவ நாராயணப்பெருமாள், எதுகிரி நாச்சியார், வரலட்சுமித்தாயார், ஆநந்த விமானம், திருக்கல்யாணி தீர்த்தம், வைகுந்த தீர்த்தம், பராசர தீர்த்தம், மைத்ரேய தீர்த்தம், தனுஷ்கோடி தீர்த்தம், யாதவ தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், லோக பாலன தீர்த்தம், வேதபுஷ்கரணி, ஸ்ரீராம தீர்த்தம், நாராயண தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், கருடனுக்கு வயிரமுடி நிமித்தமாகப் பிரத்யக்ஷம்.

**ஸ்தல விசேஷம்.**—நஞ்சீயர் அவதார ஸ்தலம். மலைமேல் நரசிம்மர் சன்னிதி. பங்குனிமாதம் புஷ்ய நக்ஷத்திரத்தில் வைரமுடி உற்சவம். நம்மாழ்வார் மங்களாசாஸனம். தி. வா. மொ. 4-ப-1-பதிகம், 1-பா. "ஒரு நாயகமாய்."

**மார்க்கம்.**—மைசூரிலிருந்து 18-மைல். ஸ்ரீரங்கப்பட்டணம் தாலுகா அல்லது ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு வடக்கே $23\frac{1}{4}$-மைல் தூரமுள்ள பிரான்ஞ்சு ராக்ஸ் (French Rocks) ஸ்டேஷனிலிருந்து 15-மைல்.

---

## 20. தொண்டனூர்.

**திருநாமங்கள்.**—லக்ஷ்மீநாராயணர், கிருஷ்ணர், மேட்டின்மேல் நரசிம்மர்.

**ஸ்தல விசேஷம்.**—விஷ்ணுவர்தருடைய குமாரத்தியைப் பிடித்திருந்த பிரம்மராக்ஷஸனை உடையவர் துரத்திய இடம்.

**மார்க்கம்.**—பிரெஞ்சுராக்ஸிலிருந்து 4 - மைல். அல்லது மேல்கோட்டையிலிருந்து 18-மைல்.

---



## 21. அம்பி. (கிஷ்கிந்தாபுரி.)

**திருநாமங்கள்.**—சீதாராமர், நரசிம்மர்.

**ஸ்தல விசேஷம்.**—அநுமார், சுக்ரீவன் முதலியவர்களை ஸ்ரீராமர் கண்ட இடம். ரிஷ்யமுகபர்வதம். பம்பாதீர்த்தம். சவரி ஆச்ரமம்.

**மார்க்கம்.**—பெங்களூரிலிருந்து ஹூப்ளி (Hubli) மார்க்கம் (Hospet) ஒபட்டு ஸ்டேஷன் 360-மைல். ஷை ஒபட்டு ஸ்டேஷன் குண்டக்கல்லிலிருந்து $70\frac{1}{2}$-மைல். ஷை ஒபட்டுக்கு 8-வது மைல் வண்டிப்பாதை அம்பி.

---

## 22. பத்திராசலம்.

**திருநாமங்கள்.**—ஸ்ரீராமர், சீதாதேவி.

**மார்க்கம்.**—குண்டக்கல்லிலிருந்து ரய்ச்சூர், வாடி, ஹைதராபாத்து, தோரணக்கல் மார்க்கமாய் எலந்தலப்பாடு ஸ்டேஷனுக்கு 421-மைல். எலந்தலப்பாடியிலிருந்து வண்டிப்பாதை 25-மைல். பெஜவாடாவிலிருந்து தோரணக்கல் மார்க்கமாய் எலந்தலப்பாடு 93-மைல்.

---

## 23. பண்டரிபுரம்.

**திருநாமங்கள்.**—பாண்டுரங்கவிட்டலர், விட்டோபாருக்மணி பிராட்டி.

**ஸ்தல விசேஷம்.**—கிருஷ்ணாநதியின்கிளை, பீமாநதி. பாண்டுரங்கவிட்டலரைத் தொட்டுகட்டி தாவி சேவிக்கலாம்.

**மார்க்கம்.**—ராயச்சூருக்கும்(Barsi Road) பார்ஸிரோட்டுக்கும் 209-மைல், அதிலிருந்து தென்கிழக்காய் வண்டிப்பாதை 31-மைல். ஜோலாபூர் ஜில்லா.

---

## 24. பஞ்சவடி. (நாசிக்.)

**ஸ்தலவிசேஷம்.**—ஸ்ரீராமர் ஸந்நிதி, ஆலமரத்தடி குகையில் சீதா, லட்சுமணர். கோதாவரிநதி, ஸ்ரீராமர், சீதா, லட்சுமணர் சகிதமாய்த் தங்கின இடம்.

**மார்க்கம்.**—பம்பாய்க்கு வடகிழக்கே 117 மைல், அல்லது, பார்ஸிரோட்டிலிருந்து தொண்டு, மன்மாட் மார்க்கம் 259 மைல். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கோதாவரியின் தென்கரை, நாசிகை 5 மைல். வடகரையில் பஞ்சவடி, ரயில்வே ஸ்டேஷன் நாசிக்ரோட். இலக்ஷ்மணர் சூர்ப்பனகையின் மூக்கை யரிந்த இடமானதுபற்றி காரணப்பெயராக நாசிகை, நாசிக் என்று வழங்குகின்றது.

குறிப்பு.—பஞ்சவடி இப்போது சிறு ஊராக இருக்கின்றது. ஐந்து ஆல விருக்ஷமுள்ள காரணத்தால் அவ்வூருக்கு அப்பெயருண்டாயிற்று. அந்த விருக்ஷங்களின் மத்தியில் சுரங்கமொன்றிருக்கின்றது. ஸ்ரீராமர் கரதூஷணர்களோடு போர்புரிந்த காலே, அச்சுரங்கத்துக்குள் சீதாபிராட்டியாரை எழுந்தருளி இருக்க வைத்து இளையபெருமாளைக் காக்கச் செய்தனரென்றும் சொல்லப்படுகிறது. காசு கொடுத்து உள்ளே புகுந்து பார்க்கலாம்.

நாசிகைக்கு 8-மைல் தூரத்தில் இருக்கின்ற கங்கஸ்பூரில் கோதாவரிநதி மலையினின்று விழுகின்ற தோற்றம் வெகு நேத்திரானந்தமாயிருக்கும். நாசிகையிலிருந்து 20 மைல் தூரத்தில் கோதாவரி நதியின் உற்பத்தி ஸ்தானமாகிய திரியம்பக மிருக்கின்றது.

## 25. பாடலீபுரம். (பாட்ன.) அவந்திகாபுரி.

**மார்க்கம்.**—காசியிலிருந்து, மொகல்சிரே மான்கிபூர் மார்க்கம் 147 மைல். ரெயில்வே ஸ்டேஷன் உஜின்.

## 26. கயா.

**ஸ்தல விசேஷம்.**—விஷ்ணு பாதஸந்நிதி, பல்குனி நதி, சமீபத்தில் வைகுண்டம் என்னும் திவ்யஸ்தலம், விஷ்ணு கேதாதாரூபம், அதாவது பரமபிதுர் ஸ்வரூபமாயிருந்து சிரார்த்தங்களை அங்கீகரித்துக்கொள்கிறார். அக்ஷயவடவிருக்ஷம் விஷ்ணுபாத ஸந்நிதியிலிருந்து ஒரு மைல். கேதாதா ஸ்வாமி கோயில், சண்பகாரண்யம், கயாவிலிருந்து 5, அல்லது 6 மைல். சாமான்யமாய் யாவரும் பல்குனி நதியில் நீராடிச் சிரார்த்தம் செய்து விஷ்ணுபதத்தில் பிண்டபிரதானம் செய்வர். அதுவே போதுமானதென்ப.

**மார்க்கம்.**—காசியிலிருந்து பன்கிபூர் 142 மைல்; பன்கிபூரிலிருந்து கயா 57 மைல். ரெயில்வே ஸ்டேஷன் கயா.

## 27. பூரி. (ஜெகந்நாதம்.)

**திருநாமங்கள்.**—ஸ்ரீபலராமர், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, சுபத்திரை, நின்ற திருக்கோலம்.

**ஸ்தல விசேஷம்.**—ஜெகந்நாதம் என்ற திவ்யதேசத்தில் ஸ்ரீபத்மநாபம் ஸ்ரீகூர்மம், ஸ்ரீநரசிம்மம், என்ற மூன்று தேசங்களிருக்கின்றன. இங்கு 12-வருஷங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடக்கும். இது இந்தியாவின் கீழ்க்



கரையிலுள்ள புராதன க்ஷேத்திரம். இது கடற்கரைப்பட்டணம். துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனம் செய்வதற்காக துவாபரயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி மதுராபுரியில் அவதாரமாயினர். அவருடைய லீலாவைபவங்களை யறியாதாரிலர். கடைசியாக அவர் பார்த்தனுக்குக் கீதோபதேசம் செய்தார். பாரதயுத்தத்தை நடத்தினர். பூபார பரிகாரம் செய்தார். இஷ்டர்களைக் காப்பாற்றினர். ஸ்ரீ ஜகந்நாதத்தில் கலியுகத்தில் பிரத்தியக்ஷ தெய்வமாக எழுந்தருளிநின்று பக்தர்களுக்கு சேவை சாதித்து அநுக்கிரகம் செய்து வருகின்றார். வருஷா வருஷம் அந்த ஸ்தலத்தில் ஜூலை மாதத்தில் ரதோத்ஸவம் நடப்பது வழக்கம். அதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் போய்க் கூடுகிறார்கள். இந்த ஸ்தலத்தில் ரதோத்ஸவந்தான் வெகு விசேஷமானது. இந்த ஸ்தலத்தில் நிவேதனமாகும் பிரஸாதத்தையும், ஸ்வாமிக்கு அணிந்திருக்கும் துளசிமாலே, கந்தம் முதலியவற்றையும் ஆசாரம் பாராட்டாது கிரகிப்பவர்க்கு இகத்திலும் பரத்திலும் ஸகல நன்மைகளுமுண்டாகும்.

**குறிப்புகள்.**—இது வெகு புராதனமான கோயில். கோயில் 652-அடி நீளமும், 644 அடி அகலமும் உள்ளது. கோபுரத்தின் உயரம் 192-அடி. இங்கு வசிக்கும் ஜனங்களுக்கு ஊரியர்கள் என்று பெயர். அவர்கள் பேசுவது ஒடியா பாஷை. இதை ஒட்டிரபாஷை, ஊரியாபாஷை என்று சொல்வதுமுண்டு. இந்த ஜெகந்நாதம் கடகம் டிவிஷனைச் சேர்ந்தது. இங்கு ஜெயப்பூர், கள்ளிக்கோட்டை, தாரகோடா, மந்தாஸா, பர்லாகிமிடி முதலிய ஜெமீன்களுண்டு. மேலேகூறிய ராஜ்யங்களெல்லாம் மலைப்பிரதேசங்களாயும், பார்ப்பதற்கு வேடிக்கையாயு மிருக்கின்றன.

**மார்க்கம்.**—கல்கத்தாவிலிருந்து கடகம் 248-மைல். கடகத்திலிருந்து பூரி 60-மைல். அல்லது பெஜவாடாவிலிருந்து மசூலிப்பட்டணம், ராஜமகேந்திரம், விசாகப்பட்டணம், கஞ்சம் மார்க்கம் பூரி 488-மைல். ரெயில்வே ஸ்டேஷன் ஜகந்நாதம்.

## 28. பிருந்தாவனம்.

**திருநாமங்கள்.**—ராதாவல்லபன், ராதாதேவி, கோவிந்த தேவர், கோபிநாதர். மதனமோஹனர் கோயில். இது காளிங்கமர்த்தன கட்டடத்திற்கு ஸமீபம். ஸ்ரீரங்கநாதர், வஸ்திராபஹார தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், ராதாதேவிக்குப் பிரத்யக்ஷம்.

**பாசுரம்.**—ஆண்டாள் மங்களாசாசனம். தி. மொ 14-1-10 பட்டிமேய்ந்து.

**மார்க்கம்.**—எமுனை வடகரை. வடமதுரையிலிருந்து ரயில் பாதை 8-மைல். ரெயில்வே ஸ்டேஷன் பிருந்தாபன்.

## 29. கோவர்த்தனம்.

**திருநாமங்கள்.**—கோகுலநாதர், ஸ்ரீஹரிநாதர், ஸ்ரீராதா தேவி, பர்வத விமானம், மானஸகங்கை, பிரம்மதீர்த்தம், ராதா தீர்த்தம், காளிங்கன் மடுவு, கோவர்த்தன பர்வதம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், யாதவர்களுக்கும் இந்திரனுக்கும் பிரத்யக்ஷம்.

**பாசுரம்.**—பெரியாழ்வார் மங்களாசாசனம். தி. மொ. 3-5-1-11 அட்டுக்குவி.

**மார்க்கம்.**—வடமதுரையிலிருந்து சாதுகாகிராமம் 3-மைல். சாதுகாவிலிருந்து, கோவர்த்தனம் 11-மைல்.

---

## 30. இந்திரப்பிரஸ்தம். (டெல்லி.)

**ஸ்தல விசேஷம்.**—பஞ்சபாண்டவர்கள் அரசுபுரிந்த இடம்.

**குறிப்புகள்.**—கி. மு. 50-வது வருஷத்தில் டில்லு என்ற ராஜாவால் இந்நகரம் ஸ்தாபிக்கப்பட்டபடியால், இதற்கு டெல்லி என்ற நாமம் வழங்கி வருகிறது. கி. பி. 1640-ல் ஷாஜிஹானால், டெல்லிப்பட்டணம் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. க்வீன் விக்டோரியா அரசாட்சிக்கு முந்தி இந்த டெல்லி நகரை சுல்தான் ரீஜியா என்ற பெண் அரசி ஆண்டுவந்தாள். டெல்லிப்பட்டணம் வியாபாரத்தில் சிறந்தது. 1908-ம் வருஷத்தில் மின்சார வண்டிகள் ஏற்பட்டன. 1901-வருஷத்திய கணக்குப்படி டெல்லியின் ஜனத்தொகை, 114417 ஹிந்துக்களும், 88460 மகம்மதியர்களும், 5698-கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் என்று சொல்லப்படுகிறது.

**டெல்லியில் யமுனா நதிப்பாலம்.**—டெல்லிக்குப் பக்கத்தில் யமுனாநதிக்குக் கட்டப்பட்ட பாலத்தின் நீளம் 2640 அடி. 211½ அடியுள்ள 12 வளைவுகள் இருக்கின்றன. இப்பாலத்தின் மேல் ரயில் ரோட்டும் கீழ்பாகத்தில் வண்டிப் பாதையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பாலம் கட்டி முடிப்பதற்குச் செலவான தொகை 1660355 ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தப் பாலம் 1867-வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியில் கட்டப்பட்டது.

**மார்க்கம்.**—ஆஜ்மீரத்திலிருந்து ஜெயபூர் மார்க்கம் டெல்லி 275-மைல் அல்லது வடமதுரையிலிருந்து ஹாட்ராஸ், அலிகர், காஜிபாத்து மார்க்கம் டெல்லி 126-மைல். ரெயில்வே ஸ்டேஷன் டில்லி.

---

## 31. ஹரித்வாரம் (மாயா.) யமுநா நதி.

**ஸ்தல விசேஷம்.**—பரமபதத்துக்குப் போகும் ஏணியாகி, சப்தபுரியில் ஒன்று. கங்கை இமயமலையிலிருந்து பூமியில் விழும் இடம். சுகர் தபசு செய்த



நீலதாரை என்ற ஸ்தலம். பரிக்ஷித்து தபசுகட்டம். ஸ்நானகட்டம். தக்ஷப்பிரஜாபதி யாக கட்டம். மகாவிஷ்ணு சயனித்திருக்கிற இடம்.

**மார்க்கம்.**—ஹரித்துவாரம் ஒரு ரயில்வே ஸ்டேஷன், ஸ்டேஷனுக்கு 6 மைல் தூரத்தில் இவைகள் உள்ளன. காசியிலிருந்து லக்னோ, பாரி எல்லி, லக்ஷார். மார்க்கம் ஹரித்வாரம் 519 மைல். டெல்லியிலிருந்து காஜிபாத்து, ஷஹரன்பூர், லக்ஷார் மார்க்கமாய் ஹரித்துவாரம் 161-மைல்.

---

## 32. ரிஷி கேசம்.

**மார்க்கம்.**—இமயகிரிமலைச் சார்பில் கங்கைக்கரையின் மேலிருக்கிறது. ஹரித்வாரத்திலிருந்து 15-மைல். இதிலிருந்து பார்த்தால் இமயமலையை நன்கு காணலாம்.

---

## 33. பரதாழ்வான் ஆச்ரமம்.

**மார்க்கம்.**—மேலே சொன்னதற்கு ஸமீபத்திலேயே இருக்கிறது. இந்த வழியாகவே போனால் தபோவனம் செல்லலாம்.

---

## 34. தபோவனம்.

**மார்க்கம்.**—தபோவனம், இலக்ஷ்மணர்கோயில் இவைகள் இமயகிரிக்குப் போகும் வழியில் இருக்கிறது. அதற்கு ஸமீபத்தில், தேவப்பிரயாகை என்ற கடிநகர் இருக்கிறது.

---

## 35. ஸ்ரீநகரம்.

**ஸ்தலவிசேஷம்.**—கங்கை, யமுனை உற்பத்தி ஸ்தானம்.

**மார்க்கம்.**—இமயமலையில் தேவப்பிரயாகைக்கு ஸமீபத்தில் இருக்கிறது. ஹரித்வாரத்திலிருந்து, சஹரன்பூர், லாகூர் மார்க்கம் ரெயில்பாதையாக ஜீலம் ஸ்டேஷனுக்கு 389 மைல். ஜீலத்திலிருந்து ரஸ்தாமார்க்கம் ஸ்ரீநகரத்திற்கு 100 மைல். அல்லது ஹரித்வாரத்திலிருந்து ரஸ்தாமார்க்கம் உத்தேசம் 340 மைல். தேவப்பிரயாகைக்கு அப்பால் கந்தப்பிரயாகை, கர்ணப்பிரயாகை, ருத்திரப்பிரயாகை, விஷ்ணுப்பிரயாகை, ஜோதிர்மடம், திருப்பிரதி. ஹரித்துவாரம் ரயில்வேஸ்டேஷனிலிருந்து ஹரித்துவாரம், திருப்பிரிதி பத்ரிநாராயணம், ரிஷிகேசம், பிரமகபாலம் இவ்விடங்களுக்குப் போகலாம்.

---

## 36. உஜ்ஜனீபுரம்

ஸ்தல விசேஷம்.—ராதாகிருஷ்ணர் கோயில், சாந்தீபரிஷியென்ற காஸ்யபர் ஜென்மக்ஷேத்திரம், ஸ்ரீகிருஷ்ணன் சாந்தீபன் பக்கல் அத்யயனம் பண்ணின ஸ்தலம்.

மார்க்கம்.—இந்தூரிலிருந்து (Indoor) படியபாத்து (Fateabad) மார்க்கம் உஜ்ஜனீபுரம் (Ojein) 39 மைல். பம்பாயிலிருந்து மன்மாட், புசாவல், கண்ட்வா, மார்க்கம் இந்தூர் 440 மைல். ரெயில்வே ஸ்டேஷன் உஜீன்.

---

## 37. அவந்திகாபுரிமலை.

ஸ்தல விசேஷம்.—இதற்கருகில் தாபசிமலையில் சுதாமர் என்ற குசேல முனிவர் பிறந்தது. உஜ்ஜினியிலிருந்து 14 மைல்.

---

## 38. தாக்கூர்.

ஸ்தல விசேஷம்.—இங்குள்ள கண்ணன் விக்கிரகம் துவாரகையிலிருந்து கொண்டுவந்தது.

மார்க்கம்.—பம்பாயிலிருந்து பரோடா 247 மைல். பரோடாவிலிருந்து தாக்கூர் $40\frac{1}{2}$ மைல்.

புராணஸ்தலங்கள் முற்றிற்று.

---

# ஆழ்வார்கள் மங்களாசாசனக் குறிப்பு.

பத்து ஆழ்வார்கள், ஆண்டாள் ஆகிய இப்பதினொருவரால் மங்களாசாசனம் பெற்றவை 108-திவ்விய தேசங்களெனச் சொல்கின்றனர். ஆனால் இந்த 108 தலங்களுள், 70 தலத்துக்குத்தான் பதிகங்களிருக்கின்றன; மற்ற 38 தலங்களுக்குத் தனிப்பதிகங்களில்லை. ஆயினும் "வானிளவரசுவைகுந்தக் குட்டன் வாசுதேவன் மதுரைமன்னன்" என்ற இந்தப் பாசுரம் வைகுந்தத்துக்கும் வடமதுரைக்கும் ஓதியதாக எடுத்துக்கொள்கின்றனர். இப்படி ஆங்காங்கு வரும் பாடல்களுக்கு இவ்விதப் பொருள்கொண்டு 108 தலங்களுக்கும் ஆழ்வார்கள் பாடலை அமர்த்தியிருக்கின்றனர். மேற்சொல்லிய பதினொருவரால் 1 தலமும்; பதின்மரால் 1 தலமும்; எழுவரால் 1 தலமும்; ஐவரால் 4 தலங்களும்; நால்வரால் 7 தலங்களும்; மூவரால் 1 தலமும்; இருவரால் 21 தலங்களும்; ஒருவரால் 72 தலங்களும், ஆக 108 தலங்களும் மங்களாசாசனம் பெற்றிருக்கின்றன.

# 108—திவ்யதேசங்களின் ப்ரபாவம்.

---

ஈரிருப தாஞ்சோழ மீரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டாம்—சீர்நடுநா
டாறோடீ ரெட்டுத்தொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்.

---

# சோழநாட்டுத் திருப்பதிகள். (40)

---

## 1. திருவரங்கம் பெரியகோயில் ஸ்ரீரங்கம்.

திருநாமங்கள்.—ஸ்ரீ ரங்கநாதன், நம்பெருமாள், ஸ்ரீரங்கநாய்ச்சியார், ப்ரணவாகர்தி விமானம், வேதசர்ங்கம், காவேரிநதி, சந்திரபுஷ்கரணி, புன்னை விருக்ஷம், புஜங்கசயனம், தெற்கே திருமுகமண்டலம், தர்மவர்மாவுக்கும், ரவிதர்மனுக்கும் பிரத்யக்ஷம்.

ஸ்தல விசேஷம்.—பெரியநம்பி, பட்டர், வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசாரியார் அவதார ஸ்தலம். 10 ஆழ்வார்கள், ஆண்டாள் மங்களாசாசனம். மார்கழிமீ வைகுண்ட ஏகாதசி உத்ஸவம் இங்கு வெகு விசேஷம். ஸ்ரீரங்கத்தைப் பூலோகவைகுண்டமென்பர்.

மார்க்கம்.—திருச்சிறுப்பள்ளிக்கோட்டை ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல் வண்டிப்பாதை.

---

## 2. உறையூர். (நிசுளாபுரி.)

திருநாமங்கள்.—அழகிய மணவாளப்பெருமாள், கல்யாண விமானம், வாஸலக்ஷ்மி, உறையூர் வல்லி, கல்யாண தீர்த்தம், குடமுருட்டிநதி, வடக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம் முப்பத்தி முக்கோடி தேவர்களுக்கும், ரவிதர்ம ராஜாவுக்கும் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார் மங்களாசாசனம்.

ஸ்தல விசேஷம்.—திருப்பாணாழ்வார் அவதாரஸ்தலம். பூர்வம் சோழ தேசம் இருந்த இடம்.

மார்க்கம்.—திருச்சி கோட்டை ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல் வண்டிப்பாதை.

---

## 3. திருக்கரம்பனூர். (உத்தமர் கோயில்.)

**திருநாமங்கள்.**—புருஷோத்தமன், பூர்வாதேவி, உத்யோக விமானம், கதம்பதீர்த்தம், வாழைமரம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயனம், கதம்ப மஹாரிஷிக்கும், திருமங்கை யாழ்வாருக்கும், உபரிசரவசுவுக்கும், ஸநக, ஸநந்தன, ஸநத்குமாரர்களுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திரிச்சிகோட்டையிலிருந்து 6 மைல் வண்டிப்பாதை.

---

## 4. திருவெள்ளரை.

**திருநாமங்கள்.**—புண்டரீகாக்ஷன், பங்கயச்செல்வி, செண்பகவல்லி, விமலாக்ர்திவிமானம், குசதீர்த்தம், மணிகர்ணிகாதீர்த்தம், சக்காதீர்த்தம், திவ்யபுஷ்கரணி, புஷ்கலதீர்த்தம், பத்மதீர்த்தம், கந்தபுஷ்கரணி, க்ஷீரபுஷ்கரணி, வராஹதீர்த்தம், ஸ்வேதகிரி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம் பெரிய திருவடிக்கும், சிபிச்சக்கரவர்த்திக்கும், பூதேவிக்கும், மார்க்கண்டேயருக்கும் பிரத்யக்ஷம். 2-ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**ஸ்தல விசேஷம்.**—உய்யக்கொண்டார் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—திரிச்சிகோட்டையிலிருந்து 12-மைல் வண்டிப்பாதை.

---

## 5. திருப்பேர் நகர். (கோயிலடி.)

**திருநாமங்கள்.**—அப்பக்குடத்தான், கமலவல்லித்தாயார், இந்திரவிமானம், இந்திரதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், புஜங்கஸயநம், வலது அஸ்தத்தின் கீழே குடம், இந்திரகிரி. உபமநவுக்கும் பராசருக்கும் ப்ரத்யக்ஷம். 4-ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருச்சிறுப்பள்ளியிலிருந்து 18-மைல். பூதலூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 6½ மைல் வண்டிப்பாதை.

---

## 6. திரு அன்பில்.

**திருநாமங்கள்.**—திருவடிவழகிய நம்பி, அழகியவல்லி நாச்சியார், தாரக விமாநம், மண்டூகபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், புஜங்கசயனம், பிரம்மாவுக்கும், வால்மீகருக்கும் பிரத்யக்ஷம். 2. ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருப்பேர் நகரிலிருந்து 4-மைல் வண்டிப்பாதை.

---



## 7. திருக்கண்டியூர்.

**திருநாமங்கள்.**—அரன் சாபந்தீர்த்த பெருமாள், கமலவல்லிநாச்சியார், கலாக்ர்திவிமாநம், கபாலதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், ருத்திரனுக்கு கபாலநிவர்த்தி செய்தவர். அகஸ்தியருக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருப்பேர் நகரிலிருந்து திருவாதி மார்க்கம் 12-மைல்; அல்லது தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து 5-மைல்.

---

## 8. திருத்தஞ்சை நகரம். (தஞ்சை மாமணிக்கோயில்)

**திருநாமங்கள்**—மணிக்குன்னப்பெருமாள், நீலமேகப்பெருமாள், செங்கமலவல்லி, சௌந்தர்ய விமானம், கன்னிகாபுஷ்காணி, அம்ருத தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், பராசரமுனிக்கு பிரத்யக்ஷம். 3-ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து 2 மைல்.

---

## 8. (தொடர்ச்சி) தஞ்சையாளிநகர்.

**திருநாமங்கள்.**—நரசிங்கப் பெருமாள், தஞ்சைநாயகி, வேதசுந்தர விமாநம், சூரிய புஷ்கரணி, ஸ்ரீராமதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம். மார்க்கண்டேய மஹாமுனிக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருக்கண்டியிலிருந்து 6-மைல்; அல்லது தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும் போகலாம். திருச்சிறுப்பள்ளியிலிருந்து ரயில் மார்க்கம் 31-மைல்.

---

## 9. திருக்கண்ணமங்கை.

**திருநாமங்கள்.**—பக்தவத்ஸலப் பெருமாள், அபிஷேகவல்லித்தாயார், உத்பல விமாநம், தர்ஸண புஷ்காணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். வருணனுக்கும் உரோமசருக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் 34 மைல் ரெயில் பாதை. திருவாரூரிலிருந்து 4 மைல்.

---

## 10. திருக்கண்ணபுரம்.

**திருநாமங்கள்.**—சௌரிராஜர், கண்ணபுரநாயகி, உத்பலாவர்த்தகவிமானம், நித்யபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். கண்வமா முனிவருக்குப் பிரத்யக்ஷம். 5-ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருவாரூரிலிருந்து 14-மைல் ஆண்டிப்பந்தல் வழி. அல்லது நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து 4-மைல்.

---

## 11. திருச்சிறுபுலியூர்.

**திருநாமங்கள்.**—அருண்மா கடல்நாயகன், திருமாமகள் நாய்ச்சியார், நந்த வர்த்தன விமானம், அநந்த ஸரஸ்ஸு, மானஸ புஷ்கரணி, தெற்கே திருமுக மண்டலம், புஜங்கசயநம். வியாசமாமுனிக்கும், வியாக்கிரமருக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருவாரூரிலிருந்து 16-மைல் சென்னுவூர்வழி. அல்லது மாயவரத்திலிருந்து 9-மைல். பேராளம் ரயில்வேஸ்டேஷனிலிருந்து வெகு சமீபமானதால் அங்கிருந்தும்போகலாம்.

---

## 12. திருக்கண்ணங்குடி.

**திருநாமங்கள்.**—ஸ்யாமளமேனிப் பெருமாள், அரவிந்தவல்லி நாய்ச்சி யார், உத்பலவிமானம், ஸ்ராவணபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். ப்ருகுசைத்யருக்கும் கௌதமமுனிக்கும் பிரத்யக்ஷம். திருமங்கை யாள்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—கீவளூர் ஸ்டேஷனிலிருந்து 3-மைல்.

---

## 13. திருநாகை. (நாகப்பட்டணம்.)

**திருநாமங்கள்.**—சௌந்தர்யராஜப் பெருமாள், சௌந்தர்யவல்லித்தாயார், சௌந்தர்ய விமானம், ஸாரபுஷ்கரணி, கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், நாகராஜனுக்கும் திருமங்கையாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—வேளூரிலிருந்து ஏழு மைல் ரெயில் பாதை.

---



## 14. திருக்கவித்தலம்.

**திருநாமங்கள்.**—கஜேந்திர வரதர், ரமாமணிவல்லி நாய்ச்சியார், பொற்றாமரையாள் நாய்ச்சியார், ககநாக்ருதி விமாநம், கஜேந்திர புஷ்கரணி, கபில தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயனம், கஜேந்திரனுக்கும் ஆஞ்சநேயருக்கும் பிரத்யக்ஷம். திருமழிசையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—தஞ்சாவூரிலிருந்து சுந்தரபெருமாள் கோயில் ரயில்பாதை 19 மைல். அதிலிருந்து வண்டிப்பாதை 3 மைல்.

---

## 15. திருக்கூடலூர். (கூடலூர்.)

**திருநாமங்கள்.**—வையங்காத்த பெருமாள், பத்மாஸனவல்லி, சுத்தஸத்வ விமானம், சக்ரதீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்' நந்தகமாமுனிக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்**—கவிஸ்தலத்துக்குக் கிழக்கே 4 மைல். அல்லது பாபநாசம் ஸ்டேஷனிலிருந்து 4 மைல்.

---

## 16. திருக்குடந்தை. (கும்பகோணம்.)

**திருநாமங்கள்.**—சக்கரபாணி ஸ்வாமி, வைதிக விமானம், சக்ரதீர்த்தம், பாஷ்கர க்ஷேத்திரம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பிரத்யக்ஷம்.

(2) சாரங்கபாணிப் பெருமாள், ஆராவமுது, கோமளவல்லி, வைதிக விமானம் (வேதவேதக விமானம் என்றும் கூறுவதுண்டு), ஹேம புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், உத்யோக ஸயநம், ஹேம மகாரிஷிக்குப் பிரத்யக்ஷம். 7-ஆழ்வார்கள் ஆண்டாள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—கும்பகோணத்துக்கே திருக்குடந்தை என்று சொல்லப்படுகிறது. 12 வருஷங்களுக்கு ஒரு முறை வரும் "மகாமகம்" உற்சவத்தால் இந்த இடம் ஜெகத் பிரசித்தமானது.

---

## 17. திருப்புள்ளம் பூதங்குடி.

**திருநாமங்கள்.**—வல்விராமன், பொற்றாமரையாள், சோபன விமாநம, க்ருத்ர தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கஸயநம், சக்கரவர்த்தித்

திருமகனுக்கும் க்ர்த்ர ராஜனுக்கும் ப்ரத்யக்ஷமாய் மோக்ஷங் கொடுத்த இடம் திருமங்கையாழ்வார் மங்களாஸாசனம்.

**மார்க்கம்.**—கும்பகோணத்திலிருந்து 6-மைல்; சுவாமி மலை வழி.

---

## 18. திருஆதனூர்.

**திருநாமங்கள்.**—ஆண்டளக்குமையன், ஸ்ரீரங்கநாயகியார், ப்ரணவ விமானம், சூரியபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயனம், காமதேனுவுக்கும் திருமங்கையாழ்வாருக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாஸாசனம்.

**மார்க்கம்.**—புள்ளம் பூதங்குடிக்கு சமீபம்.

---

## 19. திருநரையூர். (நாச்சியார் கோயில்.)

**நாமங்கள்.**—நம்பி, நம்பிக்கைநாச்சியார், ஸ்ரீநிவாஸவிமானம், மணிமுக்தா நதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், மேதவமுனி கன்னிகையைப் பலிமி பிடித்துக்கொண்டுபோக அவனைச் சபித்து மேதவமுனிக்கு அருள் செய்தவர். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

**மார்க்கம்.**—கும்பகோணத்துக்குத் தெற்கே 6-மைல்.

---

## 20. திருச்சேறை. (ஸாரக்ஷேத்ரம்.)

**திருநாமங்கள்.**—ஸாரநாதன், ஸாரநாயகி, ஸாரவிமாநம், ஸாரபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், காவேரிக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாஸாசனம்..

**மார்க்கம்.**—திருநரையூரிலிருந்து 3-மைல். (திருநரையூருக்கும் திருச்சேறைக்கும் மத்தியில் குடமுருட்டிநதி செல்கின்றது.)

---

## 21. திருவிண்ணகரம்.

**திருநாமங்கள்.**—உப்பிலியப்பன், பூமிதேவீ நாச்சியார், விஷ்ணு விமானம், ஆர்த்தி புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், மார்க்கண்டேயருக்கும், பெரிய திருவடிக்கும், காவேரிக்கும், தர்ம தேவதைக்கும் பிரத்தியக்ஷம். 4 ஆழ்வார் மங்களாஸாசனம்.



**குறிப்பு.**—இந்த ஸ்தலத்தில் பெருமாளுக்கு ஆராதிக்கப்படும் பொங்கல் முதலிய சகலமும் உப்பில்லாமலே யிருக்கும்.

**மார்க்கம்.**—கும்பகோணத்துக்குத் தெற்கே 4-மைல்.

---

## 22. திருநந்திபுரவிண்ணகரம்.

**திருநாமங்கள்.**—விண்ணகரப் பெருமாள், ஜகந்நாதர், நாதநாதப் பெருமாள், செண்பகவல்லிநாச்சியார், மந்தாரவிமாநம், நந்திதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், நந்திக்கும் சிபிச்சக்ரவர்த்திக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—கும்பகோணத்திலிருந்து தாராசுரம் வழியாக 5-மைல்.

---

## 23. திருவெள்ளியங்குடி.

**திருநாமங்கள்.**—கோலவில்லிராமன், மரகதவல்லி நாய்ச்சியார், புஷ்களாவர்த்தகவிமானம், சுக்ரபுஷ்கரணி, ப்ரஹ்மதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம், சுக்கிரனுக்கும், பிரமனுக்கும், பராசருக்கும், இந்திரனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—கும்பகோணத்துக்கு வடக்கே 8-மைல். திருவிடமருதூர் ஸ்டேஷனிலிருந்து போனால் 5-மைல்.

---

## 24. திருஇந்தளூர். (தேரெழுந்தூர்.)

**திருநாமங்கள்.**—சுகந்தவன நாதன், மருவினிய மைந்தன், பரிமளரங்கர், சந்திரசாபவிமோசனவல்லி, புண்டரீகவல்லி, வேதசக்ரவிமானம், இந்துபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், வீரசயனம், சந்திரனுக்குப் பிரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—மாயவரம் ஸ்டேஷனிலிருந்து 4-மைல்.

---

## 25. திருவழுந்தூர்.

**திருநாமங்கள்.**—ஆமருவியப்பன், செங்கமலவல்லித்தாயார், கருடவிமாநம், தர்ஸனபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், உபரிஸரவஸுராஜாவுக்கும், காவேரிக்கும், தர்மதேவதைக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—மாயவரத்திலிருந்து ஒரு மைல்.

## 26. திருக்காழிச் சீராம விண்ணகரம்.

**திருநாமங்கள்.**—தாடாளன், திரிவிக்கிரமமூர்த்தி, மட்டவிழுங்குழலிநாய்ச்சியார், சக்கரவர்த்தித்திருமகன், புஷ்கலா வர்த்தகவிமானம், சக்ரதீர்த்தம், சங்க புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், அஷ்டகோண மகாரிஷிக்குப் பிரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—சீயாழியிலிருந்து 4-மைல். அண்ணன் சன்னிதி தாடாளன் சன்னிதிக்கு சமீபம். திருநகரி—சீயாழியிலிருந்து 6-மைல்.

---

## 27. திருவாலி திருநகரி.

**திருநாமங்கள்.**—வயலாலி மணவாளன், அமிர்தகடவல்லி, அஷ்டாக்ஷர விமானம், இலாக்ஷணி புஷ்கரணி, அலாதநிபுஷ்கரணி, மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், அலாதநிஞ்சக ப்ராஜாபதிக்கும், திருமங்கையாழ்வாருக்கும் பிரத்யக்ஷம். 2. ஆழ்வார்கள் மங்களாசாசனம்

**ஸ்தலவிசேஷம்.**—திருமங்கையாழ்வார் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—திருநகரியிலிருந்து 3 மைல். திருக்குரையலூர் திருநகரியிலிருந்து 3 மைல். திருமங்கைமடம், திருநகரியிலிருந்து நாங்கூருக்குப் போகிற வழியில்.

---

## 28. * திருத்தலைச்சங்க நாண்மதியம்.

**திருநாமங்கள்.**—நாண்மதியப் பெருமாள், வெண்சுடர்ப் பெருமாள், தலைச்சங்க நாய்ச்சியார், செங்கமலவல்லி, சந்திர விமானம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், தேவப்ர்ந்தங்களுக்கும் சந்திரனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருநகரியிலிருந்து 1½மைல்.

* **குறிப்பு.**—இந்த திவ்யதேசத்துக்கு தலைச்சங்கம் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பது என்னகாரணத்தால் என்பது கேள்வி. தலைச்சங்கநாய்ச்சியார் என்று திருநாமம் வழங்குவதின் காரணம் யாதாயிருக்கலாம்?

---

## 29. திருக்காவளம்பாடி.

**திருநாமங்கள்.**—கோபாலகிருஷ்ணன், மடவரல் மங்கை நாய்ச்சியார், செங்கமல நாய்ச்சியார், ஸ்வயம்புவிமானம், தடமலர்ப்பொய்கை, கிழக்கே திரு



முகமண்டலம், நின்றதிருக்கோலம். சேனைத்தலைவருக்கும் மித்ரதேவருக்கும் ருத்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருநகரியிலிருந்து ஒரு மைல். நாங்கூருக்குப்போகிறவழியில். அல்லது சீயாழி ஸ்டேஷனிலிருந்து 7 மைல்.

---

## 30. திருநாங்கூர். (திருமணிமாடக்கோயில்.)

**திருநாமங்கள்.**—நந்தாவிளக்குப் பெருமாள், நரநாராயணர், புண்டரீகவல்லி நாய்ச்சியார், ப்ரணவ விமானம், இந்திரபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், ஏகாதச ருத்திரருக்கும் இந்திரனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—சீயாழிக்குத் தெற்கே 5 மைல்.

---

## 31. திருவைகுந்த விண்ணகரம்.

**திருநாமங்கள்.**—வைகுந்தநாதன், தாமரைக் கண்ணுடைய பிரான், வைகுந்தவல்லி, அநந்தஸத்திய வர்த்தக விமானம், லக்ஷ்மீ புஷ்கரணி, உதங்க புஷ்கரணி, விரஜை, கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், உபரிசரவஸு ராஜாவுக்கும், உதங்கமஹரிஷிக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

---

## 32. திருஅரிமேய விண்ணகரம்.

**திருநாமங்கள்.**—குடமாடு கூத்தப் பெருமாள், அமிர்தகடவல்லி, உச்சச்சங்க விமானம், கோடி தீர்த்தம், அமுத தீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், உதங்கமஹரிஷிக்குப் பிரத்யக்ஷம். 3. ஆழ்வார், ஆண்டாள் மங்களாசாசனம்.

---

## 33. திருவண் புருஷோத்தமம்.

**திருநாமங்கள்.**—புருஷோத்தமப் பெருமாள், புருஷோத்தம நாயகி, சஞ்சீவிக்ரஹ விமானம், திருப்பாற்கடல் தீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், உபமந்யுவுக்கு பிரத்யக்ஷம், திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம்.

---

## 34. திருச்செம்பொன்செய் கோயில்.

**திருநாமங்கள்.**—பேரருளாளர், அல்லிமாமலர் நாய்ச்சியார், கனகவிமானம், கனக தீர்த்தம், நித்யபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், ருத்ரனுக்குப் பிரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

---

## 35. திருத்தெற்றியம்பலம்.

**திருநாமங்கள்.**—செங்கண்மால், செங்கமல வல்லி, வேதவிமானம், ஆர்ய புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கஸயனம், செங்கமலவல்லி நாய்ச்சியாருக்கும் அநந்தனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம்.

☞ **மார்க்கம்.**—31 முதல் 35 வரையிலுள்ள 5 திவ்ய தேசங்கள் திருநாங்கூர் 4 வீதிக்குள் இருக்கின்றன. சீயாழி ஸ்டேஷனிலிருந்து 5 மைல்.

---

## 36. திருமணிக்கூடம்.

**திருநாமங்கள்.**—மணிக்கூட நாயகன், திருமாமகள் நாய்ச்சியார், கனக விமாநம், சந்திர புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பெரிய திருவடிக்கும் சந்திரனுக்கும் பிரத்யக்ஷம், திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருநாங்கூரிலிருந்து ஒரு மைல். சீயாழியிலிருந்து 5½ மைல்.

---

## 37. திருத்தேவனார் தொகை.

**திருநாமங்கள்.**—தெய்வநாயகப் பெருமாள், கடல் மகள் நாய்ச்சியார், சோபன விமாநம், சோபன புஷ்கரணி, தேவஸபா புஷ்கரணி, மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், வசிஷ்டருக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருநாங்கூரிலிருந்து 2 மைல். சீயாழி ஸ்டேஷனிலிருந்து 4 மைல்.

---

## 38. திருவெள்ளக்குளம்.

**திருநாமங்கள்.**—கண்ணன், நாராயணன், பூவார்திருமகள் நாய்ச்சியார், தத்வபோதகவிமானம், வெள்ளக்குளதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற



திருக்கோலம். இக்ஷ்வாகு வம்ஸத்தில், ஸ்வேதராஜனுக்கும் ருத்ரனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருநாங்கூரிலிருந்து 2-மைல். சீயாழி ஸ்டேஷனிலிருந்து 4-மைல்.

---

## 39. திருப்பார்த்தன் பள்ளி.

**திருநாமங்கள்.**—தாமரையாள் கேள்வன், தாமரை நாயகி, நாராயணவிமானம், சங்கஸரஸ்ஸு, மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பார்த்தனுக்கும், வருணனுக்கும், ஏகாதசருத்ரருக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருநாங்கூரிலிருந்து 3மைல். வடரெங்கம், சீயாழிக்கு மேற்கே 8-மைல்.

---

## 40. திருச்சித்திரகூடம்.

**திருநாமங்கள்.**—கோவிந்தராஜப்பெருமாள், புண்டரீகவல்லி நாச்சியார், ஸாத்விகவிமானம், புண்டரீகஸரஸ்ஸு, கிழக்கே திருமுகமண்டலம், யோகஸயனம், சிவன் முதலிய தில்லை மூவாயிரவருக்கும் கண்வர்க்கும் பிரத்யக்ஷம். தேவர்கள் கொலுவீற்றிருந்த இடம். 2 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—சிதம்பரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல்.

சோழநாட்டுத் திருப்பதிகள் ஸம்பூர்ணம்

---

# பாண்டிய நாட்டுத் திருப்பதிகள்.

---

## 41. திருமெய்யம்.

**திருநாமங்கள்.**—ஸத்யகிரி நாதன், ஸத்யமூர்த்தி, உய்யவந்தான், உஜ்ஜீவ நாயகி, ஸத்யகிரி விமானம், ஸத்யகிரி, ஸத்யதீர்த்தம், கதம்பபுஷ்கரணி, பலா விருக்ஷம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம். ஸத்யதேவதைகளுக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—புதுக்கோட்டையிலிருந்து 12 மைல். புதுக்கோட்டைக்கு திருச்சியிலிருந்து மோட்டார் வண்டி ஜட்கா வண்டி போகிறது.

---

## 42. திருக்கோட்டியூர்.

**திருநாமங்கள்.**—ஸௌம்ய நாராயணன், திருமாமகள் நாச்சியார், திருவாபரண நாச்சியார், அஷ்டாங்க விமானம், தேவபுஷ்காணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும், கூத்தாடியும் திருக்கோலம். கதம்பமகாரிஷிக்கும் இந்திரனுக்கும் பிரத்யக்ஷம். 5 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**ஸ்தல விசேஷம்.**—ஸ்ரீ இராமாநுஜர் கோபுரத்தின் மேலிருந்து திருக்கோட்டியூர் நம்பியாரால் உபதேசிக்கப்பட்ட மந்திர ரகசியங்களைப் பகிரங்கப்படுத்திய இடம். திருக்கோட்டியூர் நம்பி அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—திருமெய்யத்திலிருந்து 18 மைல்.

---

## 43. திருமாலிருஞ்சோலைமலை.

**திருநாமங்கள்.**—அழகர், மாலலங்காரர், சுந்தரவல்லி நாச்சியார், சோமசுந்தர விமானம், சிலம்பாறு, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், விர்ஷபகிரி, சந்தனவிருக்ஷம், மலையத்துவஜப்பாண்டியனுக்கும் தர்மதேவதைக்கும் பிரத்தியக்ஷம். 6 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**குறிப்பு.**—இத்தலத்தில் ஒரே பீடத்தில் மத்தியில் பெருமாளும், இருபக்கங்களில் உபய நாச்சிமாரும் நின்ற திருக்கோலமாயிருக்கின்றனர். இது பூர்வத்தில் விசேட வைபவமுள்ள ஸ்தலமாகவும், இதைச் சூழ்ந்து பெரிய நகரமும் இருந்ததாகத் தெரியவருகிறது. பிற்காலத்தில் யாது காரணத்தினாலேயே இந்த நகரமழிந்து கோயிலுக்குள்ளிருக்கும் கல் ஸ்தம்பங்களிலிருந்த அவதாரங்கள், சித்திரவேலைகள் முழுவதும் செதுக்குண்டு, அதனால் உருவங்கள் தெரியாமல் மறைந்து, குளிர் காய்ச்சலுள்ள பிரதேசமாயினது. இப்போது இந்த ஸ்தலத்திக்கு நான்கு மைல் தூரம் வரையில் ஊரும் ஜனநிவாசமும் கிடையாது.

**மார்க்கம்.**—திருக்கோட்டியூரிலிருந்து 30 மைல். சமீப வழி மதுரையிலிருந்து 12 மைல்.

---

## 44. திருக்கூடல். (தென்மதுரை.)

**திருநாமங்கள்.**—கூடலழகர், வகுளவல்லி நாச்சியார், மரகதவல்லி நாச்சியார், வாருணவல்லி, மதுரைவல்லி, அஷ்டாங்கவிமானம், ஹேமபுஷ்கரணி, சக்கிரதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், சௌநகாதிகளுக்கும், ப்ருகுமகாரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் பிரத்யக்ஷம். 3 ஆழ்வார்கள் மங்களாசாசனம். திருப்பல்லாண்டு அவதரித்த ஸ்தலம்.

**மார்க்கம்.**—மதுரையிலிருந்து அரை மைல்.



## 45. திருமோகூர்.

**திருநாமங்கள்.**—காளமேகப்பெருமாள்; திருமோகூர்வல்லி, மேகவல்லி நாச்சியார், கேதகிவிமானம், க்ஷீராப்திபுஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அஜருத்ரேந்த்ராதிகளுக்குப் பிரத்யக்ஷம். 3 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—மதுரையிலிருந்து 6 மைல்.

---

## 46. திருப்புல்லாணி.

**திருநாமங்கள்.**—கல்யாண ஜெகந்நாதன், தெய்வச்சிலையார், கல்யாணவல்லி, கல்யாணவிமானம், ஹேமதீர்த்தம், சக்ரதீர்த்தம், அஸ்வத்தவிருக்ஷம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், புல்லாரண்ய க்ஷேத்திரம், தர்ப்பஸயனம், புல்லாரண்ய மஹரிஷிக்கும், அஸ்வத்த நாராயணனுக்கும் பிரத்யக்ஷமாய், ஸ்ரீராமர் ஸமுத்திரராஜனுக்கு வரங்கொடுத்த இடம். ஆதிஸேது. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—மதுரையிலிருந்து ராமநாதபுரம் 68 மைல். ராமநாதபுரம் ஸ்டேஷனிலிருந்து 7 மைல்.

---

## 47. ஸ்ரீவில்லிபுத்தூர்.

**திருநாமங்கள்.**—வடபத்ரஸயனர், ரங்கமன்னார், ஆண்டாள், பெரியதிருவடி, கோதைநாய்ச்சியார், ஸம்ஸந விமானம், திருமுக்குள தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வடபத்திரஸயநம், நின்றதிருக்கோலம், மண்டூகமகரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் பிரத்யக்ஷம். இரண்டு ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**ஸ்தலவிசேஷம்.**—பெரியாழ்வார், ஆண்டாள் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—சாத்தூர் ஸ்டேஷனிலிருந்து தபால் வண்டியில் 25 மைல்.

---

## 48. திருத்தண்கால்.

**திருநாமங்கள்.**—அப்பன், கண்காலப்பன், அன்னநாயகி, அநந்தநாயகி, நாய்ச்சியார் நால்வர், தேவசந்திர விமானம், பாபவிநாசதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், சல்யபாண்டியனுக்கும், ஸ்ரீவல்லபனுக்கும், புலிக்கும் பிரத்யக்ஷம். 3 ஆழ்வார்கள் மங்களாசாஸநம்.

**மார்க்கம்.**—ஸ்ரீவில்லிபுத்தூருக்குக் கிழக்கே 6 மைல். அல்லது சாத்தூர் ஸ்டேஷனிலிருந்து 13 மைல்.

## 49. ஸ்ரீவைகுண்டம்.

**திருநாமங்கள்.**—கள்ளபிரான், வைகுந்தநாதன், வைகுந்தவல்லி, சந்த்ர விமானம், தாம்ரபரணிநதி, பிருகுதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், இந்திரனுக்கும் பிருகுசக்கரவர்த்திக்கும் பிரத்யக்ஷம்

**மார்க்கம்.**—திருநெல்வேலிக்குக் கிழக்கே 15 மைல், தாம்ரவர்ணிவடகரை.

---

## 50. திருப்புளிங்குடி.

**திருநாமங்கள்.**—காய்சினவேந்தன், மலர்மகள்நாச்சியார், புளிங்குடிவல்லி, வேதஸாரவிமானம், வருணதீர்த்தம், நிருதிதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயநம், நிருதிக்கும் வருணனுக்கும் தர்மராஜனுக்கும் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

---

## 51. திருவரகுணமங்கை.

**திருநாமங்கள்.**—விஜயாஸனர், வரகுணவல்லி, விஜயகோடிவிமானம், தேவபுஷ்கரணி, அக்கினிதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், அக்னிக்குப் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

**மார்க்கம்.**—50, 51 இந்த இரண்டு திவ்ய தேசங்களும் ஸ்ரீ வைகுண்டத்துக்கு ஸமீபம்.

---

## 52. தொலைவல்லிமங்கலம்.

**திருநாமங்கள்.**—தேவபிரான், அரவிந்தலோசனன், கருந்தடங்கண்ணி குமுதவிமாநம், தாம்ரபர்ணிநதி, வருணதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், வீற்றிருந்த திருக்கோலம், இந்திரன், வாயு, வருணன் இவர்களுக்குப் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸநம்.

**மார்க்கம்.**—ஸ்ரீவைகுண்டத்துக்கு வடக்கே 5 மைல்.

---

## 53. திருக்குளந்தை (தென்குளந்தை) பெருங்குளம்.

**திருநாமங்கள்.**—மாயக்கூத்தன், குழந்தைவல்லி, ஆநந்தநிலயவிமானம், பெருங்குளதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பிரஹஸ்பதிக்குப் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாஸாஸனம்.

**மார்க்கம்.**—தொலைவல்லிமங்கலத்திற்கு வடக்கே 3 மைல்.



## 54. திருக்குருகூர். (ஆழ்வார் திருநகரி)

**திருநாமங்கள்.**—ஆதிநாதப்பெருமாள், பொலிந்துநின்றபிரான், ஆதிநாத வல்லி, கோவிந்தவிமானம், தாம்ரபர்ணிநதி, பிரம்மதீர்த்தம், கிழக்கே திருமுக மண்டலம், நின்றதிருக்கோலம், பிரம்மனுக்கும் நம்மாழ்வாருக்கும் மதுரகவியாழ்வாருக்கும் பிரத்யக்ஷம்.

**ஸ்தலவிசேஷம்.**—நம்மாழ்வார் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—திருநெல்வேலிக்குக் கிழக்கே 18 மைல். தாம்ரபரணி தென்கரை.

---

## 55. திருப்பேரை.

**திருநாமங்கள்.**—மகரநெடுங்குழைக்காதர், நிகரில் முகில்வண்ணன், குழைக்காதுவல்லி நாய்ச்சியார், பத்ரவிமாநம், சக்ரபுஷ்கரணீ, கிழக்கே திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், சுக்கிரனுக்கும் பிரமனுக்கும் ஈசான்ய ருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம. நம்மாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—ஆழ்வார்திருநகரிலிருந்து கிழக்கே 3 மைல்.

---

## 56. திருக்கோளூர்.

**திருநாமங்கள்.**—வைத்தமாநிதி, (நிக்ஷேபவித்தன்.) கோளூர்வல்லி நாய்ச்சியார், ஸ்ரீகரவிமாநம், குபேரதீர்த்தம், தாம்ரபர்ணிநதி, கிழக்கே திருமுக மண்டலம், புஜங்கஸயனம், குபேரனுக்கும் மதுரகவியாழ்வாருக்கும் பிரத்யக்ஷம், நம்மாழ்வார் மங்களாசாசனம்.

**ஸ்தல விசேஷம்.**—மதுரகவியாழ்வார் அவதாரஸ்தலம்.

**மார்க்கம்.**—திருப்பேரையிலிருந்து 3 மைல்.

---

## 57. ஸ்ரீவரமங்கை. (வானமாமலை.)

**திருநாமங்கள்.**—வானமாமலைப் பெருமாள், தெய்வநாயகன், தோதாத்ரிப் பெருமாள், சிரீவர மங்கை நாய்ச்சியார், நந்தவர்த்தன விமானம், இந்திர புஷ்கரணி, சேற்றுத்தாமரை, கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், ஸ்ரீதேவி, பூதேவி, நீலாதேவி, ஸேனைமுதலியார், பெரிய திருவடி, இவர்களுடனும், சாமர கன்னிகைகள், சந்திரர், சூரியர் பக்கத்திலிருக்க, இக்

திரனுக்கும், பிரம்மாவுக்கும், உரோமஸரிஷிக்கும், ப்ருகுரிஷிக்கும் நம்மாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருநெல்வேலிக்குத் தெற்கே 27 மைல்.

---

## 58. திருக்குறுங்குடி.

**திருநாமங்கள்.**—வைஷ்ணவநம்பி, மலைமேல்நம்பி, நின்றநம்பி, இருந்தநம்பி, கிடந்தநம்பி, திருப்பாற்கடல்நம்பி, குறுங்குடிவல்லிநாச்சியார், பஞ்சகேதகவிமானம், திருப்பாற்கடல்நதி, பஞ்சதுறை, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பக்கம்நின்ற சிவனுக்குப் பிரத்யக்ஷம். 4-ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—வானமாமலையிலிருந்து 8-மைல்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் ஸம்பூர்ணம்.

---

# மலைநாட்டுத் திருப்பதிகள் 13.

---

## 59. திருவண்பரிசாரம்.

**திருநாமங்கள்.**—திருக்குறளப்பன், திருவாழ்மார்பன், கமலவல்லி நாச்சியார், இந்திர கல்யாண விமானம், லக்ஷ்மீதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், விந்தைக்கும் காரிக்கும், உடைய நங்கைக்கும் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருக்குறுங்குடியிலிருந்து 24 மைல்.

---

## 60. திருவாட்டாறு.

**திருநாமங்கள்.**—ஆதிகேசவப்பெருமாள், மரகதவல்லி நாய்ச்சியார், அஷ்டாங்கவிமானம், கடல்வாய்த் தீர்த்தம், ராம தீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், புஜங்கசயனம், பரசுராமனுக்கும் சந்திரனுக்கும் பிரத்தியக்ஷம், நம்மாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருவண்பரிசாரத்திலிருந்து 20-மைல்.

---



## 61. திருவநந்தபுரம்.

**திருநாமங்கள்.**—அநந்தபத்மநாபன், ஸ்ரீஹரிலக்ஷ்மி, ஹேமகூடவிமாநம், மத்ஸ்யதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயனம், ருத்ரனுக்கும் சந்திரனுக்கும் இந்திரனுக்கும் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருவநந்தபுரத்துக்கு வடக்கே 20 மைல்.

**குறிப்பு.**—திருவட்டாரிலிருந்து 30 மைல் ஜனார்த்தனம். இந்த ஸந்நிதிக்கு அதாவது ஜனார்த்தனத்திற்கு எதிரில் க்ஷீராப்தியில் ஆலிலைமேல் விஷ்ணு ஸயனித்திருந்த பாவனையாக ஒரு கோயில் உண்டு.

---

## 62. திருவல்லவாழ்.

**திருநாமங்கள்.**—கோலப்பிரான், செல்வத்திருக்கொழுந்து நாச்சியார், சதுரங்ககோல விமானம், கண்டாகர்ண தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், கண்டாகர்ணனுக்குப் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருவநந்தபுரத்திலிருந்து 80 மைல் படகு மார்க்கம்.

---

## 63. திருவண்வண்டூ.

**திருநாமங்கள்.**—பாம்பணையப்பன், கமலவல்லி நாய்ச்சியார், வேதாலய விமானம், பாபநாசதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், மார்க்கண்டேயருக்கும் நாரதருக்கும் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாசனம்.

---

## 64. திருக்காட் கரை.

**திருநாமங்கள்.**—காட்கரை அப்பன், பெருஞ்செல்வநாயகி, புஷ்கலவிமானம், கபிலதீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், கபில முனிக்குப் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸனம்,

**மார்க்கம்.**—63; 64 இந்த இரண்டு திவ்ய தேசங்களும் திருவல்லவாழில் இருந்து 10 மைல்.

---

## 65 திருவாறன்விளை.

**திருநாமங்கள்.**—திருக்குறளப்பன், பத்மாஸன நாய்ச்சியார், வாமநவிமாநம், வேதவியாஸஸரஸ்ஸு, வடக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். பிரம்மனுக்குப் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருக்காட்கரையிலிருந்து 5 மைல்.

---

## 66. திருப்புலியூர் (குட்டநாடு.)

**திருநாமங்கள்.**—மாயப்பிரான், பொற்கொடிநாச்சியார், புருஷோத்தம விமாநம், பூஞ்சுனை தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், ஸப்தரிஷிகளுக்குப் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருவாறன்விளையிலிருந்து 10 மைல்.

---

## 67. திருக்கடித்தானம்.

**திருநாமங்கள்.**—அற்புத நாராயணன், கற்பகவல்லித்தாயார், புண்ய கோடிவிமாநம், பூமிதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். ருக்மாங்கதராஜனுக்குப் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருப்புலியூரிலிருந்து 15 மைல்.

---

## 68. திருச்செங்குன்றூர்.

**திருநாமங்கள்.**—இமயவரப்பன், செங்கமலவல்லி, ஜகஜ்ஜோதி விமானம், திருச்சிற்றாறு, சங்கதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். பத்மாஸுரன் நிமித்தமாக சிவனுக்குப் பிரத்யக்ஷம். நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருக்கடித்தானத்திலிருந்து 15 மைல்.

---

## 69 திருமூழிக்களம்.

**திருநாமங்கள்.**—திருமூழிக்களத்தான், மதுரவேணி நாச்சியார், ஸௌந்தர்ய விமாநம், பெருங்குள தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், ஹரீதமுனிக்குப் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருச்செங்குன்றூரிலிருந்து 30 மைல்.



## 70. திருநாவாய்.

**திருநாமங்கள்.**—நாராயணன், மலர்மங்கை நாச்சியார், வேதவிமானம், செங்கமல ஸரஸ்ஸு, தெற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், லக்ஷ்மிக்கும் கஜேந்திரனுக்கும் பிரத்யக்ஷம். 3 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—ஈரோட் ஸ்டேஷனிலிருந்து எடக்குழம் 139 மைல்; பிறகு வண்டிப்பாதை 45 மைல்.

---

## 71. திருவித்துவக்கோடு.

**திருநாமங்கள்.**—உய்யவந்த பெருமாள், வித்துவக்கோட்டுவல்லி, தத்வ காஞ்சன விமானம், சக்ரதீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், புஜங்கசயனம், அம்பரீஷர்க்குப் பிரத்யக்ஷம். குலசேகராழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—மதராஸ் ரெயில்வே எடக்குழத்திலிருந்து கிழக்கே 15 மைல் ரயில்பாதை—பட்டாம்பி ஸ்டேஷன். பிறகு வண்டிப்பாதை 24 மைல்.

மலைநாட்டுத் திருப்பதிகள் சம்பூர்ணம்.

---

# நடுநாட்டுத் திருப்பதிகள். 2.

---

## 72. திருவயிந்திரபுரம்.

**திருநாமங்கள்.**—தெய்வநாயகப்பெருமாள், வைகுண்டநாயகி, சந்திரவிமானம், கெருடநதி, ஸேவைதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். சந்திரனுக்கும் கெருடனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—திருப்பாப்புலியூர் ஸ்டேஷனிலிருந்து 3 மைல். மலைமேல் ஹயக்கிரீவர் ஸந்நிதி.

---

## 73. திருக்கோவலூர்.

**திருநாமங்கள்.**—திரிவிக்கிரமன், ஆயனார், பூங்கோவல் நாச்சியார், ஸ்ரீகர விமானம், கிருஷ்ணதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். மிருகண்டு முனிக்கும் பலிசக்ரவர்த்திக்கும் பிரத்யக்ஷம். 4 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—விழுப்புரம் ஸ்டேஷனிலிருந்து 22 மைல் ரெயில்பாதை. திருக்கோவலூர் ஒரு ரயில்வே ஸ்டேஷனாகும்.

நடுநாட்டுத் திருப்பதிகள் ஸம்பூரணம்.

---

# தொண்டைநாட்டுத் திருப்பதிகள். 22.

---

## 74. திருவிடவெந்தை.

**திருநாமங்கள்.**—நித்யகல்யாணர், கோமளவல்லி நாய்ச்சியார், கல்யாண விமாநம், கல்யாணதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், மார்க்கண்டேயருக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாஸாசனம்.

**மார்க்கம்.**—செங்கல்பட்டிலிருந்து மஹாபலிபுரம் வழி; 26 மைல்.

---

## 75. திருக்கடல்மல்லை. (மஹாபலிபுரம்.)

**திருநாமங்கள்.**—தலைசயநத்துறைவார், நிலமங்கைநாச்சியார், ககநாக்ருதி விமானம், கருடநதி, கிழக்கே திருமுகமண்டலம், ஸ்தலசயநம், புண்டரீகரிஷிக்குப் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார் மங்களாஸாசனம்.

**மார்க்கம்.**—திருவிடவெந்தையிலிருந்து 12 மைல்.

---

## 76. திருநீர்மலை. (தோயாசலம்.)

**திருநாமங்கள்.**—நீலமுகில்வண்ணன், ரங்கநாயகன், நீர்வண்ணன், அரங்கநாதன், அணிமாமலர்மங்கை, தோயகிரிவிமாநம், மணிகர்ணிகதீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், மாணிக்கசயநம், தொண்டைமான் சக்கரவர்த்திக்கும் ப்ருக மார்க்கண்டேயருக்கும் பிரத்யக்ஷம். 3 ஆழ்வார்கள் மங்களாஸாசனம்.

**மார்க்கம்.**—பல்லாவரம் ஸ்டேஷனிலிருந்து 3 மைல்.

---

## 77. திருவல்லிகேணி. (ப்ருந்தாரண்ய க்ஷேத்ரம்.)

**திருநாமங்கள்.**—பார்த்தஸாரதி, ருக்மணிபிராட்டி, அநிருத்தர், ப்ரத்யும்நர், பலராமர், ஸாத்யகி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், ஆநந்த விமாநம், வ்யாஸமஹர்ஷியினால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு ஆத்ரேயமஹா



ரிஷியினால் ஆராதிக்கப்பட்டவர். ஸுமதியென்னும் ராஜாவுக்கும், தொண்டைமான் சக்ரவர்த்திக்கும், அர்ச்சுநனுக்கும் பிரத்தியக்ஷம்.

மந்நாதன் (ரங்கநாதன்) (என்னை யாளுடையவப்பன்) புஜங்கஸயநம், வேதவல்லித்தாயார், கிழக்கே திருமுகமண்டலம், ப்ருகுமஹர்ஷியினால் கன்னிகாதானம் பண்ணப்பெற்றவர்.

(வராஹநாயனார்) அழகியசிங்கர் தெள்ளியசிங்கர் (நரஸிம்ஹர்) மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், அத்ரிமஹர்ஷிக்கும், ஜாலிமஹர்ஷிக்கும் பிரத்யக்ஷமாய் மோக்ஷந்தந்தவர்.

சக்ரவர்த்தித்திருமகன், (ஸ்ரீராமர்) பரதாழ்வான், சத்ருக்நாழ்வான், இளையபெருமாள், மைதிலி, தெற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், சசபதர் குமாரரான மதுமான் என்னும் மஹர்ஷிக்கு பிரத்யக்ஷம்.

தேவப்பெருமாள், கிழக்கே திருமுகமண்டலம், கெருடாரூடர், ஸப்தரோமாவுக்கு பிரத்யக்ஷம்.

சேஷவிமாநம், இந்த்ரதீர்த்தம், ஸோமதீர்த்தம், மீநதீர்த்தம், அக்நிதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், இவ்வைந்து தீர்த்தங்களால் சூழப்பட்ட கைரவணி என்னும் ஸாரஸ்ஸு.

ப்ருகு, அத்ரி, மரீசி, மார்க்கண்டேயர், ஸுமதி, ஸப்தரோமா, ஜாலி என்னும் ஏழு மஹர்ஷிகள் தபசு செய்தவிடம். 3 ஆழ்வார்கள் மங்களாஸாசனம்.

**மார்க்கம்.**—சென்னப்பட்டணத்திற்குத் தெற்கே 3 மைல்.

---

## 78. திருநின்றவூர். (தின்னனூர்.)

**திருநாமங்கள்.**—பக்தவத்ஸலர், பத்தராவிப் பெருமாள், என்னைப் பெற்ற தாயார், ஸ்ரீநிவாஸ விமானம், (உத்பலா வர்த்தக விமானம் என்றும் சொல்வர்) வருணபுஷ்கரணி, வ்ருத்தக்ஷீரநதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், வருணனுக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—சென்னப்பட்டணத்திலிருந்து 18 மைல் ரயில்பாதை. தின்னனூர் ஒரு ரெயில்வே ஸ்டேஷனாகும். அங்கிருந்து ஒருமைல் வண்டிப்பாதை.

---

## 79. திருவெவ்வுள்.

**திருநாமங்கள்.**—வீரராகவப் பெருமாள், கநகவல்லித்தாயார், விஜயகோடி விமானம், ஹ்ருத்தாப நாசதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கஸயனம்,

வீக்ஷாரண்யக்ஷேத்திரம், ஸாலிகோத்ராருக்குப் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—தின்னனூரிலிருந்து ரெயில்பாதை 8 மைல்.

---

## 80. திருக்கச்சி, (அல்லது அத்திபூர் அத்திகிரி காஞ்சீபுரம்.)

**திருநாமங்கள்.**—வரதராஜப்பெருமாள், (உள்ளன்புடைய பக்தர்கள் கோரிய படி வரங்களைத் தருகின்றனராதலால், இப்பெருமாளுக்கு வரதராஜர் என்று பெயரானது.) பெருந்தேவித் தாயார், புண்யகோடி விமானம், ஸத்யவ்ரத க்ஷேத்ரம், அநந்தஸரஸ்ஸு, சேஷதீர்த்தம், வராஹதீர்த்தம், ப்ரஹ்மதீர்த்தம், பத்மதீர்த்தம், அக்நிதீர்த்தம், குசலதீர்த்தம், வேகவதிநதி, மேற்கே திருமுக மண்டலம், நின்றதிருக்கோலம், ப்ருகுமஹரிஷிக்கும், நாரதருக்கும், திருவநந் தாழ்வாருக்கும், கஜேந்த்ராழ்வானுக்கும், ப்ரஹ்மாவுக்கும் பிரத்யக்ஷம்.

அழகிய சிங்கப்பெருமாள், அரித்ராதேவித்தாயார், வாரணகிரி, குகவிமா னம், வீற்றிருந்த திருக்கோலம், ப்ரஹஸ்பதிக்கு பிரத்யக்ஷம். பூதத்தாழ்வார் மங்களாசாஸனம்.

**குறிப்பு.**—இங்கு "உள்ளுவாருள்ளம்" என்ற திவ்யதேசம் உண்டு. இது காஞ்சீபுரத்தில் சிவாலயத்துக்குள் அகப்பட்டதாய் சொல்வதுண்டு. இதற்கு 3 ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்துளார்.

**மார்க்கம்.**—ரெயில்வே ஸ்டேஷன் காஞ்சீபுரம். அங்கிருந்து 3 மைல்.

---

## 81. திருத்தண்கா. (விளக்கொளி.)

**திருநாமங்கள்.**—தீபப்பிரகாசன், திவ்யப்பிரகாஸர், மரகதவல்லித்தாயார், ஸ்ரீகரவிமானம், ஸரஸ்வதிதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், நின்றதிருக் கோலம், ஸரஸ்வதிக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

---

## 82. திரு அட்டபுயகரம்.

**திருநாமங்கள்.**—ஆதிகேசவப் பெருமாள், சக்ராதரர், சக்ரராயர், அலர் மேல்மங்கை நாய்ச்சியார், சகநாக்ர்தி விமானம், கஜேந்த்ர புஷ்கரணி, மேற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், கஜேந்திராழ்வாருக்குப் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

---



## 83. திருவெஃகா. (யதோக்தகாரி.)

**திருநாமங்கள்.**—சொன்னவண்ணஞ்செய்த பெருமாள், கோமளவல்லி நாச்சியார், வேதசாரவிமானம், பொய்கைபுஷ்கரணி, மேற்கே திருமுகமண் டலம், புஜங்கசயநம், பொய்கையாழ்வாருக்கும், கணிகண்ணருக்கும், பிரம்மாவுக் கும் பிரத்யக்ஷம். 5 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**ஸ்தலவிசேஷம்.**—பொய்கையாழ்வார் அவதாரஸ்தலம்.

---

## 84. திருப்பாடகம்.

**திருநாமங்கள்.**—பாண்டவதூதப்பெருமாள், ருக்மணி பிராட்டியார், ஸத்ய பாமை, பத்ரவிமானம், மத்ஸ்யதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற் றிருந்த திருக்கோலம். ஹரீதமகாமுனிக்குப் பிரத்யக்ஷம். 4 ஆழ்வார்கள் மங் களாசாசனம்.

---

## 85. திருப்பரமேஸ்வர விண்ணகரம்.

**திருநாமங்கள்.**—பரமபதநாதன், வைகுண்டப்பெருமாள், வைகுண்டவல்லி நாச்சியார், முகுந்தவிமானம், அயிரமதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், பல்லரவராயனுக்கு பிரத்யக்ஷம். திருமங்கையாழ் வார் மங்களாசாஸனம்.

---

## 86. திருப்பளவண்ணம்.

**திருநாமங்கள்.**—பவளவண்ணப் பெருமாள், பச்சைவண்ணப் பெருமாள், பவளவல்லி நாய்ச்சியார், ப்ரவாள விமானம், சக்ரதீர்த்தம், மேற்கே திருமுக மண்டலம், நின்றதிருக்கோலம், அச்வனிதேவதைகளுக்கும் பார்வதிக்கும் பிரத் யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**குறிப்பு.**—மரதகம் என்ற திவ்யதேசமும் இதிலுண்டு. இதை பச்சை வண்ணர் சன்னிதியாகச் சொல்கிறார்கள். இது திருமங்கை யாழ்வாரால் பாடல் பெற்றது.

---

## 87. திருவேளுக்கை.

**திருநாமங்கள்.**—முகுந்தநாயகன், வேளுக்கைவல்லி, கநகவிமானம், கநக ஸரஸ்ஸு, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பிருகுமகரிஷிக் குப் பிரத்யக்ஷம். 2 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**குறிப்பு.**—காஞ்சீபுரத்தில் "வேளுக்கையாளரி" என்ற ஆளழகசிங்கர் ஸந்நிதியொன்றிருக்கிறது. அந்தத் திவ்ய தேசத்தைத்தான், வேளுக்கையாக இப்போது சொல்கிறார்கள். வேளுக்கை முகுந்தநாயகனென்று ஒரு திவ்ய தேசமிருந்து சிதிலமாய்ப் போய்விட்டதாயும் சிலர் சொல்வதும் உண்டு.

---

## 88. திருக்கள்வனூர்.

**திருநாமங்கள்.**—ஆதிவராகப் பெருமாள், அஞ்சிலைவல்லி நாச்சியார், வாமனவிமானம், நித்யபுஷ்கரணி, மேற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம். அஸ்வத்த நாராயணனுக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**குறிப்பு.**—பூமியைச் சுருட்டிப் பாதாளத்துக்குச் சென்ற இரணியனை வதைத்துப் பூமியை மீட்ட அவசரத்தின் பாவனையாக எழுந்தருளியிருக்கின்றார்.

**மார்க்கம்.**—80 முதல் 88 வரையுமுள்ள திவ்ய தேசங்கள், கஸ்பா காஞ்சீபுரத்தில் இருக்கிறது. காஞ்சீபுரம் செங்கல்பட்டிலிருந்து ரெயில்பாதை 22-மைல். அல்லது ஸ்ரீபெரும்பூதூரிலிருந்து வண்டிப்பாதை 15-மைல்.

---

## 89. திருவூரகம்.

**திருநாமங்கள்.**—உலகளந்த பெருமாள், திருவிக்கிரமன், அமுதவல்லி நாச்சியார், ஸாரஸ்ரீகரவிமானம், நாகதீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம். ஊரகம் என்கிற ஆதிசேஷனுக்குப் பிரத்யக்ஷம். 4 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

---

## 90. திருக்காரகம்.

**திருநாமங்கள்.**—கருணாகரப் பெருமாள், பத்மாமணி நாச்சியார், வாமனவிமானம், அக்கிராயதீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், கார்ஹரிஷிக்குப் பிரத்யக்ஷம்.

---

## 91. திருநீரகம்.

**திருநாமங்கள்.**—ஜகதீசப் பெருமாள், நிலமங்கைவல்லி நாச்சியார், ஜகதீஸ்வரவிமானம், அக்ரூரதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அக்ரூரமகாமுனிக்கு பிரத்யக்ஷம்.



**குறிப்பு.**—90-91-இந்த 2-திவ்யதேசங்களும் திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்றவை.

**மார்க்கம்.**—89-முதல் 91-வரையிலுமுள்ள 3-திவ்யதேசங்கள் பெரிய காஞ்சீபுரத்தில் உள்ளன.

---

## 92. திருநிலாத்திங்கள் துண்டம்.

**திருநாமங்கள்.**—நிலாத்திங்கள்துண்டத்தான், நேரொருவரில்லாவல்லி, புருஷசூக்தவிமானம், சந்த்ரபுஷ்கரணி, மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், சிவனுக்கு பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—காஞ்சீபுரத்தில், ஏகாம்பர ஈஸ்வரர் கோயிலுக்குள், ஆயிரக்கால் மண்டபத்தில் காமகோஷ்டபிலத்துக்குத் தென்கிழக்கில் இருக்கிறது.

---

## 93. திருக்கார்வானம்.

**திருநாமங்கள்.**—கள்வர், கல்லழகப் பெருமாள், கமலவல்லி நாய்ச்சியார், புஷ்கலவிமானம், கௌரீதடாகம், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், பார்வதிக்குப் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

**குறிப்பு.**—கருரைபாய்ச்சல் ஸ்தலம். நின்றார்-இருந்தார்-கிடந்தார்.

**மார்க்கம்.**—காஞ்சீபுரம் விளக்கொளி பெருமாள் கோயில் தெருவு; காமாக்ஷியம்மன் கோயிலுக்குள் சேஷபிலத்துவார ஸந்நிதி.

---

## 94. திருப்புட்குழி.

**திருநாமங்கள்.**—விஜயராகவப்பெருமாள், மரகதவல்லிநாச்சியார், விஜயகோடிவிமானம், ஜடாயு தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், ஜடாயுவுக்கு பிரத்யக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**ஸ்தலவிசேஷம்.**—சீதாபிராட்டியாரை எடுத்துப்போன இராவணனுடன் யுத்தம் செய்த ஜடாயு சிறகிழந்து விழ, சீதையைத் தேடி அவ்வழியாய் வந்த ஸ்ரீராமருக்கு ஜடாயு சில விஷயங்களைத் தெரிவித்து பின் ஆவி நீங்க, ஸ்ரீராமர் அவரைத் தன் கரத்தால் தகனம் செய்து அவருக்கு முக்தி கொடுத்த இடம்.

**மார்க்கம்.**—காஞ்சீபுரத்திலிருந்து கூரம் மார்க்கம் 12-மைல்.

---

## 95. திருக்கடிகை (கடிகாசலம்.)

### சோழசிங்கபுரம். (சோழிங்கபுரம்.)

**திருநாமங்கள்.**—யோகாநரஸிம்ஹர், அமிர்தவல்லிநாச்சியார், சிங்ககோஷ்டத்தி விமானம், அமிருததீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம், சிறிய திருவடிக்கு பிரத்யக்ஷம். தக்கன் அக்காரக்கணப்பெருமாள், தக்கான் குளம். 2 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருவள்ளூரிலிருந்து 30-மைல் ரெயில்பாதை. சோழிங்கபுரம் அதிலிருந்து வடமேற்காய் வண்டிப்பாதை 8-மைல்.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள் ஸம்பூரணம்.

---

# வடநாட்டுத் திருப்பதிகள் 12.

---

## 96. கோவிந்தராஜபட்டணம். (கீழ்திருப்பதி.)

**திருநாமங்கள்.**—கோவிந்தராஜப்பெருமாள், கோதண்டராமஸ்வாமி.

**மார்க்கம்.**—ரயில்வே ஸ்டேஷன் கீழ்திருப்பதி.

**குறிப்பு.**—திருச்சானூர் அல்லது திருசுகனூர் என்ற இடத்தில் அலர்மேல் மங்கைத்தாயார் ஸன்னதி யிருக்கிறது. அது கீழ்த்திருப்பதியிலிருந்து 3 மைல்.

---

## 97. வெங்கடாசலம். (மேல் திருப்பதி—திருமலை.)

**திருநாமங்கள்.**—வ்ருஷபாத்திரி, சிந்தாமணி, அஞ்சனசலம், சேஷாசலம், ஞானத்ரி, நாராயணத்ரி, கருடாத்ரி, வைகுண்டகிரி, ஸ்ரீநிவாஸகிரி, கலியாணகிரி, நரசிம்மகிரி, தீர்த்தாசலம், புஷ்கரசைலம், வராஹபர்வதம், வராஹக்ஷேத்திரம், திருவேங்கடத்தான், அலர்மேல்மங்கைத்தாயார், பத்மாவதி, ஆநந்தநிலய விமானம், சுவாமிபுஷ்கரணி, கோனேரிதீர்த்தம், குமாரதீர்த்தம், தும்புருதீர்த்தம், நாரததீர்த்தம், ஆகாசகங்கை, பாபவிநாசதீர்த்தம், கிருஷ்ணதீர்த்தம், சக்ரதீர்த்தம், பாண்டவதீர்த்தம், கபிலதீர்த்தம், இந்திரதீர்த்தம், தொட்டிதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பிரமனுக்கும் இந்திரனுக்கும், தசரதசக்ரவர்த்திக்கும், தொண்டமான் சக்ரவர்த்திக்கும், ஆறுமுகனுக்கும், பிரத்யக்ஷம். 10 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.



**மார்க்கம்.**—கீழ்திருப்பதியிலிருந்து மேல்திருப்பதிக்கு 7 மைல். முதல் மலை மட்டும் ஏறுவதற்கு அதிக கஷ்டமாய் இருக்கும். பிறகு ஏறுவதும் இறங்குவதும் நடப்பதுமாக இருப்பதால் சிரமம் தோன்றாது. அதிக பலஹீனர்கள் மட்டும் டோலியில் ஏறிச்செல்லலாம். ஆனால் நடந்து செல்லவேண்டுமென்பதே பெரியோர்களின் ஏற்பாடு. இங்கு புஷ்ப முதலியன சூடிக்கொள்ளல் கூடாது. சனிக்கிழமை தினம் ஸ்வாமி தெரிசனத்திற்குத் தலைக்கு ஒரு ரூபாய் தரவேண்டும். கற்பூர ஹாரத்திக்கும் ஒரு ரூபா தரவேண்டும். புரட்டாசி மாதத்தில் இங்கு ரதோத்ஸவம் வெகு பிரபலம். யாத்ரீகர்களின் கூட்டமும் அதிகம். அந்த மாஸமே இந்த யாத்திரைக்கு உத்தமம். கீழ்திருப்பதியிலிருந்து 4 மைலில் அலர்மேல்மங்காபுரம் இருக்கிறது. அங்கு அலர்மேல் மங்கைத்தாயார் ஸந்நிதியிருக்கிறது. அதை சேவித்துக்கொண்டு அங்கிருந்து 2-மைலுக்கப்பாலுள்ள ரேணிகுண்டா ஸ்டேஷனுக்கு வந்து ரயில் ஏறலாம். மேல்திருப்பதியில் மலைமேல் 3-தினங்கள் இருக்கவேண்டுமென்பது ஐதீகம்.

---

## 98. திருச்சாளக்கிராமம்.

**திருநாமங்கள்.**—ஸ்ரீ மூர்த்திப்பெருமாள், ஸ்ரீ தேவிநாய்ச்சியார், கநகவிமானம், சக்ரதீர்த்தம், கண்டகிநதி, வடக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பிரம்மருத்திராதிகளுக்கும் கண்டகி என்கிற தாவிக்கும் பிரத்யக்ஷம். 2-ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—ரேணிகுண்டாவிலிருந்து குண்டக்கல் மார்க்கமாய் ராயச்சூருக்கு 267-மைல். ராயச்சூரிலிருந்து, தோண்டு, மன்மாட், புசாவல், கண்ட்வா, ஜப்பல்பூர் மார்க்கமாய் அலகாபாத் (பிரயாகை) 1105 மைல். அலகாபாத்திலிருந்து மோகல்சிரே, பன்கிபூர், மோகமா, சமஸ்ட்பூர், பெட்டியா (Bettiah) 428-மைல். நேபாளம் எல்லையில் கண்டகி நதியோரத்தில் சாளக்கிராமம்—பெட்டியா (Bettiah) வுக்கு சமீபம். இது ரயில் பாதை.

---

## 99. திருவயோத்தி.

**திருநாமங்கள்.**—சக்கரவர்த்தி திருமகன், ரகுநாயகன், சீதாபிராட்டியார், (பொன் விக்கிரகங்கள்) புஷ்கலவிமானம், பரமபத ஸத்ய புஷ்கரணி, ஸரயூநதி (ராமகங்கை), வடக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், பாதாழ்வானுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிரத்யக்ஷம். 6 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—அலகாபாத்திலிருந்து, காசி கண்டோன்மெண்டு 105 மைல். காசியிலிருந்து அயோத்தியா 116-மைல். மலைமேல் ஹநுமார் ஸந்நதி. நந்திக் கிராமம், பாதர் ஸந்நதி, அயோத்தியிலிருந்து 2-மைல். அயோதியாகாட் அயோத்தியிலிருந்து 10-மைல். பழைய அயோத்தி (பைஜாபாத்து) சரயூநதிக்குக் கிழக்கே புது அயோத்தியிலிருந்து 4-மைல். லக்ஷ்மணபுரி (Lucknow) குமுதை நதியோரம் அயோத்தியிலிருந்து 83-மைல்.

**குறிப்பு.**—அயோத்திக்குச் செல்லுவோர் பைஜாபாத் ஸ்டேஷனில் இறங்க வேண்டும். பூர்வ ராஜதானியாகிய அயோத்தியாநகரம் நமது இராமாயணத்தில் சொல்லப்படுகிற அலங்காரங்களில் முக்காற்பாகம் வரையும் இழந்து உரு மாறிப் போயிருக்கின்றது. 12-ம் சகாப்தத்தின் முடிவில் அந்த ராஜ்ஜியத்தை மகம்மதிய அரசர்கள் கைப்பற்றினர். கி. பி. 1760-ம் வருஷம் மகம்மதியப் பிரதான மந்திரி சுவாதீன அரசனானான். 1856-ம் வருஷத்தில் அது ஆங்கிலேய துரைத்தனத்தின் எல்லைக்குள் சேர்க்கப்பட்டது.

---

## 100. திருநைமிசாரண்யம்.

**திருநாமங்கள்.**—தேவராஜன், ஸ்ரீஹரி, லட்சுமி, புண்டரீகவல்லித்தாயார், ஸ்ரீஹரிவிமானம், திவ்யவிச்ராந்த தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், தேவரிஷிக்கும் இந்திராதிகளுக்கும், ஸூதருமனுக்கும் பிரத்யக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம்.

**குறிப்பு.**—இது ஆரண்ய ரூபமாயிருக்கிறது. வேறு ஸந்நிதியாயில்லை. லக்னோ என்ற லக்ஷ்மணபுரிக்கு சமீபம். ஸ்ரீராமநவமி யன்றைய தினம் அயோத்யா, லக்ஷ்மணபுரியிலிருந்து யாத்திரைக்காரர்களை டை. திவ்யதேசத்து ஸேவ்கர்கள் தகுந்த பந்தோபஸ்துடன் அழைத்துக்கொண்டு போகிறார்கள். டை ஆரண்யத்தில் காட்டுமனிதர்கள் இருப்பதினால் தனியே போகக்கூடாது.

**மார்க்கம்.**—லக்னோ (Lucknow) விலிருந்து 30 மைல் சாண்டிலிஸ்டேஷன். சாண்டிலியிலிருந்து நைமிசாரண்யத்துக்கு வண்டிப்பாதை 20 மைல். மிஷிரிக் (சிட்டாபூர்) ஸ்டேஷனிலிருந்தும் போகலாம். மிஷிரிக் ஸ்டேஷனிலிருந்து 12 மைல்.

---

## 101. வடமதுரை (கோவர்த்தனம்).

**திருநாமங்கள்.**–கோவர்த்தநேசன், சத்தியபாமை, கேசவதேவர், கோவர்த்தன விமானம், இந்திர தீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், இந்திராதி தேவர்களுக்குப் பிரத்யக்ஷம். 4 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்,



**குறிப்பு.**—ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஜெனனமான பிறகு, ஸ்ரீ தேவதேவியார் ஸ்நாநம் செய்த தபோத்ரகுண்டம், பள்ளிகொண்ட கிருஷ்ணமூர்த்தி இவைகள் மதுரை மதிலுக்கே வெளியே யுள்ளன. துர்க்கைக் கட்டிடத்துக்குப் பின்புறத்தில் துர்வாசர் கோவில் இருக்கிறது.

யமுனை யாற்றங்கரை மத்தியில் விச்ராந்திகட்டம், ஸ்ரீகிருஷ்ணர் ஸந்நிதி, கம்சனைக் கொன்று சற்று இளைப்பாறின இடம்.

இங்கே 60, 70 அடி உயரத்தில் அம்பரீஷ மலை. அதற்கருகில் விஷ்ணு கோயில், சக்கிர தீர்த்தம். துர்வாசரைக் கண்டித்து அம்பரீஷரைக் காப்பாற்ற மகாவிஷ்ணு சக்கரம் விடப்பட்ட இடம்.

**மார்க்கம்.**—லக்னோவிலிருந்து, கான்பூர், டுண்ட்லா, ஆக்ரா, அச்னீர், மார்க்கமாய் மட்ரா என்ற வடமதுரை 245-மைல். பரோடாவிலிருந்து, அமதாபாத், ஆஜ்மீரம், ஜெயபுரம், பண்டிகியூ, அச்னீர், மார்க்கமாய் வடமதுரை 608-மைல். ரயில்வே ஸ்டேஷன் மட்ரா.

---

## 102. ஆயர்பாடி. (திருவாய்ப்பாடி) கோகுலம்.

**திருநாமங்கள்.**—நவமோஹன கிருஷ்ணன், ருக்மணி பிராட்டியார், சத்தியபாமை நாய்ச்சியார், ஹேமகூடவிமானம், யமுநாநதி, கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், நந்தகோபனுக்குப் பிரத்யக்ஷம். 4 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**குறிப்பும் மார்க்கமும்.**—ஆயர்பாடிக்குச் செல்ல மட்ரு ஸ்டேஷனில் இறங்கவேண்டும். பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் ஜலக்கிரீடை, ராஸக்கிரீடை உற்சவம். (வடமதுரைக்கு 4-மைல் தூரமுள்ள மஹாவனம் என்னும் கிராமத்துக்கு அருகில் கோகுலம்.) **மஹாவனம்:**—மதுராநாதர் சன்னதி. அதற்கு சமீபத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் சன்னதி. இங்கு யசோதையும் நந்தனும் தாலாட்டுகிற பாவனையாய் ஸ்ரீபாலகிருஷ்ணர் இருக்கிறார். **பலதேவம்:**—பலதேவர் சன்னதி. க்ஷீரஸாகரபலபத்திரகுண்டம் என்ற தெப்பக்குளம் மஹாவனத்திலிருந்து 6 மைல்.

---

## 103. திருக்கங்கைக்கரைகண்டம். (கடிநகர்.)

## (தேவப்பிரயாகை.)

**திருநாமங்கள்.**—நீலமேகப்பெருமாள், புருஷோத்தமன், புண்டரீகவல்லி, மங்களவிமானம், கிழக்கே திருமுகமண்டலம், நின்றதிருக்கோலம், பரத்வாஜ மகரிஷிக்குப் பிரத்யக்ஷம். பெரியாழ்வார் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—அலஹபாத் ஸ்டேஷனிலும் இறங்கலாம். இமயகிரிக்குப் போகும் வழியில் இலக்ஷ்மணர் கோயிலுக்கு சமீபம். (**ஹரித்துவாரம் முதலிய ஸ்தலங்களைப் பார்க்கவும்.**) ஹரித்துவாரத்திலிருந்து தேவப்பிரயாகை உத்தேசம் 300-மைல்.

---

## 104. திருப்பிரதி. (நந்தபிரயாகை.)

**திருநாமங்கள்.**—பரமபுருஷன், பரிமளவல்லிநாய்ச்சியார், கோவர்த்தன விமானம், இந்திரதீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம், மானஸஸரஸ்ஸு. கிழக்கே திருமுகமண்டலம், புஜங்கசயனம், பார்வதிக்குப் பிரத்யக்ஷம். அழகசிங்கர், சாளக்கிராமசிலை. திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—ஹிமவானில் தேவப்பிரயாகைக்கு ஸமீபத்தில் விஷ்ணுபிரயாகை. அதிலிருந்து 2-நாழிகை வழி "முழங்கால்மொடக்கி"யைத் தாண்டினால், ஜோதிர்மடம் ; மலைச்சிகரம். அதில் திருப்பிரதி என்ற திவ்யதேசமிருக்கின்றது.

---

## 105. வதரியாச்சிரமம். (பதரிகாச்ரமம்.)

**திருநாமங்கள்.**—பதரீநாராயணன், அரவிந்தவல்லி, தப்தகாஞ்சன விமானம், தப்தகுண்ட தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்ததிருக்கோலம். இலந்தைமரத்தின்கீழ் பத்மாசனனாகி ஞானமுத்திரை தந்து ஜயசீலரான தபஸ்வியாய் நானுக்குத் திருமந்திரோபதேசம் செய்தவர். 2 ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்.**—திருப்பிரதியிலிருந்து பண்டிகேசுவரம் 15-மைல். பண்டிகேசுவரத்திலிருந்து பதரிகாச்ரமம் 15-மைல்.

---

## 106. துவாரகை. (துவரை.)

**திருநாமங்கள்.**—கல்யாண நாராயணன், கல்யாண நாய்ச்சியார், அஷ்டமஹிஷிகள், ஹேமகூட விமானம், கோமதி தீர்த்தம், மேற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், திரௌபதிக்குப் பிரத்யக்ஷம். 4 ஆழ்வார் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—வடமதுரையிலிருந்து ஹட்ராஸ், அல்லிகர், காஜிபாத்து மார்க்கம் டெல்லி 126-மைல். டெல்லியிலிருந்து ரீவாரி, பண்டிகியூ, ஜெயபுரம் மார்க்கம் ஆஜ்மீரம் 275-மைல். ஆஜ்மீரத்திலிருந்து அமதாபாத் 305½-மைல். ஆமதாபாத்திலிருந்து வீரம்காம், வடவான், டோலா, ஜீடல்சார், மார்க்கமாய் போர்பந்தர் ஸ்டேஷன் 340-மைல். இதுவரையிலும் ரயில்பாதை போர்பந்தரிலிருந்து வண்டிப்பாதை துவாரகைக்கு 50-மைல். போர்பந்தரிலிருந்து கப்பல் பிரதி புதன் சனிக்கிழமைதோறும் துவாரகைக்குப் போகின்றது. 8-மணி நேரத்துக்குள் போய்ச் சேரலாம். கோடைகாலத்தில் கப்பல் மார்க்கம் போகவேண்டும். பம்பாயிலிருந்து கப்பல் துவாரகைக்குப் போகின்றது. 40-மணி நேரத்துக்குள் போய்ச் சேரலாம். துவாரகைக்கு நல்ல ரஸ்தா போடப்பட்டிருப்பதால் அந்த மார்க்கமே போவது நலம்.



---

## 107. திருப்பாற்கடல்.

**திருநாமங்கள்.**—க்ஷீராப்திநாதன், வ்யூகமூர்த்தி, கடல்மகள் நாய்ச்சியார், அஷ்டாங்கவிமானம், அமிர்ததீர்த்தம், தெற்கே திருமுகமண்டலம், புஜங்க சயனம், பிரம்மருத்திராதிகளுக்குப் பிரத்யக்ஷம். 10-ஆழ்வார்கள் மங்களாசாசனம்.

**மார்க்கம்**—மாநுஷ்ய சரீரத்துடன் இவ்விடத்தை யடையமுடியாது.

**வடநாட்டுத்திருப்பதிகள் ஸம்பூரணம்.**

---

## 108. திருநாடு. (பரமபதம்.)

**திருநாமங்கள்.**—பரமபதநாதன், பெரியபிராட்டியார், அநந்தாங்க விமானம், விரஜாநதி, அயிரம்மத புஷ்கரணி, தெற்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், அநந்த கருட விஷ்வக்ஸேனர் முதலிய நித்ய ஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும் பிரத்யக்ஷம். 8 ஆழ்வார்கள் மங்களாசாஸனம்.

**மார்க்கம்.**—பரமபதத்திற்குச் செல்வதற்கான மார்க்கத்தைக் குறித்து பகவான் கீதையில் பின்வருமாறு அருளிச்செய்திருக்கின்றார்.

" ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம்ஸரணம்வ்ரஜ,
அஹந்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாஸுச : "

"எல்லாத் தருமங்களையும் விட்டு என்னை ஒருவனையே ஸரணமாக அடைவாயாக ; நான் உன்னை ஸமஸ்த பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் ; துக்கிக்க வேண்டாம்" என்கிறார். இவ்விதமாக ஸமஸ்தமும் பகவானுக்கே என்று அர்ப்பணம் செய்த மகாபுருஷர்கள் மட்டுமே பரமபதத்திற்குச் செல்லும் அர்ச்சாமார்க்கத்தைக் கண்டறிவர். சுபம்.

மண்ணி லரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதி நூற் றெட்டினையும்—நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாத மென்றலைமேற் பூ.

**நூற்றெட்டுத் திருப்பதிகள் ஸம்பூரணம்.**

# விசேஷக் குறிப்புகள்.

---

## பிரயாகை க்ஷேத்திரம்.

இதைத் தற்போது அலகாபாத் என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பட்டினத்துக்குத் தற்காலத்துப்பெயர் மகமதிய அரசரான ஆக்பர் என்பவரால் கொடுக்கப்பட்டது. நமது புராணங்களிலும் ஹிந்துக்களுடைய வழக்கத்திலும் இதற்குப் 'பிரயாகை' என்றும், 'தீர்த்த ராஜா' என்றும், 'திருவேணி' என்றும் பெயர். பிரம்மா இந்த க்ஷேத்திரத்தில் அநேக யாகங்கள் செய்தபடியால் 'பிரயாகை' என்ற பெயர் வந்தது. இந்தியாவிலுள்ள அநேக புராதன ஸ்தலங்களில் இதுவொன்று. ரிக் வேதத்திலுங்கூட இதன் பெயர் காணப்படுகிறது. இராமாயணம், பாரதம், மத்ஸியபுராணம் இவைகளிலும் பிரயாகை மகா புண்ணிய ஸ்தலமாகச் சிலாகிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. ராமாயணத்தில் பரதர், வனவாசம் சென்ற தன் ஜேஷ்ட சகோதரரைத் திருப்பி அழைத்துவரச் சென்றபோது, அவரும் அவருடன் வந்த பரிவாரங்களும் சைனியங்களும் அங்கு வஸித்த பரத்துவாஜ மகா முனியால் விருந்து செய்யப்பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே பத்தாயிரம் சிஷ்யர்களுடன் இந்த முனிவர் வஸித்து வந்தார். சுமார் 2500 வருஷத்துக்கு முன்னால் பௌத்த மதத்தை ஸ்தாபித்த ஸாக்கியமுனி பிரயாகை க்ஷேத்திரத்துக்கு வந்து பௌத்த தர்மத்தைப் போதித்தார். சைன தேசத்தாராகிய ஹூவேன்சாங் என்ற பௌத்தரொருவர் அந்த மதத்தை அது பிறந்த இடத்திற்கு வந்து அறிந்துகொள்ளவேண்டுமென்று இங்கு யாத்திரை செய்தபோது, பிரயாகை க்ஷேத்திரத்தின் மகிமையைப்பற்றி விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார். இப்போது எப்படி அந்த க்ஷேத்திரத்தில் இந்தியாவின் நாலுபக்கங்களிலிருந்தும் ஹிந்துக்கள் திருவேணியில் ஸ்நானம் செய்து பாவத்தைப் போக்கவேண்டுமென்று கூடுகிறார்களோ, அப்படியே அக்காலத்திலும் ஜனங்கள் கூடுவது வழக்கமாயிருந்ததென்றும், ராஜாக்களும், செல்வவான்களும் ஸ்நானம் செய்து பிண்டம் போடுவது முதலான புண்ணிய கிரியைகள் செய்வதுமன்றி, பிராமணர்களுக்கும் மற்ற ஜாதி ஏழைகளுக்கும் ஏராளமான திரவியம் தானம் செய்வது வழக்கமென்றும் இந்த சைன பௌத்தர் எழுதியிருக்கிறார். கங்கை, யமுனை, சரஸ்வதி மூன்றும் அங்கு சேருவதால் அதற்கு இந்த மகிமை உண்டாயிருக்கிறது. சரஸ்வதி இப்போது அந்தர்வாகினியாயிருப்பதால் கங்கை, யமுனை இரண்டுமட்டும் அங்கே சேருகின்றன. நதிக்குத் தென்கரையில் அக்ஷயவடமென்ற ஓர் ஆலமரம் அநாதிகாலமாயிருந்து, அதில் யாத்திரீகர்கள் ஏறி நதியில் விழுந்து மாளுவது முக்தி கொடுக்குமென்று நம்பி அப்படிச் செய்து வந்தார்கள். இந்த வடவிருக்ஷத்தை இப்போதுங்கூட ஒரு சிறு குகை போன்ற இடத்தில் க்ஷேத்திரவாசிகள் பிரயாணிகளுக்குக் காட்டுகிறார்கள். இவ்வாறு இந்த மரத்திலேறி ஜனங்கள் உயிர் துறக்கும் வழக்கத்தை நிறுத்தும்பொருட்டு அக்பர் சக்கரவர்த்தி இந்த மரத்தை உள்ளடக்கி ஒரு கோட்டை கட்டி அதற்குள் ஜனங்கள் வருவதைத் தடுத்தார்.



பிரயாகை க்ஷேத்திரத்தில் அநேகம் பழைய கோவில்கள் இருக்கின்றன. அவைகளில் வாசுகி என்று புராணங்களிற் சொல்லப்படும் சர்ப்பராஜனுக்குக் கட்டப்பட்டிருக்கும் கோவில் ஒன்றிருக்கின்றது. சமுத்திரகூபம் என்று ஒரு கிணறுண்டு. அது பூமியின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு வழியால் சமுத்திரத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறதென்ற நம்பிக்கையால் இந்தப் பெயர் அதற்கு வழங்குகின்றது. உண்மையில் பிரயாகைக்கருகில் கௌஸாம்பி என்கிற பட்டணத்தில் மகா கீர்த்திவானுப் ராஜ்யமாண்ட சமுத்திர குப்தா என்ற அரசன் பெயரைக்கொண்டு இந்தப் பெயர் அதற்கு வந்தது. பிரயாகையில் சங்கமத்தில் ஸ்நானம் செய்வது எப்போதுமே புண்ணியமாகக் கருதப்பட்டாலும், தை, மாசி, மாசங்களில் மாகாமேலாவென்றும், கும்பமேலாவென்றும் சொல்லப்படுகிற இரண்டு புண்ணிய காலங்களில் ஸ்நானம் செய்வது விசேஷமென்று லக்ஷக்கணக்கான ஜனங்கள் இந்தியாவின் எப்பாகத்திருந்தும் கூடுகிறார்கள். பல்லாயிர வருஷகாலமாகப் பாரத வருஷத்தில் பேர்போன ஸ்தலமாயிருந்து வரும் இந்தப் பிரயாகை, பிரிட்டிஷ் அரசாட்சியிலும் தற்கால நாகரீகத்துக்கு உற்றவாறு நவீன பிராதான்னியமும் கீர்த்தியும் பெற்று விளங்குகின்றது.

---

## 2. துவாரகை.

பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த கத்தியாவார் தீபகல்பத்தின் மேற்குக் கோடியிலிருக்கிற இத்துவாரகை, கடற்றுறைப்பட்டணமாயும் ஹிந்துக்களின் முக்கிய யாத்திரை ஸ்தலமாயுமிருக்கிறது. இது பரோடா மகாராஜாவின் சுயாதீனத்திலிருக்கின்றது. யாதவகுலத்திற்றோன்றிய ஸ்ரீ கிருஷ்ணபகவான், தன் வம்சத்தார் நாளுக்கு நாள் பலவீனர்களாகி வருவது கண்டு எதிரிகளால் தாக்க முடியாமலிருக்கும்படியாய், ஓர் பலமான கோட்டையையும், அதற்குள் விசித்திர அலங்காரமான ஓர் சிறந்த பட்டணத்தையும் உண்டாக்கி, மதுராபுரியிலிருந்த சகலரையும் இவ்விடத்தில் குடியேற்றினர் என்று ஸ்ரீ மகாபாரதத்திற் கூறியுள்ளது.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் பரமபதஞ்சென்ற அத்தினமே சமுத்திரம் பொங்கி யாதவகுலத்திற் கதிபரும் பகவானுமான ஸ்ரீகிருஷ்ண பகவான் வஸித்துவந்த அந்த ஒரு பாகந்தவிர துவாரகையின் மற்றெல்லாப் பாகத்தையும் மூழ்கச் செய்துவிட்டதென்றும், முற்கூறிய பாகத்தில் ஒரே இரவில் விஸ்வகர்மாவினால், மிக்க அலங்காரமாயும், விசாலமாயும், மணற்கற்றூண்களால் தாங்கப்பெ

மான கோபுரத்தையுடைய பெரிய கோவிலொன்று நிர்மாணஞ் செய்யப்பட்டதென்றும், அவ்வாலயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சான்னித்தம் இன்னும் சம்பூர்ணமாய் விளங்கி வருகிறதென்றும், இந்த இடத்தை எவன் தரிசிக்கிறானோ அவன் எல்லாப் பாபங்களினின்றும் விடுதலை யடைகிறான் என்றும் புராணங்கள் கூறியுள.

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவான் விக்கிரகம், மிக்க சுந்தரமாய் விளங்குகிறது. இந்த ஆலயத்திற்குப் பரோடா கவர்ன்மெண்டாரால் மிக்க பணஉதவி செய்யப்பட்டு வருகிறபடியால், பூஜையும் அலங்காரமும் வெகு ஒழுங்காய் நடந்தேறி வருகின்றன. கணக்கற்ற விலையுயர்ந்த ஆபரணங்கள் ஸ்வாமிக்குத் தினமும் சாத்துகிறபடியால், கோவிலின் நான்கு புறத்திலும் உள்ள வாசல்களில் போலீஸ் சேவகர்கள் துப்பாக்கியும் கையுமாக பாராக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வூரைச் சுற்றிலும் அநேக தேவாலயங்களும், மடங்களும், தர்மசாலைகளும் இருக்கின்றன. என்றாலும் தட்சண தேசத்தில், உற்சவாதிகளும் அலங்காரங்களும் நடந்தேறி வருகிறமாதிரி, இவ்விடங்களில் காண்பதரிது. இவ்விடத்தில் கோமுகி என்ற ஒரு சிற்றாறு சமுத்திரத்தில் சங்கமமாகிறது. அந்த நதி தீரத்தில் பன்னிரண்டு ஸ்நான கட்டங்கள் உண்டு. இதில் ஸ்நானம் செய்யவேண்டுமானால் ரூபா 1-1-0 ஒவ்வொருவனும் கொடுத்தே தீரவேண்டும். இந்த ஸ்நானக் கட்டத்தை வருஷம் ஒன்றுக்கு 5,000 ரூபாய்க்கு ஒருவன் கண்டிராக்டு பேசி வாங்கியிருக்கிறான். கேவலம் ஏழையான யாத்திரைக்காரர்களிடமிருந்து பணம் வாங்காமல் இருக்கும்படியான உத்திரவை மகாராஜா அவர்கள் அளித்தால் மிக்க பரோபகாரமாயிருக்கும். வாரத்திற்கு ஒருமுறை இவ்விடத்திலிருந்து பம்பாய்க்கும் கராச்சிக்கும் புகைக்கப்பல்கள் போக்குவரவாயிருக்கின்றன. உன்னதமான பிரதேசத்தில் நின்று இவ்வூரை நோக்கியதில் சுமார் 500 வீடுகளும், சுற்றிலும் மூன்று பக்கம் சமுத்திரமும், கண்ணுக்கு எட்டும் வரையிலும் மரம், செடி, கொடிகளற்ற விஸ்தாரமான மணற்பாங்குள்ளதாயும் தோற்றுகிறது. குடிப்பதற்கும் ஸ்நானத்திற்கும் நல்ல ஜலம் கிடையாது. சகலமும் உப்பு ஜலந்தான். காய்கறிகளும் உணவுப் பொருள்களும் தொலைதூரத்திலிருந்துதான் வரவேண்டும்.

---

## 3. மாணிக்கப்பூர் ஸ்டேஷன்.

இதற்கு 26-மயில் தூரத்திலுள்ள சித்திரகூடம் செல்வோர் இதில் இறங்குவர். தங்க இடமும், ஆங்குச் செல்ல ஒற்றையிரட்டை ஒட்டகை பூட்டிய வண்டிகளும் இவ்வூரில் கிடைக்கும். மாணிக்கப்பூரிலிருந்து சித்திரகூடத்துக்கு பதினைந்து நாழிகையில் போகலாம். மேடு பள்ள மணலின்றி மார்க்கம் செவ்விதாயிருக்கும். மாணிக்கப்பூருக்கும் சித்திரகூடத்துக்கும் மத்தியில் வான்மீகிநதியும் அப்பகவான் ஆச்சிரமமும் சிறு ஊருமிருக்கின்றன. வான்மீகி ஆச்சிரமமென்னும் அப்புண்ணிய பெயரே ஊர்ப்பெயராயிருக்கின்றது. அவ்வூருக்கு சிறிது தூரத்தில் நதிக்கரையில் ஒரு சிறு குன்றின்மேலே பகவான் வான்மீகி ஆச்சிரமம் சில பாகவதர்களால் சூழப்பட்டிருக்கிறது. ஆங்கு போய் விக்கிரகரூபியாயிருக்கிற மகா இருடியாரைச் சேவிக்கலாம்.



வடநூலார் யாப்பிலக்கணமோர்ந்தது இவராலென்க. இவர் ஸ்ரீமத் ராமாயணம் செய்தருளியதற்கு முன்னர் உலகில் விருத்த பேதங்களே இல்லை. விருத்தம் கற்பித்தவரே வான்மீகி பகவானாதலால் அவர் செய்தருளிய ஸ்ரீமத் ராமாயணம் ஆதிகாவியமெனப்பட்டது. அதுபற்றிக் கவிச்சக்ரவர்த்தியாரும் "வாங்கரும்" என்று எடுத்துப பாடினர்.

**நாட்டுப்படலம்.**

வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவு மாந்தி
மூங்கையான் பேச லுற்றா னென்னயான் மொழிய லுற்றேன்.

---

## 4. சீதாப்பூர் ஸ்டேஷன்.

இதற்கு மூன்று மைல் தூரத்தில் சித்திரகூடம் இருக்கிறது. கால் பலமுள்ளோர் நடந்துபோய் சேவித்து வரலாம். வாகனத்தின் மேலே செல்லின், கங்காதீரத்திலிருந்து பரதஜீ (பரதன்) இந்த க்ஷேத்திரத்துக்கு காலால் நடந்து வந்தார்; சீதாப்பூரிலிருந்து நீ வாகனத்தில் வருகின்றாயோ என்று ஆங்குள்ளார் இகழ்வார். தாசரதியார் சீதாலக்ஷ்மணரோடு இச்சிகரியில் பத்து வருடம் சில மாதங்கள் எழுந்தருளியிருந்தனர். யாத்திரைக்காரர் மலையடி சார்ந்தவுடன் காந்தாநாத சுவாமிசந்நிதியில் தண்டன் சமர்ப்பித்து எழுந்து அஞ்சலிகரத்தராய் வலம் வரும்போது மலைச்சாரலிலிருக்கின்ற வானரங்களுக்குக் கடலை முதலிய உணவுகளை வாங்கி இடுவர். மலைமேலெல்லாம் காடாகையால் பிரதக்ஷணம் செய்வதன்றி அதன்மேல் ஏறக்கூடாது. பருவதத்துக்குச் சிறிது தூரத்தில் லக்ஷ்மணஜூலா என்று ஒரு சிறு குன்றிருக்கின்றது.

---

## 5. அசோகவனம்.

அசோகவனம் சிலோனில் நூரளையென்ற இடத்தில் இப்போதும் இருக்கிறது. அவ்வனம் தற்போது இருண்ட சுனையான இடமாயும் கண்களுக்குக் குளிர்மையான சாட்சியைக் காட்டக்கூடிய பிரதேசமாயும் இருக்கின்றன. சீதா

பிராட்டியார் மஞ்சள் அரைத்த கல், குளித்த இடம், யானையின் பாதம்பட்ட இடம் இப்பொழுதும் காணலாம். இச்சுனை கற்பாறையுள்ளேயிருந்து வெள்ளி, செவ்வாய்க்கிழமையன்று மஞ்சள் கரைத்த தண்ணீருடன் பூக்களும் அப்பாறைச் சுனையிலிருந்து வருகிறது. இதை அநேகர் பானமாகவும் தீர்த்தமாகவும் அருந்துகிறார்கள்.

---

# சில குறிப்புகள்.

கங்கை எடுப்பது திரிவேணியிலாயினும் அதற்குப் பாத்திரங்கள் காசியில் வாங்கவேண்டும். பட்டிலும், நார்மடியிலும், கிழிவிலும், ஸ்ரீராம நாமம் முழுதும் பதித்த உத்தரிகங்களும், காசிபட்டும் வாரணாசியில் விற்கப்படுகின்றன.

ஸ்ரீ காசியில் துருக்கரெல்லாம் மணவினை செய்யும் முன்னர் வாத்தியம் கோஷிக்கச் சுற்றத்தாரோடு வந்து கங்கைமாநதியைப் பூசிப்பர். கங்கையில் ஸ்நாநகட்டங்களிலெல்லாம் கங்காபுத்திரர் என்னும் பார்ப்பார் நீராடுவோர்க்குச் சங்கற்பம் சொல்ல உச்சிப்பொழுது வரையிலும் காத்திருப்பார். அந்நீராடுவோர் தரித்துக்கொள்ளத் திருமண்கோபி சந்தனம் வெண்ணீறுகளை வைத்துக்கொண்டிருப்பார்.

கங்காயாத்திரை புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி இந்த மாதங்களில் செய்யலாம். அவற்றில் மார்கழி முதல் குளிர் மிகுதியுளதேனும் அப்போது யாத்திரை செய்வோர் தேகாரோக்கியம் பெறுவார். மார்கழி மாதம் யுக்தயாத்திரைக்கும் எடுக்கப்பட்டது. குளிருக்கு அஞ்சுவோர் புரட்டாசி முதல் மூன்று மாதங்களில் யாத்திரை செய்யலாம். அக்காலம் சீதோஷ்ணம் மிதமான நல்லகால மாயினும் அப்போது யாத்திரை செய்வோர் திருவேணி சங்கமத்தில் மகாஸ்நான பலன் அடையார். ஏனைச் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி இந்த மாதங்கள் வெம்மை மிகுதியாயும் புதுப்புனலால் நீர்க்குற்றமும் வியாதிகள் விளைவுமுள்ள காலமாதலால் அம்மாதங்களில் யாத்திரை செய்தல் உசிதமன்றென்பர்.

---

# ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளின பாசுரங்களின் தலைப்பு முதலியன.

---

குறிப்பு.—இங்கு திவ்யப் பிரபந்தங்களின் நீளமான பெயர்களை இந்நூலில் சுருக்கமாக உபயோகப்படுத்தி யிருப்பதின் விவரத்தைக் காண்பித்திருக்கிறது. உதாரணமாக, பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி பாசுரம் I என்ற நீளமான குறிப்புக்குப் பதிலாக 1. அந். 1. என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1. அந். 1. என்றால் ஒன்றாம் திருவந்தாதி பாசுரம் ஒன்று என்று தாத்பர்யமாகும். இப்படியே பிறவும் கண்டு கொள்க. இந்தக்குறிப்புகள் எதற்காக இங்கு கொடுக்கப் பட்டதெனில், ஒவ்வொரு திவ்ய ஸ்தலங்களின் மீதும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் இன்னின்ன பாசுரங்களால் செய்யப் பட்டிருக்கிறதென்றும், அந்தப் பாசுரங்கள் நாலாயிரப் பிரபந்தத்தினுள் இன்ன இடத்தில், அதாவது இத்தனையாவது அந்தாதி இத்தனையாவது பாசுரமாகுமென்றும் இங்கு தெரிவிக்கப் போவதால், அதற்காக திவ்யப் பிரபந்தங்களின் சரியான பெயரும் அதன் சுருக்கமான பெயரும் இங்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமான ஆராய்ச்சியே ஒரு நூதன ஆராய்ச்சியாகும்.

கவனிப்பு.—இங்கு ஒவ்வொரு திவ்விய தேசத்தின் பெயரின் கடைசியில் * இவ்விதமான நக்ஷத்திரப்புள்ளி யிட்டு எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தஎண்கள் அந்ததிவ்விய தேசத்தை 108—திருப்பதியினுள் வரிசைக்கிரமமான இத்தனையாவது திவ்விய க்ஷேத்திரம் என்று குறிப்பிக்கின்றது. யாத்திரார்கள் சுலபமாய் சேவித்து வரும்படியாக மார்க்கங்களின் ஸமீபத்தை யநுசரித்து திவ்விய தேசங்களைக் கோர்வைப் படுத்திக்கொண்டு போயிருப்பதால், திவ்விய தேசத்தின் வரிசைக் கிரமமான எண் தெரிய விரும்புவோருக்கு உதவியாக மேற்கண்டபடி * இந்த நக்ஷத்திரப்புள்ளியிட்டு அதனருகே அது இத்தனையாவது திவ்விய தேசமென்ற விவரமும் தெரிவிக்கப் படலானது.

# ஞாபகக் குறிப்பு.

| திவ்யப் பிரபந்தங்கள் | சுருக்கம் |
|---|---|
| **பொய்கையாழ்வார்.**—முதல் திருவந்தாதி பாசுரம் 1. | 1. அந். 1. |
| **பூதத்தாழ்வார்.**—இரண்டாந் திருவந்தாதி பாசுரம் 1. | 2. அந். 1. |
| **பேயாழ்வார்.**—மூன்றாந் திருவந்தாதி பாசுரம் 1. | 3. அந். 1. |
| **திருமழிசையாழ்வார்.**—திருச்சந்தவிருத்தம் பாசுரம் 1. | திரு. ச. வி. 1. |
| ஷை நான்முகன் திருவந்தாதி பாசுரம் 1. | 4. அந். 1. நான்முகன் என்பதற்குப் பதிலாக 4 என்று குறிப்பிடப் பட்டுள்ளது. |
| **நம்மாழ்வார்.**—திருவிருத்தம் பாசுரம் 1. | தி. வி. 1. |
| ஷை திருவாசிரியம் பாசுரம் 1. | தி. வா. 1. |
| ஷை பெரிய திருவந்தாதி பாசுரம் 1. | பெ. அந். 1. |
| ஷை திருவாய்மொழி முதல்பத்து முதல் திருவாய் மொழி பாசுரம் 1. | தி மொ. 1.-1-1. ஒன்றும்பத்து ஒன்றும் திருவாய்மொழி ஒன்றும் பாசுரம் என்பதற்காக 1-1-1 என்று குறிப்பிடப்பட்டது. இப்படியே பிறவும் உணர்க. |
| **குலசேகராழ்வார்.**—பெருமாள் திருமொழி, முதல் திருவாய்மொழி பாசுரம் 1. | பெ தி. மொ. 1-1 |
| **பெரியாழ்வார்.**—திருமொழி, முதல் பத்து, முதல் திருமொழி பாசுரம் 1. | தி. மொ. 1-1-1 |
| **ஆண்டாள்.**—நாச்சியார் திருமொழி,முதல் திருமொழி பாசுரம் 1. | தி. மொ. 1-1 |
| **திருமங்கையாழ்வார்.**—பெரிய திருமொழி, முதல் பத்து, முதல் திருமொழி பாசுரம் 1. | தி. மொ. 1-1-1 |
| **திருமங்கையாழ்வார்.**–திருக்குறுந்தாண்டகம் பாசுரம1. | தி. கு. தா. 1. |
| ஷை திருநெடுந்தாண்டகம் பாசுரம் 1. | தி. நெ. தா. 1. |
| ஷை சிறிய திருமடல் பாசுரம் 1. | சி. தி. மடல் 1. |
| ஷை பெரிய திருமடல் பாசுரம் 1. | பெ. தி. மடல். 1. |
| பாசுரம் 1-முதல் 10 வரையில். | 1-10. |

# பாசுரங்களின் தலைப்பு.

ஒவ்வொரு க்ஷேத்திரத்தின் பெயர்களின் கடைசியிலுள்ள எண், அது இத்தனையாவது க்ஷேத்திரம் என்பதைக் காட்டுகின்றது

## சோழநாடு.

### 1. ஸ்ரீரங்கம் * 1.

**பொய்கையாழ்வார்**
1. அந். 6. ஒன்றுமறந்தறியே

**பூதத்தாழ்வார்**
2. அந். 28. மனத்துள்ளான்
,, ,, 46. பயின்றதரங்கம்
,, ,, 70 தமருள்ளம்தஞ்சை
,, ,, 88. திறம்பிற்றினி

**பேயாழ்வார்**
3. அந். 61. பண்டெல்லாம்.
,, ,, 62. விண்ணகரம்

**திருமழிசையாழ்வார்**
திரு. ச. வி. 49, 55, கொண்டை
119. பொன்னிசூழரங்கமேய
4. அந். 3. பாலில்கிடந்தது
,, ,, 30. அவனென்னை
,, ,, 36. நாகநாதனை
,, ,, 60. ஆள்பார்த்து

**நம்மாழ்வார்**
தி. வி. 28. தண்ணந்துழாய்
தி. மொ. 7. 2. 1-11. சங்குலும்

**குலசேகராழ்வார்**
பெ. தி. மொ. 1-11 இருளிரிய
,, ,, ,, 2-1-10 தேட்டரும்
,, ,, ,, 3-1-9 மெய்யில்

**பெரியாழ்வார்**
தி. மொ. 2-7-2 கருவுடை
2-7-8 சீமாலி
2-9-11 வண்டுகளி
3-3-2 கன்னிநன்மா
4-8-1-10 மாதவத்தோ
4-9-1-11 மாவடியை
4-10-1-10 துப்புடையா

**ஆண்டாள்**
தி. மொ. 11-1-10 தாமுகக்கும்

**தொண்டரடிப்பொடியாழ்வார்.**
திருமாலை 1. 45. காவலில்
திருப்பள்ளியெழுச்சி 1. 10. [கதிரவன்

**திருப்பாணாழ்வார்**
அமலனாதிப்பிரான் 1. 10.

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 5-4-1-10 உந்திமேல்
5-5-1-10 வெருவாதா
5-6-1-10 கைம்மானம்
5-7-1-10 பண்டை
5-8-1-10 ஏழை
7-3-4-2 ஊங்களா
8-2-7 தாங்கநீர்
9-9-2 புனைவளர்
11-3-7 கண்ணன் [மனத்
11-8-8 அணியார் [பொழில்
தி. கு. தா. 7. இம்மையை
12. ஆவியை அரங்கமாலை
13. இரும்பு நன்றுண்ட
19. பிண்டியார் மண்டை
தி. நெ. தா. 11. பட்டுடுக்கும்
12. நெஞ்சுருகி
14. முளைக்கதிரை
18. கார்வண்ணன்
19. முற்றாரா
22. தைவனம்
23. உள்ளூரும் சிந்தை
24. இருகையில்
25. மின்னில
சி. தி. மடல். 71. ஆராமம் சூழ்ந்த
பெ. தி. மடல் 118. மன்னுமரங்கத்து

### 2. உறையூர் * 2.

**குலசேகராழ்வார்**
பெ. தி. மொ. 2. 10. அல்லிமாமலர்
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 9-2-5. கோழியுங் கூடலும்

---

### 3. திருக்கரம்பனூர் * 5

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 5-6-2. பேராளே

---

### 4. திருவெள்ளறை * 6

**பெரியாழ்வார்**
தி. மொ. 1-6-8. உன்னையும்
2-8-1-10. இந்திரனோடு
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 5-3-1-10. வென்றிமா
10-1-4. துளக்கமில்
சி. தி. மடல். 70. பேராமருதிறுத்தான்
பெ. தி. மடல். 117. மின்னையிருசுடரை

---

### 5. திருப்பேர் நகர் (கோயிலடி) * 8

**திருமழிசையாழ்வார்**
4. அந். 36. நாகத்தணை
**நம்மாழ்வார்**
தி. மொ. 10-8-1-11. திருமாலிரும்
**பெரியாழ்வார்**
தி. மொ. 2-6-2. கொங்கும்
2-9-4. கொண்டல்
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 5-6-2. பேராளே
5-9-10. கையிலங்கு
தி. கு. தா. 19. பிண்டியார் மண்டை
தி. நெ. தா. 8. நீரகத்தாய்
சி. தி. மடல். 70. மதிள்கச்சி

---

### 6. திருவன்பில் * 4

**திருமழிசையாழ்வார்**
4. அந். 36. நாகத்தணை
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 10-2-9. புரங்கள்

---

### 7. திருக்கண்டியூர் * 15

**திருமங்கையாழ்வார்**
தி. கு. தா. 19 பிண்டியார்மண்டை

### 8. திருத்தஞ்சைநகரம் * 3

**பூதத்தாழ்வார்**
2. அந். 70. தமருள்ளம் தஞ்சை
**நம்மாழ்வார்**
தி. மொ. 5-3-1. மாசறு சோதி
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 1-1-6. எம்பிரானெந்தை
2-5-3. உடம்புருவின்
7-10-5. வற்றினை

### தஞ்சையாளிநகர்

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 7-3-9. என்செய்கேன்

---

### 9. திருக்கண்ணமங்கை * 27

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 7-10-1-10. பெரும்புற
10-1-1. ஒருநற்சுற்றம்
11-6-7. மண்ணுடும்
சி. தி. மடல். 71. போரவி
பெ. தி. மடல். 116. என்னுடைய

---

### 10. திருக்கண்ணபுரம் * 17

**நம்மாழ்வார்**
தி. மொ. 9-10-1-11. மாலைநண்ணி
**குலசேகராழ்வார்**
பெ. தி. மொ. 8-1-11. மன்னுபுகழ்
**பெரியாழ்வார்**
தி. மொ. 1-6-8. உன்னையு
**ஆண்டாள்**
தி. மொ. 4, 2, காட்டில்
**திருமங்கை யாழ்வார்**
தி. மொ. 8-1-1-10 சிலையிலங்கு
8-2-1-10 தெள்ளியீர்
8-3-1-10 கரையெடுத்த
8 4-1-10 விண்ணவர்
8-5-1-10 தந்தைகாலில்
8-6-1-10 தொண்டீர்
8-7-1-10 வியமுடை
8-8-1-10 வானோரளவு
8-9-1-10 கைம்மானம்
8-10-1-10 வண்டார்
தி. நெ. தா. 16. கன்று மேய்த்து
27. செங்கால
சி. தி. மடல் 72. சீரார்கணபுரம்



பெ. தி. மடல் 90. கணபுரத்து [ரத்
133. கண்ணனைகணபு

---

### 11. திருச்சிறுபுலியூர் * 11

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 7. 9. 1. 10. கள்ளம்

---

### 12. திருக்கண்ணங்குடி * 26

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 9. 1. 1. 10. வங்கமா

---

### 13. திருநாகை * 19

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 9. 2. 1. 10. பொன்னிவர்

---

### 14. திருக்கவித்தலம் * 28

**திருமழிசையாழ்வார்**
4 அந். 50. கூற்றமும் சாரா

---

### 15. திருக்கூடலூர் * 25

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 5. 2. 1. 10. தாந்தம்பெரு

---

### 16. திருக்குடந்தை * 11

**பூதத்தாழ்வார்**
2. அந். 70. தமருள்ளந்தஞ்சை
97. எங்கள் பெருமான்
**பேயாழ்வார்**
3. அந் 30. சேர்ந்ததிருமால்
62. விண்ணகரம்
**திருமழிசையாழ்வார்**
திரு. ச. வி. 56. 61. இலங்கை
4. அந். 36. நாகத்தணை
**நம்மாழ்வார்**
தி. மொ. 5. 8. 1. 11. ஆராவமுதே
**பெரியாழ்வார்**
தி. மொ. 2-6-2 கொங்கும் குடந்தை
2-6-6 ஆலத்திலை
2-7-7 குடங்களெடுத்து
3-9-10 காரார்கடலை
5-4-4 கடல்கடைந்தமுதம்
**ஆண்டாள்**
தி. மொ. 13. 2. பாலாலிலையில்
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 1-1-2 ஆவியேயமுதே
1-1-7 இற்பிறப்பு
1-5-4 ஊரான் குடந்தை
2-4-1 அன்றாயர்
3-6-5 வாளாய
3-6-8 குயிலாலும்
5-5-7 வாராளும்
6-8-9 பொங்கேரு
7-3-3 வந்தநாள்
7 6-9 பேராளை
8-9-5 வர்தாய்
9-2-2. தோடவிழ்
10-1 6. வானையார்
10-10-8. இங்கே
11-3-4. அறியோமே
11-6-9. அண்டத்தின்
**திருவெழுகூற்றிருக்கை**
ஒரு பேருந்தி
தி. கு. தா. 6 மூவரில் முதல்வ
14. காவியை. [ஞய்
தி. நெ. தா. 17. பொங்கார்.
19. முற்றாரா.
29. அன்றாயர்.
சி. தி. மடல் 73. காரார் குடந்தை.
பெ. தி. மடல் 114. பொன்னிமணி.

---

### 17. திருப்புள்ளம் பூதங்குடி * 7

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 5-1-1-10. அறிவதறியான்.

---

### 18. திரு ஆதனூர் * 9

**திருமங்கையாழ்வார்**
பெ. தி. மடல் 130. அன்னவனையாத

---

### 19. திரு நறையூர் * 20

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 2-4-1. அன்னயர்.
4-9-2. சிந்தைதன்னுள்.
6-3-3. மானேய்.
6-4-1-10. கண்ணும்.
6-5-1-10. கலங்க.
6-6-1-10. அம்பரமும்.
6-7-1-10. ஆளும்பணி.
6-8-1-10. மான்கொண்ட
6-9-1-10. பெடையார்த்த
6-10-1-10. கிடந்த நம்பி
7-1-1-10. கறவாமட

7-2-1-10. புள்ளாய்
7-3-1-10. சினவில்
7-7-4. பானே பஞ்சமன்
8-2-2. நீணிலா முற்றத்து
10-1-5. சுடலையில்
தி. நெ. தா. 16. கன்றுமேய்த்து
சி. தி. மடல் 71. பேராலி
பெ. தி. மடல் 73. மன்னுமறை.
133. தென்னறையூர்

## 20. திருச்சேறை * 12

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 7-4-1-10. கண்சோர
10-1-6. வானையாரமுதம்
சி. தி. மடல் 72. சீரார்கணபுரம்
பெ. தி. மடல் 115. மன்னியதன்

## 21. திருவிண்ணகரம் * 16

**பொய்கையாழ்வார்**
1. அந். 77. வேங்கடமும்
**பேயாழ்வார்**
3. அந். 61 பண்டெல்லாம்
62 விண்ணகாம்
**நம்மாழ்வார்.**
தி. மொ. 6-3-1-11. நல்குரவும்
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 6-1-1-10. வண்டுணும்
6-2-1-10. பொறுத்தேன்
6-3-1-10. துறப்பேன்
10-1-8. பத்தராவியை
தி. நெ. தா. 29. அன்றாயர்
சி. தி. மடல் 72. காரார்மணி

## 22. திருநந்திபுர விண்ணகரம் * 21

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 5-10-1-10. தீதறுநிலத்து

## 23 திருவெள்ளியங்குடி * 29

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-10-1-10 ஆய்ச்சியர்
,, 10-2-1 இரக்கமின்றி

## 24 திரு இந்தளூர் * 22

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-9-1-10 நும்மை
பெ. தி. மடல். அன்னவுருவில்

## 25. திருவழுந்தூர் * 10

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 7-5-1-10 தந்தை
,, ,, 7-6-1-10 சிங்கமதாய்
,, ,, 7-7-1-10 திருவுக்கும்
,, ,, 7-8-1-10 செங்கமல
தி. நெ. தா. 15 கல்லுயர்ந்த
,, ,, 26 தேமருவு
சி. தி. மடல். 72 சீரார்கண
பெ. தி. மடல் 123 அள்ளல்வாய்

## 26. திருக்காழிச்சீராம விண்ணகரம் * 24

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 3-4-1-10 ஒரு குறளாய்

## 27 திருவாலி * 18

**குலசேகரார்ழ்வார்**
பெ. தி. மொ. 8-7 ஆலிநிலைப்பால
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 2-4-1 அன்றாயர்
,, 3-5-1-10 வந்துனது
,, 3-6-1-10 தூவிரிய
,, 3-7-1-10 கள்வன்
,, 4-9-2 சிந்தை தன்னுள்
,, 8-3-10 தேமருவு
,, 8-9-6 அஞ்சா
,, 8-9-8 கற்றார்
,, 10-1-3 வேலையாலிலை
,, 11-8-6 படைநின்ற
பெ. தி. மடல். 115 மாமலர்மேல்

## 28. திருத்தலைச்சங்க நாண்மதியம் * 13

**திருமங்கையாழ்வார்**
பெ. தி. மடல். 132 நன்னீர்த்தலை

## 29. திருக்காவளம்பாடி * 38

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-6-1-10 தாவளந்து

## 30. திருநாங்கூர் * 30

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 3-8-1-10 நந்தா
தி. மொ. 4-7-5 வேடார்திரு



,, 4-9-2 சிந்தைதன்
,, 7-1-5 வில்லேர்
,, 10-1-3 வேலையாலிலை
பெ. தி. மடல் மன்னுமணி

## 31. திருவைகுந்த விண்ணகரம் * 31

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 3-9-1-10 சலம்

## 32. திரு அரிமேய விண்ணகரம் * 32

**பூதத்தாழ்வார்**
2. அந் 98 கொண்டு
**பெரியாழ்வார்**
தி. மொ. 2-9-6 போதர்கண்
**ஆண்டாள்**
தி. மொ. 3-6 தடத்தவிழ்
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 3-10-1-10 திருமடந்தை
,, 7-3-3 வந்தநாள்

## 33. திருவண்புருஷோத்தமம் * 34

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-2-1-10 கம்பமா

## 34. திருச்செம்பொன்செய் கோயில் * 35

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-3-1-10. பேரணிந்து

## 35. திருத்தெத்தியம்பலம் * 36

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-4-1-10. மாற்றரசர்

## 36. திருமணிக்கூடம் * 37

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-5-1-10. தூம்புடை

## 37. திருத்தேவனார் தொகை * 33

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-1-1-10. போதலர்ந்த

## 38. திருவெள்ளக்குளம் * 39

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 4-7-1-10. கண்ணார்கடல்

## 39. திருப்பார்த்தன்பள்ளி * 40

**திருமங்கையாழ்வார்**
தி மொ 4-8-1-10. கவளயானை

## 40. திருச்சித்ர கூடல் * 23

**குலசேகராழ்வார்**
பெ. தி. மொ. 10-1-11. அங்கணெடு
**பெரியாழ்வார்**
தி. மொ. 2-6-7. பொற்றிகழ்
3-10-5. மாமைரு
3-10-6. சித்திரகூட
**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 3-2 1-10. ஊன்வாட
3-3-1-10. வாடமரு
பெ. தி. மடல். 124. தென்றில்லை

சோழநாடு முற்றிற்று.

## பாண்டியநாடு

## 41. திருமெய்யம் * 43

**திருமங்கையாழ்வார்**
தி. மொ. 3-6-9. நிலையாளா
6-8-7. கட்டேறு
8-2-3. அருவிசோர்
9-2-3. வேயிருஞ்சோ
10-1-5. சுடலையில்
11-7-5. மையார்
தி. கு. தா. 19. பிண்டியார்
பெ. தி மடல். 126. அன்னவுரு

## 42. திருக்கோட்டியூர் * 42

**பூதத்தாழ்வார்**
2 அந். 46. பயின்ற
87. இன்றாவ
**பேயாழ்வார்**
3. அந். 62. விண்ணகாம்
**திருமழிசையாழ்வார்**
4. அந். 34. குறிப்பெண
**பெரியாழ்வார்**
தி. மொ. 1-2-1. வண்ணமாட
1-2-10. சென்னலா
2-6-3. கொங்குங்
4-4-1-11. நாவகாரியம்

**திருமங்கையாழ்வார்**
திருமொ. 7-1-3. தாரேன்
9-10-1-10. எங்களை
10-1-9. கம்பமா
பெ. தி. மடல். 125

## 43. திருமாலிருஞ்சோலைமலை * 41

**பூதத்தாழ்வார்**
2. அந். 48. உணர்ந்தாய்
54. வெற்பென்று
**பேயாழ்வார்**
3. அந். 61. பண்டெல்லாம்
**நம்மாழ்வார்**
திருமொ. 2-10-1-11 கிளரொளி
3-1-1-11 முடிச்சோதி
3-2-1-11 முன்னீர்
10-7-1-11 செஞ்சொல்
10-8-1 திருமாலிருஞ்
10-8-6 திருப்பேர்
**பெரியாழ்வார்**
திருமொ. 1-6-8 உன்னையும்
3-4-5 சுற்றிநின்று
4-2-1-11 அலம்பா
4-3-1-11 உருப்பிணி
5-3-1-11 ஆக்கச்சுழலை
**ஆண்டாள்**
திருமொ. 4-1 தெள்ளியார்
10-8 மழையே
9-1-10 சிந்துரம்
**திருமங்கையாழ்வார்**
திருமொ. 2-7-7 உளங்கனிந்து
7-3-6 எட்டனை
7-9-7 சேயோங்கு
9-2-8 மஞ்சுயர்
9-8-1-10 முந்துற
9-9-1-10 மூவரில்
10-1-8 பத்தராவி
11-2-8 மஞ்சுறு
11-7-9 தேனொடு
திரு. கு. தா. 3. பாயிரும்
சி. தி. மடல். 74, சீராருமாலி
பெ. தி. மடல். 125. மன்னனை

## 44. திருக்கூடல் தென்மதுரை * 47

**திருமழிசையாழ்வார்**
4. அந் 39. அழைப்பன்
**குலசேகராழ்வார்**
பெ. தி மொ. 2-10. அல்லிமாமலர்
**திருமங்கையாழ்வார்**
திருமொ. 9-2-5 கோழியுங்கூட

## 45. திருமோகூர் * 46

**நம்மாழ்வார்**
திருமா. 10-1-1-11 தாளதாமரை
**திருமங்கையாழ்வார்**
சி. தி. மடல். 74. சீராரும்

## 46. திருப்புல்லாணி * 44

**திருமங்கையாழ்வார்**
திருமொ. 9-3-1-10 தன்னை
9-4-1-10 காவார்
பெ. தி. மடல். 131 மன்னுமறை

## 47. ஸ்ரீவில்லிபுத்தூர் * 48

**பெரியாழ்வார்**
திருமொ. 2-2-6 மின்னனைய
**ஆண்டாள்**
திருமொ. 5-5 மென்னடை

## 48. திருத்தண்காலூர் * 45

**பூதத்தாழ்வார்**
2. அந். 70. தமருள்ளம்
**நம்மாழ்வார்**
திருமொ. 7-4-1-11 ஆழியெழ
**திருமழிசையாழ்வார்**
திருமொ. 5-6-2 பேராளை
திரு. நெ. தா. 17. பொங்கார்
சி. தி. மடல் 71. பேராலி
பெ. தி. மடல் 120, சென்னி

## 49. ஸ்ரீ வைகுண்டம் * 54

**நம்மாழ்வார்**
திருமொ. 9. 2. 4. புளிங்குடி

## 50. திருப்புளிங்குடி * 52

**நம்மாழ்வார்**
திருமொ. 8-3-5 கொடியார்
9-2-1-11 பண்டைநாளா
**ஆண்டாள்.**
திருமொ. 6. 7. வாய்நல்லார்
10. 7. கடமாடி



## 51. திருவரகுணமங்கை * 55

**நம்மாழ்வார்**
திருமொ. 9-2-4 புளிங்குடி

## 52. திருத்தொலைவில்லிமங்கலம் * 50

**நம்மாழ்வார்**
திருமொ. 6. 5. 1. 11. துவளில்லா

## 53. திருக்குளந்தை * 56

**நம்மாழ்வார்**
திருமொ. 8. 2. 4. கூடச்சென்

## 54. திருக்குருகூர் * 49

**நம்மாழ்வார்**
திருமொ. 4. 10. 1. 11. ஒன்றுந்தே

## 55. திருப்பேருரை * 53

**நம்மாழ்வார்**
திருமொ. 7. 3. 1. 11. வெள்ளைச்சுரி

## 56. திருக்கோளூர் * 58

**நம்மாழ்வார்**
திருமொ. 6. 7. 1. 11. உண்ணுஞ்
8. 3. 5. கொடியார்

## 57. ஸ்ரீவரமங்கை. * 51

**நம்மாழ்வார்**
திருமொ. 5. 7. 1. 11. நோற்றநோன்

## 58. திருக்குறுங்குடி * 57

**திருமழிசையாழ்வார்**
திரு. ச. வி. 62 காண்ட
**நம்மாழ்வார்**
திருமொ. 1-10-9 நம்பியை
3-9-2 உளனுக
5-5-1-11 எங்ஙனே
**பெரியாழ்வார்**
திருமொ. 1. 6. 8. உன்னை
**திருமங்கையாழ்வார்**
திருமொ. 1-6-8 எவினுர்
5-6-2 பேராளை
6-3-3 மானேய்
9-5-1-10 தவளவிளம்
9-6-1-10 அக்கும்புலி
திரு. நெ. தா. 14. முளைக்கதிரை
பெ. தி. மடல் 114. பொன்னி

## மலைநாட்டுத் திருப்பதிகள்.

## 59. திருவண்பரிசாரம் * 60

**நம்மாழ்வார்**
திருமொ. 8. 3. 7. வருவார்

## 60. திருவாட்டாறு. * 68

**நம்மாழ்வார்**
திருமொ. 10. 6. 1. 11. அருள்பெறு

## 61. திருவநந்தபுரம் * 59.

**நம்மாழ்வார்**
திருமொ. 10. 2. 1. 11. கெடுமிடரா

## 62. திருவல்லவாழ். * 66.

**நம்மாழ்வார்**
திருமொ. 5. 9. 1. 11. மானேய்
**திருமங்கையாழ்வார்**
திருமொ. 9. 7. 1. 10. தந்தைதாய்
பெ. தி. மடல் 118. மன்னும்

## 63. திருவண்வண்டூர் * 67

**நம்மாழ்வார்**
6. 1. 1. 11. வைகலபூங்க

## 64 திருக்காட்கரை. * 61

**நம்மாழ்வார்**
திருமொ. 9. 6. 1. 11. உருகுமால்

## 65. திருவாரன்விளை * 71

**நம்மாழ்வார்**
திருமொ. 7-10-1-11. இன்பம்

## 66. திருப்புலியூர் * 63

**நம்மாழ்வார்**
திருமொ. 8-9-1-11. கருமாணிக்க
**திருமங்கையாழ்வார்**
சி. தி. மடல். 71. பேராலி

67. திருக்கடித்தானம் * 70

நம்மாழ்வார்
தி. மொ. 8-6-1 11. எல்லியும்

---

68. திருச்செங்குன்றூர் * 64

நம்மாழ்வார்
தி. மொ. 8-4-1-11. வார்கடா

---

69. திருமூழிக்களம் * 62

நம்மாழ்வார்
தி. மொ. 9-7 1-11. எங்கானல்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 7-1-6. பனியே
தி. நெ. தா. 10. பொன்னாய்
பெ. தி. மடல். 129. என்னை

---

70. திருநாவாய் * 65

பொய்கையாழ்வார்
1. அந் 95. நாவாயி
நம்மாழ்வார்
தி. மொ. 9-8-1-11. அறுக்கும்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 6-8-8. தூவாய்
,, 10-1-9. சம்பமாகளி

---

71 திருவித்துவக்கோடு * 69

குலசேகராழ்வார்
பெ. தி. மொ 5-1-10. தருதுயரம்

---

## நடுநாட்டுத் திருப்பதிகள்.

72. திருவயிந்திரபுரம் * 72

திருமங்கையாழ்வார்
தி. மொ. 3-1-1-10. இருந்தண்

---

73. திருக்கோவலூர் * 73

பொய்கையாழ்வார்
1 அந். 86. நீயுந்திருமகளும்
பூதத்தாழ்வார்
2. அந். 70. தமருள்ளம்
பேயாழ்வார்
3, அந். 1. திருக்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-4-1. அன்றாயர்
,, 2-10-1-10. மஞ்சாடு
,, 5-6-7. சிந்தனையை
,, 7-3-2. தாய் நினைந்த
தி. நெ. தா. 6. அலம்புரிந்த
,, 7. வற்புடைய
,, 17. பொங்கார்
சி. தி. மடல். 69. காரார் திரு
பெ. தி. மடல். 122. முன்னி வுலகு

---

## தொண்டைநாட்டுத் திருப்பதிகள்.

74. திருவிடவெந்தை * 92

திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-8-2. பள்ளியாவ
,, 1-8-4. பார்த்தற்கு
,, 2-7-1-10. திவளும்
சி. தி. மடல். 73. வாரார்
பெ. தி. மடல். என்மனத்து

---

75. திருக்கடல்மல்லை * 93

பூதத்தாழ்வார்
2. அந். 70. தமருள்ளம்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-5-1-10. பாராய
2-6-1-10. நண்ணாத
3-5-8. சங்கு
7-1-4. புள்வாய்
தி. கு. தா. 19. பிண்டியார்
தி. நெ. தா. 9. வங்கத்தால்
சி. தி. மடல் 73. காரார்குடந்தை
பெ. தி. மடல் 120. மன்னும்

---

76. திருநீர்மலை * 91

பூதத்தாழ்வார்
2. அந். 46. பயின்றதரங்கம்
திருமங்கையாழ்வார்.
தி. மொ. 2-4-1-10. அன்றாயர்
2-7-8. அலங்கெழு
6-8-4. ஓடாவரி
7-1-7. கதியேயில்
8-2-3. அருவிசேர்
10-1-1 ஒருநற்சுற்றம்
தி. நெ. தா. 18. கார்வண்ணம்
சி. தி. மடல் 73. வாரார்
பெ. தி. மடல் 130. நீர்மலை
ஆண்டாள் திருப்பாவை. 11. கற்று



77. திருவல்லிக்கேணி * 94

பேயாழ்வார்
3. அந். 16. வந்துதைத்த
திருமழிசையாழ்வார்
4. அந். 35. தாளாலுலகம்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-3-1-10. விற்பெரு

---

78. திருநின்றவூர் * 89

திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-5-2. பூண்டவத்தம்
7-10-1. பெரும்புற
7-10-5. ஏற்றினை
10-1-8. பத்தராவி

---

79. திருவெவ்வுள் * 90

திருமழிசையாழ்வார்
4. அந். 36. நாகத்தணை
திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-2-1-10. காசையாடை
பெ. தி. மடல் 116. என்னுடைய

---

80. திருக்கச்சி * 74

பூதத்தாழ்வார்
2. அந். 96. அத்தியூரான்

80. உள்ளுவாருள்ளம் * 74

பொய்கையாழ்வார்
1. அந். 99. உளன்கண்டாய்
பேயாழ்வார்
3. அந். 26. சிறந்த
திருமங்கையாழ்வார்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்

---

81. திருத்தண்கா * 76

திருமங்கையாழ்வார்
தி. மொ. 7-10-9. மண்ணினை
10-1-2. பொன்னை
10-1-4. துளக்க
தி. நெ. தா. 14. முளைக்கதிரை

---

82. திரு அட்டபுயகரம் * 75

பேயாழ்வார்
3 அந். 99. தொட்டபடை
திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-8-1-10. திரிபுரம்
பெ. தி. மடல். 128. மன்னிய

83. திருவெஃகா. * 82

பொய்கையாழ்வார்
1. அந். 77. வேங்கடமும்
பேயாழ்வார்
3. அந். 26. சிறந்தவென்
,, 62. விண்ணகரம்
,, 64. இசைந்த
,, 26. பொருப்பிடை
திருமழிசையாழ்வார்
4. அந். 36. நாகத்தணை
திரு. ச. வி 63. நன்றிருந்து
64. நின்ற தெந்தை
நம்மாழ்வார்
திருவிருத்தம். 26. நானிலம்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 10-1-7. கூந்தலார்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்
13. கல்லெடுத்து
14. முளைக்கதிரை
சி. தி. மடல். 70. ஊரே மதிள்
பெ. தி. மடல். 127. மன்னுமதில்

---

84. திருப்பாடகம் * 78

பூதத்தாழ்வார்
2. அந் 94. உற்றுவணங்கி
பேயாழ்வார்
3. அந். 30. சேர்ந்த
திருமழிசையாழ்வார்
திரு. ச. வி. 63. நன்றிருந்து
64. நின்றதெந்தை
திருமங்கையாழ்வார்
தி. மொ. 6-10-4. கல்லார்மதில்
பெ. தி. மடல். 127. மன்னுமதில்

---

85. திருப்பரமேஸ்வர விண்ணகரம் * 87

திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-9-1,10. சொல்லுவன்

---

86. திருப்பவளவண்ணம் * 86

திருமங்கையாழ்வார்
தி. நெ. தா. 9. வங்க
பெ. தி. மடல். 114. செம்பன்ன.

### 86. மரதகம். * 86

திருமங்கையாழ்வார்
திரு. மொ 5-6-1. கைம்மானம்.
தி. கு. தா. 10. சித்தமும்
தி. நெ. தா. 14. முளைக்கதிரை
பெ. தி. மடல். 117. கல்லறை

---

### 87. திருவேளுக்கை. 77

பேயாழ்வார்
3. அந். 26. சிறந்த
34. அன்றில்
62. விண்ணகரம்
திருமங்கையாழ்வார்
பெ. தி. மடல். 127. மன்னுமதி

---

### 88. திருக்கள்வனூர் * 85

திருமங்கையாழ்வார்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்

---

### 89. திருஊரகம். * 81

திருமழிசையாழ்வார்
திரு. ச. வி. 63. நன்றிருந்து
64. நின்றதெந்தை
பொய்கையாழ்வார்
1. அந். 14. அவரவர்
ஆண்டாள்
திருப்பாவை. 3. ஓங்கி
17. அம்பரம்
திருமங்கையாழ்வார்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்
13. கல்லெடுத்து
சி. தி. மடல். 70. ஊரேமதிட்
பெ. தி. மடல். 128. ஊரகத்து

---

### 90. திருக்காரகம். * 83

திருமங்கையாழ்வார்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்

---

### 91. திருநீரகம். 79

திருமங்கையாழ்வார்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்

---

### 92. திருநிலத் திங்கள்துண்டம் * 80

திருமங்கையாழ்வார்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்

---

### 93. திருக்கார்வானம். * 84

திருமங்கையாழ்வார்
தி. மொ. 7-1-4. புள்வாய்
தி. நெ. தா. 8. நீரகத்தாய்

---

### 94. திருப்புட்குழி * 88

திருமங்கையாழ்வார்
தி. மொ. 2-7-8 அலங்கெழு
பெ. தி. மடல் 117 மின்னை

---

### 95. திருக்கடிகை * 95

பேயாழ்வார்
3 அந். 61 பண்டெல்லாம்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 8-9-4 மிக்கானை
சி. தி. மடல் 73 காரார்குடந்தை

---

## வடநாட்டுத் திருப்பதிகள்

---

### 96. கீழ்திருப்பதி * 96

### 96. திருவேங்கடம் (திருமலை) * 96

பொய்கையாழ்வார்
1. அந். 26 எழுவார்
37 வகை
38 ஊரும்
39 இடந்தது
40 பெருவில்
68 உணர்வார்
76 வழிநின்று
77 வேங்கடமும்
82 படையாரும்
99 உளன்கண்டாய்
பூதத்தாழ்வார்
2. அந். 25 சென்றதிலங்கை
28 மனத்துள்ளான்
33 துணிந்தது
45 உளதென்று
46 பயின்றதரங்கம்
53 நெறியார்
54 வெற்பென்
72 போதறிந்து
75 பெருகுமத



பேயாழ்வார்
3. அந். 14 மாற்பால்
26 சிறந்த
30 சேர்ந்த
32 பாற்கடலும்
39 இறையாய்
40 உளன்கண்டாய்
45 புரிந்துமத
58 தெளிந்த
61 பண்டெல்லாம்
63 தாழ்சடையும்
68 பார்த்த
73 இடம்வலம்
75 சார்ந்தது
89 முடிந்த
திருமழிசையாழ்வார்
திரு. ச. வி. 60 செழுங்
81 கடைந்த
4. அந். 34 குறிப்பெனக்கு
39 அழைப்பன்
46 வைப்பன்
47 நன்மணி
48 வேங்கடமே
90 வீற்றிருந்து
நம்மாழ்வார்
திருவிருத்தம் 8 காண்கின்ற
10 மாயோன்
15 கயலோனும்
31 இசைமின்
50 ஒன்றுதல்
60 மூலையோ
67 காவியுநிலை
81 உறுகின்ற
தி. மொ. 1-8-3 கண்ணை
2-6-9 எந்தாய்
2-6-10 போகின்ற
2-7-11 பற்பநாபன்
3-3-1-11 ஒழிவில்
3-5-8 வார்புனல்
3-9-1 சொன்னல்
4-5-11 மாரிமாறா
6-6-11 கட்டெழிற்
6-9-5 வீண்மீது
6-10-1-11 உலகமுண்ட
8-2-1 நங்கள்வரி
9-3-8 இன்றிப்போ
10-5-6 மேயான்
10-7-8 திருமாலிருஞ்
குலசேகராழ்வார்
பெ. தி. மொ. 4-1-11 ஊனேறு
பேயாழ்வார்
தி. மொ. 1-5-3 சுற்றுமொளி
1-9-8 என்னித்து
2-6-9 தென்னிலங்கை
2-7-3 மச்சொடு
2-9-6 போதர்
3-3-4 கடியார்
5-4-1. சென்னியோங்கு
ஆண்டாள்.
தி. மொ. 1-1 தையொரு
1-3 மத்தநன்
4-2 காட்டில்
5-2 வெள்ளை
8-1-10 வீண்ணீல
10-5 பாடுங்குயில்
10-8 மழையே
திருப்பாணாழ்வார். (அமலனாதி)
1. அமலனாதிப்பிரான்
3. மந்திபாய்
திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-8-1-10 கொங்கு
1-9-1-10 தாயே தந்தை
1-10-1-10 கண்ணார்
2-1-1-10 வானவர்
4-3-8 அன்றிய
4-7-5 வேடார்
5-3-4 வாம்பரியுக
5-5-1 வெருவாதாள்
5-6-7 இந்தளை
6-8-1 மான்கொண்ட
7-1-5 தாரேன்
7-3-5 ஆங்கு
7-10-3 எங்களுக்கு
9-2-3 அருவிசோர்
9-7-4 பண்ணுலா
9-9-9 வலம்புரி
10-1-2 பொன்னை
10-10-5 சொல்லாய்
11-3-7 கண்ணன்
11-5-10 கள்ளத்தான்
11-7-1 நீணகம்

தி. கு. தா. 7. இம்மையே
தி. நெ. தா. 8 நீரகத்தாய்
9 வங்கத்தால்
16 கன்றுமேய்த்து
சி. தி. மடல் 69 காரார்
பெ. தி. மடல் 6. தென்னனுயர்
105. மன்னும்
113 மின்னிடை
124. மின்னிமழை

97. திருச்சிங்கவேழ்குன்றம் * 97
திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-7-1-10-அங்கண்

98. திருச்சாளக்கிராமம். * 100
பெரியாழ்வார்
தி. மொ. 2-9-5 பாலே.
4-7-9 வடதிசை
திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-5-1-10. கலையும்

99. திருவயோத்தி. * 98
நம்மாழ்வார்
தி. மொ. 7-5-1 கற்பார்
குலசேகராழ்வார்
பெ. தி. மொ. 8-1-11 மன்னுபுகழ்
9-1-11 வன்றாளினை
10-1-11 அங்கணெடு
பெரியாழ்வார்
தி. மொ. 3-9-8 தார்க்கிளம்
3-9-10 காரார்கடலை
3-10-4 வாரணிந்த
3-10-8 மைத்தகு
4-7-9 வடதிசை
ஆண்டாள்
திருப்பாவை 12. கனைத்தி
தொண்டரடிப்பொடியாழ்வார்
திருப்பள்ளியெழுச்சி 4. மோட்டிள
திருமங்கையாழ்வார்
தி. மொ. 10-2-1-10-இரக்கமின்றி
10-3-1-10 ஏத்துகின்

100. திருநைமிசாரண்யம். * 99
திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-6-1-10 வாணிலா

101. வடமதுரை. * 105
நம்மாழ்வார்
தி. மொ. 8-5-9 இதுவோ
9-1-3-11 பொருள்
பெரியாழ்வார்
திருப்பல்லாண்டு 9 எந்நாளெம்
தி. மொ. 3-6-3 வானிளவர
4-7-9 வடதிசை
4-10-8 நானேது
ஆண்டாள்
திருப்பாவை 5 மாயனைமன்னு
தி. மொ. 4-5 மாடமாளிகை
4-6 கற்றவன்
7-3 தடவரை
1-2-1 மற்றிருந்தின்
12-8 கற்றின
13-8 உள்ளே
திருமங்கையாழ்வார்
தி. மொ. 6-7-5 வில்லார்
9-9-6 நேசமிலாத
சி. தி. மடல் 74 சீராருமாலிரு

102. ஆயர்பாடி * 106
குலசேகராழ்வார்
பெ. தி மொ. 1-4. மாவினை
பெரியாழ்வார்
தி. மொ. 1-2-2. ஓடுவார்
2-2-5. தீயபுந்தி
2-3-7. மூலையேதும்
3-4.10. விண்ணின்
3-6-7. புவியுள்
ஆண்டாள்
திருப்பாவை 5. மாயனை
தி. மொ. 12-2. நாணியினி
13-4. ஆரேயுல
13-10. அல்லல்
14-2. அனுங்க
திருமங்கையாழ்வார்
தி. மொ. 5-5-5. பூண்முலை
5-9-8. அம்பொனூர்
11-5-2. தந்தை
11-5-3. ஆழ்கடல்
11-5-4. அறியாதார்



103. திருக்கங்கைக்கரைக் கண்டம் * 102
பெரியாழ்வார்
தி. மொ. 4-7-1-10. தங்கையை

104. திருப்பிரதி * 103
திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-2-1-10. வாலிமாவலம்
7-1-6. பனிபேய்

105 வதரியாச்சிரமம் * 101
பெரியாழ்வார்
தி. மொ. 4-7-9. வடதிசை
திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-3-1-10. முற்ற
1-4-1-10. ஏனமுனாகி
சி. தி. மடல். 74. பாரோர் புகழும்

106. துவாரகை.* 104
நம்மாழ்வார்
தி. மொ. 5-3-6. அன்னை
பெரியாழ்வார்
தி. மொ. 3-5-1-10. அட்டுக்குவி
4-7-9. வடதிசை
4-9-4. பதினாரா
5-4-10. தடவரை
ஆண்டாள்
தி. மொ. 1-4. தவரிற்புராண
4-8. ஆவலன்பு
12-9. கூட்டிலிருந்து
திருமங்கையாழ்வார்
தி. மொ. 6-6-7. முலைத்தடம்
6-8-7. கட்டேறு

107. திருப்பாற்கடல் * 107
பொய்கையாழ்வார்
1. அந். 10. பழுதே
25. உரைமேல்
பூதத்தாழ்வார்
2. அந். 3. பரிசுநறு
28.. மனத்துள்ளான்
பேயாழ்வார்
3. அந். 32. பாற்கடலும்
61. பண்டெல்லாம்

திருமழிசையாழ்வார்
திரு. ச. வி. 14. தாய்மை
22. பண்டு
23. வானிறத்தோர்
65. நிற்பதும்
81. கடைந்த
93. சுரும்பரங்கு
95. அடக்க
4. அந். 3. பாலில்
நம்மாழ்வார்
திருவிருத்தம் 75. உலாகி
79. வேதனை
பெரியதிருவந்தாதி. 7-7. உரைக்கில்
தி. மொ. 1-4-10. கடலாழி
1-5-4. தானே
1-9-2. சூழல்
3-7-1. பயிலுஞ்
10-7-8. திருமாலிரு
குலசேகராழ்வார்
பெ. தி. மொ 2-8. மாலையுற்ற
4-4. ஒண்பலன்
பெரியாழ்வார்
தி. மொ. 2-6-6. ஆலத்திலை
3-3-7. பன்றியும்
4-10-5. பையரவின்
5-4-9. பனிக்கடலுட்
ஆண்டாள்
திருப்பாவை. 2. வையத்து
தி. மொ. 1-9. தொழுது
2-3. குண்டு
2-7. பேதநன்கறி
2-8. வட்டவாய்
5-7 பொங்கிய
5-11. விண்ணுர
7-5. உன்னோடு
7-8. உண்பது
தொண்டரடிப்பொடியாழ்வார்
திருமாலை. 18. இனிதிரை
திருமங்கையாழ்வார்
தி. மொ. 1-6-6. கோடிய
1-6-9. ஊனிடை
1-8-2. பள்ளியாவது
5-6-1. கைம்மானம்
7-1-3. தாரேன்

7-3.7. பண்ணினின்
7-10-2. மெய்ந்நலம்
8-2-4. [illegible]ண்ணும்
9-9.1. மூவரில்
தி. நெ. தா. 9. வங்கத்தால்
15. கல்லுயர்ந்த

---

## திருநாடு.

### 108. பரமபதம். * 108

**பொய்கையாழ்வார்**

1. அந். 68. உணர்வார்

**பேயாழ்வார்**

3. அந். 61. பண்டெல்லாம்

**திருமழிசையாழ்வார்**

திரு. ச. வி. 45 மண்ணை

**நம்மாழ்வார்**

திருவிருத்தம். 75. உலாகின்ற
தி. மொ. 1-5-4 தானொரு
7-9-7 வைகுண்டநாதன்
9-2-8 எங்கள்
10-7-8 திருமாலிரு
10-9-1-11 சூழ்விசும்பு

**பெரியாழ்வார்**

தி. மொ. 3-6-3 வானிளவரசு
4-7-9 வடதிசை
5-4-10 தடவரை

**ஆண்டாள்**

திருப்பாவை 9 தூமணிமாடத்து

**திருப்பாணாழ்வார்**

1. அமலனாதிப்பிரான்

**திருமங்கையாழ்வார்**

தி. கு. தா. 11. தொண்டெல்லாம்

ஸ்ரீ விஷ்ணுஸ்தல யாத்ராமார்க்க விவரணம்

முற்றிற்று.

PRINTED AT THE GUARDIAN PRESS, SECOND LINE BEACH, MADRAS.

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 9. | திரிச்சிராப்பள்ளி. 1914ம்௵ அக்டோபர் மீ | சஞ்சிகை 4.

## மனோகரமான குறிப்புகள்.

நமது தேசத்தில் பொதுநலப்பிரியம் அருமையாயிருப்பதால், பொதுவாழ்க்கை பலப்படவில்லை. பொதுநலப்பிரியத்துக்குத் தன்னலமறுப்பு அவசியம். பொது ஜனங்களின் நன்மைக்காக ஒருவன் தன்னுடைய நன்மையையும் சௌகரியத்தையும் இழக்கத் தயாராயிருக்கவேண்டும். தன்னுடைய அபிப்பிராயத்தைத் தன்னைவிடப் பெரியோரின் அபிப்பிராயத்திற்குத் தாழ்ந்ததாய் நினைக்கவேண்டும். யார் நமக்குத் தலைவர்களோ, யார் நம்மைவிடத் தெரிந்தவர்களென்று நினைக்கிறோமோ, அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பின்பற்றி நடப்பது அவசியம். ஆரம்பத்தில் தவறுதல்கள் நேரிட்டாலும், பின் பெறும் நன்மைகளுக்கு அது காரணமாகும்.

பொது வாழ்க்கை என்பது நமது தேசத்தில் இதுவரையும் இல்லாத புதுக்கருத்து. பொதுநலத்தில் விருப்பங்கொண்டு ஜனங்களின் நன்மைக்காக உழைப்பது பொதுவாழ்க்கை. பொதுவாழ்க்கைக்குப் பலர் சேர்ந்து உழைததல் அவசியம். ஜனங்களுக்குள் ஒருவன் தனியே நன்மை செய்தால் அது பொதுவாழ்க்கையாகாது. உதாரணமாக, ஒருவன் ஆலயம் நிர்மாணித்தாலும், அன்னசத்திரம் ஸ்தாபித்தாலும், அது பொதுநன்மையாகுமே யொழிய பொதுவாழ்க்கையாகாது.

தன் கடமையைச் செய்யும் வேலைக்காரன் நம்மைக்கண்டு எழுந்திருக்காதது பிசகல்ல. அதற்காக நாம் அவனிடங் கோபங்கொள்வது அறியாமையே. முன்னொரு சமயம் ஒரு பிரபுவினிடம் மாட்டுக்காரப்பையனொருவன் பசுங்கன்றின் கழுத்தில் கயிற்றைக்கட்டி இரண்டு கையாலும் இழுத்தான். அதனைக்கண்ட எஜமானர் என் தனக்குக் கும்பிடு போடவில்லையென்றார். அதற்கு அச்சிறுவன் இந்தக் கன்றை நீங்கள் பிடித்துக்கொண்டால் தங்களையும் உயரத்தூக்கி கூப்பிக் கும்பிடுபோடுவதில் ஆக்ஷேபமில்லையென்றான். இது சரிதான் என்று பிரபுவின் மனதிற்பட்டது.

சந்திரோதயத்தைப் பொட்டைக்கண்ணன் அறிவானா? முல்லை மல்லிகை வாஸனையை மூக்கறையன் அறியமாட்டான். அறுசுவையுண்டியை

ப் பசியற்றவன் புசியான். அதுபோல் பத்திரிகையைப் படியாதவர்கள் அதிற் பிரியம் கொள்ளாதிருப்பது ஆச்சரியமன்று.

**நமது** நாட்டில் பணக்காரராயிருப்போர் தந்தை தேடிய பொருளைத் தாராளமாய்ச் செலவு செய்கின்றனர். ஹிந்து சாஸ்திரப்படி ஒருவன் ஸம்பாதிக்கும் பொருள் அவனுடைய ஸந்ததியார்க்கெல்லாம் உபயோகப்பட வேண்டியதாதலின், அதைக்காப்பாற்றாமல் தான் ஒருவனே அழித்துத் தன் மக்களைக் கஞ்சிக்கு அழும்படி விடும் பேதை பெரும் பாதகனன்றோ?

**சிலர் தூங்குங்கால்** வாயைத் திறந்தவண்ணமா யிருக்கின்றனர். இதனால் மூக்கின் வேலைக்குக்குறைவு. இரத்தத்திற்கு வேண்டிய சுத்தமான காற்றில் பாதிதான் உள்ளே பிரவேசிக்கும். சிலர் நாக்கினால் அடிக்கடி உதட்டைத்தடவிக் கொள்வதுண்டு. இது கெட்ட ஸம்பிரதாயங்களில் ஒன்று. யாதொருகாரணமுமின்றி இருமுவதும் தும்முவதும் சிலருக்கு இயல்பு. சில சங்கீத வித்வான்கள் பாடும்போது கண்களை மூடிக்கொள்வர். அப்போது வெளிப்படுகிற பலவித அங்க சேஷ்டைகளையும் பார்த்தால் வெகு விகாரமாய்த் தோன்றும்; இவற்றை நீக்குவது நன்மையாகும்.

**தான் பிடித்த** முயலுக்கு மூன்றே கால் என்று ஸாதிக்கும் மனிதன், தன்னிலும் புத்தியிலுயர்ந்தவன் சொல்லும் வார்த்தையை அங்கீகரியான். அவனுக்குப் பிறருடைய அபிப்பிராயமெல்லாம் பிசகாய்த்தோன்றும். தான் கூறுவது அறிவீனமென்பதை ஒருபோதும் ஒப்புக்கொள்ளான். இதற்குக் காரணம் பிடிவாதம் என்னும் பிசாசு அவனைப்பிடித்திருப்பதேயன்றி வேறில்லை.

**மணப்பறை, பிணப்பறை** என்று இரண்டுவித வாத்தியங்களுண்டு. மணப்பறையின் ஒலி மங்களகரம். இதைப்போல் புத்திசாலிகளின் சம்பாஷணை மனோக்ஞமாயும் புத்திஹீனர்களின் பேச்சு வெறுப்பாயும் இருக்கின்றன. பத்திரிகையில் நல் விஷயங்களை எழுதுவது மணப்பறை போலும், துர்விஷயங்களை வரைவது பிணப்பறைபோலும் உள்ளன.

**போஸ்டாபீஸில்** கடிதம் போடுவதும், அரை ரூபா கோர்ட்டு ஸ்டாம்பு ஒட்டி மாஜிஸ்திரேட்டினிடம் பிராது கொடுப்பதும், பணம் செலவழித்துக் கோர்ட்டில் பிராது தாக்கல் செய்வதும் சுலபமான காரியங்கள். அந்த அநாமதேயக் கடிதங்களும் அவ்வியாஜ்ஜியங்களும் ஜெயிக்குமாவென்றாலோசிப்பதே புத்திசாலித்தனம்.

**கற்பு என்பது** பதியின் சொற்படி கேட்பதென்றே பொருள்படும். எஜமானிடம் பக்தியுள்ள வேலைக்காரன் அவன் சொல்வதைப்போல் நடக்கிறான். ஈசுவரனிடம் பிரீதியுள்ள பக்தன் அவருடைய விதிக்கு மாறாக நடவாமல் நல்வழியைப்பற்றுகிறான். இம்மாதிரியே புருஷன் இஷ்டப்படி நடக்கும் ஸ்திரீயே பதிவிரதையாவள். பர்த்தாவின்மீது உண்மையான பிரேமை



யிருந்தாலன்றி அவன் கட்டளைப்படி நடக்கும் தன்மை அமையாது. ஆரம்பத்தில் ஹிந்துப் பெண்கட்குப் பதியினிடம் பீதியும், பின்னர் பிரீதியும் ஜனிக்கின்றன. கல்யாணமென்பது புருஷன் இல்லறத்தை நடத்துவதற்காக ஒரு ஸ்திரீயை உதவியாய்க்கொள்ளவேண்டி அவளுடன் செய்யும் உடன்படிக்கையேயாம். இது ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமாய் ஆசரிக்கப்படுகிறது.

**பிரம்ம ஸமாஜிகள்** ஹிந்துக்களா அல்லரா என்ற கேள்வியுண்டாகாமலே ஒரு ஸ்வீகார கேஸ் கல்கத்தா ஹைகோர்ட்டில் தீர்மானமாயிற்று. மிஸ்டர் ஜட்ஜிஸ் ஸேல் ஒரு பிரம்மசமாஜி செய்துகொண்ட ஸ்வீகாரம் சட்டப்படி ஒப்புக்கொள்ள கூடியதென்று தீர்மானித்தார். இதற்கு ஆதாரமாக பிரம்ம ஸமாஜிகள் பிராயச்சித்தம் செய்துகொண்டு மறுபடி ஹிந்துக்களாகலாமென்றும் இப்போது ஸ்வீகாரம் செய்துக்கொள்ளப்பட்ட சிறுவன், மறுபடி ஹிந்து மதத்தில் சேரலாமென்றும் பிரஸ்தாபித்தார். இதை வாதியின் வக்கீல் ஆக்ஷேபிக்கவில்லை. பிரம்ம சமாஜம் ஹிந்து மதத்தின் ஓர் பிரிவேயன்றி வேறல்ல.

**போன ஜன்மத்தில்** இன்ன இடத்திலிருந்தோம்—இன்ன நிலையிலிருந்தோமென்பதை நாம் தலைகீழாய் விழுந்தாலும் அறியமுடியாது. இனி ஜன்மமுண்டென்பதையும், இன்னிலைமையிலிருப்போமென்பதையும் நாம் எவ்விதத்திலும் தெரிந்துகொள்ள இயலா. ஆகவே நாம் செய்யவேண்டிய கடமைகளை மனப்பூர்வமாய்ச் செய்யக்கடவோம். மனிதன் நக்ஷத்திரத்தைப் போலும், புஷ்பத்தைப்போலும், பக்ஷியைப்போலும் இருக்கிறான். நக்ஷத்திரத்திற்கு ஒளி உண்டான விதமும், புஷ்பத்திற்கு வாஸனை உண்டான விதமும், பக்ஷிக்குப் பறக்கும் சக்தி அமைந்த விதமும் எப்படி அறியமுடியாதவையாய் இருக்கின்றனவோ, அப்படியே மனுஷ்யனுடைய எதிர்கால நிலைமையை இப்படியிருக்குமென்று அறியமுடியாது. ஆனதால் நமக்கு இருக்கும் அவகாசத்தை வியர்த்தமாக்காமல் நற்காரியங்களையே செய்து திருப்தியடைவோம். இனி உண்டாகும் பலனைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்.

**நமது கிருக கிருத்தியங்கள்** பிறருக்குத் தெரியாதிருக்கும்வரை நமது கௌரவமும் கண்யமும் கெடா. யாரிடமேனும் தெரிவித்துவிடினோ அது நாற்றிசையும் வியாபித்து இறுதியில் அநேகருடைய பகைமைக்கும் அலக்ஷியத்துக்கும் காரணமாகும்.

**நீங்கள் எந்த வயதிலே** விவாகம் நடத்தினாலும் சரி, உங்களிஷ்டம். மூன்று வயது முதலாகவே பெண்குழந்தை காதில் ''கல்யாணம், மாப்பிள்ளை, ருதுசாந்தி, மாமியார், நாத்தனார், மச்சினன், பிரசவம்'' என்ற மந்திரங்களை ஓயாமல் ஓதிக்கொண்டு வருகிற ஆசரணையை விட்டுவிடக் கூடாதா? பெண்களுக்கு இரண்டு வயதிலேயே இதுதானா தொல்லை? விளையாட்டில்லையா? ஓடியாடித் திரிவது கிடையாதா? பாட்டில்லையா? படிப்பில்லையா? கணக்கில்லையா? வீட்டு வேலையில்லையா? ஓயாமல் விவாக சம்பந்தமான எண்ணங்களையே பெண் குழந்தையின் தலையில் ஏற்றுவதனால் ஸ்திரீ

கள் இளமையில் தானே கொஞ்சம் நெறிமறந்து விடும்படி நேரிடுகின்றது. பெண்களை மனுஷ்ய ஜாதியாக எண்ணி வளர்க்கும்படி தமிழ்நாட்டுக் கிருகஸ்தர்களிடம் விஞ்ஞாபனம் செய்து கொள்ளுகிறோம்.

ஞானத்தெளிவில்லாத ஆஸ்திகனாயிருப்பதைக் காட்டிலும் ஒருவன் நாஸ்திகனாயிருந்து சிரேஷ்டனாகலாம். ஆஸ்திகன் யாதொரு விசாரமும் சிரமுமில்லாமல் கடவுள் உண்டென்று யாரோ சொல்வதைத் தானும் சொல்வதேயொழிய கடவுளின் ஸ்வரூபம் இன்னதென்று தன் மனதாரத் தெரிந்துகொள்ள முயற்சியாதிருப்பானானால், அவனைக்காட்டிலும் கடவுள் இல்லையென்று தர்க்கமிட்டு கக்ஷிபேசியாவது கடவுளை உள்ளபடி விசாரித்தறியவேணுமென்று ஆவலுள்ள விசாரியான நாஸ்திகன் பலமடங்கு சிரேஷ்டமென்பது வியகதமல்லவா? "அறிவேனென்பர் அறியார்" "அறியேனென்பர் அறிவார்" என்னும் வாக்கியங்களின் தாத்பரியம் கவனிக்கத்தக்கது.

தெளிவான புத்தியே ஆத்ம ஸ்வரூபம். அதை அபிவிருத்திசெய்வதில் எப்போதும் கவலையுள்ளவனாயிருக்கவேண்டியது. மூடனைக்காட்டிலும் விவேகிக்கு துக்கானுபவம் குறைவென்பது பிரத்தியக்ஷமல்லவா? ஒரு காரியத்தில் தலைப்படுமுன்னே விவேகிக்கு அதைச்சார்ந்த அநேக விஷயங்கள் ஏககாலத்தில் தென்படும். மூடனுக்கோ இரண்டொன்று தென்பட்டு மற்றவை இருட்டாகும். தீர்க்கதிருஷ்டி விவேகத்தினால் உண்டாகிறதென்பது சகஜம்.

கடமையைக் கடமைக்காகவே செய்யவேண்டுமாம். ஒருவித பிரயோஜனத்தையும் கருதி எந்தக் கருமத்தையும் செய்யலாகாதாம். இப்படிச் செய்வது துர்லபமன்றோ? ஆனதால் ஈசுவரனுக்கு அர்ப்பணமாகக் காரியங்களைச் செய்யென்று ஆசாரியர் கூறுகிறார். அதற்கு அநுகூலமாக முதலில் உனக்கு வேண்டிய நண்பர்களுக்கும், மனைவி மக்களுக்கும் பிரதி பிரயோஜனம் நாடாது உழை யென்கிறார். இதில் மனம் செவ்வனே பயிற்சியுற்றதின் பின்னர் அதைக் கடவுள் மார்க்கத்தில் திருப்புவது எளிதாகும்.

அதிக ஜனங்களை நேசிப்பதும் அவர்களுடன் உறவாடுவதும் பெரிய தப்பிதம். நம்முடைய காலத்தைக் கொள்ளையடிக்க வரும் திருடர்கட்கு வாசற் கதவைத் திறந்து வைப்பதுபோலாம். பழக்கமுள்ளவர்கள் பலரிருந்தால், ஒவ்வொருவராய் உள்ளே நுழைந்து வீண் வார்த்தைகளையாடி நமக்கு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் விளைப்பர். ஆதலின் அறிமுகம்—நேசம் என்பதை நன்றாகப் பகுத்துக்கொண்டு அதற்கியன்றபடி உறவாடுகை நலம்.

பரிசுத்த ஜலம் பானத்துக்குபயோகம். அசுத்த ஜலம் கால் அலம்ப உதவும். சாக்கடை ஜலம் பார்ப்பதற்குக்கூட அஸங்கியமாயிருக்கும். அதன் அருகே சென்றால் துர்நாற்ற மடிக்கும். பாம்பை அடித்தாலும் சீறிக்கடிக்கும். அணைத்தாலும் கடித்துக்கொல்லும். அதுபோல் கெட்டவனுடைய ஸ்நேகமும் கெடுதலை விளைக்கும், பகையையும் விபத்தையும் உண்டாக்கும்.

# ஒரு உபாத்தியாயரும் வண்ணானும்.

முற்காலத்திலே வண்ணானொருவனிருந்தான். அவன் விசேஷ தனிகன்; ஆயினும் அவனுக்குப் பிள்ளையில்லை. அதனால் அவன் மிகவும் விசனப்பட்டுக்கொண்டிருந்தான். அப்படியிருக்க ஒருநாள் அவன் தன் கழுதையை ஓட்டிக்கொண்டு ஒரு பாடசாலையின் வழியாய்ப் போகையில், அங்கே அப்பாடசாலையின உபாத்தியாயர்களுள் ஒருவர் ஒரு மாணாக்கனிடத்தில் மிகக் கோபங்கொண்டு, அடே மடையா! உன்னை ஒரு மனிதனாக்குவதைப் பார்க்கிலும், "ஒரு கழுதையை மனிதனாக்குவது எளிது" என்று எனக்குத் தோன்றுகின்றது என்று சொல்லி அச்சிறுவனை அதட்டிக்கொண்டிருந்தார். அவ்வீதி வழியே போன வண்ணான் அதைக் கேட்டு ஆ! ஆ! இந்த உபாத்தியாயர் எவ்வளவு திறமை உடையவர்!' கழுதையை மனிதனாக்குவதாய்ச் சொல்லுகிறரே! அது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது! அப்படியானால், நமது கழுதைகளுள் ஒன்றை மனிதனாக்கி மகனாக வைத்துக்கொள்ளலாமே என்று இப்படி எண்ணிக்கொண்டே வேகமாய் வீட்டுக்குப் போனான்.

வீடு போய்ச் சேர்ந்ததும் தன் பெண்சாதியைப் பார்த்து, ஒரு ஆச்சரியம் கேட்டாயா! கழுதையை மனிதனாக்குவதாக அந்தப் பாடசாலை உபாத்தியாயர் சொல்லுகிறாரென, அவள் அப்படியா, அதைவிட அதிசயம் வேறென்ன! ஆனால் நமது கழுதைகளுள் ஒன்றை அவரிடம் கொண்டுபோய் அதை மனிதனாக்கிக் கொடுக்கச் சொல்வது நலமென்று தோன்றுகிறதென்றாள்.

அப்படியே அன்றைய தினம் மாலையில் வண்ணானும் வண்ணாத்தியும் ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டு அந்த உபாத்தியாயர் வீடு போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அந்த உபாத்தியாயரைக் கண்டு வண்ணான் ஐயா! ஒரு விண்ணப்பம் கேட்டுக்கொள்ளுகிறேன், மன்னிக்கவேண்டும். இன்று நான் தங்கள் பாடசாலைவழியாய்ப் போகையில், கழுதையைக்கூட மனிதனாக்கக் கூடுமென்று தாங்கள் சொல்லக் கேள்விப்பட்டேன்; என் கழுதையையும் ஒரு மனிதனாக்கிக் கொடுப்பீர்களா என்றான். அதைக் கேட்டு அவர் இவன் பித்தனா என்னவென்று சிறிதுநேரம் ஆலோசித்து,

கடைசியில் இவன் ஒன்றும் தெரியாத மூடனென்று அறிந்துகொண்டு இதுதான் நமக்கு நல்ல தருணமென்று நினைத்து, வண்ணானைப் பார்த்து, இதற்கென்ன வருத்தம்; சுகமாய்ச் செய்யலாம். ஆனால் உன் கழுதையை மட்டும் ஒரு வருஷகாலம் என்னிடத்தில் விட்டு வைக்கவேண்டும் சரியாய் ஒரு வருஷந்தான்! மறந்துபோகப் போகிறாய் என்றான்.

அதைக் கேட்டு மிகவும் ஸந்தோஷமாய் வண்ணான் கழுதையை அங்கேயே விட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பப் போனான். அது கண்டு உபாத்தியாயர், நில்! நில்! ஒரு பயனுமில்லாமல் இக்காரியம் செய்கிறதென்றால் என்னாலாகுமா? கழுதையை மனிதனாக்க எவ்வளவோ பாடுபட வேண்டுமே என, அதைக் கேட்டு வண்ணான் சிறிது முகக்களைமாறித் திரும்பப்பார்த்து, ஆனால் அதற்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்றான். அதைக்கேட்டு உபாத்தியாயர், கழுதை எப்படிப்பட்டதோ, அதைப் பார்த்துத்தான் இவ்வளவென்று சொல்லக்கூடும்; உங்கள் கழுதை எங்கே என்று கேட்க, வண்ணான் கழுதை கட்டியிருந்த இடத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுபோய் அதைக் காட்டினான். அவன் வெகு நுட்பமாய்ப் பார்ப்பதுபோல அந்தக் கழுதையை நன்றாய் நாற்புறமும் சுற்றிப் பார்த்து, ஓ! இந்தக் கழுதையை மனிதனாக மாற்றுவது மிகவும் கடினம், இதன் கால்களைப்பார்; இவற்றை மனிதன் காலாகச் செய்வதென்றால் சொற்பத்திலாகுமா? மூவ்வாயிரம் ரூபாய்க்குக் குறைந்தால் செய்யக் கூடாதென்றான். அதைக்கேட்டு வண்ணான் நீங்கள் கேட்பது மிகப் பெருந்தொகையல்லவா என, உபாத்தியாயன், உன் கழுதையின் கால்கள் இப்படியிருக்கின்றனவே, அதற்கு யார் என்ன செய்யலாமென்றான். அதன்மேல் ஒன்றுந் தோன்றாமல் வண்ணான் தன் பெண்சாதியைப் பார்த்து, அவ்வளவு பொருள் கொடுக்கலாமாவென்று கேட்க, அவள், பிள்ளையில்லாமல் பொருள் வைத்திருந்து ஆகவேண்டுவதென்ன? பிள்ளையில்லாத பாக்கியம் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்? கொடுக்கவேண்டியதுதானென்றாள். அப்படியே அந்த உபாத்தியாயனுக்கு மூவ்வாயிரம் கொடுத்துவிட்டு அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

வீட்டுக்குப் போனதுமுதல் அந்த வண்ணானுக்கும் வண்ணாத்திக்கும் வீட்டிலே வேறு சிந்தையில்லை. எப்போது ஒரு வருஷமாகப் போகிறது; எப்பொழுது மகன் வீட்டிற்கு வரப்போகிறானென்று எந்நேரமும் அதேசிந்தையாயிருந்தார்கள். அதனால் அவர்களுக்கு ஒருநாள் கழிவது ஒரு யுகமாயிருந்தது. மெல்லமெல்லப் பதினோருமாதம் கழிந்தது. நாளாகிவிட்டது; உபாத்தியாயனிடம் போகவேண்டுவதுதானென்று அவர்



கள் வெகு சந்தோஷமாயிருந்தார்கள். ஐயோ! அவர்களுடைய துரதிர்ஷ்டத்தால், அவர்கள் அவன் வீட்டுக்குப் போகவேண்டிய தினத்திற்கு இரண்டொருநாள் முன்னே வண்ணானுக்குப் பெருங்காய்ச்சல் உண்டாகிச் சிலநாள்வரையில் அவன் படுத்த படுக்கையாய்க் கிடக்கும்படி நேரிட்டது. அப்போது அவன் எப்படி உபாத்தியாயன் வீட்டுக்குப் போகமாட்டுவான்! இன்றைக்கு வருகிற பிள்ளை நாலுநாள் பொறுத்தால் ஓடிப்போகுமாவென்று காய்ச்சல் குணப்படுகிறவரையில் பொறுத்திருந்து கொஞ்சம் குணப்பட்டதும் அவ்வுபாத்தியாயனைக் காணும்படி வண்ணான் நேராய்ப் பாடசாலைக்குச் சென்றான்,

அங்கே போனவுடன் அவ்வுபாத்தியாயனைக்கண்டு, ஐயா, மகனெங்கே? எனக்கு உடம்பு அனுகூலமில்லாமலிருந்ததனால் தங்களிடம் வர இத்தனைநாள் தடைப்பட்டதென, அதற்கு உபாத்தியாயன், நீ சொன்னகாலத்திற்குச் சரியாய் வந்திருக்கவேண்டும்; காலந்தப்பிவந்தாயே! உன் கழுதை மூன்று மாதத்திற்கு முன்னமே மனிதனாகமாறி, இப்போது ஜோனபுரத்து நியாயாதிபதியாயிருக்கிறதென்றான். நடந்த வரலாறென்னவெனில், வண்ணான் கழுதையை விட்டுப்போன மறுநாளே உபாத்தியாயன் அதை விற்றுப்போட்டான். வண்ணான் அவ்வுபாத்தியாயனுடைய சூது தெரியாமல் ஏமாந்துபோனான்.

அப்போதும் அவன் சொல்வது உண்மைதானென்றெண்ணி வண்ணான், ஆனால் இனி நான் அவனை எப்படிப் பார்க்கிறதென்று கேட்க, உபாத்தியாயன், ஏன்? நீ அவ்விடம் போகக்கூடாதோவென்றான். அதற்கு வண்ணான், போவதற்கு யாதொரு தடையுமில்லை; அவன் நியாயாதிபதியாயிருக்கிறானே; அவனை எப்படிக் காண்கிறது; மேலும் நான் இன்னானென்பது எப்படித் தெரியுமென்று கொஞ்சம் வெறுப்பாய்ச் சொல்ல, நீ உன் கழுதையின் கடிவாளத்தையும் தண்ணீர்த்தொட்டியையும் கொண்டுபோய்க் காட்டினால், தானே அடையாளம் கண்டுபிடித்துக் கொள்கிறானென்றான்.

அவ்வுபாத்தியாயனுடைய பல கற்பனைகளுள்ளும் இந்தக் கற்பனை வெகு சாதுரியமானது. இன்னும் அவன் சூது வண்ணானுக்குத் தெரியவில்லை. ஒருவேளை இவ்வடையாளங்கள் அவனுக்குத் தெரிந்தாலும் தெரியலாமேயென்று வண்ணான் கொஞ்சம் சந்தோஷமாயே உபாத்தியாயனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போனான். அன்றையதினமெல்லாம் அவர்கள் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள்

செய்வதே வேலையாயிருந்தார்கள். மறுநாள் காலையில் அவர்கள் தங்கள் பழங்கழுதையின் ஜீனி, கடிவாளம், தொட்டி முதலானவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு பயணப்பட்டு, மெல்லமெல்ல ஜோனபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பட்டணம் போய்ச்சேர்ந்ததும் அங்கே அவர்கள் சிறிதுநேரம்கூடத் தாமதிக்கவில்லை. உடனே நியாயாதிபதி வீற்றிருக்கும் சபைக்குப் போனார்கள். அங்கே பலபேர்வந்து கூட்டங்கூடியிருந்தார்கள். அப்போது அந்த வண்ணானும் வண்ணாத்தியும் ஜீனி கடிவாளம் முதலியவைகளை வைத்துக்கொண்டு, நியாயாதிபதி அவற்றைப்பார்த்துத் தங்களைத் தெரிந்துகொள்ளட்டுமென்று, அவன் பார்வைக்கு நேரான ஒரு மூலையிலேபோய் நின்றார்கள்.

அப்போது சிறிதுநேரம் கழித்து நியாயாதிபதி தற்செயலாய், பலவித சமிக்ஞைகள் காட்டிக் கடிவாளத்தை ஆட்டிக்கொண்டு, ஒரு புரத்தில் வண்ணான் நிற்பதைக்கண்டு, இதென்னவென்று மிகவும் ஆச்சரியப்பட்டு ஒரு சேவகனை அழைத்து, அவனென்ன வேண்டுகிறான் கேளென்று சொன்னான்.

அப்படியே அந்தச் சேவகன் அவ்வண்ணானை அழைத்துவந்து நியாயாதிபதிக்குச் சமீபத்தில் நிறுத்த, அந்த அதிகாரி அவனைப்பார்த்து, என்ன விசேஷமென்று கேட்டான்.

அதற்கு அந்த வண்ணான், ரகசியத்தில் தங்களோடுபேசினால் நலமென்று தோன்றுகிறதென, அதிகாரி, அது கூடாது; எது சொல்லவேண்டுமென்றாலும் சபையிலேதான் சொல்லவேண்டுமென்றான்.

அதைக்கேட்டு வண்ணான், நான் இன்னானென்பது உனக்குத் தெரியாதா? என்ன! இவ்வளவு சீக்கிரத்தில் நீ என்னை மறந்துபோனாயா? முன்னே நான் உனக்கு யஜமானனல்லவா என்றான். முன் தன்னை அவன் அறிந்துகொண்டதாய் அதற்கேற்ற குறியொன்றும் அவன் முகத்தில் தோன்றாமலிருக்கவே, வண்ணானுக்கு அவனிடத்தில் கொஞ்சம் கோபமுண்டாயிற்று.

ஓ நற்குணமுள்ள பெரியோரே! உம்மை ஒருபோதும் கண்டதாய் எனக்கு நினைவு வரவில்லையே என்று நியாயாதிபதி சொல்ல, வண்ணான் மிகக் கோபங்கொண்டு, ஆ, நன்றிகெட்ட கழுதாய்! நீ எத்தனை வருஷகாலம் முதுகிலே மூட்டைசுமந்துகொண்டு எனக்குப் பணிவிடை செய்துவந்தாய்? நான் எவ்வளவு அன்பாய் இரைபோட்டு உன்னைக்



காப்பாற்றினேன்? அப்படியிருக்க நீ எல்லாவற்றையும் மறந்து என்னையே அறியமாட்டேனென்கிறாயே! என்று கண்களில் நெருப்புப் பொறி பறக்கப் பேசினான்.

அவன் பேசுவதைக் கேட்டு நியாயாதிபதி இது என்ன அதிசயமென்று மிகவும் பிரமைபிடித்து ஒன்றும் பதில் சொல்லத்தோன்றாமல், வண்ணான் வாயையே பார்த்துத் திகைத்துக்கொண்டு நின்றான்.

அப்போதும் வண்ணான் வாயை மூடவில்லை. என்னைத்தான் நீ மறந்துபோனாயே! உன் கடிவாளம் தொட்டி முதலியவைகளைக்கூட மறந்துபோனாயோ! இது நீயே தரித்துக்கொண்டிருந்ததுதான். இதோ எல்லாவற்றையும் செம்மையாய்ப் பார் என்று அவற்றையெல்லாம் தனித்தனியே எடுத்துக்காட்டிப் பின்னும் சொல்லுகிறான்.

எழுந்திரு, வீட்டுக்குப் போவோம் வா; ஒன்றும் தெரியாதென்று பாசாங்கு பண்ணுகிறாயோ! நீ என் கழுதையென்பது உனக்குத் தெரியாதா? நான் உன்னை உபாத்தியாயரிடத்திற்குக் கொண்டுபோய் உன்னை மனிதனாக்குவதற்காக அவருக்கு மூவாயிரம் ரூபாய் கொடுத்து உன்னை அங்கே விட்டுவந்தேனே! அதுகூட உனக்குத் தெரியாதா? ஆ, நன்றிகெட்ட கழுதாய்! உதைக்கிறேன் பார்! உனக்கெல்லாம் தெரியும்! என் வீணே பாசாங்கு செய்கிறாய்! மூன்று மாதத்திற்கு முன்னே நீ மனிதனாக மாறி, உடனே நியாயாதிபதியாய் இவ்விடத்திற்கு வந்துவிடவே, சிறிதும் நன்றியற்றவனாய், ஐயோ பாவமென்று உன் பழைய எஜமானனைச் சிறிதும் நினையாமல் உபேக்ஷை பண்ணுகிறாயா? இப்படி அநியாயம் செய்கிற நீ எப்படி நியாயாதிபதியாவாய் என்றிப்படிப் பலவிதமாய்ப் பேசிக் கடைசியில் தன் நிலை தனக்கே தெரியாமல் பலவிதமான சேஷ்டைகள் செய்ய ஆரம்பித்தான். ஐரோப்பியர்களுடைய சபையில் இப்படிப்பட்ட செய்தியொன்று நடக்குமானால், அதைக்கண்டு சபையார் நகைக்கிற நகைப்புக்கு மட்டுமிதமேயிராது. இது இந்துக்களுடைய சபையாதலால், அனைவரும் உள்ளுக்குள்ளேயே மகிழ்ந்துகொண்டிருந்தார்களேயொழிய ஒருவராவது வெளியே உரத்து மூச்சுவிடவில்லை. பெரியோர்களுடைய சபையில் சிரிப்பது, காறுவது, பொடிபோடுவது முதலிய கெட்டசெய்கைகள் கூடாதென்கிற ஏற்பாடு இந்துக்களுக்குள் இருப்பதுபோல் மற்ற ஜாதியாரிடத்தில் அவ்வளவாய்க் கிடையாது.

மேலும் வண்ணான் கதையைக் கேளுங்கள்: வண்ணான் சொல்வதையெல்லாம் நியாயாதிபதி பொறுத்துக் கேட்டுக்கொண்டிருந்து,

அவன் பேச்சு ஓய்ந்ததும், அவன் அப்படிப் பேசினதெல்லாம் தெரியாமையாலென்றும். யாரோ யுக்தி பண்ணி அப்படி அவனை மோசஞ்செய்தார்களென்றும் சாவதானமாக அவனுக்கு நன்றாய்த் தெரிவித்து, அவனுடைய மதிக்குறைவுக்காக மிகவும் பரிதாபப்பட்டு, விசேஷமாய்ப் பொருள் கொடுத்து அவனை அனுப்பினான்.

தாங்கள் அப்படி மோசம்போனதற்காக மிகவும் ரோஷமும் விசனமுமடைந்தவர்களாய், வண்ணானும் வண்ணாத்தியும் தங்கள் கிராமத்துக்குப்போகப் புறப்பட்டுச் சிலநாளில் அவ்வூர் போய்ச்சேர்ந்தார்கள். போகும்போது வண்ணான், அடா உபாத்தியாயா! இப்படி என்னை மோசஞ்செய்த உன்னை நான் சும்மாவிட்டேனா பார்! என் கழுதையையும் மூவாயிரம் ரூபாயையும் கொடாமற்போனால் நீ படப்போகிற பாட்டைப்பார் என்று அவ்வுபாத்தியாயனைத் திட்டிக்கொண்டே போனான்.

ஊர்போய்ச் சேர்ந்ததும் வண்ணான் மிகுந்த கோபத்துடன் முன் அவ்வுபாத்தியாயன் இருந்த இடந்தேடிச்சென்றான். அங்கே அவன் அகப்படவில்லை; அவ்வூர் முழுவதும் தேடியும் அவன் இருக்குமிடம் தெரியவில்லை; அவன் அவ்வூரில் இல்லவேயில்லை; எங்கேயோ போய்விட்டான். அவன் போனவிடமும் ஒருவர்க்குந்தெரியாது.

ஐயோ பாவம்! பேதை வண்ணான்! வீணாய்ப் பிள்ளைக்காகப் பேராசைகொண்டு கையில்வைத்திருந்த ரூபாயையும் கழுதையையும் தோற்றதுமல்லாமல் இவ்வளவு மதியீனனாவென்று யாவரும் நகைக்கும்படியானான்.

இந்தக் கதை வெளியே பரவாமலிருக்கவேண்டுமென்று அந்த நியாயாதிபதி பலவிதமாய் முயன்றான். அவ்வளவு முயற்சியும் பயன்படாமல் அந்தக் கதை, தேசம் முழுதும் பரவி, ஜோனதேசத்து நியாயாதிபதிபோலென்று அத்தேசத்தில் ஒரு பழமொழிகூட வழங்கும்படியாயிற்று.

என்றாலும், சில வருஷங்களுக்கு பிறகு, அவ்வண்ணானுக்குத் தன் மனைவியிடமாக ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழர்தையும் பிறந்து அவனும் மனைவிமக்களோடு வெகுகாலம் சுகமே வாழ்வதானான். குழல் இனிது—யாழ் இனிது என்பர்—தம்மக்களின் மழலைச் சொற்கேளாதவர்—என்றார் பெரியோர்.

# சக்கரவர்த்தியும் சிறு குழந்தையும்.

வெகுகாலத்திற்குமுன்னே வடஇந்துஸ்தானத்தில் வெகு அழகாய் வெயில்காய்ந்துகொண்டிருந்த ஒருநாள் மிகவும் கம்பீரமான வடிவமும் கறுத்த மேனியுமுள்ள ஒருவன், உடம்பு முழுதும் வெள்ளைப் போர்வை போர்த்துக்கொண்டு, கங்கைக்கரையோரமாக நிதானமாய் நடந்துவந்து அங்கோரிடத்தில் நின்று நிர்மலமாய்த் தெளிந்தோடுகிற நீரோட்டத்தை அதிக ஊக்கத்தோடு உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். அப்போதிருந்த அவன் முகக்குறியைப் பார்த்தால் நன்றாய்த் தீர்க்காலோசனை செய்யவேண்டிய முக்கியமான விஷயமொன்று அவன் மனதில் தோன்றியிருப்பதாகத் தெரியவந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? அரைமணிநேரம் சிறிதும் சலியாமலும் வாய்திறந்து ஒரு பேச்சுக்கூடப் பேசாமலும் அவன் அப்படியே பார்த்துக்கொண்டு நின்றான். பார்க்கப் பார்க்க அவன்முகம் குரூரமாயும் கருப்பாயும் மாறிக்கொண்டேவந்தது.

அப்போது யாரோ இரண்டு மூன்று பேர் தண்ணீர் எடுத்துக்கொண்டு அந்த வழியாய்ப்போக, அவர்களுள் ஒருவன் அம்மனிதனைக் கண்ணுற்று அவன் நிற்பதை மற்றவர்களுக்குக் காட்டி நகைத்துச் சொன்னதாவது:—

“இதோ பாருங்கள்; இங்கே ஒரு க்ஷத்திரியன் தன் சாப்பாட்டுக்காக எப்போது சிறந்த மீன் வரப்போகிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிறான்” என்றான்.

அப்படிச் சொல்லிவிட்டு அவனைப்பற்றி மற்றொன்றும் நினையாமல் சிரித்துக்கொண்டே அவர்கள் அப்புறம் போய்விட்டார்கள். அத்தருணத்தில் அவன் ஆலோசித்துக்கொண்டிருந்தது இன்னதென்று தெரிந்திருக்குமாயின், அவர்கள் அவ்வளவு பரிகாசமாய்ச் சிரித்திருக்கமாட்டார்கள். அப்போது அத்தேசமுழுதும் அரசாட்சிசெய்துகொண்டிருந்த பேபர் சக்கிரவர்த்தியைக் கொல்லுகிற விதம் எப்படியென்று அவன் அச்சமயத்தில் ஆலோசனைசெய்து கொண்டிருந்தான்.

பேபர் சக்கரவர்த்தி அவனுக்குச் செய்த தீங்கு என்னவென்கிறீர்களோ?

கேளுங்கள்: முதலில் அந்த பேப்பர் சுதேசத்தரசனன்று; இமயமலைக்கு வெகுதூரம் அப்பாலிருக்கின்ற ஒரு தேசத்தினின்றும் திரண்ட சேனையோடுவந்து இத்தேசத்தை ஜயித்தவன். அப்படி ஜயித்ததுமாத்திரமேயல்லாமல், இத்தேசமெல்லாம் நன்றாய்ச் சீர்ப்பட்டிருக்கும்படி மிகக்கண்டிதமான சட்டங்கள் ஏற்படுத்தி, அந்தச் சட்டப்படி நடவாதவர்களைக் கொடுமையாகத் தண்டித்துக்கொண்டுமிருக்கிறான். ஆகையால்: அவன் வாஸ்தவத்தில் மிக்க நல்லவனும், குடிகளிடத்தில் காருண்யமுள்ளவனுமிருந்தும், அநேகர் அவனைக் கொடுமையாய்ப் பகைத்துக் கொடியவனென்றும் அநியாயக்காரனென்றும் எண்ணினார்கள். அதனால், அந்தச் சக்கிரவர்த்தி குடிகளுக்குக் கொடுமைசெய்து கொண்டிருக்கிறானென்று தோன்றினதுபற்றி, அவன் எவ்விதமாயாவது மாண்டுபோக வேண்டுமென்றும், அவனைக் கொல்ல வேண்டியவன் தானேயென்றும் அந்த க்ஷத்திரியன் தீர்மானித்தான். அப்படிச் செய்வதனால் தன்னையும் உயிருக்குயிர் மாய்த்துவிடுவார்களென்று அவனுக்கு நன்றாய்த் தெரிந்தும், அதற்காக அவன் சிறிதும் அஞ்சவில்லை. அவன் அப்படிச் செய்யத் துணிந்தது மிகவும் பிசகென்று அவனுக்கே தெரியவந்ததென்று உடனே வெளியாகப்போகிறதென்றாலும், அப்போது அவன் தான் நியாயத்தை நிறைவேற்றப்போகிறதாகவே நினைத்திருந்தான்.

அந்தச் சக்கரவர்த்தியைக் கண்டுபிடிப்பது அசாத்தியமான காரியமன்று. அக்காலத்து மற்ற ராஜாக்களைப்போல அவன் எங்கும் வெளிப்படாமல் அரண்மனையிலேயே உட்கார்ந்து பொழுதுபோக்கிக்கொண்டிருப்பவனன்று; ஒரு வேலைக்காரனைப்போல் அற்பமான உடையொன்று தரித்துக்கொண்டு, எல்லாம் தன் கட்டளைப்படி நடந்தேறுகின்றனவா? குடிகளெல்லாம் சவுக்கியமாயிருக்கிறார்களா? துன்பப்படுகிறார்களாவென்று நேராய்ப் பார்க்கும்படிப் பட்டண முழுவதும் சுற்றுவதிலேயே விருப்பங்கொண்டிருந்தான். அது தெரிந்து அந்த க்ஷத்திரியன் ஒரு சிறு கத்தியைத் தன் உடைக்குள் ஒளித்துக்கொண்டு பட்டணத்துக்குச் சென்றான்.

அங்கே போனபோது, அவன் அதற்குமுன் ஒரு நாளும் பார்த்திராத பேரிரைச்சலும் ஆரவாரமுமாயிருந்தது. அவ்வாரவாரத்தின் நடுவே ஆண்-பெண்-குழந்தை அடங்கலும் மிக்க பயந்தவர்களாய்ப் பேரி



ரைச்சலிட்டுக்கொண்டு நாலாமூலையும் ஓடிக்கொண்டிருந்தார்கள். அப்போது அடிக்கடி, ஒரு வீடு இடிந்துவிழுந்ததுபோலவும், ஒரு பெரிய மரம் வேரோடு பெயர்ந்ததுபோலவும் தொனியொன்று கேட்டது. அப்படியிருக்க அந்தத் தெருவின் மத்தியில் மிகப்பெரிய யானையொன்று பயங்கரமாய்க் கர்ச்சித்துக்கொண்டு ஓடிவரக்கண்டான். அது மிக்க வெறிகொண்டு ஒரு பெரிய கடைத்தெருவினின்றும் அவிழ்த்துக்கொண்டு தனக்கு நேர்படுவதையெல்லாம் அழித்துக்கொண்டு பட்டணமெல்லாம் சுற்றித் திரிந்துவருகின்றது.

அப்போது அந்தக் காட்சியைப்பார்த்தால் எவ்வளவு பயங்கரமாயிருக்கும்! கன்னங்கறேலென்று பருவதம்போன்ற ஒரு மிருகம் துதிக்கையைவீசி இருபுறத்திலுள்ள குடிசைகளையெல்லாம் பெயர்த்துக்கொண்டு, கத்தியுறைபோல் இரண்டு தந்தங்களும் வெளேரென்று பருத்து நீண்டு பிரகாசிக்க, வாயில் நுரை தள்ள, ஒரு பெரிய புகைவண்டியைப்போல் எதிரில் ஒன்றையும் நிற்கவொட்டாமல் அடித்துத் தள்ளிக்கொண்டு ஓடிவந்ததென்றால் அதைவிடப் பயங்கரமான காட்சி வேறென்ன! எங்கே பார்த்தாலும் ஜனங்கள் பயந்து கீச்சுக்குரலிட்டுக்கொண்டு தாறுமாறாய் நாற்புறமும் ஓடினார்கள்.

அப்போது எளிய பள்ளக்குழந்தை ஒன்று பசியால் வருந்தி நடக்கமாட்டாமல் ஓடுகையில் கால்தடுக்கி யானை ஓடுகிறவழியில் விழுந்துவிட்டது; மறுநிமிஷத்திற்கெல்லாம் யானை மிதித்து அந்தப் பிள்ளை துவையலாய்ப்போயிருக்கும்! அதுகண்டு வேலைக்காரன்போல் உடை தரித்திருந்த ஒருவன் உடனே சரேலென்று யானைக்கு எதிரே ஓடி அதன் கையில் அகப்படவொட்டாமல் அந்தச் சிறுவனை வாரியெடுத்துக்கொண்டு அப்புறம் வந்துவிட்டான். அந்த யானை அப்படியே வெறிகொண்டு ஆற்றிற்காக ஓடிப்போயிற்று. அந்த மனிதன் குழந்தையை எடுத்துக்கொண்டு பின்னுக்குத் திரும்பினவேகத்தில் அதுவரையில் அவன் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த பாகை நழுவிக் கீழேவிழ்ந்தது; அப்போது யாவரும் அவன் முகத்தைப்பார்த்து, இப்படி ஒரு பள்ளப்பையலைக் காப்பதற்காகத் தன் உயிருக்குத் துணிந்தவன் பேபர் சக்கரவர்த்தியே என்று அறிந்தார்கள்.

அதுவரையிலிருந்த பேரிரைச்சலெல்லாம் திடீரென்று அடங்கிப்போயிற்று. யாவரும் தங்கள் கண்களை நம்பமாட்டாதவர்போல் ஒருவரை ஒருவர் விழித்துப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். இப்படி

யாவரும் பிரமித்துக் கம்மென்றிருக்கையில் ஒருவன் எதிரே ஓடி வந்தான். அவன் முன்சொன்ன க்ஷத்திரியன். வந்ததும் அந்த க்ஷத்திரியன் சக்கரவர்த்தியின் காலில் வீழ்ந்து தன் கையிலிருந்த கத்தியைக் காட்டிக் கொண்டு உறுதியாய் ஒரு வார்த்தை சொன்னான்.

"மகாராஜனே, நான் உங்களுக்குப் பகைவன்; இன்று நான் உங்களைக் கொல்லக்காத்திருந்தேன்; உயிரை அழிக்கிறவனைவிட உயிரைக் காக்கின்றவன் எவ்வளவு சிறந்தவன்! கடவுளால் காக்கப்பட்டிருப்பவனைக் கொல்ல என் கை வலிதன்று. இதோ இந்தக் கத்தியை எடுத்து உங்களைக் கொல்லக் கருதினவனைக் கொன்று விடுங்கள்" என்று முறையிட்டான்.

இப்படி அவன் தன் குற்றத்தை உறுதியாய் உரைத்ததைக் கேட்டுச் சக்கரவர்த்தியின் சோதி முகத்தில் சிறிது விசித்திரமான புன்னகையுண்டாயிற்று. உடனே சக்கரவர்த்தி கையைநீட்டிக் கீழேவிழுந்திருந்த மனிதனை மெல்லத் தூக்கியெடுத்து நன்மொழியாய் அவனுடன் சொன்னதாவது:—

"என் நண்பனே, அப்படியன்று; உயிரைக்கொல்வதைவிடக் காப்பது நலமென்று நீயே இப்போது தெளிந்து உரைத்தாயல்லவா? தன் குற்றத்தை அங்கீகரித்து அதற்காக அநுதாபப்படுகிறவனைக் கொல்வது நியாயமா? உன் கத்தியை நீயே வைத்துக்கொண்டு என்னுடைய ராஜகாரியத்தில் உபயோகப்படுத்து. இன்று முதல் நான் உன்னை என் அரண்மனைக் காவலாளனாக ஏற்படுத்துகிறேன்" என்றான். அதைக் கேட்டு அந்தக் கொடிய ஹிந்து தலைவன் வணங்கிக் குழந்தைபோலக் கண்ணீருகுத்து நின்றான்.

பின்பு பேபர் சொன்னது சரியாகவே நடந்தது. பிற்காலத்தில் அந்த க்ஷத்திரியன் அவனுடைய சிறந்த சேவகனாகிப் பலதடவை அவனை யுத்தத்திலே காப்பாற்றினான். சக்கரவர்த்தி தன்னைக் காப்பாற்றினதையும், "உயிரைக் கொல்வதைவிடக் காப்பது நலம்" என்று அவன் சொன்ன வாக்கியத்தையும் தன் ஆயுளளவும் அடிக்கடி சொல்லிக்கொண்டே அந்த க்ஷத்திரியன் காலம் கழித்தான்.

# குண்டூசியிற் கண்ட கருந்தனம்.

மிகுந்த விசாரத்துடனே ஒரு வாலிபன் பாரீஸ் நகரத்திற்குச் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்குப் பருவம் இருபத்தொன்றிருக்கலாம். வெளித்தோற்றத்தினாலேயே அவன் ஒரு பட்டிக்காட்டானெனவும், வறுமையால் வருந்துகிறவனெனவும் விளங்கியது. இராமுழுதும் ஓயாது நடந்துவந்தவனாகையால், அப்போது அவன் உடல் மெலிந்து மிகவும் இளைப்புற்றிருந்தான். மேலும் அன்றையதினம் காலை முதல் அவனுக்கு போஜனமே கிடைக்கவில்லை. அப்பொழுது அவ்வாலிபனைப் பார்க்கையில், முதலில் உணவுக்குவேண்டிய வழி தேடிக்கொண்டுதான் அவன் மற்றொரு வேலை பார்ப்பான் என்று எண்ணும்படியாகவிருந்தது. ஆயினும் அவன் கையில் ஒரு காசுகூடக் கிடையாமல் "திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை" என்று நம்பி வந்திருப்பதனால் உணவு தேடிக்கொள்ள அவனுக்கு யாதொரு வழியுமில்லை. ஆயின் மிகப் பிரசித்திப் பெற்ற ஒரு பெரிய வர்த்தகனைக் காண்பதற்கு ஒரு கடிதம் மாத்திரம் அவன் கையிலிருந்தது. அவ்வர்த்தகனிருக்கும் இடமோ அவ்வாலிபனுக்குத் தெரியாது. அதனால் எங்கெங்கேயோ தேடிப் பல பேர்களைக் கேட்டு விசாரித்துக் கடைசியில் அவ்விடத்தைக் கண்டுபிடித்தான். அந்தப் பெரியமனிதனைக் கண்டு கடிதம் கொடுத்தபோது அவன் மனம் எவ்வாறு அலைபாய்ந்ததோ? அவனுக்குள்ள ஆதாரமெல்லாம் அக்கடிதமொன்றேயாகையால் அது அனுகூலப்படாவிடின் அப்போதே அவன் உயிரை யிழக்கவேண்டியதுதான். அதிகாரி அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்கையில் அவன் முகக்களை எப்படி மாறுகிறதோவென்று அச்சிறுவன் முகததிலேயே அவன் கண்வைத்துப் பார்த்திருந்தான். அதிகாரியோ அக்கடிதத்தைக் கடைசிவரையில் வெகு தீவிரமாய்ப் படித்துப் பார்த்து மனக்கவலையுடன் மடித்துவிட்டு, என் வர்த்தகசாலையில் இப்போதிருக்கிற உத்தியோகஸ்தர்களே வேண்டுமளவிற்கு அதிகம்; இன்னும் அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ள அவகாசமில்லையேயென விடைப்பகர்ந்தான்.

அவ்வாய்மொழியைக் கேட்டவுடனே அச்சிறுவன் மிகவும் திடனழிந்து துக்கமுற்றானாயினும், வாய்திறந்து ஒன்றும் பேசாமலே தலைவணங்கி அவ்விடம்விட்டு வெளியேபோகத்திரும்பினான். ஆயினும் இன்ன

விடத்திற்குப் போகிறதென்று தோன்றாமல் மிக்க கவலையுற்றவனாயினன். ஆனால் இச்சிறுவனைப் பார்த்தவுடனே அவ்வதிகாரியினுள்ளத்தில் மாத்திரம் அவனைப்பற்றி ஏதோ கொஞ்சம் கருத்துத் தோன்றியிருந்தது. அவ்வெளிய பையன் அவ்விடம் விட்டு வெளியே போமளவும் அதிகாரியின் கண் அவன் பின்னேயே சென்றது. அப்படி அவன் பார்த்திருந்தற்கு உத்தேசமொன்றும் இல்லாமலே யிருக்கலாம்; சும்மா நேரங்கழிக்கப் பார்த்திருந்தாலும் இருக்கலாம். நோக்கம் எதுவாயிருப்பினும் அது வீணாகவில்லை. வெளியேபோன பையன் அங்கோரிடத்தில் குனிந்து ஏதோ ஒரு சிறுபொருளைத் தரையினின்று எடுத்துத் தன் உடையில் நாட்டிக்கொண்டான். அதைக் கண்டவுடனே அதுவரை அவனை உதாசினமாய்ப் பார்த்திருந்த பெரிய மனிதன் அதிக கவனத்துடன் அவன் மேல் கண்வைக்கலானான். அவன் கண்டெடுத்த பொருள் என்னென்று நினைக்கிறீர்கள்? அது ஒரு குண்டூசியேயொழிய வேறல்ல. பேதைகள் பூமியில் வீழ்ந்துகிடக்கும் குண்டூசிபோன்ற அற்பப்பொருள்களைப் பொருக்கியெடுப்பது சாதாரணமே; அது அத்தனையாகக் கவனிக்கத் தக்கதுமல்லவே என்பீர்களோ? மேல்பார்வைக்கு அது அத்தனை அற்பமாகத் தோன்றினும், அச்செய்கையானது ஒருவர்க்கு நற்குண நற்செய்கைகளில் இயற்கையாகவே ஆவல் உண்டென்பதைக் குறிப்பிக்கின்ற பெருங்குறிகளுள் ஒன்றென அந்த வியாபாரி கண்டறிந்தான். அதாவது, பொருள்களிடத்தில் செட்டும் சீருமாய் இருப்பானென்பதை இச்செயல் விளக்குகின்றதெனத் தெரிந்து அதிகாரி அச்சிறுவனிடத்தில் அன்புகூர்ந்து, போன பையனைத் திரும்பியும் வரவழைத்து, மிகப் பெரியதான தன் காசுக்கடையில் எளியதொழிலொன்று செய்யும் தொழிலாளியாய் அவனை ஏற்படுத்தினான்.

அச்சிறுவனுக்கு ஜாக்ஸ் லப்பீட்டு என்று பெயர். அவன் பேயன் நகரத்து ஒரு எளிய கம்மாளனுடைய மகன். அந்தத் தகப்பனுக்குப் பத்துப் பிள்ளைகள். அவன் உழைத்து வேலை செய்து அப்பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டியதாயிருந்தது. லப்பீட்டு காணப்போன காசுக் கடைக்காரனோ மிகப் பிரசித்தி பெற்ற அரசிறைக் கணக்கனும் பாரிஸ் நகரத்திலுள்ள சிறந்த தனிகர்களுள் ஒருவனுமாம். அவனுக்கு மெஸ். பாரகாக்ஸ் என்று பெயர். இச்சிறு கதையைப் பலதரம் கேட்கப் பிராஞ்சுதேசத்தார் பேராவல் கொண்டவர்கள். அதற்கேற்றபடியே இக்கதையும் பலதரம் உரைக்கக் கேட்கத்தக்கதுதான். இச்சமயத்தில் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டுவது ஒன்றுண்டு. ஜாக்ஸ் லப்பீட்டினுடைய நடை உடைகளிருக்கட்டும்; பிரகிருதியே பெருந்



துணையாக நின்று அவனுக்குச் சகாயம்செய்தது. பிரகிருதிக்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேற்றுமை கிடையாதல்லவா? வெகு சுந்தரமான முகமும், தனக்கு முக்கியாதாரமாக நினைத்திருந்த காரியம் கைகூடாமற்போன அவ்வமயத்திலும் மாறுபடாததும் பராதீனத்தையெதிர்பாராததுமான பெருந்தன்மையும், மிகத்தெளிவான வாய்மொழியும், கபடமற்ற காட்சியுமாகிய இவைகள் லப்பீட்டினுடைய வடிவத்தில் விளங்கியதனால், அவற்றைக் கண்டே அந்தப் பிரபுவுக்கு, பொருள்களிடத்தில் மிகு கருத்துடைமையை விளக்குவதான அச்சிறு செய்கையையும் கவனமாய் உற்றுப்பார்க்கப் போதுமான அன்பு அவனிடத்தில் உண்டாயிற்று. அவனை அவ்வுத்தியோகத்தில் நியமித்த சிலதினங்களுக்குள்ளேயே அவ்வதிகாரத்தை ஆளும்படியான திறமைகள் அவனிடத்தில் அதிகமாயிருக்கின்றனவென அதிகாரிக்கு வெளிப்படையாகத் தோன்றியது. லப்பீட்டினுடைய யுக்தி புத்தி சாமர்த்தியங்களை அவனுடைய காரியங்களில் காணவே யஜமானனுக்கு அவனிடத்தில் அதிக சந்தோஷமுண்டாயிற்று. வாஸ்தவத்தை யோசிக்குமளவில், லப்பீட்டுதானாகவே இங்குமங்கும் சிற்சிலவாய்ச் சில்விஷயங்கள் தெரிந்துகொண்டானேயொழிய மற்றபடி அவன் ஓரிடத்திலும் கிரமமாய்க் கல்விகற்றவனல்லன்; வேலைசெய்த கைப்பழக்கமும் விசேஷமாய்க் கிடையாது; ஸ்வயகிராமத்திலே ஒரு ராயசக்காரன் கையின் கீழ் வேலைக்காரனாயிருந்தான் என்பது ஒன்றுதான். அப்படி அவ்வேலைசெய்யப் புகுந்ததும், எவ்விதத்திலாவது பொருள் சேர்த்துத் தான் தனிகனாக வேண்டுமென்ற பொருளாசையாலல்ல, உலகத்தாரனைவரும் மதிக்கும்படியான மகிமை தன்னிடத்தில் விசேஷமாய் இருக்கிறதென்று கண்டு அதனாலுமல்ல; பின்னென்னவெனில், நமக்கு ஸ்வாமி ஏதோ சிறிது சக்தி அளித்திருக்க அதனை வீணிற்கழிப்பது உசிதமல்லவெனத் தெரிந்து அத்திறமையை அனுபவத்தில் காட்ட வேண்டுமென்ற கருத்தினாலேதான்.

ஜாக்கஸ்லப்பீட்டு அந்தப் புதிய உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டவுடனே, நாம் முன் சொல்லிய வண்ணமே, குண்டூசி முதலிய பொருள்களையும் கவனமாய்க் கண்டெடுத்துச் சேர்க்கும் குணமுள்ளவனென்று மாத்திரமேயல்ல; பின்னும் பலவகை உத்தம குணங்களும் உள்ளவனெனத் தன் யஜமானனுக்கு விளங்கச்செய்தான். அனைவரும் மெச்சிக்கொள்ளும்படி கள்ளங்கபடற்ற நடைபாவனைகளோடு கூட அவன் செய்தொழிலில் மிக்க ஊக்கமும் உடையோனாயிருந்தான். அத்தொழில் முயற்சியும் எப்போதும் ஓர் ஒழுங்குபாட்டை அனுசரித்ததாகவேயிருந்தது. அவ்வொழுங்குபாடும், ஒருவருடைய உபதேசமாயிரா

விடினும், தன் வசப்படுத்தும் வழக்கத்தால் உண்டானதாம். ஆயினும், தன் புத்திக்குத் தோன்றியதே சரியென்ற பிடிவாதம் அவனுக்கு ஒருபோதும் இல்லை;

"நாண்பெரியோ மல்லோ நா நன்றுந் தீது
நமக்குரைப்பா ருளரென்று நாடினோமே"

என மேலோருரைத்தபடி, பிறர் ஏதாவது நன்மை தீமைகள் எடுத்து உரைத்தால் அவற்றையும் உசிதமென்று ஏற்றுக்கொள்ளும் உத்தம குணமுடையனா யிருந்தான். ஆனதுபற்றி அவன் ஆலோசனையில் மாத்திரமேயல்ல; காரியங்களைத் தானே ஆய்ந்தோய்ந்து பார்த்துக் கிரமப்படி நடத்துவதிலும் மிக்க வல்லவனென யஜமானனுக்குத் தெளிவாகத் தெரியவந்தது. அதனால் லப்பீட்டு வெகு சீக்கிரமே அந்த வர்த்தகசாலையிலுள்ள கணக்குப் புத்தகங்களுக்கெல்லாம் விசாரணைத்தலைவனாக நியமிக்கப்பட்டான். நாளுக்கு நாள் அவனுடைய யோக்கியதையும் திறமையும் வெளிப்படையாயின; அவ்வண்ணமே யஜமானனுக்கு அவனிடத்தில் நாளுக்குநாள் நம்பிக்கையும் அதிகமாகிவந்தது. பின்பு அவன் உத்தியோகத்திலிருந்து ஏற்றசமயத்தில் மிகவும் உத்தரவாதமான பொக்கிஷதாரர் உத்தியோகம் பெற்றான். அவ்வண்ணமே நடந்துவந்து நாளாவர்த்தியில் அந்தவர்த்தகசாலையிலே லப்பீட்டு ஒரு பாகஸ்தனாகிக் கடைசியில் பாரகாக்ஸ் இறந்துபோனபிறகு தானே அவன் காரியங்களை விசாரிப்பவனாகவும், அந்தச்சாலைக்குத் தலைவனாகவும் ஏற்பட்டான். இது அவனுக்கு மிகவும் பெருமையானதல்லவா ? பின்பு 'லப்பீட் அண்டு கம்பெனி' என ஒரு வர்த்தகசாலை ஏற்பட்டது. லப்பீட்டு தன்னுடைய நன்றி மறவாமைக்காக இறந்துபோன தன் யஜமானனுடைய மகனுக்கு அந்த வர்த்தகசாலையிலிருந்து தீர்வைகொடுத்துவந்தான். இவ்வண்ணம் கீழே கிடந்த குண்டூசியைக் கண்டெடுத்த காரணத்தால் ஒருவனுக்கு இவ்வளவு பாக்கியம் கிடைத்ததென்றால், சிக்கனமென்பதைச் சிறிதும் கவனியாமல் அநேகர் எதையும் வீணேயிழந்து அல்லாடுவது என்ன புத்தியீனமோ ?

# ஒரு சிறுவனும் அவனுடைய தாயும்.

குணங்கள் நற்குணங்களென்றும் தீக்குணங்களென்றும் இரண்டு வகையல்லவா ? அவற்றுள் நற்குணங்களைப் பயிருக்கும் தீக்குணங்களைக் களைக்கும் ஒப்பாகச் சொல்லலாம். நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்தி நாற்றுவிட்டு நட்டுப் பயிரை வளர்ப்பதுபோலவே, முதலில் பிள்ளைகளுடைய மனதை நன்றாய்ப் பண்படுத்தி அதில் நற்குணங்கள் உண்டாகும்படி பாடுபடவேண்டும். அப்படி வளர்க்கப்பட்ட பயிரோடு களை தானாகவே உற்பத்தியாகி அப்பயிரை மூடிக்கொள்வதுபோல, ஒருவராலும் கற்பிக்கப்படாமலே தீக்குணங்கள் தாமாகவேதோன்றி, நற்குணங்களை மேலோங்கவிடாமல் அடக்கிவிடும். ஆதலின் ஏற்றகாலத்தில் களை பறிப்பதுபோல, சிறுவர்களுடைய மனதில் தோன்றும் தீக்குணங்களாகிய குற்றங்களை உடனுக்குடனே கடிந்துகொண்டுவரவேண்டும். நகத்தால் கிள்ளி யெறிவதைப் பிறகு கோடாரிகொண்டு வெட்டும்படி வைத்துக்கொள்ளலாகாது. இளமையில் அக்குற்றங்களைக் கண்டிக்காமல் உபேக்ஷையாக விடப்படுகின்றவர்களே கடைசியில் சிறைச்சாலைக்கும் தூக்குமரத்துக்கும் இலக்காகின்றனர்கள். அவ்வாறன்றிக் குற்றங்கள் காணப்படும்போதே தாக்ஷிணியமின்றித் தண்டிக்கப்படுகின்ற பிள்ளைகள் கடைசியில் நாட்டிலே நல்லவர்களென்று பெயரெடுத்துச் சிறப்பாக வாழ்வார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒருகதை இதனடியில் கூறுவோம்.

சில வருஷங்களுக்குமுன்னே வடக்கே கல்கத்தா நகரத்தில் ஒரு ஸ்திரீ ஒருநாள் மாலைவேளையில் பத்துவயதுள்ள ஒரு சிறுவனைக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு கடைக்குச் சென்றாள். அவள் மனதில் ஏதோ ஒரு தீர்மானங்கொண்டு கொஞ்சம் விசனத்துடனே போகிறாளென்பது அப்போது அவள் முகக்குறியால் காணப்பட்டது. அகத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா ? அவள் படாடோபமாய் உயர்ந்த ஆடையாபரணங்கள் ஒன்றுமில்லாமல் சாதாரணமான உடை ஒன்று தரித்துக்கொண்டிருந்தாள். அவளுடன் போன சிறுவன் என்னவோ புலம்பிக்கொண்டு முகத்தை வெளியே காட்ட வெட்கி அவளுக்குப் பின்னால் தலைகுனிந்து கொண்டே போனான்.

அவள் குறித்துவந்த கடைபோய்ச்சேர்ந்து அங்கிருந்த கடைக்காரனைக் கூவியழைத்து அவனுக்குத் தன் பிள்ளையைக் காட்டி, ஐயா

இந்தப்பையன் உங்கள் கடையிலிருந்து ஒரு பொருளைத் திருடிக்கொண்டு வந்துவிட்டான் என்றாள். இவ்வாறு சொல்லும்பொழுதே அவன் கண்களினின்றும் பலபலவென்று கண்ணீர்பெருகத் தொடங்கியது; அவள் சொன்ன பேச்சைக் கேட்டுக் கடைக்காரன் தன் கைவேலையை நிறுத்திவிட்டு அவளை நோக்கி: அம்மா, இந்தக் குழந்தை அப்படி ஒருபோதும் செய்யமாட்டான்; நீ என் வீணாய்ப் பழிசொல்லுகிறாயென்று வணக்கமாய்ச் சொன்னான்.

அதன்மேல் அந்த ஸ்திரீ, ஐயா, நான் சொல்லுவது பொய்யன்று, இவன் இப்பொழுதுதான் திருடி எடுத்துக்கொண்டு வந்தான். இவன் திருடின பொம்மை இதோ இருக்கிறது பாரும் என்று தான் கையில் கொண்டுவந்த பாவையைக் காட்டினான். கடைக்காரன் அதை வாங்கிப் பார்த்து, ஆம், இது இந்தக் கடையிலிருந்த பொருள்தான்; சற்று நேரத்துக்கு முன்புதான் வெளியில் எடுத்துவைக்கப்பட்டது; நான் பின்பக்கமாய்த் திரும்பியிருக்கும்பொழுது யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்றான். அதைக்கேட்டு அந்தப் புத்தியுள்ள பெண்மணி, ஐயா, நீர் சொல்வது என் மனதுக்கு மிகவும் சங்கடத்தை உண்டாக்குகிறது; நீர் யாரோவென்று சந்தேகிக்கவேண்டாம்; இந்தத் திருட்டுப் பையனே எடுத்துக்கொண்டு வந்துவிட்டான் என்றாள்.

“ தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வார் பழிநாணுவார்.”

அந்த வார்த்தையைக் கேட்டுக் கடைக்காரன் ஆச்சரியப்பட்டு, அம்மா, உனக்கு மனவுறுதி மிகவும் அதிகம். கடையில் இந்தப் பாவை காணாமற்போய் ஒருமணி நேரங்கூட ஆகவில்லை; அதற்குள் மகனைப் பொருளும் கையுமாய்ப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டீரே. உம்முடைய தைரியமல்லவோ தைரியமென்று சொல்ல, அந்தப் பெண், ஐயா, இதில் தைரியமென்ன இருக்கிறது, தைரியமுமில்லை மனவுறுதியுமில்லை; நாம் சுவாமிக்குப் பொதுவாய் உண்மை தவறாமல் நடக்கவேண்டுமல்லவா? அந்தக் கடமைப்படி உள்ளதை நான் ஒளியாமல் வெளிப்படுத்தினேனேயல்லது மற்றொன்றுமில்லை; பையன் கையில் பாவையைப் பார்த்தவுடனே எனக்குப் பிராணன் போவதுபோலிருந்தது. உண்மையான தாயாயிருந்தால், சுலபமாய்த் தோன்றினாலும் வருத்தமாய்த் தோன்றினாலும், அவள் செய்யவேண்டிய கடமையைச் செய்தே தீரவேண்டுமல்லவா? அப்படிச் செய்யாமையாலேதானே “மக்களுக்குச் சத்துரு மாதாபிதாக்கள்” என்கிறார்கள். இப்போது இந்தப் பையன் செய்தகாரியம் கெட்ட



காரியந்தான் அதற்காக இவனை உடனே காவல் கிடங்குக்கு அனுப்பிவிடவேண்டும். இதற்கு நானே சாக்ஷியாகிறேன்; இவன் தகப்பனார் வந்தாலும் அவரும் அதற்குச் சம்மதிப்பார் என்று சொல்லி, தன் கையைப் பிடித்துக்கொண்டிருந்த பிள்ளையைக் கையை வாங்கிக்கொண்டு கடைக்காரன் வசத்தில் தள்ளிவிட்டுத் திரும்பிப் போகப் பார்த்தாள்.

அது கண்டு பையன் அழுது கொண்டே அவள் துணியை விடாமல் பிடித்துக்கொண்டு, அம்மா, நான் இனிமேல் இப்படிப்பட்ட காரியம் ஒருபோதும் செய்வதில்லை; என்னை இங்கே தனியே தள்ளிவிட்டுப் போகாதே; தெரியாமல் திருடிவிட்டேன் என்று சொல்லிக் கோவென்று கதறியழுதான்.

கடைக்காரன் அதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு அவளைக்கூவி அம்மா, அவசரப்பட்டுப் போகவேண்டாம்; ஒரு பேச்சுக் கேட்டுவிட்டுப் போம் என்று அவளைக் கிட்ட அழைத்து, பெண்கள்சிகாமணியே, உம்மைப்போலத் தருமமே ஜெயமென்று நீதி மார்க்கத்தில் நடப்பவரை நான் எங்கும் கண்டதில்லை.

உம்மைப்போலவே உம்முடைய புத்திரனும் கடவுளுக்குப் பயந்து நடக்கும்படி கற்பிக்க நீர் பாடுபடுகிறீர். இவன் செய்த காரியத்திற்கு இப்போது நீர் செய்ததே போதுமான சிக்ஷையாம். இனி ஒருபோதும் இவன் இப்படிப்பட்ட செய்கை செய்யத் துணியானென்று நான் உறுதியாய்ச் சொல்வேன்; சிறுபிள்ளைகளைக் காவற்கிடங்குக்கு அனுப்புவது சரியன்று; முக்கியமாய் இவ்வளவு ஜாக்கிரதையாக நல்வழி கற்பிக்கப்படுகிற பிள்ளைகளுக்கு அது தேவையேயில்லையென்றான்.

பிறகு அவன் அந்தப் பையனைப் பார்த்து, மகனே, திருட்டுப் புரட்டு இல்லாமல் நல்ல பிள்ளையென்று பேரெடுத்துப் பிழைப்பது நல்லதா, காவலில் அகப்பட்டு அவமானப்படுவது நல்லதாவென்று கேட்டான். அதற்கு அந்த மகன், நல்லவனென்று பெயரெடுத்துப் பிழைப்பதுதான் ஐயா சரியானதென்று வணக்கமாய்ச் சொல்ல, அப்படியானால் இப்போது நேரிட்ட அவமானத்தை இனி நீ ஒருபோதும் மறவாதே; இப்பொழுது நீ செய்த காரியம் மிகவும் அற்பமானதாயிருந்தாலும், இதுதான் கடைசியில் பிராணாந்தத்துக்குக் கொண்டுபோய் விடுவது; “இன்று தவிட்டுக்கு வந்த கை தான் நாளைக்குத் தனத்துக்கும் வரும்” என்று சொல்லக் கேட்டதில்லையா? திருடன் பெண்சாதி என்றும் கைம்பெண்தான். ஆதலால் இனிமேல் உன் நற்றாய் சொல்லும் நல்லுபதேசங்களைக்கேட்டு கடவுளுக்குப்பயந்து நட; என்று பலவிதமாய் அந்தப் பையனுக்குப் புத்தி சொல்லியனுப்பினான். அந்தச் சிறுவனும் இனி நான் அப்படியே நடந்து கொள்ளுகிறேன் என்று சொல்லிச் செலவு பெற்றுக் கொண்டுபோயினான்.

**தா**யும் மகனும் ஒன்றும் பேசாமலே கைகோத்துக்கொண்டு வீட்டுக்குப் போனார்கள். வீட்டுக்குப் போய் தாய் தனியே அந்தப் பிள்ளையை ஒரு அறைக்குள் அழைத்துக் கொண்டு போய்க் கதவை மூடிக்கொண்டாள். அங்கே அவள் அம்மகனை என்ன தண்டித்தாளோ அது ஒருவர்க்கும் தெரியாது. இவ்வாறு அந்தப்பையன் பாவை திருடிக்கொண்டுவந்த வெட்கக்கேடான செய்தியை அவர்கள் அப்புறம் மற்றொருவரோடும் சொல்லவில்லை; சுகதுக்கங்களுக்கு உடன்பட்டவனான கணவனுக்குமாத்திரம் அவள் தெரிவித்தாள்.

**அ**ன்று முதல் அச்சிறுவன் "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்று, தாய்சொல்லுகிற ஒவ்வொரு வாக்கியமும் வேதவாக்கியம் போலக் கொண்டு அவள் சொற்படி கேட்டு நடந்துவந்தான்; அவள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அவளுக்குத் துணையாயிருந்து, தன் சகோதரர் சகோதரிகளுக்கும் வேண்டிய நீதி நன்னெறிகளைக் கற்பித்து வந்தான்.

**இ**வ்வாறே எழெட்டு வருஷகாலம் சென்றது; இதற்குள் அவனுடைய யோக்கியதை எங்கும்பரவியது. அதனால் அவன் ஒரு பெரிய உத்தியோகசாலையில் பொக்கிஷதாரனாக நியமிக்கப்பட்டான். அவன் சத்தியவாக்கு உடையவனென்று எல்லோரும் அவனை நம்பத்தொடங்கினார்கள். அவனிடத்தில் எந்த விஷயத்தைப் பற்றியும் சந்தேகப்படுகிறவர்கள் ஒருவருமில்லை; அதனால் அவன் வெகு சீக்கிரத்தில் இன்னும் மேலான அதிகாரங்கள்பெற்று மேன்மேலும் விருத்தியடையலானான்.

பின்பு ஒரு சமயத்தில் அந்த மகன் இவ்விஷயங்களைப்பற்றித் தாயுடன் பேசும்பொழுது, அம்மா, முன்னே நான் சிறுவனாயிருக்கும்பொழுது ஒரு நாள் பொம்மையும் கையுமாய் என்னை நீ கடைக்காரனிடத்திற்கு இழுத்துக்கொண்டு போனாயே; அது எனக்குக் காலத்தில் களை பறித்தது போலாயிற்று; அந்தச் சமயத்தில் நீ அப்படிச் செய்திராமற்போனால், இந்த மேலான பதவிக்கு நான் ஒருபோதும் வந்திருக்கமாட்டேன். நீ அவ்வாறு செய்த பிறகு, எனக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக்கொள்ளக் கையில் ஒரு காசு கூடக் கிடைக்காமல் நான் வருத்தப்பட்ட சமயங்கள் பலவுண்டு. அப்படிப்பட்ட காலங்களில் தீயவழியில் மனஞ்செல்லாமல் அதைத்தடுப்பது மிகவும் கடினமாயிருந்தது. அந்தத் தருணங்களில் மனதுபோனபடி போகவொட்டாமல் என்னைக் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவந்தவர் கடவுளே. இதன் பெருமை அக்காலத்தில் எனக்குச் சிறிதும் தெரியாமற் போயிற்று. இப்படிஎற்றகாலத்தில் கண்டிக்கப்படாமையினாலே தான் அநேகம் பிள்ளைகள் அநியாயமாய் அழிந்து போகிறார்களென்னும் உண்மையை இப்போது நான் அறிந்து கொள்ளலானேன். அந்தக்காலத்தில் நீ ஐயோ பாவமென்று என்னைச் சும்மா விட்டிருந்தால் இப்போது நான்



என்ன கதியாயிருப்பேனோ? இப்படியெல்லாம் பாடுபட்டு மக்களை முன்னுக்குக் கொண்டுவருவதனாலே தான் "அன்னையும் பிதாவு முன்னறிதெய்வம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது; என்று சொல்லித் தாயினால் தான் முன்னுக்கு வந்ததை நினைத்து அவளைத் தெய்வமாகக் கொண்டாடினான்.

"களவின்கட் கன்றிய
காதல் விளைவின் கண்
வீயா விழுமந் தரும்."

"கள்வார்க்குத் தள்ளு
முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு."

**ஆ**தலால் பெற்றோர்களெல்லாரும் தமது மக்களிடத்தில் குற்றங் கண்டபோதே அவர்களை இவ்வாறு கண்டித்து வருவார்களானால், அவர்கள் நல்வழிப்பட்டுச் சுகமாக வாழ்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

# காணாமற்போன குமார்.

**மை**சூர் நாட்டைச்சேர்ந்த ஒரு சிறு நகரத்தில் சௌதப்பன் என்கிற ஒரு பெரிய வர்த்தகன் வசித்துக்கொண்டிருந்தான். அவன் கண்ணியமுள்ளவன். சோம்பலற்ற உழைப்பாளி. வியாபாரத்திலோ மகா சாமர்த்தியமுடையவன். தனக்குரிய இவ்வித குணங்களினாலேயே திரண்ட திரவியத்திற்கு அதிபதியானான். தன்னிடத்தில் சதா பிரியமுள்ள அழகிய லக்ஷ்மி தேவியை மணந்து களித்திருந்தான். கணவனும், மனைவியும், தெய்வ பக்தியில் சிறந்தவர்கள். ஒருவரை ஒருவர் கைவிடாது ஒருமித்து கண்ணியத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அளவில்லாத ஐசுவரியத்திற்கு அதிபதியாகி தன்னை உற்றார் சுற்றத்தார் மதிக்கும்படியான ஸ்தானமடைந்து எல்லாச்சுகம் பெற்றும் மக்களில்லாது வருந்தினான். தன் துர்பாக்கியத்தை நொந்து இது தெய்வ குற்றமோவெனப்பயந்து கோவில்களிலெல்லாம் பூஜைகளும் அபிஷேகங்களும் செய்வித்தான். பிராமணர்களுக்கு சமாராதனை செய்வித்தான். இதுவுமன்றி சாஸ்திர விர்ப்பன்னர்களுக்கு அநேக உயர்ந்த வெகுமதி யளித்தான். ஆனால் இவைகளினால் எவ்வளவும் பயன் உண்டாகவில்லை. தாங்கள் எண்ணியிருந்த எண்ணமெல்லாம் வீணாயிற்றே யென்று புருஷனும் பெண்ஜாதியும் மனம் நொந்தார்கள்.

**இ**வ்வாறு வெகுநாள் கழிந்த பின்னர் தெய்வ கடாக்ஷத்தினால் சௌதப்பனுக்கு ஒரு அழகிய புத்திரன் பிறந்தான்.

சௌதப்பன் அளவிலாச் சந்தோஷமடைந்தான். அக்குழந்தைக்கு குமார் என்று பெயரிட்டார்கள். அழகே இந்தக்குழந்தையாய் உருக்கொண்டதோ வென வியக்கும்படி குமார் நாளுக்கு நாள் விருத்தியடைந்து தன் பெற்றோர் மனதைக் களிப்பித்தான். ஆனால் சௌதப்பன் இச்சமதியற்ற சுகம் எந்நாளும் அனுபவிக்ககொடுத்து வைக்கவில்லை. திடீரென்று ஒருநாள் குமார் மாணமற்போக தன் தலையில் இடிவிழுந்தாற்போல் கலங்கினான். குமார் பெற்றோருக்கு ஒரே புதல்வனானதினால் வெகு அன்புடன் வளர்க்கப்பட்டு அநேக விலையுள்ள ஆபரணங்கள் அணிந்திருந்தான். அன்று காலையில் தான் நாடெங்கும் அலைந்து கண்கட்டி ஜாலவித்தை செய்யும் ஒரு கூட்டத்தார் சௌதப்பன் வீட்டெதிரில் தங்கள் ஜாலவித்தைகளைச் செய்தார்கள். அவர்கள் வித்தை முடிந்து சென்ற பின்னரே குமார் காணமற் போனான். வித்தை செய்தவர்களாவது அல்லது வேடிக்கைப்பார்த்த ஜனங்களில் ஒருவராவது குழந்தையை எடுத்துக்கொண்டு போயிருக்கலாம். உடனே ஊரெங்கும் ஆட்களனுப்பித் தேடுவித்தான். டாணாக்காரர்களுக்கு வேண்டிய வெகுமதி அளிப்பதாகவும் வாக்களித்தான். இது விஷயத்தில் அவன் செலவிட்ட பணம் எண்ணிமுடியாது. ஆனால் எல்லாம் அவலமாயின. அவன் குலத்துக்குத் திடீரென்று தோன்றின கதிரொளி என்றைக்கும் இருண்டது.

மேற்கூறிய சங்கதி நடந்து பன்னிரண்டு வருஷங்கள் கடந்தன. சௌதப்பன் பிள்ளையிழந்த விசனத்தினாலே, சம்பாதனையில் ஆசையையொழித்து வர்த்தகத்தையும் கைவிட்டான். பெருமையும் பிரியமுமுள்ள பெண்சாதியைத் தவிரத் தனக்கு இவ்வுலகத்தில் வேறு சம்மந்தமில்லையென்று எல்லாவற்றையும் துறந்தான். இத்துலையாக்கஷ்ட காலங்களிலும் அவன் மனைவி ஒரு நாளும் கடிந்து பேசாள். இதுவும் கடவுள் ஆணையென்று அதற்கு உட்பட்டாள். இதுவரையில் அவள் மனதிணங்க நடந்த அவள் புருஷன் இக்கஷ்டகாலங்களில் அவள் மனம் வருந்த நடக்கலாயினான். அவன் எவரையும் கடு கடுப்பான். அவனைக் களிப்பிப்பது கஷ்டம். லக்ஷ்மியோ இரவும் பகலும் பிள்ளையை நினைந்து நினைந்து அழுது தீராநோய்க்காளாகினாள். தன் மனைவி நோயினால் வருந்துவதைக் கண்ட சௌதப்பன் இது வரையில் தன்னால் மறக்கப்பட்டிருந்தபோதிலும் தன்னிடத்தில் ஆசைகுன்றாது நல்லொழுக்கத்துடனும் பொறுமையுடனும் நடந்துகொண்ட லக்ஷ்மி தேவியை தன்னிடமிருந்து சாவு பிரித்து விடுமோவெனப் பயந்து மிகவும் துக்கித்தான்.

நாட்டுவைத்தியர்களையும் இங்கிலீஷ் வைத்தியர்களையும்அழைப்பித்தான். அவர்களெல்லோரும் அவன் மனைவி பிழையாள் என்று சொல்லிவிட்டார்கள்.



சௌதப்பனுடைய அயல் வீட்டார்களில் ஒருவனாகிய தாஸப்பனுக்கு பயிராகிகளுடன் அதிக பழக்கம். அவன் அவர்களை அழைத்து பிச்சையிடுவதுண்டு. அவர்கள் வார்த்தையிலும் மருந்திலும் அவனுக்கு அதிக நம்பிக்கை. அயலாரில் எவனாவது நோயினால் வருந்தினால் அவனுக்கு சிநேகிதரும் பயிராகிகளில் ஒருவருமான கிஷோரிதாஸ் என்பவரிடம் போய் ஆலோசிப்பான். அவர் மந்திர தந்திரம் கற்று துர்தேவதைகளையோட்டுவதில் மகா சாமர்த்தியமுடையவரென்று பெயரெடுத்தவர். இவ்விடந்தான் தாஸப்பன் லக்ஷ்மி தேவியைக்குறித்து ஓடினான். கிஷோரிதாஸ் பரம தயாளுவானதினால் உடனே லக்ஷ்மிதேவியை வந்து பார்த்தார். அவர் அவள் கைதொட்டு நாடி பார்க்கவேயில்லை. அவர் சில நேரம் தியானம் செய்பவர்போல் கண்ணைமூடிக்கொண்டிருந்து திடீரென மயக்கத்தினின்றும் விழித்தவர்போல் பின்வருமாறு கூறினார்.

“ஓ காளியம்மையே! உன் ஆகாரம் கொடுக்கப்படாமற்போகாது. என்ன சொல்லுகின்றாய் என் தாயே! இந்தப்பாவி பிழைக்கவேண்டுமானால் அவ்வுயிர்க்கு பதில் உயிர் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றாயா? உன் உத்திரவின்படி அவ்விதமே காவு கொடுக்கப்படும். இவ்வெளிய ஸ்திரீயின்பேரில் க்ஷாத்திரம் வைக்காதே” இம்மாதிரி சொல்லி முடிந்தவுடன் மறுபடியும் கண்ணை மூடி தன்னை மறந்தவர் போலிருந்தார். இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்றவர் அந்நோயாளியாகிய லக்ஷ்மிதேவியின் புருஷனும் தாஸப்பனுந்தான். மகா பக்தியுள்ளவும். பார்ப்பதற்குப் பயங்கரமுமான அத்தேவதை பயிராகியின் மூலமாய் தெரிவித்த அபாராதத்தை அவ்விருவரும் கேட்க நடுங்கித்தயங்கினார்கள். வேறொரு ஜீவனை காவு கொடுக்காமற்போனால் லக்ஷ்மிபிழையாளென்று தெரிந்துகொண்டார்கள் காவுகொடுப்பது அவர்களுக்கு எவ்வளவு அருவருப்பாயினும் லக்ஷ்மி தேவியின் உயிர்க்காக அவர்கள் துணியவேண்டியதாயிற்று.

காலதாமதமின்றி அக்கொடிய காளியை சாந்தப்படுத்துவதற்கு வேண்டிய காவையடைய விரும்பி சௌதப்பனும், பூசாரியும் வீடு விட்டு புறப்பட்டார்கள். சூரியனும் மறைந்தான். இராக்காலமோ இருண்டு தூறிக்கொண்டிருந்தது. அச்சிறு நகரத்தின் சஞ்சலமற்றிருக்கும் தெருக்களில் புயல் காற்று வீசியது. அன்றையதினம் அமாவாசையும் சேர்ந்தது. அத்தெருக்களுள் லாந்தர்களினின்றும் உண்டாகும் மங்கிய வெளிச்சத்தைத்தவிர வேறொன்றும் இடையாது. அந்நேரத்தில் தெருக்களில் நடப்பே இடையாது. வெகுநேரம் அவர்கள் சந்துபொந்துகளெல்லாம் அலைந்து திரிந்தும் அவர்கள் தேடிய காவு அகப்படவில்லை. சௌதப்பன் மனம் பிளர்ந்தான். ஆனால் அவன் சிநேகிதனோ விடா முயற்சியுள்ளவன். சௌதப்பன் தயங்குவதைக்கண்டு நீ ஒரு ஆண்

பிள்ளையா? உன் மனைவியைக் காப்பாற்றும் பரிகாரம் உனது கையிலிருக்கையில் அவளை சாவக்கிரையாக்குவது உனக்கு வெட்கமில்லையாவென்றான். இவ்வாறு சொல்லிச் சில நேரத்திற்குள் மங்கி மங்கி யெரிந்துகொண்டிருந்த தெரு லாந்தர் ஒளியினால் ஒரு கட்டை வண்டியின்கீழ் ஒரு மனித உருவம் படுத்திருப்பதைக் கண்டார்கள். இதோ பார் கடைசியில் நமக்கு நல்ல தருணம் வாய்த்தது என்று தாஸப்பன் சொல்லிக்கொண்டு குனிந்து தூங்கும் அம்மனிதன் முதுகில் தட்டினான். அம்மனிதன் திடுக்கிட்டு எழுந்து பயந்தவன்போல் தன்னைச்சுற்றிலும் பார்த்தான். அவன் முகம் லாந்தரின் வெளிச்சத்தில் திரும்ப இவர்களிருவரும் அவன் 12 அல்லது 13 வயதுள்ள வாலிபன் என்று தெரிந்துகொண்டார்கள்.

அவ்வெளிச்சம் அமாவாசை இருளைப்போக்கப் போதாதாயினும் அவ்வாலிபனது முகத்தின் நற்குறியும் அழகும் அவர்களுக்குத் தெரியாமற் போகவில்லை. அவ்வாலிபனைப் பார்த்ததும் சௌதப்பன் மனது உருகியது. ஆனால் அவன் சிநேகிதன் தாஸப்பனோ கல் மனதுடையவன். தாஸப்பன் அச்சிறுவனை நோக்கி அடா பையா! நீ யாவன் என்று கேட்டான். நான் ஒரு ஏழைப்பையன்; என் சுற்றத்தாரைத்தேடி வந்தேன். எனக்குத் தீங்கு செய்யாதேயுங்கள். நான் இன்று இரவு இவ்விடம் படுத்துக்கொள்ளும்படி விடுங்கள். என்று மிகவும் வணக்கத்துடன் மறுமொழி கூறினான்.

சீ, சீ, நான் தீங்கு செய்வேனென்று உனக்கு என்னமாய்த் தெரியும். ஆனால் இக்குளிரில் நடுங்குவதைக்காட்டிலும் என் வீட்டில் நல்ல உணவுண்டு. அடக்கமான படுக்கையில் படுத்துத் தூங்க என்னுடன் வருவதற்கு உனக்குப் பிரியமில்லையாவென தாஸப்பன் அச்சிறுவனைக் கேட்டான். அதற்கவ்வாலிபன் ஐயா! தங்களுக்கு அநேக வந்தனம்; தங்கள் கட்டளைப்படி நடக்கக்காத்துக்கொண்டிருக்கிறேன் என்றான்; ஆனால் என்னுடன் வாவென்று தாஸப்பன் வழி நடத்தினான்.

அந்நகரவாசிகள் தாஸப்பன் நடத்தின வழியாய் நடப்பது அரிது. அக்குறுகலான சுற்றுவழி கிராமத்தின் எல்லைக்கப்புறம் கொண்டுபோய் விட்டது. தாங்கள் வீடுகளெல்லாம் தாண்டி வந்துவிட்டதாகத் தெரிந்துகொண்டார்கள். பையனுக்கோ மனதில் பயம் உண்டாயிற்று. சீக்கிரத்தில் வீடுபோய்ச் சேரலாமென்று எதிர்பார்த்திருந்த அச்சிறுவனுக்கு தன்னை திடீரெனக்காப்பாற்ற வந்தவர்கள் அழைத்துச் செல்லும் இடம் அவனுக்குத் தோன்றவில்லை. தான் தனிமையாயிருப்பதால் அவர்களைக்கேட்பதற்கும் பயம். அவர்கள் கொலைப்பாதகர்களோ வென்றுகூட அவனுக்குச்சந்தேகம். இவர்கள் தனக்குக்கெடுதல் செய்வதற்குக்கூட தன் கைகால்களில் ஆபரணமும் நல்ல உடையும் இல்லாமலிருக்கும்பொழுது தன்னை



இவ்விதம் அழைத்துச்செல்லும் அவர்கள் எண்ணம் என்னவோவென்று ஆச்சரியப்பட்டான். ஆ! என்மனம் சஞ்சலிக்கின்றது. ஆனாலும் யோசித்துப் பார்ப்போம் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இம்மூவரும் நகரத்தைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டார்கள். சுமார் 2, 3 மைல்தூரம் நடந்தும் இன்னும் இவ்விருவரும் கோரியவிடம் வரவில்லை. பையனும் தனக்குள் தைரியப்படுத்திக்கொண்டு சென்றான். வழி நடத்திவந்த தாஸப்பன் திடீரென நின்றான். அவனுக்கு எதிரில் சுமார் 10 கஜம் தூரத்தில் பழைய காலத்து கல் விளக்கின் மங்கின வெளிச்சத்தில் தெரிந்தும் தெரியாமலுமிருந்த ஒரு கரடுமுரடான கட்டடத்தைக் கண்டான். அதனுள் பார்த்தவர் மனதைக் கலக்கும் கருத்த பயங்கரமான காளியின் உருவத்தையும் பார்த்தான். பையன் பலவிதமாகச் சந்தேகித்தான். மனது பதைபதைத்துத் துடித்தது. பேசுவதற்கோ நாவெழவில்லை; ஆனால் அவர்கள் அவன் கழுத்தில் பூமாலை போட்டவுடன் அவன் சந்தேகங்களெல்லாம் ஒழிந்தன. அவர்கள் தன்னைக் காளிக்கு நரபலியாக்கப் போகிறார்களென்று தெரிந்துகொண்டான்.

ஐயய்யோ! என்னைக் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள். என்னை நீங்கள் இவ்விதம் கொல்லும்படி நான் என்ன குற்றங்கள் செய்தேன் என்று பரிதாபப்படும்படி ஏங்கி யழுதான்.

அட! முட்டாள் பையா! பேசினால் தெய்வகுற்றம் செய்தவனாவாய், காளியம்மனுக்கு இரையாகி அவள் பசியைத் தீர்ப்பதற்கு எல்லாருமே புண்ணியசாலிகளாகமாட்டார்கள். உன் நல்ல காலத்தைப் புகழ். பலியிடுவதை நிந்தித்தால் அது பலனற்றுப் போம் என்று தாஸப்பன் சொன்னான்.

அச்சிறுவன் கண்களினின்றும் தண்ணீர் ததும்பி கன்னங்களின் வழியாக தாரை தாரையாய் பெருகிற்றே யொழிய அவன் ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை. சௌதப்பன் தயாளுவானதால் அப்பையனின் கஷ்டநிலையைப்பார்க்க அவன் மனது உருகியது. முகத்தைக் கைகளினால் மூடிக்கொண்டு கண்ணீர்விட்டுத் தனக்குள் அழுதான். அவன் சிநேகிதனோ கல்நெஞ்சமுள்ளவன். சௌதப்பன் கைகளாலேயே அவ்வாலிபன் பலியிடப்பட வேண்டுமென்றான். சௌதப்பன் கண்களில் நீர்ததும்ப இச்சாவு கொடுப்பதைத் தாமதித்துச்செய்யலாமென்று வெகுநேரம் மன்றாடியும் அவன் சிநேகிதன் பிடிவாதத்தைக் கண்டு அவனே அக்காரியத்தை முடித்துவிடும்படி கேட்டுக்கொண்டான். அதற்கும் தாஸப்பன் சம்மதியாதது அறிந்து கை நடுநடுங்க பளபளப்பான கத்தியைப் பிடித்தான். அதைக்கண்டவுடன் இடி வீழ்ந்தாற்போல் அச்சிறுவன் மனங் கலங்கினான்.

அத்தருணத்தில் அச்சிறுவனின் மனதில் நிச்சயமான ஒரு உத்தேசம் உண்டாயிற்று. அது உறுதி பெறுமோவென்று மயங்கினான். இர

ண்டோருமிந்நங்களில் அந்த சம்ஸயமும் அவனுக்கு நிவர்த்தியாய்விட்டது. பெரிதும் மனோதிடமுற்றான். காளியை வாழ்த்தினான். எல்லாம் தெய்வானுக்கிரகமென்று சிந்தை களித்தான். உடனே சௌதப்பனைப் பார்த்து ‘‘ஐயா, தங்களின் கத்தியைக் கொஞ்சம் தளரவிடவேண்டும்; ஒவ்வொரு காரியத்தையும் ஆய்ந்து ஓய்ந்து செய்யவேண்டும்; பேய், பிசாசுகளை ஓட்டுகிறேன்—இன்னும் வியாதிகளை சௌஸ்தப்படுத்துகிறேன்—பலியிடவேண்டுமென்று சொல்லுகிற தாஸப்பனைப் போன்றவர்களின் வார்த்தைகளை நம்பக்கூடாதென்றும் கூறினான். தக்ஷணமே தாஸப்பனுக்குக் கோபம் பொங்கிற்று! சீக்கிரம்—சீக்கிரம் என்று சௌதப்பனைத் துரிதப்படுத்தினான். கத்தியின் முனை கழுத்தில் விழப்போகும் தருணத்தில் திடீரென்று சிறுவன் மாயமானான். காளியைப் பிரார்த்தித்து அதில் சவனம் செலுத்திய அவ்விருவரும் வாலிபன் ஓடுவதைக்கண்டு பின்தொடர்ந்தும், தங்களுக்கு அந்த வாலிப சக்தியின் தீவிரமின்மையால் பெருமூச்சு அதிகரிக்கவே, ஓடமுடியாமல் பின் நின்றார்கள். இரண்டு தினங்களாக அவனைப் பல இடங்களிலும் தேடித் திரிந்துவிட்டு, கடைசியாக வீட்டிற்குத் திரும்பினார்கள். காளியின் கோபத்திற்கு சௌதப்பன் பெரிதும் அச்சமுற்றவனாய் தன் மனைவிக்கு மரணம் உறுதியென்று கலங்கி தாஸப்பனுடன் தன் இல்லத்திற்குட் புகுந்தான். அங்கு ஒரு ஆச்சரியமான காட்சியை அவ்விருவரும் கண்டனர். இத்தனை நாட்களாகப் படுக்கையும் பாயுமாக இருந்த லக்ஷ்மிதேவி வியாதியினின்றும் தேறி, புன்னகைத் தோற்றத்துடனும் தன்னருகே ஒரு சிறுவனை உட்காரவைத்துக்கொண்டு ஊஞ்சலாடியபடியிருந்தாள்.

இச்சிறுவன் யார்? காளி கோயிலினின்றும் தப்பி வந்த அவ்வாலிபன் தான்! அவனைத் தாஸப்பன் கண்டதும் “ஹா! அகப்பட்டாய்” என்றான். உடனே அவ்வாலிபன், “தாஸப்பா! நீ காளிக்கு நரபலி தந்து லக்ஷ்மீதேவியை சௌக்கியப்படுத்தப் பார்த்தனை; நானோ அப்பலியை நிறைவேறவொட்டாமற் செய்து அக்காரணத்தினாலேயே லக்ஷ்மிதேவியை குணப்படுத்தினேன் என்றான். சௌதப்பனுக்கு இதன்பொருள் விளங்கவில்லை. உடனே லக்ஷ்மிதேவி அவ்வாலிபனை முத்தமிட்டுக்கொண்டு இவனே நமது காணமற் போன குமார் என்றாள். சௌதப்பன் அப்படியே பிரமித்து நின்றான். தாஸப்பனும் திகைத்துப் போனான். தன்செயலுக்குநாணினான்.

உடனே குமார் தன் பிதாவை வணங்கி, காளி கோயிலில் தானே சௌதப்பனைத் தன் தந்தை தான் என்று தெரிந்துகொண்டதாயும், அச்சமயம் என்ன தான் விவரமாகத் தெரிவிப்பினும், தாஸப்பன் அந்த நம்பிக்கையைச் சிதறும்படி செய்துவிடுவானென்றும் ஊகித்து உடனே ஓட்டம் பிடித்து படுக்கையிற் கிடந்த தனது தாயாரிடம் வந்து சேர்ந்ததாயும், தன்னைக்கண்டதும் தனது தாய் தன் மனோவியாதி நீங்கி சுகம் பெற்றாளென்றும், ஜாலவித்தைக் கூட்டத்தாரால் தான் களவாடப்பட்டதாயும் கூறினான். சிதறுண்ட குடும்பம் மறுபடியும் ஒன்றாகி, குமாருக்கு விவாகமும் தீவிரத்தில் நடக்கப்போகின்றது. பிதாவுக்குக் குழந்தையின் உருவம் மறைந்திடினும், பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்ற தாய்க்குத் தன் குழந்தைதான் என்பது தெரியாமற் போகுமோ! தீமையினின்றும் நன்மை பிறந்தது!!

---

DEC 1914 MADRAS.


# பிரஜாநுகூலன்.

புத்தகம் 9. திரிச்சிராப்பள்ளி. 1914ம் வரு நவம்பர் மீ சஞ்சிகை 5.


## மனோகரமான குறிப்புகள்.

ஹிந்துக்களின்கொள்கைகள் சிலாக்கியமென்பதற்கு பாரதம் இராமாயணம் முதலிய இதிகாஸங்களிலும், புராணங்களிலும் உள்ள உதாரணங்களே போதுமானவை. ஒரு சமயம் துருவாசர் என்னும் மகரிஷி துரியோதனனிடம்சென்று அன்னம் உண்டார். அந்த துராத்மாவின் அன்னம் மகரிஷியின் உதரத்தில் பிரவேசமானவுடன் அவருக்கு துர்யோசனையும் துர்க்குணமும் உண்டாயின. ஆதலின், அக்காலத்தில் வனவாஸிகளான பாண்டவர்களிடம் சென்று பிக்ஷை கேட்டு அவர்கள் கொடாமற்போனால் சபித்துவிடலாமென்ற கெட்ட எண்ணந்தோற்றியது. இது துரியோதனனுடைய அன்னத்தைப்புசித்த பிரபாவமன்றோ. ஆயினும் பகவானுடைய அருளால் அக்ஷயபாத்திரத்தில் ஒரு பருக்கையொட்டியிருக்கக்கண்ட திரௌபதி துருவாஸருடைய இஷ்டப்படி பஞ்சபக்ஷ்யபோஜ்யங்களைப் பரிமாறினாள். ஆகவே மனுஷ்யருடைய குணாகுணங்களை யறியாமல் அவனிடம் அன்னத்தைப் புசிக்கலாகாதென்று பெரியோர் விதியேற்படுத்தியிருக்கிறார்கள். அதையுணராது இக்காலத்து இங்கிலீஷ் வித்யார்த்திகளிற் சிலர் கண்ட விடங்களிலுண்டு களித்துத் தங்களுடைய தேஜஸ்ஸைப் போக்கிக் கொள்கிறார்கள். அந்தோ! இது பரிதாபமென்க.

ஹிந்துக்கள் தங்களுக்குத் தெரிந்த மந்திரங்களையும் பச்சிலைகளையும் வேதார்த்தங்களையும் பிறருக்கு வெளியிடுவதில்லையென்ற அபவாதம் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக்காரணம் வேறு. சிஷ்யர்களின் குணாகுணங்களையறியாமல் இரகஸ்யங்களைச் சொல்லிக்கொடுக்கக்கூடாதென்பதும் அவ்வாறு கற்பித்தால் அதனால் பற்பல அனர்த்தங்கள் விளையுமென்பதும் ஆரியர்களின் கருத்து. முற்காலத்தில் ஒரு ரிஷி தம்முடைய சிஷ்யனுக்குசிருஷ்டிக்கும் விதத்தைக் கற்பித்தார். அவன் சொல்லிக்கொடுத்த மந்திரம் பலிக்கிறதாவென்று பார்க்கவேண்டி ஸர்வாங்க சுந்தரியான ஒரு ஸ்திரீ யுண்டாகவேண்டுமென்று நினைத்தான். உடனே ஒரு காமினி தோன்றினாள். அவளுடைய அழகைக் கண்டு சிஷ்யனுடைய மனம் மயங்கியது. உடனே அந்த ஸ்திரீ நாயாகக் கடவுள் என்றெண்ணினான். தக்ஷணமே நாய் எதிரிலிருந்த ஹோமாக்கினியில் மலமூத்திராதிகளை வருஷிக்கத் தொடங்கியது., சீ! சீ! சீ! என்ன காரியம் செய்தோமென்று அந்நாயைக் குரங்காக்கினான். வானரம் மரத்திலேறிக்கொண்டு பழங்களையும் இலை

களையும் உதிர்த்து வேண்டிய சேஷ்டைகளைச் செய்தது. சிஷ்யன் வெகுண்டு அக்குரங்கைப் புலியாக்கினான். தக்ஷணமே புலி சிஷ்யனைக் கடித்துக் கொன்றது. ஆகவே சிஷ்யனுடைய புத்தி நுட்பத்தை யறியாமல் இரகஸ்யங்களைச் சொல்லலாகாதென்றறிந்து கொண்டார்.

**தேவதாசிகள்** கோயிலில் ஆடுவதும் பாடுவதும் பிசகென்றும், பக்தர்களுடைய மனதைத் தீயவழியில் பிரவர்த்திக்கச்செய்யுமென்றும் அன்னிய மதஸ்தர்கள் கூறுகின்றனர். இவர்கள் உண்மையை ஆய்ந்துணராமல் பேசுவதைப்பற்றி வியஸனப்படுகிறோம். கோயிலுக்கு ஊழியம் செய்யப் புருஷர்களேயன்றி ஸ்திரீகளும் அவசியமென்பதைக் கிறிஸ்தவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கல்லறையில் புஷ்பங்களைப் போடுகிறார்களே. செத்த பிணம் வாசனை அறியுமோ? இதுமட்டும் அநாகரிகமன்றோ? அநேக புருஷர்களும் ஸ்திரீகளும் சேர்ந்து கைகோர்த்து நாட்யமாடுகிறார்களே. இதுமட்டும் சிலாக்யமோ? ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளை உபசரிப்பதற்காக நாஸுகளை நியமித்திருக்கிறார்களே. அவர்கள் இன்பமாய்ப் பேசுவார்களென்றும் மனோக்ஞமான சுசுரூஷை செய்வார்களென்றும் கருதியன்றோ? இதைப்போல் இனிய குரலுள்ள தாஸிகளைக் கோயிலில் வரச்சொல்வது பகவானுக்குப் பிரீதிகரமாய்ப் பாடி ஸந்தோஷிப்பிக்கவன்றோ? இதனால் என்ன தப்பிதம் உண்டாய்விடும்? பிற்காலத்தில் இவர்கள் துர்நடத்தைக்காரர்களாய்ப் போய்விட்டதால் தேவதாஸிகளை நியமிக்கும் ஏற்பாட்டையே நீக்கவேண்டுமோ? இவ்வேற்பாடு ஹிந்துமதத்தின் பெருமையைக் குறைத்துவிட்டதாய் எண்ணுவது பிசகேயாம்.

“**தேகம் அழிந்தபின் ஜீவன்** எங்கே செல்லுகிறது? சரீரத்துக்கும் ஜீவனுக்கும் என்ன சம்மந்தம்? ஸ்தூல சரீரம் யாது! சூக்ஷ்ம சரீரம் யாது? மனம் புத்தி ஆகிய இவைகளின் தன்மையென்ன? ஐம்புலன்கள் யாவை? அபிமானம் எப்படி உண்டாகிறது? அபிமானத்தால் விளையும் கேடுகள் எவை? என்னும் இக்கேள்விகளை நாம் கேட்டுக்கொண்டு அவைகட்குத்தக்க ஸமாதானம் தெரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் தத்துவஞானமுண்டாகும். ஒவ்வொரு வஸ்துவின் உண்மையும் தன்மையும் புலப்படும். விவேகிகள் எப்போதும் தங்கள் காலத்தை ஞானத்தையடைவதிலேயே செலுத்துவார்கள். அவர்கட்கு ஞானநூல்களைப் படிப்பதே ஆநந்தகரம்.

“**உலகம் எப்போது உண்டாயிற்று**” எனில், சில மதஸ்தர்கள் மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னென்றும், சிலர் அதற்கும் முன்னென்றும் கூறுகின்றனர். பூமிசாஸ்திர பரிசோதகர்கள் மண்ணின் நிறத்தைக்கண்டு அநேக ஆயிர வருஷங்களுக்குமுன் பூமி உண்டானதாகச் சொல்லுகின்றனர். உலகம் அநாதியாயுள்ளதென்பதே சரி. இன்னகாலத்தில் உண்டானதென்று சொல்ல மனித சக்தியால் முடியாது. இதேமாதிரி ஜீவனும் அநாதியே. ஜீவன் இன்னகாலத்தில் உண்டாயிற்றென்று சொல்ல முடியுமா? சில மதஸ்தர்கள் கடவுள் ஜீவனைப் படைத்தார். உலகத்தைப்படைத்தார் என்பார்கள். கடவுள் எப்போது அவைகளைப்படைத்தார். அவற்றைப் படைக்குமுன் தாம் மட்டுமே யிருந்தாரா? எதற்காகப்படைக்கவேண்டும். தாம் ராஜ்யாதிகாரம் செய்யவா? வஹிக்கவா? அல்லது விளையாடவா? அல்லது தமது பெருமையை எல்லோரும் அறிந்து ஆச்சரியப்படவா? இவைகளில் ஏதேனும் ஒன்று காரணமாயின் படைத்தலாகிய தொழிலைச் செய்ய



முன் அந்தக்காரணம் இல்லாதிருப்பானேன்? பகவான் அரூபியன்றோ? விகாரமற்றவனன்றோ? அவரை விக்கிரகமாய்ப் பாவித்து வணங்குவது குற்றமெனக் கூறுவோர் அவருக்குக்காலும் கையும், வாயும் உதடும், மூக்கும் கண்ணும், வயிறும் மார்பும் கொடுத்து ரூபியெனல் தகுமா? இக்கேள்விகட்கெல்லாம்சமாதானம் சொல்வதுஎளிதாமா? ஆதலின் ஜீவனும். பிரபஞ்சமும் அநாதியென்பதுதான் பொருந்தும்.

**மாயை** என்பதேன்ன? மாயையை ஒருவித சக்தியென்று வைத்துக்கொள்வோம். இந்த சக்தி இரண்டு வகைப்படும். ஒன்று விக்ஷேபசக்தி. மற்றொன்று ஆவரணசக்தி. வஸ்துக்களைத் தோற்றுவிக்கிற சக்திக்கு விக்ஷேபம் என்றும், வஸ்துவின் சுபாவத்தை மறைக்கிற சக்திக்கு ஆவரணம் என்றும் பெயர். விக்ஷேபசக்திக்கு மாயையென்றும் ஆவரணசக்திக்கு அவித்தையென்றும், சொல்லலாம். விதையில் முளைக்கிற சக்தி எப்போதேற்பட்டது என்னும் கேள்வியைவிட, விதையிலிருக்கும் முளைக்கிற சக்தியை நசிக்கச்செய்ய வழியென்னவென்று வினவி உபாயத்தை யறிந்துகொள்வது புத்திசாலித்தனமன்றோ? அதுபோல் ஜீவனுக்கேற்பட்ட மாயை எப்போது உண்டாயிற்றென்று கேட்பதைவிட அம்மாயையையொழித்து முக்தியடைவதெப்படியென்று அதற்கேற்ற மார்க்கத்தை யறிவது சிலாக்யமன்றோ? வீடு தீப்பட்டெறிகிறதென்றால் உடனே அதை யவிக்கவேண்டுமேயன்றி ஏன் தீப்பற்றியதென்று கேள்வி கேட்பது மூடத்தனம்.

**கானம்** சிங்கார நவரஸங்களுக்கும் அநுகுணமான மனோவிருத்தியைக்கொடுக்கிறது; இதன் சக்தியால் கடின ஹிருதயம்கூட ஸரஸமாகின்றது. எப்போதுமே ஸுவசனங்களாலும் மிருது பாஷணத்தாலும் மனிதர்கள் வசமாவார். பிரிய சொற்களையும் நயவசனங்களையுமே ஸதாகாலமும் வழங்கவேண்டும். மனுஷ்யன் எண்ணுகிற எண்ணங்களும், செய்கிற செய்கைகளும் அவனை விருத்திபடுத்திக் கொண்டேயிருக்கின்றன. இருள் ஆகுமுன், இராக்காலம் வருமுன் எப்படிப் பள்ளர்கள் தான்யங்களைப் பரபரப்பாய் அறுக்கிறார்களோ அப்படியே பிராணன்போகுமுன் மரணம் கிட்டுமுன் நாம் செய்யவேண்டிய நற்காரியங்களைச் செய்து முடிக்கவேண்டும்.

“**ஆதியைத்தொழு**” என்று ஔவை கட்டளையிட்டிருக்கிறாள். அதன் பொருள் எல்லாவற்றுக்கும் மூலகாரணமாயிருக்கும் முதல்வனாகிய பகவானைத் தியானம் செய்யென்பது. கஷ்டமுண்டானாலும் அவைகட்கென்ன காரணமென்றறிவது புத்திசாலிகளின் இயல்பு. ஒரு இடத்தில் கூடாரமடித்த துரை அங்கே ஸுவாஸனை வீசியதைக்கண்டு என்னகாரணமென்றார். சேவகர்கள் ஸமீபத்தில் சந்தன விருக்ஷங்களிருக்கின்றன. அத்துடன் அருகே பூந்தோட்டங்களுமுண்டு என்றனர். ஓகோ அவையன்றோ காரணம் ஆதலின் இனி எப்போதும் கூடாரத்தை இங்கேயே அடியுங்கள் என்று உத்திரவு செய்து தாம் ஷெ விருக்ஷத்தையும் சோலையையும் நாடிச்சென்றார். இதுபோல் நாம் அநுபவிக்கும் சுகங்களுக்கும் நம்முடைய ஜனனத்துக்கும் ஆதிகாரணமான கடவுளையறிந்து அவரையே ஆசிரயித்துக்கொண்டிருப்பதுநன்மை. நோயால் கஷ்டிப்படும்போது அதைத் தீர்ப்பதற்கான பச்சிலையைத் தேடிச் செல்வது வழக்கம். அம்மாதிரியே ஸர்வ துக்கங்களையும் நாசம்செய்யவல்ல பகவானுடைய பாதங்களை நாம் தேடிச் செல்லவேண்டுமன்றோ? அவருடைய ஸ்மரணையே நம்மனதிற்பதிந்திருக்குமாயின் அதைவிட வேறு ஆநந்தம் வேண்டியதில்லை.

" அல்லலே பெண்மணைப் பிறந்தலாங்கதி
னல்லலேயிளமையிற் சிறந்தலாங்கதி
னல்லலே கட்டழகுடைமை யாங்கதி
னல்லலே யிரவலர்சார் பினாகுதல்."

இவ்வுலகத்தில் பெண்ணாகப் பிறத்தலே அல்லலுக்கிடமாகும். வயோதிகத் தன்மை யடையாமல் பாலிய தசையிலிருப்பது அதனினும் அல்லலாகும். இளமைப் பருவத்தோடுங்கூடப் பேரழகு அமைந்திருத்தல் அதனினும் அல்லலாகும். தரித்திர தசையிலுள்ள ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டிருத்தல் அதனினும் பெருத்த அல்லலாகுமென்று பொருள்படும் இவ்வற்புதமான பாசுரத்துக்கு உதாரணமாக ஒருகதை எழுதுகிறோம்:—

ஒரு ஊரில் தரித்திரப் பிராமணனொருவன் மூன்று தாரமிழந்து சற்றேறக்குறைய அறுபது வயதான பின்பும் ஒரு பிராமணச்சிறுமி அழகி சிறந்தவளாயிருந்ததைக்கண்டு ஆசை மிகுதியால் அவளை விவாகம்செய்து கொள்ள நிச்சயித்தான். அப்பெண்ணின் தாய்தந்தையர்கள் சற்றேனும் யோசனையின்றி அக்கிழப்பிராமணனுக்கு அவளை விவாகம் செய்து கொடுத்துவிட்டார்கள். அவள் பெயர் பத்மாவதி. அவள் ரூபலாவணியத்தில் அக்காலத்து அந்தப் பிரதேசத்திலிருந்த எல்லாப் பெண்களிலும் மிகச் சிறந்தவளாயிருந்தாள். அவளுடைய குணாகுணங்களைக் கண்டறியாமலே அவ்வேழைப் பிராமணன் சமானாதிகமற்ற அவளது அழகின் விசேஷத்தால் மதிமயங்கி அவளை விவாகம் செய்துகொண்டான்.

வறுமையின் மிகுதியால் அவ்வந்தணனும் பத்மாவதி யென்னும் மனைவியும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில், காசிக்கு யாத்திரை செய்துவந்தால் பற்பல இடங்களிலும் யாத்திரைபண்ணிக் குபேரசம்பத்துடன் வீடுவந்து சேரலாமென்றெண்ணி, ஒருநாள் அக்கிழவன் தன் கையிலிருந்த கொஞ்ச திரவியத்தைத் தன் மனைவியிடத்தில் கொடுத்துத் தான் கொண்டகருத்தைத் தெரிவிக்க, அவள் என் பிராணநாயகா! அப்படியே செய்க என்று கூறிச் செலவுகொடுத்தனுப்பினாள். பத்மாவதி தன்னுடைய நாயகனது பிரிவாற்றாமையால் மனத்தளர்ச்சியடைந்து, அவன் திரும்பிவரவேண்டிய நாளை எண்ணி யெண்ணி உயிர்வாழ்ந்து கொண்டிருக்கையில், அவ்வூர் அரசன் ஒருநாள் அவளைக்கண்டு அவளது நிகரற்ற பேரழகினால் மதிமயங்கித் தனக்கு அதற்கு முன்பே மூன்று நாயகிமாரிருந்தும் அவளை எவ்வகையாலும் விவாகம் செய்துகொள்ளவேண்டு



மென்னும் துர் எண்ணங்கொண்டான். மறுநாள் அரசன் தன் அரண்மனைத்தாதிகளை நோக்கி நீங்கள் எவ்விதத்திலாவது இவ்வூரிலுள்ள ஏழைப் பிராமணனது பத்தினியாகிய பத்மாவதியை எனக்கு மணஞ்செய்விக்க வேண்டுமென்று குறையிரந்தான். அவர்கள் அங்ஙனமே பத்மாவதியண்டைவந்து அம்மா! உன் அழகு முழுவதும் விழலுக்கிறைத்த நீர்போலும், நிர்மாநுஷ்யமான காட்டில் புஷ்பித்த தாமரைபோலும் பயனற்றதாய்விடுகின்றதே; இவ்வூரரசனை நீ மணம்புரிவாயாகில் உனக்கு எல்லாச் சம்பத்தும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலாகி நீ இப்பிறவியினாலாகிய பெரும்பயனை யடையலாமே என்று பலவாறாகத் துர்ப்புத்திகூற, அதைக்கேட்டு பத்மாவதி பேதமையால் மனத்தளர்ச்சியடைந்து அப்படியே ஆகட்டுமென்று சம்மதிக்க, உடனே அரசன் அவளை விவாகம் செய்துகொண்டான். அரசன் தன் அரசாட்சிக்குட்பட்டகுடிகள் யாவரும் தனக்குக் குழந்தைகள் என்னும் முறையை நாடாமலும், பிறர் மனை விழைதலைப்பற்றிக் கூறியிருக்கும் அடியிற்கண்ட பாசுரத்தைப் போன்ற பிரமாணங்களை அறியாமலும் இத் தீக்காரியம் செய்தது அம்மம்ம! கொடிது கொடிது! அப்பாசுரமாவது:—

"வம்புலாங்கூந்தன்மனைவியைத்துறந்துபிறர்பொருள்தாரமென்றிவற்றை
நம்பினாரிறந்தானமன்றமர்பற்றியெற்றிவைத்தெரியெழுகின்ற
செம்பினாலியன்றபாவையைப்பாவிதழுவெனமொழிவதற்கஞ்சி
நம்பனேவந்துன்றிருவடியடைந்தேனைமிசாரணியத்துளெந்தாய்."

தாதிமார் நாளாவர்த்தியில் சொல்லிவந்த துர்ப்போதனையினால் " எறும்பூரக்கற்குழியும்." என்றபடி பத்மாவதியானவள் தன் பிராமண மரபுக்குரிய நல்லொழுக்கமனைத்தையும் அறவே கைவிட்டுப் புலால் முதலியவற்றை அரசனுடன் உண்டுசுகித்து வாழ்ந்துவந்தனள். அவளிடமாக அரசனுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. இப்படியிருக்கையில் காசியாத்திரைசென்ற அந்தணன் தன் உத்தேசப்படி திரவியம் சம்பாதித்துக்கொண்டு தன் வீட்டுக்குவந்து நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் ஆதியோடந்தமாகக் கேள்வியுற்று ஒருவாறாக மனந்தேறி ஒரு யாசகனைப்போல வேஷம்பூண்டு அரசனுடைய அந்தப்புரவாயிலிற்சென்று இரக்கக் குறிப்புடன் தியாகங் கேட்டுக்கொண்டிருக்கையில், பத்மாவதி அவனைக் கண்டமாத்திரத்தில் குரலொலியால் தன் பழைய நாயகனென்றறிந்து, கிழவா! இங்கு நீ நில்லாதே, நீ இன்னானென்று நான் அறிந்துகொண்டேன், அரசன்கண்டால் உன்னை இம்சிப்பான், உடனே போய்விடு, நடந்துபோன விஷயங்களைப்பற்றி இப்போது துக்கிப்பதிற் பயனில்லை,

நீ கடைசியாக ஏதாவது என்னிடத்திற் கூறவேண்டியதாயிருந்தால் உன் மனோபாவத்தை விரைவிற் சொல்லிமுடியென்று அந்தரங்கமாய் அவனிடத்தில் வசனித்தாள். அதற்கு அவன் உயிர்க்காதலியே! பெண் மணியே! என்னிடத்து நீ இருந்தபோது வறுமையினால் அல்லற்பட்டுக் கொண்டிருந்தனை, இப்போது நீ அஷ்டஐஸ்வரிய போகபாக்கியங்களை அனுபவிப்பதற்காக என்கண் பூரிக்கின்றது, "விதியே மதியாய்விடும்" என்னும் பெரியோர் வாக்கு அபத்தமாகுமா? நீ எப்படியாவது க்ஷேமமாயிருந்தால் போதும், ஆனால் தனித்து உன்னிடத்தில் இரண்டொரு வார்த்தை மாத்திரம் பேசிக் கடைசியாய் விடை பெற்றுக்கொண்டு தேசாந்தர யாத்திரைபோய் என் நாளை ஆண்டவனுக்கு ஒப்பித்து விடுகிறேன், இவ்வொரு எண்ணத்தை மாத்திரம் நீ நிறைவேற்றவேண்டும், அங்ஙனம் நீ செய்யாவிடில் உன் விசுவாச காதகத்தை நினைந்து நினைந்து நான் பிராணனை விடுவேன் என்று உறுதிமொழி கூறினான். அது கேட்டு பத்மாவதி "தொன்மை மறவேல்" என்றபடி பழைய சகவாசத்தை மறவாது நல்லது, அப்படியே ஆகட்டும், இவ்வூர்ப் பிடாரியார் ஆலயத்தைச் சேர்ந்த மண்டபத்தில் நீ வந்திரு, நான் இன்று இரவில் சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு உன்னை வந்து பார்க்கிறேனென்று வாக்குத்தத்தஞ் செய்து அவனை அனுப்பிவிட்டனள். அன்று இராத்திரி அதி விரைவாய்த் தன் குழந்தையைத் தூங்கச்செய்து பத்மாவதி சில பலகார வர்க்கங்களைச் சித்தம்பண்ணி வைத்துக்கொண்டு மண்டபத்தண்டை போவதாய் நிச்சயித்திருக்கையில், அரசன் அன்று நெடுநேரம்வரையில் நித்திரைகொள்ளாது அவளிடத்து பற்பல விஷயங்களைப்பற்றி வேடிக்கையார்த்தமாய்ப் பேசிக்கொண்டேயிருந்தான். அந்தணனை வந்து சந்திப்பதாய் உறுதி மொழி கூறிய சமயம் சமீபித்து விட்டபடியால், அவள் ஐயோ! கிழவன் வீணே மரிப்பானே என்று நினைத்து, அரசன் குடிக்கவிருந்த பாலில் அவனுக்குத் தெரியாமல் விஷங் கலந்து அவனைக் குடிக்கச் சொல்லவே அவன் அதை உட்கொண்ட மாத்திரத்தில் பிரக்ஞையற்று போய்விட்டான். அன்று அந்திப்போதே அந்தக் கிழப்பிராமணன் அம்மண்டபத்தில் போய்ப் படுத்துக்கொண்டிருக்கையில் ஒரு நாகசர்ப்பம் அவனைத் தீண்டியபடியால் விஷந் தலைக்கேறி அவன் அங்கு இறந்துகிடந்தான். அவ்விடத்திற்கு அதி தீவிரமாய் வந்த பத்மாவதி அப்பிரேதத்தைக் கண்டு பலவாறாகத் துக்கித்தாள். அப்போது இராத்திரி நெடுநேரமாய்விட்டபடியாலும் மீண்டும் வீட்டை வந்தடைவதற்குத் திரும்பிவரத் துக்கமிகுதியாலும் பயத்தினாலும் காலெழாமல் அவ்விடத்திலேயே இருந்தனள். இவளிப்படியிருக்கையில், அவ்வூரரசன் இவள் பாலிவிட்ட நஞ்சினால்



இறந்து போனமையினாலே அவளுடைய கொடுஞ்செய்கை அவ்வூர் முழுமையும் பரவி எங்கும் பேரரவமுண்டாகவே அதைக்கேட்டு பத்மாவதி இனி இங்கிருந்தால் ஆபத்து விளையுமென்றஞ்சி அம்மண்டபத்தை விட்டு நெடுந்தூரம் வரையில் அதி விரைவாய் ஒருவருக்குந் தெரியாமல் யாத்திரை செய்துகொண்டே இரண்டு மூன்று நாள் கழித்து ஒருநாள் இரவில் வேறொரு ஊரைச்சேர்ந்த மயானத்தின் வழியாய்த் தேகம் மெலிந்து, மனம் நொந்து, நடைதளர்ந்து, சோர்வடைந்து போய்க்கொண்டிருந்தாள். அப்போது அதி சவுந்தரியமுள்ள ஒரு வேசி அவ்வூரில் இறந்துபோக அவளைக் கொண்டுவந்து அம்மயானத்தில் தகனஞ்செய்துவிட்டுத் துக்க சாகரத்தில் மூழ்கி அழுதுகொண்டேவரும் தாய்க்கிழவி பத்மாவதியைக் கண்டு அம்மா! என் மகளே! மறுபடியும் நீ உயிர் பிழைத்து வந்தது என் பாக்கியம், இதுபரியந்தம் நீ இறந்ததும் உன்னைக்கொண்டுவந்து நான் தகனஞ் செய்ததுங் கனவுதானோ? என்று பத்மாவதியைக் கட்டிக் கொண்டு முறையோ முறையோ என்று அழுதனள். இக்கிழவியைக் கண்டு பிரமித்து ஒன்றுந் தோன்றாமல் பத்மாவதியானவள் ஆதியோடந்தமாகத் தன் வரலாறைக்கூற அத்தாய்க் கிழவி பத்மாவதியைப் பார்த்து அம்மா! இறந்து இதோ வெந்து கொண்டிருக்கிற என் மகளுக்கும் உனக்கும் ரூபலாவணியத்தில் அணுவளவும் பேதமில்லை, ஆகையால் நீ அவளைப் போலவே எனக்கு மகளாக இருந்து என் துக்கத்தை ஆற்றுவாயாக என்று குறையிரந்தனள். பத்மாவதி அதற்குச் சம்மதித்து அவளுடன் சென்று அவ்வூரில் அத்தாய்க் கிழவியின் குலத்தொழிலை அருவருப்பின்றி நடத்திக்கொண்டுவந்தனள். இவ்வாறு நெடுநாளானபின், பத்மாவதி முன்னிருந்த ஊரை அரசாண்டுவரும் அவள் புத்திரன் இப்போது நல்ல யௌவன பருவமுடையவனாகி அந்நிய பிரதேசங்களைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று அவாக்கொண்டு இவ்வூரில் பத்மாவதியிருக்கும் வீதி வழியாகக் குதிரை சவாரி செய்துகொண்டு போகையில், பத்மாவதியின் சவுந்தரியத்தைக்கண்டு மதிமயங்கி அவள் விலைமகளெனவறிந்து அவ்வீட்டுக்குள் சென்றான். கொஞ்ச நேரத்திலெல்லாம் அவன் பத்மாவதியின் முகஜாடையும் தன் முகஜாடையும் எல்லாவிதத்திலும் ஒத்திருப்பதைக் கண்டு தன் உடைவாளையுருவிக்கொண்டு அவளைப் பார்த்து, நீயார்? உன் வரலாறு யாது? உண்மையைச் சொல்லுவாயாகில் உன்னை விட்டுவிடுகிறேன், இல்லாவிடில் இவ்வாளாயுதத்துக்கு உன்னை இரையாக்கிவிடுவேன் என்று பயமுறுத்துதலும், பத்மாவதி நடுநடுங்கி ஆதியோடந்தமாகத் தன் விருத்தாந்தத்தைச் சொல்லி முடித்தனள். அதைக்கேட்டு அவள் புத்திரனாகிய அவ்வரசிளங்குமாரன் தன் மாதாவைநோக்கி, அம்மே!

மஹாபாதகி! பரமதுரோகி! என்பிதாவைக் கொன்றதற்காக உன்னைப் பழிவாங்க என் மனம் எண்ணுகினும் கைமாத்திரம் எழவில்லை, உன் கருப்பாசயத்தில் யான் பத்துமாதம் தங்கியிருந்ததையும் நீ என்னைப் பத்துமாதம் சுமந்து வருந்தி ஈன்றெடுத்ததையும் நினைந்தே உன்னை இப்போது விட்டுவிடுகிறேன், இனி உன்னை முகாலோபனமும் செய்யமாட்டேன் என்று சொல்லித் தன் ஊருக்குத் திரும்பினான்.

" தன்னெஞ்சே தன்னைச்சுடும் " என்று ஆன்றோர் கூறிய பிரமாணப்படி பத்மாவதி தன் துஷ்கிருத்தியங்களை நினைக்குந்தோறும் மனச்சான்று அவளாற்ற முடியாதவகைக்கு இடித்திடித்து அவளை அல்லற்படுத்தினமையால், இனி தற்கொலை புரிந்துகொண்டு இவ்வுடற்பொறையை நீக்கிக்கொள்வது உத்தமமென்றெண்ணி, அவ்வூருக்குச் சமீபத்திலிருந்த ஆற்றங்கரையில் பெருந்தீமூட்டி அக்கினிப்பிரவேசமாயினள். அத்தருணத்தில் தெய்வகதியால் அந்த ஆறு பெருக்கெடுத்து அவ்வக்கினியை அவித்து அவளை உயிரோடு நெடுந்தூரம் வரையில் அடித்துக்கொண்டு போகையில் மற்றொரு ஊரைச்சேர்ந்த புலத்துக் கருகாமையில் ஓர் இடையன் பசுமாடு மேய்த்துக்கொண்டிருக்கும்போது அவளைக்கண்டான். கண்டமாத்திரத்தில் அவன் விரைந்தோடி வந்து தன் இன்னுயிரையும் ஒரு பொருளென மதியாது அப்பிரவாகத்திலிறங்கி அவளை வெளியே எடுத்துவிட்டான். உடனே அவளுடைய அழகின் மிகுதியைக் கண்டு அதிசயமடைந்து அவ்விடையன் அவளைப்பார்த்து, நீ எனக்கு மனையாட்டியாயிருக்கவேண்டுமென்றுகூற, அதற்கு அவள் சம்மதிக்கவேண்டியதாயிற்று. அதன்மேல் அவ்விடையன் பத்மாவதியை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்த் தனக்கு மனையாட்டியாகவைத்து அவளைப் பரிபாலித்து வந்தான். இந்தப்படியிருக்கையில், ஒருநாள் பத்மாவதியும் அவ்விடைச்சேரியிலிருந்த இன்னும் சில பெண்களும் தத்தம் குடங்களில் பால் தயிர் மோர் முதலியவற்றை எடுத்துக்கொண்டு அவ்வூரில் வழக்கப்படி விற்பனை செய்வதற்காக ஒருநாள் புறப்பட்டார்கள். அவர்கள் அவ்வாறு புறப்பட்டு வருகையில் அவ்வூர் அரசனுடைய யானை மதமேறிக் கட்டுத்தறியை முறித்துக்கொண்டு பாகனைக் கொன்று பிளிறிட்டு அவ்வீதிவழியாக ஓடிவந்தது. அவ்வூரிலுள்ள யாவரும் தம்தம் மெத்தைகளின்மீது ஏறி அவ்வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்வூர் அரசனும் தன் உப்பரிக்கையின்மீது ஏறித் தன் யானையின் ஆரவாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த யானை இவ்வாறு ஓடிவருவதைக்கண்டு பயந்தபடியினால் பத்மாவதியின் தலையின்மீதும் ஏனைய இடைப்பெண்களின் தலைகள் மீதும் இருந்த குடங்கள் தவறிவீழ்ந்து உடைபட்டன. மற்றப்



பெண்களெல்லாம், ஐயோ! பால் போயிற்றே! அந்தோ! தயிர்போயிற்றே! என்செய்வோம்! என்செய்வோம்! என்று கைகளைநெரித்துக் கண்களில் நீர் சோர வயிற்றைப் பிசைந்துகொண்டு அழுதார்கள். பத்மாவதியோ தன் மோர்க்குடம் உடைந்து போனதற்காக இலேசமும் துக்கியாதவள்போல் கைகொட்டி கலகலவென்று சிரித்துக்கொண்டு இருந்த இடத்திலேயே இருந்தனள். இதை உப்பரிக்கையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அரசன் பெருவியப்படைந்து ஒன்றும் தோன்றாமல் உடனே ஏவலாட்களை விடுத்துப் பத்மாவதியை அழைத்துக்கொண்டு வரச்சொல்லி அவளைப்பார்த்து, அம்மே! குடங்கள் உடைந்துபோனதற்காக உன்னுடன் கூடவந்த பெண்களெல்லாம் அழுகின்றார்கள். நீ ஒருத்தி மாத்திரம் கைகொட்டிக் கலகல என்று சிரிப்பது யாதுகாரணத்தால்? என்று கேட்டான். அதற்குள் பத்மாவதி அடியிற்கண்ட செய்யுளைக் கூறலாயினள்:—

சாதிமார்க்கந்தவிர்ந்துண்ணுமலூனுண்டு தாழ்ந்ததற்கேயழுவனோ.
  தவமுற்றபாலனைத்தனியற்றுவேர்தைநஞ்சூட்டியதனுக்கழுவனோ
ஆதிநாடாலிகட்டியபுருடனைக்கொன்றவரவந்தனக்கழுவனோ
  வருங்கான்புகுந்துபின்மறுமன்னர்தம்வேசியானதற்கேயழுவனோ
வேதையான்மைந்தனைத்தழுவிவெங்கனலின்கண்வீழ்ந்ததற்கேயழுவனோ
  வெள்ளம்புகுந்துதள்ளாடிமல்லாடியேவிட்டதற்கழுவனோ
நீதிபாலிடையனுக்கின்பமங்கையுமாகிநின்றதற்கேயழுவனோ
  நிகரிலாராஜகெம்பீரனேநானிந்தநீர்மோர்க்குநின்றழுவதே, "

பத்மாவதியின் பூர்வ விருத்தாந்தங்கள்யாவும் அடங்கிய இப்பாசுரத்தைக் கேட்டு அரசன் மனமுருகிப் பெருந்துக்கமுடையார்க்குத் துக்கந் தோன்றுதுபோலும்! என்று வியந்து பத்மாவதியைப்பார்த்து நீ போய்வாவென்று சொல்லி அனுப்பிவிட்டான். சில நாள் பொறுத்துப் பத்மாவதி தன்தேகத்தின் அழகெல்லாம் குன்றிப் பற்பல வியாதிகள் மிகுந்து தளர்ந்து கோலூன்றி,

" நலமிலாமூப்புத்துன்பநடைதளர்ந்துரைதழுத்துச்
சலமதேமிகவுந்தோன்றித்தண்டுகொண்ணுகிச்சித்தக்
கலனமேபிறந்துகண்டார்கார்ச்சித்தங்குமிழும்வண்ண
மலைவெலாஞ்செய்யுமூப்பின்வருந்துயரந்தோபாராய் "

என்று பெரியோர் கூறியபடி வயோதிகத்தினால் உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு உள்ளாகி அவள் தன் துஷ்கிருத்தியங்களுக்கு ஏற்ற தண்டனையை இம்மையிலேயே அனுபவித்து மரித்தனள்.

ஸ்ரீ இக்கதையினால் அறியவேண்டிய நீதிகள் பல உள:—

(1.) சற்குணம் அமையப்பெறாமல் யாதொருபெண் கட்டழகுடையவளாயிருக்கின், அவளுக்கும் அவளைச்சேர்ந்தவர்களுக்கும் அதைவிட மிக்க அல்லலைத் தருவது வேறொன்றுமில்லை. (2) யாதொரு பெண்ணுக்கு இயற்கையில் சற்குணம் அமைந்திருக்கிறதா இல்லையா எனபதைத் தீர விசாரியாமலே அழகையே பொருளென மதித்து மணம்புரிவது ஒருவனுக்குப் பெருத்த ஆபத்துக்கிடம். (3) தன்னையும் தன் மனையாளையும் பாதுகாப்பதற்கேற்ற தகுந்த ஜீவனோபாயமில்லாதவன் மணம் புரிந்துகொள்வது பெரும்பேதமை. (4) வயோதிகனானவன் அதிபாலிய பெண்களை விவாகஞ்செய்துகொள்வது துர்வழக்கங்களுள் நடுநாயகம். அதனால் விளையும் தீமைகள் எண்ணில. (5) ஒருவன் தனக்கு நாயகனாக அமைந்த பிறகு அவன வறியவனாயினும் வயோதிகனாயினும் பிணியாளனாயினும் வேறே எவ்வகைப்பட்டவனாயினும் அவனையே "குலமகட்குத் தெய்வங் கொழுநனே." என்றும் "குலமகட்கழகு தன்கொழுநனைப்பேணுதல்." என்றும் பெரியோர் கூறியபடி நேசித்துவருவது உத்தம ஸ்திரீகளின்கடமை. இதைமறந்தவர்கள் இம்மையிலேயே நிரயத்துன்பத்தை அனுபவிப்பார்களென்பதற்கு ஐயமில்லை. (6) மனம் யாதொரு துஷ்கிருத்தியத்தைச் செய்ய எழுகையில் பிரதமத்தில் விவேகம் அதைச் செய்யவொட்டாது தடுக்கும். அதன வழியே நாமும் சென்று நம்மனத்தையடக்கி யாளாவிடில், விவேகம்—எனக்கென்ன என்று இருந்துவிடும். நாமும் படிப்படியாகப் பொல்லாங்கான பாதையிற் போய்விடுகிறோம். ஆகவே மனம் என்னும் யானை மதோன்மத்தனாயெழும்போதே விவேகமென்னும் அங்குசத்தைக்கொண்டு அதை நாம் அடக்கவேண்டும். அங்ஙனம் செய்யாது ஒருவிசை அப்பாழ்மனதைப் போனபடி விட்டாலோ, பிறகு அதை அடக்க எவ்வளவும் முடியாது. பத்மாவதி தன் புருஷனை விடுத்து அரசனை மணஞ் செய்வதென்னும் பிரதம தீக்காரியமொன்றினாலேயே ஏனைய தீக்காரியங்களெத்தனையும் செய்ய மனங் கூசாதவளாயினள். (7)ஏழைப் பிராமணனை ஏமாற்றித் தெருவில் விட்ட பரம துன்மார்க்கனாகிய அரசனை நஞ்சூட்டிக்கொல்ல பத்மாவதிக்கு ஈஸ்வரன் எண்ணந்தந்த விசித்திரமே விசித்திரம்! "எளியரை வலியர் வாட்டின், வலியரை யிருநீர்வைப்பி, னளியுறத் தெய்வம் வாட்டும்" என்னும ஆன்றோர் மொழி அரசன் விஷயத்தில் பலித்தது. (8) வறியனும் வயோதிகனுமான பிராமணன் வீணாசை மிகுதியால் பத்மாவதியை மணந்த மஹா பாவத்துக்காக அவன அரவந்தீண்டி மடிந்ததும் ஈஸ்வரசம்மதமே. (9) மனச்சான்றுக்கு ஏலாத துஷ்ட



கிருத்தியங்களைச் செய்துவிட்டபிறகு உயிர் தாங்கியிருப்பதைவிடத் தற்கொலை புரிந்துகொண்டு மடிவதே உத்தமமென்று கருதுவது பெரும்பாலும் மனுஷ சுபாவம். கொலை முதலிய மஹாபாதகங்களைச் செய்தவர்களுக்குள் அநேகர் மன அமைதியின்மையால் தற்கொலைபுரிந்துகொண்டார்களென்பதை சரித்திரத்தால் அறிகிறோம். (10) பிற உயிரைக் கொல்வது எவ்வளவு பாதகமோ அவ்வளவு தன் உயிரை மாய்த்துக்கொள்வதும் ஒருவனுக்குப் பெரும் பாதகமாகும். "வஞ்ச வினைக்கொள்கலனுழுடலைத் தீவாய் மடுக்கிலேன் வரையுருண்டோய்ப்பேனல்லே, னஞ்சொழுதவாளாலுங் குறைப்பேனல்லே னுதனே யதுவு நினதுடைமையென்றேயஞ்சினேன்." "என்று மூதறிஞர் கூறிய அமுதவாக்கியத்தைத் தற்கொலைபுரிந்துகொள்ளத் தலைப்படும் பேதைகள் சிந்திப்பாராக. துன்பத்தை யனுபவிக்கவேண்டுமென்று ஈஸ்வரன் இத்தேகத்தை நமக்குத் தந்திருக்கிறபடியால் அதைச் சகித்துக்கொண்டு அனுபவித்தலே நாம் ஈடேறும் மார்க்கமாகும். (11) பெருந் துக்கங்கள் அடுத்தடுத்து மேலிட்டபோது அதன் உணர்ச்சியும் வேகமும் அற்றுப்போவது மனோதத்துவ லக்ஷணம். (12) துஷ்கிருத்தியம் செய்தவர்களுக்கு இம்மையிலேயே பற்பல துயரங்களும் விளையும். ஆகையால் கடவுளொருவர் இல்லை, மறுமைப் பயனென்பதொன்றில்லை என்னும் சித்தாந்தத்தைக் கையாளுபவர்களும், தாமும், தம்மைச் சேர்ந்தவர்களும் உலகிலே சுகித்து வாழ வேண்டுமென்றால் மனமொழி மெய்களினால் சற்கருமங்களைச்செய்து கூடாஒழுக்கத்தை விலக்கவேண்டும்.

# கானோஜ் இராஜகுமாரி.

மகம்மதியர்களுள் நம் தேசத்தில் சுமார் 730 வருஷங்களுக்கு படையெடுத்து வந்தவர் மகம்மதுகோரி என்பவர். இவர் படையெடுத்துவந்த நாளில் கானோஜ் தேசத்து அரசர் இந்துஸ்தானத்தில் சக்கிரவர்த்தியாக ஆண்டுகொண்டிருந்தார். இவருக்கு எல்லா அரசர்களும் கப்பம் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் டில்லி தேசத்தரசர் மாத்திரம் கப்பம் கட்ட மறுத்தார். இவர் இளைஞர். கானோஜ் சக்கிரவர்த்திக்கு ஒரு குமாரி உண்டு. இந்த இளைஞரின் கலியாணத்தின் பொருட்டு இத் தேசத்தார்களும் வேறுவேறாக வரந்தேடிப் போனார்கள். டில்லி அரசன் தனக்கென்று பார்த்துவந்த எந்தப்பெண்ணையும் ஏதாவது கோளை

ல் சொல்லி நிராகரித்து வந்ததினால் அவரின் பிரதான மந்திரிகளும் மற்ற பெரியோர்களும் தகுந்த பெண்களை வீணில் சல்லடை போட்டுச் சலித்துப்பார்த்து சலித்துப்போய் விட்டார்கள்; ஆனால் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென்று தேடிப்போனவர்களுக்கெல்லாம் புலப்படாத பெண் சிரோன்மணி, தன்னையே மணம்புரிய நிச்சயித்த டில்லி அரசனை நேரே கண்டுவிட்டாள். அதெப்படியென்றால், அந்தப் பெண்மணி தன் ஜனங்களுடன் ஒரு காலத்தில் காட்டுமார்க்கமாய்ப் பிரயாணம் செய்து போகுங்கால் பின்தங்கிப் பிரிந்துபோக நேரிட்டது. அப்பொழுது அக்காட்டுக்கு வேட்டைக்குத்தற்செயலாக வந்த டில்லி அரசன், ஏதோ விதிவசமாய் திடீரென்று தன்னை எதிர்த்துவந்து தன்னை மணம் புரியவோ அல்லது தன்மேல் அணிந்திருந்த ஆபரணங்களை அபகரிக்கவோ யத்தனித்துத் தன்னைத்தூக்கிப்போன ஒரு கொடூர மஹாபாவியினின்று இவளை விடுவித்தான். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று; ஒருவரையொருவர் நேசிக்கத் தலைப்பட்டார்கள் ஒருவரையொருவர் மணம்புரிகிறதென்று மனதில் ஒருவாறு நிச்சயம் கொண்டார்கள்.

இவ்வாறு மிருகவேட்டைக்கு வந்தவன் அழகும் தீரமுமான அம்புகளால் ஒரு பெண் இரத்தினத்தை எய்து கவர்ந்தான். டில்லி அரசன் டில்லிக்கும் இராஜ குமாரி, கானோஜுக்கும் போய்விட்டார்கள். இவர்கள் பிரிந்திருந்ததினால் இவர்களுக்குள்ளுண்டான நேசமென்னும் தீ நெய்விட்டெறிந்ததுபோல் நாளுக்கு நாள் நன்று பெருகிப் பிறகு ஏக்கத்தை விளைவிக்க ஆரம்பிக்கும்போலிருந்தது. டில்லி அரசன் இன்னது செய்வது என்று துணியாமல் தயங்கினான். கானோஜ் இராஜகுமாரியோ நாளுக்கு நாள் அகமெலிந்தாலும் அழகு மிகுத்துவந்தாள். டில்லி இராஜன் தன் கலியாண விஷயமாய் இப்பெண்ணின் பிதாவை நேரேகேட்க ஒரு தடங்கல் இருந்தது. பெண்ணைக்கேட்கவந்தால் கப்பம் கட்டவேணுமாம். பெண்வீட்டுக்காரன் எப்பொழுதும் சற்று, என்னமாயிருந்தாலும் கொஞ்சம் தாழ்மைதான். நம் அனுஷ்டானம் இதுவே. இப்படி இருக்க, பெண் வீட்டுக்காரன் மாப்பிள்ளையைத் தனக்கு அடிமையாகவேணும் என்று கேழ்ப்பதுண்டோ. இது கௌரவமாகுமோ? பெண்ணைக் கொடுத்தாயோ கண்ணைக் கொடுத்தாயோ என்ற பழமொழிப்படி, பெண்ணை மணந்தவன் புதல்வனுக்குச் சரியாய் கௌரவப்படுத்த வேண்டாமா? இருதரத்தாரும் க்ஷத்திரியர்தானே? க்ஷத்திரியரும் அன்னியோந்யப் படாமல் போனால் வேறு தரத்தார்கள் எவ்வாறு ஒருமிக்க இடமுண்டு? பெண்ணின் தகப்பன் மனமும், பெண்ணின் மன



மும் வரன்விஷயத்தில் முற்றிலும் மாறுபட்டிருந்தது. கடைசியாக சுயம்வரம் ஏற்படுத்தினதால் தான் ஸதா தியானித்துக் கொண்டிருக்கும் புருஷனை ஒருக்கால் அடையலாமோ என்று ஒருவாறு சமாதானப் படுத்திக்கொண்டாள். ஆயினும் தன் தகப்பனான சக்கிரவர்த்தியாருக்கு தன் ஆசைகண்மணியாராகிய தனக்கு உயிர்கொடுத்த சுந்தர புருஷன் மேல் அவர் அடங்கா அரசு என்ற வைரமுண்டென்று இவளுக்குத் தெரியுமாகையால் எங்கே அவர் வாராமலிருப்பாரோ என்று கிலேசமுள்ளவளானாள். மேலும் சுயம்வர தினத்தில் டில்லி இராஜகுமாரன் வந்ததாகத்தெரியவில்லை. தேடிப்போன தன்னுடைய உண்மையான தோழிகளெல்லாரும் காணேன் காணேன் என்றே சொல்லிவிட்டார்கள். இது காரணம்பற்றியே மஹாராஜா கடுங்கோபங்கொண்டு டில்லி அரசனை வெகு மரியாதையாக அவமரியாதை செய்கிறதெப்படி யென்றால்:—தங்கத்தினாலே அவர்போல் சரியாக ஒரு விக்கிரகம் வார்ப்பித்து அதற்கு உத்தமமான ஆடையாபரணங்கள் பூட்டி அந்த உன்னத விக்கிரகத்தை சுயம்வர சபைக்கு உள்வாசல்படியண்டை நிறுத்திவைத்தார்!

ஆலாசிய மணியடித்தது. நிருபங்களுக்குக்கீழ்ப்படிந்து வராத ஒரே அரசனைத்தவிர எல்லாரும் தயாரானார்கள். எல்லாரும் தங்கள் அழகைக்கவனிப்பவர்களும் பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து தன்னையும் பார்த்துக் கொண்டு திடமடைகிறவர்களும் தான் பூமாலையை வகிக்கும் பதவிக்குப் பாத்திரவான் என்றும் கர்வங் கொள்ளுகிறவர்களுமாக ஒவ்வொருவரும் வாசல் படியையே பார்த்துக்கொண்டு கொட்டாத கண்களுடன் இருக்கும்போது கல் கல் கிண் கிண் என்று சிற்றொலிகள் தொனிக்க, தான் வரும் வழியெல்லாம் பரிமளம் பரவ, மின்னொளிபோல் மெலிந்து மகா காந்திபெற்ற இராஜகுமாரி தோழிகளுடன் சபையை அடைந்து அம்மின்னலைப்போலவே மறு நிமிஷம்மறைந்தாள். ஒரே கூட்டமாகக்கூடிற்று. பலர் கத்திகளையும் பாலாக்களையும் உருவினார்கள். "இராஜகுமாரியை யார் தூக்கிக்கொண்டு போகிறது? யார் தூக்கிக்கொண்டு போகிறது? கூகூ!!" என்றுகூச்சலாயிற்று. "அதோ இறக்கையுள்ளதுபோல் பறந்துபோகிற கருப்புக் குதிரை டில்லிதேசத்தரசனது போலிருக்கிறதே. அவன் இங்கேயில்லையே! அவனைத்தான் அவமானம் செய்தாச்சுதே!" என்று இப்படிப் பிரஸ்தாபம் ஆக ஒரே அலங்கோலமாக யிருந்தது. மகாராஜா பொறுக்கக்கூடாத கோபங்கொண்டு "நான் அவமானம் செய்வதற்காக யத்தனித்து வாசல் படியில் நிறுத்தின தங்கச்சிலைக்கே மாலையிட்டாளல்லவா! ஆ! அவள் கொடியவள்! பெற்று வளர்த்துப் பல பாடுபட்டுப் பயனென்ன? தொலைந்தது. இனி எப்படி போனாலென்ன வென்று தன் உயி

ரையே வெறுத்து பெருமூச்சுவிட்டு ஒருபக்கம் கோபத்தினால் உதடு துடித்து உடல் பதறி நின்று கொண்டிருக்கும்போது வாய்நுரைததும்ப ஓடிவந்த குதிரையின் மீதுள்ள வீரன் ஒருவன் இராஜகுமாரியை டில்லி அரசன் தூக்கிக்கொண்டுபோய்விட்டான் என்று பிதற்றினான். என்ன செய்வது ?.

அமளி அடங்கிற்று. சுயம்வர சபைக்குள் வந்த இராஜகுமாரி சபைக்குள் வீற்றிருந்த ஒரு அரசரையும் தலையெடுத்துப் பார்க்கவேயில்லை. வாசல் படியிலிருந்த டில்லி இராஜா பிரதிமையை கண்டமாத்திரத்தில் அங்கேயே அதின்மேல் மாலையிட்டுத் திரும்பினதாகத் தெரிந்தது. டில்லி அரசனும் அண்டையிலேயே ஒளிந்திருந்தான்போலும், டில்லி இரசனுடைய மேற்கூறிய நடத்தை கானோஜ் மஹாராஜாவுக்கும் நிரம்ப அவமானத்தை விளைவிக்கத் தக்கதல்லவா ? ஆகவே, கானோஜ் அரசர் பெரும்படையெடுத்து டில்லிக்குச்சென்று தன்பெண்ணை பலாத்காரமாய் தூக்கிப்போன விநயமின்மைக்காக அந்த இராஜாவைத் தண்டித்து தன்பெண்ணை மீட்டுக்கொண்டு வரவேணும் என்று நிச்சயித்தான். சண்டையும் நடந்தது. டில்லி அரசர் பிரசண்ட யுத்தம் செய்து போர்க்களத்திலேயே கத்தியும் கையுமாய்க் காலஞ்சென்று போனார். ஆனால் கானோஜ் இராஜகுமாரி தன் பிதாவுடன் திரும்பிப்போக மறுதளித்து தன் பிராணநாதன் இறந்தபின்னர் தன் தனிவாழ்வு ஒரு பெருவாழ்வா என்று மனந்துணிந்து இறந்த டில்லி அரசனுக்கு ஸம்ஸ்கார மாகும்போது தானும் உடன்கட்டையேறி ஸதிலோகம் சேர்ந்தான். தகப்பனின் பிடிவாதம் இப்படியாக முடிந்தது. விவாகதம்பதிகளின் காதலும் ஸ்வர்க்கபூமியை நாடிற்று. ஹா ! என்ன பரிதாபம் !

## “ தொலைந்து போ ! ”

முற்காலத்தில் வேதாந்த விஷயங்களை ஐயமறக் கற்றுணர்ந்த ஓர் பெரியவரிருந்தார். அவர் அடிக்கடி ஆத்ம ஞானத்தைப்பற்றி சிஷ்யர்களுக்குப் போதிப்பதுண்டு. சிலருக்கு இரகஸ்யமான மந்திரங்களை யுபதேசித்து அவைகளை ஜெபிக்கும்படி கட்டளையிட்டார். சிலருக்கு சாஸ்திரவிஷயங்களைச் சாங்கோபாங்கமாய்ப் பிரசங்கித்துத் தெளிவை யுண்டாக்கினார். இவ்வாறாக வெகு பேர்கள் நல்ல ஞானத்தையடைந்து ஆநந்தபரிதர்களாயினர். இந்தப் பரமஹம்ஸருடைய ஆச்ரமத்துக்குத் திரளான ஜனங்கள் வரத்தொடங்கினார்கள். அவர்களில் அநேகர் பற்பல



சாஸ்திரங்களிலும் தேர்ந்த பயிற்சி யுள்ளவர்கள். பிரம்ம வித்தையை அப்பியாசிக்குமாறு அநேக சக்கரவர்த்திகள் தங்கள் பரிவாரங்களுடன் இம்மகானுடைய ஆசிரமத்தையடைந்து வேதாந்த விசாரம் செய்தனர். வெகுபேர்களுக்கிருந்த ஸந்தேகங்களெல்லாம் ஒரு நொடியிற் பறந்து போயின. இவ்வாறிருக்கையில் நம் மகரிஷி ஒருநாளைக் குறிப்பிட்டு அன்றயதினம் எல்லோரும் தம்மிடம் உபதேசம் பெற்றுக்கொள்ளலாமென்று அனுமதி கொடுத்தார். ஆதலின் நாநாதேசங்களிலிருந்து பற்பல மதஸ்தர்கள் ஓடிவந்து அவரிடம் உபதேசம்பெற்று அகமகிழ்ந்து ஆநந்தமுற்று தத்தமக்கு விவரிக்கப்பட்ட மகா மந்திரங்களையும் இரகசியமான அர்த்தங்களையும் ஒத்திட்டுப்பார்த்து எல்லாம் ஒரேதன்மையாயிருந்ததால் உவகையுற்றனர். இவ்வாறிருக்கையில் ஒரு சண்டாளன் ஓடிவந்து சுவாமி, மகானே, என்னுடைய பாபங்கள் தொலைந்து கர்மபந்தங்கள் ஒழிந்து நான் முக்தி எய்துமாறு ஏதேனும் ஓர் மந்திரம் உபதேசிக்க வேணுமென்றிரைஞ்சினான். அங்குள்ள விப்பிரகுல சிரேஷ்டர்களாகிய சிஷ்யர்களெல்லாம் இந்தச் சண்டாளப் பயலுக்கு மோக்ஷமெப்படி கிடைக்கும். இவன் வேதாந்த விசாரணை செய்ய அருகனல்லவே யென்று நினைத்தார்கள். குருவோ சிலநேரம் அச்சண்டாளனது முகத்தை யுற்று நோக்கி “ தொலைந்து போ.” என்றார். அவன் அவ்வாறே போய்விட்டான். அங்குள்ளவர்களெல்லாம் “ நமது குருமகராஜ் செய்தது நியாயமே. சண்டாளனுக்கு மோக்ஷமேது ” என்று பேசிக்கொண்டார்கள். பிறகு ஒரு வருஷமானவுடன் குரு தம்மிடம் உபதேசம் பெற்ற சிஷ்யர்களெல்லோருக்கும் கடினமான ஓர் கேள்விபோட்டு அதற்கு ஸமாதானம் சொல்லும்படி கேட்டார். ஒருவருக்காவது தெரியவில்லை. கடைசியில் சண்டாளன் வெகுதரமான ஸமாதானம் சொன்னதால் எல்லோரும் வெட்கமடைந்தனர். உடனே குரு தம் சிஷ்யர்களை நோக்கி அடியில் வருமாறு கூறினார். “ சிஷ்யர்காள் ! பக்தியும் நம்பிக்கையுமே பிரதானம். மனதிற்குத் தெளிவை யுண்டாக்குவதில் பக்தியைவிடச் சிறந்த தொன்றில்லை. சண்டாளன் என்னை உபதேசிக்கும்படி கேட்டபோது நான் அவனைத் “ தொலைந்து போ ” வென்றேன். அவன் அதையே உபதேசமாகக்கொண்டு தியானித்து வந்தான். தொலைந்துபோ வென்றதால் உலகத்தை விட்டொழிந்து போவென்னும் அருத்தம் தோன்றியது. பின் உலகவாசையைத் துறந்திருப்பதென்னும் கருத்துண்டாயிற்று. இவ்வாறாகப் படிப்படியாய் ஞானமேலிட்டு யோகியாகி சண்டாளன் எல்லோரிலும் ஸர்வோத்கிருஷ்டனான். இவ்வளவு பெருமைகளும் ஓர் சண்டாளன் அடைந்தது அவனிடமுள்ள பக்தியினாலாதலின் எல்லோரும் பக்திசெய்து முக்தியடைவது நன்று ” என்றார். இந்தியாவில் அநேக

மதங்க ளுற்பத்தியாயின. மேதாவிகளெல்லாம் எவ்விதத்திலாவது பரமாத்மாவை நேரில் தரிசிக்க வேண்டுமென்று பாடுபட்ட தேசம் இந்தியாவேயன்றி வேறல்ல. மனுஷ்யனுடைய மனதால் எவ்வித முயற்சிகளைச் செய்யமுடியுமோ அவ்வித முயற்சிகளையெல்லாம் செய்து யோகாப்பியாசங்கள் பயின்று அனேக பெரியோர்கள் மோக்ஷமடைந்தனர். முக்கியமாய் ஸ்ரீராமர், கிருஷ்ணமூர்த்தி, சங்கராசாரியார், ராமானுஜாச்சாரியார் முதலிய மகான்களால் வேதாந்த விஷயமான ஞானம் நமக்குத்தெரிய வந்தது. தென்தேசத்தில் எவ்வாறு நந்தனென்னும் பஞ்சமன் பக்தியொன்றினால் பரமாத்மாவைத் தரிசிக்கப்பெற்றானோ, அவ்வாறு வடதேசத்தில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்னும் உயர்குலத்தினர் பக்தியொன்றினால் மாத்திரம் பரமஞானத்தை அடைந்தார். மற்ற மகாத்மாக்களுக்கும் இவருக்கு முள்ளபேதம் யாதெனில், இவரைக்கண்ணாற் பார்த்தவர்கள் இக்காலத்திலுளர். மற்ற மகாத்மாக்கள் வெகு காலத்துக்குமுன் வஸித்தவர்கள். இம்மகானது சிஷர்கள் தற்காலம் சன்னியாசிகளாய் ஓர் மடத்திலிருந்துகொண்டு சிற்சில வேளைகளில் லோகசஞ்சாரம் செய்து அங்கங்கே பிரசங்கங்கள் செய்தும் வருகின்றனர்.

# மனிதனது சிறுமையும் பெருமையும்.

"பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்ற பழமொழியுண்டு. பால் புளிக்குந்தன்மையுடையதல்ல. அதை யருந்தும் மனமே அது புளிப்பதுபோல் தோன்றுவதற்குக் காரணம். எப்போதும் சமீபத்திலுள்ள வஸ்துக்களின் அருமை தெரிகிறதில்லை. ஓர் தடாகத்தில் புஷ்பித்திருக்கும் தாமரையிலுள்ள தேனை அதில் வாழும் தவளை மீன் முதலிய ஜெந்துக்கள் உண்கிறதில்லை. வெகு தூரத்திலிருந்து வரும் வண்டு அதை அனுபவிக்கிறது. உலகத்தில் ஆச்சரியமான வஸ்துக்கள் அநேகமிருக்கின்றன. அவைகளை நாம் தினந்தோறும் பார்ப்பதால் அருமை யறியாது சும்மா விருக்கிறோம். நம்மில் எத்தனைபேர் ஆகாசத்தைப் பார்க்கிறோம்? மிகச் சிலரேயன்றோ? ஓர் குழந்தை அன்னியர்களின் முகத்தை எதிட்டுப் பார்க்கிறது. தன் தாயின் முகத்தை அப்படிப் பார்ப்பதில்லை. மின்சாரவண்டியைப்பார்ப்பதற்காக ஆதியில் எத்தனை பேர்கள் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தனர்? இப்போது கவனிப்பார் இல்லை. ஆகிலும் அவ்வண்டியிலுள்ள விசேஷம் குறைந்து விடுமோ? நல்லதானாலும் கெட்டதானாலும் புதுமையில் ஜனங்களுக்கு ஒருவித விசுவாஸம் உண்டாகிறது. பழகிப்போனால் ஆச்சரியம் அடங்குகிறது, அருமை யொடுங்குகிறது. அருகிலுள்ள பொருள்களின் அருமையைக் கெடுத்துவிடுகிறது, ஸகவாஸம், பழக்கமென்னும் கெட்ட விரோதியே காரணம். முதலாவது மனுஷ்யனைப்பற்றி நாம் என்ன அறிந்துகொண்டோம். மனுஷ்யன் பிறக்கிறான், இறக்கிறான், என்? ஒருவன் கவி, ஒருவன் கொல்லன், ஒருவன் போர்வீரன், ஒருவன் யோக்யன், ஒருவன் அயோக்கியனென்று பற்பல விதமாயிருப்பானேன்? மனிதன் ஓர் அற்ப பிராணி, அவன் உலகத்தையும் அறியவில்லை, தன்னையும் அறியவில்லை. மனிதனுடைய ஐம்புலன்கள் அவனுடைய தேகத்திலும் சிறந்தவை, அவ்வைம்பலன்களை விடப் புத்தி பெரியது, புத்தியானது மனதிலும் சிறந்தது, ஆத்மாவானது எல்லாவற்றையும்விட உயர்ந்தது. எல்லாப் பிராணிகளையும் விட மனிதன் சிரேஷ்டமானவனென்கிறோம். அவனுடைய தேகத்தை மட்டும் எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் அவன் ஒருபோதும் சிறந்தவனானான். ஹக்ஸ்லே யென்னும் தேகதத்துவ சாஸ்திரி குதிரை தான் நல்ல காத்திரமான சரீரத்துடன் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறதென்றபிப்பிராயப்படுகிறார். அரசனாய்ப் பிறந்தவனைவிட ஆண்சிங்கத்தின் முகம் கம்பீரமாயிருக்கிறது: தென்னிந்தியாவிற் பிறந்த நல்ல காளையின் நடை போர்வீரனின் நடையைத் தோற்கடிக்கும். கிளியின் மிருதுவான மேனியைப் போல் தமயந்திக்கும் வராது. பந்தத்திற் கட்டுண்டிருக்கும் மனுஷ்யனைவிட ஆகாயத்திற் பறக்கும் வானம்பாடி நிர்விசாரமாயும் சுயாதீனமாயுமிருக்கிறது படத்தை விரித்தாடும் நாகமும் ஆகாசத்திற் பறக்கும் கருடனும் மனுஷ்யர்களைவிட தெய்வத் தன்மை யுள்ளன. ஆகவின் மேற்கூறிய பிராணிகளைவிட மனுஷ்யன் கேவலமாகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறானென்றேற்படுகிறது.



# இரு மாதர்களின் ஆசாரம்.

சலமம்மாள்:— அன்னம்மா தாயே! இக்காலத்தவர்களுக்கு சுத்தமாய் ஆசாரமென்கிற பேச்சேகிடையாது. அதுவும் என் நாட்டுப் பெண் வீட்டுக்கு வந்த பிறகு அகத்திலே வெறும் பறையத் தீட்டு கலந்துகொண்டு வருகிறது. இனி நம்மைப் போன்றவர்கள் பிழைத்திருக்கக் கூடாது. எதாவது சொன்னால் எதிர்க்கெதிரே பேசுகிறாள்.

அன்னம்மாள்:— சலமம்மா, சொன்னால் நம்புவாயோ என்னவோ? அறுபத்தைந்து வயதாகியும் என்னகத்துக்காரர் இன்றைக்கும் ஆசாரம் என்னும் பேச்சை யறியமாட்டார். நான் மாத்திரம்

எப்படியோ கொஞ்சம் ஆசாரம் நிறுத்திக் கொண்டிருக்கிறேன். எங்கள் தெருவிலிருந்து தீட்டுக்காரிகள் போனால் இருநூறுவசைகள் வைது எங்களகத்துப் பானைகளை யெல்லாம எடுத்தெறிந்துவிடுகிறேன். அறைவாசி முக்கால்வாசி என் வாய்க்குப்பயந்து அவர்கள் வண்ணாத்துறைக்கு அடுத்த தெருவிலிருந்து சுற்றிக்கொண்டு போகிறார்கள். உப்பு முதல் எல்லா வஸ்துக்களையும் தினம் சுத்தி செய்கிறேன். எங்களவர் தெருவிலிருந்து வரும்பொழுது, எதிரே செம்பு சாணித் தண்ணீரை எடுத்துக் கொண்டுபோய் மேலே கொட்டி சுத்தியான பிறகு திரும்ப உள்ளே வர விடுகிறேன். முந்தின நாள் சீதகாலத்தில் இராத்திரி குளிர் வேளையில் தன்மேல் நான் சாணித்தண்ணீர் கொட்டினேனென்று கோபம் வந்து மூன்றுமாசம் வீட்டிற்கு வாராமல் புறப்பட்டுப்போனார். போனால் போகட்டுமென்று சும்மா இருந்தேன். நமக்கு கோமயம் போட்டாலொழிய எதுவும் சுத்தமல்ல அல்லவா ?

சலம்:— நீ அதிருஷ்டக்காரியாகையால் ஒருமாதிரியாய் ஆசாரம் நடத்திக்கொண்டு வருகிறாய். எனக்கு உன்னைப்போல் நடக்காது. அப்படி இருந்தும் நான் தினம் இருநூறு ஸ்நானம் செய்கிறேன். இப்பொழுதுமட்டும் பத்து ஸ்நானம் செய்தேன். காலமே எழுந்திருந்து தோட்டத்தில் போனபொழுது, காலின் கீழ் ஏதோ மிருதுவாயகப்பட்டு அது ஒருவேளை துணியோ வென்று ஒரு முழுக்குப்போட்டேன். பிறகு என் நாட்டுப் பெண் என் பக்கமாய்ப் போனபொழுது அவள் முந்தாணி என் மேல்பட்டதாக அனுமானம் வந்து திரும்ப ஸ்நானம் செய்தேன். கோதாவரிக்குப்போய் ஸ்நானம் செய்து குடமெடுத்துக்கொண்டு வரும் போது புடவை துவைக்கிறபேர் ஜலம் மேலே பட்டதாகத்தோன்றி திரும்பப்போய் ஸ்னானம் செய்தேன். கடைசியில் கரைக்கு வரும்போது ஜலத்திலிருந்து காலில் ஏதோ இலைபட்டு, அது பற்றுப் பாத்திரங்கள் தேய்க்கிறபேர் போட்ட இலையென்று ஜலத்தைக் கொட்டிவிட்டு திரும்ப ஸ்னானம் செய்தேன். பிறகு குடமெடுத்துக்கொண்டு பாதிதூரம் வரும் போது, இருபதுகஜம் தூரத்தில் பறையன் கண்ணில் பட்டதின்மேல் ஜலத்தை எடுத்தெருவில் கொட்டிவிட்டு, அவனை நான்கு வசைகள் வைது அவனிழவுக் கென்று திரும்பப்போய் ஸ்நானம் செய்து தண்ணீர் கொண்டுவந்தேன். அகத்துக்கு வந்தபிறகு அடுப்புமேல் உலை வைத்துவிட்டு, சூத்திரச்சி தேய்த்துக்கொண்டு வந்த கரண்டியைக் கழுவி எடுக்கப்போய் அதிலிருந்து பற்றுவிடாததால் மைற்றங்கரையில் ஸ்நானஞ் செய்தேன். அந்தப்பற்றுத் தவலைகளில் ஒன்றை எடுத்துக்கொண்டுபோய் என் நாட்டுப்பெண் உள்ளே வைத்ததால் வீட்டிலிருக்கும் வஸ்துக்களை



எல்லாம் நனைத்துக்கொள்ளும்பொழுது ஒரு ஜாமம் ஆயிற்று. பிறகு சமைத்துக் கொண்டிருக்கும்பொழுது பல்லி மேலேவிழுந்ததினால் ஒரு தடவையும், சூத்திரர்கள் (?) பேச்சு காதில்பட்டு ஒரு தடவையுமாக ஸ்நானம் செய்தேன். இதற்குள்ளாக சாதம் குழைந்து போய்விட்டது. சீக்கிரம் முழுகிவிட்டு வந்து சாதத் தவலையை இறக்கி அந்த அடுப்புமேல் கறிபோட்டு கஞ்சிவடித்தேன். காலமே முதல் மடிகட்டிக்கொண்டு உட்கார்ந்ததில் வயிறு உப்பி வெளிக்குப் போகவேண்டி வந்து கடைசியில் ஸ்நானம் செய்தேன். எத்தனை ஸ்நானங்கள் ஆயினவோ கணக்குப்பார்த்தாயா ?

அன்னம்:— வெகு ஸ்நானங்கள் செய்தாய், நான் உன்னைப்பார்க்கிலும் பத்துமடங்கு ஸ்நானங்கள் செய்கிறேன். எங்கள் வீட்டிற்குள் நாய் வந்து அப்பொழுதப்பொழுது எதையாவது தொட்டுக்கொண்டிருக்கிறது. அப்பொழுது வஸ்துக்களை யெல்லாம் தூரமாய் எறிந்துவிட்டு அகத்தை சுத்திசெய்து கோமயம் (கோமயம்—சாணி) பூசிக்கொண்டு நாலு ஸ்நானம் செய்கிறேன்.

சலம்:— நான் முன்பு எங்கள் கொல்லையிலே எப்போதாவது கழுதை வந்தால் அதன்மேல் கல்லை விட்டெறிந்து விட்டு சும்மா இருந்து விடுவேன். நீ முந்தினநாள் சொன்னது முதல் ஒருவேளை மறதியின் பேரில் முன் வழக்கப்படி கல்லை விட்டெறிந்தாலும், உடனே போய் ஸ்நானம் செய்கிறேன். முன் நீ தினம் கோமயம் தின்னும் வழக்கமாயிற்றே. இப்போது தின்று வருகிறாயா ?

அன்னம்:— வயதாய்விட்டது. முன்னைப்போல் தின்ன முடிகிறதில்லை. இருந்தாலும் மூன்றுவேளையும் சேர்ந்து நெல்லிக்காயளவு உருண்டை கண்ணை மூடிக்கொண்டு விழுங்குகிறேன். கோமயம் எவ்வளவு தின்றாலும் அவ்வளவு புண்ணியம். பசு மூத்திரம் பெய்துகொண்டிருக்கும்பொழுது போய், வாலைப்பிடித்து அதனால் தலையில் தெளித்துக்கொண்டு கோமூத்திரம் மூன்று கையளவு குடித்தால் புண்ணியம். அந்தப்படி விடாமல் ஆறுமாசகாலம் தினம் செய்து வந்தால் இந்த தேகத்தோடே ஸ்வர்க்கம் கிடைக்கிறதாம்! ஆனால் அப்படி எவர்க்கும் கிட்டாது. முந்தின நாள் இடைச்சி வீட்டிற்கு காலமே சாணிக்குப் போகும்பொழுது அவர்கள் வெள்ளைப்பசு, மூத்திரம் பெய்து கொண்டிருந்தது. மூத்திரத்தை நெற்றியில் தெளித்துக் கொள்ளலாமென்று அதற்குப் பின்னால் போய் அதன்வாலைப் பிடிக்கும்பொழுது மூஞ்சியிலே ஒரு உதை உதைத்தது. அதோடே மல்லார்ந்து விழுந்து ஒருதுளி மூத்திரமாவது மேல் தெளித்துக்கொள்ளாமலே வீட்டுக்கு வந்துவிட்டேன்.

சலம்:— நீ மூன்று நாளாய் முகத்தில் சுண்ணாம்புப் பற்றுபோட்டுக்கொண்டிருக்கிறாயே, இதனாலேதானோ ?

அன்னம்:— போட்டால் நல்லதென்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். சாப்பாடானபிறகு கட்டிக்கொண்டிருக்கிற புடவையை அவிழ்த்து தர்ப்பாசனத்தில் கட்டிவைத்தால் எவ்வளவு நாளானாலும் அதற்கு விழுப்பே கிடையாது. எங்கள் பிள்ளையாண்டான் பட்டை நான் ஆறு மாதத்திற்கு ஒருதடவை துவைக்கிறேன். அப்பொழுது அதிலிருந்து நான்கு சேர் அழுக்கு ஜலத்தில் மிதக்கிறது.

சலம்:— "மடி" என்றால் நினைவு வருகிறது. தெற்கத்தியார்களுக்கு மடி என்பது சுத்தமாய்க் கிடையாது. அந்த தேசத்திலே சுத்த அனாசாரம். முந்தின நாள் எங்களகத்துக்கு ஒரு தெற்கத்திப் பிராமணன் சாப்பிடவந்திருந்தான். வெள்ளையாய்ப் பூவைப்போல் வண்ணாத்தி துவைத்துக்கொண்டு வந்த வேஷ்டி கட்டிக்கொண்டு ஊரெல்லாம் திரிந்துவந்து அந்த வேஷ்டியோடே இலையிலுட்கார்ந்தான். இதென்ன— என்றால் தான் கட்டிக்கொண்டபிறகு அவிழ்க்கவேயில்லை. தன்னுடையது மடிவேஷ்டிதான் என்கிறான். அவனுக்கென்ன கேடுகாலமோ தெரியவில்லை. காலமே கோதாவரி ஜலத்தில் நனைத்துக் கொண்டுவந்த என் புடவையைப் பார்த்து "வேணுமென்றால் உன் புடவை தான் விழுப்பு" என்கிறான்.

அன்னம்:— ஜலமில்லாவிட்டாலும் ஒரு தடவை சேற்றில் நனைத்துப் பிழிந்து காயப்போட்டால் அது மடியாகிறது. அந்த தேசத்தாருக்கு "விழுப்பு" என்றால் என்னமோ வென்பதே தெரியாது.

சலம்:— இரு; உன்னோடு பேசிக்கொண்டே நினைவில்லாமல் சுவரில் கைவைத்தேன். பல்லி வால் கையில்பட்டது. அதோ சுவரின் மேல் பறையப்பல்லி ஓடிக்கொண்டிருக்கிறது. நாக்கு வரண்டுபோகிறது. ஸ்நானம் செய்யாமல் ஒரு துளி தீர்த்தம்கூட சாப்பிட இயலாது.

அன்னம்:— நீ என்னைத் தொடவில்லையே ? இல்லாவிட்டால் நான்கூட முழுகவேண்டும்.

சலம்:— நான் தூரத்திலேயே யிருந்தேன். ஆனால் எப்படியிருந்தாலும் நல்லது. கோதாவரியில் ஒரு முழுக்குப்போட்டு உன் சந்தேகம் தீர்த்துக்கொண்டுவா. (என்று இருவரும் போகிறார்கள்.)

# அபாத்திர தானம்.

நாராயணவதானிகள்:— (தனக்குள்ளே) இன்றைய மத்தியான போஜனத்தைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. சரியாய் 10-மணிக்குள் வாதி இரண்டு கறிபச்சடியுடன் சாப்பாடு செய்வித்து வைக்கிறதாக ஒப்புக்கொண்டிருக்கிறான். சாக்ஷி சொல்வதற்காக வாங்கின ரூபாய் 8-ல் ஒருபைசாகூடச் செலவு செய்யக்கூடாது. இராத்திரி கோயிலிலே போன தேவதாசி ஒவ்வொரு தடவைக்கும் 8-அணாவுக்குக் குறையமாட்டாள் போலிருக்கிறது. மேலும் அவளிடத்தில் ஏதாவது பாம்பு, தேள் இருந்தால் என்ன செய்கிறது ? ஆமாம் ! பிரமாதம் ! புதுப் பேர்வழியா என்ன ? அக்கரையில்லை. எப்படியாவது இன்றைய இராத்திரிக்கு வேண்டிய அணா எங்கேயாவது சம்பாதிக்கவேண்டும். நம்முடைய கிராமத்தில் இந்த மாதிரி இனமுங் கிடையாது. இவ்வளவு லாவண்யமும் ஏது ? இப்பேர்ப்பட்ட சங்கதிகள் வெளிக்கு வந்தாலும் நமது தொழிலில் மண்விழும். பாழுங் கிராமம்; வெகு கண்டிப்பு. பட்டணவாச சௌக்கியத்திற்கு மிஞ்சினதில்லை. எல்லாம் தனது இஷ்டம்போல் ஆனந்தமாய் விளங்கலாம் ! இன்றைய சாயந்திரத்துக்குள் என் சாக்ஷியம் முடிந்துவிட்டால் நாளை இவ்வளவு நேரத்துக்கு நமது ஊருக்குப்போய் சௌக்கியமாயிருக்கலாம். அதோ வருகிற பையனை இந்த வீடு எவருடையதென்று விசாரிப்போம்.

ஒரு பையன் வருகிறான்.

நாராயண:— அப்பா ! இது எவருடைய வீடு ?

பையன்:— ஹைகோர்ட் வக்கீல் ராமதாஸ்பந்துலுவினுடையது.

நாராயண:— அவர் வீட்டுப் பெயரென்ன ?

பையன்:— வாடரேவு.

நாராயண:— அவர் தகப்பனார் பெயரென்ன ?

பையன்:— பீமராஜா போலிருக்கிறது. நான் கடைக்குப்போக வேணும் (என்று போய்விடுகிறான்.)

நாராயண:— (வீட்டுக்குள்ளேபோய்) ஐயா ! ராமதாஸ்பந்துலு அவர்களே ! நான் அத்தியயனம் செய்த பிராமணன். விஜயநகரம் ராஜசதசில் பரீக்ஷைகொடுத்து வர்த்தனை ஏற்பட்டிருக்கிறது. தங்கள் தரிசன நிமித்தம் வந்தேன்.

ராமதாஸ் பந்துலு:— (உள்ளே யிருந்துவந்து) எந்த ஊர் ஸ்வாமி ?

நாராயண:— எங்களுடையது மேற்கே கிருஷ்ணதீரம். நான் ஜடாந்தம், வேதம், அத்தியயனம செய்திருக்கிறேன். என் தகப்பனுரவர்கள் யாகம் (!) செய்தார்.

ராமதாஸ்:— நீங்கள் இந்த ஊருக்கு என் வந்திருக்கிறீர்கள் ?

நாராயண:— காசியாத்திரை உத்தேசமாய் ஊரைவிட்டுப் புறப்பட்டு வரும்பொழுது, நடுவில் எல்லூரைக் கடந்தபிறகு திருடர்கள் என்னையடித்து என் சொம்பு, நாலு வேஸ்டிகள், ரொக்கம் பத்துரூபாய், இவைகளைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். நான் இப்பொழுது கட்டிக்கொண்ட வேஷ்டியுடன் இந்த ஊருக்கு வந்தேன். கையில் செம்புகிடையாது. தங்கள் கீர்த்தி உலகமுழுவதும் வியாபித்திருக்கிறது. தாங்கள் தானத்தில் கர்ணவதாரம். தங்களைத் தரிசித்தால் என் தாரித்திரியம் விமோசனமாகுமென்று, சந்திரனை சகோர பக்ஷி தேடிவருவது போல எங்களூரை விட்டுப்புறப்பட்டது முதல் வழி முழுவதும் தங்களையே ஸ்மரித்துக்கொண்டு வந்தேன். தங்கள் பிராமண விஸ்வாசம் தஙகள் முகத்திலேயே விளங்குகிறது. தாங்கள் மகா பிராமணுள்.

ராமதாஸ்:— நீஙகள் இப்பொழுது என்ன சொல்கிறீர்கள் ? தங்களுடைய அபேக்ஷை என்ன ?

நாராயண:— செம்பு மாத்திரம் தாங்கள் வாங்கிக் கொடுக்க வேணும். காசி ராமேஸ்வரம் வரையில்— ராமதாஸ் பந்துலுகாரு செம்பு வாங்கிக்கொடுத்தார்களென்று சொல்லிக்கொள்வேன். தங்கள் பெயர் சாஸ்வதமாயிருக்கும். ஐயா ! தங்களுக்கு வாடரேவ பீமராஜு பந்துலு காரு என்ன வேணும் ?

ராமதாஸ்:—அவர்கள்தான் என் தகப்பனுர்.

நாராயண:— அப்படிச் சொல்லுங்கள். பீமராஜு பந்துலுகாரு என்றுல் லோகப்பிரசித்தம். இவ்வளவு தேசங்கள் நான் திரிந்திருந்தும் அவர்களைப்போல தாதாவை (கொடையாளியை) நான் கண்டதில்லை. அவர்களுடைய பிராமண விசுவாசம், தான சிலத்வம், வைதீகசிரத்தை— அதெல்லாமென்னத்திற்கு ! முதலிலிருந்து தங்களுடைய வம்சமே அப்பேர்க்கொற்றது.

ராமதாஸ்:—எங்கள் தமயனுர் உங்கள் ஜில்லாவில் தாசில்தாராக இருந்தார். அவர் பழக்கமுண்டோ ?

நாராயண:—எந்தத் தாலுக்காவிலேயோ—எத்தனையாவது வருஷம் ?



ராமதாஸ்:—குடிவாடதாலூகாவில்——-1875--முதல் 1901-— வரையில்.

நாராயண:—அவாள் நாமதேயம் ?

ராமதாஸ்:—வெங்கடாசலம்காரு.

நாராயண:—ஓகோ ! ஞாபகம்வந்தது ! வாடரேவு வெங்கடாசலம் காரு தங்கள் தமயனுரா ? அவர்களையும் அறியாமல் போகவேணுமா ? அவர்களுக்குப் பிராமணபோஜனம் செய்வதே மணியம். எங்கள் ஜில்லாவில் அவர் பெயர் அவ்வளவு முழங்கிக்கொண்டிருந்தது. அவருக்கு படித்த பிராம்மணனென்று என்னிடம் பரமபக்தி. அவர் கேவலம் ஈஸ்வராவதாரம்.

ராமதாஸ்:—யாரடா அங்கே ? தெருவில் யாரோ கத்துகிருர்கள் பார்.

சேவ :—இரண்டு குருடர்கள் பிச்சை போடச்சொல்லுகிருர்கள்.

ராமதாஸ்:—கழுதை மகன்களை இறையாதபடி நன்ருக அடித்துத் துரத்து. மறுபடியும் இந்த வாசல்வழி வராதபடிசெய். இன்று படுகிற உதை என்றைக்கும் அவர்கள் ஞாபகத்தில் இருக்கும்படிசெய். நேற்று தான் அந்த மீட்டிங்கில் அப்புது கனவானை உபசரிப்பதற்காக, எல்லோருடனும் சேர்ந்து நானும் 400 ரூபாய்க்குக் கையொப்பமிட்டு வந்தேன். இன்று மாலைக்குள் அத்தொகையைச் செலுத்திவிட்டால்தான் கௌரவம். இதற்கிடையிலே இந்தக் குருடர்களின் தொல்லை ஒருபுறம். இந்த ஊரில் குருடர்களும் முடவர்களும் நிறைந்துபோயிருக்கிருர்கள், பொழு விடிந்தால் பிச்சை பிச்சையென்று ஓய்கிறதில்லை.

சேவகன்:—அதில் ஒருவன் தொண்டுகிழம் ! கட்டிக்கொள்ளத் துணிகூட இல்லை. குளிரில் நடுங்கிக்கொண்டு பசி பசி என்று அலறுகிருன்.

ராமதாஸ்:—இந்தத் தரித்திரர்களுக்குத் தந்தால் நமக்கும் அந்த தரித்திரம் வந்துவிடும். இதனுல் நமக்கு என்ன லோக கௌரவம் சித்தித்துவிடப்போகிறது? கிழவனுமாச்சு, இழவனுமாச்சு, அவர்களை அப்புறப்படுத்தி, இந்த ரூபாயை மாற்றி இந்தப்பிராமணனுக்கு கால் ரூபாய் கொடுத்து, பாக்கி முக்கால் ரூபாயைக் கொண்டுவா.

நாராயண:—வேறொருவர் திரவியம் கலக்காதபடி செம்புக்கு வேண்டியதைத் தாங்களே தயைசெய்யவேண்டும். ஒரு ஒன்றேகால் ரூபாயைக் கொடுத்தால் சரியாய்ப் போகிறது.

ராமதாஸ்:—என்னமோ நமக்குத்தோன்றியதை நாம் கொடுத்தோம். மீதியை வேறோரிடத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்.

நாராயண:—"யாச்ஞா மோகா வரமதி குணேநாதமே லப்த காமா" என்று சொல்லி யிருக்கிறார். (நற்குணமுடையவனைக் கேட்டு வீணாய்ப்போகுதல்—துர்ச்சனனைக்கேட்டுப் பலனடைவதைவிட உத்தமம்) தங்களையொத்த புண்ணிய புருஷர்களை யாசிக்கிறதே யொழிய லட்சம் வந்தாலும் நீசர்களைக் கேட்கிறதில்லை. தாங்களானால் பெரிய தர்மாத்மாக்கள். தங்கள் சொத்துக்கு நான் இவ்வளவே கொடுத்து வைத்திருக்கிறேன்.

ராமதாஸ்:—இந்த பிராமணருக்கு இன்னும் இரண்டணா சேர்த்துக்கொடு.

சேவகன்:—உத்திரவுப்படியே. (இருவரும் போகிறார்கள்.)

நாராயண:— (தெருவில் வந்து) இந்த சாந்துகட்டடம் யாருடையது?

சேவகன்:—ஜோஷியம் பீமய்யரவர்களுடையது.

நாராயண:—அவருக்கென்னவேலை?

சேவகன்:—வேலையொன்றுமில்லை. காசுக்காரன். சூதாடி தினம் நாலுரூபாய் சம்பாதிக்கிறான்: மாசம் இருபதுரூபாய் கொடுத்து ஒரு தாசியை வைத்துக்கொண்டிருக்கிறான்.

நாராயண:—அந்த ரூபாயை இங்கே கொடு. மீதி பத்து அணா நான் கொடுக்கிறேன் (என்று தலைப்பாகையிலிருந்து எடுத்து சில்லரை கொடுத்துரூபாயை வாங்கிக்கொண்டு சேவகனை யனுப்பிவிடுகிறான்.)

நாராயண:—உள்ளேபோய் சாவடியில் உட்கார்ந்திருக்கும் ஒரு கருப்புமனிதனை பார்தது தாங்கள் தானே பீமய்யகாரு? தங்கள் தரிசனம் செய்து கிருதார்த்தனானேன். இதுவரையில் தங்கள் கியாதியைக் கேள்விப்பட்டுக்கொண்டு வந்தேனே யொழிய, எப்பொழுதும் தரிசனம் மாத்திரம் செய்யவில்லை. இப்பொழுது தங்களின் முகபாவத்தைப் பார்த்தால், நான் கேள்விப்பட்டதற்கும், இப்பொழுது பார்ப்பதற்கும் சரியாகவே இருக்கிறது. இருக்கிறார்கள் உலகத்திலே மகானுபாவர்கள்! நீங்கள் பார்க்கப்போனால் இவ்வளவு இருக்கிறீர்கள். உங்கள் கீர்த்தியைப் பார்க்கப்போனால் மூன்று உலகமும் நிறைந்திருக்கிறதே! அதென்னையா?

பீம:—சாஸ்திரிகளே! தாங்கள் எந்த ஊரையா?

நாராயண:—மேற்கே கிருஷ்ணாதீரமய்யா. காசி யாத்திரை செய்துகொண்டே வந்தேன். வழியிலே திருடர்கள் அடித்தார்கள். மஹாராஜா தாங்கள்! ஒரு வஸ்திரம் தயை செய்வீர்களென்று தங்கள் கீர்த்தி கேள்விப்பட்டு வந்தேன். மாசம் இருநூறு முந்நூறு சம்பளம் வாங்கும்



உத்தியோகஸ்தர்கள் கூட, தியாகம் கொடுப்பதில் தங்களில் ஆயிரத்திலொரு பங்குகூட ஆகமாட்டார்கள்.

பீம:—நீங்கள் கையில் பணமில்லாத சமயத்தில் வந்தீர்கள். நேற்றையதினம் வந்திருந்தால் நானே நல்ல வேஷ்டி வாங்கிக் கொடுத்திருப்பேனே. ஆயினும் இந்த ரூபாயைப் பெற்றுக்கொண்டு ஒரு சல்லா வேஷ்டி வாங்கிக் கொள்ளுங்கள்.

நாராயண:—சித்தம். சித்தம். எனக்கு இதே பதினாயிரம். ராமதாஸ் பந்துலு வக்கீல் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்கிற பேச்சைத்தவிர—ஒரு கால் ரூபாய் கொடுக்கிறதற்குள்ளாக அவர்கள் பெரியவர்களெல்லோரும் கீழிறங்கி வந்துவிட்டார்கள். லோகத்தில் தானகர்ணர் எனனும் பேச்சு தங்களுக்கே பொருந்தும்.

பீம:—சாஸ்திரிகளே நமஸ்காரம்.

நாராயண:—பஹூதன (வெகு) கனவஸ்துவாஹன ஸமிருத்திரஸ்து (உண்டாக) அஷ்டபுத்திரர்களும் வெகு தனமுமுண்டாக. (என்று தெருவிலே வந்து தனக்குள்தானே) சோர்ட்டுவேளை ஆகிவிட்டது. போஜனமும் நெருங்கியது. இந்தவேளை ஒரு ரூபாய் ஆறு அணா கிடைத்தது. மூடர்கள் உத்தியோகம் உத்தியோகம் என்கிறார்கள். இந்த வருமானமும் கௌரவமும் அதில் கிடைக்குமா? அது சேவகா விருத்திதானே! எப்பொழுதும் நான் ஒரு தாசி வீட்டிற்கும் போனதில்லை. எவர் துணையைப் பற்றிக்கொண்டு செல்வதோ ஒன்றும் விளங்கவில்லை. எப்படியும் இன்று இராத்திரி ஒரு ரூபாய் கொடுத்து எங்கேயாவது ஒரு சுந்தரமான தாசியின் வீட்டுக்குப் போகவேண்டும். பட்டண வாசங்களில் தாசிகள் வெகு அழகாய் இருக்கிறார்கள். இன்னொரு சாக்ஷியம் அகப்பட்டால் வெகு நல்லது. இன்னும் நாலு ரூபாயாவது அகப்படும் என்று போகிறான், நண்பர்களே தானத்தின் மகிமையை இங்கு கவனியுங்கள்!

## "திருவாழ்த்தான் இருந்தும் கெடுத்தான், போயும் கெடுத்தான்."

திருவாழ்த்தான் இருந்தும் கெடுத்தான், போயும் கெடுத்தான் என்று நமது நாட்டார் கூறுவார். அப்பழமொழி வழங்குவதற்கு நியாயம் என்ன. திருவாழ்த்தான் என்பவன் ஒரு பிராமணன். தந்திரசாலி, சமர்த்தன, அவனுக்கு ஒப்புமில்லை, உயர்வுமில்லை என்னலாம். ராஜாக்களுடைய சபைகளுக்குப் போவான். தன் சாமர்த்தியத்தைக் காட்டுவான். மகுட மன்னர்களும் மயங்கும்படி செய்வான். அவனைப்பற்றிய கதைகள் அனேகம் நமது நாட்டில் வழங்குவதாகும். திருவாழ்த்தானுக்கு அந்தியகாலம் கிட்டிற்று. சமயம் நெருங்கிற்று. எமபடாள் வந்து கொண்டிருந்தார்கள். சுவாச ஜாடை ஆரம்பித்தது. அச்சமயத்தில் அவன் மனைவி கண்ணும் கண்ணீருமாய்த் தலைமாட்டிலிருந்து வாய் விட்டலறுமல் கண்ணீர் விட்டழுதாள். கண்ணீர் திருவாழ்த்தான் முகத்தில் விழுந்தது. கண்ணை விழித்துப் பெண்சாதியைப் பார்த்தான். என் துக்கிக்கிறாய் என்று கேட்டான். அதற்கு அந்த அம்மை தம்முடைய சாமர்த்தியத்தால் உலகப் பிரதிஷ்டை பெற்றீர். நல்வாழ்வு வாழ்ந்தீர்.

அரசரும் விரும்பும்படி நடந்தீர். நாடெல்லாம் உம்மை மதித்தது. நகரமெல்லாம் வாழ்த்தியது. உம்மால் எமக்கும் பெருமை. நம்முடைய குலத்துக்கும் பெருமை ஊருக்கும் பெருமை. அப்படி இருக்க நீர் எமலோகம் புறப்படுகிறீர், என்னை விட்டுப்போகிறீர், போன பிராணனை இந்த உலகத்தார் ஒன்றும் செய்யமுடியாது. என்னையோ அப்படியல்ல; நீர் செத்தால், தாழ்வாரத்தில் என்னை உட்காரவைத்துத் தாலி அறுத்துத் தலையைச் சிறைப்பார்களே. இந்த ஊரிலே எத்தனையோ பேர் தொங்கத் தொங்கத் தாலியைக் கட்டிக்கொண்டிருக்கும்போது என் தாலிதானா அறுபடவேண்டுமென்று விம்மி விம்மி அழுதாள். இப்படி யிருக்கையில் ஊரிலுள்ள பெரிய மனுஷாள் மரணத்தருவாயிலிருந்த திருவாழ்த்தானைப் பார்க்கும் பொருட்டு அவன் வீட்டுக்குச் சென்றார்கள். திருவாழ்த்தான் மனைவியைப் பார்த்துத் தனியாய்த் தாலி அறுபடுமே யென்று தவிக்க வேண்டாம் போ என்றான் ஊரார் திருவாழ்த்தான் சமீபத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுள் பெரியவர் ஒருவர் அவனைப் பார்த்து, அப்பா திருவாழ்த்தா, நீ—தானாய்த் தலையெடுத்து தைரியமுள்ளவனாய், நாடெங்கும் போற்றும்படி கெட்டிக்காரனென்று பெயர் படைத்து, நம்முடைய குலத்துக்கு நடுநாயகமாய் விளங்கி வந்தாய், உன் தைரியத்தைக்கொண்டு நாங்கள் துணிந்து பல காரியங்களைச் செய்து சௌகரியங்களைத் தேடிக்கொண்டோம். அப்படிப்பட்ட சௌகரியங்கள் இனி எங்களுக்கு ஏது? அது நிற்கட்டும், உன் மனதில் ஏதாவது குறையிருந்தால் சொல்லு. அதைப் போக்கக் கூடுமானால் நாங்கள் செய்கிறோம் என்றார். அதற்குத் திருவாழ்க்தான், நீங்கள் என்னை நன்கு மதித்து வந்ததற்காக வந்தன வழிபாடு கூறுகிறேன். நம்முடைய ஊருக்கு ஈசான்ய திசையில் கருப்பன் தோப்பு இருக்கிறது. அதன் வடகோடி மூலையில் ஒரு ஆலமரம் உள்ளது. அந்த ஆலமரத்தின் கீழ் என் தேகத்தைத் தகனம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான். ஊரார் யோசித்து, இது ஒரு கஷ்டமான வேலையா, அப்படியே செய்கிறோம் என்று வாக்களித்தார்கள். பிராணன் போயிற்று. திருவாழ்த்தான் குறித்த ஆலமரத்தின் கீழ் காஷ்டம் அடுக்கப்பட்டது. மந்திர பூர்வமாய்ப் பிரேதம் அதன் மேல் வைக்கப்பட்டது. நெருப்புப் போடப்போகிற சமயத்தில் திடீரென்று பக்கத்தூரார் இருநூறுபேர் கையும் தடியுமாய்ச் சென்று தடுத்தார்கள். இரண்டு ஊராருக்கும் சண்டை நடந்தது, அது வலுவான சண்டை. அது ஸ்மசானச்சண்டை. அது ருத்திர பூமியாய் ஏற்பட்டபடியினாலே ருத்திர தேவதை அட்டகாசம் செய்தது. வீரா வேசம் கொண்டு இருதிறத்தாரும் கை கலந்தார்கள். நெடுநேரம் சண்டை நடந்தது. ஊருக்கு ஐம்பது பிணம் விழுந்தது. திருவாழ்த்தான் பிணம் வெந்தது. அவன் எண்ணம் நிறைவேறிற்று. ஊராரும் அளித்த வாக்கை நிறைவேற்றினார்கள். தாலி அறுத்துத் தலையைச் சிறைப்பது பத்தாநாள் ராத்திரி. இந்த இரண்டு ஊரிலும் சேர்ந்து நூறு தால அறுந்தது. நூறு தலைமொட்டை ஆயிற்று. திருவாழ்த்தான் தன் மனை விக்குக்கொடுத்த அன்பான வாக்கும் அழகாக நிறைவேறிற்று. மொட்டை அடிபடும்போது திருவாழ்த்தான் விண்ணப்பத்தை நினைத்து ஊரார் "அவன் பாவியிலும் பாவி, கொடும்பாவி. "இருந்தும் கெடுத்தான் போயும் கெடுத்தான்" என்றார்கள். இதுவே ஒரு பழமொழியாய் வழங்குகிறது.

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 9. { திரிச்சிராப்பள்ளி 1914ம் ௵ டிசம்பர் ஜனவரி மீ௴ங்கள். } சஞ்சிகை 6, 7

## மனோகரமான குறிப்புகள்.

திருக்குறளைப் போன்ற நூல் உலகத்திலே வேறெந்த பாஷையிலும் கிடையாது. அதிலே காணப்படாத தத்துவங்கள் மனிதப்பொது அறிவின் எல்லைக்குளில்லை. கம்பராமாயணத்தைப் போன்ற காவியம் மற்றெந்த பாஷையிலும் கிடையாது. விரித்துக்கொண்டு போவதேன்? நமது "ஆத்திச்சூடி" யைப்போல ஒரு புஸ்தகம் ஐரோப்பாக்கண்ட முழுதிலுமே கிடையாது. நமக்கு தேவபாஷை தமிழ்!

உலகத்தில் எல்லோருக்கும் நல்லவனாக இருக்க விரும்புவோன் தன்னுடைய கோபத்துக்கு விடை கொடுத்து, ஒவ்வொருவருடைய குணத்தையும் அறிந்து அதற்கு ஏற்றபடி தன் வார்த்தைகளையும் செய்கைகளையும் மாற்றிக்கொள்ளவேண்டும்.

இராமர் சமுத்திரத்தைத்தாண்டி இலங்கைக்குச் செல்லும் பொருட்டாக அணைகட்டித் தீரவேண்டியிருந்தது. ஆனால் இராமரிடம் விசுவாசமுள்ள ஹனுமார் அதே கடலை ஒரு குதியிலே தாண்டிவிட்டார். அவருக்கு இராமரிடம் இருந்த விசுவாச பலத்தினால் இவ்வாறு செய்ய முடிந்தது. ஆதலால் மற்றெவ்விதமான பலத்தைக்காட்டிலும் மன வுறுதியின் பலமே விசேஷமானது.

தட்சணைக்கு முன் வேண்டியது
பணம். அந்த பணம் இருப்பது எங்கே
பணம் வேலை செய்தால் கிடைக்கு
பணம் கிடைத்தவுடன் எங்கே வை
கும்? பணம் கள்ளுக்கடையில் வை
கும். பணம் சாராயக்கடையில்வை
கும். பணம் சண்டைபோடச்செ
யும். பணம் சாவடிக்குப்போகு
பணம் வேசி விலை மாதர்க்கு குஷா
செய்யும். பணம் தாலிகட்டிய மனை
வியை விட்டு தனிக்குடித்தனம் செ
யும். பணம் ரோகம்பெற்று ஆஸ்ப
திரி போகச்சொல்லும். பணம் அ
ய பெரிய ஆங்காரம் செய்யச்சொ
லும். பணம் ஒரு பெண்டீர் இல்லற
திலிருக்க ஒன்பதுபெண்டீரைப் பத
பார்க்கச் சொல்லும். பணம் வெ
ளையும் சள்ளையும் உடுத்தி வீண் ட
பம் செய்யும். பணம் கலியாண
செய்த பெண்ணை புருடன் வீடு அ
ப்பாமல் தாய் வீட்டிலேயே போயிரு
கச்செய்யும். பணம் புருடன் அழை
தால் குடுமியை பிடித்து குஸ்தி பே
டச்செய்யும்.

தமிழ்ப்பேச்சிலும், இலக்கியங்
ளிலும் துருக்கர் உறவினால் ஏற்பட்
பதச்சேர்க்கையில் ஏற்ற இறக்கங்க
அடியிலிருந்து பார்த்துக்கொண்டு வ
வோமானால், அதுவே மிகவும் ர
மும், பயனுமுடையதோர் ஆராய்

யாகும். திருஷ்டாந்தமாக 'துலாட்' என்ற பதத்தைப் பாருங்கள். இதற்கு 'அடிமை' என்றர்த்தம். தற்காலத்திலே கூட இச்சொல் நமக்கு முற்றிலும் புறம்பாகி விடவில்லை. ஆனால் பட்டினத்துப்பிள்ளை காலத்திலே இம்மொழி மிகவும் நல்ல வழக்கத்திலிருந்த தென்பதை அவர்,

"குறிக்குமிச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியா
திறக்குங் துலாமநக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே!'

என்று பாடியிருப்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

பிரதியொரு பண்டாபீசுகளிலும் கணக்கற்றபெஞ்சுகள், சோபாக்கள் நாற்காலிகள், பீரோக்கள், டேபில்கள் வாங்கிப்போடப்பட்டிருக்கின்றன. ஆபீசு வாடகை அளவுக்கு மீறிக்கொடுக்கிறார்கள். ஏராளமான குமாஸ்தாக்களும் சில்லரை சிப்பந்திகளும் வேலை செய்து வருகிறார்கள். ஏஜண்டுகளுக்கு தக்க கமிசன்கள். அதாவது 100-க்கு 25 வீதமும் சில சமயங்களில் கொடுக்கிறார்கள். தவிர அயல் ஊர்களிலுள்ள ஏஜண்டுகள் ஹெட் ஆபீசுக்கு வந்து செல்லும்போதெல்லாம், போக வரப்படி, செல்லும்படிச்செலவு இங்கே யிருக்கும் வரையில் தினம் ஒன்றுக்கு அந்தஸ்துக்குத்தக்கபடி 8 அணா வீதம் படி முதலியவும் கொடுக்கிறார்கள். ரிஸர்வ் பண்டென்று ஒரு பாகம் எடுத்து மிகுத்து வைக்கிறார்கள். செக்ரிடெரியும் மானேஜரும் சாரட்டில் போவதும், சைக்கிள் வாங்குவதும், மாடி வீடு கட்டுவதும், மனைவிகளுக்கு நகை பூட்டுவதும், இப்படி எல்லாம் ஏராளமான செலவுகள் எந்த வரும்படியிலிருந்து செய்துவருகிறார்கள்? ஏழைச் சந்தாதார்களால் மாதா மாதம் கொடுக்கப்படும் சந்தாத்தொகையிலிருந்துதானா, அல்லது இவர்கள் ஏதேனும் தங்கள் 'சொந்த ஜேவஜி லிருந்து செலவழித்துவருகிறார்களா? அப்படியிருக்க நமது ஏழை ஜனங்கள் எவ்விதம் ஒரு ரூபாயைப்போட்டுவிட்டு 100 ரூபாய் வாங்கிக்கொண்டு வந்துவிடலாம் என்று இந்தப் பண்டாபீசுகளில் சேருகிறார்களோ நாமறியோம். இப்படிப்பட்ட மாரண பண்டு, கலியாண பண்டுகளைப்பற்றி இனியும் விரித்துக்கூறல் அநாவசியமென்று நிறுத்துகிறோம்.

திருச்சி சென்னை முதலியவிடங்களில் நடக்கும் மொகரம் பண்டிகையில் தமிழர்கள் புலிவேடம் போட்டுக்கொண்டு வாலையாட்டுவது கேவலம் வயிற்றுப் பிழைப்புக்கே யன்றி வேறில்லை. முகம்மதியர் பண்டிகையில் தமிழர்கட் கென்ன வேலை?

ரயில் சிநேகிதர்களை நம்முடைய வீட்டிலுள்ளோர்க்குப் பழக்கப்படுத்துவது பெரிய பிசகென்பதற்கு யாதொரு ஸந்தேகமும் கிடையாது. பிரயாணத்தில் ஒரு மனிதன் மிகவும் நல்லவனாகக் காணப்படலாம். நம்முடைய மனதில் அவன் மிகவும் பரிசுத்தனென்று தோற்றலாம். அவனைப் பற்றிய சமாசாரங்களும் அவனுடைய பிறப்பு வளர்ப்பும் சந்தேகத்திற்கு இடமில்லாததாகவே இருக்கலாம். ஆனால் நம்முடைய வீட்டு மனிதர்களுடன் அவனை அதிகமாகப் பழகவிட்டால் அவன் எப்படிப்பட்டவனாக நடந்துகொள்வானென்பது நாம் அறியக்கூடாத விஷயம். நாடகம், ரயில்வே, ஜட்காவண்டி நேசர்களைச் சாந்தமான பூனைகள் என்றுசொல்லலாம்.

ஒரு மதத்தாரோடு மற்றொரு மதத்தார் சண்டை போடலாகாது. ஒவ்வொரு மதத்தாரும் தங்கள் கொள்கைகளைச் சிறந்தனவென்றே மதித்திருக்கின்றனர். அவர்களுடன் சண்டை போடுவதால் யாதொரு பயனுமுண்டாகாது. ஈசுவரனுடைய தயவுடனன்றி யாருக்கும் மதத்தின் உண்மை விளங்காது. பகவானுக்குப் பலகோடி நாமங்களும் ரூபங்களும் உண்டாயிருக்கின்றன. எவர் எந்த ரூபமாய் உபாஸித்து எந்த நாமாவால் ஸ்தோத்திரம் செய்தாலும் அவருக்கு உவப்பேயாகும். நமது நாட்டாருக்கு மதாபிமானம் குறைவாயிருப்பினும், புறநாட்டார்தோன்றி, அக்குறைவைப் பூர்த்தி செய்து ஆரிய மதத்தின் பெருமையைப் பிரகாஸப்படுத்துகின்றனர். இது முன்னோர்களின் தவப்பயன் போலும்!

தோப்பு என்ற வார்த்தை தோகுப்பு என்ற வார்த்தையிலிருந்தே மருவி வந்த மொழி என்பார். தொகுப்பு என்பது சேர்த்துவைத்தது என்று பொருள்படும். ஆல், மா, அரசு புளி. இலுப்பை பூவரசுமுதலிய பலவகைப்பட்டமரங்களைச் சேர்த்துப் பயிரிடப்பட்டு அம்மரங்கள், வானுறவோங்கி வளம்பெற வளர்ந்திருத்தலையே தோப்பு என்று சொல்லலாம்.

எந்த வஸ்துவும் காலம் கூடாமல் கைக்குக்கிட்டாது என்று ஜனங்கள் சொல்லுகின்றனர் அதன் உண்மையான பொருள் யாதெனில், கிடைக்காத பலன்களெல்லாம் முடிக்காத காரியங்களைச் சார்ந்தவை யென்றறியாததே.

ஒரு மண் பாத்திரத்தில் நிறைய ஜலத்தை யூற்றி ஓர் அலமாரியில் வைத்தால் சில நாளைக்கெல்லாம் அவ்வளவு ஜலமும் சுண்டிப்போகும் அப்பாத்திரத்தை ஜலத்திற்குள் அமிழ்த்தினால் அது உலர்ந்து போகாமல் எப்போதும் ஜலம் நிறைந்திருக்கும். அதுபோல் நம்முடைய ஹிருதயத்தில் ஈசுவரனை வைத்துச் சிறிது நேரம் தியானித்துப் பிறகு வேறு காரியங்களிற் பிரவேசித்தால் அந்த ஹிருதயம் ஸ்வாமியின் கிருபையின்றி வரண்டு போகிறது. அப்படியின்றி ஹிருதயத்தில் எப்போதும் ஈசுவரனையிருத்தித் தியானம் செய்தால் அவர் அங்கே பரிபூர்ணமாக இருந்து கிருபை செய்வார். இது தான் உண்மையான பக்தர்களின் இலக்ஷணம்.

"ஹோமா" என்று ஓர் வகையான பறவைகளுண்டு. அவைகள் ஆகாயத்தில் நெடுந்தூரம் சென்றுவிடுவதால் அங்கிருந்து கீழே யிறங்க இஷ்டப்படுகிறதில்லை. ஒருவேளை அப்பக்ஷிகள் ஆகாயத்திலேயே முட்டையிட்டாலும் அம்முட்டைகளைப் பற்றி கவனிக்கிறது மில்லை. அம்முட்டைகள் பூமியின் சக்தியால் கீழே விழுந்து கொண்டிருக்கையில் ஆகாயத்திலேயே உஷ்ணமான காற்றடித்து உடைந்து குஞ்சுகள் வெளிப்படுகின்றன. இவைகளும் நிலத்தில் விழுகிறோமென்றுணர்ந்து ஆகாயத்திலேயே பறந்து நெடுந்தூரஞ் சென்று தங்கள் தாய்ப் பக்ஷிகளிருக்கு மிடத்தை அடைந்து விடுகின்றன. அதுபோல் சுகர், நாரதர், சங்கராசாரியர் முதலிய மகான்களெல்லாம் இளம்பிராயத்திலேயே பிரம்ம ஞானத்தை யடைந்து முக்தர்களானார்கள்.

சில தலங்களில் வருவாய்களுண்டு. அவைகளின் முகத்துவாரம் புலியின் வாயைப்போலிருக்கும். ஸாமான்ய சிறுவர்கள் புலியே இந்தஜலத்தை வாயால் கொட்டுகிறதென்று நினைப்பார்கள். புத்திசாலிகள் வருவாய்களிலிருந்து ஜலம் வருகிறதென்றெண்ணுவார்கள் அதுபோல் சகல தர்மங்களும், வேதாந்த உபதேசங்களும் குருமுகமாய் வருகிறதென்று ஸாமான்யர்கள் நினைக்கிறார்கள். விவேகிகள், அவைகளெல்லாம்ஸாக்ஷாத் பகவானிடமிருந்தே வருகிறதாய் அறிந்துகொள்ளுகின்றனர்.



162409

# வர்த்தமானங்கள்.

என்ன தான் அன்றன்று தின்று, பொன்னையும் மண்ணையும் பெண்ணையும் கவனித்துக் கவலைகொண்டு, கடவுளை முதலாய் நினைக்க நேரமில்லாது, இன்பம் ஒரு பங்காய், துன்பம் பதின் மடங்காய் நாம், "பல துளி பெரு வெள்ளமாக" நிமிஷம் மணியாகி, மணி நாளாகி, வார மாத வருஷங்களாய் வீண் காலங்கழித்து வந்தபோதிலும், இகத்தின் சம்பந்தமான இராஜாங்க சரிதையை எண்ணாது இருக்கக்கூடாததாகையால், தற்போதைய ஐரோப்பிய யுத்தத்தில் எல்லோருடைய கவனமும் சென்றிருக்கின்றது.

எக்ஸிகுடிவ் என்றால் நிர்வாக அதிகாரம்.. அதாவது ரெவினியூ, போலீஸ், எஞ்சினீரிங், முதலிய அதிகாரங்கள். ஜுடிஷல் அதிகாரமாவது நீதி விசாரணை அதிகாரம்.

மகம்மதியர்கள் நான்கு ஸ்திரீகளுக்கு அதிகமாய்க் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாதென்ற கண்டிப்பான கட்டளை ஆப்கானிஸ்தானத்தில் வழங்குகிறது. அமீர் ஏற்கெனவே 8-ஸ்திரீகளை மணந்து கொண்டிருப்பதால் சாஸ்திரம் அவ்வாறு செய்ய அனுமதி தரவில்லையென்றறிந்தபின் நால்வரை நீக்கிவிட்டனர்.

இந்தியாவிலுள்ள தேச சமஸ்தானங்களெல்லாம் சேர்ந்து இந்தியாவின் விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பாகமும் அதன் ஜனத்தொகையில் ஐந்திலொரு பாகமும் கொண்டன. ஆனதால் இந்திய ஜனங்களைப் பரிபாலித்து க்ஷேமப்படுத்துவதில், தேச மன்னர்களும் இந்தியாக் கவர்ன்மெண்டும் பங்காளிகள் என்று லார்ட் கர்ஸன் முன் ஒரு முறை கூறினார்.

போஸ்டல் டிபார்டுமெண்டு தான் ஜனங்களுக்கு ஸந்தோஷகரமானது. போலீஸாரைக் கண்டால் கிராமவாஸிகள் ஓடியொளிகின்றனர். ரெவினியூ அதிகாரிகள் வந்தால் பணம் பிடுங்குகிறவர்களென்று பயமடைகின்றனர். போஸ்டுமான்களைக் கண்டால் வெகு ஸந்தோஷமடைந்து அவனை வீட்டுக்குள் அழைத்து உட்காரச்செய்து வெற்றிலைப் பாக்கு கொடுத்து உபசரிக்கின்றனர். தூரதேசங்களிலிருந்து தங்கள் உறவினர் எழுதும் சங்கதியும் அவ்வுறவினரின் க்ஷேமமும் போஸ்டுமான்கள் கொண்டுவரும் கடிதங்களால் தெரிகின்றனவாதலின் அந்த டிபார்டுமெண்டாரிடம் ஜனங்களுக்குப் பிரீதி யதிகம்.

யுத்தத்திலே வெள்ளைக்கொடி காட்டப்படும் பக்ஷத்தில், அதைக் காட்டுவோர் பணிந்து போய்விட ஒப்புக்கொண்டு அதை அறிவிக்கிறார்களென்று பொருள் பண்ணப்படும்.

முன்பு இந்தியா மந்திரிக்கு உதவி மந்திரியாக இருந்தவர் மிஸ்டர் மாண்டேகு ஆவர். அவருக்குப் பின் இப்போதுள்ளவருக்கு மிஸ்டர் ராபர்ட்ஸ் என்று பெயர்.

20 வருஷங்களுக்கு முன்பு இரண்டு குதிரைகளை வைத்து வளர்ப்பதற்குப் பிடித்த பணத்தைக் கொண்டு தற்காலம், ஒரு குதிரையை வைத்து வளர்ப்பதற்கும் முடியாமலிருக்கிறது என்று சென்னையில் வசிக்கும் வயது சென்ற ஆங்கிலோ இந்தியர் ஒருவர் சொல்லுகிறார். அப்பொழுது ஒரு ரூபாய்க்கு அரிசி 20 படியாக விற்று வந்ததென்றும் கிழவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அந்தக்காலத்திலே நாம் பிறந்து வாழ்ந்திருக்கக்கூடாதா?

கற்பக விருக்ஷத்தின் கீழிருப்பவன் போஜனமுண்ணாமல் பட்டினியிருப்பதுபோலும், காவிரியாற்றின் கரையிலிருந்தும் தாகத்தை தணித்துக் கொள்ளாத கசடனைப்போலும் மூடர்கள் பிறருக்கு உபகாரஞ்செய்யும்படி நல்ல சமயம் வாய்த்தும் அதை உபயோகிக்காமல் சும்மாவிருக்கின்றனர்.

# கனகவல்லியின் கடிதம்.

பிராணநாதா !

பிரேமபூர்வகமாய் சாஷ்டாங்க நமஸ்காரம். இந்த ஒரு தடவை மட்டும் எழுதுகிறேன். பிறகு தாங்கள் எழுதியபடி நான் எழுதிக் காட்டவில்லை. இந்த தடவை எழுதியதற்கு மன்னிக்கவும். என்மீது அன்று கோபித்துக்கொண்டதற்குக் காரணம் என்ன? என் மனப்பூர்வமாக நான் அன்று ஒரு பிழையும் செய்தறியேன். அன்று நான் செய்த குற்றம் யாதெனில் மஞ்சத்தின் மீதிருந்து தங்களைக் கண்டதும் எழுந்ததுதானே! நான் எழுந்ததைப்பற்றிக் கோபித்துக்கொண்டதை நினைக்க, நினைக்க, வெகு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. நான் மரியாதைக்கு எழுந்தேன். அது தங்கள் மனதுக்கு வேறுவிதமாய்த் தோன்றியது. அத்தருணம் தங்களுக்கு உண்டான கோபத்தில் என்னைநோக்கி "வேறு யாரையாவது விவாகம் செய்து கொள்ளட்டும்" என்றீர்கள். இவ்வார்த்தைகள் இனி என்ன சமாதானம் உரைத்தபோதிலும் என்னுடல் அழியுமட்டும் மறவேன். நான் அப்பேர்ப்பட்டவளென்றும் அல்லவென்றும் தங்களுக்கே தெரியும்.

தங்கள் நினைப்பெல்லாம்—இராஜாமணி, வேணுநாதம் இவ்விருவரும் ஸ்திரீ புருஷ மரியாதையை மறந்து, தங்களை ஏதோ வயதிற் கிழவன் கிழவிகள் போல் கருதி, ஆயிரத்தெட்டு குழந்தைகளையும் இரண்டாயிரம் பேரன்களையும் பார்த்துவிட்டவர்கள்போலப் பாவித்துக்கொண்டு, எல்லோருக்கும் எதிரில் ஒரே பாயில் ஒருவர் மேலொருவர் கைபோட்டுக்கொண்டு சயனித்து மரியாதை இல்லாமல் இருக்கிறார்களே; அவர்களைப்போல் நாமும் இருக்கலாம் என்பது தானே! தங்கள் அபிப்பிராயம் நான் எழுதியபடியே அவ்வாறேயாயின் அஃது சரியன்று. இராஜாமணியையும் வேணுநாதத்தையும் எவ்வளவு இழிவாகச் சொல்லுகிறார்கள்? எத்துணைக் கேவலமாக அவர்களை மதிக்கிறார்கள். என்ன தான் ஸ்திரீ புருஷ அன்பு மேலிட்டு நின்றபோதும் ஒளி மறைவு வேண்டாமா? இப்படிப் பகிரங்கப் பிரவேசமாய் எல்லோரின் முன்னிலையில் சதிபதிகள் இருவரும் ஒரு பாயில் படுத்துறங்குவதா? அதுவும் தன் வீட்டிலானாலும் பரவாயில்லை. பிறர் வீட்டிற்கு வந்திருக்கும்போது நான்கு பேர் கூட்டம் சூழ்ந்திருக்கும்போது இவ்விதம் நடந்துகொள்வது எவ்வளவு நாணத்தக்க செய்கை? சொந்த வீட்டிலேயேயானாலும், வெளியிலிருந்து

பந்து வகையினர் வந்திருந்தால், ஸ்திரீகள் கூட்டத்தோடு இராஜாமணி சயனிப்பதும், புருஷர்கள் கூட்டத்தோடு வேணுநாதம் உறங்குவதுந் தான் லோகரீதியைத் தழுவியதாயும், உசிதமும் நியாயமுமானதாகவும் இருக்கும். யௌவனபக்குவம் வாய்ந்த ஸதிபதிகள் இருவரும் வேறுவித நினைவில்லாமல் ஒரே பாயில் சயனித்தாலும்,—அது எல்லோருடைய முன்னிலையிலானால் பழிப்புதானே! இது இந்தக்காலத்து நாகரீகதர்மமோ! ஐரோப்பியர்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ளுகிற நவீன சம்பிர்தாயங்களோ இவைகள்? வெகு உன்னதந்தான்! என்னதான் பாடுபட்டு அவர்களைப்போலத் தங்களை உருமாற்றிக்கொண்டாலும், அந்த ஐரோப்பியர்களின் பெருந்தன்மையும், அவர்களின் யுக்தி புத்தி சக்திகளும் நம்மவர்களுக்கு உண்டாய்விடுமோ! வனப்பிற் சிறந்த மயிலின் முன்பு, வான்கோழி தனது பாழுஞ் சிறகை விரித்து பரத நடனம் செய்த பான்மைபோலன்றோ ஆகும்? எனவே நாம் இருவரும் அவ்விதம் இராமல் லோகாசாரத்தை யொட்டி நமது பெரியோர்கள் நமக்கு முன்பு எப்படி நடந்துகொண்டார்களோ அதனைத் தழுவி, ஸயனக் கிருகத்தில் ஸகலமரியாதைகளும் விடுத்து, பரம் பொருளுடன் ஆத்மா தனது ஸர்வ பாசங்களையும் துறந்து ஐக்கியமாவது போன்று, நாம் இருவரும் அன்பு கலந்து, நாணுதல் மறந்து, அந்நியோந்நியமாகுதலும்; வெளிப்புறத்தே பலர் முன்னிலையில் இருக்கும்போது உலகத்தின் நடையுடை பாவனைகளைத் தழுவி அதற்குகந்த மரியாதைகளின்படி நடந்துகொள்ளுதலுமாக இருந்தால் வெகு நல்ல பேரை யடைவோம். ஸயனக் கிருகமாகிய கடவுளினுடைய ஆலயத்தில், மனிதபேதம்—ஸ்திரீ புருஷ வித்தியாசம் எதுமில்லை, ஆலயத்தில் சூத்திரன் முன்பாக பிராமண ஐயங்கார் கோயிற் பிரஸாதத்தைத் தாராளமாக ஸங்கோஸமின்றி யுண்கிறார். அங்கு வெகு ஜனக்கூட்டத்தில், ஸ்திரீ புருஷர்கள் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டும் மோதிக்கொண்டும் செல்கின்றனர். ஆலயத்தைவிட்டு வெளிவந்ததும் ஒருவருக்கொருவர் தூரவிலகிச் செல்லுகிறார்கள். அவ்விதமே, ஸயனக் கிருகமாகிய ஆலயத்தைவிட்டு வெளிவந்ததும் ஸ்திரீயைக்கண்டால் புருஷன் ஒதுங்கிச் செல்லுகிறான். ஆடவனைக்கண்டால் அங்கனை விலகிச் செல்லுகிறாள். ஆலயத்திற்கு வெளியே சூத்திரன் முன்பு பிராமணன் அன்னம் புசிக்க அருவெறுக்கிறான். உலக ஆசாரணைகள் உடனே தோன்றிவிடுகின்றன. ஆகவே ஸயனக்கிருகத்தில் நாம் இருவரும்பரஸ்பரம் மரியாதையில்லாமல் இருப்பதைக்குறித்துக்கொண்டு அங்கு காட்டுகிற அன்பையும் கருதியவண்ணம், அவ்விதமே வெளியிலும் பலர் முன்னிலையில் நடந்துகொள்வதென்றால் அது வெகு ஆபாஸகரமாக ஆகிப்போம். ஊருடன் கூடிவாழ்—உலகத்தோடொத்துவாழ்—என்று



நமது ஔவையார் நவின்றதைத் தாங்கள் சற்றேனும் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்பது என் அவா.

சென்றதடவை வேணுநாதமும் இராஜாமணியும் வந்திருந்தகாலை வேணுநாதம் சற்றும் லோகாசாரணையைப் பின்பற்றாமல் நடந்துகொண்டார். மரியாதைக்காக, நான் மறைந்து மறைந்து ஒளிந்து நின்றும், என்னை உள்வீட்டிற்கு வந்து பார்த்தார். தாங்கள் நான் வந்தால் எழுந்திருக்கவேண்டாம் என்று கூறியது என் நினைவிலிருக்கிறது ஆனால், அன்று வேணுநாதம் என் எதிரில் வந்து உட்கார்ந்ததும், அச்சமயம் சாப்பிட்டுக்கொண்டிருந்த நான் உடனே அம்மட்டில் ஒரு கவளம் மாத்திரம் புசித்துவிட்டு எழுந்துவிட்டேன். நான் எழுந்த சமயமும், தாங்கள் நான் இருக்கும் இடத்துக்கு வந்த சமயமும் ஒன்றாக இருந்தது. நான் ஏதோ அதுவரையில் வெறுமனே உட்கார்ந்திருந்தது போலவும் தங்களைக் கண்டதும் எழுந்ததுபோலவும் தங்களின் மனதில் பட்டுவிட்டது. மறுநாள் தாங்கள் என்னிடம் "நீ வேணுநாதம் முதலியவர்களுக்கு எதிரில் வரலாம்—என் எதிரில் வரக்கூடாதா—உட்காரலாகாதா? ஆனால் அவர்களோடு போகலாமல்லவா?" என்றீர்கள். அப்போது என் மனம் பட்ட கஷ்டம், துயரம், ஆத்திரம் கடவுளுக்குத்தான் தெரியும். அந்த ஒரு சொல் போதாதென்று என்னைக் கோபித்த தினமும் வேறு யாரையாவது விவாகம் செய்து கொள்ளட்டும் என்றீர்கள். உலகத்தில் ஸ்திரீகள் தங்களின் பதிகளால் கௌரவிக்கப்பட்டு, அதனால் உலகத்தார் முன்னிலையில் உன்னதம் பெறவேண்டியவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் என்மீது இளமைதொட்டு எத்தனையோ அன்புமிக்குடையவரென்பதையும், நான் மரியாதையாக நடந்துகொள்வதையும் அந்த அன்பு அதிகரிப்பாலேயே வேண்டாமென்று ஒதுக்கி, சரிசமானமாய் இருக்கும்படி கூறியும் வருகிறவர்களாயிருப்பதை என்னுள்ளம் பரிபூர்ணமாய் உணர்ந்திருந்தாலும், இந்த மாதிரியான மேற்கண்ட சொல்லம்புகளால் என் மனத்தை ஆழப் புண்படுத்திவிடுஞ் செய்கை வெகு உக்கிரகமானது. பதிதர்ம பாராயணையான என்போன்ற ஒரு உத்தம ஸ்திரீக்கு இச்சொல்லம்புகளைப் போன்று வருத்தம் விளைப்பது ஞாலமீது வேறொன்றில்லை. வில்லம்பு—சொல்லம்பு இரண்டுண்டு மேதினியில். வில்லம்பின் அடிக்கேனும் தாங்கலாம். சொல்லம்பின் அடி கடைசி நாள்வரையும் ஆறாது. தீயினாற் சுட்டபுண்ணேனும் ஆறும்! நாவினாற் சுட்டபுண் ஒருபோது ஆறாது என்பது திருக்குறள். பின்னும் தங்களுக்குக் கோபம் வருகிறபோது தாங்கள் ஒரு தனிமனிதர் ஆகிவிடுகிறீர்கள். அத்தருணத்தில் என்பால் அதற்கு முன்னர் பாராட்டிய

162409

அன்பு, காதல் இவையனைத்தும் வேறுதேசம் தேடிச் சென்றுவிட, தாங்கள் முற்றிலும் அன்னிய புருஷராய் புது மனிதராக மாறிவிடுகின்றீர்கள். நான் போட்டோகிராப் வேலையில் பழகியவளாயிருந்தால், தங்களுக்குக் கோபம் உண்டான சமயத்தில், தாங்கள் என்னென்ன விதமாக எல்லாம் மாறி நடனம் செய்கிறீர்களோ அந்தந்த மாதிரிகளையெல்லாம் நிமிஷத்திற்கு நிமிஷம் ஒவ்வொரு படமாகப் பிடித்து, பிறகு தங்களுக்கு சாந்தம் ஏற்பட்டு ஸாத்வீக குணஸம்பன்னராய் வீற்றிருக்குங்காலையில் கொண்டுவந்து காண்பித்து—இப்படியும் நாம் உருமாறி, முகங்கடுத்து அகம் சிடுசிடுத்து, பயங்கரத் தோற்றமாய் நின்றோமாவென்று தாங்களே ஆச்சரியப்பட்டு மனது வெதும்பி, உள்ளம் நாணி, அக்கோபத்தையே வெறுத்தொதுக்க வேண்டுமென்று, தாங்களே வீரசபதம் செய்து கொள்ளும்படியாகச் செய்திருப்பேன். ஆனால் அத்தொழிலில் எனக்குப் பரிச்சயம் அணுவளவேனும் இன்மையால், காகிதத்தில் எழுதிக் காண்பித்தேனும் எனது மனது திருப்திப்பட வேண்டுமென்று இது வரைவதானேன். பர்த்தாவுக்கு அவரது தர்மபத்தினி அடங்கி எதிர் பேசாது நடக்கவேண்டியதே மரபாயினும், பர்த்தா தவறி நடந்தகாலத்தும் அதனை யேற்றுக்கொள்வது குடும்பக்ஷேமத்திற்கு அருகமானதன்றென்பது என் கொள்கை. ஆனால் உடனுக்குடன் எதிர் நின்று பேசுவது, கற்புடைய மங்கை யொருத்திக்கு அவளது பாதிவிர்த்தியத்துக்கு முற்றிலும் விரோதமாகும். "கற்பெனப்படுவது சொற் றிறம்பாமை" என்றிருப்பதை என் உள்ளம் அறியும். தனது காதர் தவறி நடந்த இடத்தும் அச்சமயம் அதைப்பற்றிக் கேளாமல், பிறகு இருவரும் அன்பு குலாவி பிரேமஸாகரத்தில் வீற்றிருக்குங்கால், தனது பதியின் தவறுதலை வணக்கமான சொற்களில் எடுத்துக்காட்டித் திருத்துவது பாராட்டற்பாலதாகும். திருத்துவது என்று நான் இங்கு குறிப்பிட்ட பதத்திற்கு "அவர் மனதிற் செவ்வனே பட வைப்பது" என்று பொருளாகும். மனைவி தன் நாதனைத் திருத்துவது என்று சொன்னால்—அப்போது அது தனது ஸ்திரீமரியாதையை மீறிடப்படுவது—என்பதான அர்த்தத்திலே போய்விடுகின்றதன்றி, அது ஸ்திரீயின் அகங்காரத்துவத்தை வெளிக்குக் காண்பித்து, "புருஷனுக்கும் மேற்பட்ட புத்தியை யுடையவள் நாம்" என்பதான தன்மையை ஸ்திரீக்கு உண்டாக்குவதாகவும் இருத்தலால், திருத்துவது என்ற பதப்பிரயோகத்தைவிட, பர்த்தாவின் மனதில் பட வைப்பது என்று கூறுவது உசிதமாதலின் இதைப்பற்றி இவ்வளவு விவரிப்பும் இங்கு ஆவசியகமாயிற்று. பின்னும் அவ்வாறு பர்த்தாவின் மனதில் பட வைப்பதிலும் வாய்ப்பேச்சுகளாலின்றி, பிரேமபூர்வகமாய் அடக்கத்தோடும் எழுதிய வாக்கியங்களால் நிறையப்பெற்ற ஒரு கடிதத்தின்



மூலமாக எடுத்துக்காட்டுதல் பின்னும் சிறப்புடைத்தாகும். வாய்ப்பேச்சுகள் ஒருக்கால் தமது எல்லையை மீறி வருதலும், ஒன்றிருக்க இன்னொரு சங்கதியின் பிரஸ்தாபத்திற் புகுந்துவிடுதலும் கூடும். கடிதத்திலோ நாம் நிதானம் மீறாமல் எழுதி அழகுபெற முடித்தல் கூடும். மேலும், நாம் ஒரு பேச்சு பேசி முடிவதற்குள் பதில்பேச்சு உண்டாக, நமது பேச்சின் மற்ற பாகத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன்னதாக—பதில் பேச்சுக்குப் பிரதியுத்தரம் கூறவேண்டியதாக நேர்ந்து—இப்படி வெகு தூரம் நாம் சென்றுவிடும்படியாகி—ஆதியில் நாம் ஆரம்பித்த பேச்சைப் பூர்த்திசெய்ய முடியாமல் அதனை அரைகுறையாகவே விட்டு, எடுத்த பேச்சு ஒன்றாகவும், முடிக்கும் பேச்சு ஒன்றாகவும் ஆகி ஆபாஸப்பட்டுப் போம். இப்படிப் பூர்த்தியடையாத இந்த அரைகுறைப் பேச்சானது ஒரு குழம்பிற்குவேண்டிய உப்பு—காரம்—தாளிப்பு இவைகளைச் சரிவரச் செய்யாமல், காரம் ஒன்றைமட்டும் போட்டு மற்றதைச் சேர்க்காமல் அவ்வளவோடு அக்குழம்பைப் பூர்த்திசெய்து பரிமாறுவதற்குச் சமானமாகும். இதனால் நாம் நமது கணவர் மனதில் படவைக்க வேண்டுமென்று துணியப்போய், அதற்கு எதிரிடையாக நாம் பொல்லாங்கான பேர் பெறவோ, பர்த்தாவின் கோபத்திற்கு இலக்காகவோ வேண்டியதாக முடிந்துபோம். "நாம் சொன்ன அந்த வார்த்தையை அவள் கேட்டுக் கொள்ளப்படாதா—அதை மனதில் அவ்வளவு ஆழத்தில் அழுத்தமாய் வைத்துக்கொண்டு, நம்மைத் திருப்பிக்கேட்க வந்தாளே—எத்தனை துணிவு, எவ்வளவு அகங்காரம், எவ்வளவு பொறுமையின்மை—இவ்வளவு சகிப்பு இல்லாதவளா இவள்" என்று நமது பர்த்தா நம்மைப் பற்றி விரோத பாவனையாய்க் கருதிக்கொண்டு விடும்படியாக நேரிட்டுப் போம். இஃதானது "பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதை" போலும், ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும் என்ற கவியின் கூற்றுப் படியும் ஆகிப்போம். ஆகவே கணவர் மனதில் பட வைப்பதில் கடிதத்தின் மூலம் விக்ஞாபனம் செய்து கொள்ளுதலே சால்புடைத்தென்பது எனது அபிப்பிராயமாதலின் அந்த உபாயத்தை இத்தருணத்தில் தழுவிக் கொள்வதானேன். அடியாள் என்ன பிழை செய்திடினும் மன்னிப்பது தங்கள் கடமை. தாங்கள் எனது இன்ப துன்பங்கட்குப் பாத்தியப்பட்ட எனது பர்த்தாவாதலின், அந்த—நமது பர்த்தா—என்கிற ஒரு பாத்தியதையே எனக்கு இவ்வளவும் எழுதும்படியான துணிவைக் கொடுத்தது. நான் கோபிக்கவோ, விளையாடவோ, உல்லாஸப்படவோ எல்லாம் தங்களிடத்தில் தானே காண்பித்துக் கொள்ளவேண்டும்? ஒரு உத்தம ஸ்திரீக்கு புருஷன்தானே ஸர்வமும்.

இது நிற்க, இனிமேல் நான் எவர் வந்தாலும் தங்கள் கட்டளையின்படி அவர்கள் முன்னிலையில் தங்களுக்கு எழுந்து நிற்பதேயில்லை. புருஷன் வந்தால் ஹா! இப்படி மரம்போல் உட்கார்ந்திருக்கலாமா என்று ஏனைய பெண்கள் என்னை நிந்தித்தால்—நான் 'என் அத்தான் அப்படி எழுந்திருக்க வேண்டாமென்றார்—என்று சொல்லிவிடுகிறேன். அதற்குமேல் அவர்கள் தங்களிடத்தில்—"என்ன அப்பா, பெண்ஜாதியை இப்பொழுதே இவ்வளவு மரியாதையில் வைத்திருக்கிறாய்"—என்று அவர்கள் சொன்னபின்பு—தங்களுக்கே அது மனதில் ஆழத் தைத்து—மனதில் நன்றாகப்பட்டு—பிறகு என்னை மரியாதை காட்டும்படி உத்திரவு தாங்கள் செய்வீர்கள் போலிருக்கிறது. தாங்கள் என் மரியாதை வேண்டாமென்கிறீர்களோ? சந்தோஷப்படுங்காலத்தில் லோகமரியாதைகளை மறந்துவிடுகின்றோம். அப்பொழுதில்லாத மரியாதை இப்பொழுதென்னவென்பதுதான் தங்களின் நினைப்புபோலும்! அது வாஸ்தவம். அது பரமபதியுடன் ஆத்துமா ஐக்கியப்படும்போது, ஸகலமும் மறந்து பேதவிகற்பங்கள் அற்றுவிடுவதுபோன்ற தருணமாகும். அந்த சமயத்திலிருந்து நாம் விலகிய பிறகு, நாம் ஊருடன் கூடிவாழ வேண்டியவர்களாகிறோம். உலகத்தின் மரியாதைக் கிரமங்களைத் தழுவி நடந்துகொள்ளக் கடமைப்பட்டவர்களாகி, அப்படி நடந்துகொள்வதற்கு உலகத்தாரால் வற்புறுத்தவும் படுகிறோம். இவைகளெல்லாம் வெளியில் பார்ப்பதற்கு மரியாதையாகவும், அழகாகவும், கௌரவமாகவும் இருந்து, இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று பிறர் சம்ஸயிக்கும்வாறாக நம்மை உலகத்தார் துறவிகள்போன்று கருதுவதாகவும் முடிந்து, நமது அளப்பரிய விஷயாபேக்ஷையை எவருமே தெரிந்துகொள்ளாதபடி வைத்து, அதை நாம் வெறுப்பதுபோலவும், அந்த எண்ணமே நமக்கு முற்றிலும் இல்லாதது போலவும் வெளிக்குக்காட்டுவதாகி—"அந்த ஸதிபதிகள் அதிக ஸாத்வீக ஸம்பன்னர்கள்,—மற்றவர்களைப்போல அவர்கள் கேவலம் காமிகளல்ல—அவ்விஷய நினைப்பே அவர்களுக்கில்லை—பகவான் கடாக்ஷத்தினாலேயே அவர்களுக்குக் குழந்தைகள் உண்டாயிற்று—என்று சொல்லும்வாறாகவும் ஆவதோடு மேன்மைப்பட்டு எவ்வளவோ உயர்நலமுந் தரும்.

தங்களின் அபிப்பிராயம் இன்னொரு விதமாகவும் இருத்தல் கூடுமென்று எனக்குப் படுகின்றது. அதாவது, வீட்டில் நமக்கு எப்போதுமே பழகியவர்களாய் இளமைதொட்டு நம்முடன் இருந்து நம்மை வளர்த்து ஆதரித்தவர்களாயுள்ள பாட்டியார், தாயார், தகப்பனார், மாமியார், மாமனார் இவர்களின் முன்னிலையில் "மனைவியின் மரியாதை" வேண்டாமென்றும், அந்த மரியாதை செய்கிற பிரயாஸமே அவளுக்குக்



கூடாதென்றும், விவாகத்திற்கு முன்பு சாதாரண விதமாக நடந்துகொண்டது போலவே சாதாரணமாயிருக்கட்டுமென்றும், தூரபந்துக்களும் நெருங்கிய உறவின்முறையாரும் அன்னியரும் வீட்டிற்குவந்திருக்கிற சமயத்தில் எல்லா மரியாதைகளையும் வட்டியும் முதலுமாகக் காண்பித்துக்கொள்ளட்டுமென்றும் தாங்கள் அபிப்பிராயப்படுகிறீர்கள்போலவும் தோன்றுகின்றது. இவ்விதமான அபிப்பிராயம் தங்களுக்கு இருப்பது உண்மையானால் அதற்கு நான் சந்தோஷத்துடனும் சம்மதிக்க ஸன்னத்தையாயிருக்கிறேன். அந்த அபிப்பிராயமும் சரிதான். ஒப்புக்கொள்ளத்தக்கதே. இந்தவிதமான கருத்துடனேயே "எனக்கு மரியாதை செய்யவேண்டாம்" என்று தாங்கள் ஆக்ஞாபித்திருந்திருப்பீர்களானால்—அது சம்பந்தமாய் நான் இவ்வளவுதூரம் எழுதியது வீண்படுவதோடு அதிகப்பிரசங்கமாகவும் ஆகலாம். என்றாலும் இக்கடிதம் அவ்வளவுக்கு வீண்போகாதென்பதே என் துணிபு.'

இத்தருணத்தில், இன்னொன்றையும் இங்கு குறிப்பிடவேண்டியது அவசியம். தாங்கள் பிறந்த இல்லத்திலேயே நானும் பிறந்து, தங்களை வளர்த்து ஆதரித்து உருவாக்கினவர்களாலேயே நானும் வளர்க்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டு, இவ்வாறு எனது சிறுபருவமுதற்கொண்டு எனக்கு சாதாரணஸ்தர்களாகவும் சகஜமாகவும் போயிருக்கிற மாமனார், மாமியார், பாட்டியார், இவர்கள் முன்னிலையில் அவர்களுக்கோ—தங்களுக்கோ—இதுவரையுமில்லாத ஒரு புது மரியாதையை நான் இனி காண்பித்துக் கொள்ளவேண்டியதில்லைதான். ஆனால் நான் தூரமான வேறூர் இடத்திலிருந்துகொண்டுவரப்பட்டு தங்களுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்ணாக இருந்திருந்தால், அப்பொழுது நான் மாமனார், மாமியார் முதலியவர்களுக்கும், அவர்கள் முன்னிலையில் தங்களுக்கும் மரியாதை செய்யக் கடமைப்பட்டவளாகவும், அதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டவளாகவும் ஆவேனன்றோ? அப்போது தாங்களும் ஆக்ஷேபம் சொல்லமுடியாதன்றோ? நான் வேறூரிடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பெண்ணாயிருந்தால் நீங்களும் மரியாதைசெய்யும்படியே வற்புறுத்தி அந்த மரியாதையை எதிர்பார்த்து நிற்பீர்கள். நாம் இருவரும் ஒரே வீட்டில் பிறந்து வளர்ந்தவர்களானதாலேயே சகஜமாகப் போகின்றது. இப்பொழுது நான் உட்கார்ந்தபடியே மாமனார், மாமியார் முதலியவர்களுக்குப்பதில் நவில்வதுபோல,--தூரமான இடத்திலிருந்து வந்து வாழ்க்கைப்பட்ட பெண்ணாயிருந்தால் சொல்லமுடியுமா? இந்த ஒருவகையில்மட்டும் என்னைப் புது இடத்திலிருந்து வந்த பெண் போலக் கருதி அந்த வகையில் நான் புதுப் பெண் போலிருந்து செய்யும் மரியாதைகளை அங்கீகரிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

பொதுவாகக் கூறுமிடத்து இவ்வுலகத்திலே, மரியாதைகள் என்பதற்கு வெளி வேஷங்கள் என்பதுதான் சரியான பொருளானாலும், சிஷ்யன் தனது குருவினிடத்தும், புத்திரன் பிதாவினிடத்தும், மனைவி தனது கணவனிடத்தும், பக்தன் தனது வழிபடு கடவுளிடத்தும், நண்பர்கள் தங்கள் ஆப்தர்களிடத்தும், இன்னும் இவர்களைப்போன்றோர் தங்கள் முக்கியமானவர்களிடத்தும் காண்பித்துக்கொள்ளுகிற மரியாதை, வணக்கம், வந்தனையாதியவைகள் — அவர்களே செய்யவேண்டுமென்று செய்வதாயில்லாமல், அவர்களை யறியாமலே அளப்பரிய குதூகலத்துடனும் அவர்களுடைய உள்ளுணர்ச்சி, உள்ளே மறைந்திருக்கும் சக்தி, உள்ளன்பு, ஒரு தெய்வீகமான எழுப்புதல், உண்மையும் பரிசுத்தமுமான பிரேமை—ஆகிய இவற்றின் தூண்டுதல்களால் மேற்சொன்ன மரியாதை முதலியவைகள் நிகழப்பெறுவனவாயுள்ளன. ஆகவே அத்தகைய தெய்வீகமான சாயல், தத்துவம், ஜோதி பொருந்திய மரியாதைகளில் குற்றம் கூறுவதும், அவ்வித மரியாதைகள் வேண்டாமென மறுப்பதும்,--தாங்கள் அன்பு வசப்பட்டு மறுப்பதாயிருந்தாலும், இயற்கையின் ஸக்திப்பிரபாவத்தினால் எழுப்பப்படுகிற தூண்டுதல்களால், என்னை யறியாமலே நான் மரியாதையாய் நடந்துகொண்டு விடுகிறபோது—உதாரணமாக, உட்கார்ந்துகொண்டிருக்கும் நான், தங்களைக் கண்டமாத்திரத்தில் எழுந்துகொள்வதும், மார்பின் மேல்வஸ்திரத்தை ஒழுங்குபடுத்திக்கொள்வதுமாக ஆகிவிடும்போது,—அப்படிச் செய்யவேண்டாமென்று தாங்கள் என்னைத் தடுப்பதானது—எனக்கு இயற்கையாகவே உண்டாகிற—தும்மல், கொட்டாவி விடுதல், இவைபோன்றவற்றைச் செய்யவேண்டாமென்று அடக்கும்படி சொன்னால் எப்படிக் கஷ்டமாகிறதோ—அதேவிதமாகவே என்னை யறியாமலே நான் செய்கிற மரியாதையைத் தடுப்பதும் எனக்குக் கஷ்டத்தைக் கொடுப்பதாக முடியும். ஆகவே சகலமும் தெரிந்த தாங்கள் என்னுடைய ஸ்திரீசுபாவத்தை உணர்ந்துகொள்ளவேண்டுமென்றும், என்னாலியன்றளவு தங்களின் அபிப்பிராயப்படி நடந்துகொள்ள என் பெண் சக்திக்கு மீறியவரையில் பிரயத்தனப்படுவேனென்றும் தாழ்மையுடனும் பிரேம பூர்வகமாய் சாஷ்டாங்க நமஸ்கார சகிதமாக விக்ஞாபித்துக்கொள்ளுகின்றேன். இத்திருபத்தில் என்னை யறியாமல் சேர்ந்துள்ள பிழைகளையும் கடினமான வசனங்களையும் பொருட்செய்யாமல் மன்னித்து, இதிலுள்ள லகர, ளகர, ரகற, நகர, பேதப்பிசகுகளையும் எடுத்துக் காண்பித்து, எனக்கு அறிவூட்டி ஆதரிக்குமாறு பிரார்த்திக்கின்றேன். "பெண்ணுருக்கொண்டபின் என்னுயிர்த்துணை நீயே."

இங்ஙனம்,
என்றும் தங்களை நம்பிய,

11—11—14.

**கனகவல்லி.**

# புகையிலைப் பொடியின் பிரதாபம்.

புகையிலை என்பது என்ன; யாரால் எப்பொழுது எதற்காக ஏற்பட்டது என்னும் விவரத்தை அறிந்துகொள்ளப்புகையிலை அபிமானிகள் விருப்பங்கொள்வார்கள். விவரிப்பாம். பரமசிவன் கங்காதேவியை சிரசில் வைப்பதற்காக அருந்தவம் செய்தார். அவர் சிரசில் இறங்கினள். கங்கை ஜலசம்பந்தமென்றும், குளிர்ச்சியென்றும் எவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட குளிர்ச்சி சிரசில் தங்கவும் பரமசிவனுக்கு ஜல தோஷம் பிறந்தது. சிந்திச் சிந்திப் பார்த்தார். நிற்பதாய் இல்லை. இந்த நிலைமையில் ஒரு நாள் காலை ஔபாஸனம் செய்து கொண்டிருந்தார். அத்தருணத்தில் பிர்மதேவன் அவர் பேட்டிக்குச்சென்றார் ஔபாஸனத்தீ கொழுந்துவிட்டெரியாமல் புகைந்துகொண்டிருந்தது. கவனித்துப் பார்க்கையில் நாசித்துவாரங்கள் இரண்டினின்றும் வழிந்து ஓடிவந்த ஜலம் ஔபாஸனக் குண்டத்தில் விழுந்து தீயை அணைத்துக்கொண்டிருந்தது. மூக்கை அடிக்கடி துடைத்துக்கொண்டும், இடையிடையே மூக்கை உறிஞ்சிக்கொண்டும் பரமசிவன் பேசினார். குரல் கம்பீரமாகவும் இல்லை. பிரமன் திகைத்துக் காரணம் இன்னதென விளக்கும்படி வேண்டவும், பரமசிவன் ஜலதோஷகாரணத்தைக்கூறி இதற்கு சிகிச்சை உண்டோவென வினவ, பிரமதேவன் மனங்கூர்ந்து இளமுறுவலுடன், கையை நீட்டி அக்கினி குண்டத்தினின்று எழுந்துகொண்டிருந்த புகையைப் பிடித்து இலை யுருவாக்கி கீழேவைத்தார். இது என்ன, புகை இலையாயிற்றே என்றார். அதன்மேல் பரமசிவனை நோக்கிப் பிரமன், ஈசுவரா, தமக்கு இடர்விளைக்கும் ஜலதோஷத்துக்கு இது பரிகாரமாகும். இந்த இலையை மூன்று வகையாய் உபயோகிக்கலாம். உபயோகமுறை நிவசம் செய்யும்போது பிதுர்ப்பிண்டம் வைக்கையில் சொல்லும் மந்திரத்தில் அடங்கியுள்ளது

அக்கினி தத்தேபியஹ
அனக்கினி தத்தேபியஹ
அயம் பிண்டசதாகமஹ.

இந்த இலையை அக்கினிக்கு ஸமர்ப்பித்து உபயோகிக்கலாம். அக்கினிக்குக் காட்டி உபயோகிக்கலாம். பிண்டமாய் உருட்டிவைத்தும் உபயோகிக்கலாம் என்று கூறினார்.

இது பரமசிவனுக்கு விளங்கவில்லை. வியாக்யானமில்லாமல் விளங்காது போலத் தோற்றுகிறது என்று அவர் சொன்னார். அதன் மேல் பிர்மதேவன், பரமசிவ, இந்த இலையை சுருளாகச்சுருட்டி அக்கினிக்குத் தக்தம் பண்ணி சுருட்டை வாயில் வைத்துக் குடித்தால் அதிலிருந்து ஒரு புகை எழும்பும். அந்தப் புகையை வெளி விட்டுவிடவேண்டும் உட்கொள்ளலாகாது. ஜலதோஷத்தை நிவர்த்தி செய்யும். இது ஒரு முறை. இந்த இலையைத் தீப்பிடியாமல் நெருப்பில் காட்டி அதைப் பொடிசெய்து அதன் பின்பு வஸ்திரகாயம் செய்து அதில் கொஞ்சம் கட்டைவிரல் ஆள்காட்டிவிரல் இரண்டையும் நெருக்கி இடையில் பொடிவைத்து நாசி துவாரத்தில் வைத்து சுவாசத்தை உள இழுத்தால் அந்த வேகம் கபாலத்தில் தாக்கி ஜலதோஷத்தை முறித்துவிடும். இது ஒரு முறை என்றார்.

பரமசிவன் குறுக்கிட்டு போஜனம் செய்து வெற்றிலை முதலியது போட்டுக்கொண்டிருக்கும்பொழுது ஜலதோஷ உபத்திரவம் வந்தால் நெருப்பையல்லவோ தேடவேண்டுமெனக் கேட்க, பிரமன் புன்சிரிப்புக் கொண்டவராய், ஆத்திக்காரனுக்கு அவசரம் மிகுதி என்பது போலிருக்கிறது. இன்னம் ஒரு வாக்கியத்தை நான் விளக்கவில்லை. நிதானித்து கேளும்.

புகையிலையைச் சுருட்டிப் பிண்டமாய்ப் பிடித்து உருட்டித் திரட்டி வெற்றிலை பாக்கோடு போட்டுக்கொண்டால் ஜலதோஷம் இருந்தவிடம் தெரியாமல் பறந்துவிடும் என்றார். பரிட்சை பார்க்க பரமசிவனுக்கு அவா மேலிட்டது. உடனே அவர் இலையொன்றை எடுத்து சுருட்டாகச் சுருட்டி ஓமாக்கினியில் பிடித்துச் சுருட்டை வாயில் வைத்து இழுத்தார். குப் குப் என்று புகை எழும்பிற்று. இரண்டொரு நிமிஷத்துக்குள் ஜலதோஷம் நின்றது. தலை கால் தெரியாமல் பரமசிவன் கூத்தாடினார். குதூகலித்தார். சிருஷ்டித்த இலை ஆய்விட்டால் என்செய்வேன் என்று கவலைகொண்டார். அவரது திருவுளத்தை முகக்குறிப்பால் பிரமன் அறிந்து புகையைப்பிடித்து இலை ஒரு குப்பலாக்கினார். குப்பலைக்காணவும் சிவபெருமான் உள்ளம் மகிழ்ந்தது. முகம் மலர்ந்தது. பிரமதேவ, உம்முடைய பெருமையே பெருமை. சிருஷ்டிச் சிறப்பே சிறப்பு என்று கூறி, அந்தக் குவியலைக் கத்தைகளாக அடுக்கிப் பத்திரமாய்த் தமது மயிர் கூந்தலில் வைத்துக் கட்டிக்கொண்டார். அதுவே பர்மசிவனுக்கு ஜடாபாரமாயிற்று. புகையிலிருந்து வெளிப்பட்டதால் அதற்குப் புகையிலையென்னும் பெயர் வழங்கலாயிற்று



அதைப் பரமசிவன் பார்த்து அது பிர்மபத்திரம் என்று பெயரிட்டார். அப்பெயரும் வழங்கிவருகிறது. அவ்வாறு மூன்று வகையாகவும் பரமசிவன் புகையிலையை உபயோகித்து வந்தார். வர வர வெற்றிலையோடு போட்டுக்கொள்ளும் முறையில் அதிக விருப்பங்கொண்டது. சப்ளை குறைந்தது. தகுந்த சப்ளை எந்த பூமியில் விளைவிக்கலாம் என்று யோசித்ததில் ஒரு ஸ்தலம் ஏற்பட்டது. இங்கே புகையிலை பயிர் செய்து பரீட்சை பார்க்கப்பட்டது. இங்கிருந்து சிவனுக்கு சப்ளை போய்வருகிறது. சிவனுடைய உபயோகத்துக்கு இந்த ஸ்தலம் தெரிந்துகொள்ளப்பட்டதால் இந்த ஊருக்கு சிவபுரி என்னும் பெயர் வழங்கலாயிற்று. இந்த சப்ளை ஒருவேளை அழிந்துவிடுமோ என்று அஞ்சி பரிபாலன கர்த்தாராகிய விஷ்ணுவைவேண்ட, அவர் கிருஷ்ணமூர்த்தி ரூபத்தோடு எதிர்சென்று அஞ்சன்மின்! பாதுகாப்பேன் எனத் திடங்கூறினார். அந்தக் கிருஷ்ண மூர்த்தி பரிபாலனத்திற்குள்பட்டு சிவபுரியில் விளையும் புகையிலையை வாசனைத்திரவியங்கள் கூட்டி, நாக்கு மணக்க, வாய் மணக்க, ருஜி மணக்க, வெற்றிலைப்பாக்கோடு போட்டுக்கொள்ளும்படி டப்பிக்குள் அடைத்து டப்பி ஒன்று ஐந்தணா விலை வைத்து விற்கப்பட்டுவருகின்றது.

# ஸ்ரீ காசி ராமேஸ்வர யாத்திரா அநுபவம்.

(ஸ்ரீமான் ச. கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதியது.)

பரிதாபி வருஷம், மாசிமாதம் 12-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 8-10 க்கு மதுரை யிலிருந்தும் வண்டியேறி, திங்கள் காலை 8-15 க்கு சிதம்பரம் இறங்கி, தரிசனம் செய்து கொண்டு, அன்றிரவு மெயிலில் புறப்பட்டு செவ்வாய்க்கிழமை காலை மணி 8-க்கு சென்னை சேர்ந்தோம். புதன்கிழமை திருவொற்றியூர் தல தரிசனமும், பட்டினத்து ஸ்வாமிகள் சமாதியையும் சேவைசெய்து, 16-ம் தேதி மாலை மணி 6½ மெயிலில் கல்கத்தாவுக்கு, துரு டிக்கட் பெற்று 17-ம் தேதி காலை மணி 8-5-க்கு கோதாவரியிலிறங்கி கோதாவரி ஸ்நானம் செய்தோம். இங்கு மார்க்கண்டேயர் ஆலயமும் கோட்டிலிங்க தேவாலயமும், 4-வது மைலில் தவளேசுர மென்னுமிடத்தில் கோதாவரி நதியின் பெரிய அணைக்கட்டும் பார்த்து பக்கத்தில், ஜனார்த்தனம—மஹாலக்ஷ்மி தேவா

லயமும் தரிசித்து, மறுநாள் காலை 8-10-மணிக்குப் புறப்பட்டோம். கோதாவரி நதியின் ரயில்வே பாலம் 1-மைல் 2½ பர்லாங்கு நீளமுள்ளது. தவளேசுர மென்னும் இடத்துக்கு அருகேயுள்ள பெரிய அணைக்கட்டும் ஒரு மைல் நீளமுள்ளது இங்கிருந்து படகுமார்க்கம் ரூ 2--8--0 கொடுத்தால், சுமார் 60 மைல் தூரமுள்ள பத்ராசலத்திற்குப் போகலாம். பெஜவாடா ஜங்கிஷனிலிருந்து ஐதிராபாத்துக்குப் போகிறவழியில் இறங்கி (போகல் குண்டாவிலிறங்கி வடக்கே 50-மைல் தூரம் பத்ராசலம்) யும் போகலாமென்கிறார்கள்.

கோதாவரியினின்று காலை மெயிலேறி அன்றிரவு மணி 11½-க்கு கார்டாரோட் வந்து, அங்கிருந்து பூரி என்ற ஜெகநாத க்ஷேத்திரத்துக்குப் போனோம். அவ்விடத்தில் ஸ்வாமி ஜெகநாதரையும், ஸ்ரீ மகாலக்ஷ்மியையும் தரிசித்து, பலராமர்—பிம்பஸாதேவி தரிசனமும் செய்தோம். அவ்விடத்தில் ஓரியாபாஷையாதலால், கோவிலைப்பற்றிய விவரம் கேட்டதில் சரியாய் விளங்கவில்லை. முக்கியமாக நாவிதர்களால் சமையல் செய்யப்பட்ட அன்னங்களைத்தான் பிரஸாதமாக ஜாதி மதபேதமின்றி வாங்கிக்கொள்ளவேண்டியது. அதன் காரணம் விசாரித்ததில் செவ்வனே தெரிவதற்கில்லை. அன்று சாயந்திரமே கர்டாரோட் ஜங்கிஷனை வந்துவிட்டோம். கர்டாரோட்டுக்கும் பூரிக்கும் உள்ள ரயில் சார்ஜ் அணா 6. கர்டாரோட்டிலிருந்து கல்கத்தாவுக்கு வரும் மார்க்கத்தில் கட்டக் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் மஹாநதி ஓடுகிறது. இவ்விடத்தில் நதியைப்பார்க்கத் தலையை நீட்டியதில் பத்து ரூபா விலையுள்ள தலைப்பாகையைப் புயல்காற்று எடுத்துக்கொண்டது.

கோதாவரிக்கும் கர்டாரோட்டுக்கும் மத்தியிலுள்ள தெலுங்கு நாட்டின் நாகரீகமற்ற ஜனங்களின் ஆபாசங்களை எழுத மறந்தேன். பொதுவாக எல்லா தெலுங்கு ஜாதியார்களும், ரெயிலில் ஏறினால் மரியாதையின்றி எவ்விடங்களிலும் எச்சில் துப்புவது, புகையிலை போட்டு வண்டியிலே துப்புவது, பின்னும் ஆண், பெண், சிறுவர்கள் முதல் சுருட்டு உபயோகிப்பது, சிறுவர்கள் பால் மாறினவுடனே தாய் தந்தையரால் சுருட்டு பிடிக்கக் கட்டாயமாகப் பழக்கிவிடுகிறதும், அச்சிறுவர்களின் தொண்டையில் புகையிலை பட்டவுடன் சகிக்கமுடியாமல் இருமினால் தடவிக்கொடுத்து அம்மட்டில் எடுத்துவிடாமல், திரும்பவும் பிள்ளையின் வாயில்வைத்துக் கட்டாயப்படுத்தி சுருட்டை சாப்பிடவைக்கிறதும் வெகு விநோதமே. இதை நாங்கள் நேரில் பார்த்து ஏன் இப்படிச் செய்



கிறீர்களென்று தெலுங்கு தெரிந்தவரைக்கொண்டு கேட்டதற்கு தேச வழக்கம் என்கிறார்கள். பெண்கள் சுருட்டை உபயோகிப்பது பெரிதும் விந்தையே. அதாவது வாயில் வைக்கிறதும், கொஞ்சம் தாமதித்து நெருப்பின் பக்கத்தை வாயில் வைத்து ஊதுகிறதும் வெகு வேடிக்கையாக இருக்கிறது.

இதுசிற்க, 20-ம் தேதி திங்களன்று காலை 9½ மணிக்கு ஹவ்ரு (கல்கத்தா) ஸ்டேஷன் சேர்ந்தோம். கல்கத்தாவில் முக்கியமானவை மியூசியம், மிருகக்காட்சிச்சாலை பத்திரிதாஸின் பௌத்தாலயம், காளிகட்டம்— இவைகளில் சென்னை, பம்பாயிலில்லாத அநேக பொருட்காட்சிகளும், பிராணி காட்சிச்சாலையில் வெள்ளைக் காக்கை, சீர்மைப்பசு, காட்டெருமை, வரிக்குதிரை, 5-அடி உயரமுள்ள அநுமார், இன்னும் பக்ஷிஜாதிகளில் இதுவரையில் நாம் கண்டிராத எத்தனையோவித வர்ணமுள்ளவைகளும் இருக்கின்றன. குரங்குகளில் 20-வகைகளிருக்கிறது. காளிகட்டத்தில் தினமும் வங்காளஜாதி பிராமணர்களாலும், மற்ற வர்ணத்தாராலும் அநேக ஆடு மாடு கோழிகள் பலியிட்டவண்ணமாகவே இருக்கிறார்கள். பிராமணர்கள்தான் இவ்வேலையில் அதிகமாக இருக்கிறார்கள். பத்திரிதாஸ் என்னும் ஜைனரால் கட்டப்பட்ட பௌத்தாலயம் மார்பில் என்னும் சலவைக் கல்லினாலும் இடையிடையே நவவித வர்ணக் கற்கள் பொதிந்து நிர்மாணமாகி வெகு அழகாக அமைந்திருக்கிறது. பௌத்த விக்கிரகத்தின் அழகை வர்ணிப்பது என்றால் கூடாத காரியம். இப்பரதகண்டத்தில் இவ்விதமாக இன்னொன்றிருக்குமென்று சொல்வதற்கில்லை. கோவிலின் முன்பக்கத்தில் ஒரு அழகான சிறிய தடாகமும், இருபக்கங்களிலுமுள்ள சலவைக்கல்லால் அமைந்த ஷை பத்திரி தாஸின் மாளிகையும் முக்கியமாய் பார்க்கத்தக்கது. ஆனால் ஆக்ராவிலுள்ள டாஜ்மஹாலுக்கு இவை நிகரென்று சொல்வதற்கு இல்லாமற்போனாலும், ஆலயங்களில் மஹா சிறப்புடன் விளங்கும் அழகிய பௌத்தாலயம் என்று இதைத்தான் சொல்லலாம். 21-ம் தேதி செவ்வாயன்று, மாலை மணி 6½-க்கு எக்ஸ்பிரெஸ் ஏறி காசிக்குப் புறப்பட்டோம். இடையில் பிட்டா ஸ்டேஷனுக்கு அருகே கணபதி லிங்கம் அகப்படுகிற சோணைபத்திரை நதியிருக்கிறது. (நாங்கள் பங்கிப்பூர் மார்க்கம் வந்துவிட்டதால் கயா க்ஷேத்திரம் போவது நின்றுவிட்டது. கயா பிண்டம் போடவேண்டிய இடம் இந்த யாத்திரையில் முக்கியமாயுள்ள கயா, பிரயாகை (அலஹபாத்) நாசிக், மதுரா, பிருந்தாவனம் முதலியவைகளாகும். சில அசந்தர்ப்பங்களினால் போகத்தடைப்பட்டாலும், விகிருதி-ளூ மாசி-மீ அதாவது 1890-ம் வருஷம் பம்பாயிலிரு

ந்து எனது தாய் தந்தையருடன் யாத்திரை செய்திருக்கின்றேன் ஆகையால் மற்ற இடங்கள் போகவேண்டியதாயிற்று.)

22ஆம் தேதி புதன்கிழமை காலை ஸ்ரீ காசிமாநகரம் சேர்ந்தோம். அங்கு ஒன்பது நாள் இருந்தோம். கங்காஸ்நானம் செய்த எவ்வருணத்தாராயினும் தானாகவே விஸ்வேசருக்கு அபிஷேக ஆலிங்கனாதிகள் செய்யலாம். தேவியின் பெயர் அன்னபூரணி, விசாலாக்ஷி. இங்கு 64 ஸ்நான கட்டங்கள் இருக்கிறது எல்லாம் கங்காநதியில்தான். புராணத்திற் கூறியவாறு ஸ்நானகர்மங்கள் செய்வதானால் எவராலுமே முடியாது. தனமும் லக்ஷம்பொன் வேண்டியதிருக்கும்போலும்! நாங்கள் ஒரே மொத்தமாக கங்காஸ்நானமும் பகவத் தரிசனமும் செய்து முடித்தோம்.

* மாசிமாதம் 30-ம் தேதி வியாழனன்று மாலை 6-மணிக்கு வண்டியேறி இரவு மணி 2-க்கு அயோத்தியா வந்து சேர்ந்தோம். ஆதியில் மஹா சக்கிரவர்த்திகளும் அவதார புருஷர்களும் நீதி செலுத்தி வந்ததாகவும், உத்தமர்களே வசித்து புகழ்பெற்று விளங்கியதென்றுமுள்ள அயோத்தியா நகரம் இப்பொழுது கொலை பாதகரும் அயோக்கிய (பண்டா) புரோகிதர்களும் குடிகொண்டதாகி, புராதன க்ஷேத்திரமென்ற பக்தியுடன் போகும் யாத்ரீகர்களை மோசங்கள் செய்து, பொருள் பறித்துக் குடியர்களாகிக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் அப்புரோகிதர்களுள் ஒருவனான ராம்சுந்தர் என்பவனிடம் அகப்பட்டுத் தலைதப்பியது தம்பிரான் புண்ணியமாக முடிந்தது. காசியிலிருந்து வரும்போதே இடையிலுள்ள ஸ்டேஷனிலேயே, கங்காபுத்திரன் என்று சொல்லிக்கொள்ளும் அயோக்கிய பண்டாக்களினுடைய தூதர்கள் வந்து யாத்ரீகர்களுக்கு வேண்டிய இட சௌகரியமும், ராமச்சந்திர தரிசனமும் செய்துவைப்பதாகவும் ஏதோ இயன்றது கொடுத்தால் பெற்றுக்கொள்வதாகவும்—ஸ்ரீரங்கத்தில் அர்ச்சனை செய்வதற்காக ராயகோபுரத்திற்கு அருகே காத்துள்ள பிராமணர்கள் பல்லையிளிப்பதுபோல—— பல்லைக் காட்டி ஏமாற்றி விடுகிறார்கள். அவர்களின் வார்த்தைகளில் மயங்கி, நம் நாட்டினர் அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு பாஷை தெரியாமலும், அவன் கேட்டதைக் கொடுக்கத் தெரியாமலும், அடிபிடியாகி கையில் உள்ளதையும் அவனிடம் ஒப்புவித்துவிட்டு ரயிலுக்கு வழியின்றி அநேகர் அவஸ்தைப் பட்டிருக்கிறதாகவும் தெரிகிறது. நாங்களும் ௸ ராம்சுந்தர் என்னும் கங்காபுத்திர (?)னிடம் அகப்பட்டுக்கொண்டு ரூபாய் இரண்டு ரொக்கம் செலுத்தி மீண்டு வந்து உடன் ரயிலேறிக்கொண்டோம். அங்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் உண்டெ



ன்றும், சத்திரத்திலிருக்கும் ஏஜண்டும் ௸ ஆசாமிகளின் இரகசிய பாகஸ்தர் என்றும் எங்களுக்குப் பின்வந்த ஒரு யாத்திரைவாசியால் தெரியவந்தது. ஆதலால் அயோத்தியாவுக்குப் போய்ப் பார்க்கப் பிரியமிருந்தால் வெகு ஜாக்கிரதையுடன் போய்வருவது உத்தமம். மறுநாள் மொருடாபாத்து வந்து தங்கி பங்குனிமாதம் 2-ம் தேதி லக்ஸார் ஐஸ்டேஷனுக்கு வந்துசேர்ந்து மறுவண்டியேறி ஹரித்துவாரம் சேர்ந்தோம்.

ஹரித்துவார் என்னும் புண்ணியஸ்தலத்தை கங்காத்துவார், மாயாத்துவார் என்றும் சொல்வதுண்டு. நம் இந்துதேசத்தில் நிர்மலமான ஜலம்பாயும் அருவிகளில் சிரேஷ்டமானதும், திவ்யமான தீர்த்தத்தையுடையதும் இப்புண்ணிய கங்கைதான். அழகான நீரோட்டங்களும், பலவர்ணமுள்ள மச்சங்களும், அதுபோன்ற பலவித வர்ணங்களுள்ள கற்களும், தபோவனங்களும், பிரமகுண்டம், பீமகுண்டம், முதலிய தீர்த்தக்கட்டிடங்களும் வெகு உன்னதமாய் சோபித்து விளங்குகின்றது. இங்குதான் கங்காநதியானது ஹிமாலயத்தினின்றும் பூமியில் இறங்குகின்றது. தீர்த்தம் கட்டவேண்டியவர்கள் இங்கு கட்டினால்தான் சுத்த கங்கையாகும். காசியிற்கட்டினால் கங்கா, யமுனை இரண்டும் கலந்ததாகும். கங்கையும் யமுனையும் சேருமிடமாகிய பிரயாகையில் எடுக்குங் கங்காத்தீர்த்தம் ஒருவருஷம் கெடாதிருக்குமானால், ஹரித்துவார கங்கை பத்துவருஷமானாலும் கெடாதிருக்குமென்று சொல்லுகிறார்கள். இங்கிலாந்து பிரான்சு முதலிய பல இடங்களுக்கும் இங்கிருந்து வைத்தியஸம்பந்தமாக இக்கங்காஜலம் கொண்டுபோகப்படுகிறதென்றும் கூறுகின்றனர். தினமும் கங்காதீர்த்தம் ரயில் பார்ஸலில் ஏற்றுமதியாகி நாநா இடங்களுக்கும் போய்க்கொண்டேயிருக்கிறது. கங்காஜலம் அனுப்பமட்டும் ரயில்சார்ஜ் பாதியாகும். இத்திவ்ய கங்காதீர்த்தத்தைவிட்டுத் தம் ஊருக்கு வர எவருக்குமே மனம்வராது. எவ்வளவுகாலம் இருந்தபோதிலும் திருப்தியாகாது. ஆனால், நாங்களோ இரண்டே நாளில் திரும்பிவிட்டோம். காரணம் கொடிய பனியை சகிக்க முடியாததினால்தான்.

ஹரித்துவாரத்திலிருந்து 187-வது மைலில் பதரியாச்சிரமம் இருக்கிறதாம். இதைத்தான் பதரிநாராயணமென்று சொல்லுவதாம். இங்கே ஆலயங்களிலுள்ள அர்ச்சகர்கள் அற்பசிமாதம் பௌர்ணையில் கோயிலைத் திருக்காப்பிட்டு ஹரித்துவாரத்திற்கு வந்து விடுவார்கள். பிறகு சித்திரைமாதம் 15-ம் தேதிக்குமேல் போய் திறந்து பூசிப்பார்கள். கோவில் சாத்தப்பட்டிருக்கும் ஆறு மாதமும் பனியால் மூடப்பட்டிருக்கும். இக்காரணத்தினாலேயே ஆறு மாதம் மானிட பூஜையென்றும்

ஆறுமாதம் தேவ பூஜையென்றும் சொல்லுகிருர்கள். பதரிநாராயணமென்றும் இடத்திலிருந்து பார்த்தால் கௌரிசங்கரமென்னும் 5½ மைல் உயரமுள்ள ஸ்கலாய மலையைத் தரிசிக்கலாம். ஹிமயமலையின் யாத்திரையும் சித்திரை மாதம் 15-ம் தேதிக்குமேலும், அற்பசி மாதத்துக்குள்ளும் முடித்துவிட வேண்டுமாம். வெயில்காலத்திற்ருன் பனிக்கட்டி உருகி கங்கையில் பிரவாகம் அதிகரிக்குமென்கின்றனர்.

ஹரித்துவாரமிருந்து பங்குனிமாதம் 4-ம் தேதி பகல் 4-மணி வண்டியேறி 5-ம் தேதி காலை 6-மணிக்கு டில்லி நகரம் சேர்ந்தோம். பூர்வம் தர்மபுத்திரர் காலத்து இந்திரப்பிரஸ்தமாக இருந்ததை யமுனையின் பக்கத்தில் காணலாம். தர்மரின் ராஜசூய யாக மண்டபம் 4-வது மைலிலிருந்து இடிந்திருக்கிறது என்கிருர்கள். இதன் உண்மை எப்படியோ! கி. பி. 1356-ம் வருஷத்தில் அரசாண்ட அசோக சக்கரவர்த்தியின் கோட்டைகளும் அவரால் எழுப்பப்பட்ட ஞாபகச்சின்னங்களும் இன்னும் பார்க்கலாம். மொகலாய சக்கரவர்த்திகளால் கட்டப்பட்டுத் தற்போது சிதிலமாயிருக்கிற 2 கோட்டைகள் இருக்கிறது. டில்லியிலிருந்து 13-வது மைலில் குதப் என்பவனுல் ஹிந்து தேவாலயங்களை இடித்து அதில் விசேஷித்த கற்களைக்கொண்டு கட்டி எழுப்பிய ஸ்தம்பம் இருக்கிறது. யமுனையாற்றின் கரையோரம் நகரத்துடன் சேர்த்தாற்போல் உமாயூன் என்பவனுல் கட்டப்பட்டுள்ள கோட்டை அழகாக இருக்கிறது. இதில் நமது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் பட்டாளமும் இருக்கிறது. கோட்டைக்கு வலதுபுரம் ஜிம்மா மஜீதும், கீழ்பக்கம் ஒரே ஆலயத்தில் சத்தியபாமா ருக்மணி சமேதனும், உமாமகேசனும், சலவைக்கல்லினுற் செய்யப்பட்ட சிறிய மண்டபத்தில் விளங்குகிருர்கள். நமது மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியார் பட்டாபிஷேகம் செய்த இடம் இப்போது காலியாகத்தான் இருக்கிறது. இங்கேதான் புது நகரம் உண்டாக்கப்படும். டில்லி நகருக்குத் தெற்கே, அசோக சக்கரவர்த்தியின் கோட்டையும், ஸ்தம்பமும், அதற்குத்தெற்கே இடிந்துகிடக்கும் பாண்டவர் கோட்டையும், உமாயூன் பள்ளிவாசலும் சமாதியும் இருக்கிறது.

8-ம் தேதி இரவு வண்டியேறி ஆக்ராசேர்ந்து ஷாஜகானுல் தனது மனைவியின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்வதற்காகக் கட்டப்பட்ட டாஜ்மஹாலைக் கண்ணுற்று அத்தியந்த பரவசமானேம். இதில் இராஜகுடும்பங்களின அநேக சமாதிகளுண்டு. பிரதானமாக ஷாஜகான், அவர் மனைவி தாஜ் இருவருடைய கல்லறை மத்தியிலிருக்கிறது. இம்மஹாலின் அழகை நேரிற்கண்டு அநுபவிக்கவேண்டுமேயன்றி, மற்றபடி



கூறுவதற்கு சாத்தியமில்லை என்பதை இங்கு வந்து பார்த்தபின்னரே நிச்சயிக்கும்படியாயிற்று. அக்பர்—ஷாஜகான் இவர்கள் அரசாண்டது இந்த ஆக்கிராவில்தான் என்று தெரிகிறது. டாஜ்மகாலின் நான்கு பக்கத்திலுமுள்ள சலவைக்கற்கோரி 180 அடி உயமுரம், 162 படிக்கட்டும் உள்ளது.

அன்றிரவு வண்டிக்குப் புறப்பட்டு 10-ம் தேதி ஜபல்பூருக்கு வந்து, மறுநாள் ஜட்காவண்டியில் 13-வது மைலிலுள்ள "பீடாகாட்" என்னும் நருமதா நதியின் உற்பத்தி ஸ்தானத்திற்குப் போனேம். இம்மலையில் எங்கு பார்ப்பினும் சலவைக்கற்பாறைதான் இருக்கிறது. இதை ஆங்கிலேயர் மார்பிள்ராக் என்று சொல்லுகிருர்கள். இவ்விடத்திற்கு ஹிந்துக்கள் ஓங்காரம் என்று சொல்லி யாத்திரை வருகிருர்கள். இவ்விடத்தில் பாணுசுரன் பூஜை செய்த இடமாகவும், இந்நதியின் ஓர் குண்டத்தை பாணகுண்டமென்றும், அதில் திரள் திரளாகக்கிடைக்கும் உருண்டைக்கற்களே பாணலிங்கம் என்றும் சொல்லப்படுகிறது. நாங்களும் பாணலிங்கம் பெறவேண்டித்தான் இங்குவந்தோம். ஆனுல் நாங்கள் கோரிவந்த அளவில் கிடைக்கவில்லை. அங்கு ஸ்நானதரிசனம் செய்து, ஜப்பல்பூர்வந்து மறுதினம் ரயிலேறி 12-ம் தேதி பகல் ஒரு மணிக்கு பம்பாய் நகரம் வந்து சேர்ந்தோம். எனக்கு சுமார் 6-வது பருவ ஆரம்பத்திலிருந்து 22-வயதுமட்டும் பம்பாயில் 13-வருஷம் இருந்தும், இப்போது பார்க்கையில் பம்பாய் நகரம் புதுமையாகவே தோன்றுகிறது. எந்த இடங்களைநோக்கினும் கண்களுக்கு இனிமையான காக்ஷிதான்! கப்பல் துறைமுகம், அப்பாலாபந்தரிலிருந்து வாடிபந்தர், மஜ்கான்பந்தர்வரையும் 3½ மைல் நீளமும், சமுத்திரத்தில் கண்ணுக்கு எட்டிய தூரமும் வியாபகமாய் கப்பல்கள் நின்று, இன்னும் பல கப்பல்களுக்கும் துறைமுகத்தில் இடமில்லாதிருக்குமானுல் அவ்வியாபாரப் பெருக்கு எத்தகையதாயிருக்குமென்பதை தமக்குத்தாமே ஊகித்துக்கொள்ள வேண்டியதுதான். பம்பாயில் முக்கியமான தேவாலயம்— பம்மாதேவி, கல்பாதேவி, பாலிகேஸ்வர் ஆகிய இம்மூன்றுதான் ஹிந்து தேவாலயங்கள். முக்கியமாய்ப் பார்க்கவேண்டியவைகளாவன:— G. I. P. R. ரெயில்வே, விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷன், கொலாபா, ஜெனரல் தபாலாபீஸ், கிராபோட் மார்க்கட், அப்போலா பந்தர், மஜ்கான் துறைமுகம், ஆரண்பிரோட் மார்க்கமாக கொலாபா வரையும் உள்ள உன்னதமான மாளிகைகள் முதலியவைகளேயாம். பம்பாய் டவுனுக்குள் வடபுறமாக, B. B. & C. I. R. ரயில்வே ஸ்டேஷன்கள் 12-ம், தென்புறமாக G. I. P. R. ஸ்டேஷன்கள் 11-ம் ஆக 23-ரயில்வே ஸ்டேஷன்களை யுடையது. விடியற்காலம் 4-மணியிலிருந்து இரவு மணி 12½ வரை

யும் 4-வண்டிகள் புறப்பட்டுக்கொண்டும் வந்துகொண்டும் இருக்கும். இதற்கிடையே சென்னை, கல்கத்தா, டில்லி, நாகப்பூர், ஜப்பல்பூர், பூனா, ராய்ச்சூர், பரோடா, ஆமதாபாத், சூரத், கல்யான், நாசிக், மண்மாட், — முதலிய இடங்களுக்கு 'துருமெயில்' வண்டிகளும் புறப்பட்டுக்கொண்டிருக்கும் என்றால் நிமிஷங்கூட ஓய்வு இல்லையென்னலாம். பெரிய ரோடுகளில் மத்தியில் மின்ஸார வண்டிகளின் இருப்புப் பாதைகளும், அதன் இருபக்கமும் மோட்டார்களும், அதற்கு அடுத்த பக்கம் ரிக்ஸாவண்டிகளும், அப்பால் பாரவண்டிகளும், கடைசிபக்கம் காலில் தூசுபடியாதபடி நடப்பதற்கு சிமிந்தி கற்களால் கட்டப்பட்டுள்ள நடபாதைகளும் வெகு சௌகரியமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அப்பாலுபந்தரின் ஹார்பரில் 96-அடி ஆழமிருக்கிறது. மேல் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வரும் எந்தக்கப்பல்களும் கரைக்கும் கப்பலுக்கு ஒரு அங்குல தூரவித்தியாசமின்றி வந்து நின்று ஏற்றுமதி இறக்குமதிசெய்யும். அப்போலாபந்தரில் பஞ்சுவியாபாரமும், வாடிபந்தரில் பலசரக்குகளும் நடைபெறும். பந்தர் என்றால் துறைமுகம் என்று பொருள். இங்கிருந்து நேரே சென்னைக்கு வந்து, அங்கிருந்து மதுரைவந்து, 21ம்தேதி ராமேஸ்வர யாத்திரை முடித்து 23-ம்தேதி வீடு சேர்ந்தோம்.

## ரயில்சார்ஜ் விவரம்.

| | |
|---|---|
| மதுரையிலிருந்து சென்னைக்கு | ரூ 3—4—0 |
| சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு | ரூ 14—14—6 |
| கல்கத்தாவிலிருந்து ஸ்ரீகாசிக்கு | ரூ 4—8—6 |
| காசியிலிருந்து ஹரித்துவாரம் | ரூ 4—8—0 |
| ஹரித்துவாரத்திலிருந்து டில்லி | ரூ 1—15—0 |
| டில்லியிலிருந்து ஆக்ரா | ரூ 1—15—0 |
| ஆக்ராவிலிருந்து ஜப்பல்பூர் | ரூ 8—0—0 |
| ஜப்பல்பூரிலிருந்து பம்பாய் | ரூ 9—10—0 |
| பம்பாயிலிருந்து சென்னை | ரூ 11—8—3 |
| சென்னையிலிருந்து மதுரை | ரூ 3—4—0 |
| மதுரையிலிருந்து இராமேஸ்வரம் | ரூ 1—5—6 |
| இராமேஸ்வரத்திலிருந்து மதுரை | ரூ 1—5—6 |
| ஆக மொத்தம் | ரூ 66—2—3 |

☞ இவைகளின் இடையில் அநேக க்ஷேத்திரங்கள் உள்ளன. இரண்டணா, மூன்றணா செலவில் ஒவ்வொரு க்ஷேத்திரத்திற்கும் செல்ல முடியும்.

# கல்யாணத்திற்கு அடுத்த பெருமணம்.

## களம் (Scene) 1. தெருத்திண்ணை.

[ராமா ராவும் நாராயண ராவும் தெருத்திண்ணை மீது உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, புருஷோத்தம ராவின் குமாரனான மாதவ ராவ் தெருவழியாய் ஓடிக்கொண்டு பிரவேசிக்கிறார்.]

ராமா.—என்னையா, மாதவராவுகாரு, உங்கள் சிநேகிதர்களிவ்வளவு பேர் கூப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது, பேச்சு காதில் போட்டுக்கொள்ளாமல் ஓடுகிறீர்கள். எங்கள் மீது இப்படி தயவில்லாமலிருப்பது தர்மமா ?

மாதவ.—எங்கள் தகப்பனாருக்கு உடம்பு அசௌக்கியமாயிருப்பதால் வெங்கடாசாரி வீட்டுக்குப்போய் ஔஷதம் வாங்கிக்கொடுக்க ஓடுகிறேன். இப்பொழுது எனக்கு சாவகாசமில்லை. பின்னாலே வந்து வார்த்தை சொல்லுகிறேன். க்ஷமிக்கவேணும்.

ராமா.—ஒரு வார்த்தை கேட்டுப்போங்கள். உங்கள் தகப்பனார் மூந்தின நாள் தானே கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்தாராம். அப்பொழுதே உடம்பு சௌகரியமில்லையா என்ன ?

மாதவ.—அம்மாள் கிரஹப்பிரவேசமும், ஐயா ஸ்மசானப் பிரவேசமு மென்கிற பழமொழி சரியாயிருக்கிறது. இந்தத் துடைகாலி மூதேவி எந்த வேளையில் வாழ்க்கைப்பட்டாளோ என்னமோ; மங்கள ஸ்நானமாகி ராத்திரி மங்கள ஸூத்திரதாரணம் செய்யும் பொழுதே எங்கள் தகப்பனாருக்கு குளிர்ஜுரம் வந்துவிட்டது. அந்த நாலு நாளும் ஜுரம் வாராமலிருந்ததினால் கல்யாணத்திலே மாத்திரம் யாதொரு சங்கடமும் நேரிடாமல் கல்யாணம் விதி பூர்வகமாய் நடந்து விட்டது.

ராமா.—இப்பொழுது ஜுரம் நின்றிருக்கிறதோ, அல்லது வந்து கொண்டிருக்கிறதோ ?

மாதவ.—இந்த நிர்ப்பாக்கிய தசையிலேயே வயிற்றுப்போக்கும் ஆரம்பித்துவிட்டது. அவ்விடத்து வைத்தியன் லங்கணம் போட்டதில் இன்னும் துர்ப்பலமதிகமாகவே, இவ்விடத்தில் நல்ல வைத்தியர் நம்முடைய வெங்கடாசாரியாரிருக்கிறாரென்று பல்லக்கில் வைத்து ராத்திரியே இந்த ஊருக்கு அழைத்து வந்துவிட்டேன்.

ராமா.—ஜ்வரம் நின்றிருக்கையில் இது அது தின்றதில் வயசான தால் அஜீர்ணமாயிருக்கும்.

நாரா.—வயிற்றுப்போக்கில் லங்கணம் கொஞ்சமாவது போடக் கூடாது. அந்த வைத்தியன் நிர்மூடனாய்த் தோன்றுகிறது.

மாதவ.—எங்கள் தகப்பனாருக்கு அப்படி யொன்றும் வயசாக வில்லை. அவருக்குக்கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தக்க வயதுதான். நம்மெல்லோரையுமேவிட அவர் திடசாலியா யிருக்கிறார்.

நாரா.—அவருக்கு அறுபது வயதுக்கு மேலாகிவிட்டன அல்லவா?

மாதவ.—ஏதையா? சென்ற புரட்டாசி மாதத்தில் அவருக்கு ஐம்பத்து நாலு வயசு நிறைந்தது. மேல் வருஷம் பென்ஷன் வாங்கிக் கொண்டு வீட்டில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்து ஸம்சாரத்தோடு சுகப்படவேணுமென்று பிரயத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

நாரா.—புது கல்யாணப் பெண் யாருடைய குழந்தை ஐயா?

மாதவ.—யாருடைய குழந்தையானாலென்ன? சஸ்துரியார் வீட்டுப் பெண். நாசமாய்ப்போன கழுதை!

நாரா.—அந்தக் குழந்தையை! எனக்குத் தெரியும். அவளுக்கு பத்து பிராயம். வெகு அழகு. ஐயோ! எதும் அறியாதபெண் பாவம்!!

மாதவ.—என்ன? அழகாலென்ன? குணம் மாத்திரம் நல்ல குணம் கிடையாது. முகூர்த்த தினத்திலேயே எனக்கு இந்தப் புருஷன் வேண்டாமென்று எங்கேயுமில்லாத கூச்சல் போட்டு பிடிவாதமாய் மணை மேலுட்கார மாட்டேனென்று சொல்லி விட்டாள். அவளுடைய அப்பா வந்து காலு பூசை கொடுத்து பலவந்தமாய் மணைமேலுட்கார வைத்தார்.

நாரா.—அப்படியானால் புருஷனுடன் நன்றாகவே வாழப்போகிறாள். பெண்ணுக்கு இருந்த அறிவு பெற்றோருக்கு இல்லாது போயிற்றே.

மாதவ.—அவள் வாழும் வீடும் ஒன்றா? என் தகப்பனாருக்கு இப்பொழுது உடம்பு சௌக்கியமானாலொழிய வேறே விதமானால் பின்னால் ஜீவனம்சத்துக்கு எங்கள் பிராணனை யெடுக்கப்போகிறாள். அவள் வீட்டுக்கு வந்த பிறகு மூத்தாள் பிள்ளைகளாகிய எங்களை ஒருகை பார்ப்பாள்.

நாரா.—தங்களுக்கு வயதென்னையா?

மாதவ.—எனக்கு வயது இப்பொழுது இருபத்தேழு.

நாரா.—வேணுமானால் ஒரு தாலியை வைத்துக்கொள்ளுங்கள்; இப்படி வயதான பிறகு கல்யாணம் உதவாதென்று நீங்கள் செவ்வையாய்ச் சொல்லாமலேன் விட்டீர்கள்?

மாதவ.—அவருக்கு எங்கள் தாயாருடனிருக்கும்பொழுதுமுதலே ஒரு வைப்பு இருந்து கொண்டிருக்கிறாள். ஆனால் எவ்வளவு உப நாயகிகளிருந்தாலும் ஒரு பெண்சாதிக்கீடல்ல வென்று அவருக்கு ஒரு பிரமை யுண்டாயிற்று. அவர் எங்கள் தாயார் இறந்துபோன பதின்மூன்றா நாளே



கல்யாணம் பண்ணிக்கொள்ள வேணுமென்றாரம்பித்தார். எங்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் ஒருவருஷம் வரையில் சும்மாயிருந்தார்.

நாரா.—இப்படி வயது சென்றவர்களுக்கு, பெற்றெடுத்தபேர்கள் எப்படித்தான் பெண் கொடுக்கிறார்களோ?

ராமா.—டிப்டிகலெக்டர் செய்துகொண்டிருந்தால் காசுக்காசைப் பட்டு செத்த பிணத்துக்கு பெண்ணைக் கொடுக்கச் சொன்னாலகூட லட்சம் பேர் கொடுக்கிறார்கள்.

மாதவ.—பேச்சு பிராக்கில் ரொம்ப நேரமாய்விட்டது. எங்கள் தகப்பனாருக்கு சீக்கிரமாய் ஔஷதம் கொடுக்கவேணும். நான் போகிறேன். நீங்கள் ஒருதடவை வந்து எங்கள் தகப்பனாரைப்பார்த்து விட்டு போகுங்களேன்.

ராமா.—நாங்கள் உள்ளேபோய் வேஷ்டிகட்டிக்கொண்டு வருகிறோம். தாங்கள் முந்திப்போய்க் கொண்டிருங்கள்.

மாதவ.—சரி உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன் (என்று போகிறார்.)

நாரா.—இனி வெங்கடாசாரியார் கையிலகப்பட்ட பிறகு "என் கைமாத்திரை வைகுண்டயாத்திரை" என்றபடி இந்த இடம் இனி தேறப் போகிறதில்லை. நாம் போவோம் வாருங்கள் (என்று போகிறார்கள்.)

* * *

## களம் (Scene) 2. புருஷோத்தமராவு அவர்கள் வீடு.

[வைத்தியர் வெங்கடாசாரியாரும், ஜோதிஷம் சிவய்யரும் பந்துக்களாகிய வரதராஜாவும், கனகராஜாவும் பிரவேசிக்கிறார்கள்.]

வரத.—வெங்கடாசாரியாரவர்கள்! பந்துலுகாரு கையிலென்னமாக விருக்கிறதையா?

வெங்க.—என்னமாயிருக்கிறதென்று சொல்லுகிறது. பூர்ணமாய் வாயுகொண்டிருக்கிறது. வைத்தியக் குறைச்சல் கொஞ்சமேனும் கிடையாது. வைத்தியத்தினால் மருந்து கொடுக்கமுடியுமேயொழிய ஆயுசைப் புகட்டமுடியுமா? பெண்சாதியின் அதிர்ஷ்டம் என்னமாயிருக்குமோ தெரியாது.

கனக.—அவளுடைய மாங்கல்யம் பலமாயிருந்தால் உங்கள் வைத்தியமே வேண்டியிராது. கிழவனை லங்கணம்போட்டு வீணாய்ப் பாழ் செய்தார்கள்.

வெங்க.—குழந்தாய்! நீ சிறு பிள்ளையானதினால் உனக்கு ஒன்றுந் தெரியாது. சும்மாயிரு. லங்கணத்திலெவ்வளவு குணமிருக்கிறதென்று நினைக்கிறாய்? "லங்கணம் பரம ஔஷதம்" என்று சொன்ன சாஸ்திரக்காரன் பைத்தியக்காரனா என்ன? நான் சொன்னபடி செய்து மத்தியில் லங்கணத்தைக் கெடுக்காமலிருந்தால் நாலு லங்கணத்தோடு ரோகம் சேஷமில்லாமல் போயிருக்கும். மத்தியில் ஒரு டிரஸரை யழைத்து வந்ததால் அவன் ரவா கஞ்சி கொடுத்து உடம்பெல்லாவற்றையும் பாழாக்கினான், எல்லாம் கெட்டுப்போனபிறகு எவ்வளவு லங்கணம் வைத்து என்ன செய்கிறது? எவ்வளவு மருந்து கொட்டித்தாலென்ன செய்கிறது?

கனக.—டிரெஸ்ஸர் ஔஷதம் கொடுத்தது ஒருவேளையேயல்லவா?

வேங்கட.—கெடுக்கிறதுக்கு ஒருவேளை யென்னத்திற்கு; ஒரு நிமிஷமே போதுமே. வைத்தியலோபம் எள்ளளவேனும் கிடையாது.

பணத்தை முன்பின் பார்க்காமல் திவ்ய ஔஷதங்களை புட்டி புட்டியாய்க் கொட்டினேன். வாதராட்சஸம், வாதவத்துவம்ஸினி, வாதாந்தரஸம், வாதமூஷிகமார்ஜாலம், வாதபன்னகாருடம், பிரளயாக்கினிரஸம், முதலான உஷ்ணஞ்செய்யும் மருந்துகளையெல்லாம் புகட்டினேன். கடைசியில் சிந்தாமணி ஸஞ்சீவி கூடக் கொடுத்தேன்.

கனக.—இந்த ஔஷதங்களின் பேர்களையெல்லாம் எப்பொழுது உருப்போட்டீர்கள்? உன்னிடத்தில் காசு கிடையாதே. வைத்தியசாஸ்திரம் படிக்காத நீ இந்த ஔஷதங்களையெல்லாம் என்னமாய் செய்தாய்?

வரத.—பெரியவாளை இப்படி பேசலாகாது. சும்மாயிரு. மருந்தில்லாவிட்டால் அவர் ஊரில் எல்லாருக்கும் என்னமாய் மருந்து கொடுக்கிறார். வைத்தியரிடத்தில் நம்பிக்கையிருந்தால் அவர் மண்ணைக்கிள்ளி கையில் வைத்தாலும் எப்பேர்பட்ட ரோகங்களும் நிமிஷத்தில் பறந்து போம்.

கனக.—இவரை நிறுத்தி டாக்டரைக்கொண்டு மருந்து கொடுப்பித்தால் வியாதி தீரும்.

வரத.—அந்த வைத்தியம் வெள்ளைக்காரர்களுக்கே தவிர கருப்பு மனிதர்களுக்குக் கொஞ்சமேனுமுதவாது. அவர்கள் மாமிசமும் ரொட்டியும் தின்பதால் அவர்களுடம்புக்கும் நம்முடைய உடம்புக்கும் வெகு பேதம். நம்முடைய உடம்புக்கு கருப்பு வைத்தியமே சரி.

வெங்கட.—"லௌகீகர்களெல்லோரும் சேர்ந்து இவ்வளவு சிரேஷ்டரான பிராமணருக்கு சாகுங்காலத்தில் பறையன் தண்ணீரை வாயில் கொட்டலாமா? வீணாக டாக்டர் துரையையழைத்துவர ஆள் அனுப்பியிருக்கிறார்கள். டாக்டர் டாக்டரென்பதேயொழிய அவனுக்கு நாடிபார்க்கவாவது தெரியுமா?

கனக.—எல்லாமுனக்கே செவ்வையாய்த் தெரியும். நீங்கள் எல்லாம் கைவிட்ட உன் பெரியப்பன் மகனை மூர்ந்தின நாள்தானே டாக்டர் ஸ்வஸ்தம் செய்தார்.

வெங்கட.—அவர்கள் ரணவைத்தியத்தில் கெட்டிக்காரர்கள். அவ்வளவேயொழிய வேறொன்றில் உபயோகமில்லை. வைத்தியப்பேச்சு என்னய்யா? பலபேர்தொட்ட ஜலம் குடித்து பிராம்மணீகத்தையும் இழக்கிறதா ஐயா? டாக்டர் வந்தால் அக்கினிபிளாஸ்திரி போட்டு பிராணனிருக்கும்போதே கொன்றுவிடுகிறான்.

சிவய்யாஜோசியர்.—இந்த வைத்தியங்களாலாவது ஒன்றுமில்லை. இப்பொழுது மாதவராவுக்கு சனிபோராது. நவக்கிரக ஜபம் செய்தால் எல்லாம் சுவஸ்தமாகிறது. நான் சண்டைபோட்டு நாலுநாளாய் ஜபங்கள் செய்வித்து வருகிறோம். கோவிலுக்கு அபிஷேகத்துக்காக பிராம்மணர்கள் போயிருக்கிறார்கள். அபிஷேகம் செய்துவந்து தீர்த்தம் உள்ளுக்கு கொடுத்தால் கொஞ்சநேரத்தில் எல்லாம் சரிப்பட்டு வந்து விடுகிறது.

வரத.—பந்துலு அவர்களுக்கு கீல்களெல்லாம் வலிக்கின்றன. எனக்குப் பார்த்தால் யாரோ ஏவல் செய்திருக்கிறதுபோல் தோன்றுகிறது.

சிவ.—எனக்கு அந்த சந்தேகம் தோன்றி ராத்திரி மாந்திரீகர்களை வரவழைத்து விபூதிவைக்கச்செய்தேன். காலமே பெண்டுகள் பிடாரிகோவில் பறைச்சி முதல்பெண்சாதி பிடித்திருக்கிறாளென்றும், விரோதிகள் ஏவல் செய்திருக்கிறார்களென்றுங்கூடச் சொன்னார்கள்.



இந்த நவக்கிரஹ ஜபம் எல்லாவற்றிற்கும் நல்லதே. கிரஹசாந்திக்காக பிராம்மண சமாராதனை செவ்வையாய் நடக்கவேண்டும்.

வரத.—ஆகட்டுமையா. உள்ளேயிருந்து காமாவதானிகள் என்னமோ கூச்சல் போடுகிறார். என்னயா காமாவதானிகளே?

காமாவதானிகள்.—(உள்ளேயிருந்து) மாதவராவு இன்னும் வரவில்லையா? இந்தவேளை பந்துலு அவர்களுக்கு பிராயச்சித்தம் செய்தால் பரவாயில்லை. தட்சணைகொடுக்க மாதவராவ இல்லை; என்னபுத்தி?

வரத.—இதற்குள் அவசரமில்லை, பையன் வருகிறவரையில் இருங்கள்.

காமா.—என்ன இருக்கிறதையா? இனிமேல் டாக்டர் வேண்டியதில்லை. காத்துக்கொண்டிருந்தால் உடனே புறப்பட்டுவரச்சொல்லியனுப்புங்கள். கட்டிலின்மேல் பிராணன் போகாமல் பந்துலு அவர்களை நாம் பூமியிலிறக்கி படுக்கவைக்கவேணும். மாதவராவு நல்ல சமயத்திலில்லாமல் போய்விட்டாரே. எனக்கு இப்பொழுது உத்கிராந்தி கோதானம் கிடைக்கவேணும்.

வரத.—அப்பா நாமேதாவது சாக்குவைத்துப் போய்விடுவோம். இங்கேயேயிருந்தால் பிணத்தை சுமக்கச் சொல்லுவார்கள்.

கனக.—இதைப்போன்ற ஆபத்து வந்தசமயத்தில் சகாயம் செய்யாவிட்டால் நம்முடைய உறவு என்னத்துக்கு; நெருப்புப்போட்டுக்கொளுத்தவா? நீங்கள் வேண்மானால் போங்கள்.

காமா.—சீக்கிரம் உள்ளேவரவேணும். பந்துலு அவர்களுக்கு கடைசியாக இழுக்கிறது. பிராணன் போய்விட்டாற் போலிருக்கிறது.

வரத.—நான் மாதவரை அழைத்துவரப்போகிறேன். தாங்கள் அதுவரையில் பார்த்துக்கொண்டிருங்கள். நட்சத்திரம் நல்லதோபாருங்கள். இல்லாவிட்டால் வீட்டைவிடவேண்டியிருக்கிறது. அவசியமானால் அவரை ரேழியில் கொண்டுபோய் வையுங்கள் (யாவரும் போய்விடுகிறார்கள். வயோதிக மாப்பிள்ளையும் சவமானுர்.

---

## சாதுர்யங்கள்.

---

1\. தோல் உரிக்காமல் துண்டிக்கப்பட்ட வாழைப்பழம்.—கொஞ்சம் கெட்டியாக இருக்கும் ஒரு வாழைப்பழத்தைக் கொண்டுவந்து சபையார் ஒருவர் கையில் கொடுத்து "இது என்ன" என்று கேள், "வாழைப்பழம்" என்று அவர் பதில் சொல்வார். அதை வேறொருவர் கையில் கொடுக்கும்படிகோரி, அவரைக்கூட அது என்னவென்று கேள், அவரும் வாழைப்பழம் என்பார். பிறகு மற்றொருவர் கையில் கொடுத்து "இது தோலுரித்த பழமா உரியாதபழமா?" என்று கேள், அவர் பரீக்ஷித்துப்பார்த்து உரியாததே என்று சொல்லுவார். திரும்பவும் இன்னொருவரிடம் கொடுப்பித்து "அறுத்ததா, அறுக்காததா?" என்று கேள். பரீக்ஷித்துப்பார்த்து அறுக்காததே என்று சொல்லுவார். திரும்பவும் முதலில் பார்த்தவர் கையில் கொடுப்பித்து, "ஐயா! தயவுசெய்து அந்தப் பழத்தை நீங்கள் தோலுரித்துப் பாருங்கள்" என்று வேண்டிக்கொள். அவர் தோல் வாங்கினவுடனே அது உள்ளே நான்கு துண்டுகளாக அறுக்கப்பட்டிருக்கும். "இது என்ன! நான்கு துண்டங்களாக எப்பொழுது

அறுத்தீர்கள்" என்று சொல்லி, அந்தத்துண்டுகளைச் சபையோருக்குக் காண்பிக்க, எல்லோரும் ஆச்சரியப்படுவார். இந்த சாதுர்யத்தைச்செய்வதெப்படி?

2. மூன்று தம்பதிகள் ஆறுதாண்டுதல்.—ஏ. பீ. ஸி. என்னும் மூன்று உத்தியோகஸ்தர்களும், அவர்களுடைய மனைவிமாரும் ஒரு ஆற்றுக்கு வந்தார்கள். அங்கே இருவர் மாத்திரம் செல்லக்கூடிய படகு ஒன்றுமட்டுமே இருந்தது. ஆயினும் அதைச் செலுத்துதற்குப் படகுக்காரன் இல்லாது போயினன். ஒருவருடைய மனைவி அவரில்லாதபொழுது பரபுருஷன் பக்கத்தில் இராதவண்ணம் அந்த ஆற்றை அவர்கள் எவ்வாறு கடந்துபோவார்கள்?

3. ஒரு சிறு கணித வினா.—இரண்டு சிறுவர்களுக்கு ஒருவர் பத்து மாம்பழத்தை வெகுமதியாகத்தர, அவர்களில் ஒருவன் தான் ஆறு பழம் எடுத்துக்கொண்டு, மற்றவனுக்கு நான்கு பழம் மட்டும் கொடுத்து, "நான் உன்னைக்காட்டிலும் அதிகமாய்ப் பழம் எடுத்துக்கொண்டதற்கு இதோ இரண்டணா" என்று சொல்லி அவன் கையில் கொடுத்தான். அப்படியானால் பழத்தின் விலை என்ன?

## விடை.

1-வது விடை.—ஊசிநூல் கோணர்ந்து வாழைப்பழத்தின் ஒரு கோடியில் தோலுக்குக் கீழ்ப்பக்கத்தில் ஊசியைநுழைத்து அப்புறத்திற்கு வாங்கவேண்டியது. அப்படி வெளிக்குவந்த துவாரத்திலே மறுபடியும் ஊசியை நுழைத்து தோலுக்குக்கீழேயே இன்னும் கொஞ்சம் தூரத்தில் ஊசியை வெளிக்குவாங்கி நூலை மெள்ள இழுக்கவேண்டியது. அப்படி வெளிப்பட்ட துவாரத்திலே மறுபடி அதே மாதிரியாக நுழைத்து, முதலில் நுழைத்த துவாரத்தின்வழியாய் ஊசியை வெளிப்படுத்தி நூலை மெள்ள இழுக்கவேண்டியது. இப்படி ஜாக்கிரதையாய்ச் செய்யும்பக்ஷத்தில் வாழைப்பழத்தின் சுளைமுழுவதையும் நூல் சுற்றிக்கொண்டு, அதன் இரண்டு நுனியும்முதல் துவாரத்தின் வழியாய்வெளிவந்திருக்கும், அதன் பிறகு அந்த நுனிகளைப்பிடித்து இழுத்தால் பழத்தையுள்ளே அறுத்துவிட்டு நூல் வெளியேவரும். இந்தப்பிரகாரம் வாழைப்பழத்தில் மூன்று இடத்தில் நூலை நுழைத்து இழுத்தால், அது நான்கு துண்டுகளாக அறுக்கப்பட்டிருக்கும். ஊசி நுழைந்த துவாரங்கள் காணப்படா.

2-வது விடை.— (1) ஏ. என்பவரும் அவர் மனைவியும் போகவேண்டும். (2) ஏ. திரும்பி படகைக் கொண்டுவரவேண்டும். (3) பீ. ஸி. இவர்களுடைய பெண்டுகள் போகவேண்டும். (4) ஏ. யின் மனைவி திருப்பிவரவேண்டும். (5) பீ. யும், ஸீ யும் போகவேண்டும். (6) பீ. யும் அவரது மனைவியும் திரும்பி வரவேண்டும். (7) ஏ. யும் பீ. யும் போகவேண்டும். (8) ஸீ யின் மனைவி திருப்பி வந்து, முதலில் ஏ. யின் பெண்சாதியையும், மறுபடி திருப்பிவந்துபீ யின் பெண்சாதியையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

3-வதுவிடை:—அநேகர் ஒரு அணா என்று சொல்வர். ஆயினும் சரியான விலை இரண்டணா. ஒவ்வொருவனும் ஐந்துபழம் எடுத்துக்கொள்ளவேண்டியதற்கு, அவர்களில் ஒருவன் மற்றொருவனுடைய பழம் ஒன்று எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக இரண்டணா விலையாகக் கொடுத்தான்.

---


# பிரஜாநுகூலன்.

புத்தகம் 9. | திரிச்சிராப்பள்ளி 1915ம் வருஷம் பிப்ரவரி மீ | சஞ்சிகை 8.


OFFICE OF THE REGISTRAR 20 FEB 1915 MADRAS

## பிரபஞ்ச விலாஸம்.

ரெயில்வேடிக்கட்டுகளைப்பெற்றவுடன் அந்தடிக்கட்டுகளின் 'நெம்பர்'களை ஒரு கடிதத்தில் குறித்து வைத்துக்கொள்வதுடன் அந்த டிக்கட்டின் பின்புறத்தில் கண்ணுக்குத்தெரியாத சிறிய எழுத்தில் தமது பெயரின் முதல் எழுத்தைக்குறிப்பிட்டு வைக்கவேண்டும். டிக்கட் தவறிவிட்டால் இந்த நெம்பரைக்காட்டி. டிக்கட்டில் குறிப்பிட்டுள்ள குறிப்பையும் தெரிவித்து உண்மைப்படுத்துவதற்கு அது உதவியாக இருக்கும்.

---

கத்தரிக்கோலின் உதவியினால் நமக்குப் பலவிதமான உடுப்புகள் அமைகின்றன. பைண்டு வேலைகள் முதலிய எவ்வளவோ காரியங்கட்கு அது பயன்படுகின்றது. ஆயினும் கத்தரிக்கோலுக்கு நல்லபெயர்கிடையாது ஒரு கூட்டத்திற்செல்லும்போது பேனாகத்தி முதலியவைகளை நாம் கொண்டு செல்வது குற்றமாகாது. ஆனால் கத்தரிக்கோல் கொண்டு செல்லினே முதல் தரமான திருடர்களாக மதித்து விடுவார்கள். ஆகவே ஜனக்கூட்டத்தில் செல்லும்போது கத்தரிக்கோல் கொண்டு போகக்கூடாது.

---

கோயிலுக்குச்செல்லும் பெண்கள் அதற்கென்றே ஆபரணங்கள் அணிந்து நூதன அழ[illegible]செய்து கொண்டு புறப்படுவார்கள், அதைப்பற்றி நமக்கு ஆக்ஷேபனையில்லை ஆனால் கோயிலில் ஜனக்கூட்டத்தினிடையே அவர்கள் கழுத்தையும் மேல் வஸ்திரத்தையும் நன்றாய் மூடிக்கொண்டிருக்க வேண்டும். கூட்டத்தில் முக்காடு போட்டுக்கொள்வதுதான் சரி, அவ்விதம் செய்யின் நமது நகைகள் பிறரால் கத்திரிக்கப்படாமலும் களவுபோகாமலும் இருக்கும்.

---

படித்துக்கொண்டே ஒரு பக்ஷணத்தைப்புசிப்பின் அதன் சுவை பூரணமாகத்தெரிவதில்லை. மனம் படிப்பின் வழியேசெல்வதால் பக்ஷணத்தின் சுவையைப்பூரணமாக அறிகிற சக்தி அதற்குக்குறைந்துபோகின்றது. ஆனதால் ஒரு பக்ஷணத்தைப்புசிக்குங்கால் அதிலேயே தமதுமுழுக்கவனத்தையும் செலுத்தி நன்றாக மெதுவாக சுவைத்து ருசி பார்த்துப்பிறகு விழுங்கவேண்டும். சில பக்ஷணங்கள் அதன் முதல் பாகத்தைச்சாப்பிட்ட போது இருந்த சுவை மறு பாதியை யுண்ணும்போது இருப்பதில்லை நாக்கு சுவை தட்டிப் போகிறது. அப்படி நேர்ந்து சுவை புலப்படாத தருணத்தில் அப்பக்ஷணத்தைப் புசியாமல் வைத்துவிட்டு ஒரு மணிக்குப்பிறகு மறுபடியும் சாப்பிட

ஆரம்பிப்பின் முன்பு இருந்த சுவை போலவே புது சுவை மறுபடியும் தோன்றும்.

---

**ஒரு புஸ்தகத்தைப்படிக்குங்கா**ல் கையில் பென்ஸலுடன் இருத்தல் வேண்டும். ஸ்வாரஸ்யமாய்த்தோன்றுமிடங்களில் குறிப்பிட்டு, அதன் பக்கத்தை புஸ்தகத்தின் கடைசியில் பதிந்து கொள்ளவேண்டும். அத்துடன் அப்புஸ்தக சார்பான அபிப்பிராயத்தைக்கடைசியில் எழுதி அதனைப்படித்து முடித்ததேதி நேரத்தையும் குறிப்பிட்டு வைக்கவேண்டும் இவ்வழக்கம் பின்னால் வெகு பயனைத்தரும்.

---

**வீட்டிலுள்ள பெண்கள்** படிப்பில் விருத்தியாகவேண்டுமாயின் அவர்களுக்கு நாவல்களில் பிரியமுண்டாகும்படி ச்செய்யவேண்டும். பத்திரிகைகளைப்படிக்க வைத்துத் தெரியாத பாகங்களை—உதாரணமாக— காங்கிரஸ்— என்பதான பதங்களினுடைய கருத்துகளை விளக்கிச்சொல்லி அதிலே அவர்களுக்கு ருசி தோற்றும்படிப் பாடுபடவேண்டும். இவ்வாறுகப்புஸ்தகபத்திரிகைகளில் அவர்கட்கு ஆர்வம் தோன்றிவிடின் அவர்களின் கல்வி தமக்குத் தாமே விருத்தியடைந்து விடுமென்பது நிச்சயந்தான்.

---

**ஒரு பொருளை** நீ வாங்குவதற்கு முன்பு—அந்தப்பொருள் இல்லாமல் நீ காலம் கழிக்க முடியாதா—என்பதைப் பற்றித்தயவுசெய்து சற்றே ஆலோசித்துப்பார். ஏன் அப்பொருள் இன்றி இருக்கக்கூடாது என்று இன்னொரு கேள்வியையும் உன்னை நீயே கேட்டுக்கொள். இப்படிச்செய்ய நீ பழகிவிட்டால் உன் பொருள் வீணாக விரயமாகாமல் செட்டாக வாழ்ந்து செழிப்பாக விருத்திபெறலாம்.

---

**உன் மனைவி** இடத்திலே கொஞ்சம் பணம் மிகுத்துவை, அதை உன் மனைவி வட்டிக்கு விட்டு வளர்த்து ரூபாயைப்பவுனாக்குவாள். அண்டை வீடு, எதிர் வீடு இந்தப் பெண்களுக்கெல்லாம் வட்டிக்குப்பணம் உன் மனைவி மூலமாய்க்கொடு. கல் நகைகளை மறுத்துவிடு;வெள்ளி நகைகளைக்கூடிய வரையில் ஒதுக்கிவிடு. பொன் நகைகளைப்பெற்றுக்கொண்டு அதன் பாதி விலைக்குப்பணம் தா. கொடுத்த தேதி வட்டி விவரம் இதை ஒரு புஸ்தகத்தில் எழுதி வை. நீ இதில் சம்பந்தப்படாதவன் போல் காண்பித்துக்கொண்டு உன் மனைவி மூலமாகச்சகல வியாபாரமும் நடத்து. பெண்களுக்குப் பெண்டுகள்—பெண் கைவியாபாரமாக நிற்கட்டும். புளியம்பழமும் தோலும்போல நீ ஒட்டாமலொட்டி யிரு.

---

**உனக்குப்** பிரதிமாதமும் வருகிற பணத்திலே உன் மனைவியின் நகைக்காக இவ்வளவென்று கொஞ்சம் எடுத்துவை. அது ஒரு 15 ரூபாய்க்கு வந்ததும் உடனே அதைப்பவுனாக மாற்றிவிடு. அம்மட்டுமல்ல, அந்தப்பவுனை இரண்டு துண்டாக வெட்டிவைத்துக்கொள். ஏனென்றால் பவுனை அப்படியே இருந்தால் அது செலாமணியாகக்கூடிய நாணயமானதால் ஏதேனும் ஒரு செலவுக்கு வேண்டியதாயிருந்து செலவழிக்கும்படியாகிவிடும். அவ்விதம் நேராதபடி அதை இரண்டு துண்டாக்கிவிட்டால் அது அப்படியே பெட்டியில் பத்திரமாயிருந்து பிறகு நகையாகமாறி அழகு தரும். புருஷர்களுக்கு சேவிங்பாங்கி பெண்களின் தேகந்தான். அத்தேகத்தின்மீது எவ்வளவு பணம் வேண்டுமானாலும்போட்டுவைக்கலாம். தட்டான் அடித்த கொள்ளைபோக பாக்கியிருப்பதெல்லாம் உனக்குலாபம்தான். தட்டானுக்குக் கொடுக்காமல் தீராதுதானே.



**புதிதாகவருகிற** ஒவ்வொரு நண்பரிடத்தும் கொஞ்சம் கடன் கேட்டுவிடு. அவர்கள் மெதுவாக விலக்கிக்கொள்வார்கள். உனக்கு வீணாகத் தொந்தரை தருவோரிடத்தில் காலணா அரையணா கடன் கொடுத்துப்பிறகு கேளாமல் இருந்து விடு. அவர்களுக்கும் உன்னைக்கண்டதும் உனக்குத்தரவேண்டிய பணத்தின் ஞாபகம் வந்துவிடுமானதால் உன்னைப் பார்த்ததும் பதுங்குவார்கள். இரவல் கொடுப்பதற்கென்றே உதவாத புஸ்தகங்களைப் பொறுக்கி வைத்துக்கொள். அது போனால் போகட்டும். வந்தால் வரட்டும். இரவல்-இனும்-இரண்டும்ஒன்றே.

---

**தான்** இருக்கிற தெருவுக்குத் தானே பெரிய மனிதன் போல் நினைத்துக் குலைத்துக் கொண்டிருக்கிற பெருமை பிடித்தவர்களை நீ பொருட்செய்யாதே. அவர்களை ஒரு காசுக்குக் கூட மதிக்காதே. அவர்களே உன்னுடன் வலுவில் வந்து பேசின் அப்போது மட்டும் இனிப்பாக இரண்டு வார்த்தைகளை எண்ணிவிட்டு வாயை மூடிக்கொள். அவர்கள் பேசும் வார்த்தைகட்கெல்லாம் உன் பற்களைத் திறந்து காட்டினால் அதுவே போதுமான பதிலாகும். அவர்களே பேசி ஓயட்டும். அவர்கள் பேசிக்கொண்டே இருக்க, உன் வேலைகளை நீ செய்துகொண்டேயிரு. அவர்களுடைய பேச்சின் நடுவிலே நீ எழுந்து உள்ளே போய் வா. அப்போது நமது வார்த்தைகளை இவன் மதிக்கவில்லையே என்று அவர்கள் மனதில் படும். உன்னிடத்தில் ஒன்றும் பலிக்காதென்று கண்டுகொண்டு அவர்கள் மெதுவாக விலகிவிடுவார்கள். சனி தீர்ந்த தென்று தலை முழுகிவிடு.

---

**பூரண அழகு** சித்திரக்காரனுடைய எழுதுகோலாலும், படம் வரைபவனுடைய சாதுரியத்தினாலும், கல்தச்சனுடைய உளியாலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது ஆனால், அப்பூரண அழகைக் கடவுள் அவரது மக்களுக்குக் கொடுத்தல் எங்கோ அபூர்வம்.

---

**விளக்குப் பூச்சிகள்** விளக்கின் வெளிச்சத்தைக் கண்டு ஆசைகொண்டு அதில் விழுந்து மாய்கின்றன. வண்டுகள் புஷ்பத்தின் வாஸனையால் மயங்கி அதற்குள்ளகப்பட்டு இறக்கின்றன. தூண்டிலிருக்கும் உணவைக் கண்டு மீன்களகப்பட்டு நசிக்கின்றன. அது போல் மனிதர்கள் பேராசை யென்னும் வலையிற் சிக்கி வாழ்நாளைக்கழித்துப் பிராணனைவிடுகின்றனர்.

---

**நானே** ஒரு பறவை. என் தலை புதையலெடுக்கும், திருட்டைக் கண்டு பிடிக்கும், பெண்களுடைய பார்வையைத் துலக்கி அழகாகக் காட்டும். நான் இல்லாவிட்டால் சமாச்சாரப் பத்திரிகை நடவாது. என் காலோ நாகத்துக்குத் தலை. எல்லா உயிருள்ள ஜீவன்களுக்கும் உருசி யென்னும் இன்பத்தைக் கொடுக்கும். நான் யார்?
வடை:— மைனா.

---

**பலவிதமான** கெட்ட பதார்த்தங்களைத் தின்பதால் ஜனங்களுக்கு சோம்பேரித்தனம் உண்டாகிறதென்று சிலர் சொல்லுவதுண்டு. நல்ல ஆகாராதிகளைத் தின்று பெரிய மனிதர்களென்ற கௌரவப் பட்டத்தைப் பெற்றவர்களிடமும் மேற்கூறியகுணம் குடிகொண்டிருக்கிறதே! இது ஆச்சரியமன்றோ?

---

**ஊர் நியாயம்** பேசுகிற பெருமாளே! புதிதாகப் பெரிய மனிதனானவனே! காலத்தை யெல்லாம் பிறர் வீட்டிலேயே உண்டு கழித்த

சாமர்த்தியசாலியே! கிருபை கூர்ந்து சற்றே யோசித்துப்பார். ஒருவேளைச் சாப்பாட்டிற்குக் கிளப்பில் ஏற்பட்டுள்ள விலை அணா மூன்று பைசா ஆறு. நீ எத்தனை தினங்களாகப் பிறர் வீட்டில் புசித்திருக்கின்றாய். அப்படி உனக்கு அன்னமிடப்பட்ட விசுவாசம் உன் நெஞ்சில் இருக்கிறதா? பணமாகக் கொடுத்தால் மட்டும் கணக்கு. சாப்பாடு போட்டால் கணக்கில்லையா? அரிசி, விறகு, காய்கறி வகைகள் பணத்திற்கு வருகிறதா? சும்மா வருகிறதா? ஐயோ! இந்தப் பாழும் உறவினர்க்கு ஆக்கிப் போட்டுக் கடன்பட்டுக் கலங்குவதைத் தவிர்த்து வேறு பலன் ஏதுங் காணோமே!

---

**குள்ளநரிப் பிரபுவே!** உன் யுக்தி புத்திகள் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாய்! அது தவறு. எல்லாம் தெரிந்த பெருச்சாளி நான்! எனக்கு நேரில் நீ பூனைபோல் நடப்பாய். நான் போனவுடனே பத்தெட்டு திட்டுகள்— பதினாயிரம் பேச்சுகள் என்னைப்பற்றிப் பேசுவாய். உள்ளே பொறாமை. எவ்விதமாவது என்னை மோசப்படுத்த நினைவு. வெளியிலோ மகா ருத்திராட்சப் பூனை. ஆனால் நீ ஒன்று தெரிந்து கொள்ளவேண்டும். உன் மனதிலிருக்கும் கபடங்களையெல்லாம் நான் அறிந்து அளவெடுத்து வைத்திருக்கிறேன் என்பதை உணர்ந்துகொள்.

---

**வரிப்பணம்** வாங்குகிற சுறுசுறுப்பு, ரோட்டுகளின் மீது இல்லையென்று மோட்டார் வண்டிகளும், பைசிக்கல் வண்டிகளும் முனிசிபாலிடியைப்பார்த்துச் சொல்லுகிறதாம்.

---

**“கருத்து காரியத்தில் தெரியும்”** என்பது பழமொழி. தர்மசிந்தையுள்ளவரென்பது ஒருவர் செய்யும் தர்மத்தால் ஊகிக்கக் கூடியதேயன்றி அவர் செய்யும் தர்ம பிரசங்கத்தால் தெரியாது. ஒரு காரியத்தைச் செய்யும்போது கஷ்டமுண்டாகலாம். ஆனால் அந்தக்கஷ்டம் நீங்கி விடும். அதைச் செய்து முடித்ததாலுண்டாகும் கீர்த்தி எப்போதுமிருக்கும். நல்ல எண்ணமும் நல்ல கொள்கையும் இருப்பது நன்மையே. நல்ல செய்கை இருந்து விட்டால் பரம சிலாக்கியமாகும். ஒரு கெட்ட காரியத்தைச் செய்வது வெறுப்பு. அபாயத்தை விளைக்காத நற்காரித்தைச் செய்வது சிறப்பு. அபாயத்தையும் நஷ்டத்தையும் பாராட்டாமல் நற்காரியத்தை நடுவில் கைவிடாமற் செய்து ஸாதிப்பது பரமோத்கிருஷ்டம். அதுபோல் நமது பத்திரிகையை யபிமானிக்கும் நேயர்கள் சில ஸமயங்களில் **தாமஸமாய்ப் பத்திரிகை கிடைக்கிறதென்று மனவருத்தத்தைக் கொள்ளாமல்** எப்போதும் இந்தப் **“பிரஜாநுகூல”**னுக்கு முன் பணம் செலுத்தி இதையபிமானித்து வருவது ஸர்வோத்கிருஷ்டமான நற்கருமமாம். பத்திராதிபரின் பல தொல்லைகளால் டிசம்பர்-ஜனவரி மாதங்கள் சேர்ந்து பிரசுரமாயிருக்கின்றது.

**எப்போதும்** கஷ்டப்படுவோரின் நிலைமையில் தன்னை வைத்துப் பார்ப்பதுதான் சிறந்த காரியம். அதனால் தான் செய்யவேண்டிய கடமை இன்னதென்று தெரியும். எவ்வளவு உயர்ந்த நிலைமையை யுடையவராயினும் தம் மனச்சாக்ஷிக்கு விரோதமாக நடந்தால் மகத்தாகிய ஆபத்துக்கு ஆளாவார்கள். மனசாக்ஷிக்கு விரோதம் தேடுவோருக்குப் **பெரிய மனிதர்கள்** என்று பெயர். அவர்களின் அக்கிரமங்கள் எதுவும் வெளிவராது. வெளிக்குக் கொண்டுவர முயன்றாலோ அது அவதூறு கேஸாகி விடும்.

# இலக்கண ஞானம்.

---

பாஷை பேசவும் எழுதவுமாம். சிற்சில பாஷைகள் எழுதப்படாமலிருக்கின்றன. குழுவர், தோடர், வேட்டுவர் முதலியவருக்குப் பேசும் பாஷைகள் உண்டு. அவைகள் எழுத்தால் எண்பிக்கப்படவில்லை. பட்டுநூல்காரராகிய சௌராஷ்டிரர்களுக்குப் பேசும் பாஷை மாத்திரம் இருந்தது. 1870-ம் ௵ அதற்கு எழுத்துக்கிரமம் ஏற்படுத்தப்பட்டது. சமஸ்கிருதம், கிரேக்கு, லத்தின் முதலிய பாஷைகள் முன்காலத்தில் எழுதிப் பேசப்பட்டிருந்தும் இப்போது அவற்றைப் பேசுவாரில்லாததால் எழுதப்பட்டதாய் மாத்திரம் இருக்கிறது. ஒரு பாஷையை வழுவறப்பேசவும் எழுதவும் தக்க விதிகளை, விதிவகைகளை விஸ்தரித்துக்காட்டும் நூலுக்கு **இலக்கணம்** என்றுபேர். இலக்கணம் என்பது சமஸ்கிருதத்திலுள்ள இலக்ஷணம் என்னும் பதத்தின் திரிபு. இலக்ஷணம் என்றால் அழகு; கிரமமாய் இருக்கவேண்டியவிதம் என இரண்டு அர்த்தங்களைத் தரும். பாஷையை எவ்விதமாய்ப் பேசுவது, எவ்விதமாய் எழுதுவது, அதுவும் அழகும் அலங்காரமுமாய் எப்படிப் பேசுவது—எழுதுவது என்பதை விளக்கிக்காட்டும் சாஸ்திரத்துக்கு இலக்கணம் என்பர். வீடுகட்டும் விதத்தைத் தெரிவிக்கும் நூலுக்கு **மனையிலக்கணம்** என்றும், நெசவுத்தொழிலின் வகையை விவரிக்கும் புஸ்தகத்தை **நேசவிலக்கணம்** என்றும், “**இலக்கணம்**” ஒரு பொதுவார்த்தையாயிருந்தாலும் பாஷை நடையைப் பாகுபடுத்திப் பேசும் நூலுக்கு “**இலக்கணம்**” என்றும் சிறப்பாய் வழங்குகிறது. தமிழ்பாஷையை நன்றாய்த் தெரிந்துகொள்ள முதல் முதல் எழுத்துகளையும், பின் கிரமமாய் வார்த்தை, வாக்கியம், பாட்டு, அலங்காரம் முதலியவற்றையும் கற்கவேண்டும். இக்கால இயற்கைப்படி தமிழ் இலக்கணம் எட்டுவகையாக விரித்துரைக்கப்படும்.

1. எழுத்தியல்:—எழுத்துகளைப் பற்றியது.
2. **சொல்லியல்:**—வார்த்தைகளைப் பற்றியது.
3. **தொடர்பியல்:**—வசனரூபமாய் எழுதுவதற்கான விதிகள் அடங்கியது.
4. **புணரியல்:**—வார்த்தைகள் அசைகள் தம்முள் ஒன்றோடொன்று பொருந்தும்போது அடையும் மாறுதல்களை விளக்கியது
5. **பதவியல்:**—பதங்களின் மூலம், வகைமுதலியவற்றையும், பாஷையின் மரபான (Idiom) பதங்கள் இவை என்பதையும் விளக்கியது.

6. யாப்பியல்:—பாட்டுகளைப்பற்றிய இலக்கணம்.
7. அணியியல்:—அலங்காரங்களை விஸ்தரிப்பது.
8. பொருளியல்:—எழுத்துகளாலாகிய வார்த்தைகளின் பொருட்களைப் பற்றியது; அல்லது, பாஷையின் இலக்கணத்துக்குள் அடங்காத அந்நிய காரியங்களைப்பற்றியது என்றும் கூறலாம்.

நமது முன்னோர்கள் தமிழைப் பேசினார்கள். வாக்கிய சொரூபமாகப் புஸ்தகங்களையும் கடிதங்களையும் எழுதுவது அவர்கள் வழக்கமல்ல; பாட்டாய் எழுதுவது அவர்களுக்கு மகா பிரியம். வசனம் எழுதினால் மதிப்பில்லை; இதனால் முன்னோர்கள் எழுதியவையெல்லாம் (வைத்தியம், ஜோசியம், இலக்கணம், ஸ்தலசரித்திரம், கடிதங்கள் யாவும்) பாட்டாகவே இருந்தன. பாட்டெழுதத்தெரியாதவன் மூடன் என்னப்பட்டான். இதனால் முன் எழுதிய இலக்கண நூல்களில் வசன ரூபமாய் எழுதுவதற்கு விதி வகைகள் விஸ்தரிக்கப்படவில்லை. ஏறக்குறைய 180 வருஷங்களாக வசனரூபமான புஸ்தகங்கள் எழுதப்பட்டு வருகின்றன.

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் "இலக்கணம்."

காக்கை கரைவதும், கோழி கூவுவதும், குதிரை கனைப்பதும் ஒரு வகையான சப்தம்தான். ஆயினும் அர்த்தம் தரக்கூடிய வார்த்தைகளுண்டாவதற்குத் தகுந்த சப்தங்களே எழுத்தெனப்படும். இப்படியாகிய சப்தங்கள் எழுத்தின் ஒலிவடிவாம். அவைகளைப் பிறர் அறிய வரைவதற்கு அட்சரங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இவை எழுத்தின் வரிவடிவாம்.

ஆதியில் முப்புள்ளி ஃ கூஃ சூலாயுதவடிவாய் எழுதப்பட்டதால் ஆய்தம் என்றும், ஒன்றையும் சாராது வாராததால் தனிநிலை என்றும், மூன்று புள்ளியால் குறிக்கப்படுவதால் முப்புள்ளி யென்றும் பெயர்பெற்றது.

தாம் தாங்கள் என்பவை மரியாதைக்காக முன்னிற்பவரையும் படர்க்கையிடத்தாரையும் குறிக்கும். "நீங்கள் எனக்கு உத்திரவு தந்தீர்கள்"—என்பது அவ்வளவு மரியாதையான வாக்கியமன்று. அங்கு நீங்கள் என்பதற்குப் பதிலாக தாங்கள் என்று உபயோகித்தால் அது வணக்கத்தோடும் நிற்கும் வாக்கியமாகத் தோன்றும்.

தின்னில்தான் அர்த்தமில்லாமல் பெயரோடும் வினையோடும் சேர்ந்து பொருள் தருவது இடைச்சொல்.

சில பதங்கள் தாமே இரட்டை இரட்டையாய் வந்துதான் பொருள் தரும்; அவைகளில் ஒன்றை நீக்கினால் பொருளிராது; சுவையும் இராது; இவைகள் இரட்டைக்கிளவி என்னப்படும். உதாரணம்:—கலகலத்த மனிதன்; வானம் மடமட வென்கிறது; இச்சிறுவன் துறுதுறு வென்று உபத்திரவிக்கிறான்; பளபளப்பாயிருக்கிறது; திடுதிடுவென வந்தான். கலகலத்த பேச்சுக்காரன். முணுமுணுக்காதே. சளசளவென மழைபெய்தது; கிடுகிடு வென்று நடுங்கினேன்; படபடப்பானவர்கள் காரியசித்திபெறார்; முறுமுறுக்கிறான்; வாய்க்கு கரகரப்பாயிருக்கிறது; சிலுசிலுவெனக் குளிராட்டுது; சூடுசூடுவென முகங்கோணாதேயும்; புதுபுதுக்கையான விர்த்தாந்தம்; கோளகோளவெனத் தண்ணீர்விட்டுப், பிசையவேண்டும்; வெதுவெதுப்பாயிருக்கையில் சாப்பிடு; காலில் பாதசரமிட்டு கலீர் கலீர் என நடந்தாள்; மின்னல் பளீர்பளீரென *வீசுகிறது. இவைபோல்வன பிறவும் இரட்டைக்கிளவி எனப்படும்.



சும்மா:—இது சாதாரண வழக்கத்தில் வெகுவாய் வழங்கும். இது சுயமான தமிழ்ப்பதமன்று. இது கன்னட பாஷையினின்றும் பிறந்தது.

தொகைக்குறிப்பு:—எண்கள் மாத்திரம் சொல்லப்படும்போது அவ்வெண்களால் குறிக்கப்பட்ட வஸ்துக்களைக் குறிப்பால் அறியவேண்டும். துரோபதையோடு ஐவரும் வந்தனர் என்றால், இங்கு பஞ்சபாண்டவரைக் குறிக்கிறது. ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு என்று வந்தால், இங்கு ஆறும் நூறும் இளமை மூப்புகளைக் குறித்தன.

தமிழில் ஆதிகாலந்தொட்டு அமைதிபெற்றதும், பெரியோர் இயற்றிய நூல்களிலும் சாதாரணவழக்கத்திலும் வழுவல்லவென்று உபயோகிக்கப்பட்டுவரும் மொழிகளும், தொடர்களும் உண்டு. இவைகளில் சில இலக்கண விதி கடந்தவைபோல் தோற்றினும் வழுவல்ல. இவை மரபு எனப்படும். உதாரணமாக குட்டி, குஞ்சு, ஆனா, ஆனி, போன்றவைகளாகும்.

பழமையோர் எழுதிய கொடும்புணர்ச்சிக்கு உதாரணம். "அன்புடைமை யஃதாவ தவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரு முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாத லதிகார முறைமையு மிதனானே விளங்கு மில்லற மினிது நடத்தலும் பிறவுயிர்கண்மே லருள் பிறத்தலு மன்பின் பயனாத லினிது வேண்டப்பட்டது. (பரிமேலழகர் குறளுரை.)

இப்போது எழுதும் விதம்:—அன்புடைமை, அதாவது, அவ்வாழ்க்கைத் துணையும், புதல்வரும் முதலிய தொடர்பு உடையார்கண் காதல் உடையன் ஆகுதல். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும், பிறஉயிர்கள்மேல் அருள்பிறத்தலும் அன்பின்பயன் ஆதலின், இதுவேண்டப்பட்டது.

பொருள் விளங்கத்தக்கதாக அசையறுத்து புணர்ச்சி யேற்றாமல் எழுதுவது நலம்.

வெள்ளை வாக்கியம்:—நாளை ராஜா ஊர் சுற்றிவருகிறார் என்று சொல்லுகிறார்கள்; தெருக்களெல்லாம் அலங்காரமாயிருக்கும். யானை குதிரைகள் முன்னே வரும். நல்ல நல்ல வண்டிகளும்கூட வரலாம். ராஜாவுடைய போர்

வீரர் அலங்காரமாய் உடுத்திக்கொண்டு கூடவருவார்கள். ராஜாவுக்கு வெண் சாமரை வீசுவார்கள். வழியில் ஜனங்கள் குறுக்கிடாதபடிக்கு, போலீஸ்காரர் ஒழுங்குசெய்வார்கள். உத்தியோகஸ்தரெல்லாம் ராஜாவுடைய வண்டிக்குப் பின்னாக வண்டிகளில் ஏறிவருவார்கள். பிள்ளைகளே! நான் உங்களைக் கூட்டிக்கொண்டு போய் அவ்வேடிக்கைகளைக் காட்டுகிறேன்.

**மூடுத வாக்கியம்:**—நாளை இப்பட்டணத்தரசன் ரத கஜ துரக பதாதி சேனைகளோடு உத்தியோகஸ்தர் கூட்டங்கள் திவ்யாபரணாலங்கிருதர்களாய் வண்டிகளிலேறிப் பின்செல்ல, இராஜனுக்கு வெற்றிக்குடைபிடிக்க, வெண் சாமரைவீச, வீதிகள்தோறும் போலீஸார் நின்று ஜனக்கூட்டங்கள் வழி மறிக்காது பிரயத்தனம் செய்துகொண்டிருக்கப் பலவித தழை குழை பூத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தெருக்களூடே பவனிபோகிறானெனக் கேள்வியுற்றேனாதலால், பிள்ளைகளே! நீங்களும் அதைக்கண்டு களிகூர நான் உங்களைக் கூட்டிக்கொண்டுபோக உத்தேசித்திருக்கிறேன்.

**அறிவிற்சிறந்தோர் பல சொற்களாலும் அலங்காரமமைய ஒருபொரு ளைப்பற்றிப் பாடுவதே செய்யுள் எனப்படும்.**

**அலங்காரமாவது:**—“என் மனைவி நித்திய சண்டைக்காரி” என்பதற் குப் பதிலாய், “தேடியசொத்தெல்லாம் கொடுத்துவாங்கிய பஞ்சகல்யாணிக் குதிரை காலால் உதைத்ததினாலே எஜமானன் கட்டில் கிடையாய்க்கிடந்து, இன்றோ நாளையோ உயிர்பிரிவதென்றோ லோலமிட்டு அலறுவதுபோல், அன்புக்குடைய இன்ப சுகிர்தமென ஆய்ந்துதேடி மணமுடித்த என்மனைக் கிழத்தி எனக்கு யமதேவதையாயினளே” என்றுவசனிப்பது அலங்காரமாம்.

ஒன்றைப்புலப்படுத்தல், காலவியற்கையாலோ, இடவியற்கையாலோ, காரணகாரிய வியற்கையாலோ, இன்னும் மற்றெவ்விதத்தினாலோ, அதனோடு சம்பந்தப்பட்டதைக் குறிப்பிப்பதாலாகும். இதற்கு **சங்கேதம்** எனப்பேர்.

உதாரணம்:—

1. தொட்டிலைக்காணப் பிள்ளை ஞாபகம் வரும்.
   (இது காரிய சங்கேதம்.)
2. கம்பரை நினைக்க இராமாயணம் ஞாபகமாகும்.
   (இது கருத்தா சங்கேதம்.)
3. கோர்ட்டாரைப் பார்க்க நியாயாதிபதி ஞாபகம்வரும்.
   (இது இட சங்கேதம்.)
4. கார்த்திகைமாதம் மழை இருட்டு முதலியவற்றை ஞாபகத்தில் விளைவிக்கும்.
   (இது கால சங்கேதம்.)
5. சாவு வியாதியை நினைப்பூட்டும்.
   (இது கால சங்கேதம்.)



**உண்மைக்கு மிஞ்சி வர்ணித்தல்:**— (உதாரணம்) “கோபத்தினால் கண் சிவந்தது” என்பதற்கு “நேத்திரங்களினின்று அக்கினி ஜொலித்தெழும் பியது” எனல்.

உண்மையை விளங்கச்செய்ய, அதற்கு நேர் விரோதமானவற்றை இல்லையெனச் சாதித்தல்; எப்படியெனில் அதற்கு உதாரணம்:—

“தம்பி வந்தான்” என்பதற்குப் பதிலாய்த் தம்பி வாராதிருப்பானென்று கனவிலும் நினைக்கவேண்டாம் எனல்.

**பரியாயவணி:**—கருதிய பொருளை நேரே சொல்லாமல், அது புலப் படும்படியாக அதை யறியத்தக்க வேறொன்றை எடுத்துக்கூறல்.

**உதாரணம்:**—“தலை வலிக்கிறது” என்று ஒருவர் சொல்ல, “ஆம் வீடு வெறுமையாயிருப்பதால் தான்” என்றார் அவர் சிநேகர். (இதில் நீர் பெண் சாதி பிள்ளைகளில்லாமல் ஒண்டியாயிருப்பதால் இத்தலைவலி நேர்ந்ததென நேரே சொல்லாமல், வீடு வெறுமையாயிருக்கிறதால் இத்தலைவலி நேர்ந்த தெனக் குறிப்பாலாகிய கருத்து உணர்த்தப்பட்டது.)

**விசேஷவணி:**—ஒரு பொருளின் குறைவைச்சொல்லி அதன்மூலமாய் அதன் மகத்துவத்தைச் சிறப்பித்து வர்ணிப்பது.

உதாரணம்:—காமனுக்கு உருவமில்லை. இரதகஜதுரகபதாதியாகிய சது ரங்கசேனை யொன்றுமில்லை; ஆயினும் அவனால் ஜெயிக்கப்படாத மானிட ஜென்மம் இப்பூவுலகில் உண்டோ?

**நூல்கள்:**—முதல்நூல், வழிநூல், சார்புநூல் என மூன்றுவகைப்படும்.

**முதல்நூல்:**—தெய்வந்தானே அருளியதும், பெரியோர் தெய்வ அருளா லும், வரத்தாலும் மனுஷர்க்குப் பிரயோஜனமாக எழுதியதுமாகும். உதார ணம். வியாசர் வகுத்தவேதம், அகஸ்தியர் அருளிய பேரகத்தியம்முதலியன.

**வழிநூல்:**—முதனூலை யநுஸரித்து, காலவியல்புக்குத் தக்கதாய்ப் புதி தாய்ச் சேர்க்கத்தக்கவையைச் சேர்த்தலும், தள்ளத்தக்கவையைத் தள்ளலு மாகிய வேறுபாடுகள் விளங்கக்கூறி எழுதுவது. உதாரணம்:—பேரகத்தி யத்தை யநுஸரித்து எழுதிய தொல்காப்பியம், இலக்கண விளக்கம் முதலியன.

**சார்புநூல்:**—முதனூல் வழிநூல்களிலுள்ள ஒரு விஷயத்தை விஸ்தரிக் கப்புகுந்து, அதை விளக்கத்தக்க பிற விஷயங்களை எடுத்துக் கூறுவது. உதாரணம்:—நன்னூல், காரிகை முதலியன. ஒரு நூல் பிரயோஜனமின்றி எழுதப்படாது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் மானிடர்க் குக் கைகூடிவர எழுதவேண்டியது. “அறம் பொருள் இன்பம் வீடடை தலைநூற்பயனே.”

| தமிழ் | சமஸ்கிருதத்தினின்று வந்த தமிழ். |
|---|---|
| வீடு | மோட்சம், முக்தி |
| எழுத்து | அட்சரம் |
| கிடைத்தது | லபித்தது, பிராப்தியாயிற்று |
| சுவடி | புஸ்தகம் |
| கொடி | துவஜம் |
| ஒலி | சப்தம், துவனி |
| தளம் போடுகிறது | மணியாசம் செய்கிறது |
| தந்தை, தகப்பன் அப்பன், அய்யா ஆஞா | பிதா |
| தாய், அன்னை, அம்மா | மாதா |
| அண்ணன், தம்பி | சகோதரன் ஜேஷ்டன் அநுஜன் |
| அக்கை, அக்காள், தங்கை | சகோதரி ஜேஷ்டை அனுஜை |
| பிள்ளை, குழந்தை | சிசு |

எந்த ஜாதியாருடைய பூர்வீகத்தைக் கேட்கினும், அவர்கள் தாங்கள் தெய்வத்தினின்று நேரே பிறந்தவர்கள் என்பார்கள். தமக்குள் வழங்கிவரும் பாஷைகளும் தெய்வத்தால் தமக்கு அருளப்பட்டனவாகச் சொல்லுவார்கள். இதுபோலவே தமிழும் சிவபிரான் கருணையால் சுப்பிரமணியர் அகஸ்தியமா முனிவருக்கு அருளிச்செய்தது என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

அகஸ்த்தியரும் தொல்காப்பியரும்:—அகஸ்தியர் தமது மனைவியைத் தமது சீடராகிய தொல்காப்பியரிடத்தில் ஒப்புவித்து, அம்மாதரசியை யழைத்துக்கொண்டு தம்மிடம் பொதியமாமலைக்கு வர ஆக்கியாபித்தனர். இதுவுமன்றி அகஸ்தியர் தம் சிஷன் தொல்காப்பியனை நோக்கி, "நீ எக்காலத்தும் அவளைத் தொடவேகூடாது. நீ அவளுக்கு மூன்றடி தூரத்தில் நடக்கவேண்டும் என்று திட்டமாய் விதித்தாராம். தொல்காப்பியரும் அவ்விதமே அப்பெண்மணியை அழைத்துவருகையில் காவிரியாறு வெள்ளம் புறண்டு இரு கரையும் கடந்து சென்றதால், தொல்காப்பியர், அகஸ்தியரின் ஆணைமீறி, அகஸ்தியர் பத்தினியைக் கைத்தாங்கலாய்க் காவிரியாறு கடத்திப் பொதியமலைவந்து ஆசானை வணங்கி அப்பெண்மணியை அவரிடம் ஒப்புவித்தார். தொல்காப்பியன் தன் மனைவியைத் தீண்டினானெனக் கேள்வியுற்று, அகஸ்தியர், "அடா தொல்காப்பியா, நீ என் சொல் தவறியதால் சுவர்க்கஞ்சேராய்" எனச்சபித்தாராம். தொல்காப்பியன் கோபாவேசமாகி, அகஸ்தியரை நோக்கி, "ஓய் அகஸ்தியமுனியே! நீரும் சுவர்க்கம் சேரீர், நீர் எழுதிய நூல்களெல்லாம் உலகில் வழங்காது அழிந்துபோவதாக" எனச் சபித்தாராம். அப்புறம் தொல்காப்பியர், சமஸ்கிருதத்திலுள்ள "ஐந்திரம்" என்னும் இலக்கணரீதிப்படி தொல்காப்பியம் என ஓர் இலக்கணநூல் தமிழ்பாஷைக்கெழுதிப் பிரசாஞ்செய்து ஸ்தாபித்தனராம். இதனால்தான் அகஸ்தியருடைய முதனூல்கள் முன்னுக்கு வாராமல் மங்கி மறைந்துபோயின என்பர்.



தமிழ் இலக்கணத்தில் ஆதியானநூல், பேரகத்தியம்; அதன் சுருக்கம் சிற்றகத்தியம். இதன்பின் விசேஷமானது தொல்காப்பியம். இத்தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் அநுஸரித்து மற்ற இலக்கணங்கள் பின் எழுதப்பட்டன.

இடக்காடக்கல், மங்கலம் என்பவற்றிற்குள்ள பேதம்:—மரியாதை தப்பியதும், சான்றோர்சங்கத்து எடுத்துரைக்கத் தகாததுமான அசங்கியமான மொழிகளையொழித்து, மரியாதையான நல்ல வார்த்தைகளைக்கொண்டு குறிப்பாய்ப் பொருள்கொள்ளும்படி உபயோகித்தலுக்கு இடக்காடக்கலாம். இனி மங்கலமானது இப்படியல்லாமல் சகுனப்பிழையான வார்த்தைகளை யொழித்துச் சுபமான மொழிகளால் கருத்தை விளக்குவதாம்.

உதாரணம்:—'பீ' என்பது அசங்கியமான வார்த்தை; இதற்குப்பதிலாய் "பவ்வீ" என்று சொல்வது இடக்காடக்கல்.

"செத்தான்" என்பது அசங்கியமானபதம் அல்லவாயினும், அசுபமானதும், சகுனப்பிழையானது மாகையால், அதற்குப் பதிலாய் தேகவியோகமானான்" "பரமபதம் அடைந்தான்" என உரைப்பது மங்கலம் ஆகும்.

ஆகுபெயர், அன்மொழித்தொகை, என்பவற்றிற்குள்ள பேதம்:—ஒரு வார்த்தைக்கு ஆதியர்த்தம் ஒன்றே. வரவர அதற்கு வேறு அர்த்தங்களும் வருவது இயற்கை. பின் வந்த அர்த்தங்கள் இயைபுபற்றி ஆதியர்த்தத்தினின்றும் தோன்றியவைகள்.

உதாரணம்:—"கார்" என்பதற்குக் கருமை யென்றது ஆதியர்த்தம். மழைஜலத்தால் கருமையாய்த் தோன்றுவதால், சூல்கொண்ட மேகத்தைக் "கார்" என்றது இரண்டாம் அர்த்தம். இப்படி மேகம் கறுத்து மழை பெய்வது வருஷத்தில் சில விசேஷமாதங்களில் மாத்திரமாதலால், அக்காலத்தைக் "கார்" என்றது மூன்றாம் அர்த்தம். நெல் பல காலத்தும் விளையத்தக்கதாதலால், அக்காலத்துவிளையும் நெல்லைக் "கார்" என்றது நான்காம் அர்த்தம். இப்படி ஆதியர்த்தத்தினின்று பிறந்த மற்ற அர்த்தங்களை ஒரு வார்த்தை குறிக்கும்போது, அவை முன்னோர் வழக்கத்துக்கு இசைந்தவையாயும், உலகம் ஒப்பியவையாயுமிருந்தால், அது ஆகுபெயர் எனப்படும். அன்மொழித்தொகையோ அப்படியன்று. பொற்றேடி என்றபோது உள்ள அர்த்தம் பொன்னால்செய்யப்பட்ட வளையல் என்பது. இதற்கு அப்படிப்பட்ட வளையல்களை யணிந்தவள் என்று அர்த்தம் சொல்லும்போது, "அணிந்தவள்" என்று அல்லாதமொழியைப் புதிதாய் வருவித்து அர்த்தம் முடிக்கவேண்டியதாகின்றது. ஆகவே வார்த்தையின் இயைபுபற்றி வேறர்த்தத்தை யுணர்த்துவது ஆகுபெயரும், வார்த்தையில் நேரிட்டப்படாத இன்னொருமொழியை வருவிக்கப் பொருள் முடியத்தக்கது அன்மொழித்தொகையுமாம்.

☞ இவைகளை வாசித்தபின்பு இலக்கணநூல்களைக் கற்கப்புகின் அதில் சுவைதோன்றி மேன்மேலும் பயில்தற்கு அவா எழுதல்கூடும்.

# ஒரு உத்தியோக கனவானின் சகுனங்கள்.

(பாப்பையபந்துலு அவர்களும், காமையசாஸ்திரி அவர்களும் பிரவேசிக்கிறார்கள்.)

**சாஸ்திரிகள்:**—பாப்பைய பந்துலு அவர்களே, உங்களுக்கு பெரிய ஆபத்து சம்பவித்தது. நூறு ரூபாய் வேலை நிஷ்காரணமாய்ப் போயிற்று. வெள்ளைக்காரர்கள் சுபாவம் தெரிந்த நீங்கள் இன்னம் இரண்டு நாள் முன்னமேயே புறப்படாமல் போனீர்களே அது என்ன?

**பந்துலு:**—பெண்டுகளை அழைத்துக்கொண்டு நல்லது கெட்டது விசாரிக்காமல் தூரப்பிரயாணம் என்னமாய்ச் செய்கிறதையா? அமாவாசைக்கு முந்தியே புறப்படலாமென்றால் வழியில் அமாவாசை வந்தால் நல்ல தல்லவென்று பெரியவர்கள் சொன்னார்கள்.

**சாஸ்திரி:**—அமாவாசை கழிந்த பிரதமை தினம் புறப்பட்டிருந்தாலே இரண்டு நாள் முந்தி வந்திருப்பீர்களே.

**பந்துலு:**—அமாவாசைகழிந்த பிரதமை சுத்தமாய்ப் பிரயாணத்துக்கு உதவாது. துதியை தினம் புறப்படலாமென்றால் அன்றைக்கு வெள்ளிக்கிழமை வந்தது. எப்படியாவது முரட்டுத்தனமாய்ப் புறப்படலாமென்றால் துஸாக் கென்று உள்ளே யாரோ தும்மினார்கள். அப்பேர்க்கொத்த அபசகுனமான பிறகு எதுவென்ன வானாலும் அன்றைக்குப் பிரயாணம் செய்யக்கூடாதென்று நிறுத்திவிட்டேன்.

**சாஸ்திரி:**—போகட்டும், திருதியை தினம் காலமேயேனும் புறப்படவில்லையே.

**பந்துலு:**—எல்லாமறிந்த நீங்கள் என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்; குழந்தைகளையழைத்துக்கொண்டு சனிக்கிழமை உதயம் துர்முகூர்த்தத்தில் என்னமாய்ப் புறப்படுகிறது? அன்றைக்கு மத்தியானம் தியாஜ்ஜியம்வந்தது. தியாஜ்ஜியம் கழிந்தபிறகு ராத்திரி பிரயாணத்துக்காக வண்டிக்கு சொல்லச் சொல்லி செய்தியனுப்பப்போகையில் ஒரு கோட்டான் கூப்பிட்டது. அதற்காகப் பயணம் நிறுத்தினேன். அன்றைக்கு மறுநாள் சதுர்த்தி; பிரயாணத்துக்கடுத்தது அல்லவென்பது நீங்களே யறிந்ததல்லவா?

**சாஸ்திரி:**—தாங்கள் பஞ்சமி தினம் புறப்பட்டீர்கள் போலிருக்கிறது. அப்படியானாலும் நீங்கள் மூன்று தினங்களுக்கு முந்தியே இங்கு வந்திருக்க வேண்டுமே.

**பந்துலு:**—அன்றைய தினமும் புறப்படவில்லை. அன்றையதினம் காலையில் நட்சத்திரம் சரியாயில்லை. அதையும் தவிர தியாஜ்ஜியம் கூட வந்தது. மத்தியானம் புறப்படுவோமென்றால் போஜனம் செய்து உலாவிக்கொண்டிருக்கையில் கரும்பல்லி விழுந்ததில் ஜோசியரை வரவழைக்க ஸ்நா



னம் செய்து தீபம் வைத்துக்கொண்டு சாந்தி ஹோமம் செய்துகொள்ள விளக்கு வைக்கும் நேரமாய்விட்டது. ராத்திரி போஜனஞ்செய்து புறப்படுவோமென்றால் பெரியவர்கள் சந்திரனுக்கு எதிரே போகக்கூடாதென்றார்கள்.

**சாஸ்திரி:**—மறுநாள் ஷஷ்டியாகையால் அன்றைக்குப் புறப்படவில்லையென்றெண்ணுகிறேன்.

**பந்துலு:**—ஒரு ஷஷ்டி மாத்திரமாயிருந்தால் எப்படியாவது புறப்பட்டுவிடுவேன். அன்றையதினம் சனியன் பிடித்ததுபோல செவ்வாய்க்கிழமையொன்று கூட வந்துசேர்ந்தது. இதுவும் போதாதென்று அன்றைக்கு ஒரு வெறும் பாழும் நட்சத்திரம்.

**சாஸ்திரி:**— இப்போது ஸப்தமியன்றைக்குப் புறப்பட்டீர்கள். மாடு செவ்வையாய் நடந்தால் நேற்றையதினம் போஜனத்துக்கே இவ்விடம் வந்துசேர்ந்தீர்கள்.

**பந்துலு:**—ஸப்தமி புதவாரம் பிரயாணத்துக்கு வெகு அனுகூலமான தினம். இருந்தாலும் அன்றையதினம் உதயத்தில் புறப்பட சந்தர்ப்பப்படாமல் போய்விட்டது. அப்பொழுது பரஸ்தானம் மாத்திரம் செய்தோம். அன்றையதினம் எங்கள் சின்னப்பையனுக்குப் பிறந்த நாள். அன்றையதினம் பண்டிகையாகக் கொண்டாடி போஜனம் செய்து புறப்பட்டாலொழிய முடியாதென்று பெண்டுகள் ஒரே பிடியாய்ப் பிடித்தார்கள். அன்றைய தினம் காலமே புறப்பட்டிருந்தால் திருடர் ஆலமரத்தை மத்தியானமே தாண்டியிருக்கலாம். போஜனம் செய்து புறப்படுவோமென்று வண்டிகள் கட்டி ஏறப்போகும்போது ஒரு கைம்பெண்டாட்டி எதிரே வந்தாள். திரும்ப உள்ளே போய் அரைமணிநேரம் இருந்தோம். அப்பொழுது புறப்பட்டிருந்தாலும் திருடரிடத்தை விளக்கு வைக்குமுன்னமேயே தாண்டிவிடுவோம். திரும்ப வாசலண்டை வரும்பொழுது ஒற்றைப்பிராமணன் எதிரேவந்தான். அதனால் உள்ளேபோய்க் கொஞ்ச நேரமிருந்தோம். இனிமேல் இப்படி செய்து கொண்டிருந்தால் வேலை நடக்காதென்று வீதியில் ஒருவரும் செல்லாதபடி பந்தோபஸ்து செய்து அடுத்தவீட்டிலிருந்து ஒருசுமங்கலியை வரும்படி செய்வித்து சட்டென்று வண்டியிலேறிப் புறப்பட்டோம். என்ன நல்ல சகுனம் பார்த்துப் புறப்பட்டாலும் அந்த கைம்பெண்டாட்டி எதிரே வந்த வேளை என்ன வேளையோ தெரியவில்லை. எங்களுக்கு அனுபவம் ஆய்விட்டது. ராத்திரி பத்துமணிக்குத் திருடராலண்டை நாங்கள் நடுங்கிக்கொண்டே வந்தோம். நாங்கள் பயந்துகொண்டிருப்பதை என்னமாகத்தானறிந்தார்களோ என்னமோ; திருடர்கள் சமயத்தில் வந்து எங்கள் நகைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் நல்ல சகுனம் பார்த்துக்கொண்டு புறப்பட்டதால் பிராணனுக்கு மாத்திரம் அபாயமின்றிப் பிழைத்து வந்துசேர்ந்தோம்.

சாஸ்திரி:—பீடைபிடித்த உடைமைகள். உடைமைகளுக்காகத்தாம் ஒன்றும் விசாரப்படத்தேவையில்லை. பிராணன் கெட்டியாயிருந்தால், உடைமைகளை மற்றொரு நாள் சம்பாதித்துக்கொள்ளலாம். லீவுநாள் அதிக்கிரமித்து வந்தீர்களென்று துரை அக்கிரமமாக வேலையை எடுத்துவிட்டதால் எக்காலமும் நடக்கும் ஜீவனத்துக்குப் பங்கம் வந்ததே யென்று எனக்கு வெகு விசாரமாயிருக்கிறது. இதையெல்லாம் அனுபவிக்கிறவர்கள் நாங்களேதவிர தங்களுக்கென்ன? தாங்கள் மஹாராஜாக்களே; இதுவரையில் சேர்த்துவைத்ததைக்கொண்டு ஜீவனம் செய்வீர்கள்.

பந்துலு:—எனக்கு ஏழரைநாட்டுச் சனி இருக்கிறதென்று ஜோஸியர்கள் சொல்லிக்கொண்டே வந்தார்கள். முந்தின நாள் என்னுடைய ஜாதகத்தைக் காட்டின பொழுது எங்களூர் ஜோசியன் உங்களுக்கு ஒருவருஷத்துக்குள் தன நஷ்டம் வருகிறதென்று சொன்னான். அதெல்லாம் ருஜுவாகிக்கொண்டு வருகிறது. இனிமேல் நடக்கவேண்டிய சங்கதியை ஆலோசிக்கவேண்டும். அதோ எங்கள் பையன் ஸ்கூலிலிருந்து வருகிறான். சகுனம் இகுனம் லக்ஷியம் செய்யாமல் புறப்படும்படி என்னோடு கெட்ட சண்டை போட்டான்.

(அவர் குமாரன் சுப்பாராவு பிரவேசிக்கிறன்.)

சாஸ்திரி:—குழந்தை! இந்த சங்கதிகளெல்லாம் அவனுக்கென்ன தெரியும்? அதிலும் இந்த ஸ்கூல்களில் படிக்கிறபேருக்கு சுத்தம், ஸ்வாமி, பூதம், நாள் நக்ஷத்திரம் ஒன்றுமே தேவையில்லை. அவர்களுக்கு வயது வந்து ஸம்ஸாரபாரம் மேலே விழுந்தால் அப்பொழுது எல்லாம் தெரியும்.

ஸுப்பா:—இனி எங்களுக்கு எவ்வளவு ஸம்ஸார பாரங்கள் மேலேவிழுந்தாலும் இப்பொழுது தெரிந்ததற்கு அதிகமாய்த் தெரியப்போவதில்லை.

பந்துலு:—சிறுவன்; அவனுடன் என்ன? இனிமேல் நடக்கவேண்டியதென்னவோ அதைச் செவ்வையாய் ஆலோசித்துச் சொல்லுங்கள்.

சாஸ்திரி:—செய்யவேண்டியதென்ன இருக்கிறது? சனி போதாதாகையால் நீங்கள் நவக்கிரக ஜபம் வைத்து பிராமணர்களைக்கொண்டு சாந்திசெய்துகொள்ளவேண்டும். அந்த நிமித்தம் தசவித தானங்கள் ஹோமங்கள் செய்விக்கவேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு உங்கள் சக்திக்குத் தக்கபடி இருநூறு பேருக்கோ முந்நூறு பேருக்கோ பிராம்மண ஸந்தர்ப்பணம்செய்து உங்களுக்குத் தோன்றிய அளவு சம்பாவனை செய்யவேண்டும்.

ஸுப்பா:—அப்பா! நீங்கள் இதைப்போன்ற பாழுஞ்செலவு இனி செய்யாதீர்கள்! பிராம்மணர்கள் எப்படியாவது உங்களுக்குப் பத்துபணம் செலவு வைத்து திட்டமாய் போஜனம் தட்சிணைகளை வாங்கிக்கொண்டு எவ்விதமாவது தாங்கள் லாபமடையப் பார்க்கிறார்கள். என் பேச்சை சற்று கேட்டு நீங்கள் ஜபங்கள் தபங்களை விட்டு துரை அனுக்கிரகம் சம்பாதிக்கிறதற்கு வழி தேடுங்கள். நீங்கள் லஞ்சம் வாங்கி பிராம்மணர்களுக்குச் சந்தர்ப்பணைகள் சமாராதனைகள் செய்தீர்களென்று கேள்விப்பட்டதால் துரை இந்த மாதிரி செய்திருக்கிறானே யொழிய இல்லாவிட்டால் இப்படிச் செய்கிறவனல்ல. இங்கே துரைக்கு அனுக்கிரகம் வராவிட்டால் பிராம்மணர்களுக்குச் செய்யும் செலவைக்கொண்டு சென்னப்பட்டணம் போய் அப்பீல் செய்தால் நமக்குத் தப்பாமல் காரியம் ஆகும். தாங்கள் நாள் நக்ஷத்திரம் இந்த சாஸ்திரமெல்லாம் விட்டு நான் சொன்னபடி துதியை தினமே புறப்பட்டிருந்தால் இந்தச் சிக்கெல்லா மில்லாமல் ராஜாவைப்போல நீங்கள் உங்கள் வேலையிலிருக்கலாம்.



பந்துலு:—என்னமோ! நடந்துபோனதைப் பற்றி இனி யோசிப்பதில் பிரயோஜனமில்லை. மேல்சங்கதி பார்க்கவேண்டும். நாம் ஜோசியத்தை முழுவதும் தள்ளிவிடக்கூடாது. நம்முடைய பணம் கொஞ்சம் பிராமணர்கள் வயிற்றில் விழுந்தாலல்லது நாம் என்ன அப்பீல் செய்தாலும் பிரயோஜனப்படாது. நவக்கிரக ஜபங்கள் இந்த ஒரு காரியத்துக்கேயன்றி அநேக விதங்களில் நல்லது. இந்த வேளை முதற்கொண்டு முதலில் சூரியநமஸ்காரங்கள் செய்விப்போம்.

சாஸ்திரி:—பாப்பைய பந்துலு அவர்கள் கேவலம் பிரம்மணியர். அவர்களுக்குத் தெரியாத தொன்றுமில்லை! பிராம்மணர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் பகவான் அவ்வளவுக்கு சந்தோஷிக்கிறார், பகவான் சந்தோஷித்தால் எல்லாக் காரியங்களும் கைகூடுகின்றன. குழந்தாய்! உனக்கு இன்னும் நல்லது கெட்டது தெரியாது. சும்மாயிரு.

ஸுப்பா:—தங்களுக்கெல்லாம் தெரியும். இதுவரையில் பிராமணர்களுக்கு வைத்துக்கொண்டு வந்த பலம் இன்றைக்கிவ்விதமாய்த் தெரிந்தது. நான் சொன்னால் கேட்பீர்களா? உங்களுக்கு மனதுக்கு வருகிறபடி நடத்துங்கள் (என்று போய்விடுகிறான்.)

---

# கார்ப்படிகனின் வறுமை.

வெகு காலத்திற்குமுன் இப்பூமியின்கண் லக்ஷதத்தன் என்று ஒரு அரசன் அரசுபுரிந்து வந்தான். இவன் பெரும் பாக்கியம் படைத்தவன். அவனுக்குத் தன்னிடம் யாசிப்போருக்கு லக்ஷம் பொன்னுக்குக் குறைந்து கொடுப்பதே தெரியாது. யாருடனேனும் அவன் கொஞ்சநேரம் வார்த்தையாடினால் அவனுக்கு ஐந்து லக்ஷம் கொடுப்பான். யாரிடம் அவனுக்குக் கிருபை யுண்டாகுமோ அவனிடமிருந்து வறுமையை வேரோடுபிடுங்கி யெடுத்துவிடுவான். இதனாலே "லக்ஷதத்தன்" என்னும் அவனுடைய பெயர் பிரசித்தி யடைந்திருந்தது. அவ்வரசனுடைய மாளிகையின் வாசலில் கார்ப்படிகன் என்னும் ஒருவன் உட்

கார்ந்திருப்பான். அவனுக்கோ நீங்காதவறுமை. அவனுடைய ஆஸ்தியெல்லாம்
அவன் இடுப்பில் கட்டிக்கொண்டிருந்த ஒரு தோல்துண்டு மாத்திரமே.
அவன்தலையில் சடை விழுந்திருந்தது. அவன் வெயில் நாளிலும் சரி, மழை
குளிர் நாளிலும் சரி, அவ்வரண்மனை வாசலைவிட்டு நகர்வதில்லை. அரசன்
அக்கார்ப்படிகன் தன் அரண்மனை வாசலைக் காத்திருப்பதைப் பார்த்துக்
கொண்டே போவான். அக்கார்ப்படிகன் அவ்வரண்மனை வாசலில் காத்
திருந்து மகா சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். அரசன் தயாளுவா யிருந்
தும், கொடையாளியா யிருந்தும் அக்கார்ப்படிகனுக்கு யாதொன்றும்
கொடுக்கவில்லை.

ஒருநாள் அரசன் வேட்டையாடக் காட்டுக்குச்சென்றபொழுது கார்ப்
படிகன் அவன் பின் கையில் ஒரு தடியை யெடுத்துக்கொண்டு போனான்.
வனத்தில் ராஜா கையில் வில்லேந்தி வாகனத்தின் மேலுட்கார்ந்திருந்தான்;
அவனைச் சுற்றி அவன் சேனையு மிருந்தது. அரசன் அம்புமாரி பொழிந்து
புலி, காட்டுப்பன்றி, மான்முதலியவைகளைக் கொன்று கொண்டிருந்தான்.
அப்பொழுதும் கால்நடையிலிருந்த கார்ப்படிகன் அவ்வரசன் கண்ணுக்கு
முன்பாக, தனியாய்த் தன் தடிக்கம்பாலே பல காட்டுப்பன்றி, மான் முத
லியவைகளை அடித்தெறிந்தான். அரசன் இவ்வபூர்வ வீரியத்தைப்பார்த்து
ஆச்சரியமடைந்து "அடா இது என்ன அற்புதம்; இவன் என்ன பராக்கிரம
சாலி; எவ்வளவு வீரன்" என்று மனதில் மெச்சிக்கொண்டான். இப்படி
யிருந்தும் அரசன் அவனுக்கு யாதொன்றும் கொடுக்கவில்லை. அரசன் வேட்
டையாடிக் களைத்தபின், விடாயாற்றிக்கொள்ளத் தன் நகரமடைந்தான். அந்
தக் கார்ப்படிகன் முன்போலவே அவ்வரசன் மாளிகையின் தலைவாசலில் உட்
கார்ந்திருந்தான். பிறகு ஒருநாள் லக்ஷதத்த ராஜாவானவன் தன் சீமையின்
மேல் படையெடுத்து வந்திருந்த சத்துருக்களை எதிர்த்து முறியடிக்கச்சென்
றான். அவ்விடம் ஒரு பெரிய சண்டை நடந்தது. அவ் யுத்தத்தில் கார்ப்படி
கன் அரசன் பார்வையிலேயே, தன்னுடைய வலுவாகிய கருங்காலித்தடியால்
அனேகம் எதிரிகளை அடித்துக் கொன்று தன் சூரத்வத்தைக் காட்டினான்.
அரசன் தன் சத்துருக்களைத் தோற்கடித்துத் தன் நகருக்குத் திரும்பினான்.
ஆனால் அக்கார்ப்படிகன் பராக்கிரமத்தைப் பார்த்தும் அவனுக்கு யாதொன்
றும் கொடுக்கவில்லை. இப்படி அக்கார்ப்படிகன் வெகு கஷ்டமாய் ஐந்து
வருஷம் போக்கினான்.

ஆறுவது வருஷம் பிறந்த பிறகு ஒருநாள் அரசன் அவனைப் பார்க்கை
யில் மன்னனுக்கு அதிர்ஷ்ட வசத்தால் தயை உண்டாகி "என்னடா இவ்
வளவு காலமாய் இந்த மனுஷன் வருத்தப்பட்டிருக்கிறான்; நாமிவனுக்கு
ஒன்றும் கொடுக்கவில்லை; ஆகையால் இவனுக்குத் தெரியாதபடி இவ
னுக் கேதாவது கொடுத்துப் பார்ப்போம்; இந்த நிர்ப்பாக்கியனுடைய
பாவம் இன்னும் அற்றுப்போய்விட்டதோ இல்லையோ வென்பதையும்



லட்சுமி கடாக்ஷம் இவனிடத்தில் உண்டாயிருக்கிறதோ, அல்லது இன்னும்
இல்லையோ வென்பதையும் பார்த்துவிடலாம்" என்று ஆலோசித்தான்.

இப்படி ஆலோசித்து சுயேச்சையாய்த் தன்பொக்கிஷத்தில்நுழைந்து
ஒரு கொடியெலுமிச்சம் பழத்தை எடுத்து, அதை இரண்டாய்ப்பிளந்து, அதில்
ரத்தினங்களை நிரப்பி ஒரு பழம் போலச்செய்தான். பிறகு மன்னவன்
தன் ஆஸ்தான மண்டபத்துக்கு வெளியில் ராஜசபையைக் கூட்டி கொலு
விருந்தான். அதற்கு அந்நகர ஜனங்கள், சாமந்தர்கள், கப்பம்கட்டும் சிற்
றரசர்கள், அமைச்சர்கள் முதலிய யாவரும் வந்தார்கள். அவர்களுடன் கார்ப்
படிகனும் வந்தான். அப்பொழுது அரசன் பிரியமாய் "அடா கார்ப்படிகா,
இங்கேவா" வென்று கூப்பிட்டான். கார்ப்படிகன் அரசன் தன்னை யழைத்
ததைக் கேட்டு வெகு மகிழ்வுற்று அரசன் முன்போய் நின்றான். அரசன்
அவனை "அடா கார்ப்படிகா! நீயாக ஒருநல்ல சுலோகத்தை இயற்றிச்சொல்"
என்று கட்டளையிட்டான். அதை அங்கீகரித்து கார்ப்படிகன் அடியில்வரும்
பொருள் உள்ள ஒரு சுலோகத்தைச் சொன்னான்:—

நதிகள் யாவும், நிறைந்திருக்குங் கடலைப்போய் நிரப்புகின்றன. (வற
ண்டுகிடக்கும் குளங்கள் குட்டைகளை நிரப்புகிறதில்லை என்றபடி.) : அம்மா
திரியாகவே லட்சுமியானவள் லட்சுமீவானாயிருப்பவனுக்கு மேலும் மேலும்
கொடுக்கிறாள்.) நிர்ப்பாக்கியனாயிருப்பவன் கண்ணில்கூட படுவதில்லை.

ராஜா இந்த சுலோகத்தைக்கேட்டு அதைத் திருப்பித் திருப்பி சொல்
லச்சொல்லி சந்தோஷமடைந்து விலையுயர்ந்த ரத்தினங்கள் நிறைந்த அவ்
வெலுமிச்சம்பழத்தை அவனுக்குப் பரிசாகக்கொடுத்தான். அச்சமயத்தில்
அச்சபைக்கு வந்துள்ளோர் மர்ம மறியாததால் ஒருவரைப்பார்த்து ஒருவர் தங்
கள் மனதுக்கு வந்தபடி "அடா இந்தக் கார்ப்படிகன் என்ன நிர்ப்பாக்கியன்.
மகாராஜாவுக்கு யாரிடம் சந்தோஷமுண்டாகுமோ அவர்களின் தரித்திரத்தை
நாசஞ்செய்து விடுவாரே. இப்பொழுதோ இந்த ஏழைக் கார்ப்படிகனை
அழைத்து எல்லா ஜனங்களும் பார்க்கப் பிரியமாய் அவனுடன் பேசிக்கடைசி
யில் ஒரு எலுமிச்சம்பழத்தை அவனுக்குக் கொடுத்திருக்கிறார்! நிஜமாய் யாவ
ருக்கும் சுகம் கொடுக்கும் கல்பக விருக்ஷமானது அதிருஷ்டஹீனன் போ
னால் புரசை மரமாகிவிடுகிறது" என்று பேசிக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

அக்கார்ப்படிகன் ரத்னங்கள் நிறைந்த அந்த எலுமிச்சம்பழத்தைப்
பெற்றுக்கொண்டு தூக்கித்துக்கொண்டு வெளியேபோகையில் "ராஜவந்தி"
யென்னும் ஒருபுத்தசன்னியாசி எதிரே வந்தான். அவன் எலுமிச்சம்பழத்தை
பார்த்து அது வெகுநல்லதென்று நினைத்து கார்ப்படிகனுக்கு ஒருதுணியைக்
கொடுத்து அப்பழத்தை வாங்கிக்கொண்டு அரசனுக்கு மரியாதையாகக்
கொண்டுபோய்க் கொடுத்தான். அரசன் அது தான் கொடுத்தபழமென்றுபார்
த்து அப்புத்த சன்னியாசியை "உமக்கு ஏது இந்தப் பழம்"? என்று வினவி
னான். அதற்கு அந்த புத்தபதி தனக்கு அது கார்ப்படிகன் கொடுத்தது என்று

சொன்னான். அரசன் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு "ஐயோ, அந்த ஏழையின் பாவம் இன்னும் அறவில்லை" யென்று துக்கித்து அவ்வெலுமிச்சையை யெடுத்துக்கொண்டு ஒரு நிமிஷம் கழித்து சபையினின்று எழுந்திருந்து தன் நித்திய கர்மானுஷ்டானம் செய்யச்சென்றான். கார்ப்படிகன் அக்கந்தையை விற்று ஆகாரஞ்செய்துவிட்டு எப்பொழுதும் போல அரசமாளிகையின் வாசலில் உட்கார்ந்திருந்தான்.

மறுநாளும் ராஜா முன்னாளையதைப்போல ஒரு பெரிய சபைகூட்டி நகரத்திலுள்ள அனைவரும் அரசனைக் காணவந்தார்கள். இந்த வேடிக்கை பார்க்க கார்ப்படிகனும் வந்தான். அரசன் கார்ப்படிகனைப் பார்த்து முன்போல தன்னருகிலவனையழைத்து, அவனையுட்கார்த்தி, திரும்ப அதே சுலோகத்தை சொல்லச்சொல்லி சந்தோஷமடைந்து முதல்நாள் கொடுத்ததுபோல் உள்ளே ரகசியமாய் ரத்னங்களடைத்த ஒரு எலுமிச்சம்பழத்தை அவனுக்கு இனாமாய்க்கொடுத்தான். அதைப்பார்த்து சபையிலுள்ளவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் "அடா இதென்ன இது? இன்னொரு தடவையும் ராஜஸந்தோஷம் வீணாகிவிட்டது—இவன் தரித்திரம் இன்னும் தீரவில்லை" என்று பேசிக்கொண்டார்கள். அக் கார்ப்படிகனும் அப்பழத்தைப்பெற்றுக்கொண்டு வெறுத்துப்போய் "அரசன் இரண்டாந்தடவை கருணைகூர்ந்தும் வீணாய் விட்டது" என்று நினைத்துக்கொண்டு வெளியில் போனான். அப்பொழுது அவ்விராச்சியத்தில் புதிதாய் ஒரு உத்தியோகமடைந்த ஒருவன் எதிரே வந்தான். அவன் கார்ப்படிகன் கையில் வைத்திருந்த எலுமிச்சம்பழத்தைப் பார்த்து அதைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டி, சுபசகுனம் பார்க்கிறவனாகிய அவ்வதிகாரி ஒரு ஜோடி வஸ்திரம் கொடுத்து அப்பழத்தை விலைக்கு வாங்கி ராஜசபைக்கு வந்து அரசன் அடிபணிந்து முதலில் எலுமிச்சம் பழத்தைக் கொடுத்து, பாக்கி தான் கொண்டுவந்திருந்த பதார்த்தங்களைக் காணிக்கையாகக் கொடுத்தான். அரசன் தான் கொடுத்த எலுமிச்சம்பழம் தன்னிடம் திரும்பியதைப்பார்த்து அவ்வதிகாரியை அரசன் "அப்பா உனக்கு இந்தப் பழம் ஏது? என்று வினவினான். அதற்கவன் தனக்கு கார்ப்படிகனிடமிருந்து கிடைத்ததாகச் சொன்னான். அதைக்கேட்டு "ஐயோ லட்சுமிக்கு இன்னுமவனிடம் மனமிரங்கவில்லையே" யென்று ஆலோசித்து வெகு வாய்த் துக்கித்து சபையைவிட்டு எழுந்திருந்தான். அக்கார்ப்படிகன் தனக்குக் கிடைத்த வேஷ்டி ஜோடியையெடுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குப் போய் அங்கே ஒரு துணியை விற்று, ஆகாரம்செய்துவிட்டு, மற்றொரு துணியைத் தனக்கு இரண்டு வஸ்திரமாகக் கிழித்து வைத்துக்கொண்டான்.

திரும்ப மூன்றும் நாளும் அரசன் நகரத்தாரனைவரையும் சபைகூட்டினான். அதற்குக் கார்ப்படிகனும் வந்தான். அரசன் அவனையழைத்து அதே சுலோகம் சொல்லச்செய்து திரும்ப முன் மாதிரி எலுமிச்சம்பழத்தையே கொடுத்தான் இதைப்பார்த்து யாவரும் பரம ஆச்சரியமடைந்தார்கள். கார்ப்



படிகன் அதைப்பெற்றுக்கொண்டு வெளியே போய் தன்னெதிரே வந்துகொண்டிருந்த அரசனுடைய ஆசைநாயகியாகிய ஒரு தாசியினிடம் கொடுத்தான். ராஜாவின் ஸன்மானமாகிய விருக்ஷத்தின், நடக்கும் சக்தியுள்ள மெல்லிய கிளையைப்போன்ற அவ்வரசநாயகியானவள், கார்ப்படிகனுக்குப் பின்னாலுண்டாகப்போகும் பலனுக்கு அறிகுறியாக, (ஒருகிளை) புஷ்பம் கொடுத்ததுபோல அக்கார்ப்படிகனுக்கு ஒரு பொன் நாணயம் கொடுத்தாள். கார்ப்படிகன் அன்றையதினம் அதை வைத்துக்கொண்டு ஆனந்தமாயிருந்தான். அவ்வாசைநாயகி அரசனிடம் சென்று வெகு பிரியமாய், பருத்தும் அழகாயுமிருந்த எலுமிச்சம்பழத்தை அரசனிடம் கொடுத்தாள். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து தன் கண்ணாட்டியை அது என்னமாய்க் கிடைத்ததென்று விசாரித்தான். அதற்கவள் "மகாராஜா, எனக்குக் கார்ப்படிகன் கொடுத்தான்" என்று சொன்னாள். இதைக்கேட்டு அரசன் சிந்தையுற்று இன்னும்கூட லட்சுமிதேவி அவனைக் கண்திறந்து பார்க்கவில்லையே. அவன் செய்த பாவ சேஷம் தொலையவில்லையாகையால் இத்துரதிருஷ்டி நான் கொடுக்கும் இனாம்களைப் பலனற்றதாக நினைக்கிறான். ஐயோ இதற்கு என்ன செய்கிறது என்று துக்கித்து எலுமிச்சம்பழத்தை ஒருபுறம் பந்தோபஸ்தாய் வைத்துவிட்டு சபையைவிட்டு எழுந்திருந்து தன் நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்யத் தொடங்கினான்.

மறுபடி நாலாம்நாளும் அரசன் முன்போலவே சபைசேர்த்தான். அதில் சாமந்தர்கள், அமைச்சர்கள், மந்திரி முதலானபேர் வந்துசேர்ந்து சபை எள்ளுப்போட்டால் எள்ளுவிழாதபடி நிறைந்துபோயிற்று. அதில் கார்ப்படிகனும் வந்திருந்தான். அவனை அரசன் சமீபத்தில் வரும்படி யழைத்து அவனிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட பிறகு, அவனைத் தன் எதிரிலுட்கார வைத்து முன்போல சுலோகம் சொல்லச்சொல்லி சந்தோஷப்பட்டுத் திரும்ப அதே எலுமிச்சம்பழத்தைக் கொடுத்தான். அது கார்ப்படிகன் கையில் பாதிவந்ததும் ஒரே அடியாய்க் கீழேவிழுந்து இரண்டு துக்கடாக்களாகிவிட்டது. அவ்வெலுமிச்சம்பழத்தில் மூடிக்கொண்டிருந்தது இப்படி விண்டுபோய்விட்டதால், உள்ளே மறைத்துவைக்கப்பட்டிருந்த ரத்னங்கள் வெளியில் வந்துவிழுந்து சபாமண்டபத்தைச்சொலிக்கும்படி செய்தன. இதைப்பார்த்ததும் ஜனங்கள் ஆஹா! இந்த மர்மம் நமக்குத் தெரியாததால் மூன்றுநாள் வீண் பிரமை கொண்டிருந்தோம். மகாராஜாவின் அனுக்கிரகம் இப்படியல்லவா இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளத் தலைப்பட்டார்கள். அதைக்கேட்டு அரசன் இவனுக்கு லட்சுமி கடாட்சமுண்டாகியிருக்கிறதாவென்பதை யுக்தியாய்க் கண்டறிய நான் இந்தப்பரீட்சை பார்த்தேன். மூன்று நாளாய் அவனுடைய பாபம் தீரவில்லை. இன்றையதினம் லட்சுமி அவனுக்குப் பிரசன்னமாகியிருக்கிறான் என்றுசொல்லி அவனுக்கு

அவ்விரத்தினங்களோடு கிராமங்கள், யானைகள், குதிரைகள், தங்கம் முதலியவைகளைக் கொடுத்து அவனை ஒரு பெரிய சிற்றரசனாக்கினான். சபையிலுள்ளோரும், நகரவாசிகளும் அரசனை வெகுவாய் மெச்சினார்கள். அரசன் கார்ப்படிகனை அவன் ஊருக்குப்போகவிடுத்து சபையாருக்கு விடை கொடுத்துவிட்டுத்தான் தன் மாளிகைக்குள் சென்றான். அதன்பின்னர், கார்ப்படிகன் சிற்றரசனாகி, பத்தினி புத்திர பாக்கியங்களை யடைந்து அரசனுக்கு எப்போதுமே அருந்துணையாக விளங்கி, வெகுகாலம் சுகமாக வாழ்ந்திருந்தான்.

---

# வீரவானின் இராஜபக்தி.

விக்கிரமபுரம் என்னும் ஒரு பெரிய உத்தமமான பட்டணமுண்டு. அதில் வெகுகாலமாய் விக்கிரமதுங்க னென்னும் அரசன் அரசுபுரிந்து வந்தான். அவன் தீக்ஷண்ணியம் தலையில் வைத்தானே யொழிய தண்டனை விதிப்பதில் வைக்கவில்லை. அவன் ஸதாபிரியம் வைத்திருந்தது தர்மத்திலேயே யொழிய ஸ்திரீ விஷயத்திலாவது வேட்டையிலாவது மற்றெவ்விதமான சுகபோகங்களிலாவது மல்ல. ஒருசமயத்தில் ராஜதேஜஸுடன் கூடிய வீரவான் என்னும் சூரவீரனாகிய ஒரு மாளவதேசத்திற் பிறந்த பிராமணன் சேவகம் செய்வதற்காக அரசனிடம் வந்து சேர்ந்தான். அவன் குடும்பத்தில் மூன்று பேர்தானிருந்தார்கள்; தர்மவதி யென்று பாரியை, வீரவதி யென்று ஒரு பெண், ஸத்துவர னென்னும் ஒரு மகன். அவனுக்குச் சேவகம் செய்ய மூன்று கருவிகள் தானிருந்தன; இடுப்பில் பிச்சுபா, இடதுகையில் கேடயம், வலதுகையில் பட்டாக்கத்தி. இவனுடைய சம்ஸாரம் இவ்வளவு மட்டுந்தானாக விருந்தபோதிலும் அவன் அரசனிடம்தான் காலக்ஷேபத்துக்காக தினம் 500தங்கமோராக்கள்கேட்டான். "பார்ப்போம் இதற்குத்தகுந்த உத்தமகுணம் இவனிடம் இருக்கும்" என்று ஆலோசித்து அவன் வீரியத்தைச் சோதித்துப் பார்ப்பதற்காக அவன் கேட்டபடி கொடுப்பதாய் ஒப்புக்கொண்டான். அவன் பின் வேவுகாரர்களை யனுப்பி, இரண்டு கைக்காரனாகிய இவன் இவ்வளவு பொன் மோகராக்களை என்ன செய்கிறானென்று பார்த்துவரச்சொன்னான். அரசனிடம் தினம் பெற்றுக்கொண்டு செல்லும் 500 தங்கமோகராக்களில் 100 மோகராக்களைப் போஜனாதி காரியங்களுக்காகத் தன் பெண்சாதியிடம் கொடுப்பான். 100 மோகராக்களைக் கொண்டு பூஜைகளுக்காக புஷ்பாதிகளை வாங்குவான். 100 மோகராக்களைச் சிவன் விஷ்ணு இவர்கள் பூஜையில் செலவழிப்பான். பாக்கி 200 பொன் மோகராக்களைப் பிராம்மணர்களுக்கும் ஏழை யெளியவர்களுக்கும் தானம்



கொடுப்பதில் செலவு செய்வான். இவ்விதமாய் அவன் நாள்தோறும் 500-பொன் மோகராக்களையும் செலவு செய்துவந்தான். அவன் தினம் தன் நித்திய கர்மங்களை முடித்து அரசன் மாளிகையின் வாசலில் அவன் முதல் ஜாமம், மத்தியஜாமம், கடைசி ஜாமம் இப்படி காவல் காத்துவருவான். அப்படியே திரும்பத் திரும்ப இரவிலும் அவன் காவல் காத்துவருவான். இவ்விதம் அவன் செய்துவருவதாக வேவுகாரர்கள் அரசனிடம் அவனுடைய நித்திய நடவடிக்கைகளைத் தெரிவித்து வந்தார்கள். இதைக்கேட்டு அரசன் சந்தோஷித்து வேவுகாரர்களுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டான். வீரவானும் தன் ஸ்நானபானாதி நேரம்போக பாக்கிப்பொழுதை, கையில் ஆயுதம் ஏந்தி அரசமாளிகை வாசலில் காவல் காத்து வருவதில் போக்குவான்.

சிலநாள் கழிந்த பிறகு இச்சூரவீரன் பிரதாபத்தைப் பொறுக்க வொண்ணாததுபோல மாரிகாலமானது பயங்கர கர்ச்சனை செய்துகொண்டு வீரவானைத் தோற்கடிக்க வந்ததுபோல வந்தது. மழை பிரசண்டமாய்ப்பொழிய ஆரம்பித்தது. சளசளவென்று இடைவிடாது மழை கொட்டியும் வீரவான் ஒரு கல்தூணைப்போல் அவ்வாசலினின்றும் அசையாது நின்றான். விக்கிரமதுங்க ராஜா மெத்தைமேலிருந்து வீரவானை தினம் பார்த்துவிட்டுப் பிறகு படுக்கப்போவான். ஒருநாள் நாலுபக்கமும் மழைகொட்டிக்கொண்டும், இருட்டு அந்தகாரமாயுமிருக்கும் ஒரு இரவில் அரசன் வீரவான் அவ்விடமிருக்கிறானா இல்லையா வென்றறிவதற்காக மெத்தைமேலிருந்து "யாரடா! அங்கே வாசலில் பாராகொடுத்துக்கொண்டிருக்கிறது யார்?" என்றுகேட்டான். அதைக்கேட்டு வீரவான் "மகாராஜா! தங்கள்சேவகன் ஆஜராயிருக்கிறேன்" என்றான். அதைக்கேட்டு அரசன் "சபாஷ் இவன் மகா பராக்கிரமசாலிதான். இப்படி மழை விடாதுகொட்டியும் மாளிகை வாசலைவிட்டு அசையாதிருக்கிறானே. இவன் பெரியபதவிக்கு வர்த்தக்கவன்" என்று மனதில் எண்ணினான். இப்படி அரசன் எண்ணிக்கொண் டிருக்கையில் மனதுருகும்படி ஒரு பெண் அழுதுகொண்டிருந்த சப்தம் அரசனின் காதில் விழுந்தது. அதைக்கேட்டவுடன் அரசன் "நம்முடைய ராஜ்ஜியத்தில் துயரப்படுவோரே கிடையாதே. அப்படியிருக்கையில் இவ்விதம் அழுகிறவள் யார்?" என யோசிக்கத் தொடங்கினான். இப்படி யோசித்து அரசன் வீரவானைப் பார்த்து:—ஓ வீரவா! கிரம்ப தூரத்தில் ஒரு ஸ்திரீ யழுகிற சத்தம் கேட்கிறதா? நீ அவ்விடம் போய் அப்பெண் யார்? அவள் ஏன் அழுகிறாள் என்பதை விசாரித்துவா" என்று சொன்னான். அதைக்கேட்டு வீரவான் இடுப்பில் பிச்சுபாவை சொருகிக் கொண்டு "உத்திரவுப்படி" என்று சொல்லி, பட்டாக்கத்தியைச் சுழற்றிக்கொண்டு அக்கோரமான இருட்டில் போனான். ஆகாசம் மின்னிட்டுக்கொண்டிருந்தது; மழையும் கொட்டிக்கொண்டிருந்தது. மழையால் ஆகாசமும் பூமியும் ஒன்றாகப்போயிருந்ததால் அப்பெண் அழுகைக்குரல் அவ்வளவு செவ்வையாகக்கேட்க வில்லை. இப்

படிப் பயங்கரமான மழையிலும் வீரவரன் போவதைப்பார்த்து அரசன் ஆச்சரியமடைந்து தலை வந்து மெத்தையைவிட்டுக் கீழிறங்கி தன் கையில் ஒரு கத்தியை யெடுத்துக்கொண்டு ஒருவரு மறியாதபடி தானும் வீரவரன் பின் சென்றான்.

வீரவரன் அழுகைக் குரலைப் பின்பற்றி நடந்துசென்று பின் நகரத்துக்குவெளியில் ஒரு குளத்தங்கரை வந்து சேர்ந்தான். அவன் பின்னால் அரசனும் மறைவாய் வந்துசேர்ந்தான். அக்குளக்கரையில் ஒரு ஸ்திரீ "ஐயோ பிரேமபுத்திரா! ஆஹா கிருபாளுவே, மஹா சூரவீரா, நீ என்னை விட்டுப் போன பிறகு நான் என்னமாய் இருப்பேன்?" என்று அழுதுகொண்டிருக்கிறதை வீரவரன் பார்த்தான். அவன் அவளைப் பார்த்து "அம்மா, நீ யார்? நீ இப்படி உன் குமாரனைப்பற்றி துக்கிக்கிறாயே அவர் யார்?" என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ "அடா குழந்தாய், நான் பூமிதேவி; இப்பொழுது என் பிரேமகுமாரன் விக்ரமதுங்கராஜா. அவர் இன்றைமுதல் மூன்று தினங்களுக்குள்ளாக அவசியம் மரணமடைவார். குழந்தாய்! அவ்வரசனைப்போல வேறொரு புத்திரன் எனக்கு எங்கே கிடைக்கப்போகிறான்? இந்தக்காரணத்தால் தான் என் துர்ப்பாக்கியத்தை நினைத்து நான் துக்கிக்கிறேன். தேவலோகத்தில் தேவகுமாரனாகிய ஸுப்பிரபன் சுவர்க்கத்திலிருக்கையில் பின் நடக்கப்போகிற சுபாசுபங்களை எவ்வாறு அறிந்தானோ, அவ்வாறு நான் ஞான திருஷ்டியால் பின்னால் நேரிடப்போகிற சுபாசுபங்களை அறிவேன். அந்த சுப்பிரபனுக்கும் திவ்ய திருஷ்டியிருந்தது. அவன் அதனால்தான் 7-நாள் கழித்து தன் புண்ணியம் தேய்ந்துபோவதால் ஒரு பெண்பன்றியின் கர்ப்பத்தில் போய்த் தங்கவேண்டி வருமென்று அறிந்து அத்தியந்த துக்காக்கிராந்தனாகி "ஐயோ சுவர்க்கமே, ஐயோ அப்ஸரஸ்திரீகளே, ஐயோ நந்தவனத்திலுள்ள கொடிபடர்ந்த மண்டபமே, என்று தேவலோக சுகங்களைக் குறித்து துக்கித்து." என்னமாய் பெண்பன்றி வயிற்றிலிருந்து பிறகு என்னமாகச் சேற்றில் விழுந்து புரளுகிறது? என்று அலறுவதை இந்திரன்கேட்டு, அவனிடம் வந்து "என்னடா தம்பி ஏனடா இப்படி துக்கிக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு அவன் தன் துக்கத்துக்குக் காரணத்தை எடுத்துச் சொன்னான். அதைக் கேட்டு "இந்தத் துக்கத்திலிருந்து தப்பிக்க ஒரே மார்க்கமிருக்கிறது; அதைக்கேள். பஞ்சாட்சர ஜபம் ஸதாசெய்து சங்கரனைச் சரணமடை. அப்பொழுது உன் பாவம் நசித்து, நீ புண்ணியவான் ஆவாய். அப்பொழுது நீ சுவர்க்கத்திலிருந்து தவறி பூலோகத்துக்குப் போகமாட்டாய். உனக்குப் பன்றிவயிற்றில் ஜன்மமும் உண்டாகாது" என்றான். ஸுப்பிரபன் அப்படியே செய்வதாகச் சொல்லி பஞ்சாட்சரம் செய்து சங்கரனைச் சரணம் பிடித்து ஆறுநாள் சிவனிடத்தில் ஏகாக்கிரசித்தனாய் ஆராதனை செய்யச் சிவனருளால் பூலோகத்தில் வந்து பிறக்காது சுவர்க்கலோகத்துக்கு மேலாகிய உலகம் சென்றான். ஏழாம்நாள் இந்திரன் வந்து பார்க்கும்



போது ஸுப்பிரபன் சுவர்க்கத்துக்கு மேலாகிய உலகம் சென்றிருப்பதைப் பார்த்தான். ஸுப்பிரபன் தனக்கு நேரிடப்போகும் தீங்கை நினைத்து அலறியதுபோல நான் அரசனுக்கு நேரிடப்போகும் மரணத்தை யறிந்து துக்கிக்கிறேன்" என்றாள்.

இதைக்கேட்டு வீரவரன் "தாயே, இந்திரன் வார்த்தையைக்கேட்டு ஸுப்பிரபன் எப்படி மரணத்திலிருந்து தப்பினானோ, அப்படி அரசன் தப்புவிக்க ஏதாவது உபாயமிருந்தால் சொல்லுங்கள்" என்றான். வீரவரன் சொல்லைக்கேட்டு பூமிதேவியானவள் "இந்தவிஷயத்தில் ஒரே ஒரு உபாயமிருக்கிறது. அது உன்னால் தான் சாத்தியம்" என்றாள். இதைக்கேட்டு பலசாலியாகிய வீரவரப்பிராமணன்; "தேவி, எனக்கு அந்த உபாயம் உடனே சொல்லுங்கள் அது என்ன? அது என் பிராணனைக்கொண்டாகிலும், என் பெண்சாதி பிள்ளைகளைக்கொண்டாகிலும் ஆகக்கூடியதாயிருந்தால், அதனால் என் எஜமானுக்கு க்ஷேமமுண்டாகுமானால் நான் என் ஜன்மம் நிறைவேறியதாக நினைப்பேன்" என்றான். இதைக்கேட்டு பூமிதேவியானவள் "அரண்மனைக்கருகில் ஒரு காளிகோவிலிருக்கிறதே. அக்காளிதேவிக்கு ஸத்வவரன் என்னும் உன் புத்திரனைப் பலியாகக்கொடுத்தால் அரசன் உயிரோடிருப்பான். இதைத் தவிர அரசன் பிழைக்க வேறுவழி கிடையாது" என்றாள். வீரவரன் "தேவி, நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். இப்பொழுதே அப்படி செய்கிறேன்" என்றான். அதற்குப் பூமிதேவியானவள் "உன்னைப்போல் எஜமானுடைய க்ஷேமம் நாடுகிறவர்கள் வேறுயாருண்டு? உனக்கு க்ஷேமமுண்டாகட்டும்" என்று வாழ்த்திப் பேசிக்கொண்டிருக்கையிலேயே மறைந்து போனாள்.

பிறகு வீரவரன் வேகவேகமாய் வீட்டுக்குப்போனான். அரசனும் ரகசியமாய்ப் பின்தொடர்ந்தான். வீரவரன் வீட்டுக்குள் நுழைந்து தன் பெண்சாதி தர்மவதியை எழுப்பி "பூமிதேவி சொல்லுகிறபடி அரசனுக்காக நம்முடைய புத்திரனைச் சண்டிகா தேவிக்கு அர்ப்பணம் பண்ணவேண்டும்" என்றான். அதற்கு அவள் "அது அவசியமே, அரசனின் க்ஷேமம் தேடவேண்டியது தான். தாம் இப்பொழுதே புத்திரனை எழுப்பி அரசனுக்கு க்ஷேமமுண்டாக்கும் வார்த்தையை அவனுக்குச்சொல்லுங்கள்" என்றாள். வீரவரன் தன் குமாரன் ஸத்வவரனை எழுப்பி பூமிதேவி சொன்ன வார்த்தையை ஆதிமுதல் பலிதானம்வரையில் சொன்னான். அதைக்கேட்டு, பெயரை யொட்டியகுணம் பொருந்திய ஸத்வவரன் "அப்பா, என் பிராணன் ராஜாவிஷயத்தில் உபயோகப்பட்டால் நான் புண்ணியசாலியல்லவா? நான் உண்ட அன்னத்துக்கு நான் பிரதி செய்து சுத்தனாக வேணும். ஆகையால் என்னைத் தேவியிடம் கொண்டுபோய் அரசன் நெடுநாளிருப்பதற்காக என்னைத் தேவிக்கு அர்ப்பணம் செய்துவிடுங்கள்" என்றான். வீரவரன் தன்மகனைக் கட்டியணைத்து "குழந்தாய், நீ நிஜமாய் என் வயிற்றில் பிறந்தவன் தானடா" என்றான்

வீரவானைப் பின்பற்றி வந்த அரசன் உள்ளே நடக்கும் வார்த்தையைக்கேட்டு "பலே" இக்குடும்பத்தார் யாவரும் சமானமான பராக்கிரமசாலிகள்" என்று மனதில் மெச்சிக்கொண்டான். வீரவான் தன் பிள்ளையைத் தன் தோள் பேரிலும், தர்மவதிதன் பெண்ணைத் தன் தோள்பேரிலு மேற்றிக்கொண்டு இருவரும் இரவிலேயே சண்டிகையின் ஆலயத்துக்குச் சென்றார்கள். கோவிலை யடைந்ததும் வீரவான் தன் மகனைத் தன் தோளிலிருந்து கீழே யிறக்கினான். ஸத்வவான் பார்வைக்குக் குழந்தையாகிலும் உண்மையில் தைரியநிதியாகையால் அவன் தேவிக்கு நமஸ்காரம் செய்து:—"தேவியே, என் இரத்தபலியால் மகாராஜா தீர்க்காயுசா யிருக்கட்டுமாக; ராஜாதிராஜனாகிய விக்கிரமதுங்கன் இவ்வுலகில் பகையாளியின்றி இவ்விராச்சியத்தை ஆளட்டுமாக" என்றுசொல்ல, வீரவான் "சபாஷ்டா, என் குழந்தாய்" என்றுசொல்லி உறையிலிருந்து கத்தியை யுருவி தன் மகன் தலையை ஒரே வெட்டாய் வெட்டி காளியிடத்தில் எடுத்துவைத்து "தாயே, அரசனுக்கு க்ஷேமமுண்டாக்கு" மென்றான். அப்பொழுது ஆகாசவாணியானது "சபாஷ் வீரவா, புத்திரன் பிராணனைக்கொடுத்து அரசனுக்குப் பிராணதானம் செய்தாயே, இது வெகு நல்ல காரியம்" என்று கூறிற்று. இதைக்கேட்டு வெளியில் நின்றுகொண்டிருந்த அரசன் நடுங்கிப்போனான். இதற்குள் வீரவான் குமாரத்தியாகிய வீரவதி இறந்துபோன தன் சகோதரன் தலையை எடுத்து கட்டியணைத்து முத்தமிட்டு "அடே அண்ணா என்று ஒரு கூச்சல் போட்டு மார்புவெடித்து இறந்துபோனாள். வீரவான் பெண்சாதியாகிய தர்மவதி தன்னிரண்டு குழந்தைகளும் இறந்ததைப் பார்த்து, சோகத்தால் வெந்து தன் இருகைகளையும் கூப்பி வணக்கமாய் வீரவானைப் பார்த்து "பிராணேசா, தங்கள் அரசனுக்கு நல்லது செய்தீர்கள். இவ்விரண்டு குழந்தைகளையும் வைத்தெரிக்கும் நெருப்பில் நானும் விழுந்து இறந்துபோக எனக்கு அனுமதி கொடுக்கவேணும். ஒன்றுமறியாத என்பெண் தமையன் மரணமடைந்ததைப் பொறுக்கமுடியாமல் இறந்தாள். என் இரண்டு குழந்தைகளும் இறந்த பிறகு நானிருந்து என்ன ஆகவேணும்?" என்றாள். இப்படித்துக்கத்தில் மூழ்கிய தன் பத்தினி சொல்வதைக்கேட்டு வீரவான் "என் தோஷமற்ற கண்ணாட்டியே, இந்த விஷயத்தில் நான் என்ன சொல்லட்டும்? உன் மனதுக்குப் பிடித்தபடி நீசெய். உன் குழந்தைகளிறந்ததில் உனக்கு துக்கமுண்டாயிருப்பதும் கிரமந்தான்". எனக்கு இனி ஸம்சாரத்தில் சுகம் கிடையாதென்பதும் உண்மைதான். நான் உனக்காக ஒரு சிதை செய்து தீவளர்த்துக்கொடுக்கிறேன். சற்று இரு" என்றுசொல்லி, தேவி கோவிலைக் கட்டுவதற்காக அங்கே கொண்டுவந்து போடப்பட்ட மரங்களிலிருந்து சில கட்டைகளெடுத்து தன் குழந்தைகளுக்காகத் தான் செய்திருந்த சிதையில் போட்டு தீவளர்த்துக்கொடுத்தான். தர்மவதி தன் புருஷன் காலில் விழுந்து நமஸ்கரித்து:—பிராணபதியே, அடுத்த ஜன்மத்திலும் தாங்கள் எனக்கு நாயகனாக



வேணும். ராஜாவுக்கு க்ஷேமமுண்டாகவேணும் என்று சொல்லி அவ்வுத்தமியானவள் கொழுந்துவிட்டுக்கொண்டெரியும் அத்தீயில் விழுந்திறந்தாள். இத்துடன் காளிக்கு மூன்று பலிகள் ஆயின. இதையெல்லாம் அரசன் பார்த்து இவர்களுக்கு நாம் என்ன பிரதியுபகாரம் செய்து இவர்கள் கடனைத் தீர்த்துக்கொள்ளுகிறதென்று நினைத்துப் பிரமைதட்டிப்போய் நின்றான். நாம் என் இங்கே வந்திருக்கிறோமென்பதையே மறந்து போனான்.

பிறகு வீரவான் அடியில் வருமாறு ஆலோசித்தான்:—"நாம் நம்முடைய எஜமான் காரியத்தைச் சரியாய் நிறைவேற்றி விட்டோம். அதையும் ஆகாசவாணி ஒப்புக்கொண்டு விட்டது. நாம் உண்ட அரசனுடைய அன்னத்துக்குப் பிரதியாக நாம் காப்பாற்றவேண்டிய பெண்சாதி பிள்ளைகளைப் பலி கொடுத்துக் கடனைத்தீர்த்துவிட்டோம். இனி நம்முடைய தேகத்தைமாத்திரம் வளர்ப்பதற்காகப் பிராணனைவைத்துக்கொண்டிருப்பது சிலாக்கியமாயிருக்கவில்லை. ஆகையால் நான் என் ஜீவனையும் அம்பாதேவிக்குப் பலியாகக் கொடுத்து என் அம்மனைப் பூஜிக்கக்கூடாது?" இவ்விதம் தீர்மானித்து காளிகாதேவியைப் பலவாறாகத் துதித்துத் தன் தலையைவெட்டிக்கொள்ளப்போகும் தருவாயில் ஆகாசவாணியானது "என்மகனே அவசரப்படாதே. உன் பராக்கிரமத்தைக்கண்டு சந்தோஷப்பட்டேன். உனக்கு வேண்டிய வரம் கேட்டு வாங்கிக்கொள் என்று சொல்லிற்று. அதைக்கேட்டு வீரவான் "தேவி தங்களுக்குக் கிருபையுண்டாகி என் ராஜாவாகிய விக்கிரமதுங்கன் இன்னும் நூறு வருஷகாலம் ஆயுளோடு இருக்கவேணும். என் பெண்சாதியும் பிள்ளைகளும் உயிருடன் எழுந்திருக்கவேணும்" என்று கேட்டுக்கொண்டான். ஆகாசவாணி "அப்படியே யாகட்டும்" என்று பதில் கொடுத்தது. அப்பொழுது ஸத்வவான், வீரவதி உயிருடன் எழுந்திருந்தார்கள். அவர்கள் சரீரத்தில் காயமாவது வடுவாவது கிடையாது. பிறகு வீரவான் அவர்களுக்குத் தேவி அனுக்கிரகித்தருளின செய்திசொல்லி அவர்களை வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு, தான் அரசமாளிகையின் வாசற்படியில்போய் நின்று காவல் காக்கத் தொடங்கினான்.

ராஜா விக்கிரமதுங்கன் எல்லாவற்றையும் பார்த்து பரமசந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்து ஒருவருமறியாதபடி அரண்மனைக்குள்போய் நுழைந்து தன்மெத்தைமேலேறி "அடே யாரங்கே! வாசலில் பாராகொடுக்கிறது?" என்று விசாரித்தான். வாசற்படியில் காவல்காத்து நின்ற வீரவான்: "மகாராஜா, வாசலில் நான் பாரா கொடுக்கிறேன். தங்கள் ஆக்ஞைப்படி அழுதுகொண்டிருந்த ஸ்திரீயைப்பற்றி விசாரிக்கப்போனேன். அவளிடம் போனதும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவள் தேவதையைப்போல எப்படியோ மறைந்துபோனாள் என்றான்." நடந்த ஆச்சரியத்தையெல்லாம் பார்த்தும் கேட்டுமிருந்த விக்கிரமதுங்கராஜன் இவ்வார்த்தையைக் கேட்டு பரமசந்தோஷம் மாத்திரமல்ல; பரம ஆச்சரியமுமடைந்து "என்

னடா, விந்தையாயிருக்கிறது! இதைப்போல் முன்நடந்ததுமில்லை. இவனைப்போல பெருந்தன்மையுள்ள மனுஷனும் கிடையாது. தான் யாவரும் புகழ்ந்து கொண்டாடக்கூடிய காரியம் செய்தும், தன் பேச்சைக்கொஞ்சம் கூட சொல்லமாட்டேனென்கிறான். சமுத்திரம் மகா ஆழமாயும், விசாலமாயும், மகாபலத்தோடும் கூடியதாகவுமிருக்கிறது. என்ன புயல் அடித்தாலும் அது ஒடுங்குகிறதில்லை. ஆனால் அதுகூட இவனுக்கீடல்ல. ராத்திரி எனக்குத் தெரியாமலே தன் பெண்சாதிபிள்ளைகளைப் பலிகொடுத்து என் பிராணனை ரட்சித்த இந்த மனுஷனுக்கு நாம் என்ன பதில் செய்கிறது?" என்று யோசனை செய்துகொண்டு மெத்தையை விட்டுக் கீழிறங்கி அந்தப்புரத்துக்குச் சென்று ஆச்சரியத்தை நினைத்து நினைத்து இரவுபொழுதைப் போக்கினான். பொழுதுவிடிந்து சபைகூடினவுடன் வீரவரன் அவ்விடம் வந்தான். அரசன் இராத்திரி நடந்த விருத்தாந்தத்தை எல்லோருக்கும் வீரவரனை வைத்துக்கொண்டு சவிஸ்தாரமாய்ச் சொல்ல, யாவரும் வீரவரனைப் புகழ்ந்து கொண்டாடத் தொடங்கினார்கள். அரசனும் சந்தோஷத்தால் பூரித்து, வீரவரனுக்கும், அவன் மகனுக்கும் பட்டம்கட்டி கிராமங்கள் யானைகள், ரத்தினங்கள், 10 கோடி தங்க மோகராக்களை இனாமாகக் கொடுத்து முன்னிருந்ததற்கு அறுபதுமடங்கு சம்பளமும் (அதாவது, தினம் முப்பதாயிரம் மோகராக்கள்) அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் விருதாகக்கொடுத்து, அவன் குடும்பத்தைத் தன் குடும்பத்துக்குச் சமானமாக்கித் தன் நன்றியறிதலைக் காட்டினான். வீரவரனும் தன் மக்களோடும் அருமைப் பத்தினியுடனும் சுகமாக வெகுகாலம் வாழ்ந்திருந்தான்.

---

# சந்திரஸ்வாமி கதை.

முன் காலத்தில் தேவகமலபுரம் என்றொரு நகரமிருந்தது. அதில் கமலவர்மா என்றொரு அரசன் ஆண்டுகொண்டிருந்தான். அந்நகரத்தில் சந்திரஸ்வாமி என்று உத்தம குலத்தினனாகிய ஒரு பிராமணன் வசித்துக்கொண்டிருந்தான். அந்த பிராமணனுக்கு அவனுக்கேற்ற நாணமும் நன்னடக்கையும் பொருந்திய—மற்றொரு ஸரஸ்வதி யென்றும் லட்சுமி யென்றும் சொல்லத்தக்கவளாகிய தேவமதி யென்றொரு பத்தினியிருந்தாள். அந்தப் பிராமணனுக்குத் தேவமதி வயிற்றில் ஸர்வலட்சண ஸம்பன்னனாகிய ஒரு புத்திரன் பிறந்தான். அவன் பிறந்தகாலத்தில் ஆகாசவாணியானது "சந்திரஸ்வாமி! உன் புத்திரனுக்கு மஹீபாலன் எனப்பெயர் வை. அவன் அரசனாகி மகிமையுடனும் பூமியை ஆளுவான். உனக்கு அதனால் நிச்சயமாய் சுகமுண்டாகும்" என்றது.

சந்திரஸ்வாமி, புத்திரன் பிறந்ததை வெகு பிரபலமாய்க் கொண்டாடி



ஆகாசவாணி சொன்னபடி அவனுக்கு மஹீபாலனென நாமகரணஞ்செய்தான். பிறகு அக்குமாரன் வருஷாவருஷம் வளர்ந்து, எல்லா வித்தைகளும் கற்று அஸ்திர சஸ்திர வித்தைகளில் நிஜமான வல்லமையைப் பெற்றான்.

இதற்கு மத்தியில் சந்திரஸ்வாமியின் பத்தினியாகிய தேவமதி ஸர்வாங்கசுந்தரியாகிய ஒரு பெண்ணைப் பெற்றாள். அவள் லாவண்யத்தைப் பார்த்து திலோத்தமைகூட நாணவேண்டியிருக்கும். அவளுக்குச் சந்திரவதியென்று பெயரிடப்பட்டது. மஹீபாலனும் சந்திரவதியும் தங்கள் தகப்பனார் வீட்டில் வளர்ந்து வந்தார்கள்.

இப்படி சில வருஷங்கள் கழிந்த பின், அந்நாட்டில் மழை பெய்யாததால் சூரிய கிரணங்களால் பயிர்கள் யாவும் எரிக்கப்பட்டுப் போயின; நாடு முழுவதும் கருப்பு பரவியது. அப்பஞ்சத்தின் கொடுமையால் அரசன் தர்மமார்க்கத்தைவிட்டு தன் குடிகளிடமிருந்து பணம் பறிக்கவும் அவர்கள் சொத்தைக் கொள்ளையிடவும் ஆரம்பித்தான். இவ்வித கொடுங்கோன்மையால் தேசம் தத்தளித்தது. அப்பொழுது தேவமதி தன் பர்த்தா சந்திரஸ்வாமியைப் பார்த்து "பிராணபதியே, நாமிங்கேயே இருந்து கொண்டிருந்தால், நம்முடைய குழந்தைகள் பசியாலிறந்து போனால் என்ன செய்கிறது? ஆகையால் வாருங்கள், நாம் என்னுடையபிறந்தகத்துக்குப் போவோம்"என்றாள். அதைக் கேட்டு சந்திரஸ்வாமி தன் நாயகியைப் பார்த்து:—"இவ்வித பஞ்சத்தில் பெரிய வீட்டிலிருந்து வெளியில் புறப்பட்டுப் போகுதலும் அதைக் காலிசெய்வதும் வெகு பிசகு. ஆனதால் நான் இந்த இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு போய் உங்கள் தகப்பனார் வீட்டில் விட்டு விட்டு வருகிறேன். நீ இங்கேயே இரு. நான் வெகு சீக்கிரமாய் வருகிறேன் என்றார்." இவ்விதம் சொன்னவுடன் அவர் பத்தினியானவள் அப்படியே சரி யென்று சொன்னாள்.

பிறகு சந்திரஸ்வாமி தன் பெண்சாதியைத் தன் வீட்டில் வைத்துவிட்டு தன்மகன் மஹீபாலனையும் மகள் சந்திரவதியையும் அழைத்துக்கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டு தன் மாமனாரூரை நோக்கிச் சென்றார். மூன்று நாள் இப்படி நடந்து ஒரு பெரிய காட்டை யடைந்தார்கள். அவ்வனத்தில் மணல் நிறைந்த மைதானங்களிருந்தன. அம்மணல் வெயிலில் காய்ந்து கொதித்துக் கொண்டிருந்தது. சுற்றியிருந்த மரங்களனேகம் பட்டுப் போனவை போக பாக்கியிருந்தவைகளில் இலைகள் மிகவும் சொற்பமாயும் அவைகளும் பசுமையின்றி வதங்கிப்போயுமிருந்தன. இப்படிப் பயங்கரமான பாழும் பிரதேசத்தில் அவ்விரு பாலர்களுக்கும் பொறுக்க முடியாத தாகமெடுத்தது. சந்திரஸ்வாமி அவ்விரு குழந்தகளையும் ஒரு இடத்தில் உட்காரவைத்து ஜலத்தைத் தேடிக்கொண்டு வெகுதூரம் போனார். அப்பொழுது பில்லர்கள் என்னும் வேடஜாதியாரின் அரசனாகிய ஸிம்ம தம்ஷ்டிரன் (சிங்கப்பல்லன்) என்பவன் ஏதோ ஒரு காரியமாய் எங்

கேயோ போயிருந்து, தன் பரிவாரத்தோடு வந்தவன் தற்செயலாய் சந்திரஸ்வாமியைச் சந்தித்து "ஆ! என்ன தேடிக்கொண்டு இப்படித் திரிகிறீர்?" என்று கேட்க அவர் "ஜலத்தைத் தேடிக்கொண்டு திரிகிறேன்" என்றார். அப்பொழுது அந்த பில்லராஜன் தன் பரிவார ஜனங்களுக்குச் சைகைசெய்து "இந்த பிராமணனை அழைத்துக்கொண்டு போய் ஜலமிருக்கு மிடத்தில் கொண்டுவிடுங்கள்" என்றான். அதைக்கேட்டு அவன் உள்ளத்தை யறிந்து அவன் சேவகர்கள் நிர்த்தோஷியான சந்திரஸ்வாமியைச் சிறை பிடித்து தங்களூருக்குக் கொண்டுபோனார்கள். பிறகு சந்திரஸ்வாமிக்குத் தன்னைக் காளி தேவிக்கு நரபலிகொடுக்கக் கைதியாக்கியிருக்கிறார்கள் என்று தெரிந்து காட்டில் தான் விட்டுவந்த இரண்டு குழந்தைகளையும் நினைத்துக்கொண்டு துக்கித்தார். "ஐயோ, குழந்தை மஹிபாலனே, பெண்ணே சந்திரவதியே, உங்களிரண்டு பேரையும் நிராதரவாய்க் காட்டில் விட்டு வந்திருக்கின்றேனே! உங்களைக்காட்டிலுள்ள புலி கரடிகளுக்கு இரை யாக்கினேனே! என்னை இங்கே கள்வர்கொன்று போடப்போகிறார்களே. எனக்கு ஒருவரும் கதியில்லையே. ஐயோ, தெய்வமே" என்று புலம்பி ஆகாசத்திலுள்ள சூரிய நாராயணனைப் பார்த்தார். பார்த்ததும் அவர் விசனத்தைவிட்டு மகா ஆனந்தங்கொண்டு நல்லதடா, இந்த நம்முடைய பிரபு சூரிய நாராயணனை நாம் சரணமடைவோம். அவர் எப்படியாவது நம்மை ரட்சிப்பார் என்று நினைத்து சூரியனைத் துதிக்க ஆரம்பித்தார். "ஓ! சூரியநாராயணா, உம்மை நான் நமஸ்கரிக்கிறேன். தாம் பராகாசத்திலும் அபராகாசத்திலும் வசிக்கிறீர்! தாம் தேஜஸ்வரூபமாயிருக்கிறீர்! வெளியிருட்டு உள்ளிருட்டு இரண்டையும் நாசமாக்கிறீர்! தாம் விஷ்ணுவாயிருக்கிறீர்! தாமே மூவ்வுலகிலும் வியாபித்திருக்கிறீர்! தாமே சிவபெருமான்! தாம் சகல ஸகல மங்களங்கட்கும் இருப்பிடமாயிருக்கிறீர்! தூங்கிகொண்டிருக்கும் உலகை யெழுப்புகிறீர். ஆகையால் தாம் பரம பிரஜாபதியாயிருக்கிறீர்! இராத்திரி இருட்டில் சந்திரனையும் விளக்கையும் பிரகாசிக்கச் செய்ய அவைகளிரண்டினிடத்திலும் தயை கூர்ந்து தாம் தம்முடைய தேஜஸை விட்டு கண்ணுக்குத் தோற்றாமல் போய்விடுகிறீர் போலும். ஓ! சூரியப்பிரபுவே! பிறகு நீர் உதித்தவுடன் ராக்ஷஸர்கள் ஓடிப்போகிறார்கள்; திருடர்கள் வெளியே நடக்கிறதில்லை; சற்குணமுள்ளவர்கள் ஆனந்தமடைகிறார்கள். ஜீவதார ஒளியே! நான் தம்மைத் தஞ்சமென்றடைகிறேன்; என் துக்கமெனும் அந்தகாரத்தை விலக்கி என்பேரில் கிருபை செய்தருளும்." இவ்விதமாய் சந்திரஸ்வாமி பூர்ணபக்தியுடன் சூரியனைத் துதிக்க ஆகாயவாணியானது "சந்திரஸ்வாமியே, எனக்கு உன்னிடத்தில் சந்தோஷமுண்டாகியிருக்கிறது. உனக்குத் தீங்கொன்றும் நேரிடாது. என்னுடைய கிருபையால் நீ உன்னுடைய பெண்சாதி பிள்ளைகளுடன் திரும்பச் சேருவாய்" என்று சொல்லி நின்றது. இதைக்கேட்டு சந்திரஸ்வாமியின் விசாரமடங்கி சந்தோஷித்தானார். பிறகு பில்லர்கள் அவருக்கு ஸ்நான போஜனாதிகளைச் செய்வித்தார்கள்.

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 9. | திரிச்சிராப்பள்ளி 1915ம் வரு மார்ச்சு மீ. | சஞ்சிகை 9.

MADRAS.

## பிரபஞ்ச விலாஸம்.

யாது பாவித்திடினும் அதுவாய் விடுதல் கூடும். மனதிற்கு இந்தச் சக்தியும் உண்டு. வீரருடைய சரித்திரத்தைப் படிப்பதினால் நமக்கும் வீரமுண்டாகும். பயங்காளிகளைப் பற்றிப்பேசுவதாலும் பயமே யுண்டாகும். பயங்கரக் கதைகளைக் கேட்பதனாலும் நாம் பயத்தை யடைந்து விடுவோம். நீ தீரத்தைப் பாவித்தால் தீரமாவாய். புண்ணியத்தைப்பாவித்தால் புண்ணியமாவாய். அழகைப் பாவித்தால் அழகேயாவாய். ஆன்மாவைப் பாவித்தால் சித்தாய் விடுவாய்.

அழகை எவ்வண்ணம் பாவிக்கிறது? எனக்கு அழகு உண்டென்றன்று. அழகு வேறு, யான் வேறு; எனக்கு அழகுவேண்டுமென்று தியானிப்பதல்ல. மற்று: எந்த விதமாக அழகைப் பாவித்தல் அமையும்? அழகே யான்! அழகேலாம் யான்! யான் அழகேலா மாயினேன்! என்று தியானித்தல் வேண்டும் காரிய ஸாதகம்—பாவனா சக்தியின் முதிர்ச்சிக்குத் தக்கபடியாகும்.

உன்னை ஒருவன் அவதூறு செய்துவிட்டானென்று அவன்மீது மான நஷ்டத்திற்குக் கேஸ் கொண்டுபோகிறாய். அந்த அவதூறு உண்மையில் உன்னுடைய குணங்களையே எடுத்துக்காட்டியதாக இருந்த போதிலும், வெளியுலகத்தார் அவ்விதம் அறிந்துகொண்டு விடாவண்ணம்—அதற்காகவே கோர்ட்டுக்குச் செல்கிறாய். நீ ரகசியமாகக் குற்றங்கள் செய்து எல்லோரையும் ஏமாற்றிப்போடலாம். சட்டத்தையும் சிலவேளை ஏமாற்றிப்போடலாம். பெண்டு பிள்ளைகளையும், ஆத்ம சிநேகர்களையுங்கூட ஏமாற்றிப்போடலாம். ஆனால் தன்னையே ஏமாற்ற முடியாது! முடியாது!! குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னுமல்லவோ!

சாமி கும்பிட்டால் கும்பிட்டுப் போகட்டும். இரட்டைக் கடாவைக் காளிக்குப் பலியிடுவதும், அந்த அம்மன். இந்த பிடாரி, மாரி, மாமாரி, மதுரைவீரன் இவர்கட்குக் கோழியும், குஞ்சையும் அறுத்து இரத்தப்பலி கொடுப்பதும் கூடாவென்கிறோம்.

சைவன் சிவாலயத்திற் பூசிக்கட்டும்; வைணவன் வைணவாலயத்திற் பஜிக்கட்டும். சைவனும், வைணவனும் சண்டையிட்டுக்கொண்டு ஒருவனை யொருவன் வாய்க்கு வந்தபடி வைவதும், அடிப்பதும், போலீஸ் கோர்ட்டேறி அபராதம் தருவதும் கூடாதென்கிறோம்.

**ஈசுவர வெளிச்சம்** அந்தந்த மதத்தில் இருந்தாலும், அந்த மதத்தில் இருப்பவன் அன்பில்லாதவனாயிருந்தால் அவன் பகவானையடையவே மாட்டான். அவன் அன்பும் சிரத்தையும் உடையவனாகி தனது எண்ணத்தை அதாவது சங்கல்பத்தைக்கொண்டு தனக்கும் பகவானுக்கும் சம்பந்தத்தையுண்டுபண்ணிக் கொண்டானானால், அவனைப் பகவான் தாமே கொண்டுசெல்வார். அவன் செய்யும் கருமங்களெல்லாம் பகவானையே சேர்ந்துவிடும். அவனுக்குப் பரமாத்மாவின் அற்புத சக்தியுமுண்டாய்விடும்.

**சாமி** யிருக்கிறதே! அப்படோ! பொல்லாத சாமியது! பூசை கீசை போடாவிட்டா கோவுச்சுக்கும்; அப்புறம் கெடுதல் வந்துடும் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் சாமி கும்பிடுவதற்குக் காரணம்—பயம்—அன்றி வேறில்லை.

**அம்மை வார்த்தால்** மாரியாயிக்குப் பூஜைபோடவேண்டுமாம்! விஷபேதி தோன்றினால் கரவம் எடுத்துத் தா—தை—தோம் என்று தெருக்கள்தோறும் ஆடிடவேண்டுமாம். யந்திரங்கள், (மிஷின்கள்) வைத்துள்ள இடங்களிலே ஆயுதபூஜையின்போது ஆட்டுக்கடா பலி தரவேண்டுமாம். திரிச்சியிலே குழுமாயி என்ற ஒரு சாமிக்கு ஆயிரக்கணக்கான ஆட்டுக்குட்டிகள் பலியாகின்றன. என்னே நம்மவரின் மூடபக்தி!

**விளக்கு வைத்த** பிறகு வாசற்படிதாண்டி பக்கத்து ஊருக்குப் பெண்ணை அழைத்துக்கொண்டு செல்லலாமா! ஐயோ சாஸ்திரவிரோதமாச்சுதே என்றாள் ஒரு கிழவி! இரவு 2-மணி வண்டிக்கு ரயிலுக்குப் பிரயாணப்படலாம், மூன்று மைலிலுள்ள பக்கத்து ஊருக்குமட்டும் இரவில் புறப்படலாகாதோ என்று அதற்குப் பதிலாகக் கூறினான் ஒரு வாலிபன்.

**பகவானுடைய** அற்புதச் சட்டங்களோடு இசைந்து அல்லது ஒத்து வாழ்தலே சுவர்க்கம் என்ப. கடவுளுடைய ஆணைக்கு அப்புறம் நின்றுவிடுதல்—அதாவது விரோதமாக நடத்தலே நரகமாம். மேல் உலகத்தில் மரணத்திற்குப் பிறகு அனுபவிக்கப்போகும் சொர்க்க நரக துன்பங்களை—இந்த உலகத்திலேயே நமது நடக்கையால் நாம் அனுபவித்துக்கொண்டு வருகிறோம்.

**விவாகம் செய்துகொள்ள** நினைக்கும் வாலிபனே ஒன்று கேள் உனக்கு நிலம், வீடு ஏதாவது இருந்தால் அதைப் பெண்ணின் பேருக்கு எழுதிவைத்தால் உனக்குப் பெண் தருகிறோமென்று கூறுவார்கள். அதற்கு நீ இணங்கிவிடாதே. **அந்தத் தப்பிதத்தை** மட்டும் நீ செய்யாதே. எல்லோருடைய குடுமியையும் உன் கையில் வைத்துக்கொள்ளப் பார். மற்றவர்களிடம் உன் குடுமியைத் தந்துவிடாதே. பிறர் யோசனையில் மயங்காதே! உன் சொந்த புத்தியை நம்பு. அதை மீறி இனிமேல் வருகிற மனைவிக்கு உன் நிலம், வீடு இதை எழுதிவைத்துவிட்டாயோ—போயிற்று உன் வாழ்வு! உன்னைத் திண்ணையில் உட்காரவைத்து ஒரு தகரக்கொவளையை உனக்குக் கொடுத்து அதில் அரை வயிற்றுக் கஞ்சியை ஊற்றி மரியாதை செய்வார்கள். உனக்கு வருகிற பெண் நல்லதாயிருந்தாலும். சுவருக்குப் பின்னால் இருந்து தூண்டிவிட்டுக் கெடுப்பவர்கள் அநேகர் இருப்பார்கள். வருவது சொன்னேன், படுவது படு.



**கற்பு** என்றால் என்ன? அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு,—என்றால் என்ன அம்மா? ஐயோ! பெண் குழந்தைகளுக்கு அவர்களுடைய எளிய மனத்திற்குத் தக்கப்படி இவற்றைப் போதிப்போர் அருமையாயினரே! அந்த விரதம், இந்த நோன்பு என்கிறார்கள்! அதன் உண்மை வரலாறு தெரிந்தோர் கோடியில் ஒருவரே!! ஆதிமறைக்கீதம் அரிவையர்கள் சொன்னதுபோய்—வீதி பெருக்கும் விலையடிமை யாயினரே! என்னே கால மிருந்தவாறு!!

---

# புஸ்தக விமர்சனம்.

---

## முராஹரி.

ஸ்வதேச நண்பன் இயற்றியது. நடை இனிமையாயும், கதை தெளிவாயும் இருக்கின்றது. ஆங்காங்கு வரும் பாடல்களுக்குத் திவ்யமான உரையொன்றும் தரப்பட்டுளது. இக்கால நாகரீகப் போக்குகளைப்பற்றிய விநோதமும் இதில் காண்கின்றோம். விலை அணா 5. வேலூர் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் P. K. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்களிடம் பெறலாம். இதனாசிரியர் தமது பெயரை வெளியிட்டிருந்தால் நமக்குத் திருப்தியாயிருக்கும்.

## சித்திரரேகை.

ஸ்ரீமாந் நாகை C. கோபால கிருஷ்ண பிள்ளை அவர்கள் இயற்றியது விலை அணா 12. கதையின் அமைப்பு மிகப் புதுமையே. இடையிடையே தோன்றுகின்ற அநுபவங்களும் மதிப்பேறப்பெற்ற ரத்தினங்கள் தாம். இவ்விதமான கதைகளுக்கு அபிப்பிராயம் எழுதுங்கால், அது சற்றேனும் விரிவு பொருந்தியதாய் விவரத்துடன் இருக்கவேண்டும். அந்தப் பாக்கியம் நமது பத்திரிகைக்கு இல்லாதது பெருந்துரதிஷ்டமே. சென்னை திருவல்லிக்கேணி லலிதா விலாஸ புத்தகசாலையில் கிடைக்கும்.

## அமரஸிம்ஹன்.

இதுவும் ஸ்ரீமாந் நாகை C. கோபால கிருஷ்ணன் எழுதியதே. கதாநாயகனுக்கு எதிர்பாராது நேரும் ஒரு துரதிஷ்டமானது, வாசகர்களை எவ்வளவு தூரமாயினும் மனம் பொறுத்துச் சகித்துக்கொண்டு, கதையின் முழு விவரங்களையும் அறியும்படி தூண்டுவதாகக் கதையின் அமைப்பு செல்கின்றது. அதைச் சுருக்கமாக மனதில் நினைத்துப் பார்க்கும்போது கதை மிகவும் ஸ்வாரஸ்யமுள்ளதாகப் படுகின்றது. புதுவிதமாகவும் இருக்கிறது. அமரஸிம்ஹனின் உத்தம குணங்களும், துன்பமலையின் விடுவிப்பும், சிங்களத்துச் சீமானாகும் பாகமும், தம் தலைவரிடத்துக்கொண்டுள்ள பக்தியும் பெரிதும் இன்பமளிக்கின்றன. கொண்ட காதலெல்லாம் நிறைவேறுவதில்லையென்பதை அநுபவத்திற் கண்டார்க்கு—தமது விஷயத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்நூல் உதவும். புராதன காலச்சார்பினின்றும் வழுவாது கதையின் போக்கு செல்வது பாராட்டற்பாலது. இனிமையான உயரிய தமிழ் நடையும், பல உலக அநுபவ விவரிப்புகளும், இயற்கையின் விசேடங்களும் இந்நூலின் கௌரவத்தை அதிகரிக்கச் செய்கின்றன. கதாரம்பம்—நேர்த்தியான சந்திரிகையில் தொடங்கப் பெற்றதாதலின் ஆசிரியர் மறை

பொருளாகச் சொல்லும் விஷயங்கள்கூட வாசகர்கட்கு எளிதில் விளக்கமாகுந் தன்மையதாய்ப் பிரகாஸமான வழியில் கதையின் சிருஷ்டிப்பு பொருந்தியிருக்கின்றது. மறு பகுதியைப் பார்த்த பின்னர் நமது முழு அபிப்பிராயமும் தருகிறோம். இதனை மொழிபெயர்ப் பென்று ஆசிரியர் கூறினும், வாசகர்கட்கு அவ்விதமாகத் தோன்றாதவாறு உருவகப்படுத்தியுள்ள தன்மை பாராட்டற்பாலதே யாகும். சென்னை, திருவல்லிக்கேணி "விவேகபோதினி" ஆபீஸில் கிடைக்கும். விலை ரூ. 1.

## அகமே புறம்.

ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் இயற்றியது. விலை அணா 8 இந்நூலின் நடையமைப்பு "ஆத்திச்சூடி"யின் போக்காகக் கடுகுக்குள் கடலையடைத்த விதமாய் ஒளிர்கின்றது. அறஞ் செய விரும்பு என்ற பதம் எத்துணைச் சுருக்கமாகவும் பொருட்சுவை நிறம்பியதாயும் இருக்கின்றதோ அதே வழியில் அவ்விதமான பத அமைப்புகளோடு முடிக்கப்பட்டிருக்கும் இந்நூலை ஆயிரமுறை திருப்பித் திருப்பிப் படிப்பினும், ஏற்கெனவே படித்துவிட்ட நூல் போன்று தோன்றாத ஒரு விசேஷம் இந்நூலின் முக்கிய அம்ஸமாகும். இந்நூலிலுள்ள விஷயங்களை எடுத்துக்கொண்டு அபிப்பிராயம் சொல்ல நமக்கு சக்தி போதாது இதிலுள்ள விஷயங்கள் நித்திய பாராயணம் செய்யத்தக்கதான அத்துணை உயர்நலமமைந்தவை யென்றுமட்டும் சுருக்கமாய்க் கூறி முடிக்கிறோம்.

## மெய்யறம்.

இதுவும் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் இயற்றியதே எளிய நடையில் கவிதை செய்யும் கடுமையான தொழிலில் பிள்ளையவர்களின் அருமையான வாக்கு வைபவம் என்னென்று புகழ்வோம்! இதுபோன்ற கிரந்தங்கட்கு நாம் அபிப்பிராயம் தருவதே அதிகப்பிரசங்கமாகும். அறிந்தவரே அதன் பெருமையை அறிவார்! இதன் விலை அணா 8. இவ்விரு நூல்களும் சென்னை மைலாப்பூரில் ஸ்ரீமான் பிள்ளையவர்களிடம் பெறலாம்

## ஆங்கிலோ தமிழ் டைலாக்.

ஸ்ரீமான் M. S. ஸ்ரீநிவாசலு நாயுடவர்கள் இயற்றியது. விலை ரூ. 1 ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்புவோர்க்கு இந்நூல் பெரும்பயனளிக்கவல்லது வெகு சுலபமான முறையில் போதகம் புரிகின்றது ஆசிரியர் இந்நூலை இயற்றுவதில் அதிக சிரமமெடுத்துக் கொண்டிருக்கிறார். இரண்டாம் பதிப்பு வெளிப்பட்டதே அதன் உயர்வினை நன்கு விளக்கும். இப்புஸ்தகம் தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்குச் செய்யும் பிரயோசனத்தைப் பற்றி யோசிக்கும்போது அதற்கிட்டுள்ள விலை வெகு சொற்பமேயாகும பெண்பாலாரும் வீட்டிலிருந்துகொண்டு இதைப் படித்து ஆங்கில பாஷா ஞானம் பெறலாம். இங்கிலீஷ் இலக்கணத்தை தமிழிலக்கணச் சொற்களைக்கொண்டு எவ்வளவுக்கெவ்வளவு எளிதாய் விளக்க சாத்தியமோ அவ்வளவுக்கும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பலவாறு சொல்லி யென்ன? மாணவர்கள் ஒவ்வொருவரும் இதை வாங்கிப் படிப்பது முக்கியமாகும்; இரங்கூன் 31வது தெரு 34வது எண்ணுள்ள வீட்டில் இதனாசிரியரிடத்துப் பெறலாம்

இப்புஸ்தகங்களை நமது பார்வைக்கு வரவிடுத்த ஆசிரியர்கட்கு நமது வந்தனத்தைத் தெரிவிக்கின்றோம்.



இதற்கு மத்தியில் வனத்தில் என்னநடந்ததென்று பார்ப்போம். காட்டிலுட்கார்ந்திருந்த சகோதர சகோதரிகளிருவரும்வெகு நேரம்வரையில் தகப்பனார் வழியைப் பார்த்துக்கொண்டிருந்து அவர் வாராததால், ஏதோ பிசகு நேரிட்டிருக்கிறதென்று அழத்தொடங்கினர். அப்பொழுது. அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்த ஒருவியாபாரக்கூட்டத்தாரின் தலைவனான ஸார்த்ததரன் என்னும் ஒரு வாணிபன் அக்குழந்தைகளருகில் வந்து "நீங்கள் இங்கே ஏன் ஒண்டியாயிருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அக்குழந்தைகள் நடந்ததையெல்லாம் சொல்ல, ஸார்த்ததரனுக்கு மனதில் கருணைவந்து அண்ணன் தங்கை இருவரையும் தன்னூரில் தன்வீட்டுக்கு இட்டுக்கொண்டுபோய் அப்பிராம்மணசிறுவனை தன் மகனைப்போல வளர்த்து வந்தான். மஹீபாலன் அவ்வைசியன் வீட்டிலிருந்து கொண்டு சிறுமையிலேயே அக்கினியில் ஹோமம்செய்கிறது முதலிய அக்கினிகாரியம் செய்யத்தொடங்கினன். ஒரு நாள் தாராபுரத்தரசனாகிய தாராதர்மன் என்பவனுடைய மந்திரி, அரசன் காரியமாக அவ்வழியாய்ப் போகையில் அந்த வியாபாரி வீட்டுக்கு வந்தார். அம்மந்திரி உயர்ந்த குலத்து பிராம்மணன்; அவருக்கு அனந்தஸ்வாமி யென்று பெயர். இவர் அந்த வியாபாரிக்கு வேண்டியவராகையால் யானை, குதிரை, காலாட்படையோடு அந்த வர்த்தகன் வீட்டில் வந்திறங்கினர். அவ்விடத்தில் பூர்ணகாந்தியோடு கூடியவனாய் ஜபத்திலும் வைசுவதேவத்திலும் ஆழ்ந்திருந்த மஹீபாலனைப் பார்த்து "நீ யார்" என்று வினவி, அவர்கள் விருத்தாந்தத்தைக் கேட்டு, அவ்வண்ணன் தங்கை யிருவரும் தன்னினத்தைச் சேர்ந்தவர்களென்றறிந்து, தனக்குக் குழந்தைகள் கிடையாததால் அவ்வர்த்தகனைக் கேட்டு, அச்சிறுவன் சிறுமி இருவரையும் தன்னூருக்கு அழைத்துக்கொண்டு போய், கல்விகேள்விகளாலும் சம்பத்தாலும் விளங்கும் தன் மாளிகையில், மஹீபாலனைத் தன் புத்திரனாக வைத்துக்கொண்டு வசிக்கத் தொடங்கினர்.

இவ்விடத்தில் பில்லர்களால் சிறையிலகப்பட்டு, தான் விடுதலைபெற சூரியநாராயணனை, வணங்கிக்கொண்டிருந்த சந்திரஸ்வாமியின் செய்தி என்னவாயிற்றென்று பார்ப்போம். அவர் சிறையிலிடப்பட்ட சில நாள் கழித்து சிங்கதமுஷ்டிரன் தன்னூருக்குவந்து சந்திரஸ்வாமியிடம் போய் "ஓய் பிராம்மணா, சூரியதேவன் என் கனவில் வந்து பிராம்மணனைக் கொல்லாதே. அவருக்கு வேண்டிய உபகாரஞ்செய் என்று கட்டளையிட்டிருக்கிறார். ஆகையால் எழுந்திருந்து உனக்கு இஷ்டமான விடத்துக்குப்போ" என்று சொல்லி அவரைச் சிறையிலிருந்து விடுவித்து அவருக்கு மரியாதை செய்து, முத்து, கஸ்தூரி இவைகளைக் கொடுத்து, முன் அப்பிராம்மணனகப்பட்ட காட்டில் கொண்டுபோய் விட்டுவிடும்படி இரண்டு பில்லர்களை யனுப்பினன். இப்படி சங்கடத்திலிருந்து விடுதலைபெற்ற சந்திரஸ்வாமி அவ்வனத்தில் தன் பிள்ளைகளைத் தேடத்தொடங்கினர். எங்குதேடியும் அவர்கள் ஜாடையே கிடைக்காததால்இன்னும் அதிகமாய் அவர் அலையத்தொடங்கினர். அலைந்தலைந்து

அப்பிராம்மணர் கடற்கரையிலுள்ள ஜலபுரம் என்னும் ஊர் வந்தடைந்தார். அங்கரில் ஒருபிராமணன் வீட்டில் அவர் அதிதியாக இறங்கி போஜனமான பிறகு பேசிக்கொண்டிருக்கையில் சந்திரஸ்வாமி தன் கதையைச் சொன்னார். அப்பொழுது அவ்வீட்டு எஜமானன் "ஐயா, சில நாளைக்குமுன் இந்த ஊருக்கு கனகவர்மா வென்று ஒருவியாபாரி வந்திருந்தான். அவன் தனக்குக் காட்டில் கிடைத்ததாக ஒரு பிராம்மணச் சிறுவனையும் அவன் தங்கையையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தான். அவர்கள் வெகு அழகாயிருந்தார்கள். அவனிவ்விடமிருந்து நாரிகேள தீவுக்குச் சென்றான். அச்சிறுவன் பெயர் என்னிடம் சொல்லவில்லை" என்று சொன்னான். அதைக்கேட்டு சந்திரஸ்வாமி அவ்விரு சிறுவரும் தன்குழந்தைகள் தானென நிச்சயித்து அன்று ராத்திரிப்பொழுது ஜலபுரத்திலேயே போக்கி, மறுநாள் காலையில் நாரிகேளத் தீவுக்குச் செல்பவனாகிய விஷ்ணுவர்மா வென்னும் வியாபாரியை தேடிப் பிடித்து அவனைச் சிநேகஞ் செய்து அவனுடன் கப்பலேறி புத்திரவாஞ்சையால் நாரிகேளத்தீவுக்குச் சென்று அங்கேயிருக்கும் வாணிபர்களை "கனகவர்மா இங்கே வந்திருக்கிறாரா?" என்று விசாரிக்க, அதற்கு அவர்கள் "அவன் வந்திருந்ததுண்டு; அவனுக்கு இரண்டுசிறுவர் அகப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு அவன் கடாகதீவுக்குப் போயிருக்கிறான்" என்றார்கள். அதைக்கேட்டு பிராம்மணன் கடாகத்தீவுக்குப் போவோனாகிய தானவர்மாவைச் சிநேகஞ்செய்துகொண்டு அவனுடன் கப்பலேறி கடாகத்தீவுக்குச் சென்றார். அவ்விடம் விசாரிக்கையில் அவன் கர்பூரத்தீவுக்குச் சென்றிருப்பதாகத் தெரிந்தது. இப்படி அதிலிருந்து ஸுவர்ணத்தீவுக்கும், அதிலிருந்து சிங்களத்தீவுக்கும்சென்றார். சிங்களத் தீவில் அவ்விடமிருந்து அவனுடைய இருப்பிடமாகியசித்திரகூடம் சென்றுவிட்டதாக அவன்கேள்விப்பட்டு அவ்விடமிருந்து தன் சொந்தக்கப்பலில் சித்திரகூடத்துக்குச் செல்லும் கோடீஸ்வரன் என்னும் ஒரு வர்த்தகனோடு சித்திரகூடம் சென்றார். அவ்வூரில்போய் சேர்ந்து கனகவர்மாவைத் தேடிப் பிடித்து குழந்தைகளைத் தேடுவதில் ஆத்திரத்தோடுகூடிய அப்பிராம்மணர் கனகவர்மாவிடம் சகல விர்த்தாந்தத்தையும் சொல்ல கனகவர்மா அப்பிராமணர் வார்த்தையைக் கேட்டு பிராமணருடைய துக்கத்தை யறிந்து காட்டில் தனக்குக் கிடைத்த சிறுவர் இருவரையும் பிராமணருக்குக் காட்டினான். ஆனால் ஐயோ, பாவம்! பிராமணரின் ஆசைக்கு அஸ்தமனம் நேரிட்டுவிட்டது. சந்திரஸ்வாமி அவ்விரு பாலர்களையும் பார்க்கும்பொழுது அவர்கள் தன் குழந்தைகளல்ல, வேறு யாருடைய குழந்தைகளோ வென்று தெரிந்தது. இதைப்பார்த்துப் பிராமணர் சோகமேலிட்டு "ஐயோ தெய்வமே, ஐயோ தெய்வமே! நான் எங்கெங்கேயோ அலைந்தேனே! கஷ்டம் சிரமத்தைப் பொறுத்தேனே! பசிதாகத்தைப் பார்க்கவில்லையே! எனக்கு என்னுடைய கனும் அகப்படவில்லை மகளும் அகப்படவில்லையே! அயோக்கியனாகிய



ராஜா முன்னாசை காட்டிப் பின் அதை ஈடேற்றாமல் விட்டுவிடுவது போல என் பிராரப்தமானது எனக்கு ஆசை காட்டி மோசஞ்செய்துவிட்டது. போக்கிரியாகிய ஒரு பிரபு வீணாக ஒரு மனிதனை இங்குமங்கும் அலைக்கழிப்பதுபோல, என் துரதிஷ்டமானது என்னை இங்குமங்கும் இழுத்தடித்து என்னை வெகுதூரம் அலையவைத்து விட்டது என்று கதறினார்."

இப்படிப் பிராமணர் துயரப்படுவதைப்பார்த்து, தனவானாகிய கனகவர்மா பிராமணனுக்குச் சமாதானம் சொன்னான். அதைக்கேட்டு சந்திரஸ்வாமி செட்டியைப்பார்த்து:—"செட்டியாரே! நானென்னசெய்யட்டும்? புத்திரனில்லாமல் என் மனது அடக்கவே மாட்டேனென்கிறது. என் மனதில் ஐயோ குழந்தை எங்கேபோனானோ வென்று அனேகவிதமான எண்ணங்கள் உண்டாகிக்கொண் டிருக்கின்றன. இப்படி நான் ஸதா விசாரப்பட்டுக் கொண்டே யிருக்கிறேன். எனக்கு என்னவிதமாக தைரியமுண்டாகப் போகிறது? ஆனால், செட்டியாரே; அதிர்ஷ்டத்தின் மகிமை மகா அதிகமென்பது எனக்குத்தெரியும். நான் ஒரு வருஷம் வரையில் இப்பூகண்டத்தில் அலைந்து திரிந்து என் குழந்தைகளைத் தேடுகிறேன். அவர்கள் எனக்குக் கிடைக்காவிட்டால் கங்காநதி தீரத்தில் நான் தவம்செய்து பிராணனை விட்டுவிடுகிறேன்" என்று சொன்னார். இப்படிச் சொல்லவே அங்கே உட்கார்ந்திருந்த ஒரு ஞானி "ஓய் பிராமணா! போம். உமக்கு நாராயணி தேவியின் அருளால் உம்முடைய பிள்ளைகள் அகப்படுவார்கள்" என்றார். இதைக் கேட்டதும் சந்திரஸ்வாமிக்குச் சூரியனுடைய அனுக்கிரகம் நினைவு வந்து திரும்ப மனதில் ஆசை முளைக்கவே, அவர் மனது சமாதானம் அடைந்து, கனகவர்மா அவருக்கு அதிதி உபசாரம் செய்ய அதை ஏற்றுக்கொண்டு பிராம்மணர் அவ்வூரைக்கடந்து அப்புறம் போனார்.

பிறகு சந்திரஸ்வாமி அக்கிராரங்கள், கிராமங்கள், பட்டணங்கள் இவைகளில் பிள்ளைகளைத் தேடிக்கொண்டு திரிந்து ஒருநாள் சாயங்காலத்தில் சூரியாஸ்தமன சமயத்தில் விருக்ஷங்கள் ஓங்கி வளர்ந்து நிறைந்திருக்கும் ஒரு வனத்தையடைந்து அவ்வனத்திலேயே ராத்திரி வாசஞ்செய்வதற்காகக் கனிகளைப் புசித்து ஜலமருந்தி சிங்கம் முதலிய கொடிய விலங்குகளுக்கஞ்சி ஒரு மரத்தின் மேலேறி யுட்கார்ந்தார். இராத்திரி அப்பிராமணருக்குத் தூக்கம் வரவில்லை யாகையால் விழித்துக்கொண்டே யிருந்தார். அர்த்தராத்திரி சமயத்தில் அவர் உட்கார்ந்திருந்த மரத்தின் கீழாக தேவிகள் பலமாய்க் கூட்டங்கூடினார்கள். இத்தேவிமார் கூட்டத்தில் நாராயணி (என்னும் துர்க்கை) முக்கிய தேவியாயிருந்தாள். அத்தேவிகள் தங்கள் தங்களுக்கு ஏற்றவைகளாய்க் கிடைத்த காணிக்கைகளை ஒன்றாய்ச்சேர்த்து தேவநாதனாகிய பைரவன் வருகிறவழியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அத்தேவி கூட்டத்தார் நாராயணியை "பைரவநாதர் ஏன் இன்னும் வரவில்லை?" யென்று கேட்க அதற்குள் பைரவநாதன் வந்து சேர்ந்தார். தேவிகள்

யாவரும் பைரவரைப் பூஜித்து தங்களுக்குக் கிடைத்த காணிக்கைகளை அர்ப்பணம் செய்து உபசரித்தார்கள். பிறகு பைரவநாதர் சிறிது நேரம் யோகினிகளுடன் தாண்டவ நர்த்தனஞ்செய்து உல்லாசமா யிருக்கத் தொடங்கினார். இதையெல்லாம் மரத்தின்மேலிருந்த சந்திரஸ்வாமி செவ்வையாகப் பார்த்துக்கொண்டிருந்தார். இப்படி யிருக்கையில் பிராம்மணன் நாராயணியின் ஒரு தாசியைப் பார்த்தான்! அதேகாலத்தில் அவளும் அவனைப் பார்க்க, தெய்வ வசத்தால் ஒருவரிடத்தில் ஒருவருக்கு மோகமுண்டாயிற்று. நாராயணி தேவி இவ்விருவரும் ஒருவரிடத்தில் ஒருவராசை கொண்டிருப்பதை அறிந்துகொண்டு, அதை மனதில் மறைத்து வைத்துக்கொண்டு மரத்தின்மேல் உட்கார்ந்திருக்கும் சந்திரஸ்வாமியைக் கூப்பிட்டாள். அவர் இறங்கி நாராயணி தேவியிடம் போனார். நாராயணி இருவரையும் கூப்பிட்டு "உங்களிருவருக்கும் ஒருவரிடத்தில் ஒருவருக்கு ஆசை உண்டாகி யிருக்கிறதல்லவா?" என்று கேட்க, அவர்களிருவரும் "தாயே ஒருவரிடத்தில் ஒருவருக்கு அனுராகம் உண்டாகி யிருக்கிறதென்பது உண்மைதான்" என்றார்கள். அதைக்கேட்டு நாராயணி கோபந்தணிந்து "நீங்களிருவரும் உண்மை பேசியதால் நான் சந்துஷ்டி யடைந்தேன்; ஆகையால் நான் உங்களை சபிக்கவில்லை. உனக்கு இந்தத் தாசியைக் கொடுக்கிறேன். நீங்களிருவரும் சுகமாயிருங்கள்" என்றாள். அதைக்கேட்டு சந்திரஸ்வாமி "தாயே என் மனது மனதின் சஞ்சல சுபாவப்படி, சஞ்சலமடைந்தது. ஆனால் சரீரத்தைக்கொண்டு பாவம் செய்யாதிருக்கத்தான் நாம் ஜாக்கிரதை செய்ய வேண்டியது. பரஸ்திரீயை நினைக்காமல் நான் என் மனதை யடக்கவேண்டியதுதான். நான் இந்த ஸ்திரீயைத் தொடமாட்டேன்" என்றார். இப்படிப் பிராமணன் தைரியமாகச் சொன்னதைக்கேட்டு நாராயணி தேவியானவள் "உன்பேரில் சந்தோஷமுண்டாயிருக்கிறது. ஆகையால் உனக்கு இந்த வரம் கொடுக்கப்போகிறேன். உனக்குச் சீக்கிரம் உன் குழந்தைகள் அகப்படுவார்கள். இன்னும் விஷம் முதலியவைகளைப் பரிகாரம் செய்யும் ஒரு நீலோற்பல மலரை உனக்குக் கொடுக்கிறேன். இந்தா அதை வாங்கிக்கொள்; இது ஒருநாளும் வாடாது" என்று சொல்லி சந்திரஸ்வாமிக்கு ஒரு கருநெய்தல் புஷ்பத்தைக் கொடுத்துத் தாசியுடன் துர்க்காதேவியானவள் அந்தர்த்தியானமாகி விட்டாள்.

அந்தப் பிராமணன் தேவியிட மிருந்து நெய்தல் மலரைப் பெற்றுக்கொண்டு இரவில் மீந்த பொழுதை அங்கேயேபோக்கி, உதயமானதும் பிரயாணஞ்செய்யப் புறப்பட்டான். நடந்து நடந்து தன்குமாரன் மஹிபாலனும் புத்திரி சந்திரவதியுமிருக்கும் தாராபுரத்தை வந்து சேர்ந்து அங்கே "இந்த ஊரில் அதிதிகளுக்கு யார் அன்னம் படைக்கிறவர்கள்?" என்று விசாரித்து அனந்தஸ்வாமி அதிதிகளையாதரிப்பவன் என்றுதெரிந்துகொண்டு அவர் வீட்டு வாசலில்போய் நின்றுபோஜனம் செய்யவேணுமென்கிற இச்சையால் வேதபா



ராயணம்செய்யத் தொடங்கினான். உள்ளே போய் பிராமணன் வந்திருக்கும் செய்தியை யறிவித்த வாசற்காற்போன் மூலமாய் உள்ளே வரும்படி மந்திரி செய்த உத்திரவை யறிந்து உள்ளேபோய் பிராம்மணன்வித்துவானென்றறிந்த மந்திரியால் அம்மாளிகையில் போஜனஞ்செய்யும்படிஅழைக்கப்பட்டார். அவர் அவ்வூரில் அனந்தன்மடுவென்று ஒரு புண்ணிய தீர்த்தமிருக்கிறதாகக் கேள்விப்பட்டு அங்கே ஸ்நானஞ்செய்யச் சென்றார். தீர்த்தமாடித் திரும்புகையில் ஊர்முழுவதும் "ஐயோ, ஐயோ குடிமுழுகிற்றே" என்று ஜனங்கள் அலறுவதைக்கேட்டு அதென்னவென்று விசாரித்தார். அதற்கு ஜனங்கள் "இந்த ஊரில் மஹீபாலனென்று ஒருபிராம்மண வாலிபன் இருக்கிறான். அவனையும் அவன் தங்கையையும் ஸார்த்ததரன் என்னும் வாணிபன் காட்டிலிருந்து கொண்டுவந்திருந்தான். மந்திரியாகிய அனந்தஸ்வாமி அவர்களிருவரையும் அவ்வைசியனைக்கேட்டு அழைத்துக்கொண்டு வந்து தனக்குப் புத்திரபாக்கியம் கிடையாததால், அச்சிறுவனைத் தன் மகனாக வைத்துவளர்த்து அந்த நல்ல பையன் மகாராஜா தாராவர்மருக்கும், இராச்சியம் முழுவதுக்குமே பிரியபாத்திரமானான். அவனை இன்று ஒரு கருநாகம் கடித்துவிட்டது. ஆகையால் ஊர் முழுவதும் இப்படித் தத்தளிக்கிறது" என்றார்கள். அதைக்கேட்டு அவன் நம்முடைய பிள்ளையாகத் தானிருக்கவேணுமென்று அறிந்து சந்திரஸ்வாமி வெகு தீவிரமாய் மந்திரியகம் வந்து சேர்ந்தார். வந்து பார்க்கையில் அப்பையனைச் சுற்றி யாவரும் உட்கார்ந்திருந்தார்கள். சந்திரஸ்வாமி மஹிபாலனைப் பார்த்துத் தன் குழந்தைதானெனத் தெரிந்துகொண்டு நாராயணி தேவி தனக்குக்கொடுத்திருந்த நீலோற்பல மலரைப் பையன் மூக்கண்டை பிடிக்கவே அம்மலரின் வாசனையால் விஷமிறங்கிப் போய்விட்டது. அவ்வாலிபன் தூங்கி யெழுந்திருந்ததுபோல் தன்னுடம்பைச் சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்திருந்து உட்கார்ந்திருந்தான். இப்படி அவன் எழுந்துட்கார்ந்ததைக் கண்டு அரசனும் அந்நகரத்தாரும் அன்றைய தினத்தை ஒரு திருவிழாவாகக் கொண்டாடினார்கள். அனந்தஸ்வாமியும், அரசனும், பிரஜைகளும் சந்திரஸ்வாமி ஏதோ ஒரு தேவாம்சமாக இருக்கவேண்டுமென்று சொல்லி அவருக்கு மகா உபசாரம் செய்தார்கள். இப்படிப் புகழடைந்த சந்திரஸ்வாமி தன் மகனையும் மகளையும் பார்த்துக் களிப்புற்று மந்திரி மாளிகையிலேயே இருந்தார். இம்மூவரும் ஒருவரை யொருவர் அடையாளங் கண்டுபிடித்துக் கொண்டாலும் அந்த சமாசாரத்தை வெளியில் விடாது மௌனமாயிருந்தார்கள். ஏனெனில், தங்கள் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று உத்தேசித்திருக்கும் புத்திமான்கள் சமையத்தில் தவிர தங்கள் உண்மையான ரூபத்தைக் காட்டமாட்டார்கள்.

அந்நகரத் தரசனாகிய தாரவர்மா மஹிபாலன் குணத்தைக்கண்டு மகிழ்ந்து தன் ஒரே குழந்தையாகிய பந்துமதியை அவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்து, தன் ராச்சியத்தில் பாதியை அவனுக்குச் சீராகக்கொடுத்து, முழு

ராச்சியத்தின் விசாரணையையும் அவனிடமே ஒப்புவித்தான். மஹிபாலன் இவ்விதம் ராச்சியத்தைப்பெற்ற பிறகு சந்திரஸ்வாமி இன்னொன்று வெளியிட்டு தன் தங்கைக்குத் தகுந்தவிடத்தில் மணஞ்செய்வித்தான்.

ஒருநாள் சந்திரஸ்வாமி தன்மகனைப் பார்த்து "அப்பா, இப்பொழுது நாம் உன் தாயாரைப் பார்க்க ஊருக்குப் போகவேணும். குழந்தாய், உன் தாய் உன்னையும் என்னையும் விட்டுப்பிரிந்து வெகுகாலமாகத் துக்கப்பட்டு வருகிறாள். அவளுக்கு உனக்கு இராச்சியம் கிடைத்திருக்கும் சங்கதி தெரிந்தால் அவள் ஒருவேளை 'என்மகன் என்னை மறந்துபோய் விட்டானல்லவா'? என்று நினைத்துக் கோபித்து உன்னைச் சபித்தால் நாமென்னசெய்கிறது; பெற்றோர்கள் எந்தக் குழந்தைகளைச் சபிக்கிறார்களோ அவர்கள் முன்னுக்கு வருகிறதில்லை" என்றுசொல்லி இந்தச் சாப விஷயமாக சக்கிரன் என்னும் ஒரு வாணிபச் சிறுவனைப்பற்றி ஒருபண்டைநாள் கதையைச்சொல்லி பெற்றோர்களைச் சேவித்தால் அச்சேவை காமதேனுவைப்போலும், கற்பவிருக்ஷத்தைப்போலும், சிந்தாமணியைப்போலும் மனோரதத்தை ஈடேற்றுமென்றுசொல்லி "தர்மவியாதன்" கதையைச் சொல்ல, மஹிபாலன் தன் தாயாரைத் தேற்ற ஊருக்குப்போகச் சம்மதித்து தான் தர்மபிதாவாகிய அனந்தஸ்சுவாமியிடம் தன் ஜனன தேசத்துக்குப் போகவேண்டிய ஆவசியகத்தை எடுத்துக்காட்டி ராச்சியபாரத்தை அவரிடம் ஒப்புவித்து தன் தகப்பனுடன் ராத்திரி புறப்பட்டு ஊர்வந்து சேர்ந்தான். வஸந்தகாலமானது எப்படி தரிசனம் கொடுத்துக் குயில்களுக்குஆனந்த முண்டாக்குகிறதோ, அதைப்போலத் தன்னைத்தன் தாயார் கண்ணில் விழும்படிசெய்து தேவமதிக்கு ஆனந்த முண்டாக்கினான். சந்திரஸ்வாமி நடந்த விருத்தாந்தத்தைச் சொல்ல இஷ்டமித்திரர்கள் யாவரும் கேட்டு மிகச் சந்தோஷித்து மஹிபாலனை வெகுவாய்க்கொண்டாடினார்கள். பிறகு மஹிபாலன் தன் தாயாருடன் சிறிதுகாலமிருந்தான்.

இவ்விடம் பந்துமதி பொழுதுவிடிந்ததும் விழித்துக்கொண்டு தன் படுக்கையறையில் தன் புருஷனில்லாதது கண்டு, அவர் எங்கேயோ தன்னை விட்டுப் புறப்பட்டுப்போய் விட்டாரென்று நினைத்து விரகவேதனைப்பட்டு அழத்தொடங்கவே, அனந்தஸ்வாமியானவர் அவளைச் சமாதானப்படுத்தி "உன் புருஷன் ஏதோ அவசரகாரியமாக என்னிடம் சொல்லிவிட்டுத்தான் போயிருக்கிறான். சீக்கிரம் வந்துவிடுவான் நிச்சயம்" என்றுதேற்ற, மிக துக்காக்கிராந்தையாய் பொழுதைக் கழிக்கத் தொடங்கினாள். மேலும் தன்புருஷன் செய்தியறிய அவன் ஊரிலிருந்து வரும் வித்துவான்களை வரவழைத்து அவர்களுக்குச் சன்மானம் செய்து அவர்களைத் தன் புருஷனைப்பற்றி ஏதாவது தெரியுமோவென்று கேட்க அவர்கள் தங்களுக்குத் தெரியாதென்று சொல்ல ஒரு பிராம்மணனிடமிருந்து "ஒரு பாசுபதன்கதை" யையும், மற்றொருவனிடமிருந்து "நள தமயந்தி கதை" யையும் கேட்டு மனதைச்சற்று தேற்றிக்கொண்டாள். சில நாள்கழித்து மஹிபாலன் தன் தாயார், தகப்பனாரை



யழைத்துக்கொண்டு தன் மாமனாராகிய தாராபுரம் வந்து சேர்ந்தான். பௌர்ணமி திதி சந்திரன் தன் தரிசனத்தால் சமுத்திரத்திலுள்ள ஜலலக்ஷ்மியை எவ்விதம் சந்தோஷிப்பிக்கிறானோ, அவ்விதம் ஜனங்களுடைய கண்ணாளனாகிய மஹிபாலன் தன் தரிசனங்கொடுத்து பந்துமதிக்குக் களிப்பூட்டி பெற்றோர்களைத் தன்னுடன் வைத்துக்கொண்டு பந்துமதியுடன் சுகமாய் வாழ்ந்துகொண்டு இராஜ்யத்தைத் தருமமாய்ப் பரிபாலனஞ் செய்துகொண்டிருந்தான்.

---

## தருணசந்திரனின் ஏமாற்றம்.

---

ஸ்ரீ கண்டமென்னும் தேசத்தில் விலாஸபுரமென்று ஒரு நகரமுண்டு. அதில் வினயசீலன் என்னுமரசன் அரசாண்டுவந்தான். அவ்வரசனிடம் பேருக்கேற்ற குணம் (வினயம்) பொருந்தியிருந்தது. அவன் தன் பிராணநாயகியாகிய கமலப்பிரபை என்னும் ராணியுடன் எப்பொழுதும் சிற்றின்ப சுகத்தில் மூழ்கியிருந்தான். இப்படி வெகு நாள் சென்றபிறகு அழகைக் குலைக்கும் மூப்பு அரசனை வந்து பிடித்துக்கொண்டது. இதைக்கண்டு அரசன் பயந்து "அடடா! பனியில் கருகிப்போன தாமரையைப்போல வாடிப் பழுத்துப்போன என் முகத்தை என் ராணியிடம் எப்படிக் காட்டுகிறது? சீ, என் விதியே. இப்படி முதிர்ந்து தளர்ந்துபோன என் ரூபத்தைக் காட்டுவதைவிட மரித்துப்போவது நலம்" என்று துக்கித்து கொலுமண்டபத்தை யடைந்து, அவ்விடமிருந்து ஒரு சேவகனை யனுப்பி தருணசந்திரன் என்னும் ஒரு சிறந்த வைத்தியனை வரவழைத்தான். அவன் வந்ததும் அவனுக்குத் தக்கபடி மரியாதைசெய்து "வைத்தியராஜனே, நீர் நமக்கு நம்பிக்கையுள்ள மனுஷ்யர். மேலும் வெகு சமர்த்தர். ஆகையால் உம்மைக் கேட்கிறேன், எனக்கு இப்பொழுது மேலிட்டுக்கொண்டுவரும் மூப்பைப்போக்கித் திரும்ப யௌவனத்தை யடையச் செய்ய ஏதாவது ஒரு யுக்தி உண்மையிலேதேனுமிருக்கிறதா?" வென்று வினவினான். அதைக்கேட்டு, ஒரு கலையைமாத்திரம் உடைத்தாகி பூர்ணபிம்பத்தைப் பெற விரும்புகிறவனும், உன்பக்கம் வக்கிரமாகவிருக்கும் இளம்பிறை சந்திரனைப்போல, கலை (சாஸ்திர) ஞானமாத்திரம்பெற்றுத் தனவானாவதற்கு விருப்பங்கொண்டவனும், மனதில் வக்கிரசுபாவமுள்ளவனாகி பேருக்குத்தக்க குணம் பொருந்தியவனாகிய தருணசந்திர வைத்தியன் "இவ்வரசன் முழுமூடனென விளங்குகிறது; ஆகையால் இவனிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் காசு பறிக்கலாம்" என்று மனதில் யோசித்து அவன் "மகாராஜாவே, தாங்கள் எட்டுமாசகாலம் ஒரு நிலவறையிலிருந்து என் மருந்து சாப்பிட்டுவந்தால் தங்கள்விருத்தாப்பியம் போய்விடும்

என்றான். இதைக்கேட்டு அரசன் ஒரு நிலவறையை சீக்கிரமேற்படுத்தச் சொல்லி தன் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டான். சிற்றின்பத்திலாழ்ந்த மூடர்கள் கொஞ்சமேனும் ஆலோசிப்பதில்லை. நிலவறையும் தயாராகிவிட்டது. அமைச்சர்கள் அரசன் வைத்தியன் வலையில் சிக்கிக்கொண்டிருப்பதை நோக்கி, அரசனைப்பார்த்து அடியில்வருமாறுசொன்னார்கள்:—"மகாராஜனே முற்காலங்களில் ரிஷிகளின் தபஸாலும் தமத்தாலும், யுகத்தின் பிரபாவத்தாலும் ரஸாயனங்கள் செய்யப்பட்டன. இக்காலங்களில் அவ்வித ரஸாயன முறைகள் நமக்கு அறியவந்திருந்தாலும், அதற்கு வேண்டிய சரக்குகள் இக்காலம் கிடைக்காததால் இப்பொழுது செய்யப்படும் ரஸாயனங்கள் நன்மை செய்வதற்குப் பதிலாய் தங்களுக்குக் கெடுதலே செய்யும். ஆகையால் மகாராஜனே, தாங்கள் இக்காரியம் செய்வது யுக்தமன்று. போக்கிரிகள் சாதுக்களுக்குப் பொய்யும் புளுகும் சொல்லி ஆசைமூட்டித் தாங்கள் காரியத்தைச் சாதித்துகொள்ளுகிறார்கள். சென்றுபோன யௌவனம் எங்ஙனம்திரும்பும்?" இப்படி மந்திரிகள் தங்கள் யோசனைகளைச் சொன்னார்கள். ஆனால் அரசன் மனதில் விஷயவாஸனைவெகு பலமாய் இருந்ததால், வைத்தியன்வார்த்தைகள் ஏறியிருந்த அரசன் மனதில் இவ்வுபதேச வாக்கியங்கள் கொஞ்சமேனும் படவேயில்லை. பிறகு அரசன் வைத்தியன் சொற்படி தன்பரிவாரங்களை எல்லாம் வெளியில் விட்டுவிட்டு அரசன் ஒண்டியாய் அந்நிலவறையில் இறங்கினான். மருந்து வகையராக்களைச் செய்ய, வைத்தியன் ஒண்டிவேலைக்காரனோடு அந்நிலவறையின் மேலிருந்தான். தன் மனதிலுள்ள அஞ்ஞானவிருள் வெளிவந்து பரவியதைப்போல இருள்பரவி நிறைந்திருந்த அந்நிலவறையில் அரசன் வசிக்கத் தொடங்கினான். இப்படி ஆறுமாசங்கள் கழிந்தன. அரசன் முகத்தைப் பார்த்தால் முகம் முன்னுக்கு வெகு அதிகமாய்க் கிழன்றுபோயிருந்தது. அதைப்பார்த்து அவ்வைத்தியன் ஒரு சூது செய்தான். அவன் அரசனைப் போன்ற உருவம்படைத்த ஒரு வாலிபனைத் தேடிப்பிடித்து அவனைத் தான் அரசனாக்கினால், அவன் தான் சொன்னபடி நடக்கவேண்டுமென்று அவனுடன் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு அவனை அந்நகரத்துக்கு வெளிப்புறம் அழைத்துவந்து ஓரிடத்தில் இருத்தினான். பிறகு ஊருக்கு வெளிப்புறமிருந்து அரசனிருக்கும் நிலவறைக்கு ஒரு சுரங்கமுண்டாக்கி அரசன் இரவில் தூங்குகையில் அவனைக்கொன்று அச்சுரங்கத்தின் வழியாய் அவன்பிணத்தை வெளியேகொண்டுபோய் ஊருக்கு வெளியில் எவரும் அறியாவண்ணமாகப் புதைத்துவிட்டான். பிறகு தான் பேசி வைத்திருந்த வாலிபனை, அச்சுரங்கத்தின் வழியாய் நிலவறையில் கொண்டுபோய்ச் சேர்த்து அச்சுரங்கத்தை யடைத்துவிட்டான். அயோக்கியர்கள் கையில் மூடர்கள் அகப்பட்டுக் கொண்டால் அவர்களை என்ன செய்யத்தான் பின்வாங்குவார்கள்? புதிதாக யௌவனம் தேடக்கருதுவோரின் கடைசிமுடிவு இப்படித் தான் ஆகும்.

சிலநாள் கழித்து ஒருநாள் காலையில் வைத்தியன் ராஜ்ஜியக் காரியக்காரர்களை வரவழைத்து "நான் தங்கள் அரசனை ஆறுமாதத்துக்குள்ளாகவே வாலிபனாக்கிவிட்டேன். இப்பொழுது இன்னும் இரண்டுமாதம் பாக்கியிருக்கிறது. அதற்குள் அவர் ரூபம் இன்னும் அதிகமாய் மாறிவிடும். அப்பொழுது முன்னிருந்ததைவிட மகா காந்திமானாக விருப்பார்" என்றுகூறி தாங்கள் யாவரும் நிலவறை வாசலில் சற்று அரசன்பேட்டி வாங்குங்கள் என்று சொல்லி அவர்களை நிலவறை வாயிலுக் கழைத்துக்கொண்டுபோய், அதிலிருந்த வாலிபனுக்குத் தான் செய்துவைத்திருந்த சங்கேதப்படி ஒவ்வொருவருடைய பெயரையும் உத்தியோகத்தையும் தெரிவித்து அவர்களை அடையாளம் கண்டுபிடிக்கும்படி செய்தான். இப்படி நிலவறையிலிருந்த வாலிபனுக்கு ஒவ்வொரு நாளும் வெவ்வேறு மனிதர்களையும் அழைத்துக் கொண்டுவந்து, பரிச்சயம் செய்வித்து அரசனின் அந்தப்புர ஜனங்களைக்கூட அறியும்படி செய்வித்தான்.

எட்டுமாஸம் நிறைந்தவுடன், பலவிதமான ஆகாரங்களையுண்டு கொழுத்துப்போயிருந்த வாலிபனை, போக்கிரியாகிய வைத்தியன்வெளியில் அழைத்து வந்து யாவரிடமும் "அரசனை என் வைத்தியத்தால் வாலிபனாகவும் மரணமற்றவனாயு மாக்கிவிட்டேன். அதை யாவரும் பாருங்கள்" என்றான். அதைக் கேட்டு ராஜ்ய காரியக்காரர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் அரசன் வைத்தியனின் ஔஷதங்களால் திரும்ப யௌவனம் பெற்றதாய் எண்ணி யாவரும் ஆனந்தமடைந்து அரசனைப் புடை சூழ்ந்தார்கள். பிறகு அவ்வாலிப அரசன் ஸ்நானஞ்செய்து சிங்காதனத்தில் உட்கார்ந்து காரியக்காரர்களைக் கூட வைத்துக் கொண்டு ராஜ்ஜிய காரியங்களைப் பார்க்கத் தொடங்கினான்.

இப்படி அரசன் வாலிபனானதை நகரத்தார் யாவரும் ஒரு திருவிழாவாகக் கொண்டாடினார்கள். அதற்குப் பிறகு அன்று முதல் அஜரன் (மூப்பற்றவன்) எனப் பெயர் பூண்ட அரசன் ராஜ்ஜியத்தை ஆளவும் அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளுடன் உல்லாசமாயிருந்து தன் நாட்களைச் சுகமாய்க் கழிக்கவும் தொடங்கினான். ராச்சியத்தின் குடிகள் அஸம்பாவிதமான இவ்விஷயம் தங்களுக்கு நேருக்கு நேரே பிரத்தியட்சமானதைப் பார்த்து, வைத்தியனிடம் கொஞ்சமேனும் சந்தேகம் வைக்காமல் தங்கள் அரசன் உருவம் ரஸாயனத்தால் மாறியதாக எண்ணினார்கள். அஜர அரசனானவன் தன்னுடைய அபிமானத்தால் அமைச்சர்களையும் ராணி கமலப்பிரபையையும் தன் வசமாக்கிக்கொண்டு தன் நண்பர்களுடன் ராஜ்ஜியலட்சுமியை அனுபவிக்கத்தொடங்கினான்.

அஜரன் கொஞ்சகாலம் கழிந்த பிறகு, பீஷஜசந்திரன், பத்மதரிசனன் என்னும் தன் இருதோழர்களையும் வரவழைத்து, தனக்கு அந்தரங்க மித்திரர்களாக வைத்துக்கொண்டு அவர்களுக்கு யானைகள் குதிரைகள், கிராமங்கள் முதலியனவற்றைக் கொடுத்தான். ஆனால் தருணசந்திரனுக்கு அவன் செய்தகாரியத்துக்காக அவனுக்கு ஏதோ மரியாதை செய்தானேயொழிய, அவன்

அயோக்கியனென்று காலஞ்சென்ற அரசன் விஷயத்தில் அவன் செய்த நடவடிக்கையை அறிந்து அவனிடத்தில் நம்பிக்கை வைக்கவில்லை. தருணசந்திர வைத்தியன் அஜர ராஜன் தன் சுயேச்சைப்படி நடப்பதைப் பார்த்து ஒரு நாள் "தாம் என்னிடம் லட்சியம் வைக்காமல் என்ன இப்படித் தங்களிஷ்டப்படி நடக்கிறீர்கள்? நான் தம்மை அரசனுக்கினே னென்பதை மறந்துவிட்டீர்களோ?" என்றான். அதைக்கேட்டு அஜர ராஜன் கொஞ்சமேனும் தயங்காமல் தைரியமாய் "அப்பா, நீ முற்றும் தெரியாதவனென்றுதெரிகிறது. இந்த உலகத்தில் ஒருவனை ஒருவன் ஒன்று செய்யவாவது, ஒருவனுக் கொருவன் கொடுக்கவாவது? பூர்வத்தில் செய்த கருமம் நமக்குப் பெருமையும் சிறுமையும் உண்டாக்குகிறது. சுகதுக்கங்களைக் கொடுக்கிறது. இந்த விஷயத்தில் கொஞ்சமேனும் அகம்பாவம் கொள்ளாதே. இவ்விராச்சியம் எனக்குத் தபலால் கிடைத்திருக்கிறது. இந்தச் சங்கதியின் உண்மையை உனக்கு சமீபத்தில் பிரத்தியட்சமாய்க் காட்டுகிறேன்" என்றான். அரசனுடைய இவ்வார்த்தையைக் கேட்டு வைத்தியன் பயந்து "என்னடா இவன் கொஞ்சமேனும் பயமின்றி இப்படித் துணிவாய் ஞானியைப்போல பதில் சொல்லுகிறான். முன்னிருந்த அரசன் இவனைவிட என் விஷயத்தில் வெகு நல்லவனாயிருந்தான். அவன் எனக்குத் தக்கபடி மரியாதை செய்து வந்து என்னிடம் ஒரு மதிப்பும் வைத்திருந்தான். இவனுக்கு நம்மிடம் கௌரவமும் விசுவாசமு முண்டாவது கடினம். ஏனெனில் இவன் வெகு ஜாக்கிரதையுள்ளவனா யிருக்கிறான். ஆகையால் இவ்வரசன் நம்மிடம் எப்படி நடந்துகொள்ளுகிறானோ, அவ்விதத்தை நாம் அனுசரிப்பது தான் யுக்தம். அவன் தனக்கு இவ்விராச்சியம் தன்னுடைய சற்கருமத்தால் கிடைத்ததென்றும் அதைப் பிரத்தியட்சமாய் காட்டுவதாயும் சொல்லுகிறானே அவன் என்ன காட்டுகிறானோ பார்ப்போம்" என்று மனதில் ஆலோசனை செய்து "தாங்கள் சொல்லுவது சரி, காட்டுங்கள்" என்று சொல்லி வைத்தியன் மரியாதையாய்ப் போய்விட்டான். அதன் பிறகு அரசனுக்கு அடங்கி சொற்படி நடந்துவந்தான். மூடர்களும் அதிக யுக்தி புத்தி தெரிந்தவர்களும் பிறரை ஏமாறவைக்க முயன்று, முடிவில் தாங்களே ஏமாற்றமடைந்து மோசம்போய்க் கையைக் கடித்துக்கொள்கிறவிதம் இப்படித்தான்.

ஒரு நாள் அஜர ராஜன், தருணசந்திரன் இன்னும் சில சிநேகிதர்களுடன் உலாவித்திரிய நகரத்துக்கு வெளியே போனான். நடந்து நடந்து அரசன் ஆற்றங்கரையில் வந்து சேர்ந்தான். அச்சமயம் ஆற்றுப் பிரவாகத்தில் ஐந்து பொன் தாமரை மலர்கள் போவது கண்ணில் பட்டன. அரசன் ஒரு வேலைக்காரனையனுப்பி அம்மலர்களைக் கொண்டுவரும்படி செய்து தன்னருகிலிருந்த வைத்தியன் தருணசந்திரனைப் பார்த்து "வைத்திய சிரேஷ்டரே! இப்பொற்றாமரைகளைக் கண்டு எனக்கு வெகு ஆச்சரியமுண்டாகி யிருக்கிறது. தாங்கள் வெகு சமர்த்தராயிருப்பதோடு எனக்கு வெகு வேண்டியவரா



யிருக்கிறீர். ஆகையால் தங்களுக்கு இந்த வேலை வைக்கிறேன். தாங்கள் இவ்வாற்றைப் பிடித்து அதன் உற்பத்தி ஸ்தானம் வரையில் சென்று இம்மலர்கள் எங்கே உண்டாகின்றன, அவைகளின் ரீதி யென்ன வென்பதைச் சோதனை செய்து என்னிடம் வாருங்கள். எனக்கு இந்த விருத்தாந்தம் முழுவதையும் சொல்லவேணும்" என்றான். இப்படிச் சொல்லி தன் நகரை நோக்கிச் சென்றான். அவ்வைத்தியன் எதிர் பேச்சுப் பேச வகையற்றிருந்ததால், அரசன் காட்டிய மார்க்கத்தைப் பின்பற்றி மத்தி மத்தியில் இறங்கிப் பிரயாணம் செய்தான். இப்படிச் செல்லுகையில், ஆற்றங் கரையில் ஒரு ஆலயம் இருந்தது. அவ்வாலயத்துக்கு எதிரில் ஆற்றங்கரையில் ஒரு ஆலவிருட்சம் இருந்தது. அவ்வாலமரத்தில் ஒரு மனிதனுடைய எலும்புக்கூடு தொங்கிக்கொண்டிருந்தது கண்ணில்தென்பட்டது. தருணசந்திரன் வழி நடந்த சிரமத்தால் களைப்படைந்து நதியில் ஸ்நானம் செய்து, பகவானை யர்ச்சித்து சிரமபரிகாரம் செய்து கொள்ள உட்காருகையில், வானம் ஒரே யடியாய் மழை பொழிய ஆரம்பித்து, அம்மழை ஆலமரத்தில் தொங்கிக்கொண்டிருந்த மனித எலும்புக் கூட்டிலும் விழுந்தது. அவ்வெலும்புக் கூட்டிலிருந்து மழை ஜலம் அம்மரத்துக்குக் கீழேயிருக்கும் ஆற்று ஜலத்தில் கொட்டிக்கொண்டிருந்தது. உடனே அதிலிருந்து பொற்றாமரைகள் உண்டாகிக்கொண்டு வந்தன. அதைப்பார்த்து வைத்தியன் 'அடா, இதென்ன ஆச்சரியம்? விசாரிப்போமென்றால் இவ்வனத்தில் ஒரு மனிதனையும் காணோமே! உண்மையில் பிரம்மாவின் சிருஷ்டி அதியாச்சரிய முண்டாக்கும் பதார்த்தங்களால் நிறைந்திருக்கிறது. ஆகையால் அதை யார் அறியக்கூடும்? இப்பொழுது இச்சரீரத்திலிருந்து நீர்த்துளிகள் ஆற்றில் விழுந்து அவைகள் பொற்றாமரைகள் ஆவதை நான் பிரத்தியட்சமாய்ப் பார்த்தேன். இப்பொழுது நான் அவ்வெலும்புக் கூட்டை இத்தீர்த்தத்தில் தள்ளிவிடுகிறேன். ஒன்று அதன் முதுகிலிருந்து கமலங்கள் உற்பத்தியாகும் அல்லது அதைத் தீர்த்தத்தில் போடுவதால் அதை அக்கினி ஸம்ஸ்காரம் பண்ணின புண்ணியமாவது எனக்குக் கிடைக்கட்டும்" என்று ஆலோசித்து, தருணசந்திரன் மரத்தின் கிளையிலிருந்து அவ்வெலும்புக் கூட்டை ஜலத்தில் தள்ளினான். அப்பொழுது அதன் முதுகிலிருந்து சுவர்ண கமலங்கள் உற்பத்தியாயின. வைத்தியன் அன்றைய தினம் அங்கிருந்து விட்டு மறுநாள் தன்னூரை நோக்கிப் புறப்பட்டு சிறிது நாளில் விலாஸபுரம் வந்துசேர்ந்தான். வழியில் மிக்க பிரயாசைப்பட்டிருந்ததால் அவன் பலஹீனமாய்ப் போயிருந்தான். உடம்பும் தூசிபடிந்து அழுக்கடைந்திருந்தது. இந்த வேஷத்துடனே அரசன் தர்பாருக்கு வந்து சேர்ந்தான். ராஜசபை வாசலிலுள்ள காவற்காரனிடம் தான் வந்த சமாசாரம் சொல்லியனுப்பி, அரசனால் உடனே உள்ளே வர ஆக்ஞை பெற்று அரசனிடம்போய் சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டான்.

அரசன் அவன் க்ஷேம சமாசாரத்தை விசாரித்து வெகு அன்பும் ஆதர

வும் காட்டி உபசாரணைகள் புரிந்தான். அவன் தான் பிரயாணம் செய்து வந்த சங்கதி முழுமையையும் அரசனிடம் அறிவித்தான். அப்பொழுது அரசன் தன்னிடம் இருந்த ஜனங்கள் யாவருக்கும் விடைகொடுத் தனுப்பி விட்டு, வைத்தியனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான் :— "என் மித்திரனே, நீ பொன் தாமரை மலர்கள் உண்டாவதைப் பார்த்தாயே; அது பரந்தாமனுடைய புண்ணிய க்ஷேத்திரம். அந்த க்ஷேத்திரத்தில் ஆலமரத் தில் தொங்கிக்கொண்டிருக்கும் எலும்புக் கூட்டைப் பார்த்தாயே, அது என் பூர்வ ஜன்மத்து தேகம். இதற்கு அடுத்த முன் பிறப்பில் நான் அந்த க்ஷேத் திரத்தில் அவ்வாலமரத்துக் கிளையில் தலையைக் கீழே தொங்கவிட்டு தவம் செய்துகொண்டிருந்து உபவாஸமிருந்து என் தேகத்தை விட்டுவிட்டேன். நான் செய்த வெகு பலமான தவத்தின் மகிமையால் மழையால் நனைந்த என் எலும்புக் கூட்டிலிருந்து சொட்டும் நீர்த்துளிகள் ஆற்று ஜலத்தில் விழும் போது அதிலிருந்து பொன் கமலங்கள் உற்பத்தியாகின்றன. அவ்வெலும் புக் கூட்டை நீ ஜலத்தில் தள்ளினுயே அது வெகு நல்லவேலை; ஏனெனில். பூர்வஜன்மத்தில் நீ எனக்கு மித்திரனுய் இருந்தாய். இந்த பீஷஜ சந்திர னும், பத்மதரிசனனும் கூட அந்த ஜன்மத்திலேயே எனக்கு நண்பர்களா யிருந்தார்கள். ஆகையால், நண்பனே! நான் பூர்வஜன்மத்தில் செய்த தவத் தின் மகிமையால் எனக்குப் பூர்வஜன்ம ஞானமிருக்கிறது. இந்த ராச்சியமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தச் செய்தியை நான் உனக்கு ஒரு யுக்தி யால் காட்டினேன். நீ ஜலத்தில் தள்ளின எலும்புக் கூட்டை நான் அடை யாளஞ் சொல்லி உனக்கு எல்லா சமாசாரமும் சொன்னேன். ஆகையால், நீ "இவனுக்கு நான் இராச்சியம் கொடுத்தேன்" என்கிற அபிமானத் தை வைக்காதே. மனதில் யாதொரு கவலையும் வைக்காதே. ஏனெனில் மனுஷனுக்குப் பலன்கொடுப்பது பூர்வஜன்மத்தில் செய்த கர்மமேயன்றி வேறொன்றல்ல. ஒரு பிராணி தாயார் வயிற்றில் வந்தது முதல் பூர்வஜன்மத் தில் செய்த கர்மபலனை யனுபவிக்கவேண்டியதுதான் என்றான்."

இப்படி அரசன் செய்த உபதேசத்தைக் கேட்டுப் பெரிதும் ஏமாற்ற மடைந்து, தான் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததென்று வருந் தியவனாய்த் தன் வீடுபோய்ச் சேர்ந்தான். உதாரகுணசீலனும் பூர்வஜன்ம ஞானம் பொருந்தியவனுமாகிய அரசன் தருணசந்திர வைத்தியனுக்கு வேண்டிய தனம் கொடுத்து அவன் யோக்கியதைக்குத் தக்கபடி அவனுக்கு மரியாதை செய்தான். மூத்திய அரசனின் தர்ம பத்தினியான கமலப்பிர பைக்குத் தனது வரலாறும், தருணசந்திரன் அவளுடைய பர்த்தாவைக் கொன்றுவிட்டதுமாகிய விவரங்களைத் தெரிவித்து அதை யந்தரங்கமாக வைத்துக்கொள்ளும்படியும், இல்லாவிட்டால் ஜனங்கள் கலகம் செய்வார்க ளென்றும், தருணசந்திரனின் இராஜஹத்திக்கு அவனுக்குக் கடவுளே பல னளிக்கட்டுமென்றும் கூறி, அவளைத் தனது மாதாபோன்று கருதி மேன்



மையாக, அவள் உத்திரவுப்படி இராஜ்ய காரியங்களை நடத்திவந்தான். கமல பிரபையும் எல்லாம் விதிவசமென்று மனது தேறிக் காலஞ்சென்ற தனது பர்த்தாவிடத்துப் பரமபக்தியுடன் தன் வாணாளைக் கழிப்பதானாள். மேலும் தனது ஸகோதரியான வித்யுன்மாலையை அஜாராஜனுக்குக் கொடுத்து மண மும் செய்து வைத்தான். ஜனங்கள் இந்த விவாகத்தை அரசனின் இரண் டாவது விவாகமாகவும், கமலப்ரபையை முதல்தாரமாகவும் இராஜமகிஷி யாகவும் கருதுவதாயினர். பெரிய இடங்களின் அலங்கோலங்கள் இப்படித் தான் வெளிக்கு வராமல் மூடப்பட்டுப் போயிருக்குமென்பது உலக அனுப வத்தால் துணியப்படுகின்றது. பிறகு அஜாராஜ அரசன் நியாயமாய் வெற்றி பெற்று புண்ணிய வசத்தால் சத்துரு பாதையின்றிக் கிடைத்த பூமண் டலத்துக்கு அரசனாய் தனது தேவியான வித்யுன்மாலையுடனும் சிநேகிதர் களுடனும் தன் வாழ்நாளைச் சுகமாய்க் கழித்து வந்தான். சில காலத்திற் குப்பிறகு தருணசந்திரனும் இராஜஹத்தி தோஷத்தால் குஷ்டரோகியாகி வருந்திப் பரிதாபமான மரணமடைந்தான்.

---

# கனவோ நினவோ!

---

காந்தார தேசத்தில் ஒரு பெரிய வனாந்தரத்து வழியாய் ஒருவன் ஓரிடத்திற்குப் போய்க்கொண் டிருந்தான். அவன் ஒருநாள் வெகுதூரம் யாத்திரை செய்துவந்த வருத் தத்தாலும் வெயிலின் கொடுமையாலும் மிகவும் களைத்துத் தவிக்கையில், அருகாமையில் ஒரு காட்டோடையைக் கண்டு, அதனோரத்தில் குதிரை யைக் கட்டிவிட்டுத் தானும் சற்றே இளைப்பாறும்படி உட்கார்ந்தான். அவ் விடமெல்லாம் நன்றாய்க் கிளைத்துத் தழைத்து ஆகாய மளாவியவைகளாய் சிறிதும் சூரிய கிரணம் தரையில் விழாதபடி மேகமண்டலம்போல் இருண்டு பூமியைக் கவிந்துகொண்டிருக்கும் பலவித விருக்ஷங்களும் முட்செடிகளும் புதர்களுமடர்ந்த ஒரு பெருங் காடாயிருந்தது. அவ்விடங்களில் சிறிதும் மனித சஞ்சாரமென்பதே கிடையாது. அப்படிப்பட்ட மனிதப் பூண்டே யில்லாத அரணியத்திலே அம்மனிதன் தன்னந்தனியே உட்கார்ந்திருக்கை யில், அண்டையிலிருந்த ஓர் புதரில் சலசலவென்று ஒரு சத்தங் கேட்டது; இரண்டொரு நிமிஷத்திற்கெல்லாம் பயங்கரமான கர்ச்சனையொன்று உண் டாயிற்று. உடனே பெருஞ் சிங்கமொன்று வெளித்தோன்றி அங்கே மேய் ந்து கொண்டிருந்த குதிரையின்மேற் பாய்ந்து அதை ஓர் அறை அறைந்தது. அதைக் கண்ட க்ஷணம் அவன் அதிக கோபத்துடன் எழுந்து கத்தியை உருவிக் கையி லெடுத்துக் கொண்டுபோய் அச்சிங்கத்தின் பின்னங்கால் ஒன்

றை முதலில் வெட்டி, அது பின் பக்கமாய்த் திரும்புவதற்கு முன்னமே மனஞ்சலியாமல் மற்றொரு காலையும் வெட்டினான். பின்பு அச்சிங்கம் ஒன்றும் செய்யச் சக்தியற்றதாய்க் கீழே விழுந்தது. சிங்கம் குதிரையைக் கொல்லவில்லையென்றாலும், அது முதலில் அறைந்த ஒரு அறையினாலேயே குதிரை கீழேவீழ்ந்து இறந்துபோயிற்று. நடக்கிற வருத்தமாவது இல்லாமல் சுமந்துகொண்டு போகவல்ல வாகனம் போய்விட்டதென்றாலும், அதனால் அவன் மனங்கலங்காமல், இனி மற்றவழியும் காலாலேதானே நடந்து கழிக்க வேண்டுமென்று, கீழே வீழ்ந்து கிடந்த சிங்கத்தின் மண்டையைப் பிளந்துவிட்டு, உடனே தன் வழிபோகப் புறப்பட்டான்.

அங்கிருந்து சிறிது தூரம் போகையில், அங்கோரிடத்தில் ஒரு மானும் அப்போது தான் போட்ட ஒரு குட்டியுமாய் மேய்ந்துகொண்டிருக்கக் கண்டு, இன்றைய தினம் நமது பசியைத் தணிக்க இது ஒருவாறு போதுமானதென்று, அம் மான்குட்டியைப் பிடித்துக்கொண்டுபோனான். குட்டியை அவன் பிடித்துக் கொள்ளவே அந்த மான் கண்ணும் கண்ணீருமாய் ஒன்றும் தோன்றாமல் அவனைப் பின்தொடர ஆரம்பித்தது.

பொழுது போனவுடன் அவன் அங்கே ஒரு மரத்தடியில் இறங்கி, அவ்விடத்திலேயே இரவைக் கழிக்கும்படி நிச்சயித்தான். அவன் அங்கே நின்றதுகண்டு அவனைத் தொடர்ந்துபோன பெரிய மான், குட்டியைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர்விட்டுத் தலையைத் தூக்கித் தூக்கி அசைத்துக் கொண்டு, சிறிது தூரத்துக்கப்பால் நின்றது. குட்டியும் தாயைப் பார்த்துப் பார்த்து அதனிடம் போக அதிக ஆவல்கொண்டிருந்தது. அவன் ஏதோ ஒரு காரியமாய்க் குட்டியை அங்கேயே விட்டுவிட்டுக் கொஞ்சம் தூரம் ஒதுங்கிப் போக, சரேலென்று தாயானது குட்டியண்டை போய், தனக்கு அதினிடத்திலுள்ள ஆசையெல்லாம் காட்டி அதைத் தழுவிக்கொண்டது. மறுபடியும் அவன் கிட்ட வர, அது கொஞ்சம் ஒதுங்கிப்போய் நின்றவிடத்தில் நிற்காமல் தவித்தது.

அப்படி அவ்விரண்டு மிருகங்களும் படுகிற பரிதாபத்தைப் பார்த்தால் எப்படிப்பட்ட கல்நெஞ்சனுக்கும் சிறிதளவு மனமுருகுமே! அவற்றின் துன்பத்தைப் பார்த்து மனம் பொறாமல் அந்தத் தயாள மனதுள்ள மனிதன் போனாற்போகிறதென்று குட்டியை அவிழ்த்து விட்டான். அது மிகுந்த சந்தோஷத்தால் ஒரு கத்து கத்தித் துள்ளிக் குதித்துத் தாயண்டை ஓடிப் போயிற்று. உடனே அவ்விரண்டும் அவனை விழித்துப் பார்த்துவிட்டு நடுக்காட்டில் ஓடிப்போயின.

அப்படி அவன் அக்குட்டியை விடுவித்ததனால் அவற்றிற்குண்டான ஆநந்தத்திற்கு அளவு உண்டோ? இவ்விதமான நற்செய்கைகளால் நல்லோர்களுடைய மனது மிக்க மகிழ்ச்சியடையும். மனிதரானாலென்ன? மற்ற ஜந்துக்களானாலென்ன? எல்லாவற்றிற்கும் கடவுளுடைய நன்கொடையான



பிராணன் என்பது ஒன்று தான். எல்லாவற்றிற்கும் பிராணப் பிரதிஷ்டை செய்தவர் கடவுள் ஒருவரே. ஆதலின் மனிதர்களுடைய உயிரை உயர்வாயும் மற்றவைகளின் உயிரைத் தாழ்வாயும் நினைப்பது மிகவும் பிசகு. மனிதர் தவிர மற்ற ஜந்துக்களெல்லாம் ஊமையென்றாலும், மனிதரைப் பார்க்கிலும் அவற்றிற்குத் தங்கள் உயிரிடத்தில் ஆசை அதிகம்; தங்கள் வருத்தங்களை வெளிப்படுத்த வாயில்லையென்றாலும், உணர்ச்சி மாத்திரம் மிகவும் அதிகம்.

மான் குட்டியைக் கொல்லாமல் விடுவித்ததாகிய நற்செய்கை செய்தனிமித்தம் அம்மனிதனுடைய மனது மிகவும் தெளிவாய்க் களிப்புற்றது. பின்பு அவன் தன் கையில் மிகுந்திருந்த சோற்றில் சிறிதளவு புசித்துவிட்டு அங்கேயே ஒரு மரத்தண்டின்மேல். இலைகளை மெத்தைபோலப் பரப்பிக் கொண்டு படுத்தான். அப்பொழுது நிலவு நன்றாய்க் காய்ந்தது. அம்மரத்தடியில் நிலவு வெளிச்சம் தெரியவில்லையென்றாலும், அம்மரத்திலைகள் காற்றிலசையும்போது அவற்றின் இடை இடையே நிலவொளி பொட்டு பொட்டாய் அசைந்தசைந்து தோன்றுவது ஓரழகாயிருந்தது.

அப்படி அழகாய் நிலவுகாய்ந்த இரவில் அம்மனிதன் அன்றைய தினம் நடந்த தன் கதைகளை நினைத்துக்கொண்டே படுத்து அயர்ந்து தூங்கிப் போயினான். தூங்குகையில் விடியனேரத்தில் ஒரு கனவு கண்டான். அதாவது,—சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்து யாரோ ஒரு மகாபுருஷன் எதிரே தோன்றி, இன்றைய தினம் நீ பெருஞ் சிங்கத்தினிடத்திற் காட்டிய பராக்கிரமத்தையும், ஒரு அற்ப மிருகத்தினிடத்திற் காட்டிய உதார குணத்தையும் கண்டு கடவுளுக்கு மிகவும் முகோல்லாசமாயிற்று. அதற்கு வெகுமதியாகக் கடவுள் இவ்வுலகத்தில் குஜினி ராஜ்யத்தை உனக்குக் கொடுத்திருக்கிறார். ஆயினும் நமக்குப் பெருமை வந்துவிட்டதேயென்று உன் குணத்தை உபேக்ஷிக்கலாகாது. இப்படியே உன் பகைவர்களிடத்தில் பராக்கிரமமும் குடிகளிடத்தில் காருண்ணியமும் காட்டி வரவேண்டுமென்று சொல்லிவிட்டு உடனே மறைந்து போயினார். அந்தக்ஷணமே அம்மனிதன் விழித்துக் கொண்டு எழுந்தான்.

அப்பொழுதும் நிலவு நன்றாய்க் காய்ந்துகொண்டிருந்தது. உதயமாக வெகு நாழிகை இருந்ததென்றாலும், அவனுக்கு அப்புறம் சிறிதும் நித்திரை வரவேயில்லை. இதென்னவென்று தான் கண்ட கனவை நினைத்துக் கொண்டே எப்போது பொழுது விடியப் போகிறதென்று எதிர்பார்த்திருந்தான்.

அப்படியிருக்க விடியற்காலமாயிற்று. சந்திரனும் மேற்றிசையில் போய் மறைந்தான். நக்ஷத்திரங்களும் ஒவ்வொன்றாய் மறைந்து போயின. ஆயினும் அப்பொழுது பனி மூடிக்கொண்டிருந்ததனாலும் அச்சோலையின் அடைப்பினாலும், சூரியன் உதித்து ஒரு மார்புயாம் வருமளவும் அவனுக்குப் பொழுது விடிந்த செய்தி தெரியவேயில்லை. கொஞ்சம் வெயிலேறின

வுடனே எழுந்து தன் க்ஷேமத்தைக் கருதிக் கடவுளைத் தொழுது தன் கையில் சிறிதளவு மிகுந்திருந்த சோற்றைத் தின்று, இராத்திரி தான் வைத்த வாழைத் தொன்னையில் தேங்கியிருந்த கொஞ்சம் பனித்தண்ணீரைக் குடித்துவிட்டுக் கடவுளையே துணையாக நம்பி அப்புறம்போகப் புறப்பட்டான்.

அந்த மனிதன் தான் ஒருநாளும் போயிராத அந்தப்பெருங்காட்டிலே வழிதுறை தெரியாமல் தன்னந் தனியே போகையில், இராத்திரி கண்ட கனவு அடிக்கடி மனதில் தோன்றிக்கொண்டேயிருந்தது; அவன் கனவிற் கண்ட செய்தியெல்லாம் கடவுளே நேரில் வந்து சொன்னவைபோலத் தோன்றின. ஆயினும் பேர் ஊரில்லாமல் எவ்விதமுனை ஆதரவும் அற்று நடுக் காட்டில் அல்லாடித் தவிக்கிற ஒருவன் ஒரு பெரிய ராஜ்யத்திற்கு அரசனாகிற தென்றால், அதை விடக் கைகூடாத காரியம் வேறென்ன? அதனால் அம் மனிதன், இது ஏதோ பித்த விகாரத்தில் உண்டான ஒரு பேய்க்கனவென்று அதைப் பலதரம் மனதைவிட்டு நீக்க முயன்றான்; ஆயினும் அது நீங்க வில்லை. அப்படியாக அந்த மனிதன் அக்காட்டில் பலவித வருத்தங்களையும் பொறுத்துக்கொண்டு தனியே போயினான்.

சிறிது தூரத்துக்கப்பால் அங்கோரிடத்தில் யாரோ எட்டுபேர் நடுவே தீமூட்டிக்கொண்டு அதைச்சுற்றி உட்கார்ந்து தீனி தின்று கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டு அந்த வழிப்போக்கன் இவர்கள் யாரோ தெரியவில்லை; கள்ளர்களானாலும் நான் இப்போது இவர்களைக் கண்டு பயந்தோடுவதிற் பயனில்லை. எப்படித்தான் ஓடினாலும் இவ்வெட்டு பேருக்கும் தப்பித்துக்கொண்டு ஓட நம்மால் ஆகுமா என்று நினைத்துத் தைரியமாகவே அவர்கள் சமீபத்திற் சென்று, ஐயா, சமீபத்தில் எங்கேயாவது ஒரு ஊருண்டா? எவ்வளவு தூரமிருக்கும்? அதற்கு வழி எப்படி? என்று கேட்டான். அதுகேட்டு அவர்களுள் ஒருவன் எழுந்து அவனண்டை வந்து குறிப்பாய்ப் புன்னகை நகைத்து, உன்னுடைய வழிநடை இவ்வளவோடு முடிந்து போயிற்றென்று நீ நினைக்கவில்லையோ என்று வேறொரு கருத்தாய்ப் பேசினான்.

அதற்கு அவ்வழிப்போக்கன், சமீபத்தில் எங்கேயாவது ஒரு ஊரிருப்பதாகச் சொல்லி அதற்கு நேர்வழியுமொன்று காட்டுவாயானால், இன்னும் சிறிது தூரம் போகவேண்டுவதுதான்; இல்லாவிட்டால் இனி நான் எங்கேயென்று வழிதேடிக்கொண்டு போகிறது; இங்கேயேதான் நிற்கவேண்டும் என்றான்.

அதுகேட்டு அவன், நீசொல்வது சரிதான்; ஆயினும் இக்காட்டு வழியாய்ப் போகிறவர்களெல்லாம் பத்திரமாய்ப் போய்ச் சேரவேண்டுமானால் அதற்கு வரி கொடுத்துப் போவது வழக்கமாயிற்றேயென, வழிப்போக்கன், ஆனால் நீங்கள் எனக்கு வழியும் காட்ட வேண்டாம்; நான் அதற்கு வரியும் கொடுக்கமாட்டேன் என்றான்.



ஆயின் நீ ஒருவன் இவ்வெட்டுப் பேருக்கும் ஈடென்று நினைக்கிறாயோ? வீணாகக் கெட்டுப் போகாதே; கொஞ்சம் அடங்கிப் பேசு; நாங்கள் எங்களுடைய புத்தி சாமர்த்தியங்களைக்கொண்டு தருணம் வாய்த்தபோது மனிதர்களிடத்தில் பணம் பறித்தும், அப்படி வாய்க்காதபோது இக்காட்டு விளைவுகளைக் கொண்டும் இக்காட்டிலேயே நெடுநாளாய் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். ஆதலால் உன் தோள்மூட்டையில் என்ன இருந்தாலும் நீ வைத்துவிட வேண்டுவதுதான். நாங்கள் முதலில் பேசின பேச்சுக்கு இரண்டாவது கிடையாது என்று அக்காட்டு மனிதன் சொல்ல, வழிப்போக்கன், ஆயின் நான் கடைசியில் கள்ளர் கையிலா சிக்கிக்கொண்டேனென, அவன் பின்னென்ன வென்றான்.

அப்படியானால் நான் உனக்கு ஒருபோதும் அடங்குவதில்லை; இவ் வெழுபேரல்ல, நூறு பேர் தான் உனக்குத் துணைசெய்ய வரட்டுமென்று வழிப்போக்கன் தைரியமாய்ப் பேச, அந்தத் திருடன் நகைத்துத் தன் தோழர்களைப் பார்த்து, இதோ ஒருவனிருக்கிறான்; இவனை ஆயுதமின்றி வணக்குவது கடினமெனத் தோன்றுகின்றது; நாம் சொல்லுகிற நற்புத்தி இவன் காதிலேறாவிட்டால், பின்பு அதற்குத்தக்க கருவிகளைத்தான் உபயோகிக்க வேண்டும்; வாருங்கள் என்று சொல்லிவிட்டு, வழிப்போக்கனைத் திரும்பிப் பார்த்து, அதோ உன் தோள்மூட்டையைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்து நில்; நீ எவ்வளவு வல்லவனோ பார்ப்போமென்றான்.

அதுகேட்டு வழிப்போக்கன் அவர்கள் தன்னை எதிர்க்கத் துணிந்தார்களென்று கண்டு, உயிரினிடத்திலிருக்கிற மதிப்பின்மேலல்லவோ எல்லாமிருக்கிறது; என் பொருளைக் காப்பாற்றுகிற நிமித்தம் என் உயிர் போய் விடவேண்டுமென்பது கடவுளுடைய கட்டளையாயிருக்குமாயின், அவ்வுயிரை விட்டுவிட நான் இப்போதே சித்தமாயிருக்கிறேன். இவ்வுலகத்தில் ஒரு நன்மையும் அறியாத ஒருவன் இருந்தாலென்ன, செத்தாலென்ன? ஏதோ, நீங்கள் கள்ளர்களே யானாலும், உயிரினிடத்தில் நிராசை கொண்டிருக்கிற என்னை எப்படி வருத்துகிறீர்களோ பார்ப்போமென்று சொல்லி, பின்புறத்திலிருந்த ஒரு மரத்தின்மேல் சாய்ந்து கத்தியை உருவிக் கையிலெடுத்துக் கொண்டு, இனி நீங்கள் உங்கள் கையில் ஆனதைப் பார்க்கலாம்; நான் இதோ உயிருக்குத் துணிந்து எதிர்க்கக் காத்திருக்கிறேன் என்றான்.

அதுகேட்டு அவர்கள் பிரமித்து, இவனுடைய தைரியமும் துணிச்சலும் எவ்வளவு பார்த்தாயாவென்று ஆச்சரியப்பட்டு, அவன் அப்படித் துணிந்தது அவனுடைய மதியீனமேயென்று காட்டவேண்டுமென, முதலில் அவன்மேல் ஒரு அம்பு தொடுத்தார்கள். அதுகண்டு அவ்வழிப்போக்கன் தோள் மூட்டையைக் கீழே போட்டுவிட்டு அதைத் தடுக்கப்போனான். அதற்குள் அந்தத் திருடர்கள் அவன் கீழே வைத்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்தார்கள். அதில் பொருளைச் சேர்ந்தது சிறிதும்இல்லாமற்

போகவே மிகவும் நிராசையாய், அதிலிருந்தவைகளை யெல்லாம் கீழே பரப்பிவிட்டு, இந்த அற்பமான பொருளையே காத்துக்கொள்ளத் தன் உயிர்க்குத் துணிந்தவன் எவ்வளவு தீரனுயிருக்க வேண்டுமென்று ஆச்சரியப்பட்டார்கள்.

அவன் மூட்டையில் ஒன்றுமில்லாமற் போனதுகண்டு, முன் அவனுடன் பேசின கள்ளன், நல்லது, இவன் மூட்டையிலேதான் ஒரு காசுகூடக் காணப்படவில்லையே; எப்படியாவது நாம் இவனைக்கொண்டு கொஞ்சம் பயனடையவேண்டும். இவன் நன்றாய்க் கொழுத்துப் பருத்த ஒரு காட்டாளாயிருக்கிறான். இவனை அடிமையாக யாருக்காவது விற்றால், வேண்டியபொருள்கொடுத்து வாங்கிக்கொள்வார்கள் என்று ஆலோசித்து அவனைப் பார்த்து' அடா பயலே, இவ்விடங்களில் எத்தனையோ பேர் தங்களுக்காகச் சுமை தூக்கிக் கொண்டுபோக வேலைக்காரர் இல்லாமல் தவித்துக்கொண் டிருக்கிறார்கள். உன்னை அப்படிப்பட்டவர்களுக்கு அடிமையாகக் கொடுத்து விட்டால் எங்களுக்கு வேண்டியபொருள் கிடைக்கும்; போவோம் வா; உன் கையில் இவ்வம்பு பட்ட வடு வாசியாகுமளவும் இங்கே சும்மாயிருந்து பின்பு பக்கத்தூருக்குப் புறப்படலாமென்றான்.

அப்படியே அக்கள்ளர்கள் அவன் குட்டையால் அவனுடைய கையிரண்டையும் சேர்த்துக்கட்டி, ஓடிப்போக வொட்டாமல் அவனுக்கு இருபுறமும் காவலாய் நின்று அழைத்துக்கொண்டு சமீபத்திலிருந்த கள்ளர் குடிசைபோய்ச் சேர்ந்தார்கள்.

அங்கே மூன்றுநாள் வரையிவ் அவ்வழிப்போக்கனைக் காவல் செய்திருந்து மூன்றாநாள் அந்தத் திருடர்களுடைய தலைவன் அவனை வெளியே இழுத்துவந்து, இப்போது உன் தொழிலை மாற்ற உனக்குச் சம்மதமுண்டா இல்லையா? நாங்கள் திருடர்கள், திருட்டுத்தொழிலுக்குப் புத்தி சூக்ஷ்மமும் நெஞ்சுறதியும் வேண்டும். நீ மிக்க தைரியமும் துணிச்சலும் உடையவனெனத் தோன்றுகின்றது. ஆதலால் நீ எங்களோடு சேர்ந்து எங்களுடைய நன்மையைத் தேடுவதற் கென்னசொல்லுகிறாய் என்றான்.

அதுகேட்டு அந்த மனிதன், திடீரென்று திருட்டுத்தொழிலைக் கைக்கொள்வதென்றால் எனக்கு மிகவும் அச்சமாயிருக்கிறது; என்னை நீங்கள் நம்பக்கூடாது; நான் உங்களை வஞ்சனை செய்தாலும் செய்துவிடுவேன் என்று சொல்ல, அந்தத் திருடன், அப்படி அபாயம் வந்தால் வரட்டும்; தைரியசாலியான புருஷன் ஒருபோதும் தைரியத்தை அவமரியாதை செய்யமாட்டான். சமயம் வந்தபோது எதிர்க்காமல் தந்திரமாய் ஓடிப்போவது பயங்காளியின் தன்மையல்லவோ? ஆதலால் நீ சரியாகவே நடப்பாயென்று எங்களுக்கு நன்றாய்த் தெரியுமென்றான்.

அதற்கு அந்த மனிதன், அப்படியாயின் நீங்கள் எண்ணுவது மூடத்தனமேயொழிய வேறன்று. தைரியசாலியாயிருப்பவன் சத்தியமுள்ளவனாயு



மிருப்பான் என்று சொல்ல, அவர்கள், நீ தைரியசாலியாயினும் சத்தியவாதியாய் எங்களுக்குத் தோன்றவில்லை. நீ தைரியசாலியென்பதைக்கூட நிச்சயமாய் நம்புவதற்கில்லை. குதிரை தேய்த்துக் கழுவும் கூலிவேலைக்குத்தான் நீ தகுதியெனத் தோன்றுகின்றது. எங்களுடன்சேர்ந்து எங்கள் தொழிலுக்குத் துணைசெய்யத்தான் உனக்கு சம்மதமில்லையே; ஆயினும் உனக்காக நாங்கள் பட்ட வருத்தத்திற்கும் இத்தனை நாள் நாங்கள் உன்னைக் காத்ததற்கும் தக்க பயன் ஏதாவது நாங்கள் உன்னால் அடையவேண்டும். உன்னிடத்திலேதான் ஒரு காசுகூட இல்லையெனத் தெரியவருகின்றதே. ஆதலால் உன்னை யாருக்காயினும் விற்றுவது எங்கள் குடும்ப ரக்ஷணத்திற்கு அவசியமான கொஞ்சம் பொருள் தேடிக்கொள்கிறோமென்றுசொல்லி, அவனை அங்கிருந்து மற்றோரிடத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

சிறிது தூரம் போகையில் அந்தக் காட்டோரத்திலே சிறிய குப்பமொன்றிருந்தது. அந்தக் குப்பத்தில் அவர்கள் போய்ச் சேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் யாரோ ஒரு வர்த்தகன் வந்து அந்தக் கள்ளர்கள் கொண்டுபோன மனிதனை விலைக்கு வாங்கிக்கொண்டான். அதனால் அந்த மனிதன் அவ்வர்த்தகனுக்கு அடிமைப்பட்டு அவன் சொன்னபடி ஆடவேண்டியதாயிற்று. முன்பு அவன் கண்ட கனவென்ன? இப்போது அவனுக்கு நேர்ந்த கதியென்ன? அதை நினைத்து அவன் மிகவும் வெட்கமடைந்தான்.

ஆயினும் நிராசையாய் மனங்கலங்கி நிற்பதிற் பயனில்லையென்று கண்டு, அந்த மனிதன் கடவுளைத் தியானித்துக்கொண்டு தன் விதிக்கு உட்பட்டிருந்தான். அவன் தனக்கு அடிமையானவுடனே வர்த்தகன் அவனுடம்பிலிருந்த காயத்தைக் கண்டு அதை நன்றாய் ஆற்றினான். பின்பு அவன் உடம்பை நன்றாய்ப் பரீக்ஷித்துப் பார்த்து அவன் நல்ல பலசாலியென்று தெரிந்து, தான் அவனை அடிமையாக வாங்கிக்கொண்டதைப்பற்றி மிகவும் திருப்தியடைந்தது மல்லாமல், அவனுடைய பூர்வகதைகளைக்கேட்டு அவன் நன்றாய் உழைப்பு தாளத் தகுந்தவனென்று தெரிந்து, அவனைக் கொண்டு தான் நல்ல லாபம் அடையலாமென்று மிக்க மகிழ்ச்சியும் அடைந்தான்.

மறுநாள் அந்த வர்த்தகன் அவ்வூரிலிருந்து குராசான் என்ற பட்டணத் துக்குப் போகப் புறப்பட்டு வெகுதூரம் வழிநடந்து தன் அடிமையோடுகூட அந்த நகரம் போய்ச்சேர்ந்தான். அப்பட்டணத்தில் அந்த வர்த்தகன் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டு மிகவும் அன்புடன் அவ்வடிமையைப் பல விதத்திலும் ஆதரித்த ஆதாவு இவ்வளவு அவ்வளவன்று. அவன் தேகத்தில் நல்ல புஷ்டியுண்டாக்கித் தனக்கு விசேஷ லாபங் கிடைக்குமாறு அவனை விற் கவேண்டுமென்பது வர்த்தகன் கொண்ட கொள்கை. அப்படியே அவன், நன்றாய்ப் பருத்துக் கொழுத்த சுதந்தரமான மனிதனொருவன் தன்னிடத் தில் விலைக்கு வந்திருக்கிறான், அவனுக்கு ஈடானவர் இத்தேசத்திலேயே

கிடையாது என்றதாய் அவ்விடமெங்கும் பிரசித்திப்படுத்தினான். அது கேட்டு அடிமைவாங்க விருப்பமுள்ளவர் அநேகர் அவ்வற்புதமான மனிதனைப் பார்க்க வந்தார்கள். வந்து பார்த்தவர்கள் அநேகர். தாங்கள் கேள்விப்பட்ட அவ்வளவு அதிசயம் அவனிடத்தில் இல்லையென்றும், மேலும் அதற்காகக் கொடுக்கவேண்டிய தொகை மிகவும் அதிகமாயிருக்கிறதென்றும் கண்டு, அவனை வாங்கிக்கொள்ளாமலே போய்விட்டார்கள்.

அதனால் அந்த வர்த்தகனுக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. பயனொன்றுமில்லாமல் நாளுக்குநாள் அந்த மனிதனைப்பற்றிச் செலவுமட்டும் அதிகரித்துக்கொண் டிருக்கவே, என்றைக்கோ ஒருநாள் பெருத்த லாபம் கிடைக்கப்போகிறதென்று எதிர்பார்த்துக்கொண் டிருப்பதைவிட உடனே வந்தமட்டும் விற்றுப்போடுவது நல்லது; நாளைக்கு வருகிற பலாப்பழத்தைவிட இன்றைக்கிருக்கிற களாப்பழம் உயர்ந்ததென்ற பழமொழியல்லவா என்று ஆலோசித்தான். அப்போது அவன் மனதில் ஒருவித எண்ணம் உண்டாயிற்று. என்னவெனில், மனிதர்களுக்குச் சுதந்தரமாயிருப்பதில் இருக்கிற சவுக்கியம் மற்றெதிலுமில்லை; ஆதலால் எந்த வருத்தமாவது பட்டுத் தம் சுவாதீனத்தைத் தேடிக்கொள்ள முயல்வார்களல்லவா என்று நினைத்துத் தனக்கு அடிமையாயிருந்த மனிதனண்டை போய், இப்போது இந்த நிர்ப்பந்தத்தைவிட்டுச் சுதந்திரமா யிருப்பதென்றால், உனக்கு மிக்க சந்தோஷமா யிருக்குமல்லவா என்றான்.

அடிமை:—நீ கேட்கிற கேள்வி, இப்போது உனக்கு உணவளித்தால் எப்படியிருக்குமென்று, பசித்தவனைக் கேட்பதுபோ லிருக்கிறது.

வர்த்தகன்:—ஆயின் உன் சுவாதீனத்தை விலைகொடுத்து வாங்கிக் கொள்வாயா?

அடிமை:—என்ன விலை கொடுக்கவேண்டும்?

வர்த்தகன்:—ரூபாய் தான்!

அடிமை:—ஆனால் நான் மாட்டேன்; கடவுள் அனுக்கிரகித்து நமக்கு இயல்பாய்க் கொடுத்திருப்பதை நாம் விலைகொடுத்து வாங்கவேண்டுவதேன்? உன் கழுத்தைவெட்ட எனக்கு எவ்வளவு அதிகாரமுண்டோ, அவ்வளவு அதிகாரந்தான் உனக்கும் என் சுவாதீனத்தை அபகரிப்பதற்கு உண்டு. என் சுவாதீனத்தை நீ போக்கக்கூடுமானால் நானும் உன் கழுத்தை வெட்டக்கூடும் என்றான்.

அதைக் கேட்டவுடனே வர்த்தகன் முகம்வாடி, தேள் கொட்டினவன் போல் உடம்பு புண்பட்டு ஒன்றும் பேசாமல் அப்புறம் போய்விட்டான்.

அதுமுதல் அவ்வர்த்தகன் அந்த அமையை மிகவும் கொடுமையாக நடத்தத் தொடங்கினான்; பின்பு, அன்றாடம் சாப்பாட்டுச் செலவுக்காவது சிறிதுபொருள் சம்பாதிக்கட்டுமென்று, அற்பமான சில வேலைகள் செய்யும்படி அவனை ஏவினான். ஆயினும் அவ்வடிமையின் நல்ல காலத்திற்கு அடை



யாளமாய் அவனுடைய நற்குணங்களும் நன்னடக்கைகளும், அப்போது அத்தேசத்து அதிபதியாயிருந்த அலப்தஜீன் என்பவனுக்குக் கேள்வியாகி, அவன் அவ்வடிமையைப் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொள்ளும்படி யாயிற்று. அப்படியே அவ்வடிமையை அவன் போய்ப் பார்த்தபோது, அவ்வதிகாரி அவனைக் கண்டு சந்தோஷித்து, உடனே தான் அவனை விலைக்குவாங்கிக் கொண்டான். ஒரு அற்ப வர்த்தகனைவிட்டுப் பெரிய அதிகாரியினிடம் போய்ச் சேருகிறோம் என்று அவ்வடிமையும் சந்தோஷமா யிருந்தான்.

அவ்வடிமை அதிகாரியின் அரண்மனைபோய்ச் சேர்ந்து அவ்விடத்து வேலைக்காரர்களோடு தானும் ஒரு வேலைக்காரனாயிருந்தான். சீக்கிரத்திலேயே அலப்தஜீன் அவனுடைய திறமைகளைக் கண்டறிந்து அவனைத் தன் அரண்மனைச் சேவகனாக வைத்துக்கொண்டான். உடனே அவ்வடிமை அதிகாரியின் அன்புபெற்று வெகு சீக்கிரத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் பெறலானான். அந்த உத்தியோகஸ்தனிடத்தில் சிறந்த குறிகளிருக்கக் கண்டு ஒருநாள் அலப்தஜீன் அவனை அழைத்து அவனுடைய வரலாறென்னவென்று கேட்க, அவன் சொன்னதாவது:—

“என் சரித்திரம் சுருக்கமானது தான். நான் இப்போது ஒருவர்க்கு அடிமைப் பட்டிருந்தாலும், என் குலத்திற்கு இழிவான காரியமொன்றும் செய்ததில்லை; நான் பிறப்பில் ஏழையானாலும் சுதந்திரனாகத்தான் பிறந்தேன்; நான் பாரசீகதேசத்து ராஜாக்களுள் கடைசி அரசனுடைய வம்சத்தில் பிறந்தவன்; அந்த ராஜா உங்களுக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கலாம். அவர் பகைவர்களுக்குப் பயந்தோடிக் கொல்லப்பட்டபோது அவருடைய குடும்பமெல்லாம் துருக்கிஸ்தானத்தில் நின்றுபோய் அத்தேசத்து ஜனங்களோடேயே கொள்வன கொடுப்பன செய்துவந்தார்கள். அதனால் அந்த வமிசத்தாரெல்லாம் துருக்கராய்ப் போனார்கள். இப்போது நானும் ஒரு துருக்கன் தான்.

நான் பிறக்கும்போதே வறுமையோடு பிறந்ததனால், இளமையிலேயே பிழைப்புக்கு ஒரு வழிதேடிக் கொள்ளவேண்டிய தாயிற்று. அதற்காக வாலிபத்திலேயே யுத்தாப்பியாசம் பண்ணி நன்றாய்க் கைதேர்ந்தேன். வருத்தத்தோடு வருத்தமாய் என் தந்தையும் எனக்கு வேண்டிய கல்விகளைக் கற்பித்துக் கொடுத்தார்.

ஏழைப் பிள்ளையாயினும் பிற்காலத்தில் மிகப் பெருமைபெற்று வாழ்ந்திருப்பேனென்று இளமை முதற்கொண்டே யாவரும் என்னைப் பார்த்துக் குறிசொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆயினும் நம் அதிர்ஷ்டம் எப்படியாகிறதோ பார்க்கலாமென்று குஜினிதேசத்துச் சேனையோடு சேர்ந்துகொள்ளும்படி நான் பத்தொன்பதாம் வயதில் தகப்பனைவிட்டுப் புறப்பட்டேன். நடுவழியில் திருடர்கையில் அகப்பட்டுக்கொண்டு, கடைசியில் இப்படிப்பட்ட உதாரகுணமுள்ள அதிகாரிக்கு அடிமைப்படலானேன்” என்றான்.

அவனுடைய சரித்திரத்தைக் கேட்டு அலப்தஜீன் மிகவும் சந்தோ

ஷித்து, ராஜாங்கத்தில் அவனுக்கு இன்னும் அதிக கவுரவ முண்டாக்கினான். இப்படி அந்த மனிதன் படிப்படியாக உயர்ந்த பதவிக்கு வந்து கடைசியில் அலப்தஜீனுடைய சேனைகளுக்கெல்லாம் தானே முக்கிய சேனாபதியாயினான். அவன் சேனைகளை நன்றாய்ப் பயிற்றுவித்து வெகு ஒழுங்காக நடத்தினான்; சேனைகளெல்லாம் அந்தத் தலைவனிடத்தில் அதிக கவுரவங்கொண்டு அவன் சொன்னபடி நடந்துவந்தன; சத்துருக்களெல்லாம் அவனைக் கண்டு பயந்து தாமே காலில் வந்து வீழ்ந்து பணிந்தார்கள்; அதனால் அந்த நாடெல்லாம் மிகவும் அமைதியாய்த் தழைத்திருந்தது. அப்படி மேன்மேலும் மிகப் பெருமையாய் விருத்தியடைந்து வருகையில் அவன், தான் முன் நடுக்காட்டிலே கண்ட கனவை அடிக்கடி நினைத்து, இப்பெருமைகளைத் தானோ அந்தக் கனவு அப்போதே தெரிவித்தது என்று அகமகிழ்ந்திருந்தான்.

ஆ ஆ! அவன் அதிர்ஷ்டத்தின் பெருமையை நாம் என்னென்று சொல்லலாம்! எவ்வளவு சீக்கிரத்தில் அவன் பெருமை எப்படியாக விருத்தி யடைந்தது! அடிமையாய் ஒருவன் கீழ் கைகட்டிக் காத்திருந்தவன், இப்போது பலர் தன் காலில் வந்துவீழ்ந்து பணியத்தக்கவனானான்; குராசான்தேசத்து அதிபதிக்கு அந்தரங்க நேசனானான்; அவனுடைய ஆலோசனைச் சங்கத்துக்கெல்லாம் தானே தலைவனானான்; அவன் சேனைகளை யெல்லாம் தன்னிஷ்டப்படிக் கையாண்டான்; அவ்வரசன் அவனை ஒரு நிமிஷங்கூட விட்டுப் பிரிந்திருப்பதில்லை; அவனுடைய ஆலோசனை யில்லாமல் அவ்வரசன் எதுவும் செய்வதில்லை. இப்படிப் பலவிதமாய் அரசன் அவனைப் பெருமைப் படுத்தினது மாத்திரமே யல்லாமல், குடிகளும் மற்ற வேலைக்காரர்களும் அவனைத் தெய்வமாய்க் கொண்டாடினார்கள்; பகைவர்களெல்லாம் அவனைக் கண்டு மிகவும் பயந்தார்கள்; காலையில் மூடிய பனி மறைந்தால் சூரியன் அதிக பளபளப்பாய்த் தோன்றுவது போலவும், கிரகணம் பிடித்துவிட்டால் சந்திரன் அதிக சோபையாய் விளங்குவது போலவும், கஷ்டம் அனுபவித்தவனுக்குத் திடீரென்று இவ்வளவு பெருமை வரவே, அது அவனுக்கு உள்ளதிலும் அதிக பெருமையாகத் தோன்றியிருந்தது.

அவனுடைய அதிர்ஷ்டம் விருத்தி யடைந்தது. இவ்வளவு மாத்திரமேயோ! அலப்தஜீனுக்கு மிகவும் அழகான மகள் ஒருத்தியிருந்தாள். அவளுடைய வடிவழகைக் கண்டு அங்கே ஆச்சரியப் படாதவரில்லை; அவ்விடத்தில் மிக்க செல்வாக்குள்ள பிரபுக்கள் பலரும் அவளைக் கலியாணம் செய்துகொள்ள முயன்றார்கள்; அவ்வரசன் அரண்மனைக்கு வருகிற பிரபுக்கள் எத்தனையோ பேர் அவள் சவுந்தரியத்தைப் பார்த்து அவள் மேல் ஆசைகொண்டார்கள். ஆயினும் ஒருவரையும் அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. அலப்தஜீனுக்கு அவள் ஒரே மகளாகையால் எப்படியாவது அவளுக்குச் சீக்கிரம் கலியாணஞ்செய்வித்துத் தன் வமிசத்தைப் பெருகச் செய்யவேண்டுமென்று அவன் அதிக ஆவல்கொண்டிருந்தான். அதனால் எப்படிப்பட்ட பிரபுக்களையெல்லாம் பார்த்தும் ஒருவரிடத்திலும் அவள் மனம் புதையாமற்போனது



கண்டு அவனுக்கு மிக்க துக்கமுண்டாயிற்று. ஆயினும் தானாய் வற்புறுத்தி அவள் விருப்பத்துக்கு விரோதமாய் விவாகம் செய்விக்க அவனுக்குச் சம்மதமில்லை.

அடிமையாய் அவ்விடம் போய்ச்சேர்ந்து சேனாதிபதியான துருக்கனும் அவ்வரசன் அரண்மனையிலேயே வசித்துக்கொண் டிருந்ததனால், அரசன் மகள் அவனையும் அடிக்கடிப் பார்க்கும்படி நேரிட்டது. பலதரம் அவர்கள் சந்திக்கவும் சந்தித்தார்கள்; பேசவும் பேசினார்கள். அப்படிப் பழகப் பழக ஒருவர்க்கொருவர் மனதில் மற்றொருவரைப்பற்றி நல்ல அபிப்பிராயந் தோன்றிற்று. நாளடைவிலே அந்தச் சேனாபதி அப்பெண்மணியினிடத்தில் ஆசைகொண்டான் எப்படிப்பட்ட மகாப்பிரபுக்களை யெல்லாம் அவள் அலக்ஷியமாய் நிராகரித்து வருகிறாளென்பதும் அவனுக்கு நன்றாய்த் தெரியுமென்றாலும், தன் ஆசையை அடக்கமாட்டவில்லை. ஒரு வேளை நம்மை அவள் விரும்பினாலும் விரும்பலாமென்றே நம்பியிருந்தான்.

சீக்கிரத்திலேயே அவ்விருவருடைய கருத்தும் அவர்களுடைய நடத்தையிலேயே வெளிப்படையாய்த் தெரிய வந்தது. ராஜகுமாரத்தியின் கருத்தைக் குறிப்பாலறிந்து கொண்டு சேனாபதி ஒருநாள் அவளிடம் சென்று தன் ஆசைப் பெருக்கு உள்ளடங்காமல், ஓ சீமாட்டி, நான் ஒருகால் அடிமைப் பட்டிருந்தேனென்றாலும், நியாயமாய் நான் ராஜ வமிசத்திற் பிறந்தவன். ஆதலால் முதலில் மிகவும் இழிவான நிலையிலிருந்து பின்பு சிறந்த நிலைக்கு வந்தவனோடு கூடுவதனால் உன் குலப்பெருமைக்குச் சிறிதும் இழிவு வராதேயென்றான்.

அதற்கு அரசன் மகள் சொன்னதாவது:—பிரபுவே, நாம் ஒரு மனிதனைத் தேடவேண்டுமானால், நீதி குணங்களும் நன்னடத்தையும் உள்ளவனாய்ப் பார்த்துத் தேடவேண்டுமே யொழிய, மற்ற அதிர்ஷ்டத்தால் வருகிற பெருமை யுடையவர்களைத் தேடுவதிற் பயனில்லை: செல்வவானாய் அகப்படுவதும் வருத்தமன்று; உயர்ந்த வமிசத்திற் பிறந்து ராஜாங்கத்தில் மிக்க செல்வாக்குடையவர்களாய் அகப்படுவதும் வருத்தமன்று: நீதிகுணமும் தருமசிந்தையும் உடையவர்களாய் அகப்படுவதுதான் கடினம். இந்த நற்குணங்களோடு நல்ல குடிபிறப்பு, செல்வம் முதலியவையும் கூடியிருக்குமானால், பொன்மலர் நாற்றமுடைத் தானதுபோலாகும். எந்த விதத்திலும் என் சுகதுக்கங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள எனக்குத் திருப்திதான். ஆனால் எதற்கும் என் தந்தையார் அனுமதி வேண்டும். “ தந்தைசொன் மிக்க மந்திர மில்லை ” என்கிறபடி பெண்கள் வாலிபத்தில் தந்தைசொல் தவறாமல் நடக்க வேண்டும்; பின்பு கணவன் கருத்துக் கிசைந்து நடக்க வேண்டும். முதலில் சரியாய் நடக்காதவள் பின்னிட்டும் சரியாக நடக்கமாட்டாளென்பது நிச்சயம் என்று சொன்னாள்.

அதுகேட்டு அந்தச் சேனாதிபதி மிகவும் சந்தோஷ மடைந்து, ஆனால் நான் இதோ போய் உன் கருத்தை அரசருக்கு அறிவிக்கிறேன்; அவர் என்னைப்பற்றிப் பெருமையாகவே நினைத்திருக்கிறாரென்பதுமட்டும் எனக்கு நன்

ருய்த் தெரிய வருகிறது. ஆனால் அவர் எவ்வளவு தூரம் என்னைப் பெருமைப் படுத்த நினைத்திருக்கிறாரோ அது மாத்திரம் தெரியாது என்றான்.

மறுநாள் அந்தச் சேனாபதி அரசன் சமுகத்துக்குப் போய், அவன் மகளைப்பற்றித் தன் கருத்தை அறிவிக்க, அரசன் அதைக் கேட்டுச் சிறிதும் சந்தோஷப்படாமல், எனக்கு இந்தக் குழந்தை ஒன்றுதானென உனக்குத் தெரியுமே. எப்படியாவது அந்தக் குழந்தை சுகமா யிருக்கவேண்டுமென்பது என் கோரிக்கை. அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று வந்த பல பேரையும் அவள் நிராகரித்துவிட்டாளென்பதும் உனக்குத் தெரியுமே. ஆதலால் இந்த விஷயத்தில் நான் எவ்வளவும் பிரவேசிக்கமாட்டேன்; அவளுடைய சம்மதத்தைத் தேடிக்கொள்வாயானால் எனக்குச் சம்மதந்தானென்று சொன்னான்.

"நான் முன்னமே என் அபிப்பிராயத்தை அம்மகளுக்கு அறிவித்தேன்; அது அவளுக்குச் சம்மதந்தான். தங்கள் அனுமதி ஒன்றைத்தான் எதிர் பார்க்கிறாள். இப்போது தாங்கள் சம்மதித்தால் உண்டு; இல்லாவிட்டால் இல்லை."

"அப்படியானால் எனக்கும் சந்தோஷமே. எப்படியோ கடைசியில் அவள் மனது நல்ல பாத்திரத்தைத் தேடி வரித்ததைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாகின்றது" என்றான்.

அப்படியே அவ்விருவர்க்கும் மிக்க சிறப்பும் பெருமையுமாய்க் கலியாணம் நடத்தப்பட்டது. அதைக்கேட்டு அப்பெண்மணியினிடத்தில் முன்பு ஆசைகொண்டிருந்த யாரோ சிலர்மட்டும் பொறாமைப்பட்டார்களென்றாலும் மற்றவர்களெல்லாம் மிகவும் சந்தோஷமாய்க் கொண்டாடினார்கள்.

இது நடந்த சில நாளைக்கெல்லாம் அண்டை அயல் நாடுகளில் கலகமுண்டாக, அலப்தஜீன் அவைகளின்மேல் படையெடுத்துத் தன் மருமகனுடைய பெருந்துணையால் அக்கலகங்களை யெல்லாம் அடக்கி அந்நாடுகளைக் கைவசமாக்கிக் கொண்டான். அப்படியே அம்மருமகனுடைய சகாயத்தால் அவன் இந்தியாவின்மேலும் பலதடவை படையெடுத்தான். அவன் காலத்திற்குப் பிறகு அவனுடைய மகனான அபூ ஐஸாக் என்பவன் பட்டம்பெற்று, அவனும் அம்மருமகனுடைய கைத்துணையால் பலவிடங்களில் ஜயமும் பெருமையும் பெற்றான். ஆனால் அவன் வெகுகாலம் அரசாளவில்லை. அவனுக்குப் பிறகு யாவரும் ஒரே கருத்தாய் அந்தச் சேனாபதியைக் குஜினி தேசத்துக்கு அரசனாக்கினார்கள். இப்படியாக முன் அவன் காட்டிலே கண்ட கனவு கைகூடிற்று. ஒரு எளிய ஊழியக்காரனா யிருந்தவன் ஒரு பெரிய சக்கரவத்தியானான். சுபக்தஜீன் என்று பேர்பெற்றிருந்த சக்கரவர்த்தி இவனே. முதல் முதல் இந்தியாவின்மேல் படையெடுத்து ஜயித்த மகம்மதிய ராஜனாகிய, குஜினி மகம்மது என்று பிரசித்திபெற்றிருந்த பெரிய சக்கரவர்த்திக்குத் தந்தையும் இவனே. இவ்விதமாக இந்த மனிதன் தன் சொந்த முயற்சியாலேயே ஒரு ஊழியக்காரனுடைய நிலையிலிருந்து ஒருபெரியசக்கரவர்த்தி பதம்பெற்று மிகவும் மேன்மையாக அரசு செலுத்தினான். அவன் கண்ட கனவும் நினைவானது.

4 - MAY 1915

# பிரஜாநுகூலன்.

(Copy Right Registered.)

புத்தகம் 9. { திரிச்சிராப்பள்ளி 1915ஆ எப்பிரல் மே மாதங்கள். } சஞ்சிகை 10 & 11.

## பிரபஞ்ச விலாஸம்.

அவனவனே பிரயாசப்பட்டுத் தனக்குத் தானே ஆய்ந்தறிந்து கற்க வேண்டுமேயன்றி, ஒருவனுக்காக மற்றொருவன் போதிக்குங் கல்வி ஆரம்பத்திற்கு மட்டுமே பயன் தரும்.

நிதானமான யோசனையின்றிப் பெரிய காரியம் எதுவும் இதுவரையில் சாதிக்கப்பட்டதுமில்லை; இனிமேல் சாதிக்கப்படவுமாட்டாது. நாம் புத்திமான்களாயும் யோக்கியர்களாயும் ஆவது நிதானமான யோசனையினாலே தான்.

பிறருக்குத் தான் மேற்பட்டிருக்க வேண்டுமென முயல்வது நியாயமே, ஆயினும் அதற்காகப் பிறரைப் பங்கப்படுத்துவது ஒழுங்கன்று. இகழ்ச்சியோ புகழ்ச்சியோ நேரிடுவது ஒருவனது முயற்சியின் போக்குக்குத் தக்கபடியாகும்.

ஒரு சிறுவனுடைய சாமர்த்தியம் பார்ப்போரை வியக்கச் செய்வதாயினும். அவனுடைய யுக்தி ஆலோசனைகளை நல்வழியில் செலுத்தத்தக்க நீதி நன்னெறிகள் இல்லாவிடின், அந்தச் சாமர்த்திய மத்தனையும் பாவத் தொழில் புரிந்து துன்பப்படுவதற்கே காரணமாகும். நன்மை பயக்காத சாமர்த்தியம் உபயோகமற்றது.

கிறிஸ்தவர்கள் மற்ற மதஸ்தர்களை அஞ்ஞானிகள் என்கிறார்கள். ஆனால் தங்களையோ பாவிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். பாவம்— என்பது பெரிதா? — அஞ்ஞானம் என்பது பெரிதா? என்பது கேள்வி.

பிறர் தேடிய தங்கக் கட்டிலிற் படுப்பவனுக்கு உண்டாகும் ஆனந்தம், தானே தேடிய தாழம்பாயிற் படுப்பவனுக்கு உண்டாகும் ஆனந்தத்தில் பாதியாவது இருக்குமென்பது ஒன்பது பங்குக்கும் நிச்சயமில்லை.

உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் இருவிதமான கல்விகளுண்டு. பிறர் கற்பித்துக் கொடுப்பதனால் உண்டாவதொன்று, தானே பயிற்சி செய்துகொள்வது மற்றொன்று. புத்திப் பயிற்சிக்கு தேகப் பயிற்சி முக்கியம். படிப்பு மனதைப் பண்படுத்த, உழைப்போ சரீரத்தைப் பண்படுத்துகிறது.

**பிராணிகளிடத்தில்** மிக்க அன்பும் ஆதரவுமாய் அவைகளுக்கு நன்மை விளைக்கின்ற நற்குணத்துக்கே தர்மகுணமென்று பெயர்.

**மைசூரில்** உள்ள ஸ்ரீரங்கப்பட்டணமானது காவிரியாறு இரண்டு கிளையாகப் பிரிந்து சூழ்ந்துகொண்ட ஒரு தீவிலிருக்கிறது. திருச்சிராப்பள்ளியின் ஸ்ரீரங்கமும் காவிரியாற்றின் இருகிளைகளுக்கும் நடுவில் உள்ள ஒரு தீவில் இருக்கின்றது. இதுவும் ஒரு புதுமைதானே!

**குதூஹலமாவது** நாம் எதையும் சந்தோஷமாய் ஆவல்கொண்டு அறியும்படியாகக் கடவுள் அளித்த சக்தி. காருண்யமாவது, பிராணிகளின் வருத்தத்தைக்கண்டு பரிதாபப்படுகிற சக்தி, ஆநந்தமாவது, பல விநோதப் பொருள்களைக் கண்டு களிக்கும் திறமை. சாதுரியமாவது, மிகவும் ரஞ்சகமாய்ப் பேசிப் பலரையும் களிப்பிக்கிற திறமை. இவையெல்லாம் நம்மிடத்தில் நன்றாய் நிலைபெற்றிருக்கும்படி நம்மால் கூடிய அளவு நாம் அவைகளைப் பயிற்சிசெய்து வரவேண்டும்.

**காருண்ய குணம்** பழக்கமாவதற்குப் பல ஜீவஜெந்துக்களின் நடுவிலே பழகி அவைகளைப்பற்றிச் சிந்தித்து வரவேண்டும்; ஆநந்தகுணம் பழக்கமாவதற்குப் பல விநோத வஸ்துக்களின் நடுவிலிருந்து அவைகளைப் பார்த்துப் பழகிவரவேண்டும்.

**ஜாதி மதாசாரங்களைக்** கைவிடாதிருப்பதும் கடமையே.நம்மைப் பிறப்பித்துப் பாதுகாக்கின்ற கடவுளுக்குரிய கடமைகளைச் செலுத்துவது நமக்கு முதன்மையான வேதவிதி. இவ்வுலகத்தாற்குரிய கடமைகளைச் செலுத்துவது இரண்டாம் விதி.

**நமது முஸ்லிம்** சகோதரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டிலுள்ள பெண்களுக்கு உபாத்தியாயர்களாய் விளங்கினால், அது அந்த ஸமூகத்திற்கே நலம் செய்யும். பெண்களின் ஸக்தி என்பது இல்லாவிடில் புருஷர்கள் உலகத்திலே ஒரு விரலைக்கூட ஆட்டமுடியாது.

**புஸ்தகங்களைப்** படித்து அதனால் வரும் அறிவு வெகுவாய்ப் புத்தகப் படிப்பாகவே முடிகிறது. அநுபவத்தால் வரும் அறிவோ விவேகமாக முடிகிறது. எட்டுக்கல்வி அளவற்றிருப்பதும் சரி; அநுபவம் சிறிதளவு இருப்பதும் சரி.

**இவ்விந்தியாவில்** இருப்புப்பாதை முதல் முதல் 1853ம் வருஷத்திலே பம்பாய் நகரத்திலிருந்து டானா வரையில் ஏற்படுத்தப்பட்டது.

**சொந்தக்காரர்களிடத்தில்** அதிகமாக உறவாடினால்—அவ்வளவும் பின்னுக்கு மனஸ்தாபத்துக்கு இடந்தானென்று உலக அநுபவம் தெரிவிக்கிறது.

**ஆங்கிலத்திலுள்ள** ஒரு கதையையே, தமிழில் **வீரவர்மன் வெற்றி** என்று ஒருவரும், **ஞானபூஷணி** என்று ஒருவரும், **சுந்தரி மனோகரன்** என்று ஒருவரும், **இகபரஸுகசாதனிப்** பத்திரிகையில் வேறொருவரும் வெளியிட்டுள்ளார். இந்நான்கிலுள்ள கதைகளும் ஒரேவிதமான கதைதான்.



**காவிரியாறு** மைசூர் சமஸ்தானத்தில் உற்பத்தியாகியும், அந்த சமஸ்தானத்தைச் சேர்ந்த பெங்களூருக்கு அந்த ஆற்று ஜலத்தை உபயோகித்துக்கொள்ளும் அதிஷ்டமில்லை. தீபத்திற்கருகில் இருட்டிருப்பது சகஜந்தானே!

**மனதிற் குடிகொண்டு** நிற்கும் ஏகசிந்தனையின் மனோவதிர்ச்சி, அல்லது உள்ளே வளர்ந்துவரும் மனப்போங்கை விசாரம் என்பார்கள்.

**பெண்களிற் சிலர்** பேசுகிற ஒவ்வொரு பேச்சுக்கும் கைகள் கன்னத்து மேலே போய்விடுகிறதே—ஏனோ?

**விவாகமாகி** இன்னும் சாந்தியாகாத தன் பெண்ணைக் குறித்து எதிர் வீட்டுப்பெண்ணிடம் ஒரு மாது பேசுகையில்—என் பெண் அவள் புருஷனைக் கண்டால் ஓடியொளிகிறாள், நிரம்பவும் வெட்கப்படுகிறாள் என்று கூற, அதற்கு எதிர்வீட்டுப் பெண்—எல்லாம் சாந்திமுகூர்த்தம் ஆய்விட்டால் சரிபட்டுப்போய்விடும்—என்றாளாம்.

**கையிலுள்ள** பெரிய தொகையான முதலைக் கொடுத்துவிட்டு அதன் காலில் ஒட்டிய தூசிபோலுள்ள வட்டியை மனிதன் விரும்புகிறான். சில சந்தர்ப்பங்களில் இந்தத் தூசிக்கு ஆசைப்படப்போய் பெரிய முதலையே இழந்துவிட நேர்கிறது.

**உறவினர்** என்பதெல்லாம்—காரியம் ஆகிறவரைக்குந்தான் சுற்றித் திரிவது— என்ற சித்தாந்தத்தைக் கொண்ட நன்றி விசுவாசமற்ற சண்டாளர் கூட்டத்துக்குச் சொல்லும் வார்த்தையாகும்.

**வரதக்ஷிணை** வாங்குகிற கெட்ட வழக்கம் பிராமண வகுப்பாருக்குள் மட்டும் இல்லை. வங்காளத்தில் காயஸ்த வகுப்பாருக்குள்ளும் இருப்பதாகத் தோன்றுகிறது.

**பிரபஞ்சத்தில்** கௌரவம் தேடுவோரது செல்வம், ஆற்றில் போகும் வெள்ளம் போன்றதென்றும், வேகிற வீட்டில் பிடுங்கித் தின்கிற தடபுடல் மனிதர்களான வழிப்போக்கர்கள் எவ்வளவு விரும்பினாலும் அவ்வளவுக்கும் அள்ளிப் பருகலாமென்றும் உலக அநுபவத்தால் துணியப்படுகின்றது.

**ஒரு புஸ்தகத்திற்கு** சாற்றுக்கவிகள்—பெரிய தடபுடல் மனிதர்களின் அபிப்பிராயங்கள்—பெற்றுவிட்டிருப்பதினாலேயே அப்புஸ்தகம் சிலாக்கியமாயிருக்க வேண்டுமென்பதாக மதித்துக்கொண்டு விடப்படாது. முக்கியமாய்ப் பொதுஜனங்கள் அப்புஸ்தகத்தைப் படித்து அவர்கள் அநுபவத்தில் அதைப் பற்றிய அபிப்பிராயம் எப்படியிருக்கிறதென்பதை ஆராய்ந்து பார்ப்பதே சிலாக்கியமாகும்.

**நாம்** நிகழ்காலத்தை உபயோகிக்கும் முறையைப் பொறுத்ததாயிருக்கும்—வருங்காலத்தில் நிகழும் சம்பவம்.

**தெருவிற் செல்வோரை** யெல்லாம் தனது பழைய காதலியின் முகமுடையோராக இருக்கவேண்டுமென்று விரும்பினான்,—தன் காதலி இருக்கிறாளென்று எண்ணி ஊர் வந்து இல்லாமை கண்ட காதலனொருவன்!

**சாதாரணமாய்த்** திரிந்து கொண்டிருந்த ஒரு பெண்ணானவள், ருது மதியானதும் நாணம் முதலியனவற்றைத் தாங்கி, பரபுருஷ திருஷ்டியை வெறுத்து, உலக வித்தியாசங்களை யுணர்ந்து பக்குவப்படும் வகையாய்—அவளது இயற்கை யமைப்பு பொருந்தியிருப்பது பெரும் அதிசயம்!

**சாயங்காலம்** என்பது மத்தியானம் 3-மணியிலிருந்து 5-மணி வரையுமாகும்.

**எண்ணங்கள்**—செய்திகளைக்கொண்டு வருகின்ற தந்திக் கம்பிகட்குச் சரி. அந்த சமயத்தில் காத்திருந்து அக்கம்பிகள் தெரிவிக்கும் தந்தியைக் குறிப்பிட்டுக் கொண்டாலன்றி மறுபடியும் அது சொல்லாது. அப்படியே கிரந்த கர்த்தர்கள் தங்களின் மனத்தினிடையே தோன்றுகின்ற நினைவுகளை உடனே பதிய வைத்துக்கொண்டாலன்றி, அவைகள் வெகு துரிதத்தில் மறதிபட்டுப் போவதோடு ஞாபகத்தினின்றும் விலகிவிடுகின்றன. மறுபடியும் தோன்றுதலரிது. எப்போதோ அவர்கள் எண்ணாத காலத்தில் திடீரென்றுதோன்றுதல் கூடும்.

**எஜமான்** என்பதை முகத்தில் விளங்கும் சுறுசுறுப்பாலும், தன்னைத் தலைமையாகப் பாராட்ட வைத்துக்கொள்ளுகிற பிரதானத்வத்தாலும் அறியலாம்.

**வெளியூர்களில்** தாமதிப்பவர்களுக்குத் தங்களின் சொந்த ஊர்க் கடிதங்கள் அடிக்கடி வந்துகொண்டிராவிட்டால், நீடித்த நாள் அவர்கள் வெளியூரில் தாமதித்துவர சாத்தியப்படாது.

**மனைவிக்குத்** தண்டனை தனிப்படுக்கை. நண்பனுக்கு சிக்ஷை எதிர்படினும் பேசாதிருக்கை. ஓ! நான் பாத்தியஸ்தன் என்று வருகிற தாயாதிக்கு சிக்ஷை அவன் தன் வீட்டுவாயிற்படி ஏறுதவாறு அவன் உறவை வெட்டிவிட்டுக் கொண்டே போகுதல். அவனை ஒரு அற்ப நாய்போல் எண்ணி லக்ஷ்யமே செய்யாதிருத்தல்.

**பெண்களெல்லாம் பேய்களா?** பெண்களெல்லாம் பேய்களுமல்ல, பிணங்களுமல்ல, பூதங்களுமல்ல, பாபங்களுமல்ல. ஆனால் பெண்களில் கணக்கிறந்த பேய் ரூபங்களும் பிண வடிவங்களும் உண்டு. பெண்மையை உள்ளபடியே யடைந்த பெண்களை யொருபோதும் பெரியோர் குறைகூறினதில்லை.

**நம் நாட்டில்** தற்போது சாஸ்திரங்களே இல்லை. எல்லாம் செல்லரித்துப்போயின—அதாவது எட்டுச்சுரைக்காயாயின வென்றபடி. இடைக்காலத்துண்டான வழக்கங்களே—அநுஷ்டானங்களே—இப்போது சாஸ்திரங்களாகப் பிரதிபலித்துப் பிரபலம் பெற்று நிற்கின்றன. ஹிந்துமதஸ்தன் என்று பெயரே தவிர்த்து, ஹிந்து மதத்தைப் பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் குற்றங்கூறுவதிலே சண்டப்பிரசண்டன்தான். சமயப் படிப்பைச் சரியாகப் படித்துச் சமயமறிந்து உபயோகிக்காத குற்றம் சமயிகளைப் பொறுத்ததேயாம்.

---

# பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து.

## (TO BELGIUM.)

அறத்தினால் வீழ்ந்து விட்டாய், அன்னியன் வலியனாகி
மறத்தினால் வந்து செய்த வலிமையைப் பொறுத்தல் செய்யாய்
முறத்தினாற் புலியைக் காக்கு முழைவரைக் குறப்பெண் போலத்
திறத்தினால் எளியை யாகிச் செய்கையால் உயர்ந்து நின்றாய். (1)

மானத்தால் வீழ்ந்து விட்டாய்; மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட வலிமைதான் உடைய னேனும்
ஊனத்தால் உள்ள மஞ்சி ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே அவன்வழி யெதிர்த்து நின்றாய். (2)

வீரத்தால் வீழ்ந்து விட்டாய், மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே யொதுங்கித் தன்னை ஒளித்திட மனமொவ் வாமல்
பாரத்தை யெளிதாக் கொண்டாய், பாம்பினைப் புழுவே யென்றாய்,
நேரத்தே பகைவன் றன்னை “நில்” லென முனைந்து நின்றாய். (3)

துணிவினால் வீழ்ந்து விட்டாய், தொகையிலாப் படைக ளோடும்
பிணிவளர் செருக்கி னோடும் பெரும்பகை யெதிர்த்த போது
பணிவது கருத மாட்டாய்; பதுங்குதல் பயனென் றெண்ணாய்;
தணிவது நினைக்க மாட்டாய்; நில்லெனத் தடுத்தல் செய்தாய். (4)

வெருளுத லறிவென் றெண்ணாய்; விபத்தையோர் பொருட்டாக் கொள்ளாய்
சுருளலை வெள்ளம் போலத் தொகையிலாப் படைகள் கொண்டே
மருளுறு பகைவர் வேந்தன் வலிமையாற் புகுந்த வேலை
“உருளுக தலைகள்—மான மோங்குகெ”ன் றெதிர்த்து நின்றாய். (5)

யாருக்கே பகையென் றாலும் யார்மிசை யிவன்சென் றாலும்
ஊருக்குள் எல்லை தாண்டி உத்தர வெண்ணி டாமல்
போருக்குக் கோலம் பூண்டு புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கு மிடமில் லாமல் வெட்டுவே னென்று நின்றாய். (6)

வேள்வியில் வீழ்வ தெல்லாம் வீரமும் புகழு மிக்கு
மீள்வதுண் டுலகிற் கென்றே வேதங்கள் விதிக்கு மென்பர்;
ஆள்வினை செய்யும் போதில் அறத்திலே யிளைத்து வீழ்ந்தார்
கேள்வியுண் டுடனே மீளக் கிளர்ச்சிகொண் டுயிர்த்து வாழ்தல். (7)

விளக்கொளி மழுங்கிப் போக, வெயிலொளி தோன்றும் மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங் கனகமா ளிகையு முண்டாம்.
அளக்கருந் துயருற் றாலும் அச்சமே யுளத்துக் கொள்ளார்
துளக்கற வோங்கி நிற்பர்; துயருண்டோ துணிவுள் ளோர்க்கே? (8)

புதுச்சேரி
8—2—15 } ஸி. சுப்பிரமணிய பாரதி.

பாடுவோர்க்குக் குறிப்பு:—இதிற் கண்ட ரஸங்களாவன:—கருணை, வீரம், அற்புதம் என்பவை. எனவே துயரமும், உத்ஸாஹமும், வியப்பும் தோன்றப் பாடுக. நாட்டை, அஸாவேரி, தோடி என்ற ராகங்கள் பொருந்தும்.

---

## தேன்கூடு.

பழைய குரோதங்களை ஒழித்து சமரஸப்படவேண்டும். சரியான காரணத்திற்காக உழைக்கு மொருவன் ஜெயத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லை. முடிவில் அவனுக்கு ஜெயம் கிடைப்பது நிச்சயம்.

உலகுக் கெல்லாம் அரசனேயாயினும் அவனது மனைவிக்குப் பிரியமான முதல் வேலைக்காரன் அவன்தான்.

கிரீடாதிபதிகளானாலும், மகாராணிகளானாலும் அவர்களின் குழந்தைகளுக்குச் சிறந்த நல்ல சவாரிக்குதிரை அவர்கள்தான்.

காதல் செய்யாததுமில்லை, பகை பண்ணாததுமில்லை, பசி தின்னாததுமில்லை.

பக்ஷண வர்க்கங்களிலே ஒரு தோஷம் ஏற்பட்டிருக்கின்றது. வீட்டில் செய்ததுவை யென்று தெரிந்தவுடனே பசி ஆறிப் பக்ஷண விருப்பம் தணிவு பெற்று விடுகின்றது. வெளியில் செய்ததென்றாவது, விலைக்கு வாங்கியதென்றாவது கொள்ளப்பட்டால், பக்ஷண ருசியும் பசியும் அதிகரிப்பதுடன் பக்ஷணத்தட்டு காலியாவதும் தெரிவதில்லை. இப்படியே சிற்றின்ப நுகர்ச்சியிலே மனைவியிடத்து அநுபவிக்கும் இன்பம்—அவள் என்றும் தன்னவள் என்ற உணர்ச்சியால் தணிவுபெற்று நலம் விளைகிறது. சாந்தத்வம் உண்டாகின்றது. விலைமகளிர் கலப்பிலோ அவள் அந்நியை—நமக்கு இனியும் இவள் கிடைப்பளோ என்னும் நினைவுகளால் காம சிந்தனைகள் மீண்டும் மீண்டும் வளர்ச்சிபெற்று மூர்க்கத்வம் விர்த்திகொண்டு சரீரத் தளர்ச்சி நேர்ந்து கேடு விளைக்கின்றது.

பெண்கள் கையால் பாகம் செய்யப்பட்ட பதார்த்தங்களுக் கென்றே ஒரு பிரத்தியேக ருசி ஏற்பட்டிருக்கின்றது.



வரி வரி யென்றால் கோடு, வரிசை, எழுத்து. எழுத்தென்றால் என்ன எழுத்து? நம் ஊரார் தலை எழுத்துதான். அந்தக் காலத்திலே சதுர்பிரம்மா என்னமோ தலை எழுத்து எழுதினனென்று சொல்லிக்கொள்கிறார்கள். அதை யாரும் பார்க்கவில்லை. ஆனால் இதோ கண்ணுக்கெதிரே முனிசிபல் பிரம்மா, போர்ட் ஆப் ரெவினியு பிரம்மா, சால்ட் ஆப்காரி ரெவனியூ பிரம்மா, இன்டம்டாக்ஸ் பிரம்மா, முதலாகிய ஒரு முக பிரம்மாக்கள் விதிக்கிற தலையெழுத்துகள் எதுவென்றால் வரிதான். இந்த வரிகளில் ராஜாவரி வருமானவரிதான்.

பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு, நூறு ரூபாய்க்குப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு, ஒரு வாய்தா தவறினால் கோர்ட்டில் போட்டு உள்ளதை உறிஞ்சிக்கொண்டு குடியைக் கெடுக்கும் குட்டிச் சாத்தான்களாகிய சாவ்கார்களும், எழு மாத்தைப் பத்து மாத்தென்றும், உதவாக் கல்லை வைரமணி யென்றும் ஏமாற்றிப் பொருள் பறித்தும், அவசரத்திற்கு விற்கப்போனால் இது சொத்தை, அது சொள்ளை, இந்தப் பொன் மட்டம், அந்தக் கல் அம்போக்கு என்று இல்லாததையெல்லாம் அளந்து ஒன்றைப் பாதி விலைக்கு எடுத்துக் கொள்ளும் புண்ணிய சீலர்களான சராப்பு வியாபாரிகளும் மற்றவர்களை விட அதிகமான தான தர்மங்கள் செய்தால்தான் அவர்களுக்கு மறுலோகத்தில் உள்ள நரக உபாதை கொஞ்சமாவது தணியும்.

பெண்களுக்கு ஆசை எப்பொழுதும் இளமைப் பருவமாயிருக்க, ஆண்பிள்ளைக்கு எப்பொழுதும் பணம் சம்பாதிக்க.

போஜனம் உண்ணும்போது நீர் குடிப்பது கெட்டவாடிக்கை. உண்டு இரண்டுமணி கழித்து நீர் அருந்தினால் நலம். இப்படி ஒருமாதம் அப்யாஸம் செய்து வந்தால் அனுபோகத்தில் அதன் சுகம் தெரியும். சிலர் உண்ணும்போதும் அதற்கு முன்னும் ஜலம் குடிக்கிறார்கள். இதனால் அஜீர்ண முண்டாகும். பலவித ரோகங்களும் விளையும்.

சீனா ராஜ்யத்தில் சிறிய அபராதங்களைச் செய்யும் ஜனங்களுக்குக் கோர்ட்டார் விதிக்கும் சிக்ஷை இன்னதென்று அனேகருக்குத் தெரியாமலிருக்கலாம். இங்கு சிலவற்றைச் சொல்லுகிறோம். நல்ல பட்டினால் செய்த பெல்டைத் திருடிய ஒரு பெண்ணுக்கு கைமேல் 30 அடிகள் அடித்தனர். அதேமாதிரி களவுசெய்த மூன்று புருஷர்களுக்கு 300 அடிகளை யடிக்கச் செய்தார்கள். சில துணிகளைத் திருடின பழைய கள்ளனுக்கு 600 அடிகளை யடித்து மூன்று வருஷம் காவலில் வைத்த பிறகு தேசத்தை விட்டு ஓட்டி விட்டனர். தெருவில் பாச்சிக்காய் ஆடினவனுக்கு 200 அடியும் ஒருமாதம் காராக்கிருக வாஸமும் தேசத்தை விட்டோட்டுவதும் தண்டனை. ஒருவன் எலியைப் பலகையில் வைத்து தெருத்தெருவாய்த் தூக்கிக்கொண்டுபோய்ச் சனங்களுக்கு வேடிக்கைகாட்டிக் காசு வாங்கிக்கொண்டிருந்தான். இவனுக்கு 500 அடியும் 25 ரூ. அபராதமும் அபராதம், கொடாமற்போனால் சிறைச்சாலை

யும் விதித்தனர். இவ்விதமாய் பிரஜைகளுக்கு ஸகிக்கமுடியாத சிக்ஷைகளை சீனுக்காரர் விதிக்கிறார்கள்.

ஜெப்பான் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் கவித்வம் செய்வதில் நிபுணர்களென்று தெரியவருகிறது. அந்த ஸமஸ்தான வித்வான் கவிகுல சிரோமணி யென்ற பெயரை வகித்திருக்கிறார். இவரைக் கொண்டாடாதவர்களில்லை. இவர் மகன் போர்ட்டு ஆர்தர் சண்டையில் மாண்டாள். மகளுக்காகச் செய்த கவியில் "இன்று அவன் தேகத்தைப்பார்க்கப்போனேன்; உடல்தானிருந்தது; உயிரோ போர்ட் ஆர்தரில் நமது கொடிநிற்குமிடத்தில் நின்றது என்றிருக்கிறது.

அந்தப் பிச்சாண்டிக் கடவுள் ஆட்டுக்குவால் அளவாகத்தான் வைத்திருக்கிறார். துன்பங் கலந்திராத இன்பமில்லை. இதிலும் துன்பம் பத்து பங்கும் இன்பம் ஒரு பங்காகவுமே இருக்கிறது. என்னென்னமோ நூதனமாம்! சோற்றுக்குத்தான் கருமாயம்!! இக்காலத்து நூதனங்களும் நாகரீகங்களும் என்னத்திற்கு? அரிசி நயக்கவில்லையே ராகவா!

ஒரு தேசத்தின் அத்தனை ஜனங்களும் படித்தவர்களாக மாறிப்போனால், தேசத்தின் அபிவிர்த்தி தனக்குத்தானே உண்டாகிவிடுகின்றது. படியாத பாமர ஜனங்களின் அஞ்ஞானத்தைக் காட்டிலும், ஆளுகைக்குப் பெரியசத்துரு வேறில்லை யல்லவா? ஒரு பாடசாலையைத் திறக்கிறவன் ஒரு ஜெயிலை மூடுகிறான் என்பது எவ்வளவு அருமையான வாக்கு.

---

## நாம்கண்ட அநுபவம்

இவ்வுலகவாழ்க்கையில் நாம் நல்ல பயனை யடைவதற்கு நமக்குள்ள மன ஊக்கமே விசேஷித்த காரணமாக விருக்கிறது. நாம் ஒரு காரியத்திலும் முன்னோக்கு இல்லாமலிருப்போமாகில், உண்மையிலேயே நாம் எந்த ஒரு பயனையும் யடைபவர்களாகவிருக்க மாட்டோம். நமக்குரிய கஷ்டத்தையும் பிரயாசையையும் நாம் தவிர்ப்போமாகில், அது நமக்கு தரித்திரத்தையும், இகழ்ச்சியையும், கடைசியாக நமக்குப் பின்னடைதலையும் வெட்கக்கேட்டையுமே கொண்டுவருகின்றதாக விருக்கிறது. முதலில் நமக்கு எவ்வளவு கஷ்டமிருப்பினும் அதை எவ்வளவுக்கு எவ்வளவு நாம் நமது பிரயாசையால் மேற்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவும் நாம் அதினால் மேன்மை யடைகிறவர்களாவோம். அநேக பால்யர்கள் தாங்கள் நோக்கிய எதிர் நோக்கில் ஏறிக்கொண்டே போகும் போது, சடுக்கென சேர்ந்து விடுகிற மனச் சோர்வில் மயங்கி விடுவதில் தாங்கள் நோக்கிய பலனை அடையாமற் போய்



விடுகின்றனர். அவர்களுடைய ஜீவிய பாதையில், சோதனையானது பிரகாலம் பொருந்தியதாக வந்து குறுக்கிட்டு விடுவதில், அதின்மேல் அவர்கள் நாட்டத்தைச் செலுத்தி மதிமயங்கிப் போகின்றனர். உலகச் செல்வமானது பற்பல விதமான வகைகளில் மனதை இழுத்து நிலைகுலைக்கிறதாக விருக்கிறது. அதின் நயப்பான தொனியானது, அநேகாது மனதை இழுத்துக் கொள்ளுகிறது. வெகு சீக்கிரத்தில் பசபசப்பைக் காட்டி இந்தண்டையும் அந்தண்டையுமாக சிற்றின்பங்களை மூட்டி கடைசியில் அழுக்காறடைந்த இருண்ட காட்டில் கொண்டுபோய் விட்டு விடுகிறதாக விருக்கிறது.

எனவே, முதலாவதாக இவ்வுலக வாழ்க்கையைத்தொடங்க நமக்குள்ள சொந்த நோக்கங்களையு பற்றுதல்களையும் நேர் நிதானமாக ஆலோசனை புரிந்து நலமானதைப் பிடித்துக் கொள்ளவேண்டும். பிடித்த பிடியை உறுதியாகப் பிடித்து, அதினால் எத்தகைய துன்ப துயரங்கள் வந்தாலும், விடாமல் ஒரே நிலையில் மனதைச் செலுத்திவிடவேண்டும். எந்த ஒருவகையான அலுவலை ஒருவர் கைப்பிடிப்பினும் அதினால் யாதும் பயனே இல்லாததுபோலக் காணப்படினும் நிலையான உறுதியில் நிலைத்து ஊக்கத்தோடும் உண்மையோடும் உழைத்து வருவாராயின், கடைசியாகத் தனது நீண்ட கஷ்டப் பிரயாசையான பலனை அவசிய மடைவரென்பதில் ஆட்சேபமில்லை.

---

## ஷேக்ஸ்பியரைப்பற்றிய ஒரு கதை.

இங்கிலாந்திலே கவிச்சக்கிரவர்த்தி என்று பெயர்பெற்ற ஷேக்ஸ்பியர் என்னும் கவீஸ்வரர் தாம் உலகோபகாரார்த்தமாய்ச் சொற்சுவை பொருட்சுவைபட அளவிறந்த நீதிகளைப் புகட்டி இயற்றிய நாடகங்களுக்குள்ளே ஒன்றின் காப்புடைத் தலைவனாகிய அரச வேஷத்தைத் தாமே போட்டுக்கொண்டு அநேக பிரபுக்களுக்கு முன் நாடகத்தை நடத்தி வருகையில், இங்கிலாந்து தேசத்தை அக்காலத்து அரசுபுரிந்து வந்த எலிஜபத் என்னும் மகாராணியார் ஷேக்ஸ்பியருடைய வரம்பிகந்த கல்வித்திறத்தைப் பலவாறாகக் கேள்வியுற்று அந்த நாடகத்தைக் கண்டு களிக்கும் பொருட்டுப் போயிருந்தனர். புறத்தே கொண்ட இராஜகோலத்துக்கேற்றபடி ஷேக்ஸ்பியருக்கு மனதிலும் இராஜகெம்பீரத்வம் இருக்கிறதா இல்லையா என்னும் சந்தேகம் மகாராணியாருக்கு உண்டாயிற்று. அப்போது இராஜ வேஷங்கொண்ட ஷேக்ஸ்பியர் இராஜ கெம்பீரத்தோடு, ஏவலாளி வேஷங்கொண்ட ஒருவனை அந்நாடகச் சரித்திர சம்பந்தமான சில குற்றேவல்களைச் செய்யும்படி கட்டளையிட்டனுப்புகிற சந்தர்ப்பமாயிருந்தது. அச்சமயத்தில் மகாராணியார் தமது கரத்திலிருந்த கைக்குட்

டை அகஸ்தமாத்தாய் நழுவி வீழ்வதுபோல நடித்து ஷேக்ஸ்பியருக்குச் சமீபமாய் விழும்படிவிட்டார். அந்தப்படி நழுவி வீழ்ந்த கைக்குட்டையை உடனே எடுத்து மகாராணியாரிடத்தில் கொடாவிடில் மகாராணியாரிடத்தில் காட்டவேண்டிய இராஜ விஸ்வாசத்தைக் குடிகளில் ஒருவராகிய ஷேக்ஸ்பியர் காட்டாது அவமதித்ததாக எண்ணப்படுவார். உடனே குனிந்து அக்குட்டையை எடுத்து மகாராணியாருக்கு இவர் கொடுப்பாராகில் அந்நாடகத்தில் அப்போது தாம் வகித்திருந்த இராஜ கெம்பீரத்துக்குத் தாழ்வு சம்பவிக்கும். ஆகவே அச்சமயத்து ஷேக்ஸ்பியர் இருதலைக்கொள்ளி எறும்புபோலாயினர். ஆயினும் அவரது அகன்ற கல்வித்திறமும் நிகரற்ற புத்தி கோசரமும் அப்போது அவருக்குக் கைகொடுத்தன. தான் கட்டளையிட்டுக்கொண்டிருந்த ஏவலாளியை நோக்கி,

"எங்கட்டளையை யியற்றுதன் முன்னேன்
தங்கைக் குட்டையைத் தாமதியாதெடு."

என்று கைகீட்டுதலும், ஏவலாளி அக்குட்டையை எடுத்துத் தன் கரத்தில் கொடுக்க, அதை வாங்கி ஷேக்ஸ்பியர் மகாராணியாரை நோக்கி, தங்காய் இதோ கைக்குட்டை! என்று சொல்லி இராஜ கெம்பீரத்துடன் கொடுத்துவிட்டனர். இதைக்கண்ட பிரபுக்களும் மகாராணியாரும் சபாஸ்! சபாஸ்! என்று கரகோஷம் செய்து கவீஸ்வரரை மெச்சிக் கொண்டாடினார்கள். ஷேக்ஸ்பியர் அத்தருணத்தில் தம் தங்கை யென்று மகாராணியாரிடத்து முறை பாராட்டியது யாவரும் அதிசயிக்கற் பாலது.

---

## தமிழ் மொழிபெயர்ப்பு

ஆங்கிலத்திலிருந்தும் பலர் அநேக நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றனர். இதில் விசேஷம் யாதெனில், ஒருவர் மொழிபெயர்த்த நாவலையே மற்றவர்களும் மொழிபெயர்த்துவிடுகிறார்கள். விலைகொடுத்து வாங்கும் ஜனங்கள் இந்த இருமொழி பெயர்ப்பினுள்ளும் ஒரேவிஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதை நோக்கி ஏமாறுகின்றனர். ஆங்கிலத்திலுள்ள ஒரு கதையைத் தமிழில் வீரவர்மன் வெற்றி என்று ஒருவரும், ஞானபூஷணி என்று ஒருவரும், சுந்தரி மனோகரன் என்று ஒருவருமாக வெளியிட்டுள்ளார். இம்மூன்றிலுள்ள கதைகளும் ஒரேவிதமான கதைதான். எனவே இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு என்ற மாத்திரத்தில்—அது இதற்குமுன்பு வெளிவந்திருக்கிறதோ என்னவோ என்று யோசிக்கவேண்டியதாகிறது.

---

## தந்தையை மறவேல்.

தந்தையை மறவேற் றந்தையை மறவேல்
தாணடை குறைந்து தலைமயிர் நரைத்துத்
தண்டுகைக் கொள்ளுந் தருணம் வந்ததால்
தந்தையை மறவேற் றந்தையை மறவே[ல்]

கல்வி நீ கற்கக் கைப்பணம் அளித்துக்
கல்வியுங் கீர்த்தியும் கலந்துளா னென்
பெரியோ ருரைக்கப் பெருமகிழ்ச்சி கொள்
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.

இளமை முதலா யின்னாள் வரையும்
வளமையிற் காத்த மகனமக் குளனால்
இனிமனம் வருந்தி ஏங்குவ தென்னே!
கனிவுறு மன்பாற் களிப்போ டுருகி
அன்னையும் என்னையும் ஆதரிப் பானென
உன்னி யனைத்தையும் உனக்கென் றழித்த
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.

தேக மெலிந்து திடமது குன்றி
சாவுவருந்தினம் ஈதென வறியாத்
திண்ணையிலிருந்து சிவசிவ ராமா
கண்ணனே யடியனைக் காத்திடுவாயெனப்
பண்ணுமோர் செபத்தின் பலனை யறிந்து
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.

வருமொரு மங்கையின் வாழ்க்கையிற் படுவோய்
ஒருவழி நில்லாப் பெரும் பேதையனே
அன்னை பிதாவோ முன்னறி தெய்வம்
என்னுமிம் முதுரை யென்றுமே எண்க.

மங்கை பின்னுமோர் மாய வலைப்பட்
டுய்ந்நெறி யறியா துறங்கு மறிவிலோய்
பொல்லாப் பிள்ளையோ வில்லாப்பிள்ளையால்
நல்லறி வாளனாய் நால்வரும் புகழத்
தந்தையைக் காத்துத் தகைமையின் வாழ்கவே.

THE REGISTRAR
4 - MAY 1915
MADRAS

# வீணுக்குப் பேசுவது.

"வீணுக்கு பேசுவது விபரீதமாக முடியு" மென்பது ஆன்றோர் வாக்கு. இது அனுபவம். இதற்குப் போதிய திருஷ்டாந்தமாவது: ஒரு காலத்தில் குடியானவனொருவன் தனது பெண்ஜாதியை நோக்கி, நாம் ஒரு பசுவை வளர்க்கலாம் என்றதும், மனைவி அது நல்ல யோசனை தான், பசுவை வாங்குவதற்கு முந்தி அதைக் கட்டுவதற்கு ஒரு தொழுவம் வேண்டுமென்றாள். உடனே புருஷன் அதைக்கட்ட ஒரு கயிறு என்றதும், பெண்ஜாதி பால் கறக்க ஒரு கலயம் என்றாள். தீனிபோட ஒரு தொட்டியும் வேணுமே என்றதும், ஆம் என் தாயாருக்கும் பால் அனுப்ப வேறு ஒரு கலயமும் வாங்கவேண்டு மென்றனள். தாயாருக்கும் பால் என்றதும், என்னடி! என்னுடைய பசுவில் கறக்கும் பாலை உன் தாயாருக்குக் கொடுக்கப் போகிறாயோ என்றதும், என்ன என் தாயார் என்னை அமுதூட்டி வளர்க்காதிருந்தால் உன் பசுவிலிருந்து பால் கறக்க உனக்குப் பெண்ஜாதி யேது என்றாள். அதற்குப் புருஷன் என் ஆத்தாளை, உன் ஆத்தாள் ஏமாற்றி உன்னை எனக்குக் கலியாணஞ் செய்யாதிருந்தால் ஒருவேளை நான் ஒரு இராஜ கன்னிகையை மணந்திருப்பேனே என, அதைக்கேட்டதும் அடபோ! உன் பவுஷுக்கு ஒரு இராஜ கன்னிகையா? அப்படியே இராஜ கன்னிகை உனக்குக் கிடைத்திருந்தாலும் உனக்காகப் பசுவின் பால் கறப்பாளா? நல்லது, இராஜ கன்னிகை ஒருத்தியைப் பார்த்துக்கொள்; நான் என் ஆத்தாள் வீட்டிற்குப் போறேன் என்றதும், அவன் கூவ, இவள் கூவ, கடைசியாக இருவர் தொண்டையும் நோவெடுத்துக் கம்மிக்கொண்டும் இன்னமும் புருஷன் விடாது சும்மா முறைத்துக்கொண்டே கலப்பையை எடுத்துக்கொண்டு ஏர் உழ வயலுக்குச் சென்றுவிட்டனன். பிறகு மனைவியும் ரோஷம் பொறுக்காதவளாய், இருந்த மூட்டை முடிசுகளைச் சுருட்டிக்கொண்டு தன் தாய் வீட்டுக்குப் பயணம் வைத்துக்கொண்டனள் இப்படியாக மூன்று மாத காலம் கடந்துவிடவே, இவளைப் போஷிக்கும் பாரம் இவளது அண்ணன்மார்கள்மீது விழுந்துவிட, அவர்கள் இதேது தண்டாவெனத் தடியைத் தூக்கிக் கொண்டு குடியானவனிடம் வந்தார்கள். அந்தச்சமயம் அவன் வீட்டிலில்லாமல் போகவே வயலுக்குச்சென்று அங்கு அவனைக் கண்டு, உன் பசு எங்கள் பயிரை அழிக்க வழிந்ததே என்று தட்டுபுட்டென இரண்டுபோட, குடியானவன் அட அப்பா! எனக்கேது பசு என்றான். எங்க தங்கச்சி உன் பசுவின் பாலை எங்க ஆத்தாளுக்குக் கொடுத்துவிட்டாள் என்று அப்போதே வாதாடினையாமே என, இல்லை அப்பா! அது நாங்கள் வீணுக்குப் பேசிய கதை யென்றான். இல்லை, இல்லை உன் பசு எங்



கள் ரொணத்தை மூன்றுமாத காலமாகத் தின்று கொண்டிருக்கிறதென்று சொல்ல, அதன்மீது புருஷனுக்கு உணர்ச்சி பிறந்து மரியாதையாகப்போய் பெண்ஜாதியை அழைத்துவந்தான். பெண்ஜாதியும் யாதொரு மன்னிப்பு கேட்டுக்கொள்ளாது புருஷனிடம் சேர்ந்துவிட்டனள்; பார்த்தீர்களா? இன்னமும் பசுவும் வாங்கவில்லை. பசுவின் பாலைப் பெண்ஜாதி தன் தாய் வீட்டுக்கு அனுப்பவுமில்லை. வீணைப் பேசிக்கொண்ட வார்த்தையானது இவ்வளவான அசந்தர்ப்பங்களுக் கெல்லாம் வழியாக்கி வைத்துவிட்டது.

# "உழைப்பு" என்பவள் கதை.

வறுமையின் மகளான உழைப்பு என்பவள் வெகு நாளைக்குமுன் ஆரோக்கியம், திருப்தி என்னும் தன் இரண்டு பெண்களுடன் நகரத்திற்கு நெடுந்தூரத்தில் ஒரு மலையடிவாரத்திலே சிறிதாகப் பர்ணசாலை (குடிசை) யொன்று போட்டுக்கொண்டு அதில் அமைதியாக வாழ்ந்திருந்தனள். அவர்களுக்குக் கனவான்களுடைய பழக்கம் அணுவளவுமில்லை. அக்கம் பக்கத்துக் கிராமத்தார் தவிர மற்றவர்களோடு அவர்கள் உறவாடி யறியார்கள். இப்படியிருக்க ஒருநாள் தேசயாத்திரை செய்து உலக விநோதங்களைப் பார்க்க நிச்சயித்து அவர்கள் தம் உற்றாரைப் பிரிந்து உறைவிடம் விட்டுச் சென்றார்கள். உழைப்பானவள் வலதுகையில் ஆரோக்கியத்தையும் இடதுகையில் திருப்தியையும் பற்றிக்கொண்டு பெருமையாகப் பெரும்பாதை வழியே போயினள். ஆரோக்கியம் தன் தாய்க்கு வழியில் வருத்தம் தோன்றாதபடி உல்லாசமாய்க் கதை சொல்வதும் மதுரமாய்ப் பாடுவதுமாக மனமகிழ்ச்சியுண்டாக்கிக்கொண்டு சென்றாள். இடது புறத்தில் திருப்தியும், சிரித்த முகமும் சந்தோஷப் பேச்சுமாய்த் தாய்க்கு வழியில் வருத்தமுண்டாகாமல் கைலாகு கொடுத்து, தங்கையும் உள்ளமுவந்து தீவிரமாய் வழிநடக்கும்படி உற்சாகப்படுத்திக்கொண்டு போயினாள்.

இவ்வண்ணம் அவர்கள் காடுகளும் நாடுகளும் நகரங்களும் கடந்துகொண்டு கடைசியில் அத்தேசத்துப் பிரதான பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். அப்பட்டணத்துக் கோபுரவாயிலில் புகுவதற்கு முன்னமே தாயானவள் மக்களைப் பார்த்து, "குழந்தைகாள், நீங்கள் இந்நகரத்துப் பெருமைகளைப் பார்த்து என்னை ஒருபோதும் கைசோர விடாதேயுங்கள்; ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவோமாயின் நாம் மூவரும் அடியோடு அழிந்துபோவோமென்பது தெய்வசங்கற்பமாதலின் எல்லோரும் கட்டிக்காத்திருக்கவேண்டும்" என்று ஆணையிட்டுக் கூறினாள். ஆயினும் ஆரோக்கியம் அதிக உல்

லாசமுடையவளாகித் தாய் சொல்லைத் துறந்து தன் மனம்போனபடி நடக்கப் புகுந்தாள். அவ்வாறு திரிகையில் கெட்டவழியாய் பெருந்தீண்டியோடு கூடிக் கெட்டு, வியாதியென்னும் மகளைக் கருத்தரித்தவளாகிப் பிரசவவேதனையில் இறந்துபோனாள். திருப்தியும் தன் சகோதரியைவிட்டுப் பிரிந்து போகவே, சோம்பலின் நயவஞ்சனைக்கு உட்பட்டுப் பின்பு பேர் கூடத் தெரியாமல் அழிந்துபோனாள். உழைப்போ தன் மக்களைக் காணாமல் மிகவும் துன்பமுற்று, அவர்களைத் தேடிஎங்கும் அலைந்து திரிந்து, நடுவழியே ஆயாசமென்பவனின் கையிற்பிடிபட்டு மிகவும் வருந்தி இறந்துபோயினாள். (கதையை யல்ல கருத்தைக் கவனியுங்கள்.)

---

# விருப்பமுண்டானால் வழியுமுண்டு.

ஒரு நாள் முத்துவீரனென்பவன் அண்டைவீட்டுக்காரனான சூதனென்னும் கோதுமை ரொட்டி செய்யும் வியாபாரியைக் கண்டு வந்தனம் ஐயா! இன்றைய தினம் நான் ஒரு அவசரமாய்ச் சிறிது தூரம் போய் வரவேண்டியிருக்கிறது; சற்று உமது குதிரையை இரவல் கொடுப்பீராவென்று கேட்க வந்தேன் என்றான்.

சூதன்.—ஐயா! உங்களுக்கு உதவிசெய்வதைப் பார்க்கப் பேரானந்தம் எனக்கு வேறில்லை. தற்காலம் உங்களுக்கு உதவிசெய்யக் கூடாமலிருப்பதைப் பற்றிச் சற்று விசாரப்படுகிறேன். என் கிடங்கில் கோதுமை மாவெல்லாம் செலவாய்விட்டது; உடனே நான் பட்டணத்துக்குக் குதிரைமேல் ஏறிக்கொண்டுபோய்த் தேவையான மாவு வாங்கி வரவேண்டும்; இல்லாவிட்டால் என் வியாபாரத்துக்கு இடையூறு உண்டாகுமே!

முத்து.—ஐயா, நீங்கள் இதற்காக இத்தனை வருந்தவேண்டாம்; என் வீட்டில் இரண்டு மூட்டை மாவு சிறந்ததாயிருக்கிறது; உங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்; அதற்காக வருத்தப்படாதேயுங்கள்.

சூதன்.—ஓ, அதுகூடாது. உங்கள் மாவு என் பெண்சாதி மனத்திற்குப் பிடிக்காது; அவளுடைய குணம் ஒரு மாதிரியானது; நான் இந்த மாவை வாங்கிக்கொண்டு போனால் அவள் திட்டுவாள்.

முத்து.—அப்படி ஒருபோதும் இராது. என்னுடைய மாவு மிகவும் சிறந்தது; நமது வீட்டுக் கோதுமை அரைத்து வந்த மாவென்று நீங்கள் சொல்லுவீர்களானால் அதைப் பார்த்து உங்கள் மனையாட்டி மிகவும் சந்தோஷப்படுவாள்.

சூதன்.—அவள் அப்படி மோசம் போகிறவளல்ல. நான் வழக்கமாக



வாங்கிவருகிற மாவுக்கும் அயலார் மாவுக்கும் வேற்றுமை அவளுக்கு நன்றாய்த் தெரியும். அது கிடக்கட்டும்; பிறருக்கு உதவிசெய்யும் விஷயத்தில் எனக்குள்ள விருப்பம் மற்றெவற்குமில்லை யென்பது உமக்கு தெரியாதா? ஆயினும் ஐயோ! இன்று காலை முதல் என் குதிரை கொஞ்சங்கூடப் புல் தின்னவில்லையே! அது எப்படி வழிநடந்து போக மாட்டும்? அதை அனுப்பப் பயமா யிருக்கிறதே!

முத்து.—இரைக்காக நீர் பயப்படவேண்டாம். நான் வழியில் வேண்டிய புல் வாங்கிப் போடுகிறேன்.

சூதன்.—அது சரிதான்; நேற்று இராத்திரி சிறிது மழை பெய்ததினால் வழியெல்லாம் சேறும் தண்ணீருமாயிருக்கும்; குதிரை சறுக்கி விழுந்தால் காலொடியுமே.

முத்து.—அப்படிப்பட்ட அபாயம் ஒருபோதும் உண்டாகாது. உம்முடைய குதிரை வெகு சாமர்த்திய முள்ளதென்பது உமக்கே தெரியாதா? இல்லாவிட்டால் உடனே குதிரைமேல் ஏறிக்கொண்டு பட்டணம் போய் வரவேண்டுமென்று நிமிஷத்திற்கு முன் நீங்கள் சொன்னீர்களே, எப்படி சொன்னீர்கள்?

சூதன்.—ஓ கோ! நான் முக்கியமாய் ஒன்று மறந்துபோனேன். சேணமெல்லாம் துண்டு துண்டாய்க் கிழிந்து போயிற்று; கடிவாளத்தையும் செப்பனிட அனுப்பி யிருக்கிறேனே.

முத்து.—அதற்காக நீர் விசாரப்பட வேண்டாம்; நல்லகாலமாய் என் வீட்டில் சேணமும் கடிவாளமும் ஒரு ஜதை வைத்திருக்கிறேன்.

சூதன்.—உங்கள் சேணம் என் குதிரைக்கு ஒருபோதும் சரிப்படாதே.

முத்து.—அப்படியானால் அண்டைவீட்டுக் கந்தசாமி சேணத்தை நான் சற்று இரவல் வாங்கிக்கொள்ளுகிறேன்.

சூதன்.—கந்தசாமி சேணத்தை நான் முன்னமே பார்த்திருக்கிறேன்; அது என் குதிரைக்குச் சற்றும் பொருந்துவதில்லை.

முத்து.—அப்படியாயின் அதுவும் வேண்டாம்; சேணம் தைத்துவிற்பவன் எனக்கு மிகவும் வேண்டியவன்; நான் சொன்னபடி கேட்பான்; அவனிடத்திலிருந்து உன் குதிரைக்குப் பொருந்தியதாய் ஒரு சேணம் வாங்கிப் போட்டுக்கொண்டு போகிறேன்.

சூதன்.—ஆம், அப்படியே செய்யலாம்; எப்படியாவது உமக்கு உதவி செய்ய வேண்டுமென்று என் மனமும் பதைக்கின்றது. குதிரையைக் கொடுக்க எனக்கு யாதொரு ஆக்ஷேபமும் இல்லை; ஆயினும் என்ன செய்வேன்! இரண்டு வாரமாய் நன்றாய்த் தேய்த்துச் சீர்ப்படுத்துவா ரில்லாமல் குதிரை மிகவும் விகாரமாய்க் கிடக்கிறது; இந்த ஸ்திதியில் இதை யாராவது பார்ப்பார்களானால் ஒருவரும் இதை லக்ஷியம் பண்ணார்கள். பிறகு ஒரு சமயம் வந்து

கான் இதை விற்கப்போனால் இதன் விலையில் நான்கில் ஒரு பங்கு கூடக் கிடைக்க மாட்டாதே. அதற்காகவே கொஞ்சம் யோசிக்கிறேன்.

**முத்து.**—இது ஒரு பெரிய காரியமா? என் வேலைக்காரனைக் கொண்டு கால்மணி நேரத்தில் நான் குதிரையை நன்றாய்த் தேய்க்கச் செய்கிறேன்.

**சூதன்.**—ஆம், அப்படியே செய்விக்கலாம். ஓகோ! முக்கியமாய் ஒன்று இப்போதுதான் நினைவு வந்தது; இதற்கு லாடம் தைக்கவில்லையே!

**முத்து.**—லாடம் தைக்க எந்நேரம் செல்லும்? இதோ மூன்றும் வீட்டில் லாடந் தைப்பவன் இருக்கிறான் அழைப்பிக்கட்டுமா?

**சூதன்.**—என்ன! இந்த காட்டுப்புறத்து மடையனா என் குதிரைக்கு லாடந் தைக்கிறது; ராஜாவினுடைய குதிரைக்கு லாடம் தைப்பவன் தவிர மற்றெவனாலும் என் குதிரைக்கு லாடந் தைக்க முடியாது.

**முத்து.**—அப்படியா! அதுவும் எனக்கு சந்தோஷமே! நான் போகும் போது அரசன் குதிரைக்கு லாடந் தைக்கிற கருமான் வீட்டு வழியாகத்தான் போவேன்; அங்கே சுலபமாய்த் தைப்பித்துக் கொள்கிறேன்.

**சூதன்.**—(அத்தருணத்தில் தன் வேலைக்காரன் ஒருவன் அவ்வழியாகப் போகக் கண்டு) மாணிக்கம் மாணிக்கம் (என்று அவனைக் கூவினான்.) மாணிக்கம் (அவனண்டை ஓடி வந்து) என் ஐயா இதோ காத்திருக்கிறேன்!

**சூதன்.**—நமக்கு மிகவும் இஷ்டமான இவர் நம்முடைய குதிரையைச் சற்று இரவல் கேட்கிறார். (கண்ணைச் சிமிட்டி அவனுக்குச் சமிக்கைக் காட்டி) குதிரை முதுகில் கையளவு அகலம் ரணமொன்றிருந்ததே! அது ஆறியிருக்கிறதா? ஓடிப்போய்ப் பார்த்து வா. (அவன் காட்டின சமிக்கையைக் கண்டுகொண்டதாக மாணிக்கம் அவனுக்குக் குறிகாட்டிவிட்டு, அப்படியே இதோபோய்ப் பார்த்து வருகிறேன் ஐயா என்று சொல்லிப் போய்விட்டான்.)

**சூதன்.**—(மாணிக்கம் அப்புறம் போனவுடனே முத்துவீரனைப் பார்த்து) ஐயா குதிரைப்புண் வெகுவாய் ஆறிப்போயிருக்குமென்று எண்ணுகிறேன். கடைசியாய் உங்களுக்கு உதவி செய்யும்படியாயிற்றேயென்று எனக்கு அதிக சந்தோஷமாகின்றது. சமயத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்யாத மனிதன் உலகத்திலிருந்தாவதென்ன? நாம் இன்றைக்கு ஒருவருக்கு உதவி செய்தாலல்லவோ பிறர் நாளைக்கு நமக்கு உதவுவார்கள். சமயத்தில் பிறருக்கு உதவி செய்யும் பெருங்குணம் என்னைப்போல மற்றெவர்க்கும் இல்லையென்பது உமக்கே தெரியாதா? (இவர்கள் இப்படிப் பேசுகையில் மாணிக்கம் திரும்பி ஓடிவந்தான்) மாணிக்கம், குதிரைப்புண் எப்படியிருக்கிறதப்பா.

**மாணிக்கம்.**—ஐயா, நான் அதை என்னென்று சொல்வேன்! நீங்கள் கையளவு புண் என்றீர்களே! முழமகல மென்று சொன்னாலும் அதற்குப் பொருந்தும்;. ஐயோ பாவம்! அந்தக் குதிரை ஓரடிகூட எடுத்து வைக்கமாட்



டாது. மேலும் இன்று பகலில் கடைத் தெருவுக்குக் குதிரையை ஓட்டிக்கொண்டு வரும்படி தங்களுடைய பெரிய பிள்ளை, கட்டளையிட்டுப் போயிருக்கிறார்.

**சூதன்.**—(முத்துவீரனைப் பார்த்து) ஐயா நான் என்ன செய்வேன் கடைசியில் இப்படி நேர்ந்ததைப்பற்றி மிகவும் விசாரப்படுகிறேன். இந்தக் குதிரைமட்டும் இப்போது தங்களுக்கு உதவும்படியானால் அதற்காக நான் என் ஆஸ்தி அனைத்தையும் வேண்டுமானாலுங் கொடுத்துவிடச் சித்தமாயிருக்கிறேன். ஐயா! என் உயிர்த் தோழனான உமக்கு உதவிசெய்யக் கூடாமற் போனதைப்பற்றி என் மனம் மிகவும் பரிதபிக்கிறது; என்ன செய்வேன் ஐயா!

**முத்து.**—உங்களுக்காக நானும் மிகப் பரிதாபப்படுகிறேன் ஐயா! வனெனில் வனபரிபாலகரான பெரியதுரை உடனே தன்னைவந்து பார்க்கும்படி இன்று எனக்குக் கடிதம் எழுதினார். போய்ப் பார்த்தால் நம்மிருவருக்கும் விசேஷலாபம் உண்டெனத் தோன்றுகிறது. இன்று சாயங்காலத்துக்குள் தன்னை வந்து பார்த்தால் ஒரு பெருங் காட்டில் ஒரு பாகம் வெட்டிக்கொள்ள எனக்கு உத்திரவு கொடுப்பதாய்ச் சொல்லுகிறார். அது எனக்கு மிகவும் பிரயோசனமானது. உமக்கு இருநூறு முந்நூறு ரூபாய் கிடைக்கும்படியாகும்; எப்படியெனில், எனக்கு அந்தக் காட்டுக் குத்தகை கிடைத்தால் அதில் உமக்கும் ஒருபங்கு கொடுக்கலாமென்றிருந்தேன்.

**சூதன்.**—என்ன? இருநூறு முந்நூறு ரூபாயென்றா சொல்லுகிறீர்?

**முத்து.**—ஒருசமயம் இன்னும் அதிகம் கிடைத்தாலும் கிடைக்கும். ஆயினும் என்ன செய்யலாம்! உங்கள் குதிரை இப்போது நடக்கத்தக்க நிலையிலில்லையாதலால் வேறு யாரையாவது நான் கேட்டு வாங்கிக்கொண்டு போக வேண்டும்.

**சூதன்.**—ஐயா, நீங்கள் அப்படிச் செய்தால் எனக்கு அவமானமல்லவா? என் குதிரையைத் தங்கள் வசத்தில் ஒப்புவித்து விட்டேன், தங்களிஷ்டம் எப்படியோ அப்படிச் செய்துகொள்ளலாம். தங்கள் இஷ்டத்துக்கு இரண்டாவதில்லை. நான் என் சிநேகிதனுக்குச் சகாயம் செய்யப் பின்வாங்குகிறவனெனத் தங்களுக்குத் தோன்றுகிறதா?

**முத்து.**—அப்படியாயின் நீங்கள் கோதுமை மாவுக்கு என்ன செய்வீர்கள்?

**சூதன்.**—என் பெண்சாதி பத்துப் பதினைந்துநாள் வரையுங்கூட எப்படியாவது நிர்வகிக்க மாட்டுவாள். அதற்காக விசாரப்பட வேண்டுவதில்லை.

**முத்து.**—சேணமெல்லாம் கிழிந்துபோயிற்றென்கிறீர்களே? அதற்கென்னசெய்கிறது?

**சூதன்.**—கிழிந்துபோயிற்றென்று சொன்னது பழய சேணம்; புதிதாய்ச் சேணமும் கடிவாளமும் ஒரு ஜதை வாங்கி வைத்திருக்கிறேன்; அதை முதல்

முதல் நான் உபயோகிப்பதைவிட என் சினேகிதன் உபயோகித்தால் எனக்கு
அதிக சந்தோஷமே ; அதையே தங்களுக்குத் தருகிறேன்.

**முத்து.**—ஆயின் நான் பட்டணம்போய்க் குதிரைக்கு லாடம் தைக்க
வேண்டுமோ ?

**சூதன்.**—வாஸ்தவமாய் நான் அதை முற்று மறந்து போனேன். நம்
அண்டை வீட்டுக்காரனுடைய திறமையைப் பார்க்கலாமென்று நேற்றுத்
தான் முதல்முதல் அவனைக்கொண்டு லாடம் தைப்பித்தேன் ; தற்செயலாய்
அது வெகு நன்றாகவே அமைந்தது.

**முத்து.**—மாணிக்கம் சொல்லுகிறபடி குதிரை முதுகில் அவ்வளவு பெரிய
புண் இருக்கிறபோது அதை எப்படி சவாரிக்கு உபயோகப் படுத்துகிறது ?

**சூதன்.**—அந்தப் போக்கிரிப் பயல் பேச்சு எனக்கு நன்றாய்த் தெரியும்;
அவன் எப்போதும் ஒன்றைப் பத்தாகச் சொல்வது வழக்கம். நான் பிரமாண
மாய்ச் சொல்லுகிறேன் ; அந்தப்புண் அரையணா அளவுக்கு அதிகமில்லை.

**முத்து.**—குதிரையைத் தேய்த்துச் சீர்ப்படுத்த வேண்டு மல்லவா ?
இரண்டு வாரமாய்த் தேய்க்காமல் குதிரை கெட்டுக் கிடக்கிற தென்றீர்களே ?
அதற் கென்ன செய்யலாம் ?

**சூதன்.**—அந்த வேலைக்காரப் பயல் அப்படி ஒருபோதும் குதிரையை
உபேக்ஷை செய்யமாட்டான். நாள் தப்பாமல் குதிரையைத் தேய்த்துக்கொ
ண்டு வரும்படி நான் அவனுக்குத் திட்டம் செய்திருக்கிறேன்.

**முத்து.**—இன்று காலைமுதல் குதிரை புல் தின்னாம லிருக்கின்ற தென்
றீரே! அதற்கென்ன செய்கிறது? இனித் தீனிபோட்டுக் குதிரை வயிறு நிரம்
பத் தின்ற பிறகல்லவோ அதைக் கொண்டுபோக வேண்டும்.

**சூதன்.**—அதற்காகப் பயப்படவேண்டாம் ; இன்று காலையில் அது அதிக
மாய்க் கொள்ளு தின்றுவிட்டபடியால் புல் தின்னவில்லை. அதன் வயிறு புஷ்டி
யாய் நிறைந்திருக்கிறது. அது உங்களை ஏற்றிக்கொண்டு அதிக வேகமாய்ச்
சவாரிசெய்து கொண்டுபோம் ; அதற்காக நீங்கள் பயப்படவேண்டாம். வழி
யும் நன்றாய் உலர்ந்தேயிருக்கிறது. நீங்கள் குதிரைமேல் ஏறிக்கொண்டு சுக
மாய்ப் போய்வரலாம். சீக்கிரமாய்ப் பிரயாணப்படுங்கள்; வீணே காலதாமதம்
செய்யவேண்டாம் என்றான்.

இப்படித்தான் ஒவ்வொருவரும் தங்களுக்கு மனமில்லாவிட்டால்
வேணுமென்றே இல்லாததும் பொல்லாததுமான சாக்குப்போக்குச் சொல்லி
சாதிப்பார்கள். தங்கள் விருப்பம் நிறைவேற வேண்டுமானால் மத்தியில் எத்
தனை இடையூறு உண்மையாய் வரினும் அவற்றை யெல்லாம் மிக்கமுயன்று
நீக்கிக்கொண்டு அதைமுடிப்பார்கள். மனம் உண்டானால் எல்லாம் உண்டு.
மனம்போல வாழ்வு.

# சமர்த்தர்களான மூன்று சிறுவர்கள்.

ஆதிகாலத்தில் அமராவதி யென்னும் பட்டணத்தில் ஒரு குடி
யானவன் இருந்தான். அவன் மிகவும் தரித்திர
னாயினும் கல்வி கேள்விகளில் சிறந்தவன். அவ
னுக்கு மூன்று பிள்ளைகள். தான் மிகவும் அசக்தனாய்ப் போனபின்பு ஒரு
நாள் அந்தக் குடியானவன் பிள்ளைகளைத் தன்னிடம் வரவழைத்து, மூத்தவ
னுக்கு ஒரு கோழியும், நடுவனுக்கு ஒரு அரிவாளும், இளையோனுக்கு ஒரு
பூனையும் கொடுத்து, அவர்களைப் பார்த்து, என் குழந்தைகாள்! நான் இப்
பொது மிகவும் தள்ளாதவனாயினேன். எனக்கு மரணகாலமும் சமீபித்து
விட்டது. இனி உங்களைக் காப்பாற்றவாவது உங்களுக்கு வேண்டிய புத்தி
மதிகள் சொல்லவாவது மற்றெவருமில்லை. கையில் பொருளிருந்தாலும்
அதைத் தலைக்குக் கொஞ்சமாகப் பாகித்துக் கொடுப்பேன் ; அதுவும் என
க்கு இல்லை. ஆதலால் இப்போது நான் உங்களுக்குக் கொடுப்பது மிகவும்
சொற்பமானது. ஆயினும் நீங்கள் அதை அற்பமாக நினையாதேயுங்கள்.
மிகுந்த புத்தியும் சாமர்த்தியமும் உடையவர்களாகி நான் கொடுத்த பொருளை
அது வழங்காத ஒரு தேசத்திற் கொண்டுபோய் ஏற்றபடி உபயோகிப்பீர்
களானால் உங்களுக்கு மிகுந்த க்ஷேமம் உண்டாகும் என்றான்.

இது நடந்த சில நாளைக்கெல்லாம் அந்தக் கிழவன் இறந்து போனான்.
பிறகு அவனுடைய மூத்த மகன் “ தந்தைசொன் மிக்க மந்திர மில்லை ” என்
பதை உறுதியாகக் கொண்டு தந்தை சொல்லிப் போனபடியே தனக்கு அவர்
கொடுத்த கோழியைக்கொண்டு தான் பாக்கியம் பெறவேண்டுமென நினை
த்து, தேச யாத்திரை புறப்பட்டான். ஆயினும் அவன் எவ்வளவு தூரம்
போனாலும் அவனுடைய கோழியைக் கேட்பார் இல்லை. அவன் போன
விடமெல்லாம் கோழிகள் அபரிமிதமாய்க் கிடந்தன. பெரிய நகரங்களில்
மெத்தைகளிலும் மேடைகளிலும் ஏறிக்கொண்டு கோழிகள் கொக்கரித்துக் கூவுவ
திலேயே அவனுக்குக் காணப்பட்டன. கிராமங்களின் சமீபத்தில் போவ
தற்கு முன்னமே கோழிகளின் கூச்சல் அநேகமாய்க் கேட்கும். அதனால்
அவன் பலதேசங்களில் யாத்திரை செய்தும் தன் கோழிக்குக் கேள்வி பிறவா
மையால் நிராசை கொண்டானாயினும், அவ்வளவோடு ஊக்கமழியாமல் பின்
னும் சில விடங்களுக்குச் சென்றான். அவ்வண்ணமே ஒருநாள் ஒரு புதிய
தீவிற்போய்ச் சேர்ந்தான். அத்தீவாருக்குக் கோழி யென்று ஒரு ஜந்து
உலகத்தில் இருக்கிற தென்பதே தெரியாது. அதுமாத்திரமே யல்ல ; இராப்
பகல் நாழிகையும், பொழுதும் அளந்தறிகிற வகையும் ஏதேனும் அவர்களுக்
குத் தெரியாது. சூரியனைக் கண்டு காலை மாலைகளை மட்டும் ஒருவாறு பகுத்

யாதொரு வழியும் இல்லை. இவன் அவ்விடத்து மனிதர்களுக்குத் தன்னுடைய கோழியைக் காட்டி, இது எப்படிப்பட்ட பக்ஷி பார்த்தீர்களா? இதின் சிரசில் எப்படிப்பட்ட கிரீடம் இருக்கின்றது; இதன் சிறகுகள் எவ்வளவு அழகா யிருக்கின்றன? இப்பறவை இராக்காலத்தில் நியதியாக மூன்று வேளை கூவுவதுண்டு. மூன்றாந்தரம் கூவியாயிற்றென்றால் விடியற்காலம் சமீபித்ததென்று கொள்ளவேண்டும். அப்படியே பகலில் கூவினால் இப்போது இத்தனை நாழிகை யாயிற்றென்று அறியக்கூடும். ஆதலால் இப்பறவை யாவர்க்கும் மிக்க உபயோகமானது என்றான்.

அதைக் கேட்டு அவ்விடத்து ஜனங்கள் மிகவும் சந்தோஷம் அடைந்து அன்றிரவெல்லாம் விழித்திருந்து கோழி கூவுவதைக் கேட்கவேண்டுமென்று அதிக ஆவல் கொண்டிருந்தார்கள். அக்கோழி அன்று இராத்திரி இரண்டாம் யாமத்திலும் மூன்றாம் யாமத்திலும் விடியற் காலத்திலும் ஆக மூன்றுதரம் கூவிற்று. அதைக் கேட்டவர்கள் மிகவும் ஆச்சரியங் கொண்டு, இப்பறவையை நீர் விலைக்குக் கொடுப்பீரா? கொடுப்பதானால் இதற்கு என்ன விலை கேட்பீர் என்று வினவ, அந்தக் கோழிக்காரன், ஒரு கழுதை சுமக்கத் தக்க பொன் நாணயம் கொடுப்பீர்களானால் இதை உங்களுக்குத் தந்து விடுவேன் என்றது கேட்டு அவர்கள், இவ்வளவு அற்புதமான பறவைக்கு விலை இந்தச் சொற்பப் பொருள்தானா என்று அகமகிழ்ந்து அவன் கேட்டதை உடனே கொடுத்து அந்தக் கோழியை வாங்கிக்கொண்டார்கள்.

கோழிக்காரனும் தன் கோழிக்காக அவர்கள் அவ்வளவு பொருள்கொடுத்தது கண்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டு சுகமாய் வீடுபோய்ச் சேர்ந்தான். தமையன் போய்க் கொண்டுவந்த பொருள்களைப் பார்த்து வீட்டிலிருந்த தம்பிமார்கள் மிகுந்த ஆச்சரிய மடைந்தார்கள். பிறகு இரண்டாவது குமாரன் தான் தன் அரிவாளைக்கொண்டுபோய் அதனால் தான் செல்வமடைந்து வருவதாகத் தன சகோதாரிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு புறப்பட்டான். ஆயினும் அவன் புறப்பட்ட பலநாள் வரையில் அந்த அரிவாளினால் அவனுக்கு எந்தவிதமான நன்மையும் உண்டாவதாகத் தோன்றவில்லை. ஏனெனில் அவன் எங்கேபோனாலும் அவ்விடத்து ஜனங்கள் அநேகமாய் அரிவாள் வைத்துக்கொண் டிருந்தார்கள்; ஆதலால் இவனுடைய அரிவாளைக்கேட்பார் எவருமில்லை. அப்படி யிருக்கக் கடைசியில் அவன் ஒரு தேசத்திற்குப் போனான். அத்தேசத்தார்க்கு அரிவாளென்பதும் தெரியாது; அதன் உபயோகம் இப்படிப்பட்டதென்பதும் தெரியாது. வயல்களில் தானியம் விளைந்தால், அத்தேசத்தார் தானியங்களைமட்டும் கையால் பிசைந்தாவது எடுத்துக் கொள்வார்கள்; அல்லது கதிர்கதிராகக் கிள்ளிக்கொண்டாவது போவார்கள். பிறகு தாள்களை நெருப்பிட்டுக் கொளுத்தியாவது போடுவார்கள், மாடுகளை விட்டு மேய்த்தாவது விடுவார்கள். அதுவே யொழியத் தாளோடு அறுத்துக் கட்டிக்கொண்டுபோய்க் களத்திலிட்டு அரியடித்துத் தானியம் சேர்ப்பதென்



பது ஒருகாலத்திலுமில்லை. அப்படிச் செய்வதனால் தானியங்கள் அநேகமாய்ச் சேதமாவதுபற்றிக் குடிகளெல்லாம் கூக்குரலிட்டுக்கொண் டிருந்தார்கள். அரிவாளைக் கொண்டுபோன வீரன் அவர்களிடம் போய்ச் சேர்ந்து தன் அரிவாளின் உபயோகம் இப்படிப்பட்டதென்று அவர்களுக்குத் தெரியச்சொல்லி, அதன்படியே ஒரு நாள்கூட வீண்போகாதபடி சாவதானமாய் அறுப்பறுத்துக் கட்டிக் கொடுத்தான். அது கண்டு அங்கிருந்தவர்களெல்லாரும் மிகவும் ஆச்சரியமடைந்து. என்ன விலை கேட்டாலும் கொடுக்கிறோம்; இந்த அரிவாளை எங்களுக்கு அவசியம் தரவேண்டுமென வேண்ட, குதிரையின்மேல் அது சுமக்கத்தக்க அளவு பொன் கொடுப்பீர்களானால் இதைத் தருவேனென்றான். அப்படியே அதற்குச் சம்மதித்து அவர்கள் அவ்வரிவாளை வாங்கிக்கொண்டார்கள்.

பிறகு அவன் அத்தேசத்தாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் ஊர்போய்ச் சேர்ந்தான். அங்கிருந்த மூன்றாங்குமாரன் தன் தமையன்மார் இருவரும் விசேஷமாய்ப் பொருள் தேடிக்கொண்டு வந்தது கண்டு மிகவும் சந்தோஷமடைந்து தானும் அவ்விதமாய்த் தன் அதிர்ஷ்டத்தைப் பார்த்துவரவேண்டுமென்று எண்ணித் தன் பூனையையெடுத்துக்கொண்டு தேசயாத்திரையாய்ப் புறப்பட்டான். முதலிலே சில நாள் வரையில் அவன் போன விடங்களில் அவனுடைய பூனையைக் கேட்பார் எவரும் இல்லாமையால், தமையன்மார் கஷ்டப்பட்டது போலவே அவனும் சில மாதகாலம் கஷ்டப்பட்டுக்கொண்டே போனான். அவன் எவ்விடத்திற்குப் போனாலும் அங்கங்கே பூனைகள் அபரிமிதமாய்க் கிடந்தன. ஆயினும் நெடுந் தூரத்துக்கப்பால் அவன் தமையன்மார்களுக்குக் கிடைத்ததுபோல அவனுக்கும் ஓரிடம் கிடைத்தது. பூனையென்கிற பெயரே தெரியாத பட்டணமொன்று அங்கோரிடத்தில் இருந்தது. பூனைகளில்லையானாலும் அப்பட்டணத்தில் எலிகள் மாத்திரம் அபரிமிதம். அவ்வெலிகளுக்கு எவரிடத்திலும் பயங்கிடையாது. அவை பகற்பொழுதிலேகூடச் சாதாரணமாய் வெளியேவந்து மனிதர்களோடு கூடத்திரிந்துகொண்டிருக்கும். வீடுகளில் அவை செய்கின்ற தீமைகளோ வாயினால் சொல்லக்கூடாதவை. வீட்டில் எந்தப் பண்டம் வைத்தாலும் மறுநிமிஷத்தில் கண்ணுக்கு அகப்படுவதில்லை. இப்படி எலிகள் தொந்தரை செய்கின்ற செய்தி அந்நகரத்து அரசன் வரையில் எட்டியது. அரசனும் அதற்கு இன்ன பரிகாரம் செய்கிறதென்று தோன்றாமல் தவித்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்க இவன் அந்நகரத்திலே ஒரு கிரகத்தில்போய் இறங்கினவுடனே அவனுடைய பூனை அவ்வீட்டிலுள்ள எலிகளைப் பிடிக்க ஆரம்பித்தது. இரண்டொரு நாழிகைக்கெல்லாம் அவ்வீட்டைச் சுத்தப் படுத்தியது. அதைப் பார்த்து அப்பட்டணத்துப் பிரஜைகள் மிகவும் மகிழ்ச்சிகொண்டு அரசனிடம் சென்று அந்த அற்புதமான மிருகத்தை விலைகொடுத்து வாங்கிக்கொண்டால் அந்நாட்டுக்கு அளவற்ற சவுக்கியம் உண்டாகுமென்றுசொல்லி முறையிட்டார்கள். அதைக்

கேட்டு அரசன் எப்படியாவது எலிகளின் உபத்திரவம் தீர்ந்தால் போதுமென்று, பூனைக்காரன் கேட்டபடியே இரண்டு யானைகள் சுமக்கத்தக்க பொன் வெள்ளி ரத்தினாபரணங்களை யானைமேலேயே ஏற்றி அவனுக்குப் பரிசு கொடுத்துவிட்டு, பூனையை வாங்கிக்கொண்டான். அதனால் இவ்விளைய மகன் தன் மூத்தோர்கள் கொண்டுவந்ததைப் பார்க்கிலும் இருமடங்கு அதிகமான பொருள்களோடு திரும்பித் தன் ஊருக்குச் சென்றான்.

அவர்கள் விற்ற பொருள்களை வாங்கினவர்கள் எவ்விதமானார்களென்று கேட்பீர்களோ? கோழியையும் அரிவாளையும் வாங்கிக்கொண்டவர்களுக்கு ஒருகுறையும் இல்லை. அவர்கள் கோரின காரியம் சரியாகவே கைகூடி வந்தது. அவ்வண்ணமே பூனையும் அந்நகரத்திலுள்ள எலிகளை விடாமல் பிடித்துக்கொண்டுவந்தது. ஆயினும் அது ஓயாமல் எலிபிடிக்கும் விஷயத்தில் பட்டப் பிரயாசையினால் அதிக தாகமடைந்ததாகி ஒருநாள் ராஜமாளிகையில் ஓரிடத்தில் நின்று தலையைத் தூக்கிக்கொண்டு, "மியா! மியா!!" என்று பயங்கரமாய்க் கூவத்தொடங்கிற்று. அந்நகரத்தார் பூனையின் கூச்சலை ஒருநாளும் கேளாதவர்களாதலால், அன்றைய தினம் அதைக்கேட்டு அரசன் முதற்கொண்டு யாவரும் மிகுந்த திகில்கொண்டு அரசன் மனையைவிட்டு அப்புறம் ஓடிப்போனார்கள். பிறகு அரண்மனைக்கு நெடுந்தூரத்திற்கப்பால் சென்று அரசன் தன் மந்திரிகளை அழைத்து ஒரு சபைகூட்டி ஆலோசனை செய்யலானான். அவ்வாலோசனையில், ஒரு போர்வீரனை யனுப்பி அப்பட்டணத்தைவிட்டு ஓடிப்போம்படி பூனைக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்குப் பூனை சம்மதப்படாதபக்ஷத்தில் பலவந்தமாயாவது அதைத் துரத்திவிடவேண்டும். இக்கொடிய மிருகத்தின் வாயில் அகப்பட்டுக்கொண்டு நாம் மாண்டுபோவதைப் பார்க்கிலும் வழக்கப்படி எலிகளின் உபத்திரவத்தைப் பொறுப்பதே மேலெனத் தோன்றுகிறது என்றார்கள். அப்படியே, நீ ஸகஜமாய் இந்த நகரத்தைவிட்டு ஓடிப்போகிறாயா இல்லையா என்று பூனையைக் கேட்கும்படி அதனிடத்திற்கு ஒரு போர்வீரனை அனுப்பினார்கள். வரவரப் பூனைக்குத் தாகம் அதிகரித்துக்கொண்டு வந்ததினால் அப்போதும் அது "மியா! "மியா!" என்றே கூவிக்கொண்டிருந்தது. அதைக்கேட்டு அந்தப் போர்வீரன் அது போகமாட்டேனென்று சொல்வதாக நினைத்துக்கொண்டு, அச்செய்தியை அரசனிடம் போய் அறிவித்தான். அதன்பின்பு அரசனுடைய ஆலோசனைச் சபையார் அந்தப் பூனையைத் துப்பாக்கியால் சுட்டுவிடும்படி கட்டளையிட்டார்கள். ஆயினும் அந்தப்பூனை எளிதில் அவர்களுக்குச் சுவாதீனப்படவில்லை. பிறகு அது இருக்குமிடத்தில் நெருப்புவைத்துக் கொளுத்திவிடும்படி பார்த்தார்கள். அவர்கள் கொளுத்திய தீயானது தன்மேல் உறைப்பதற்கு முன்னமே பூனை அப்பால் ஓடிப்போய்விட்டது. அவர்கள் கொளுத்தியதனால் வீடுபற்றி எரிந்துபோயிற்றே யொழியப் பூனைக்கு யாதொரு தீங்கும் உண்டாகவில்லை. இப்படி இன்னும் பலவிதமாய்ப் பட்டணத்து வீடுகளை அழித்தும் அப்பூனையைக் கொல்லப் பார்த்தார்கள், சாத்தியப்படவில்லை. கடைசியில் அந்தப்பூனை அவர்கள் கையில் அகப்பட்டதோ அகப்படவில்லையோ இன்னும் எவர்க்கும் தெரியாது.



இவர்களின் செய்தி இங்ஙனமாக, விவேகசாலிகளான அம்மூன்று ஸகோதரர்களோ தங்களின் சொந்த நகரத்தில் மிகுந்த தனவான்களாகி அளவற்ற காணி பூமிகள் வாங்கிக்கொண்டு தேசாதிபதிகளாக வாழ்ந்திருந்தார்கள். சக்தியுள்ளவர்களுக்கு வாழ்வு.

---

# அற்புதமான ஒரு கட்டில்.

---

முன் ஒரு காலத்தில் விராடதேசத்தில் வஸந்ததிலகன் என்று ஒரு வர்த்தகனிருந்தான். அவனுக்குச் சூடாமணியென்று ஒரு புத்திரனுண்டு. தாய் தந்தையர்களுக்கு அவன் ஒரே மகனானதால் அவர்கள் அவனிடத்தில் அதிக நேசம்கொண்டவர்களாகி, அவனை ஒருவேலையும் செய்யவொட்டாமல் அவன் மனம்போனபடியெல்லாம் களித்து விளையாடித் திரியவிட்டுத் தாங்களே அவனுக்காக வருந்தி யுழைத்துக் கொண்டிருந்தார்கள். குழந்தைக்குக் கல்வியாவது கைத்தொழிலாவது ஒன்றும் கற்பிக்கவில்லை. தங்களுக்கு மரணம் சம்பவித்துத் தம் அருமைக் குழந்தையைத் தனியே விட்டுப்போம்படியான காலமொன்று வருமென்பதையும், அக்காலத்தில் இவன்தானே வருந்தி யுழைத்து வயிறு வளர்க்க வேண்டியதாகும் என்பதையும் அவர்கள் சிறிதும் நினைக்கவில்லை போலும். இப்படியிருக்கச் சூடாமணிக்கு விவாகம் செய்யும்படியான வயது வந்தது; அது தெரிந்து பெற்றோர்கள் அவனுக்குத் தகுந்த கன்னிகை யொருத்தியைத் தேடிக் கலியாணம் செய்வித்தார்கள். கலியாணமானபின்பு சிலகாலம் அனைவரும் ஒன்றாய்க்கூடிச் சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.

இப்படியிருக்க நாளளவிலே தாய்தந்தையர்களிருவரும் இறந்துபோனார்கள். ஐயோ! இப்போது சூடாமணி என்னசெய்வான். ஏதாவது ஜீவனோபாயமொன்று தேடிக்கொள்ளப் பெற்றோர்கள் அவனுக்கு யாதொரு வழியும் கற்பிக்கவில்லையே. ஆயினும் அவன் தாய்தந்தையர்களிறந்த சில நாள்வரையில் அவர்கள் தேடிவைத்திருந்த பொருளைக்கொண்டு பெண்சாதியும் தானுமாய் ஜீவனம் செய்துவந்தான். ஆயினும் ஒருவர் தேடிவைத்த பொருள் எத்தனை நாளைக்குத் தாங்கும்? கையசைக்காது தின்றால் குன்றும் கரையுமல்லவா? "தேடாதழிக்கிற் பாடாய்முடியும்" என்றபெரியோருரையும் இருக்கின்றதே. அவர்கள் தன்முயற்சி யொன்றுமில்லாமல் தாய்தந்தையர் தேடிவைத்த பொருளையே தினந்தோறும் தின்றுகொண்டு வரவே, சீக்கிரத்

திலேயே அந்தப்பொருள் அநேகமாய்ச் செலவழிந்து போயிற்று. அதைப் பற்றிச் சூடாமணிக்குச் சிறிதும் சிந்தை தோன்றவில்லையாயினும், அவன் மனையாட்டிக்குமட்டும் அதைப் பார்க்கப் பெருந்துயர முண்டாயிற்று. பெரியோர் தேடிவைத்த பொருள் குறையக் குறைய அவளுடைய மனவிசாரம் அதிகரித்துக்கொண்டே வந்தது. இப்படி அந்தப் பொருளெல்லாம் அநேகமாய்ச் செலவழிந்துபோகக் கண்டு ஒரு நாள் அவள் ஐயோ இந்தச்சொற்பமும் செலவழிந்துபோனபிறகு நாம் என்னசெய்கிறது! நம் கணவனுக்குக் கைத்தொழிலும் தெரியாது, கஷ்டப்படவும் தெரியாதே என்று அதே சிந்தையாக மனக்கவலை கொண்டிருந்தாள். ஒருநாள் அவள் மிகவும் முகம் வாடி மனங் கலங்கி நிற்கக்கண்டு சூடாமணி அவளண்டைபோய், என் காதலியே, நீ ஏன் இப்போது இப்படி விசனமுற்றிருக்கிறாய்? என்ன விசேஷம் என்றுகேட்க அவள், மற்றொரு விசேஷமுமில்லை; வயிறு வளர்ப்பதுதான் பெரிய விசேஷமாயிருக்கிறது; நம் பெரியோர் தேடிவைத்த பொருள் அத்தனையும் செலவாகிவிட்டதே. இனி நாம் என்ன செய்கிறது? உமக்கு உழைத்து வேலைசெய்யவும் தெரியாது; வர்த்தக வியாபாரங்களிலும் பயிற்சி யில்லையே! நாம் பிழைக்கும்வழி என்னவென்று விசாரப்படுகின்றேன் என்றாள். அது கேட்டுச் சூடாமணி, இதற்காகவா நீ விசனப்படுகிறாய்? வேண்டாம். எனக்கு வேலைசெய்யத் தெரியும். எதற்கும் சுவாமி யிருக்கிறார். மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்காமற் போவானா; என்று சொல்லிச் சமாதானப்படுத்தினான்.

அப்படியிருக்க ஒருநாள் காலையிலெழுந்து சூடாமணி கோடாரியைக் கையிலெடுத்துக்கொண்டு தன் பெண்சாதியைப் பார்த்து, என் கண்மணியே, நான் இப்போது வெளியே போய் வேலை செய்துவிட்டு வருகிறேன். பகல் வேளைக்கு ஏதாவது போஜனமிருந்தால் கட்டிக்கொடு. சாயந்தரந்தான் திரும்பி வீட்டுக்கு வருவேனென்றான். அதுகேட்டு அவள், இவன் என்ன வேலை செய்யப்போகிறானென்று வியப்புற்றாளாயினும், அதைப்பற்றி அவனை ஒன்றும் கேளாமலே சோறுகட்டிக் கொடுத்தனுப்பினாள்.

பெண்சாதி கட்டிக்கொடுத்த சோற்றை வாங்கிக்கொண்டு சூடாமணி கோடாரியும் கையுமாய் ஒரு பெருங் காட்டுக்குப் போனான். அக்காட்டில் அவன் பகற்பொழுதெல்லாம் சுற்றித் திரிந்து. அங்குள்ள மரங்கள்தோறும் போய்நின்று, நான் உன்னை வெட்டலாமா, நான் உன்னை வெட்டலாமா என்று கேட்டான். மரம் மனிதரோடு பேசுமா? தான் கேட்ட கேள்விக்கு அக்காட்டில் ஒருமரமும் மறுமொழி கொடாமற் போகவே ஒரு மரத்தையும் வெட்டத் துணியாமல் அவன் போனபடியே திரும்பி வீடுவந்து சேர்ந்தான். வீட்டுக்கு வந்தவுடன் பெண்சாதி அவனுக்கு வேண்டியபடி உபசாரம் செய்தாளாயினும் இன்று எவ்விடத்திற்குப் போயிருந்தீர்கள் என்றாவது, என்ன வேலை செய்தீர்களென்றாவது, ஒன்றும் அவள் கணவனைக் கேட்கவில்லை. அவனும் தான் போய்வந்த செய்தி இன்னதென்று மனையாளுடன் உரைக்கவில்லை.



மறுநாள் காலையிலும் அவன் முன்போலவே எழுந்து, இன்றைய தினமும் நான் வெளியே போகிறேன்; பகற்போஜனத்துக்குச் சோறு கட்டிக் கொடுவென்று கேட்க, அப்போதும் அவள், நீங்கள் எங்கே என்னவேலை செய்யப் போகிறீர்களென்று வினவ விரும்பாமல் சோறுகட்டிக் கொடுத்தனுப்பினாள். சூடாமணியும் கோடாரியை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு முதனாள்போன காட்டுக்குப் போகாமல் மற்றொரு புறத்திலுள்ள பெருங்காட்டுக்குப் போனான். இந்தக் காட்டிலும் அவன் முன்போலவே மரங்கள்தோறும் சென்று உன்னை நான் வெட்டலாமா? உன்னை நான் வெட்டலாமா வென்று கேட்க, ஒருமரமும் பதில் உத்தரம் உரைக்காமற் போகவே, கட்டுச்சோற்றை மாத்திரம் அங்கோரிடத்தில் வைத்துத் தின்றுவிட்டு மாலைவேளையில் வீட்டுக்கு வந்தான்.

மூன்றாநாள் மற்றொரு புறத்திலுள்ள காட்டுக்குக் கோடாரியை எடுத்துக்கொண்டு போனான். அக்காட்டிலும் அவன் ஒவ்வொரு மரத்தண்டையிலும் போய் நின்று நான் உன்னை வெட்டலாமா வென்று வேண்டிக் கேட்க, அவ்விடத்திலும் ஒருமரமும் விடைகொடாமற்போகவே மிகவும் விசனமுற்றவனாகி வீடுவந்து சேர்ந்தான்.

ஆயினும் அவன் அவ்வளவோடு அம்முயற்சியை விட்டுவிடவில்லை. பிடித்த காரியத்தை எப்படியாவது முடித்தே தீரவேண்டும் என்ற விடாமுயற்சி யுடையவனாகி மறுநாள் வேறொரு புறத்திலுள்ள வனத்திற்குப்போய் அன்றுமுழுதும், நான் உன்னை வெட்டலாமா வென்று கேட்டுக்கொண்டே அக்காட்டிலுள்ள மரங்கள்தோறும் போய்ச் சுற்றினான். ஒரு மரமும் மறுமொழி கொடுக்கவில்லை, அப்படியிருக்க அன்று மாலைப்பொழுதில் ஒரு பெரிய மாமரத்தண்டைபோய், நான் உன்னை வெட்டலாமாவென்று கேட்டதற்கு, அந்த மாமரம், சுகமாய் வெட்டிக்கொள் என்று அநுமதி கொடுத்தது. மரம் எங்கேயாவது பேசுவதுண்டா வென்பீர்களோ? சிறுவனான சூடாமணியினுடைய மனவுறுதியைப் பார்த்து அவனிடத்தில் கருணைகூர்ந்து கடவுளே அவன் மிகுந்த செல்வவானாகி க்ஷேமமாய் வாழ்ந்திருக்கட்டுமென்று திருவுளம் பற்றி அம்மாமரத்தை அவ்விதமாகப் பேசும்படிச் செய்தார்.

அந்தப் பேச்சைக் கேட்கவே சூடாமணிக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. அவனுக்கு வெகு விசித்திரமாய்க் கட்டில் நிருமிக்கத் தெரியும்; அதற்கு வேண்டிய மரம் அகப்படவில்லையேயென்று அதற்காகவே அவன் இத்தனை நாள் தேடித்திரிந்தான். இந்த மாமரம் தன்னை வெட்டிக்கொள்ளும்படி சொன்னது கேட்டுக் கடவுள்தான் கிருபை பண்ணினாரென்று அவன் உடனே அம்மரத்தை வெட்டி யெடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போனான். கணவன் பெரிய ஒரு மரத்தைத் தலையில் தூக்கிக்கொண்டு வருவதைப் பார்த்து வீட்டிலிருந்த பெண்சாதி, இதென்ன இவர் இந்த மரத்தைத் தூக்கிக்கொண்டு வருகிறார், இதையென்ன செய்யப்போகிறார் என்று சிந்தித்

துக்கொண்டிருந்தான். ஆயினும் அதைப்பற்றி அவனை ஒன்றும் கேட்கவில்லை.

மறுநாள் காலையில் சூடாமணி எழுந்து அந்த மரத்தை அவ்வீட்டில் ஒரு அறைக்குள் கொண்டு வைத்து, தன் பெண்சாதியை அழைத்து, இனி ஒரு வாரம் வரையில் நான் இந்த அறையை விட்டு வெளிவரமாட்டேன், நீயும் இவ்வறைக்குள் வரக்கூடாது. அதுவரையில் அன்றாடம் வேண்டிய ஆகாரத்தை மாத்திரம் நீ ஒரு சிறிய சாளரத்தின் வழியாய் அவற்றைக்குள் வைத்துவிடவேண்டும். அதுவரையில் நானும் உன்னுடன் பேசமாட்டேன்; நான்உன்னைக் கூவுகிறவரையில் நீயும் என்னுடன் பேசக்கூடாதென்று திட்டம் செய்துவிட்டு அவன் அந்த அறைக்குள் புகுந்து கதவைப் பூட்டிக்கொண்டான். அதுகண்டு அவன் பெண்சாதி, ஒருவாரம் வரையில் இவர் இவ்வறைக்குள் புகுந்துகொண்டு என்ன வேலைசெய்யப் போகிறார்? நானும் பார்க்கக்கூடாதென்கிறாரே? இதென்னபுதுமையோ தெரியவில்லையென்று அதிசயப்பட்டுக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க அவன் சொன்னபடியே ஒரு வாரமாயிற்று, அதற்குள் அவன் அந்த மாமரத்தினால் அனைவரும் வியக்கத்தக்க வெகு விசித்திரமான கட்டிலொன்று செய்துமுடித்தான். அப்படிப்பட்டக் கட்டிலை அதுவரையில் எவரும் கண்டிருக்கமாட்டார்கள். வேலைமுற்றும் நன்றாய்த் தீர்ந்தவுடனே அவன் தன் பெண்சாதியைக் கூவிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வரும்படி அழைத்தான். வந்ததும் அவளைக் கண்டு, என் காதலியே, நான் எவ்விதமான கட்டில் செய்து முடித்திருக்கிறேன் பார் என்றான். அந்தக் கட்டிலைப் பார்த்து அவள் அதிக ஆச்சரியமடைந்து, என் பிராண நாயகரே, இக்கட்டில் உம்முடைய வேலைத்திறமா? ஆ! இது எவ்வளவு விசித்திரமாயிருக்கிறது? இப்படிப்பட்ட பொருளை நான் இவ்வுலகில் எங்கும் கண்டதில்லை. இந்தக் கட்டிலில் நாம் இருவரும் சயனித்துக்கொண்டால், அவசியம் புத்திர பாக்கியம் கடவுள் கிருபையால் நமக்கு உண்டாகும். இதுவரையிலும் ரமித்திராத மனோகரத்தில் மூழ்கி நிற்கலாம் என்று சொல்லிச் சந்தோஷமடைந்தாள். அதற்கு அவன் தனது அருமைக் காதலியை அன்புடன் நோக்கி, என் பிராணநாயகியே! நமக்காகவென்று இன்னொரு கட்டிலைச்செய்துகொள்வோம். இப்போது இந்தக் கட்டிலை இவ்வூர் அரசனுக்கு விற்று, நமது தரித்திரத்தைப் போக்கடித்துக்கொள்ளலாம் என்றான். அதற்கு மனைவியும் சரி என்று ஒப்புக்கொண்டாள்.

அன்றைய தினமெல்லாம் அவன் எங்கும் வெளியே போகாமல் வீட்டிலேயே இளைப்பாறியிருந்து மறுநாள் காலையில் கட்டிலை எடுத்துக்கொண்டு அரசன் அரண்மனைக்குப்போய் அரண்மனை வாயிலில் அதை வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். அவ்வரண்மனையிலுள்ள வேலைக்காரர்கள் அனைவரும் அதைப் பார்க்க ஓடிவந்தார்கள். அதைப்பார்த்து அவர்கள் மிகவும் வியந்து



இத்தன்மையான புதுமையை யாராகிலும் எப்பொழுதாவது கண்டதுண்டா என்று ஒருவர்க்கொருவர் சொல்லி மகிழ்ச்சியடைந்தார்கள். பின்பு அவர்கள் சூடாமணியைப்பார்த்து, இது உன்னுடையதா? விற்பனைக்காகக் கொண்டுவந்த பொருளா? இதைச் செய்தது யார்? இது முழுதும் உன்னுடைய வேலைத்திறமாவென்று கேட்க, அவன் உங்களுடைய கேள்விகளுக்கு நான் இப்போது விடைகொடுக்கமாட்டேன்; நான் உங்களுடன் பேசுவதில்லை, மகாராஜாவந்து கேட்பாரானால் எல்லாவற்றையும் அவருடன் சொல்வேன் என்றான். உடனே அந்தச் சேவகர்கள் அரசனிடம் சென்று, நம்முடைய அரண்மனைவாயிலில் ஒருவன் வெகு விசித்திரமான கட்டிலொன்று வைத்துக்கொண்டிருக்கிறான். நாங்கள் கேட்டால் எங்களிடம் ஒன்றும் பேசமாட்டேனென்கிறான். நேராகத் தங்களோடுதான் பேசுவானாமென்றார்கள். அதுகேட்டு அரசனும் அதிக சந்தோஷமடைந்து, நல்லது, அப்படியே அவனைச் சீக்கிரம் இங்கே வரவழையுங்கள் என்றான்.

அரசன் கேட்டுக்கொண்டபடியே சூடாமணி தன் கட்டிலை எடுத்துக்கொண்டு அரசன் எதிரிலே போய்நின்றான். அவனைப் பார்த்து அரசன், இந்தக் கட்டில் விற்பனைக்குக் கொண்டுவந்ததாவென்று கேட்க, சூடாமணி, ஆம்; விற்பனைக்கு வந்ததுதானென்றான். ஆ! இந்தக் கட்டில் எவ்வளவு விசித்திரமாயிருக்கிறது? இதைச் செய்தது யார்? என்று அரசன் கேட்டதற்கு அவன், நானே செய்ததென்றுசொல்ல, அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டு, ஆயின் இதன் விலை என்னவென்று கேட்க, சூடாமணி, இதன் விலை ஆயிரம் ரூபாய் என்றான். ஆ! என்ன? ஆயிரம் ரூபாயா? ஒரு கட்டில் ஆயிரம் ரூபா என்றிதுவரையில் எவரும் கேள்விப்பட்டதில்லையே! என்று அரசன் வியந்துநிற்க; அச்சிறுவர்த்தகன், அதென்னவோ நான் அறியேன்; இதன்விலை ஆயிரம்ரூபாய்க்குக் குறைவில்லை. இஷ்டமானால் வாங்கிக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள் என்று துடியாய்ப் பேசினான். அதுகேட்டு அரசன் இக்கட்டிலினிடத்தில் ஏதாவது விசேஷமிருக்கும்; இல்லாவிட்டால் இவன் இப்படிப்பிடிவாதம் செய்யமாட்டானெனத் தெரிந்து, அப்படியே ஆகட்டும், நீ கேட்கிறபடி ஆயிரம் ரூபாயே வாங்கிக்கொள் என்று சொல்லி அக்கட்டிலை எடுத்துக்கொண்டான். சூடாமணியும் அதன்விலையாகிய ஆயிரம் ரூபாயையும் பெற்றுக்கொண்டு அரசனைப்பார்த்து, மகா பிரபுவே, இப்போது, ஒன்று சொல்லுகிறேன், செவிகொடுத்துக் கேட்கவேண்டும். இக்கட்டிலில் தாங்கள் படுக்கை கொள்ளுகிற முதலிராத்திரி நித்திரைகொள்ளாமல் கண்விழித்துக்கொண்டு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். விழித்திருந்தால் இதன் பெருமை தங்களுக்கு நன்றாய்த் தெரியவரும். ஒருவேளை மறந்து நித்திரைகொள்ளப் போகிறீர்கள்! எச்சரிக்கையாய் இருங்களென்று சொல்லிவிட்டுப் பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவன் கொண்டுவந்த ரூபாயைப் பார்த்து, அவனுடைய மனையாள் மிகவும் சந்தோஷமடைந்து

என் பிராணநாதரே, ஏது இவ்வளவு ரூபாய்? இதெல்லாம் உம்முடையது தானோ? இவ்வளவு உமக்கு எங்கே கிடைத்தது என்று கேட்க, சூடாமணி, அடி பேதாய்! இவ்வளவும் நம்முடையது தான். நான் செய்துகொண்டு போன கட்டிலை வாங்கிக்கொண்டு, அதற்காக அரசன் எனக்குக் கொடுத்தவிலை இது. நான் இதை எங்கேயோ திருடிக்கொண்டுவந்து விட்டதாக நினையாதே. நான் திருடனல்ல என்று புன்னகைகொண்டு பேசினான். அதுகேட்டு அவளும் உள்ளம் உவந்தாள்.

அன்றிராத்திரியே அரசன் அந்த அற்புதமான மஞ்சத்தின்மேல் ஏறிப்படுத்து, என்ன புதுமையோ பார்ப்போமென்று கண்விழித் திருந்தான். இராத்திரி பத்துநாழிகையானபிறகு அக்கட்டிலின் கால்களுள் ஒன்று மற்ற மூன்று கால்களையும் பார்த்து, தோழர்காள், நான் இப்போது இந்த மகாராஜாவினுடைய ராஜ்யத்தைப் பார்த்துவரப்போகிறேன். நீங்கள் இந்த மஞ்சம் சாய்ந்து அரசன் கீழே விழாதபடி ஜாக்கிரதையுடன் உறுதியாய்த் தாங்கிக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்க, மற்றவைகள், அப்படியே நீ போய் வருமளவும் அரசர்க்கு அபாயமில்லாதபடி நாங்கள் காத்துக்கொண் டிருக்கிறோம்; போய்ச் சீக்கிரமாய் வந்துசேர், என்று சொல்லி விடைகொடுத்தன.

அவைகளிடத்தில விடைபெற்றுக்கொண்டு அந்தக் காலானது படுக்கையறையைவிட்டுவெளியே போவது அரசன் கண்ணுக்கு நன்றாய்த் தெரிந்தது. கட்டில் கால் அங்கிருந்து புறப்பட்டு ஒரு காட்டிற்குப் போயிற்று. இது போனபோது அக்காட்டிலே இரண்டு நாகங்கள் ஒன்றுக்கொன்று கலகப்பட்டுக்கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு நாகம் மற்றொன்றைப்பார்த்து, நான் அரசனைக் கடிக்கப்போகிறேனென்றுசொல்ல, மற்றொன்று நீ கடிக்கக் கூடாது நானே கடிக்கப்போகிறேனென்றது. அதற்கு அந்தப் பாம்பு மறுபடியும், ஓ! நீ ஒருபோதும் கூடாது. உனக்கு முன் நான் கட்டில்மேல் தாவி அவனைக் கடித்துவிடுவேனென்று கூற இரண்டாவது, அது ஒருகாலும் முடியாது. கட்டிலின்மேல் ஏற உன்னாலாகாது. நான் அவருடைய பாதரக்ஷை தரித்துக்கொள்ளும்போது, அவர் காலைக்கடித்து விடுகிறேன் என்று சொல்லிற்று.

அதைக் கேட்டிருந்த கட்டில்கால் உடனே திரும்பி அரண்மனைக்கு வந்து, தான் கண்டதும் கேட்டதுமாகிய எல்லாச் செய்திகளையும் மற்ற மூன்று கால்களுக்கும் சொல்லி, நாளைக் காலையில் அரசன் பாதரக்ஷை தரித்துக்கொள்வதற்குமுன் அதைத் தட்டுவாரானால், அதினின்றும் பாம்பு கீழே விழக் காண்பர் அப்போது என் பேச்சு மெய்ப்படுமென்றது.

பிறகு மற்றொரு காலானது, இப்போது நான் போய்த் தேசங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். நான் வருமளவும் நீங்கள் கட்டில் சாயாமல் ஜாக்கிரதையாய் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டுமென்று சொல்ல மற்றவைகள் அப்படியே யிருக்கிறோம் போய்வா என்று சொல்லி யனுப்பின.


# பிரஜாநுகூலன்.

சந்தா ரூ. 1-5-0. *(Copy Right Registered.)* வெளிநாடு 1-12-0.

புத்தகம் 9 { திரிச்சிராப்பள்ளி 1915வது ஜூன்மீ 1உ } சஞ்சிகை 12.


## பிரபஞ்ச விலாஸம்

ஒரு பெண்ணுக்கு சரீரபுஷ்டி கொடுப்பது அவளுடைய வஸ்திராலங்காரமே. மற்றபடி அவள் ஒல்லிதான். ஒன்பது கஜத்துப் பாவாடையும் 18 முழச் சேலையுமே ஒல்லியைப் புஷ்டியாகத் தோற்றுவிக்கின்றன.

நமக்கு ஒருவர் பத்து ரூபா செலவு செய்தால் அது நமக்கு இலவசம் என்று நினைத்துவிட வேண்டாம். பிறகு பத்துப் பங்காக நாம் அவருக்குச் செலவு செய்யவேண்டி யிருக்கும்.

எலும்புந் தோலுமாக இருக்குஞ் சிலருக்கு விவாகம் ஆனதும் புஷ்டித்துப் போய் விடுகிறார்கள். அவர்களையே அடையாளம் தெரிவதில்லை. சிலர் மனைவி வந்ததும் ஒரு தனி மனிதர்களாக மாறிவிடுகிறார்கள். அவர்கள் தங்களைப் பெரிய மனிதர்களென்று தாங்களே நினைத்துக்கொண்டு விடுகிறார்கள். பாவம்!

தீய எண்ணங்களாகிய பைசாசங்களை மனதில் ஸஞ்சரிக்க விடுவதால், அவைகள் நமது மனசாக்ஷியையே பேசாதிருக்கச் செய்துவிட்டு, துராகிருதப் பிரவர்த்திகளில் நம்மை இழுத்துக் கெடுக்கின்றன. அந்த எண்ணங்களை ஆரம்பத்திலேயே நெருங்காது ஓட்டிவிட வேண்டும்.

சென்ற சம்பவங்களை நினைத்துச் சிந்திப்பவன் அவனது பழைய துயரங்களை மீளவும் எண்ணி தன் உற்சாகத்தை இழந்தவனான போதிலும், நல்ல அநுபவத்தையும் சிறந்த எச்சரிப்புகளையும் பெற்றுக்கொள்ள யோக்கியதையடைகிறான். எதையும் தானே பட்டு அநுபவித்தாலன்றி விளங்காது.

நம்மோடு அவ்வளவுக்கு அதிகமாகப் பேசாதவர்கள் வெகு உருக்கத்தோடும் புன்சிரிப்போடும் பேசவந்தால்—ஓகோ! சரி! நம்மிடத்தில் அவர்களுக்கு ஏதோ ஒரு முக்கிய காரியம் ஆகவேண்டியிருக்கிறதாக்கும் என்று நாம் தெரிந்துகொண்டுவிடவேண்டும்.

தங்களுக்கு உதவியாக நம்மை மெதுவாக ஒரு சண்டையில் இழுத்து விடுவார்கள். பிறகு நமக்கே புத்தி சொல்வதுபோல வந்து,—சரி, சரி, உள்ளே போ, அவன் ஒரு சமயம் அடித்துவிடுவான், உள்ளே போ—என்று

அவர்களே சண்டையை விலக்கி நம்மை வீட்டுக்குள் போகச் சொல்வார்கள். அவர்களும் சண்டையிட்டவனும் மறுதினம் ஒன்றாய் விடுவார்கள். நாம் தான் வீணாக விரோதத்தோடு தனிப்பட்டு நிற்க நேருகிறது.

ஜட்கா வண்டிக் காகட்டும், ஒரு சாமானை வாங்கும்போ தாகட்டும் முன்னதாகக் காசைத் தராதே. தந்தாயோ ஒரு அணா வாடகையை 0–1–3 என்பான். 6 பைசா சாமானை 9 பைசா என்பான். ஆனதால் நீ முக்காலணா தரவேண்டியிருந்து, ஒரு அணாவாக உன்னிடம் இருந்தால், காலணா முதலில் அவனிடம் நீ பெற்றுக்கொண்டு பிறகு உன் ஒரு அணாவைக் கொடு.

மனத்துணிவுடையவர்களிடம் குறும்பு செல்லமாட்டாது. மனத் துணிவுடையவர்களிடம் பிசாசு கூட அணுகாது.

புராதன சரித்திரமற்ற தேசத்துக்கு மேன்மே லபிவிர்த்தி ஏற்படுதல் கஷ்டம். கீர்த்தி சிறந்த பூர்வகால சரித்திரமும் பாஷைகளும் இருக்க, அதனை இகழ்ந்து, தம்முள் வழங்குதற்கே லஜ்ஜையுறத் தலைப்படும் தேசத்தாரின் கதியை எழுதவும் வேண்டுமா?

ராஜா என்பது ரஞ்சு என்ற ஸம்ஸ்கிருத பதத்திலிருந்து உற்பத்தியானது. ஜனங்களை ரஞ்சிக்கச் செய்கிறவனென்ற பொருள் பொருந்த ராஜா என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

தைரிய புருஷனுடைய அடக்கமே சிறந்தது. அந்த அடக்கமே சன்மார்க்கத்தின் தொடக்கமாகும்.

மனோதிடமும், வறுமையில் தைரியமும், ஜயமடைவிப்பதற்கு சைனியத்தைக் காட்டிலும் வெகு சிறந்தவை.

எஜமானனுடைய ஒரு கண்ணானது, வேலைக்காரர்களுடைய நான்கு கண்களைக் காட்டிலும் அதிக வேலை செய்கின்றது.

ஒரே ஆட்டை வளர்ப்பவன் அதைக் கொழுக்க வைக்கிறான். ஏக புத்திரனுடையவன் அவனை மூடனாக்குகிறான்.

டாக்டர் என்ற பட்டம் வைத்தியத்திலும் சட்டத்திலும், தத்துவ சாஸ்திரத்திலும் அமிதமாகப் படித்தவர்களுக்குப் பொதுவாகக் கொடுக்கப்படும் பட்டமாகும். எனவே, டாக்டர் என்ற மாத்திரத்தில், அதற்கு—வைத்தியம் செய்பவர்—என்று மட்டும் பொருள் கொண்டுவிடக் கூடாது.

நமது தென்னிந்தியாவில் நவராத்திரி உற்சவம் என்று சொல்லப்படுவது வங்காளத்தில் தசரா பூஜை எனப்படும்.

வேச்யா ஸ்திரீகளின் ஆஸ்தி அவர்களின் மரணத்துக்குப் பிறகு யாரைச் சேர்ந்தது என்று ஒரு தர்க்கம் மைசூர் ஸ்டாண்டர்டு பத்திரிகையில் உண்டாய் அதற்கு ஸமாதானமும் கூறப்பட்டிருக்கிறது. குழந்தை முதலிய பாத்தியஸ்தர்கள் இல்லாமலிருக்கும் தாசிகளின் தனம் கவர்ன்மெண்டைச் சேரவேண்டியதென்றும், கவர்ன்மெண்டார் அதை அநாதாலயங்களுக்கும் தர்ம காரியங்களுக்கும் உபயோகம் செய்யவேண்டுமென்றும் தெரிகிறது.



மாதப் பத்திரிகைகளின் சந்தாதார்கள் வாரப்பத்திரிகை, தினசரிப் பத்திரிகைகளிலுள்ள வர்த்தமானங்களை வாசியாதிருந்தால்தான், மாதப் பத்திரிகையிலுள்ள வர்த்தமானங்கள் புதிதாகவும் ருசிகரமாகவும் தோன்றக் கூடும்

சுத்த மனத்தினர் நமது வீட்டுக்குள் வந்து நம்முடன் வார்த்தையாட யோக்யர். அவர்களுடைய ஸகவாஸம் இன்பகரம். அசுத்த மனத்தினர் வீட்டுக்கு வெளியே நிற்க அருகர். பரம துஷ்டர்களைப் பார்ப்பதும் பிசகு. அவர்களுடைய பக்கத்திலிருப்பதும் பிசகு. ஏதேனும் ஒரு கெடுதலை விளைத்துக் கொண்டே யிருப்பர்.

இறுக்கம் அதிகமானால் விசிறியைக் கொண்டுவா, காற்றுவேண்டும் என்கிறோம். இளந்தென்றலடித்தால் வெகு ஸந்தோஷத்தோடு வெளியே உலாவி அக்காற்றை ஸ்பரிசிக்கிறோம். பெருங்காற்றடித்தால் பீதி கொண்டு வெளியே வராமல் உள்ளே யிருந்து விடுகிறோம். காற்று மண்ணோடு சேர்ந்தால் அதைக் கண்டு வெறுப்படைகிறோம். இப்படியே மனிதர்களிடம் விசுவாஸம் வைப்பதற்கு அவர்களின் தன்மையும் நிலைமையும் காரணங்களாகும்.

பைத்தியப் பிடித்த சிலருக்கு சோற்றைக்கண்டால் வேறுவிதமாய்த் தோன்றும். ஊளையிடும் நரிக்குத் தன் குரலே இனிமையாகத் தோன்றும். கத்தும் கழுதைக்குத் தன் கானமே சிறந்ததென்று காணப்படும். இதைப் போல் சிலர் தாம் அவமானப்படுகிறதை யறியாமல் தம்முடைய யுக்தியே யுக்தியென்று மெச்சி ஸந்தோஷமடைவதற் கறிகுறியாய்ப் பல்லையிளிப்பர்.

தேவதைகள் இடையனைப் போலக் கையில் கோலை யெடுத்துக் கொண்டு மனிதனைக் காப்பாற்றமாட்டார்கள். எவனைக் காப்பாற்ற விரும்புகிறார்களோ அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுப்பார்கள். இந்தப் புத்தியினால் அவன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

வித்தைக்குச் சமானமான கண்ணில்லை. சத்தியத்திற்குச் சமானமான தபசில்லை. பேராசைக்குச் சமானமான துக்கமில்லை. ஒன்றிலும் ஆசையில்லா திருப்பதினால் உண்டாகும் சுகத்திற்கு மிஞ்சின சுகமில்லை.

பூமியைக் காட்டிலும் தாய் பெரியவள். ஆகாசத்தை விடத் தந்தை பெரியவன். காற்றிலும் பார்க்க மனம் அதிக வேகமுடையது. ஆனால் துக்கம் எல்லாவற்றிலும் பெரியது.

துர் அதிர்ஷ்டம் வரும்போது சிநேகிதர்கள் விலகிப் போகிறார்கள். ஒருவேளை அக்காலத்தில் நேசர்களிருந்தாலும் அவர்களெல்லாம், அப்போதே சொன்னேனே கேட்டாயா என் வார்த்தையை என்று நெருப்பை யவிக்க நெய் விட்டதுபோல் உபசாரம் சொல்லுவார்கள்.

சந்திரோதயத்தைப் பொட்டைக்கண்ணன் அறிவானா? முல்லை, மல்லிகை, வாஸனையை மூக்கறையன் அறியமாட்டான். ஸங்கீதத்தின் அருமையைச் செவிடன் அறியான்? அறுசுவை யுண்டியைப் பசியற்றவன் புசியான். அதுபோல் பத்திரிகையைப் படியாதவர்கள் அதிற் பிரியம் கொள்ளாதிருப்பது ஆச்சரியமன்று.

---

பார்லிமெண்டில் நடக்கும் விஷயங்களைக் கவனிப்பதற்காக ஆங்கிலேய ஸ்திரீகளில் ஐம்பது பேர்கள் உட்காரும்படியான ஒரு இடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அம்மாதர்கள் கீழே பேசும் பேச்சுகளைக் கேட்கலாம். ஆனால் கீழிருப்பவர்கள் மேலேயுள்ள ஸ்திரீகளின் முகத்தைப் பார்க்கமுடியாது. இருப்பு வலையால் ஜன்னல்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலேய ஸ்திரீகளாயிருந்தும் பார்லிமெண்டு கூடுமிடத்தில் மாத்திரம் கோஷா ஸ்திரீகளைப்போ லிருக்கவேண்டியதாகிறது. இது வெகு ஆச்சரியம்!

அநேகர், இரயில் வண்டியில் இடமில்லாதிருந்தாலும் கொஞ்சம் நிற்பதற்குமட்டும் இடங்கொடுத்தாற் போதுமென்று கெஞ்சுவர். அம்மட்டிற் கிடைத்துவிட்டால், மற்றவர்களுடைய தயவினாற் கொஞ்சமா யுட்காருவதற்குத் தக்க இடத்தை யாசித்துக் கொள்வர். உட்கார்ந்து விட்டால், மெல்ல மெல்லக் காலைப் பரப்பி விசாலிப்பர். இம்மட்டையும் ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு; நன்றாய் ஓங்காரம் (வளையம்) போட்டுப் படுத்துக்கொள்வர். கடைசியில், ஜனங்கள் ஒவ்வொருவரா யிறங்கிவிட, ஒரு பக்கம் முழுவதிலும் பூரணமாக வியாபித்து உடம்பைத் தாராளமாய் நீட்டிக்கொள்வர். சில நேரத்தில் வண்டி காலியாகும்; உடனே. அந்தக் கம்பாட்மெண்டு முழுவதும் தம்முடைய தென்று, ஏறவருகிற ஜனங்களை வெருட்டி கர்ஜிப்பர். இத்தகையோருக்குத் திருப்தி எவ்விதமுண்டாகும்?

பி. ஏ., எம். ஏ., முதலிய பெரிய பட்டங்களை யடைவதற்குத் தமிழை ஒரு பாடமாக வைப்பது தகாதென்று ஒருவர் பத்திரிகையி லெழுதியிருக்கிறார். அவருடைய வழக்கு அடியில் வருமாறு. கணித சாஸ்திரத்தைக் கற்பதால் இஞ்சினீர் காலேஜில் சேரவும், பற்பல ஆறுகட்குப் பாலம் கட்டி கால்வாய்கள் வெட்டி, வெகு ஜனங்கட்கு உபகாரம் செய்யவும் கூடும். தேச சரித்திரங்களைப் படிப்பதால் இராஜ்ய தந்திர முறைமையை யறியவும், சட்டங்களை யப்பியஸிக்கவும் ஸாத்தியமாகும். இரஸாயன சாஸ்திரங்களை யறிவதால் பிணிகளைத் தீர்க்க முடியும். தேகதத்துவ சாஸ்திரத்தைக் கற்பதால் புண்களை யாற்றவும் பற்பல நோய்களைப் பரிகரிக்கவும் கூடும். வீணாகத் தமிழைக் கற்பதிலென்ன உபயோகம் என்கிறார்?

கழுதையைக் கட்டி ஓமம் வளர்ப்பதுபோல் வியவஹார ஞான மில்லாத மடனை வம்பிலும் வழக்கிலும் இழுத்து விட்டு, அவனுடைய பொருளையும் பெயரையும் கெடுப்பது துஷ்டர்களின் ஸ்வபாவம். அவர்கள் நம்மிடம் சிறிது சிறிதாகப் பணம் பிடுங்குவதற்காகவே—நம்மீது வெகு உருக்கமுள்ளவர்கள்போல் நடித்து, நம்மை வியாஜ்ஜியம் செய்யும்படி இழுத்துவிடுவார்கள். நாம் செய்யும் காரியம் பயன்படுமோ? அதைச் செய்யவேண்டிய அவசியமென்ன? நம்முடைய நிலைமை என்ன? நமக்கு ஸாவகாசமேது? லேவகா விர்த்தி செய்யும் நாம் வழக்கை யெடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டு திரிவது மதியீனமன்றோ? பொறுமைக்கு ஸமானம் எது உண்டு, என்று ஆலோசித்தால் பிறருடைய போதனைக்கு உட்பட ஹேதுவிராது.



யனுப்பின. உடனே அந்தக் கால் புறப்பட்டு மற்றொரு காட்டிற்குப் போ
யிற்று. அக்காட்டிலே அரசன் உல்லாஸமாய் உலாவும் அரண்மனை ஒன்
றுண்டு. அதனருகே அந்தக் கட்டிலின் கால் போனபோது "இந்த அரண்
மனை இப்போது மிகவும் சிதிலமாயிருக்கின்றது. இனி அரசன் எப்பொழு
தாவது இவ்வரண்மனையில் வந்து நுழைவாரானல், நுழைந்தவுடனே இது
இடிந்து அவர் தலையில் விழுந்து அவரைக் கொன்றுவிடும்; இந்த அரண்மனை
யைக் கட்டின பாபமேயொழிய பின்பு ஒருபோதும் அவர் இதைப் பழுது
பார்த்ததில்லை. அதன் பயனை இப்போது அடையப்போகிறார்" என்று
ஒரு ஆகாசவாணி சொல்லிற்று. அவ்விடத்திற்போயிருந்த கட்டில்கால் அந்த
அசரீரி வாக்கைக் கேட்டு மிகவும் பயந்து உடனே ராஜமாளிகைக்கு வந்து
நடுக்காட்டில் ஆகாசவாணி சொல்லிய செய்தியைத் தன் தோழர்களான மற்ற
மூன்று கால்களுக்கும் சொல்லி, இப்போது நான் ராஜாவாயிருப்பேனானல்,
இக்கக்ஷணமே அந்த மாளிகையை இடித்துத் தள்ளிவிடும்படி கட்டளைசெய்து
விடுவேன். அது மிகவும் சிதிலமாகி, அரசன் எப்போ வரப்போகிறாரென்று
அவர் தலையில் வீழ்ந்து கொல்லக்காத்திருக்கிறதே என்று சொல்லிற்று. கட்
டிலின்மேல் படுத்தும் தூங்காமலே அரசன் அதையெல்லாம் கேட்டுக்கொண்
டே யிருந்தான். அச்செய்தி வாஸ்தவமே; அவ்வரண்மனை கட்டியதுதான்
தெரியும்; பின்பு அதை ஒருபோதும் பழுதுபார்த்ததேயில்லை. அரசனும்
அதை முற்றும் மறந்துவிட்டான். அவ்விடத்துக்கு அவன் போனதேயில்லை.
அதற்குப் பிறகு மூன்றாவது கால். இப்போது நான் வெளியே
போய் அங்குள்ள விநோதங்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். நீங்கள் மூவ
ரும் அரசருக்கு அபாயம் வாராதபடி கட்டிலைக் காத்துக்கொண்டிருங்கள்
என்று சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு மற்றொரு காட்டிற்குப் போயி
ற்று. அக்காட்டிலே ஒரு ஆண்டி குடிகொண்டிருந்தான். அதற்கருகே
ஒரு சத்திரமுண்டு. அதில் ஒரு பெண்பிள்ளை வாஸம்பண்ணிக்கொண்டிருந்
தான். அவள் ஒரு போர்ச்சேவகனுடைய மனையாள். அந்தச் சேவகன்
அவளை அச்சத்திரத்திலே விட்டு ஒரு வருஷத்திற்கு முன்னே தேசாந்திரம்
போய்விட்டான். அவளுக்கு அக்காட்டிலிருந்த ஆண்டியினிடத்தில் ஆசை
அதிகம். நாள்தோறும் இராத்திரி அவள் அவனிடத்திற்குப்போய் நெடுநேரம்
அவனுடன் பேசிக்கொண்டிருப்பாள்.

அப்படியிருக்க, அன்றையதினந்தான் தேசாந்தரம் போயிருந்த அவளு
டைய கணவன் திரும்பி வீட்டிற்கு வந்தான். அதனால் அன்றிராத்திரி அவள்
அந்த ஆண்டியினிடம் போகச் சிறிது நேரமாகிவிட்டது. நாழிகை சென்று
வரக்கண்டு ஆண்டி அவளிடத்தில் சிறிது வெறுப்புற்றவனாகி, இன்றைய
தினம் நீ இவ்விடம் வருவதற்கு ஏன் இவ்வளவு தாமதம்! என்று கேட்க;
அவள், இது அடியாளுடைய தப்பிதமன்று. ஒரு வருஷகாலமாய் வெளியே
போயிருந்த என் கணவன் இன்றைய தினம் திரும்பி வீட்டுக்கு வந்தான்.

அவனால் இந்நேரம் தாமதப்பட்டுப் போயிற்று ; மன்னிக்கவேண்டுமென்றாள். அதுகேட்டு அந்த ஆண்டி, நல்லது, உனக்கு உன் கணவனிடத்தில் பிரீதி அதிகமா, என்னிடத்தில் அதிகமா? என்று வினவ, அந்தப் பொல்லாச் சிறுக்கி, இதைக் கேட்பானேன்! உம்மிடத்திலேதான் பிரீதி அதிகம் என்றாள். அப்படியானால் நீ இத்தக்ஷணமே வீட்டுக்குப்போய் உன் கணவனுடைய தலையை வெட்டிக்கொண்டு வந்து என் கண்ணெதிரில் காட்டவேண்டும் என்றான்.

அப்படியே ஆகட்டுமென்று அந்தக் கொலைப்பாதகியானவள் உடனே தான் குடியிருந்த சத்திரத்திற்குப் போய், அங்கே படுத்து நித்திரைசெய்து கொண்டிருந்த கணவனுடைய கழுத்தைக் கிஞ்சித்தேனும் கூச்சமில்லாமலும், தன்னைக் கைபிடித்த கணவனென்ற கண்ணோட்டமில்லாமலும் ஒரே வெட்டாக வெட்டித் துண்டித்துக் கொண்டுபோய், தன்னிடத்தில் ஆசை கொண்டவன்போல நடித்த ஆண்டியின் எதிரிலே வைத்துவிட்டு நின்றாள். அதைப் பார்த்தவுடனே அவன் அவளிடத்தில் அதிக கோபங்கொண்டவனாகி, நான் விளையாட்டுக்கல்லவோ சொன்னேன் ; என்னவோ காரியமாக வீட்டுக்குப் போவதாயல்லவோ நினைத்தேன் ; இதற்காகவா நீ அவ்வளவு துரிதப்பட்டு,—நான் கூப்பிடக்கூப்பிட—அவ்வளவு வேகமாக விரைந்து சென்றாய்; ஆ! கொலைக்கஞ்சாத கொடும்பாவி! யாரோ வழிப்போக்கனான என் பேச்சைக் கேட்டுக் கைபிடித்துக் கலியாணஞ்செய்துகொண்ட கணவனைக் கொல்லத் துணிந்த நீ இனி எந்தப் பாதகம் செய்யத்தான் பின்வாங்குவாய் ; உன்னைப் பார்த்தாலே பழி சூழ்ந்துகொள்ளும் ; உடனே ஓடிப்போ ; நிமிஷங்கூட என்னெதிரில் நிற்காதே என்று சொல்லி அவளை உடனே அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டான். ஆ! பெண்டுகளுடைய கடுநெஞ்சை என்னென்று சொல்லலாம்! அக்கொடியவள், நமது தலைவிதி இப்படியாயிற்றென்று அவ்வளவோடாவது அடங்கிப்போகாமல், அற்றுப்போன தன் கணவன் தலையைத் தூக்கிக்கொண்டுபோய் அவன் முண்டத்தோடு பொருத்திவிட்டு, கோவென்று கதறப் புறப்பட்டாள். அந்தச் சத்திரத்திலுள்ளவர்களெல்லாரும் ஓடிவந்து என்ன விசேஷமென்று கேட்க, அவள் கள்வர்கள் அநேகர் வந்து என் கணவனைக் கொன்றுவிட்டு ஓடிப்போனார்கள் என்று சொல்லிப் பின்னும் ஓயாமல் புலம்பினாள். அங்கே போயிருந்த மூன்றாவது கட்டில்கால் இந்த ஆச்சரியங்களையெல்லாம் பார்த்துவிட்டுத் திரும்பி அரண்மனைக்கு வந்து அதன் வரலாறுகளையெல்லாம் மற்ற மூன்று கால்களுக்கும் சொல்லிற்று. இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டே அரசன் இன்னும் கண்விழித்திருந்தான்.

மூன்று கால்களும் வெளியேபோய் வேடிக்கை பார்த்துவிட்டு வரவே நான்காவது காலுக்குத் தானும்போய் வேடிக்கை பார்க்கவேண்டுமென்ற ஆவலுண்டாயிற்று. அதனால் கடைசியாக அதுவும் மற்ற மூன்று கால்களினிடத்



தில் விடைபெற்றுக்கொண்டு மற்றொரு காட்டுக்குப் போயிற்று. அக்காட்டில் கள்ளர்கள் ஏழுபேர் இருந்தனர். அவர்கள் அப்போதுதான் அரசன் அரண்மனைக்குவந்து அங்கே கட்டிலின்மேல் படுத்துக் கண்வளர்ந்துகொண்டிருந்த ராஜகுமாரியை அவ்வண்ணமே தூக்கிக்கொண்டுபோய் வைத்திருந்தார்கள். அந்தப் பெண் அப்போதும் அப்படியே தான் மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். மேலும் அக்கள்ளர்கள் அரசனுடைய தனசாலைக்குப் போய் அங்கிருந்த திரவியங்களையும் அபகரித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அவ்விடத்திற்குப்போன நான்காவது கட்டில்கால் அச்செய்திகளையெல்லாம் பார்த்துவிட்டுச் சீக்கிரமே அரண்மனைக்குத் திரும்பிவந்து மற்ற மூன்று கால்களையும் பார்த்து, தோழர்களே, நமது மகாராஜா மிக புத்திமானாயிருந்தால் இவர் உடனே எழுந்து வடபுறத்துக் காட்டுக்கு ஓடவேண்டும், அங்கே சில திருடர்கள் நமது ராஜகன்னிகையையும், இவ்வரண்மனையிலிருந்து திருடிக்கொண்டுபோன அளவற்ற திரவியங்களையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உடனே எழுந்தோடினால் சொத்துங்கையுமாய் அவர்களைத் தடையின்றிப் பிடித்துக் கொள்ளலாம் என்றது.

அந்த வார்த்தையைக் கேட்ட க்ஷணமே அரசன் எழுந்து தன்சேவகர்களையும் சில போர்வீரர்களையும் கூட்டிக்கொண்டு காட்டுகுப்போகப்புறப்பட்டான். புறப்படும்போது முதலாவது கட்டில் கால் சொன்னபேச்சை நினைத்துத் தன்பாதரக்ஷையைத் தூக்கித் தட்ட, அதினின்றும் ஒரு பாம்பு சுருட்டிக்கொண்டு கீழே விழுந்தது. (மற்றொரு பாம்பு அரண்மனைக்கு வராமல அப்படியே காட்டுக்கு ஓடிப்போய்விட்டது.) இதனால் முதல கட்டில்கால் சொன்னபேச்சு உண்மையென்று அரசனுக்குத் தெளிவாய்த்தெரிந்தது.

அவன் காட்டிற்குப் போனபோது அங்கே நான்காவது கட்டில்கால் சொன்னபடியே திருடர்கள் தன் மகளையும் திரவியங்களையும வைத்திருக்கக் கண்டு, பெண்ணையும் பொருளையும் அப்படியே அரண்மனைக்குக் கொண்டுவந்தான். அரசன் மகள் அப்போதும் தூங்கிக்கொண்டிருந்தாள் ; தனக்கு இவ்விதமான ஆபத்து நேரிட்டதென்று அவளுக்குச் சிறிதும் தெரியாது. இதனால் நான்காவதுகால் சொன்ன பேச்சும் உண்மையாயிற்று. அந்தத் திருடர்கள் மட்டும் அவன் கையில் அகப்படவில்லை ; பல போர்வீரர்களோடு அரசன் வரக்கண்டு மூலைக்கொருவராய் அவர்கள் ஓடிப்போனார்கள்.

பின்பு அரசன் தனது பழைய அரண்மனையை இடித்துவிடும்படி பல வேலைக்காரர்களை அனுப்பினான். அவர்கள் போனபோது அது தானே இடிந்துவிழக் காத்திருந்தது. அப்போது யாராவது உள்ளே நுழைந்திருந்தால் அவன் அந்தக்ஷணமே அதன்கீழ் அகப்பட்டுக்கொண்டு நசுங்கிப்போயிருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. அதைக்கண்டு இரண்டாவதுகால் சொன்னதும் உண்மையெனத் தெரிந்துகொண்டான்.

மறுநாள் அரசன் ராஜசபையில் உட்கார்ந்திருந்தபோது, இராத்திரி

பல திருடர்கள் வந்து சத்திரத்தில் ஒரு போர்வீரனைக் கொன்று விட்டதாக
முறையிட்டார்கள். அதுகேட்டு அரசன் அந்தப் போர் வீரனுடைய மனை
வியை வரவழைத்து, உன் கணவனைக் கொன்றது யாரென்று விசாரிக்க,
அவள், கள்ளர்கள் வந்து கொன்றுவிட்டார்கள் என்றாள். அதைக் கேட்க
வே அரசனுக்கு அவளிடத்தில் அதிக கோபமுண்டாயிற்று. ஏனெனில்,
மூன்று கட்டில் கால்களும் சொன்னபேச்சு உண்மையா யிருப்பதனால் மற்
றொரு கால்சொன்ன பேச்சும் உண்மையாகவே இருக்கவேண்டுமென்று
அவன் உறுதியாக நம்பினான். அதனால் கொலையுண்டுபோன வீரனுக்கு
நடத்தவேண்டிய கிரியைகளையெல்லாம் கிரமமாக நடத்தும்படி திட்டம்
செய்து, உடனே சுடுகாட்டில் ஒரு பெருந்தீ வளர்த்தி அதில் கொலைக்கஞ்
சாத பெரும்பாவியான அக்கொடியவளைத் தள்ளி எரித்துவிடக் கட்டளை
யிட்டான். கடைசியில் துஷ்டஸ்திரீகளின் முடிவு இப்படித்தானாகும்.

பிறகு இப்படிப்பட்ட அற்புதமான கட்டிலொன்றைக் கொடுத்துத்
தன் உயிரைக் காத்த கனவானான சூடாமணியை வரவழைத்துத் தன் பக்கத்
தில் உட்காரவைத்துக்கொண்டு, குழந்தாய், உன்னுடைய கட்டிலில்லாவிட்
டால், இன்று நான் பாம்புகடித்து இறந்துபோயிருப்பேன். ஒருவேளை அதற்
குத் தப்பினாலும், பழைய அரண்மனை இடிந்து தலையில்விழ அதற்குத் தப்பா
மல் அவசியம் மாண்டுபோயிருப்பேன். இதற்குமுன், அது அவ்வளவு அபாய
ஸ்திதியிலிருக்கிறதென்பது எனக்குத் தெரியாது. என் மகளும் அநியாயமா
ய்த் திருடர்கையில் அகப்பட்டுப்போயிருப்பாள். இந்தப் படுபாவியான பெண்
பிள்ளையும் பிழைத்திருக்கும்படியாகும். இப்படிப்பட்ட தீமைகள் ஒன்றும்
நேரிடாமல் நான் உன் கட்டிலின் கால்களால் காக்கப்பட்டேன். ஆதலால்
உன்னிடத்தில் எனக்கு அபரிமிதமான அன்பு உண்டாயிற்று. நாளைய தினம்
முழுவதும் நீ எத்தனை வண்டிகள் ஓட்டிக்கொண்டு வந்தாலும், அவைகளில்
நீ கொண்டுபோகக் கூடிய திரவியம் நான் உனக்குத் தருகிறேன் என்றான்.

அப்படியே ஆகட்டுமென்று சூடாமணி மறுநாள் காலையில் அளவற்ற
வண்டிகளை ஓட்டிக்கொண்டு வந்து ஒவ்வொரு வண்டியிலும் வேண்டுமளவு
பொன் வெள்ளி நாணயங்களும் ஆடையாபரணங்களும் ஏற்றிக்கொண்டு
வீடுபோய்ச் சேர்ந்தான். அந்த வண்டிகளைப் பார்த்தபோது அவன் மனை
யாளுக்கு உண்டான ஆநந்தத்துக்கு அளவில்லை. "என் பிராணநாதர் ஒரே
ஒரு வாரந்தான் வருந்தி வேலை செய்தாராயினும் அதனால் அளவற்ற பொருள்
சம்பாதித்துவிட்டார்" என்று மிகவும்மகிழ்ச்சியடைந்தாள். பின்பு அவர்கள்
அந்தத் திரவியத்தைக்கொண்டு வேண்டிய காணி பூமிகளும் தோட்டம் துர
வுகளும் வாங்கிக்கொண்டு வெகு சுகமாக நெடுநாள் களிப்புற்றிருந்தார்கள்.

கதை என்னவோ முடிந்துவிட்டது. ஆனால் ஒரு சந்தேகம். மெது
சூடாமணி செய்துதந்த ஒரு சாதாரண கட்டிலுக்கு இவ்வளவு மகிமை எப்
படி ஏற்பட்டதென்றாலோ, அது அவனுடைய



தான். ஒரு மரத்தை வெட்டுவதற்குக்கூட அவன் மனது துணியாமல்—
"மரமே உன்னை வெட்டலாமா—" என்று ஒவ்வொரு மரத்தையும் கேட்டா
னல்லவா? அந்த உத்தம குணத்திற்குக் கடவுளும் மனமிறங்கி அந்த மரத்
தைப் பேசச் செய்தார் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அப்போது
கடவுளின் அருளால் அவனுக்கு ஒரு சப்தம் எங்கிருந்தோ கேட்டது. "அன்
புள்ள குமாரா! நீ இந்த மரத்தை வெட்டி விறகுக் கட்டாகக் கட்டி விற்கலா
மென்று எண்ணி வந்திருக்கிறாய். ஐயோ பாவம்! இதைத் தவிர உனக்கு வேறு
வேலை யொன்றுமே தெரியாது. ஆயினும் இந்த மரத்தின் துண்டுகளை நீ விறகு
கட்டாக்கி விற்காமல் இதை உன் வீட்டிற்குக் கொண்டுபோய் அதைக் கட்டி
லாகச் செய்யப் பிரயாசைப்படு. இதுவரையிலும் எவருமே கண்டிராத
நூதன விதமான கட்டிலொன்று நிர்மாணிக்க உனக்குத் தானேசக்தி உன்னை
யறியாமலே உண்டாகும். நீ நேர்த்தியாக அந்தக் கட்டிலைச் செய்துமுடித்து
அதை அரசனுக்கு ஆயிரம் ரூபாய்க்கு விற்றுவிடு. அக்கட்டிலின் உதவி
யால் அரசன் பலவித ஆபத்துக்களிலிருந்தும் தப்புவிப்பதன்றி, உனக்கும்
வேண்டிய சன்மானங்கள் செய்வான். அதைக்கொண்டு தர்மமார்க்கத்தில்
வாழ்ந்துகொண்டிரு. எந்தக் கிழமையில் அரசன் அந்தக் கட்டிலில் ஏறினா
னோ—அந்தக் கிழமை வருகிறதினத்தில், அரசன் நித்திரை செய்யாமல்
விழித்திருப்பானானால், கட்டிலின் நான்கு கால்களும் உலகத்தின் பல சங்கதி
களைப் பற்றியும் தங்களுக்குள் அன்று பேசிக் கொள்வதை யரசன் கேட்டி
ருந்து இராஜ காரியங்களைச் சிக்கலில்லாமல் சுலபமாக நடத்திக் கொண்டு
போகலாம். நீ அரசனிடம் சன்மானங்கள் பெற்ற பிறகு இதை அரசனுக்
குத் தெரிவித்துவை"—என்று ஒரு சப்தம் உண்டானதைக் கவனித்தான்.
அந்தப்படியே சகலமும் உண்மையாகவே நடந்தேறின. அரசனுக்கும்
இந்த ரகசியத்தைச் சூடாமணி தெரிவித்தான். அரசன் மகிழ்ந்து அந்தப்
படியே நடந்து கொள்வதானான். சூடாமணியையும் தனக்கு மந்திரியாக
வைத்துக் கொண்டான். சூடாமணி, தான் இது வரையில் தனது அருமை
மனைவிக்குச் சொல்லாதிருந்த இந்த விஷயங்களை யெல்லாம் விவரித்து,
அவளும் தானுமாக புத்திரப் பேற்றையும் அடைந்து வெகு காலம் சுகமாக
வாழ்ந்திருந்தான். நல்ல மனதுள்ளவர்களையும், கபடமற்ற பேதைகளையும்
கடவுள் என்றும் கைவிடாது காப்பார் என்பது திண்ணம். அத்துடன்
ஒரு காரியத்தை நிறைவேற்றி முடித்த பிறகு அதைத் தன் மனைவிக்குச்
சொல்வது உத்தமமென்பதையும் சூடாமணியின் சங்கதியால் அறியலாம்.
அதைச் செய்யப் போகிறேன்—இதைச் செய்யப் போகிறேன்—அந்தப்
பணம் வந்ததும் நகை செய்யலாம்—இந்தப் பணம் வந்ததும் இதைச் செய்ய
லாம் என்று தன் மனைவியோடு சதாகாலமும் சொல்லிக் கொண்டே
இருந்து—பிறகு ஒன்றுமே செய்யாமற் போவதைவிட, ஒரு காரியத்தை
மௌனமாயிருந்து முடித்தபிறகு அதைத் தன் மனைவிக்குச் சொல்வது
எவ்வளவோ சிலாக்கிய மல்லவா?

# இன்ப துன்பங்களின் கதை.

இவ்வுலகம் உண்டானநாள் முதல் ஒளியும் இருளும்போல் ஒன்றுக்கொன்று அவ்வளவு விரோதப்பட்ட இரண்டு குடும்பங்கள் உண்டு. அவற்றுள் ஒன்றுக்கு இருப்பிடம் சுவர்க்கலோகம், மற்றொன்றுக்கு இருப்பிடம் நரகலோகம், சுவர்க்கலோகத்திலிருந்த குடும்பத்தில் கடைசியாய், தேவவமிசத்திற் பிறந்த சற்குணனென்பவனுடைய பவுத்திரியும், சவுக்கியத்தின் புத்திரியுமான இன்பமென்னும் ஒருத்தி இருந்தாள். நரகவாசிகளில் கடைசியாய் இருந்தவன் பெயர் துன்பன்; அவன் துக்கனுக்குப் பிள்ளை, துர்க்குணனுக்குப் பேரன்; பிசாசங்களுடைய மரபில் உற்பத்தியானவன்.

சுவர்க்கலோகம், நரகலோகம் என்ற இவ்விரண்டு நிலைமைக்கும் மத்தியிலுள்ளது பூலோகம்; அதிலுள்ளவர்களது இயல்பும் மேற்சொல்லிய இருதிறத்தவர்களுக்கும் நடுத்தரமான வியல்பே. அவர்கள் இன்பமென்பவள் இருக்கும் சுவர்கத்திலுள்ளவர்கள்போல அவ்வளவு நற்குணமுள்ளவருமல்லர்; துன்பன் இருக்கும் பாதாளத்தாரைப்போல் அவ்வளவு துர்க்குணமுடையவருமல்லர். இவ்விரு குலத்தாருடைய குணங்களாகிய சன்மார்க்கம் துன்மார்க்கம் இரண்டும் செறிந்தவர்களாய்ச் சில வேளைகளில் நன்மையும், சில வேளைகளில் தீமையும் புரிபவர்கள். இவர்களுக்கு மானிடரென்று பெயர். இந்த ஜாதியார் தமது நற்குண நற்செயல்களால் துக்கங்களுக்கு ஆளாகாமலும், துர்க்குண துர்ச்செய்கைகளால் சுகத்துக்கு ஆளாகாமலுமிருப்பதைத் தருமதேவன் பார்த்து, அவர்களுக்கு நன்மை தீமைகளைப் பகுத்துணரும் அறிவைக் கொடுக்கக்கருதி, மேற்கூறிய சவுக்கியத்தின் புத்திரியாகிய இன்பத்தையும், துக்கத்தின் புத்திரனாகிய துன்பனையும் இருவர்க்கும் சமனான பூலோகத்தில் வந்து ஒருவரையொருவர் சந்திக்கும்படி கட்டளையிட்டருளினார். அதனோடு கூடத் தான், அந்த மனிதர்களை அவர்களுக்குப் பாகித்துக்கொடுக்கும் விபாகத்துக்கு அவர்கள் உடன்படும் பக்ஷத்தில் அப்படியே தான் அமைத்துக்கொடுப்பதாகவும் உறுதிமொழி கொடுத்தார்.

அத்தேவனுடைய கட்டளைப்படியே, இன்பமும் துன்பமும் இப்பூலோகம் வந்து சேர்ந்தவுடனே தங்களுக்கு அளிக்கப்பட்ட பொருள்களுள் அவரவர் குணநிசயத்துக்கேற்பச் சன்மார்க்கரனைவரையும் இன்பமும்; துன்மார்க்கரனைவரையும் துன்பனும், கைக்கொண்டு அனுபவிப்பதாக ஒத்துக்கொண்டார்கள். ஆனாலும் அவர்களுள் இன்னார் இன்னார் தன் தன் பங்குக்குரியரென்று நிச்சயிக்கும்படி ஒவ்வொரு மனுஷனையும் சோதனை பண்ணிப் பார்க்கும்போது ஒவ்வொருவனும் இரண்டுபெயருக்கும் உரியவனாகக்காணப்பட்டனன். எப்படியெனில், அவர்களுடைய சொந்த உலகத்தில் இருந்தது



போலச் சிறிதளவாவது நன்மையில்லாத அத்தனை துன்மார்க்கனுமிங்கில்லை. சிறிதளவாவது தீமை கலவாத அத்தனை சமார்க்கனுமில்லை. கொடிய துஷ்டனிலும் இன்பமென்பவளுடைய பங்குக்குச் சேர்ந்த சற்குணம் நூற்றிலொரு பாகமாவது தோற்றியது. சிறந்த சன்மார்க்கனிலும் துன்பனின் பாகத்திற்குச் சேர்ந்த துர்க்குணம் மூன்றிலொரு பங்குக்காவது வந்தது. ஆதலால் தாமே இதற்கோர் உபாயந் தேடிக்கொள்ளாவிடின் தங்களுக்கு எப்போதும் ஓயாத விவாதம் நேரிடுமென்று கண்டார்கள். இப்படி இவர்கள் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கும்போது தாங்கள் இருவரும் ஒத்து ஒருவரை ஒருவர் மணம் புரிந்துகொண்டாலல்லது தீராதெனத் தீர்மானித்து அவ்வண்ணமே இன்பமாகிய பெண்ணும், துன்பமாகிய ஆண்மகனும் முடித்துக்கொண்டனர். அதனாலேயே, இப்போது இன்பமும் துன்பனும் ஒரு நுகத்திற் பூட்டிய எருதுகள்போல என்றும் எவ்விடத்தும் ஒருவரையொருவர் பிரியாமல் வசிக்கின்றார்கள். ஆதலின் இருவரும் ஒருவனிடத்திற்கு ஒன்றாய்க் கூடிவந்தாலும் வருவார்கள்; அப்படியில்லாவிடினும் ஒருவரையொருவர் விட்டுவிலகி நெடுந்தூரம் போவதில்லை. ஒருவனுக்குத் துன்பம் வந்தால் இன்பமும் உடனே வரும்; இன்பம் முதலில் வந்தாலும் துன்பன் நெடுந்தூரத்திலிருக்கின்றானென நினைக்க வேண்டுவதில்லை. அவனும் உடனே இன்பத்தோடு பின்பற்றித் தீவிரத்தில் வந்துவிடுவான்.

இத்தன்மையான விவாகம் அவ்விருவர்க்கும் மிகவும் அனுகூலமானதாகவே இருந்ததானாலும், தருமதேவன் எந்தக் கருத்தை நோக்கி அவர்களைப் பூலோகத்திற்கு அனுப்பினாரோ அக்கருத்து அதனால் நிறைவேறுவதாகக் காணப்படவில்லை. ஆனதுபற்றி அந்த அசந்தர்ப்பத்தைப் போக்கும்படியான மற்றொரு உபாயம் ஆலோசித்து, அவர்களுடைய சம்மதியின்மேல் தருமதேவன் அதை அப்படியே ஸ்தாபிக்கலானார். அந்த ஏற்பாடாவது: "நீங்கள் இவ்வண்ணம் தனித்தனி ஒவ்வொரு மனிதரையும் ஆட்சிசெய்து அநுபவித்தாலும், அவனவன் மரித்தவுடனே அவனுடைய புண்ணியபாவங்களிலே, எது அதிகப்பட்டதோ அதற்குத் தக்கபடி அவன் ஒருவருடைய சுவாதீனத்திலேயே படிய வேண்டியது. பாவம் அதிகரித்தவன் துன்பனுடைய கைச்சீட்டு வாங்கிக்கொண்டு பாதாளத்திற்கேகி அங்குள்ள துக்கன் துன்மார்க்கன் முதலிய நரக வாசிகளுடனே சேரக்கடவன். அப்படியன்றிப் புண்ணியம் அதிகப்பட்டிருப்பானாயின், இன்பம் என்பவளுடைய பரிபாலனபத்திரம் பெற்றுச் சுவர்க்கத்திற் சென்று அவ்விடத்திலுள்ள சவுக்கியன் சன்மார்க்கன் முதலிய கடவுளருடனே வசித்திருக்கக்கடவன்" என்று இவ்வாறு ஏற்பாடுசெய்து, அவ்வண்ணமே அவர்கள் சம்மதித்து உடன்படிக்கை செய்துகொள்ளப் பண்ணினார். இந்த ஏற்பாட்டினையநுஸரித்தே இப்போது சகலமும் நடத்தப்பட்டு வருகின்றது.

# பொருளாசையும் பெரும்போகமும் நண்பர்களான கதை.

இவ்வுலகத்திலுள்ள மன்னுயிர்கள் வெளித் தோற்றத்தில் பற்பல விதமாக வேறுபடுவது போலவே, உள்ளத்தின் நிலையிலும் பலவிதமாக வேறுபடுகிறார்கள். சிலர் எப்போதும் இன்பமுற்றிருக்கிறார்கள்; பலர் துன்பமுற்றிருக்கிறார்கள்; சிலர் எப்போதும் களிப்புற்றிருக்கிறார்கள்; மற்றுஞ் சிலர் விசனமுற்றிருக்கிறார்கள்; அநேகர் உலோபிகளாயிருக்கிறார்கள்; சிலர் உதாரகுணமுள்ளவர்களா யிருக்கிறார்கள்; சிலர் நற்செய்கைகளில் விருப்பங்கொண்டிருப்பது போலப் பலர் தீச்செய்கைகளில் விருப்பங்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பலவிதமா யிருப்பதோடுகூடச் சிலர் பொருளாசை மிகுந்திருக்கிறார்கள்; சிலர் பெரும்பொருள் செலவு செய்து நவ நவமான போகங்களை அனுபவிக்க ஆவல்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருளாசையும் பெரும்போகவாஞ்சையும் ஆகிய இரண்டும் பெரும்பகையாளிகள். இவற்றில் ஒன்றும் தன்னிடத்தில் மற்றொன்றை அண்டவொட்டுவதில்லை. இப்படியிருக்கச் சிலரிடத்தில் பொருளாசையும் பெரும்போகமும் ஒன்றியிருக்கக் காண்கிறோம். இதைவிட அதிசயம் வேறென்ன! இரவும் பகலும் ஒன்றாய்க் கூடினதுபோலல்லவா? ஆதலின் இவற்றின் வரலாறு என்னவெனச் சற்று நிதானித்துப் பார்ப்போம்.

பொருளாசை, பெரும்போகம் என்று மிகவும் கொடியவர்களாய் இரண்டு அரசர்களுண்டு. அவ்விருவரும் ஓயாமல் ஒருவரோடொருவர் போராடிக்கொண்டே யிருந்தனர். மன்னுயிர்களுடைய மனதுகளை முழுதுந் தாமே கைக்கொண்டு ஏகசக்கிராதிபதியாய் ஆளவேண்டுமென்று அவர்களுள் ஒவ்வொருவரும் கருத்து கொண்டிருந்தார்கள். பெரும்போகராஜனின் கீழ் மகிழ்ச்சி, பெருமை, பிரசித்தி, டம்பம், சுகம் முதலிய குணங்களாகிய பல சேனைத்தலைவர் இருந்தார்கள். இவர்களெல்லாம் தம்மால் கூடியவளவு வஞ்சனையில்லாமல் தம்மரசனுக்கு உதவிசெய்து வந்தார்கள். பொருளாசை ராஜனும் தன் துணைவலிமையில் பெரும்போக ராஜனுக்குக் குறைந்தவனல்லன். அவனிடத்திலும் உழைப்பு, கவலை, ஆவல், ஜாக்கிரதை முதலிய குணங்களாகிய பல போர்வீரர்கள் சோர்வின்றி ஊழியஞ் செய்துவந்தார்கள். இவர்களோடுகூட அவனிடத்தில் பிரதான மந்திரியொருவன் இருந்தான். அவன் எப்போதும் அரசன் அண்டையிலேயே யிருந்து ஏதாவதொன்று அவன் காதில் உபதேசித்துக்கொண்டே யிருப்பான். அந்த மந்திரிக்கு லோபன் அல்லது அழுக்கனென்று பெயர். இப்படியே எதிரியான பெரும்போக ராஜ



னுக்கும் அந்தரங்கனாக அமைச்சனொருவ னிருந்தான். அவனுக்கு வீண்விரயக்காரனென்று பெயர். அவன் நிமிஷங்கூடத் தன் அரசனைவிட்டுப் பிரியாமல் வேண்டியபடி அவனுக்கு யுக்தி உபாயங்கள் சொல்லிக்கொண்டு தன்னிஷ்டப்படியே சகல காரியங்களையும் நடத்தி வந்தான். இவ்விதமாய் ஒவ்வொருவரும் தானே ஏகசக்கிராதிபதி யாகவேண்டுமென்றெண்ணி இருவரும் பெரும் பகையாளிகளாய்க் கலக்கப்பட்டு ஒருவர்க்கொருவர் தோற்காமல், அவரவர்க்கு இசைந்த இடங்களை அவரவர் சுவாதீனஞ் செய்துகொண்டு விருத்தியடைந்து வந்தார்கள். ஒரு மனதைப் பேராசை ராஜன் பிடித்துக்கொள்வான்; ஒரு மனதைப் பெரும்போக ராஜன் பிடித்துக்கொள்வான். ஒரு வீட்டிலேயே தந்தை, பொருளாசையின் கொடியின்கீழ் சேர்வான். மகன் பெரும்போகனுடைய கொடியின் கீழ் சேர்வான். அப்படியே கணவன் ஒரு பக்கத்திற் சேர்வான். மனைவி ஒரு பக்கத்திற் சேர்வாள். இது மாத்திரமேயல்ல. ஒரே மனிதன் தன் வயது நாளில் ஒரு பக்கத்தைச் சேர்ந்திருப்பான். விருத்தாப்பியத்தில் மற்றொரு பக்கத்தைச் சேர்ந்துபோவான். ஆயினும் விவேகிகள் இவ்விரண்டுள் ஒருபுறத்திலும் சாராமல் தனித்து நிற்பார்கள். ஐயோ, நமது துர்ப்பாக்கியத்தால் அப்படிப்பட்ட மகான்கள் இவ்வுலகில் விசேஷித்திருக்க வில்லையே!

இவ்விரண்டு அரசர்களும் இப்படி வெகு நாள் யுத்தஞ்செய்து ஓய்ந்துபோனதினால், இருவரும் சந்தித்துச் சமாதானமாய்ப் போகும்படி நிச்சயித்தார்கள். சந்தித்துப் பேசுகிறகாலத்தில் அவர்கள் மந்திரிமார்கள் மட்டும் அங்கு வரக்கூடாதென்று ஏற்பாடாயிற்று. அந்த ஏற்பாட்டின்படியே அவ்விரண்டு அரசரும் வந்து கூடினார்கள். முதலில் பெரும்போகராஜன் பேசத்தொடங்கினான். அவன், அது வரையில் தாங்களிருவரும் புரிந்து வந்த போர்த்தொழில்களையும், அதனால் உண்டான பலவித லாபநஷ்டங்களையும் எடுத்துக்காட்டிக் கடைசியில் தன் எதிரியைப் பார்த்து, "ஐயா, பேராசை மகாராஜனே! உமது முதல் மந்திரியான லோபனுடைய துர்ப்போதனை உமக்கு இராவிட்டால் நாமிருவரும் எப்போதும் இணைபிரியாத நேசர்களாகவே இருக்கலாம். குடியைக் கெடுக்கக் கோடரிக்காம்பாய் ஏற்பட்ட அந்த மாபாவியன்றோ ஓயாமல் உமது காதில் உபதேசஞ்செய்து உமது நன்மனதைத் தீதாக்கிவிட்டான். அவனொருவனை விலக்கி யிருப்பீரானால், நீர் எவ்வளவோ பெருமை பெற்றிருப்பீர்" என்றிப்படிப் பலவாய்த் தன் இயற்கைப்படியே சிறிதும் கபடமற்றுப் பேசினான். அதற்குப் பொருளாசை சொன்னதாவது: பெரும்போகரே! நீர் என்னவோ லோபன் மிகக் கொடியன் என்கிறீர். உம்மிடத்தில் பிரதான மந்திரியாயிருந்து உமது மனதைக் கலக்கின்ற வீண்விரயக்காரனைப்போல் உலகத்திற்கு நாசகனாயிருப்பவன் வேறொருவனுமில்லை; பிற்காலத்தில் வருந்தும்படி நேருமே என்கிற எண்ணத்தை ஒருவர்க்காவது சிறிதுமுண்டாக்காமல், எப்போதும் இன்பமும் சந்தோஷமும் உண்டாக்குவதிலே

யே கன்றாய், என் ராஜாங்கத்துக்கு அடிப்படையான நியாயங்களையும் விதிகளையும் விலக்கி, என் அரசாட்சிக்கு வேர்ப்புழுவா யிருக்கிறான். ஆதலால் அவனைவிடக் காலாந்தகன் வேறொருவன் உண்டோ என்றான்.

இப்படி ஒருவர்க்கொருவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு இருவரும் சிறிதுநேரம் தீர ஆலோசித்துக் கடைசியில், தாங்கள் இருவரும் நேசர்களாவதற்குத் தங்கள் அமைச்சர்களே இடையூறென்று நன்றாய்த் தெரிந்துகொண்டு, உடனே தம்தம் அமைச்சனைத் தள்ளிவிட வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். அதன்படியே அவ்விரு அமைச்சரும் அந்தக்ஷணமே அதிகாரத்தினின்றும் தள்ளப்பட்டனர். அந்த ராஜாக்களின் பகைமைக்கு முதற்காரணமாயிருந்த அவ்விருவரும் நீங்கிப்போகவே, அவ்வரசாட்சிகளிலிருந்த மற்ற வேறுபாடுகளெல்லாம் உடனே ஒருமைப்பட்டுப்போயின. அதன் பிறகு, பொருளாசையும் பெரும்போகனும் சிநேகக் கட்டுப்பாடு செய்துகொண்டு, இனிமேல் தாங்கள் இருவரும் சிறிதும் பேதமில்லாமல் வாழ வேண்டுமென்றும், யார் எவ்வளவு வெற்றிபெற்றாலும் எவ்வளவு பொருள் தேடினாலும் எல்லாவற்றையும் இருவரும் சரிபாதியாகப் பாகித்துக்கொள்ள வேண்டுமென்றும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இதனாலே தான் இக்காலத்தில் பொருளாசையும் பெரும்போகமுமாகிய இரண்டும், ஒரே மனிதனைச் சுவாதீனஞ் செய்துகொண்டு ஒரே மனதில் ஒன்றாய்க் கூடிக் குடிகொண்டிருக்கக் காண்கிறோம். அவ்விரண்டு அமைச்சர்களும் நீக்கப்பட்ட நாள் முதல், வீண்விரயக்காரனுக்குப் பதிலாகப் பொருளாசை ராஜனானவன் பெரும்போகனுக்குத் துணையாகவும், லோபனுக்குப் பதிலாகப் பெரும்போக ராஜனானவன் பொருளாசைக்குத் துணையாகவுமிருந்து உலக காரியங்களை நடத்திவருகிறார்கள்.

---

# வித்துவசரபம் விசாலாக்ஷியின் கடிதம்.

அன்புள்ள அண்ணா!

உனக்கு இப்பொழுதுதான் விவாகமாயிற்றென்றும், நீயும் உன் மனைவியும் ஊரில் க்ஷேமமா யிருக்கிறீர்களென்றும் அறிய அபரிமிதமான மனக்களிப்பை யடைகின்றேன். சிறுபொழுதிலே உன் நற்புத்தி கேட்டு நடந்திருப்பேனானால் இப்போது இத்தனை துன்பங்களுக்காளாகி அங்கலாய்க்கும்படியாக எனக்கு நேர்ந்திருக்கமாட்டாது. கன்னிகா விதந்துகளுக்குப் புனர்விவாகம் அவசியமென்கிற ஆசார சீர்திருத்தக் கூட்டத்தார், இளையாள் மோகத்தால் முதல் தாரத்தைக் கஷ்டப்படுத்தும் சில கண்மூடிக் கணவர்களைப்பற்றியும் கவ



னிக்கப் புகவேண்டுமென்று ஒரு சாரார் பிரேரேபிக்கிறார்கள். அத்துடன் தான்தோன்றித்தனத்தால் என்னைப்போன்று கேட்டை யடைந்தவர்களையும் ரக்ஷிக்க ஒரு அநாதாலயம் நிர்மாணித்து உதவுவார்களாயின் அது பரமோபகாரமாகும்.

இளமை முதற்கொண்டே நான் உல்லாச மார்க்கத்தில் ஸல்லாபிக்கச் சில வழிகள் தோன்றின. என் பாட்டியால் விளைந்த தீங்கிது. அடிக்கடி நாடகத்திற்கு என்னை அழைத்துக்கொண்டு போவதாயிருந்தாள். பாடசாலைப் பாடங்களைப் படிப்பதற்குப் பதிலாக நாடக நோட்டீஸ்கள் என் கரங்களில் ஏறி விளையாடிற்று. அதில் பிரகடனமுறும் நாட்டிய நடன ரஸிகர்களின் நாமங்களை அத்தியந்த வாஞ்சையுடன் மனனம் செய்தேன். நாடக புருஷர்களின் கபட உள்ளம் அறியேன். அவர்களை ஒரு அவதார மூர்த்திகளென்றே நம்பினேன். இங்ஙனம் சிலநாளில் அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் சாதுர்ய முகவசீகர பால மன்மதனொருவன் எனது மனது கவர்ந்தான். அவனே என் ஜீவாதாரமென்று சிந்தை களித்தேன். தினத்துக்குத் தினம் அவனது அழகு அதிகப்படுவதுபோல் தோன்றிற்று. அவனது அன்பான மதுரவார்த்தைகளுக்கு அடிமையாய்விட்டேன். சில தினங்கட்கப்பால் நாடக கம்பெனியும் வேற்றூர் சென்றது. என் பிரியாப் பிரியனும் என்னைப் பிரிந்து சென்றான். என் மனமெல்லாம் அவன் பின்னேயே போயிற்று. அச்சோ! அப்பரிதாபம் பகரொணாது. இந்த சந்தர்ப்பத்தில் நான் புஷ்பிணியானேன். நான் வெளிப்படத் தடை நேருமென்றெண்ணி அவ்விஷயம் வீட்டிற்கு விவரிக்கவேயில்லை. என் முழுமனம் பறித்த கிருபாநிதி பிரவேசித்த ஊருக்கு டிக்கட் பெற்றுக்கொண்டு ரயிலேறினேன். பிரிந்த காதலரை ஒன்றுபடுத்துவதற்காக அதிவேகமாய் ஓடுகின்ற ரெயிலை நிர்மாணித்த ஆதிபுருஷனை மனதார வாழ்த்தினேன். போய்ச் சேர்ந்த ஊரில் என் அன்பன் இருக்கும் கம்பெனி இன்னதென்று தெரியவில்லை. ஆகவே அப்போது நடந்துவந்த கம்பெனியில் சேர்ந்துகொள்ள முயற்சித்து அக்கம்பெனித் தலைவரைப் பார்த்தேன். என் எண்ணம் அநுகூலமடைந்தது. அடுத்த நாள் நாடகத்தில் இராஜகுமாரனாக வெளித்தோன்றினேன். என் ஹிருதயம் பரவசமடைந்தது. இதனினும் சிறந்ததோர் பாக்கியம் வேறில்லையென்று தீர்மானித்துக் கொண்டேன். சில தினங்கட்கப்பால் இன்னொரு நாடகமும் அவ்வூரில் ஆரம்பமாயிற்று. அதன் பிரசுரபத்திரிகையிலே என் அன்பன் நாமம் வரவுங் கண்டேன். மகிழ்ச்சி குலாவினேன். சந்திக்க விரும்பி நாலைந்து சரித்திரங்களுக்குப் பணம் கொடுத்து நாடகசாலைக்குச் சென்றிருந்தேன். கண்டுபிடிக்கக் கூடாமையாயிற்று. ஆசை வெட்க மறியாதல்லவா? பிறகுஞ் சென்றேன். அன்று ஆட்டம் முடிந்து கூட்டம் கலைகிறபோது என்னுயிர் அன்பனின் சந்திப்புப் பெற்றேன். அவன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் சங்கீதத்தின் இன்னிசை போன்று இனித்தது. நீயே என் பிராணநாதனென்

ளுன். என் வாழ்க்கைத்துணைவி நீயே யல்லாது வேறு யார் என்ளுன் அரைக்கணமும் பிரிந்திருக்க இனி முடியாது என்ளுன். இன்னும் என் னென்னவோ சொல்லிப் பரவசம் தந்தான். என் கற்பை அவனுக்கு அர்ப் பணம் செய்தேன். வெகு சுககாமாக நாட்களும் சென்று கொண்டிருந் தன. வரவா என் ஆனந்தசாகரம் அதிகமாக ஆழத்தையடைந்து கொண் டிருந்தது. எனது காதலும் நாளுக்குநாள் அதிகரித்தன. எனது நாயகர் ஒரு பெரும் வித்துவானுனதால் எனக்கு வித்வசாபம் விசாலாக்ஷி என்று நாமகாணம் செய்தார். அவருடைய நண்பர்களெல்லாம் என்னை வித்துவ சாபம் என்றே கூப்பிடுவார்கள். இப்படி யிருக்கும்போது ஒரு நாள் மத்தி யானம் மணி மூன்றிருக்கலாம். போஜனம் முடித்துக் கொண்டு என் அன் பனிடம் செல்ல மெத்தைப்படி ஏறினேன். என் அன்பரும் இன்னெருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் அரவம் கேட்டு ஓர் புறமாய் நின்றேன். பின்வரும் மொழிகள் என் செவியில் விழுந்தன.

“ இப்படி நீ உபநாயகியை வைத்துக்கொண்டு மானவீனமான காரியம் செய்வது நன்ருமா ?”

“ நாடகத்தில் சேர்வதற்காக வந்தவள் பிறகு இன்பம்தரவுந் தோன்றினுள்.

“ நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்.

தெரிந்தாயா ? இந்தக் கூத்தெல்லாம் எத்தனை நாளைக்கு ? நான் இவளைச் சீக்கிரம் விட்டுவிடுவேன்.”

“ சரிதான். சீக்கிரம் இந்த சகவாசத்தை விட்டொழி. அறியாது கெட்ட பெண். அவளுக்கும் நாடகபோதனை புகட்டி, நாடகத்தில் சேர்த்து விட்டு ஜீவன மார்க்கம் உணர்த்தி நீயும் பிரிந்துவிடு.”

இந்த சம்பாஷணையின் பொருள் இன்னதென்று அப்போது எனக்கு விளங்கவில்லை. இப்படியும் சிலகாலம் சென்றது. நாலைந்து ஊர்களுக்கு நண்பனுடனேயே சஞ்சாரம் செய்தேன். கடைசியாக ஒரு ஊரில் இருக்கும் போது தபாற்காரன் கடிதம் ஒன்று கொண்டுவந்தான். என் அன்பர் வெளிச் சென்றிருந்தார். கடிதத்தைப் பிரித்துப் படித்துத் திடுக்கிட்டேன். அதில் என் நண்பருக்கு அவரது தமயனுர் விவாக முயற்சி செய்வதாயும் பெண் பார்த்து நிச்சயம் ஆனதாயும் புறப்பட்டு வரும்படியும் எழுதி யிருந்தது. அப்போதுதான் என் உண்மை நிலைமை எனக்கு விவரமாயிற்று. பந்து ஜனங்களின் முன்பு திருமங்கிலிய தாரணம் நடந்தேறிஞல் அந்தப் பெண்ணுக்குத்தான் மனைவி, பத்தினி என்று பெயரென்றும், என்னைப் போன்றவர்களை உபநாயகி யெனவும், தாசி எனவும், அழைக்கப்பட்டு வருகிறதென்றும் அறிந்து கொண்டு அழலானேன். இந்தச் சமயத்தில் என் அன்பரும் உட்பிரவேசித்தார். நான் வெகுநோம் அழுது கொண்டிருந்தாய் என்று



நேத்திரங்கள் அவருக்குத் தெரிவித்தது. காரணங் கேட்டார். கடிதத்தைப் படித்த விவரங்களைச் சொன்னேன். அதிக இரக்கத்துடன் என்னை முத்த மிட்டுக் கொண்டார். அவர் முத்தமிட்டபோது நின்ற அழகும், தாம்பூலத் தினுல் சிவந்திருந்த அவரது வாய் என் கன்னத்தில் பொருந்தியபோது நானடைந்த பூரிப்பும் இப்போது நினைத்துக் கொண்டாலும் ஒரு விதமான கிளர்ச்சி என் மனதில் உண்டாகின்றது. சில தினங்கட்கப்பால், தான் சொந்த ஊர் சென்று ஒரு மாதத்தில் திரும்பி விடுவதாகவும், அப்போது தன்னிடம் மறுபடியும் வந்து சேர்ந்து கொள்ளும்படியும் கூறி, என்னை எனக்கு முன்பு உபநாயகியாகக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் வீட்டிற்கு அனுப்பிவித்தார். ரெயில்வே ஸ்டேஷனில் அவரை விட்டுப் பிரியும்போது நான் பட்ட பாடும் அழுத அழுகையும் அந்தப்படி அநுபவித்தவர்கள் தான் அறிய வேண்டும்.

கடைசியாக அவரது உபநாயகியைச் சந்தித்தேன். அந்த அம்மாள் என் நண்பனின் வஞ்சகச் செயல்களை எல்லாம் எனக்குத் தெரிவித்ததன்றி தான் மோசம்போன விவரமும் அறிவித்து, இந்த மாதிரி எத்தனையோ பேர் அவருக்கு ஆசை நாயகிகளாயிருந்து பிரிந்தனர் என்ருள். அவள் வார்த் தையை அப்போது நான் நம்பவில்லை; பிறகு அவைகள் யாவும் உண்மை யாக முடிந்தன. என் நண்பரைப் பிரிந்ததற் கப்பால் அவரிடமிருந்து ஒரு கடிதமும் எனக்கு வரவேயில்லை. இன்னமும் பெற்றிலேன். எத்தனையோ கடிதங்கள் எழுதினேன். ஒன்றுக்கும் விடையில்லை. பிறகு எனது நேசருக்கு யார் யார் நண்பர்களென்று விசாரித்து அவர்களுக்கு எனது பரிதாபம் கூறி அவர்களைக் கொண்டு கடிதங்கள் எழுதச் செய்ததற்கு, அக்கடிதங்களுக்குப் பதிலாக வெகுநாள் கழித்து சில கடிதங்கள் அவர்களுக்கு வந்தன. அக் கடிதங்களின் சாரமான பாகத்தை அடியில் எழுதுகிறேன்.

## என் நாதரின் கடிதங்கள்.

“ என் மனேபாவத்தைச் சாடையாற் காட்டியும், மித்திரர்களைக் கொண்டு சொல்வித்தும், நேரில் அவர்களுக்கு கடித மெழுதியும், தெரிந்து கொள்ள யோக்கியதையற்ற ஒரு பதார்த்தம் நமக் கெக்காலத்தும் நிலைபெறு தென்பது தேர்ந்து கோடற் பாற்று.”

* * * *

“ சென்ற வாரக் கப்பலில் செயற்கை வாசகத்தோடும் விரிந்து நிரம் பிய நீண்ட கவரொன்று கண்டு அதிசயித்தேன். புதிய சுகங்கண்ட வனிதையின் புந்தி போக்கும் அதில் பொருந்தக் கண்டேன்; பரிதபித்தேன். பல இடங்களுக்கும் சென்று, என் நண்பர்களைத் தூண்டிக் கடிதம் எழுதச் செய்த வீண் செலவைத் தனது போஷகார்த்தமாய்ச் செலவிட்டிருப்பின் சுகம் பெற லாம். எனது அந்தரங்கத்தை நடக்கையிற் காட்டுவேனன்றிக் கடிதத்தில்

அது ஒரு தஸ்தாவேஜு ஆகும்படி எழுதமாட்டேன். இந்த வகையில் என் பதில்பெற்று அடையும் பிரயோஜனம் யாது?

* * * *

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு காவலையும் கடந்து நிற்கும் பெண்களில் ஒரு விசாலாக்ஷியம்மா ளென்பாள், தனது சம்பந்த நாயகனிடம் கொண்டுள்ள நீங்காத மோக நெறியில் வெட்கம் விட்டுப் பொதிந்தனுப்பிய நிருபங்களை மிக்க எரிச்சலாக இருந்தது. ஆதியில் தனது சுதந்தர மேலீட்டினால்தானே என்னை யவள் சந்திக்க நேர்ந்தது. அப்படிச் சந்திக்க நேர்ந்தும் சஞ்சலத்தில் விட்டமைக்குக் கடவுள் என் செய்வார்? யாவருக்கும் பொதுப்படவிருக்கும் நாதியற்ற தெய்வத்தின் தலையில் வீண் பாரமேற்றி வருத்தப்படுவது அறியாமையை முற்றும் விளக்கும். "செய்த வினையிருக்கத் தெய்வத்தை நொந்தது" போல் ஆகும். "நட்பும் காதலும் ஒரு தன்மைத்து" எனக் கூறினோரேனும் அது வெளிப் படையாய்ப் பொருள் பட்டு நிற்பதல்லால் அகத்துக்குப் பொருந்தற் பாலதன்று. திருஷ்டாந்தம்: ஒரு மாது தன் கொழுநனைத் தழுவி முத்தமிட்ட மெய் வாயினால், தானீன்ற மகவையும் தழுவி முத்த மிடுகிறாள். செய்யுங் காரியம் ஒன்றாயினும் அகம் வேறுபட்டு நிற்கிறது. அஃதில் யான் அதிகம் விரித்துரைத்தல் "மிகைபடக் கூறேல்" என்னும் நன்னூல் முறைக்கு முறணாய் முடியும். கவனித்துக் கொள்க."

* * * *

"இடம், பொருள், ஏவல், இம்மூன்றையுங் கவனித்து, மணமான பின்பு—வீட்டை விட்டு வெளிப்பட்டு வந்திருப்பின்,—எனது சம்பந்தம்—மனைவி என்ற வழக்கில் பெற்றிருப்பின்,—இத்தனை சஞ்சலத்திற் கிடங்கொடாதென்பது திண்ணம். அதை முன்னால் கவனிக்காது, பின்னால் வருத்தப்படின் பிரயோசனம் யாது?

* * * *

இங்ஙனமாக ஒவ்வொரு கடிதத்தையும் விவரிப்பதென்றால் எனது கடிதம் வளர்ந்து போகும். கடைசியில் என் அன்பருக்கு விவாகம் ஆனதாகவும் கேள்விப்பட்டேன். ஐயோ! நமது பெண் ஜன்மம் இப்படியாயிற்றே என்று ஏங்கினேன். பிறகு என் நண்பரது சினேகிதர்களைச் சந்தித்தேனும் சிபார்சு தேடிக் கொள்ளலாமென்று புறப்பட்டேன். இப்படி நான் பிரயாணப்பட நினைத்த தருணம் என் அன்பரின் நண்பரொருவர் நான் இருக்குமிடம் வந்தார். என் பரிதாபம் புகன்றேன். அவர் அதற்குப் பரிகாரம் தேடுவதாகச் சொல்லித் தேறுதல் கூறினார். அதற்குப் பிரதி கைம்மாறாக அன்றிரவு அவருக்கு இன்ப நாயகியாக இருக்கும்படி நேரிட்டு விட்டது. பிறகு என் பிரயாணத்தில் நான் சந்தித்தவர்களெல்லாம் என்னைக் கலந்து சுகிக்க விருப்பமாயினர். அதற்கெல்லாம் இணங்கினேன். எனக்கோ



அவர்களிடத்து அன்பு ஒரு சிறிதும் இல்லை. இல்லையானாலும் இருப்பதாகவே காட்டிக்கொள்ள வேண்டியிருந்தது. இப்படியும் சில தினங்கள் கழிந்தது. என்னைப் பல மேக ரோகங்கள் சூழ்ந்துகொண்டு உபாதைப் படுத்தின. அநேகர் அதில் பங்கு பெற்றுக் கொண்டார்கள். கடைசியாக ஒருவரைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டேன். என் பரிதாபத்தைக் கண்டு அவரும் ஆதரிக்க ஒப்பினார். ஆயினுமென்ன? என் சரீர இன்பத்தில் அவரும் ருசி பார்க்கச் சில தினங்களில் பழகிக் கொண்டார். அம்மட்டில் நிற்கவில்லை. அவரைக் காண வருகிறவர்களுக்குக்கூட சில சமயங்களில் உடன்பட நேரிட்டது. இந்த வகையில் யாருக்கோ,—இன்னாருக்கு தான் நான் கர்ப்பமானதாக எனக்கே உண்மையில் தெரிந்து கொள்ள முடியவில்லை,—அப்படியாக இரு பெண் குழந்தைகளுக்கும் தாயானேன். அக்குழந்தைகளின் தகப்பனார் இன்னாரென்று அறியேன். நான் வெளி யன்பு பாராட்டுவது சில சமயங்களில் வெளிக்குத் தெரியும்படியாகவும் நேரிட்டு விட்டது. அன்பு என்பது உண்மையில் இல்லாதிருக்க, இருப்பதுபோலவே நடித்துக் கோண்டு நான் செய்த வஞ்சகத்தில் பல விதமான கபட சிந்தனைகளையும் கோண்டேன். பல சூழ்ச்சிகளையும் ஜாலங்களையும் கற்றுக் கொண்டேன். என்னை உபநாயகியாகக் கொண்டிருந்தவர் ஒரு அச்சு ஆபீஸ் ஏற்படுத்தச் சென்னப்பட்டணம் வந்தார். அவருக்கு உதவி செய்து அச்சு ஆபீஸ் ஏற்படுத்திக் கொடுக்க ஒரு நண்பரும் உடன் வந்திருந்தார். உண்மையாகவே அவர் உழைத்து எல்லாம் சேகரம் செய்து கொடுத்தார். பாதி வேலைகள் முடிந்தது. இந்த சமயத்தில் எங்கு அவர் வசம் அச்சாபீஸ் போய்விடுகிறதோ என்ற கபட நினைவு எனக்குத் தோன்றியது. அந்த அச்சாபீஸை என் பேருக்குச் சொந்தமாக்கிக் கொள்ள எண்ணி அவரை விரோதிக்க முயன்றேன். அவருடன் பேசுவதையும் விட்டொழித்தேன். நான் இப்படி செய்தால் அவர் ஊருக்குப்போய் விடுவார்; பிறகு அச்சாபீஸை என் பேருக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாமென்று நினைத்தேன். நான் எண்ணியபடியே நடந்தது. பாதி வேலை ஆகிக்கொண்டிருக்கும் போதே அவர் ஊருக்குப் போய் விட்டார். சனி தொலைந்ததென்று அச்சாபீஸை என் வசப்படுத்திக் கொள்ள வேண்டிய ஏதுக்களை எல்லாம் தேடினேன். என்னை வைத்துக் கொண்டிருந்தவர் என்னிஷ்டப்படி யெல்லாம் ஆடினார். இப்படியிருக்கும் போது புதிதாகக் கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் ஏற்பாடு செய்து விட்டார்கள். அதாவது 500-ரூபாய் கட்டினாலொழிய அச்சாபீஸ் ஏற்படுத்தக் கூடாதென்று ஏற்பாடாகி விட்டது. ஐயோ! என் மோச புத்தியில் மண் விழுந்ததே என்று அழுதேன். மனம்புண்பட்டு ஊர் சென்ற நண்பர் அப்படிப் போகாதிருந்தால் இந்த சட்டம் ஏற்படுவதற்கு முன்பாகவே அச்சுக்கூடம் ஏற்பாடு செய்திருப்பாரே! பாதி வேலை நடக்கும் போதே என் மனதைக் கபடத்தில் புகுத்திக் கேடு தேடிக் கொண்டேனே என்று பரிதபித்தே

என்னை வைத்திருந்தவர்க்கும் வருத்தமுண்டாயிற்று. பிறகு வாங்கின அச்சுச் சாமான்களை விற்க முயன்றதில், ஒன்றுக்குப் பாதியாக பஞ்சத்திற்குப்பிள்ளை விற்ற கதையாக முடிந்தது. இதன் இடையில் அநேக சங்கடங்களெல்லாம் தோன்றின. எனக்கு மஞ்சட் காமாலையும் உண்டாயிற்று.

இப்படி பலவித மனக்கவலைகளாலும், பர புருஷ கமனத்தில் தேடிக் கொண்ட மேக ரோகங்களாலும், என் ஆதி நண்பர் என்னை மோசம் செய்ததை நினைப்பதாலுண்டாகும் துக்கத்தாலும் நான் அதிக வாதனைப்பட்டு வருகின்றேன். அறியாத விதமாக நான் என் கற்பைக் கெடுத்துக் கொண்டேன். என்னைப்போன்ற வயதுள்ள மற்றப் பெண்கள் கழுத்தில் மாங்கல்யம் பிரகாசிக்க, மஞ்சள் குங்குமம் அணிந்து தத்தம் கணவர்களுடன் சல்லாபித்து நிற்பதைப் பார்க்கும்போது நமக்கு இப்படிப்பட்ட பாக்கியம் இல்லாமற் போயிற்றே என்ற ஏக்கம் உண்டாகிறது. நாடகக் கம்பேனிகளால் அநேக ஸ்திரீ புருஷர்கள் விபசாரத்துக்கு ஆளாகிறார்கள். குடி, விபசாரம், நகைப் பைத்தியம், நாணய விரோதம், இவர்களிடத்திலிருந்து தான் ஜனங்களுக்கும் பாவுகிறதென்று சொல்லலாம். என் துன்பங்கள் எப்போது விடியுமோ ஈசனே அறிவார். உன் கடிதம் பார்த்து மற்றது எழுதுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தங்கை,
விசாலாக்ஷி.

---

## புது நாகரீகஸ்தர்கள்.

நரசிங்கராவ்:—ராமராவ்! எங்கே கண்ணிலேயே காணோம்! இங்கிலீஷ் வாசிக்காத பேர் எல்லோரும் சுத்தமாய் "ஸுபர்ஸ் டிஷனில்" மூழ்கிப்போயிருக்கிறார்கள். அவர்களுக்குச் சுத்தமாய் ஞானமில்லை. நீ அதிகமாய் எங்களுடன் சகவாசம் செய்துகொண்டு வருவதால் உனக்கு "ஸுபர்ஸ் டிஷன்" அவ்வளவாயில்லை.

ராமா:—நீங்கள் அடிக்கடி "ஸுபர்ஸ்டிஷன்" என்று சொல்லிக் கொண்டே யிருக்கிறீர்கள். அந்த வார்த்தைக்கு என்ன அருத்தம்?

நர:—"ஸுபர்ஸ்டிஷன்" என்றால் மூடபக்தி, பைத்தியக்கார நம்பிக்கை என்று அதற்குப் பொருள். இதனாலேயே நம்மவர்கள் எல்லாரும் இல்லாத விரதங்களை வைத்துக்கொண்டு உடம்பைக் கெடுத்துக்கொண்டு அநேக வித கஷ்டங்களை யடைகிறார்கள்.

ராமா:—உங்களுக்கு மாத்திரம் அந்த ஸுபர்ஸ்டிஷனில்லையா? நீங்கள் உங்கள் உடம்பைக் கெடுத்துக்கொள்ளுகிற தில்லையா?



நர:—நீ சொல்லுகிற பேச்சு எனக்குத்தெரிந்தது. என் விஷயத்தில் அது "ஸுபர்ஷ்டிஷனைச் சேர்ந்ததல்ல. அவர்கள் இஷ்டமில்லாமல் சிறு பிராயத்தில் அவர்கள் பெற்றோர்கள் செய்துவைத்த "மியாரியேஜ்" (கலியாணமென்பதற்கு இது இங்கிலீஷ் வார்த்தை) "பைண்டிங்கு" (கட்டுப்படுத்தக் கூடியது) அல்ல. எனக்கு இஷ்டமில்லாதவளைக் கொண்டுவந்து எனக்கு என் தகப்பனார் கட்டிவைத்தால் நான் சம்மதிப்பது தர்மமல்ல. அவளோடு வாழப்போவது என் தகப்பனாரா நானா? அதனால் நான் அவளை விட்டுவிட்டுத் தாசியை வைத்துக்கொண்டால் அதில் யாதொரு பிசகும் இல்லை. நான் இப்பொழுது என் உடம்பைப் பேணும் நிமித்தமே கூத்தியாளை வைத்துக்கொண்டிருக்கிறேனே யொழிய வேறொன்றுக்காக அல்ல.

ராமா:—நானென்ன இங்கிலீஷ் வாசிக்காமல் போனாலும், ஸ்வாமி கொடுத்த புத்தி கொஞ்சமிருக்கிறது. உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் முதன் முதலில் உங்கள் தகப்பனார் கலியாணம்செய்யும்பொழுதே வேண்டாமென்று ஒரே பிடிவாதம் பிடித்து ஏன் கலியாணத்தைத் தடுக்காமல் போய்விட்டீர்கள்? நீங்கள் சம்மதித்துக் கல்யாணம் செய்துகொண்டதினால் கட்டிக்கொண்ட பெண்சாதி குரூபியாயிருந்தாலும், மூர்க்ககுணம் கொண்டவளாயிருந்தாலும், வேறு எந்த தோஷம் உள்ளவளாயிருந்தாலும் அவளுடன் வாழ்வதே கடமை. அப்படி யவளுடன் வாழாவிட்டால் தந்தைசெய்த குற்றத்துக்காகக் குற்றமற்ற பெண்சாதியை நிஷ்காரணமாய் உபத்திரவிப்பது பாவமல்லவா? அவளை முதல் முதலில் நீங்களும் கலியாணஞ் செய்துகொள்ளாவிட்டால் அந்தக் குழந்தை தன்னை சௌக்கியமாய் வைத்துக்கொண்டிருக்கக் கூடிய வேறொருவனுக்கு வாழ்க்கைப்பட்டிருப்பாளே!

நர:—நான்சென்ஸ்! நீ "ரீஸன்" இல்லாமல் பேசுகிறாய். உனக்கு இங்கிலீஷ் தெரியாததால் சரி தப்பு உனக்குத்தெரியாது. அதெல்லாம் உன்னைப் பார்க்கிலும் எனக்கு செவ்வையாய்த் தெரியும்? என்னுடைய * ஹெல்த்துக்காகவும் † பிளெஷருக்காகவும் நான் தாசியை வைத்துக்கொண்டால், நான் (பெண்சாதிக்கு) அன்ன வஸ்திரத்துக்குக் குறைவு செய்கிறேனா?

ராமா:—அன்னத்துக்கும் வஸ்திரத்துக்கும் கொடுத்தால் நிறைந்துபோய் விட்டதா? ஸ்திரீகளுக்குத் தங்கள் புருஷர்களுடன் கூடிவாழும் சுகம் வேண்டியதில்லையா? அன்ன வஸ்திரத்துக்குக் குறைவு செய்யாவிட்டாலும் ஸ்திரீகளுக்கு முக்கியமாக வேண்டியதில் குறைசெய்கிறீர்கள். நீங்கள் சொன்ன பிளெஷர் உங்கள் ஒருவருக்குத்தானோ? ஸ்திரீகளுக்கு வேண்டியதில்லையா? பின்னே தகப்பனார் மாத்திரம் பெண்ணின் அநுமதிபெற்றுக்கொண்டு கலியாணம் செய்கிறானா? என் சம்மதத்தின்பேரில் எனக்குக் கலியாணம் செய்யவில்லையாகையால் பலவந்தமாய்க் கட்டிக் கொண்டவளை விட்டுவிட்டு எனக்கு இஷ்டப்பட்டவனோடு சுகப்படுகிறேனென்று ஒரு பெண்சாதி சொன்னால்

* ஹெல்த்—தேகஆரோக்கியம் † பிளெஷர்—சுகம், இன்பம்.

என்னமாயிருக்கும்? உலகத்தில் எல்லாரும் அழகுள்ளவர்களா யிருக்கமாட்டார்கள். பாரியை அழகாயிருந்தால் புருஷன் குரூபியாயிருக்கிறான். புருஷன் அழகுள்ளவனாயிருந்தால் பாரியை அவலக்ஷணமாயிருக்கிறாள். எவரெவர்களுக்கு எதெது கிடைத்ததோ அதைக்கொண்டு இவ்வளவுதான் பிராப்தம் என்று அவரவர்கள் திருப்தியடையவேண்டும்.

நா:—நீ எனக்கு அதிகப்பிரசங்கம் செய்கிறாய். எங்களைப்போன்ற "ஜெண்டில்மே"னோடு கஷ்டிபேச நீ தகுந்தவனல்லவென்று முந்தியேசொல்லியிருக்கிறேன். எனவே, வேறு எதொன்றைப்பற்றியேனும் பேசு.

ராமா:—இங்கிலீஷ் படித்த உங்கள் நாகரீகத்திற்கும், இங்கிலீஷ் படிக்காத எங்கள் நாகரீக மின்மைக்கும் எனக்கு யாதொரு வித்தியாசமும் தென்படவில்லை. எனக்குத் தெரியாமல் நான் கேட்கிறேன். நடவடிக்கையில் என்ன வித்தியாச மிருக்கிறதென்று சொல்லுங்கள். உங்களுக்கும் எனக்கு முள்ள சிநேகத்தின்மேல் கேட்கிறேன். மனதில் கோபம் வைக்கவேண்டாம்.

நரசிங்:—பைத்தியக்காரா! தெரியாதவர்கள் பைத்தியக்காரக் கேள்விகள் கேட்டால், என்னைப்போன்ற தெரிந்தவர்களுக்குக் கோபம் வருமென்று நினைத்தாயா? நீ கேட்டபடியால் எங்களுக்கும் உங்களுக்கும் உள்ளபேதம் சொல்லுகிறேன். நீங்கள் புண்ணியம் கிடைக்கிறதென்று ஆறுகளிலும் ஏரிகளிலும் சேற்றுநீரிலும் மூழுகுகிறீர்கள். நாங்கள் சுத்தஜலத்தில் தவிர ஸ்நானம் பண்ணமாட்டோம். நீங்கள் சுவாமியென்று கற்களையும் கட்டைகளையும் கும்பிடுகிறீர்கள். நாங்கள் ஒரே சுவாமியை தியானம் செய்கிறோம். நீங்கள் சூத்திரர்களைத் தொட்டால் விழுப்பென்று தூரமாய் ஒதுங்குகிறீர்கள். நாங்கள் சுத்தமாயிருக்கும் எவரையும் தொட்டுக்கொள்ளுகிறோம். ஆசாரமாக இதைத் தின்னலாகாதென்றும் அதைத் தின்னலாகாதென்றும் தள்ளுகிறீர்கள். நாங்கள் தேக ஆரோக்யத்துக்கு அனுகூலமானவைகளை யெல்லாம் சாப்பிடுகிறோம். நீங்கள் நோன்புகள் விரதங்கள் உபவாசங்கள் செய்கிறீர்கள். நாங்களவைகளைப் பைத்தியக்காரத்தனமென்று தள்ளிவிடுகிறோம். நீங்கள் செருப்புப் போட்டுக்கொண்டு பஞ்சகச்சம் வைத்து வேஷ்டியுடுத்துகிறீர்கள். நாங்கள் பூட்ஸ், கோட்டுகள் முதலானவைகளைப் போட்டுக்கொண்டு துரைகளைப்போல் இருக்கிறோம். இவைபோன்ற வித்தியாசங்கள் உங்களுக்கும் எங்களுக்கும் லக்ஷமுண்டு.

ராமா:—உங்களுக்குள்ள நாகரீகமெல்லாம் பூட்ஸிலும், கோட்டிலும் தவிர மனதிலும் நடத்தையிலு மொன்றும் காணோம். நீங்கள் பிடித்ததைச் சாப்பிடுகிறோமென்று பூராவாய்க் குடிக்கிறீர்கள். இரகசியமாய் மாமிசம் தின்னுகிறீர்கள். மறுபடி பத்துபேர் சபையில் இதை யொன்றும் காட்டிக்கொள்ளாமல் எங்களைப்போ லிருப்பதாகவே வேஷம் போடுகிறீர்கள். இவ்வளவு பேச்சுப் பேசுகிற நீங்கள் திவசங்களை விட்டுவிட்டீர்களா? சுபகாரியங்களில் விக்கிரகங்களை



தொட்டுக்கொள்ளுகிறோமென்று பப்ளிக்காக அவர்களுடன் கலந்து போஜனம் செய்கிறீர்களா? மேலுக்குத் திருட்டுப் பேச்சுக்கள் எவ்வளவானாலுஞ் சொல்லுகிறீர்கள்.

நா:—காலம் வந்தால் படிப்படியாய் எல்லாம் செய்கிறோம். இப்பொழுது நாங்கள் சொல்லுகிறபடி எல்லா விஷயங்களிலும் செய்தால் ரொம்பக் கெடுதலுண்டாகும். இங்கிலீஷ் படித்தவர்கள் குடிக்கிறார்களென்று நீ மகா குற்றங் கூறுகிறாயே. குடிப்பது உடம்புக்குக் கெடுதலென்று நினைக்கிறாயா என்ன? மிதமாய்க் குடித்தா லுடம்புக்கு வெகு நல்லது. அன்னம் ஜீர்ணமாகிறது. உடம்பு கலகலப்பாயிருக்கிறது. நாங்கள் குடித்தால் பத்து நூறு இப்படிச் செலவு செய்து சீமைச்சாராயம் குடிப்போமே யொழிய நாட்டுச் சாராயம் குடியோம்.

ராமா.—நீங்கள்கூட, சொல்வதுபோல் செய்யாவிட்டால் வீணாக டம்பத்திற்கு எங்கள்மேல் குறைகூறுவது எதற்காக? உங்கள் அபிப்பிராயத்தைப் பார்ப்போம். அதன்படியே நீங்கள் சொல்லுகிற பேச்சு உங்களுக்கே நிச்சயமானால், விதந்துவாய்ப்போன உங்கள் தங்கைக்குக் கல்யாணம் செய்யுங்கள் பார்ப்போம்! இல்லாவிட்டால் உங்கள் இரண்டாவது தங்கையை அவள் ருதுவாகிறவரையில் கல்யாணம் செய்யாமல் இருந்துங்கள். சொல்லுகிற ஸ்ரீரங்கநீதி எல்லால் தெரிகிறது. "செய்கிறது மாகஸ்நானம்—நுழைகிறது தெப்பன் குடிசைகள்" என்றபடி அசைத்தால் எல்லோருடைய குற்றங்களும் வெளியாகின்றன. நீர் உபநாயகியாக வைத்துக்கொண்டிருக்கிற விதவை, எவ்வளவுதான் புஸ்தகங்கள், நீதிநூல்கள், சாஸ்திரங்கள் எழுதினாலும், விபசாரியான அவளுடைய துற்குணமும், பட்டித்தனமும் மறைந்துபோகுமா? அவளை வைத்துக்கொண்டிருக்கிற பாவந்தான் உம்மைவிட்டு விலகிவிடுமா? விபசாரியும், குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புமான அவளுடைய போதனைகள் உலகத்திற்கு எதற்கு? துரைகள் மெச்சிக்கொள்வதற்காக அவர்கள் முன்பாக நீங்கள் மனதுக்கு வந்தபடியெல்லாம் சொல்லிக் கூத்தாடுகிறீர்கள். இதைத் தவிர ஆசாரநிருத்தத்தில் உங்களுக்கும் எங்களுக்கும் யாதொரு பேதமும் தென்படவில்லை.

நா:—அப்படியல்ல. நாங்கள் "ரீலன்" அல்லாதது செய்யமாட்டோம். நாங்கள் எப்பொழுதும் மொத்தமாய் முழுப்பிரபஞ்சத்தின் சுகத்தை ஆலோசித்துக்கொண்டிருக்கிறோமேயொழிய தனியாய் ஒருவருடைய சுகத்தைப் பார்க்கிறதில்லை. பிரபஞ்சத்தில் ஜன சங்கியை அதிகமானால் பற்பல ரோகங்களுண்டாகின்றன. அதினால் விதவா விவாகத்தில் நாங்கள் சம்பந்தப்படுகிறதில்லை. பாலிய விவாகங்களை நிறுத்தவேண்டியதே. ஆனாலும் அது இந்தக் காலத்தில் நடக்காது. ஏதாவது ஆயிரம் வீட்டுக்காரர்கள் ஒன்றாகி சேர்ந்து வரட்டும். நான் என் தங்கைக்கு அவள் திரண்டபிறகு தான் கல்யாணம் செய்கிறேனோ இல்லையோ பார்,

ராமா:—நீங்களே ஒருவராயே ஏற்படாவிட்டால் ஆயிரம் வீட்டுக்காரர்கள் என்னமாகச் சேர்ந்து வருவார்கள்? எல்லாரும் உங்களைப் போலவே ஆலோசிக்கிறார்கள். முதல் முதலில் ஒருவன் வழிநடந்து காட்டினால் பிறகு ஒருவரைப் பார்த்து ஒருவராக எல்லாரும் அந்தவழியே நடப்பார்கள். காரியமில்லாதபேச்சில் என்ன பிரயோஜனம்? இலட்சம் பேர் என்னோடு சேர்ந்தால் நான் ஜாதியையே விட்டுவிடுகிறேனென்று நானும் சொல்லுகிறேன். அதுவுமில்லை, இதுவுமில்லை. எந்த ஸ்திதியிலிருந்தாலும் சொன்னபடி செய்கிறவர்களை நான் மெச்சிக்கொள்ளுகிறேன். சொல்லுகிறதொன்று செய்கிறதொன்றாயிருக்கிற திருடர்களை நம்புவதில் பிரயோஜனமில்லை. உங்களிடத்தில் "பாட்டில்" நாகரீகத்தைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. இங்கிலீஷ் படித்தவர்களில் குடிக்காமல் யார் இருக்கிறார்கள்? உங்களுக்குச் சாராயத்தின் உபயோகம் தெரிந்தபடி எங்களுக்கு அவ்வளவு தெரியாது. ஆஸ்பத்திரியில் எல்லாமருந்துகளும் பிராந்தியில்தான் கலந்து கொடுக்கப்படுகின்றனவென்பதையும் திருஷ்டாந்திரமாகவும் எடுத்துக்காட்டுவீர். எங்களுக்கு இந்த விஷயங்களே தெரியாது. ஆஸ்பத்திரி மருந்தும் நாங்கள் உண்பதில்லை.

நா:—இந்த விஷயங்களின் ஸ்வாரஸ்யமெல்லாம் உங்களுக்குத் தெரியவே தெரியாது. தெரிந்தால் அவர்கள் "கன்விக்ஷன்" பிரகாரம் என்னமாய் நடந்துகொள்ளாமலிருப்பார்கள்?

ராமா:—நீங்களென்னமோ இங்கிலீஷ் வார்த்தைகளை மகா போடுகிறீர்கள். அவைகளின் அர்த்தம் எனக்குத் தெரியாது. நீங்கள் சொன்ன "கன்விக்ஷ"னெல்லாம் பாழாய்ப்போன குடியிலும் தீனியிலும் காட்டாமல் லோகோபகாரமான காரியங்களிலாகிலும் காட்டக்கூடாதா? நீங்கள் குடியில் எவ்வளவு குணமிருப்பதாகச் சொன்னாலுஞ் சரி. இவ்விதமாகவே பேசி, நல்ல வயதில் முன்னுக்குவரும் காலத்தில் அகாலமரணமடைந்தவர்களைக் குடிகாரர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதுபேர் வீதமாகப் பார்த்திருக்கிறேன்.

நா:—மிதமாகக் குடிக்காவிட்டால் இந்த மாதிரியாகவெல்லாம் வந்து சம்பவிக்கின்றன. நான் உத்தியோகம் தொடங்கின மூன்று வருஷத்தில் கொஞ்சமாயோ அதிகமாயோ பிராந்தி முதலானவைகளைக் குடித்துக்கொண்டுவருகிறேனல்லவா? நான் இன்னும் சாகாமல் பிழைத்திருக்கிறேனே அதெப்படி?

ராமா:—எனக்கும் அதே தான் ஆச்சரியமாயிருக்கிறது. குடிக்க ஆரம்பித்த பிறகு உங்கள் நண்பன் நாலு வருஷம் வரையில் பிழைத்திருந்தான். முதல் முதலில் மிதமாய்க் குடிப்பதாக ஆரம்பிப்போர் கொஞ்சம் நாளில் மிதப்பேச்சை மறந்து போகிறார்கள். உங்கள் முதல் முதல் மிதத்துக்கும் இப்பொழுதிய மிதத்துக்கும் நிரம்ப பேதமிருக்கிறது.

நா:—ஆமாம்; தப்பாமல் பேதமிருக்கிறது. மனிதர்கள் படிப்படியாய் அபிவிர்த்தியடைவது சகஜம். அதெல்லாம் இப்பொழுது உனக்கு "எக்ஸ்



பிளெயின்" பண்ண எனக்கு அவகாசமில்லை. ஆபீஸுக்கு நேரமாய்விட்டது; பிறகு வா சொல்லுகிறேன்.

ராமா:—நீங்கள் சொல்லப்போகிற அபிவிர்த்திக்கும் உங்களுக்குங்கூடப் பதினாயிரம் நமஸ்காரம். நீங்கள் எனக்கு ஒன்றும் சொல்லத் தேவையில்லை. அந்த அபிவிர்த்தி யில்லாவிட்டாலே நான் பத்து வருஷங்கள் சுகமாய்ப்பிழைத்திருப்பேன். இப்போது ஆசாரத்திருத்தக்கூட்டத்தில் பேசுகிற பிராமணோத்தமரெல்லாம் வாயளவில் நிற்பவர்கள் தான். ருதுமதியான மூன்றுவருஷமாதத்திலேயே சாந்திசெய்துகொண்டவர்கள் தான். ஒரு விகல்பமும் இல்லாத ஆனரபிள் ஸ்ரீநிவாசாசாரியாரது ருதுவிவாகமசோதாவுக்கே பலே ஆசாரதிருத்தக்காரர்களாகிய உங்களிற் பலர் கண்டனம் செய்துகொண்டு நிற்கிறார்கள். இது தானோ ஆசாரதிருத்த நிபுணத்துவம்! இப்படித்தான் இருக்கும் உங்கள் போக்குகளெல்லாம்! நீங்கள் தேசோபகாரம் என்று பாடுபடுவதெல்லாம் பணம் சம்பாதிக்க அது ஒருவழியென்றுதானே! கௌரவப்பட்டம் கிடைக்குமென்று நம்பித்தானே! போமையா போம்! (என்றுசொல்லிப் போகிறார்.)

# கடுக்காய் வைத்தியர்.

"எருமை கெட்டவனுக் கெட்டுக் கடுக்காய்—இளம் பெண்டாட்டிக் காரனுக்கு மெட்டுக் கடுக்காய்—படை எடுத்த மன்னனுக்குப் பத்துக் கடுக்காய்." * * * *

ஒரு ஊரில் இராஜ குடும்பத்து வைத்தியரொருவரிருந்தார். அவர் வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவர். அவரிறந்த பிறகு அவரது குமாரன் மூடனாயிருந்தபடியால் தகப்பனார் தேடிய பொருளை அழித்துவிட்டு பிண்டத்துக்குத் திண்டாடியதைக் கண்ட அவன் மனைவி "தங்கள் தகப்பனார் தேர்ச்சிபெற்ற அரண்மனை வைத்தியரல்லவா? அவருடைய ஓலைச் சுவடிகளைப்பார்த்து வைத்தியம் செய்து சம்பாதிக்கக் கூடாதா?" என்றாள். உடனே வைத்தியர் குமாரன் 'நல்ல யோசனை சொன்னாய், எனக்கும் இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது; வெண்ணெயை வைத்துக்கொண்டா நெய்க்கழவேண்டும்? கொண்டுவா ஓலைக்கட்டுகளை' என்றான். உடனே கொண்டுவந்து போட்டாள். வைத்தியர்வீட்டுப் பிள்ளை நாலெழுத்து ஐந்தெழுத்துப் பெயர்தான் வாசிக்குமானதால் புரட்டிப் புரட்டிப் பார்த்தான்; எல்லா கவிகளும் நீண்ட வாக்கியங்களாகயிருந்ததால் ஒன்றுந் தெரியவில்லை. தெய்வாதீனமாய் மருந்துஜாப்தா எழுதிய ஏடு ஒன்று அகப்பட்டது. அதில் எட்டுக்கடுக்காய், எட்டுக்கடுக்காய், பத்துக்கடுக்காய் என்று எழுதியிருந்தது. பேஷ் வைத்தியம்தெரிந்துவிட்டது என்று வைத்தியம் செய்யத் தயாராகவிருந்தான். அப்பொழுது ஒருவன் எருமைமாடு காணாமற்போய் விட்டதென்று மாட்டைத் தேடிக்கொண்டு

வந்தான். அவனைப் பார்த்து நான் அதற்கு ஒரு வைத்தியம் சொல்லுகிறேன், "நீ எட்டுக்கடுக்காயை அரைத்துக் குடித்துவிட்டு பேசாமற்போய் படுத்திரு" என்று சொன்னான். பிரபலமான வைத்தியர் மகன் சொன்னாரென்று அந்தப்படியே சாப்பிட்டான். கடுக்காய்க் கஷாயம் சாப்பிட்டதும் பேதி கண்டு குளத்துக்கும் வீட்டுக்குமாக விருந்தான். கடைசியாய்க் குளத்திற்குப்போனவன் நடக்கச் சக்தியில்லாமல் குளக்கரையிலேயே படுத்திருந்தான். அப்பொழுது எருமைமாடு எவ்விடத்திலிருந்தோ தற்செயலாய் தண்ணீர் குடிக்க வந்தது. மாடுகெட்டவன் சந்தோஷித்து நல்ல வைத்தியம் செய்தாரென்று வைத்தியரைப் புகழ்ந்தான். அதிலிருந்து வைத்தியர் மகனும் வைத்தியத்திற் றேர்ச்சியடைந்தாரென்று எங்குந் தெரிந்துவிட்டது. அவ்வூர் அரசனின் மூத்த மனைவி தன் நாயகன் இளையமனைவியோடு அதிக விசுவாசமா யிருக்கிறாரே இதற் கொரு வைத்தியம், புதிதாய்த் தேர்ச்சியடைந்திருக்கிற நமது பழைய வைத்தியர் மகனைக் கேட்போமென்று வரவழைத்துக்கேட்டாள். புது வைத்தியர் "நல்லதிருக்கட்டும் எட்டுக் கடுக்காயை அரைத்து ராஜாவுக்குக் கொடுத்துவிடுங்கள்" என்று ஏட்டில் எழுதியிருந்த இரண்டாம் வைத்தியத்தைச் சொன்னார். அரசன் மனைவி அப்படியே செய்தாள். உடனே ராஜாவுக்குப் பேதிகண்டு அதிக சீக்காய்விட்டது. அரசன் இளைய மனைவி பாலியமானதால் அரசனிடத்தில் அதிகமாய் நெருங்கவில்லை. மூத்த மனைவி எவ்வகையிலுந் தெரிந்தவளானதால் அரசனுக்கு வேண்டிய பணிவிடைகளைத் தானே செவ்வையாகச் செய்தாள். அதிலிருந்து அரசனுக்குத் தான் வெறுப்புற்றிருந்த மனைவி இவ்வளவு பணிவிடைகளைச் செய்தாளே; அன்புள்ள மனைவி கிட்டக்கூட வரவில்லையே என்று மூத்தவளிடத்திலேயே அன்பாகவிருந்தான். அரசன் மனைவி மிகச் சந்தோஷித்து எப்படியும் பெருங்காயமிருந்த பாண்டமல்லவா என்று மெச்சிக்கொண்டு அதிலிருந்து வைத்தியர் குடும்பத்துக்கு வேண்டியவைகளை சர்க்காரிலிருந்து கொடுக்கும்படி உத்தரவிட்டான். பிறகு ஒருதடவை இவ்வரசனிடத்தில் மற்றொரு ராஜா யுத்தத்திற்கு வந்துவிட்டான். இதைப்பற்றி மூத்த மனைவியை யோசித்தான். அரசன் மனைவி சங்கதி தெரியாதா? நமது வைத்தியர் மகன் வைத்தியத்தில் நிரம்பத் தேர்ச்சியாகிவிட்டார். அப்படியிருக்க நமக்கேன் கவலை வேண்டும் என்றாள். ராஜா உடனே வைத்தியரை அழைத்து யோசனை கேட்டார். வைத்தியர் பாக்கியிருந்த மூன்றாவது வைத்தியத்தை எடுத்துக்கொண்டு "தமது சேனைகளுக்கெல்லாம் பத்துக் கடுக்காய் அரைத்துக் கொடுங்கள்" என்று சொன்னார். உடனே ராஜாமூட்டை மூட்டையாகக் கடுக்காய் வரவழைத்து தமது யானை குதிரை காலாள் முதலிய எல்லாவற்றிற்கும் பத்துக் கடுக்காய் அரைத்துக் கொடுத்துவிடு என்று உத்தரவு கொடுத்தார். இவ்விரகசியத்தை ஒற்றர் மூலமாய் எதிர்பக்கத்து ராஜா தெரிந்து தலை ஒன்றுக்கு பத்துக்கு இருபது கடுக்காய் கொடுத்துவிட வேண்டியதென்று உத்தரவிட்டான். கடுக்காய்



விலையோ நிரம்ப அதிகமாகிவிட்டது. இரண்டு பக்கத்துப் படைகளுக்கும் கடுக்காய் கொடுத்தானபிறகு யானைகளுக்கும் குதிரைகளுக்கும் வீரர்களுக்கும் பேதியாக ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் இருபது கடுக்காய் சாப்பிட்ட பக்கத்துச் சேனை அதிகமாய் பேதியாகிக் களைத்துப்போய் விட்டது. இந்தச் சமயம் பார்த்து எதிரி பக்கத்துச் சேனையை முறியடித்து ஜெயித்துவிட்டார்கள். ராஜா வைத்தியரிடத்தில் மிகக் களிப்படைந்து வேண்டிய சன்மானங்கள் செய்தார். வைத்தியர் இனிமேல் நமக்கு வைத்தியம் சரியாய்விட்டதே என்று யோசனைசெய்து வீட்டை நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டு ராஜ சமுகத்தில் வந்து ஐயோ என் வீடு பொருள்கள் போனாலும் பாதகமில்லையே என்வைத்தியச் சுவடிகள் போய்விட்டதே இனி என்னசெய்வேன் என்று துக்கித்தார். ராஜா அவருக்குத் தேறுதல் சொல்லி "உமது குடும்பத்துக்கு வேண்டிய சகல பொருள்களும் ராஜாங்கத்திலிருந்து கொடுக்கிறோம்" என்று உத்தரவு செய்தார். வைத்தியரும் விசாரமற்று தலைவந்தராக வாழ்வதானார். நல்லகாலமிருந்தால் எல்லாம் நல்லதாகவே முடியும்.

---

# கணித விநோதம்.

ஓர் தனவான் தன்னிடமிருந்த தங்கக்கட்டிகளைத் தன் மக்கள் நால்
வருக்கும் பகிர்ந்துகொடுக்க ஆரம்பித்தான். ஒரு
வன் பங்குக்கு ஒரு கட்டி குறைவாயிருந்தது.
அதுவிஷயமாய் ஆலோசித்துக்கொண் டிருக்கும்போது அவ்விடம் வந்த ஓர்
பெரியவர் சொல்லிக்கொடுத்த உபதேசப்படி அத்தனவான் அந்தத் தங்கக்கட்
டிகளை ஒரு பெட்டிக்குள் வைத்து ஜெபஞ்செய்தான். அக்கட்டிக விரட்டித்
தன. அதில் மூத்த மகனுக்குச் சில கட்டிகளைக் கொடுத்து விட்டு மீதக் கட்
டிகளை மறுபடியும் பெட்டிக்குள் வைத்து ஜெபஞ்செய்தான். அவையும்
இரட்டித்தன. அதில் இரண்டாவது மகனுக்குச் சிலகட்டிகளைக் கொடுத்து
விட்டு மீதக்கட்டிகளை மறுபடியும் பெட்டிக்குள் வைத்து ஜெபஞ்செய்தான்.
அவையும் இரட்டித்தன. அதில் மூன்றாவது மகனுக்குச் சில கட்டிகளைக்
கொடுத்துவிட்டு மீதக்கட்டிகளை மறுபடியும் பெட்டிக்குள்வைத்து ஜெபஞ்
செய்தான். அவையும் இரட்டித்தன. அவைகளை நான்காவது மகனுக்குக்
கொடுத்தான். ஒருவர்க்கொருவர் பங்கு ஏற்றக் குறைச்சலில்லாமற் சரியாயி
ருந்தது. இதைக் கண்ணுற்ற கனவான்கள் ஆதியில் தனவான் வைத்திருந்த
கட்டிகள் இத்தனை யென்பதையும், அவைகள் ஜெபங்களினு லிரட்டிக்க விர
ட்டிக்க ஒவ்வொரு மகனுக்குங் கொடுக்கப்பட்டிருக்கிற கட்டிகள் இவ்வள
வென்பதையும் தெரிந்து விடை பகரவேண்டும்.

1624409

## விடை

தனவான் வைத்திருந்த தங்கக்கட்டிகள் 15.

(1) ஜெபத்தில் ஷை 15 கட்டிகளும் 30 ஆயிற்று. மூத்தமகனுக்குக் கொடுத்த கட்டிகள் 16. மீதக்கட்டிகள் 14.

(2) ஜெபத்தில் ஷை 14 கட்டிகளும் 28 ஆயிற்று. 2-வது மகனுக்குக் கொடுத்த கட்டிகள் 16. மீதக்கட்டிகள் 12.

(3) ஜெபத்தில் ஷை 12 கட்டிகளும் 24 ஆயிற்று. 3-வது மகனுக்குக் கொடுத்த கட்டிகள் 16. மீதக்கட்டிகள் 8.

(4) ஜெபத்தில் ஷை 8 கட்டிகளும் 16 ஆயிற்று. 4-வது மகனுக்கு கொடுக்க ஒன்றுக்கொன்று பங்கு ஏற்றக் குறைச்சலில்லாமற் சரியாயிருந்தது.

3ம 21192,1106 No619

# கைதேர்ந்த திருடன்.

நெடுநாளைக்கு முன்னமே அன்றாடம் உழைத்து ஜீவிக்கும் எளிய மனிதனொருவ னிருந்தான். ஒரு நாள் அவன் வேலை செய்து அலுத்துத் தன் சிறு குடிசையின் முன்புறத்தில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருக்கையில், நான்கு வெள்ளைக் குதிரைப் பூட்டிய வண்டியொன்று வெகு வேகமாய் வந்து அந்தக் குடிசை வாயிலண்டை நின்றது. ஒரு மனிதன் அதினின்றும் சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்து வெகு கம்பீரமாய் இறங்கிவந்தான். அவனைக் கண்டவுடனே அந்தக் குடிசையிலிருந்த கிழவன் இவன் யாரோ ஒரு மகாப் பிரபுவென்று எண்ணிச் சரேலென்று எழுந்து அவனண்டை வந்து, நீங்கள் யார்; எங்கே வந்தீர்கள்; உங்களுக்கு என்ன தேவை என்று கேட்டான்.

அதற்கு அந்த மனிதன், ஐயா, எனக்கு விசேஷமாய் ஒன்றும் தேவையில்லை; காயோ கிழங்கோ உங்கள் வீட்டிலுள்ள உணவை உங்களோடு கூடவே உண்டு களிக்க வந்தேனென, அந்த வீட்டுக்காரன், நீங்கள் என்னவோ பரிகாசமாய்ப் பேசுகிறீர்களே; உங்களைப் பார்த்தால் யாரோ மகாப் பிரபு போலிருக்கிறது. இந்த எளியன்வீட்டுச் சோற்றுக்கா நீங்கள் காத்திருக்கிறீர்கள்? ஆயினும் நீங்கள் என்னை ஒரு பொருளாக மதித்து இவ்விடம் வந்தீர்களே, அதுவே எனக்குப் பரம பாக்கியம். உங்கள் இஷ்டப்படியே ஆகட்டுமென்று சீக்கிரமே சாப்பாடு சித்தம் செய்யும்படி தன் பெண்சாதிக்குக் கட்டளையிட்டான்.

அப்படியே அவள் தன் வீட்டிலுள்ளதைக் கொண்டு சமையல் செய்யத் தொடங்கினாள். சமையலாகிற வரையில் இங்கே இந்தப் பெரிய மனிதரைச் சும்மா உட்காருவித்துக்கொண்டிருப்பது யோக்கியமல்லவென்று அவ்